கலைஞரின்
கடிதங்கள்



17

07.03.1987 - முதல்
26.05.1988 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 17

07.03.1987 - 26.05.1988

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM
9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்
எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES
NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

42224
894.8116
கலை

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:


“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,



(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1490. தீர்மானத்தையே மறந்த திருவாளர்கள்!	07-03-1987	23
1491. வெறியர்களுக்கும் அடிமைகளுக்கும் விளங்கவைக்க...	30-03-1987	28
1492. புதுவையிலும் ''சேடிஸ்ட்'' நோய் பரவுகிறதா?	31-03-1987	33
1493. பூமிக்குப் பொறுமை எனப் பெயர் உண்டு!	01-04-1987	38
1494. அன்று விடுத்த அறிக்கையும், இன்று வந்த விளம்பரமும்!	02-04-1987	42
1495. மூலையில் தள்ளினாலும் முழங்கும் முரசொலி!	04-04-1987	46
1496. விவசாயி கண்ணீர் வடிக்கிறான்; வேடிக்கை பேசுகிறார் அமைச்சர்!	05-04-1987	53
1497. இருட்டிலேயிருந்து - வெளிச்சத்திற்கு!	11-04-1987	58
1498. நாம் என்பதோ - அவர்கள் என்பதோ முக்கியமல்ல!	13-04-1987	63
1499. யாருக்கு மனநலம் சரியில்லை?	17-04-1987	69

1500. அன்று தந்தது களம்புக! இன்றோ காயம் ஆற்றிட!	29-04-1987	78
1501. உள்ளாட்சி மன்றங்களுக்கான உரிமைப் போர்!	30-04-1987	82
1502. புயல் - மையம் கொண்டிருக்கிறது!	13-05-1987	87
1503. இனியும் பொறுத்திடல் பயனில்லை; இன்றே போரிட வாருங்கள்!	21-05-1987	91
1504. கருங்கடல் - கண்ணீர்க்கடல்; பொங்கி எழுக!	05-06-1987	96
1505. குமுறும் தமிழகத்தின் கொந்தளிப்பைக் காட்டிட வா! வா! வா!	06-06-1987	100
1506. கடமை உணர்த்தும் கழகப் பொதுத்தேர்தல்!	27-06-1987	104
1507. எம்.ஜி.ஆரின் திடீர்த் தமிழர் உணர்வு!	13-07-1987	110
1508. சுதந்திரத்திற்கு ஒரு சுதந்திரம்!	15-08-1987	115
1509. வியர்வையின் விளைவு! விளைவின் வெற்றி!	21-08-1987	120
1510. இளைய தலைமுறைக்கு இதய வாழ்த்துகள்!	31-08-1987	125
1511. சென்னை அழைக்கிறது உன்னை; வா! வா! வா!	02-09-1987	132
1512. அலைபாயும் கடலை வெல்ல அணி திரள்க!	13-09-1987	135
1513. விளக்கக் கடிதம் ஏன் தேவைப்பட்டது?	14-09-1987	141

1514. உடன்பிறப்பே! என்னை மன்னித்துவிடு!	21-09-1987	147
1515. அமைச்சர்களும் - அரைவேக்காடுப் பேச்சுகளும்!	23-09-1987	152
1516. உண்மையா? இல்லையா? உரியவர்கள் விளக்கிடுக!	05-10-1987	156
1517. திருச்சி வழக்கம்போல் திருப்புமுனையாகட்டும்!	10-10-1987	161
1518. திடீர்க் காதல் அல்ல; இரத்தத்தில் ஊறிய இனப்பற்று!	15-10-1987	165
1519. அக்டோபர் 24 - ஆர்த்தெழுக தமிழகம்!	23-10-1987	171
1520. மாநில முழுதும் மறியல் களம்; மான மரபே! எழுக!	26-10-1987	175
1521. சிக்கலில் மாட்டாதீர்! சினத்துக்கு ஆளாகாதீர்!	31-10-1987	180
1522. கை கோர்த்து நிற்போம்; கடமையாற்றிடுவோம்!	05-11-1987	186
1523. வியட்நாம் - ஒரு எடுத்துக்காட்டு!	08-11-1987	190
1524. நவம்பர் 11 - மாவட்டத் தலைநகரங்களில் மகத்தான மனிதச் சங்கிலி!	09-11-1987	195
1525. இன அழிவைத் தடுத்திட இணைந்து நிற்போம்!	14-11-1987	199
1526. உண்மைக்கும் மின்னலுக்கும் ஒளி அதிகம்!	22-11-1987	206
1527. தடந்தோள் தட்டிக் கிளம்பிடுவோம்; நாம் தமிழர் என்பதை உணர்த்திடுவோம்!	29-11-1987	211

1528. கடிதங்கள் - கடிதங்கள் - கண்ணீர் கடிதங்கள்!	07-12-1987	216
1529. எம்.ஜி.ஆர். மறைந்த நாளில் சென்னை அண்ணா சாலையில்!	27-12-1987	226
1530. நம்பிக்கையுடன் நம் பணி தொடர்வோம்!	15-01-1988	227
1531. உன் பயணம் தொடர்ந்து நடக்கட்டும்!	25-01-1988	230
1532. எழுதியிருப்பது கடிதமல்ல; எச்சரிக்கை!	30-01-1988	234
1533. பிரியமுள்ள உடன்பிறப்பே; பிப்ரவரி 2ம் 3ம்!	01-02-1988	242
1534. நாம் பரம்பரை ஆண்டிகள்; பஞ்சத்துக்கு ஆண்டிகள் அல்லர்!	05-02-1988	246
1535. எல்லாரும் எம்மவரே! நம்மவரே!	13-02-1988	250
1536. பிரபாகரனை அழிக்கலாம்; பிரளயத்தை அடக்க முடியுமா?	14-02-1988	255
1537. ராஜதந்திரமல்ல; ராஜீவ் தந்திரம்!	16-02-1988	260
1538. நாதியற்றுப் போனதோ நமது தமிழ் இனம்?	19-02-1988	264
1539. உனக்கு மட்டும் புரிந்தால் போதாது! ஊருக்கும் புரியவைக்க வேண்டும்!	24-02-1988	268
1540. பெருக்கெடுத்தோடும் தேசிய நீரோட்டம்!	25-02-1988	272
1541. கண்களை விற்றுவிட்டுக் கவின்மிகு சித்திரம் வாங்குவதோ?	26-02-1988	276

1542. கைத்தறியாளர் கண்ணீர் துடைப்போம்!	27-02-1988	281
1543. கடந்து வந்த பாதையை கண்டிடுக!	28-02-1988	285
1544. முரட்டுத்தனம் - முதிர்ச்சியற்ற அணுகுமுறை!	29-02-1988	289
1545. நித்தநித்தம் குவியும் பெருநிதி!	01-03-1988	292
1546. நாட்டாட்சி, காட்டாட்சியாகாமல் தடுத்திட!	03-03-1988	297
1547. வன்முறை இருபுறம் கூர் உள்ள கத்தி!	04-03-1988	301
1548. நாவலர் எந்த இடத்தில் இருக்கிறார்?	06-03-1988	305
1549. அடையாளமும் காண்பார்கள்! அறிவும் புகட்டுவார்கள்!	10-03-1988	310
1550. முழு அடைப்பு வெற்றி பெற முழங்கட்டும் சங்கநாதம்!	11-03-1988	314
1551. எதையும் தாங்கும் இதயத்துடன் எடுத்த பணி முடித்திடுவோம்!	13-03-1988	318
1552. பாட்டைத் திருத்தலாம்; பாட்டையைத் திருப்ப முடியுமா?	17-03-1988	322
1553. கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?	18-03-1988	329
1554. கழுத்து மணியை அறுத்திடும் காரியம்!	19-03-1988	334
1555. ஒதுக்கப்பட்ட தொகை; ஓடியது எங்கே? எங்கே?	20-03-1988	338
1556. எரிந்த மத்தாப்பு - எதற்கும் உதவாத கரிக்கட்டை!	21-03-1988	342

1557. ஆவலுடன் நோக்குகிறது அன்னைத் தமிழகம்!	22-03-1988	347
1558. எச்சரிப்பதற்காகவே இந்தக் கடிதம்!	23-03-1988	351
1559. சலுகை வழங்கியது சபாநாயகரா? கவர்னரா?	27-03-1988	356
1560. உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு பள்ளம் இருக்கிறதோ?	29-03-1988	358
1561. மனச்சாட்சியும் - மனக்குரங்கும்!	03-04-1988	364
1562. சிறந்த சிகிச்சை; நோய்நாடி - நோய் முதல் நாடி செய்தல்!	05-04-1988	368
1563. கவர்னர் நடத்தும் காங்கிரஸ் மாநாடு!	11-04-1988	371
1564. இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?	13-04-1988	375
1565. பகற்கனவு தேவையில்லை பண்ணையாருக்கு!	15-04-1988	379
1566. தொழில்துறையில் தொய்வு எப்போது?	16-04-1988	386
1567. ஓட்டுக்காகவா? நாட்டுக்காகவா?	27-04-1988	390
1568. வாராய் என் கண்மணி; வாழ்க என் கண்மணி!	18-05-1988	394
1569. பாசப் பொழிவு! அன்புப் பெருக்கு!	26-05-1988	397

1493. தீர்மானத்தையே மறந்த திருவாளர்கள்!

உடன்பிறப்பே,

இந்தித் திணிப்பைக் கண்டித்து சட்டப்பேரவையில் பொன். முத்துராமலிங்கம் பேசும்போது; அமைச்சர் ஒருவரும் அவைத்தலைவரும் குறுக்கிட்டு எழுப்பியுள்ள கேள்விகள்; இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதிலும் - அதுகுறித்து அவர்களே அரசின் சார்பில் நிறைவேற்றியுள்ள தீர்மானத்திலும் அவர்களின் கட்சிக்கும் கட்சித் தலைமைக்கும் எவ்வளவு பிடிப்பு இருக்கிறது என்பதையும் - ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வின் உண்மை உருவம் என்ன என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக விளக்கியுள்ளன.

எங்கே இந்தியைத் திணித்தார்கள்? எதற்காக இந்தப் போராட்டம்?

இப்படிப் படபடப்புடன் குறுக்கிட்டு வினா எழுப்பியிருக்கிறார் ஒரு அமைச்சர்!

பல்கலைக் கழகத்தில் போய்ப் பாருங்கள். அங்கே ரஷ்யன், பிரஞ்சு என்று பல மொழிகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் அனுப்பிவிடுவீர்களா? கிராமத்தில் ஆடு மாடு மேய்ப்பவனிடம் போய் யார் இந்தியைத் திணிக்கிறார்கள்? இரண்டு பேர் ஐ.ஏ.எஸ். படிப்பவன்தான் இந்தி படிப்பான்!

என்று சபாநாயகர் இடித்துரைத்திருக்கிறார். அதனை உடனடியாக ரகுமான்கான் மறுத்து; பல்கலைக் கழகத்தில் ரஷ்யன், பிரஞ்சு மொழிகள் உள்ளன என்றால் அது விருப்பப்பாடம்; திணிப்பல்ல! என்று விளக்கமளித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய பொன். முத்துராமலிங்கம்; அமைச்சர், இந்தித் திணிப்பு எங்கே என்கிறார். ரயில்வேயில், டி.வி.யில் இந்தி திணிக்கப்படுகிறது. நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவரே இந்தியில் அனுப்பப்பட்ட

அழைப்பிதழைக் கிழித்தெறிந்துள்ளார் என்று இந்தி தொடர்ந்து திணிக்கப்படுவதற்கான ஆதாரங்களை எடுத்துக் கூறியுள்ளார்.

நாஞ்சிலாருக்கும் அமைச்சருக்குமிடையே விவாதமும் - நிதியமைச்சர் நாவலர் குறுக்கீடும் - இறுதியாக சபாநாயகர் அவர்கள்;

இந்திய யூனியனில் இருக்கும்வரை இந்தி இருந்து கொண்டுதானிருக்கும்.

என்றளித்த முடிவுரையுமாக - இந்தித் திணிப்பு குறித்த விவாதம் நடைபெற்றிருக்கிறது.

கிராமத்திலே ஆடுமாடு மேய்ப்பவனிடம் போய் யார் இந்தியைத் திணிக்கிறார்கள்?

என்று சபாநாயகர் அவர்கள் கேட்டிருப்பது - கிராமத்துப் பிள்ளைகள் பெரும்பாலோர் பள்ளிக்குச் செல்வதில்லை என்ற கருத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தாலும் கூட; இன்று கிராமப்புறங்களிலே கூட டி.வி. தொலைக்காட்சியும், வானொலிப் பெட்டிகளும் பரவியுள்ளன என்பதையும் - அவற்றில் பெரும்பகுதி இந்திக் குரலே ஒலிக்கிறது என்பதையும் உணராமல் கேட்ட கேள்வியேயாகும்!

பல்கலைக் கழகத்தில் ரஷ்யன், பிரஞ்சு மொழிகள் படிக்கவில்லையா?

எனச் சபாநாயகர் கேட்டு இந்தி படித்தால் என்ன என்று இந்தி ஆதரவாளராக எழுந்து நிற்பதில் நமக்கொன்றும் ஆச்சரியம் இல்லை!

இந்திதான் இந்தியாவின் அதிகார பூர்வமான மொழி என்பது மாற்றப்பட்டு; தமிழ் உள்ளிட்ட அனைத்து தேசியமொழிகளும் மத்திய ஆட்சிமொழிகளாக வேண்டும். அதுவரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும். நேருவின் உறுதிமொழியையும் மீறி இந்தி பல்வேறு நிலைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் திணிக்கப்படுவதால் - நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெற வேண்டும்.

அண்ணா வழி நின்று நாம் நடத்தும் மொழிப் போராட்டத்தின் கோரிக்கை இதுதான்!

ஏதோ; ரஷ்யன், பிரஞ்சு மொழிகள் இந்தியாவின் அதிகாரப்பூர்வமான மொழிகளாகி விட்டதைப் போலவும் - இந்தி மட்டும் அதிகாரப் பூர்வமான மொழியாக இருந்தால் என்ன என்று கேட்பது போலவுமன்றோ சபாநாயகரின் வினா அமைந்துள்ளது!

அது மட்டுமல்ல கிராமத்தில் ஆடு மாடு மேய்க்கிற இளைஞர்கள் - அதே ஆடு மாடு மேய்க்கிற வேலையை செய்து கொண்டிருக்க வேண்டும் - அவர்கள் கல்வி கற்பது என்ற பிரச்சினை வந்தால்தானே; உத்தியோகங்களுக்குச் செல்வது என்ற பிரச்சினை வந்தால்தானே; இந்தி கற்பதைப் பற்றிய கேள்வியே எழும் என்ற பத்தாம்பசலித்தனமான பிரபுத்துவப் போக்கும் இத்தகைய கேள்விகளில் வேர்விட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் கிராமப்புறத்து மக்கள் புரிந்து கொள்ளவே செய்வார்கள்!

எவ்வளவு ஏளனம்? எத்துணை ஏகடியம்?

கிராமத்திலே ஆடு மாடு மேய்ப்பவனிடம் போய் யார் இந்தியைத் திணிக்கிறார்கள்?

இப்படி ஆளுங்கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சபாநாயகரே அவையில் கேட்கிறார் என்றால்; தமிழன் தலைகுனிந்து நின்று கண்கலங்குவதைத் தவிர வேறென்ன செய்ய இயலும்!

இந்திய யூனியனில் இருக்கும் வரை இந்தி இருந்துதான் தீரும்; என்று சபாநாயகர் முத்தாய்ப்பு வைப்பதற்கு என்ன பொருள்?

இந்திய யூனியனில் தமிழகம் இருப்பது தேவையில்லை என்று தனிநாடு கோருகிறாரா?

சே! சே! அந்தப் பிரிவினை எண்ணம் - அவருக்கு ஏற்பட நியாயமே இல்லை என்றால்; இந்தி வெறியர் ஒருவர் ஆணவத்தோடு இந்தி பேசாத மாநில மக்களைப் பார்த்து - குறிப்பாக இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் தமிழக மக்களைப் பார்த்து;

நீ ஏன் இந்தியை எதிர்க்கிறாய்? உன்னால் என்ன செய்ய முடியும்? நீ, இந்திய யூனியனில் இருப்பதை மறந்து விட்டாயா? இதில் இருக்கும் வரையில் நீ இரண்டாம்தரக் குடிமகன்தான்! இந்தித் திணிப்பை நீ ஏற்றுக் கொண்டே தீரவேண்டும்.

என்று கூறும் தோரணையில் அல்லவா சபாநாயகரின் கருத்து அமைந்திருக்கிறது!

எங்கே இந்தியைத் திணித்தார்கள்?

எதற்காக இந்தப் போராட்டம்?

என்று பேரவையில் வினா எழுப்பிய அமைச்சருக்கும்,

கிராமத்தில் ஆடு மாடு மேய்ப்பவனிடம் போய் யார் இந்தியைத் திணிக்கிறார்கள்?

எனக்கேட்ட சபாநாயகருக்கும் - 1986 நவம்பர் திங்கள் 13ஆம் நாள் நினைவுபடுத்துவது நமது கடமையாகும்!

அதாவது மூன்று மாதங்களுக்கு முன்பு பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சி என்றாலும் கூட அமைச்சரும் சபாநாயகரும் தங்களுக்கு இருக்கும் எத்தனையோ அலுவல்களுக்கிடையே அதனை மறந்து போயிருக்கக் கூடும்.

ஆம்; நவம்பர் 13-ஆம் நாள் பேரவையில் இந்த அரசின் சார்பாக ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவ்வப்போது இந்தி பேசாத மக்கள் மீது; நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்தியைத் திணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது இந்தி பேசாத மக்களுக்குப் பெருங்கவலையை ஏற்படுத்தி வருகிறது.

ஜவகர்லால் நேரு அவர்களால் அளிக்கப்பட்டு இந்திராகாந்தி அவர்களாலும் ராஜீவ் காந்தி அவர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உறுதிமொழிக்கு அரசியல் சட்ட ரீதியான ஒரு அங்கீகாரம் அளிப்பதன் மூலமே ஆங்கிலத்தை தொடர்ந்து பயன்படுத்தும் பாதுகாப்பைப் பெரிய அளவில் பெற முடியும்.

அத்தகைய ஒரு அரசியல் சட்டத்திருத்தம்தான் இந்தி பேசாத மக்களின் உண்மையான அச்ச உணர்வுகளையும், கவலையையும் நீக்குவதோடு இந்தித் திணிப்பின் காரணமாக அவ்வப்போது எழுகிற குழப்பம், சீர்குலைவு, மற்றும் கடுமையான சட்டம் ஒழுங்கு சூழ்நிலைகள் ஆகியவற்றை தவிர்க்கும்.

உடன்பிறப்பே; எம்.ஜி.ஆர். பெயரால் அமைச்சர் பொன்னையன் பேரவையில் படித்து முன்மொழிந்து நிறைவேற்றிய தீர்மானத்தின் சில பகுதிகள்தான் இவை!

எங்கே இந்தியைத் திணித்தார்கள்? என்று மார்ச் 5ஆம் நாளன்று பேரவையில் வினா எழுப்பிய அமைச்சரும் - அதனை

அனுசரித்துப் பேசி இந்திக்காக வாதாடியுள்ள சபாநாயகரும் - இந்தத் தீர்மானம் அதே பேரவையில் மூன்று மாதங்களுக்கு முன்பு நிறைவேறிய போது;

எங்கே இந்தியைத் திணித்தார்கள்? எதற்காக

இந்தத் தீர்மானம்? என்று கேட்கவில்லை!

எனவே அந்தத் தீர்மானம் அ.தி.மு.க. ஆட்சியாளரால் இருதய சுத்தியோடு கொண்டு வரப்பட்ட ஒன்றல்ல என்பது நிரூபணமாகிறது!

கோவையில் நவம்பர் 10ஆம் நாள் தி.மு.க. நடத்திய இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடும் - அறப்போராட்டம் நவம்பர் 17 முதல் தொடங்கும் என்ற அறிவிப்பும்தான் எம்.ஜி.ஆர். அரசுக்கு அப்படியொரு தீர்மானத்தை நிறைவேற்றும் அவசியத்தை ஏற்படுத்தியிருக்கிறது!

அதனால்தான் அந்தத் தீர்மானத்திலேயே இந்தி எப்படியெல்லாம் - யார் யார் உறுதிமொழிகளையெல்லாம் மீறி திணிக்கப்படுகிறது - என்று எழுதப்பட்டுள்ள வாசகம் கூட இப்போது மறந்து போய் விட்டிருக்கிறது!

அதனால்தான்

எங்கே இந்தியைத் திணித்தார்கள்?

என்று

தீர்மானம் கொண்டுவந்த திருவாளர்களே

கேட்கிறார்கள்!

அன்புடன்

மு.க.

07-03-1987

1494. வெறியர்களுக்கும் அடிமைகளுக்கும் விளங்கவைக்க...

உடன்பிறப்பே,

திடீரென்று அமைச்சர் ஒருவர் சட்டப் பேரவையில் எழுந்து ஒருநாள்; ஒரு சூடான கேள்வியைக் கேட்டார்!

என்ன கேள்வி தெரியுமா அது?

இப்போது இந்தி எங்கே திணிக்கப்படுகிறது?

எதற்காக போராட்டம் நடத்துகிறீர்கள்?

ஆகா! தி.மு.க. உறுப்பினர்களின் வாயடைக்கும் கேள்வியை அந்த அமைச்சர் கேட்டு விட்டார் என்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் பூரித்துப் போனார்கள்! புளகாங்கிதமுற்றார்கள்! பொங்கி வழியும் மகிழ்ச்சியில் திளைத்துத் திண்டாடினார்கள்!

இந்தி திணிக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி பேரவையில் எம்.ஜி.ஆர். பெயரால் அமைச்சர் பொன்னையன் தீர்மானம் கொண்டு வந்து மூன்று மாதம்கூட முடியவில்லை; அதற்குள் ஒரு அமைச்சர், துள்ளிக் குதித்து - இந்தி எங்கே திணிக்கப்படுகிறது? எதற்காக இப்போது போராட்டம்? என்று இடியென முழங்கினார். அடடா; நமது அமைச்சர் தி.மு.க.வை சரியாக மடக்கினார் என்று ஆளுங்கட்சி தரப்பினர் சிலரும் ஆரவாரித்துப் பெருமிதம் கொண்டனர்.

எத்தனை உறுதிமொழிகள் கொடுத்தாலும் - அவற்றுக்கு உத்திரவாதமில்லாமல் இந்தி திணிக்கப்படுவதால் அவ்வப்போது எழுகிற குழப்பம், சீர்குலைவு, கடுமையான சட்டம் ஒழுங்கு சூழ்நிலைகளைத் தவிர்க்க நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்யுங்கள் என மத்திய அரசைக் கோருகிற கருத்தமைந்த தீர்மானத்தைச் சட்டப் பேரவையிலே கொண்டுவந்து நிறைவேற்றிவிட்டு; இந்தி எங்கே

திணிக்கப்படுகிறது? என்று கேட்ட கேள்வியிருக்கிறதே; அது இந்த ஆண்டுத் தொடக்கத்திலேயே முதல்தரமான நகைச்சுவையென விபரமறிந்த வட்டாரத்தினர் வேதனையுடன் சிரிக்கத்தான் செய்தனர்.

இந்தித் திணிப்பு எங்கே? எனக் கேட்பவர்களுக்கு விளக்கமளிக்கத்தான் இப்போது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் காலையிலேயே தொடங்கப் பெற்று இந்தி ஆதிக்கத்தின் கொடி இமயம் தொட்டுக் குமரி வரையில் பறக்க விடப் படுகிறது. தொலைக்காட்சி, வானொலி, அஞ்சல் அட்டை, அஞ்சலுறை, பணவிடைத்தாள் மற்றும் மத்திய அரசு அலுவலகங்கள், மத்திய அரசு சார்புடைய பொது நிறுவனங்கள் அனைத்திலும் இந்தி ஆதிக்கத் தர்பார் நடப்பது கண்டு தமிழன் கொதித்துப் போயிருக்கும் போது; மத்திய அரசு நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் கட்டப்படும் வீட்டுப்பகுதிகள் சிலவற்றுக்கு இந்திரா ஆவாஸ் யோஜனா என்று இந்தியிலேயே பெயர்கள் வைக்கப்படுமாம். படுமாம் என்ன? இப்போது கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு அவ்வாறே பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இதில் இந்திரா என்று பெயர் சூட்டுவதில் நமக்கு எந்த மறுப்பும் இல்லை!

ஆனால் ஆவாஸ் யோஜனா என்ற இந்தியையும் அத்துடன் இணைந்திடுவதை எங்ஙனம் சகித்துக் கொள்ள இயலும்?

மார்ச் திங்கள் இருபதாம்நாள் சட்டப்பேரவையில் நிதி நிலை அறிக்கையை படித்த நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பின்வருமாறு படித்தார்.

இந்திரா ஆவாஸ் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு அடிப்படை மூலதன நிதியுதவி அளிக்கும் கொள்கையை மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. ஆமாம்; உடன்பிறப்பே, நாவலர்தான் இதனை படித்தார்! அதாவது மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்துள்ள கொள்கையை நிதிநிலை அறிக்கையில் நாவலர் எழுதி; அதனை அவரே படித்தார்!

இந்திரா நினைவாக அமையும் வீட்டுப்பகுதிகள்; அல்லது காலனிகள் அல்லது குடியிருப்புகள்; இப்படி எந்தச் சொற்றொடரும் நாவலருக்கு கிடைக்காத காரணத்தால் இந்திரா ஆவாஸ் யோஜனா என்று வேறு வழியில்லாமல் படித்தார் என்று நாவலரின் தமிழாற்றலை அறிந்த நான் எண்ணிட மாட்டேன்!

அவரேதான் படித்திருக்கிறாரே; இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளதென்று!

இன்னும் சொல்லப் போனால் நாவலர் நிதி நிலை அறிக்கையை படிப்பதற்கு முன்பே இந்த ஆவாஸ் யோஜனா என்ற இந்திப் பெயர் சில இடங்களில் தமிழ் நாட்டில் குடியிருப்புகளுக்குச் சூட்டப்பட்டு எழுதப்பட்டும் விட்டது. அதனால் தான் நாவலர் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது என்று நிதி நிலை அறிக்கையில் படித்திருக்கிறார்.

இப்படி இந்தியிலே எழுதுங்கள் என மத்தியிலேயிருந்து ஆணையோ அல்லது அறிவிப்போ வந்தவுடன்; நிதியுதவி உங்களுடையதாக இருந்தாலும்; குடியிருப்புகளைக் கட்டுவது மாநில அரசின் பொறுப்பு! அப்படியிருக்கும்போது இந்திரா என்ற பெயர் இருக்கட்டும். அதைத் தொடர்ந்து குடியிருப்பு என்ற சொல்லைத்தான் இணைப்போமே தவிர; ஆவாஸ் என்றோ யோஜனா என்றோ பெயர் சூட்ட மாட்டோம் என்று இங்குள்ள எம்.ஜி.ஆர். அரசு மறுப்புத் தெரிவித்ததா? இல்லை!

இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இந்திரா ஆவாஸ் யோஜனா என்ற பெயரில் குடியிருப்புகள் காட்சி தருகின்றன!

குடியிருப்புகள் மட்டுமல்லவே; நிதியமைச்சர் நாவலர் அவர்களே; நிதி நிலை அறிக்கையில் தமிழ் அறிக்கை 9ஆம் பக்கத்தில் இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு அடிப்படை மூலதன நிதியுதவி அளிக்கும் கொள்கையை மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது என்றும் - ஆங்கில அறிக்கை 7-ஆம் பக்கத்தில் The Government of India have already announced the concept of seed capital provision in the case of houses to be constructed under the Scheme of "Indira Awass Yojana" - என்றும் கம்பீரமாக நின்று கொண்டு படித்துள்ளார். ஆம்; அவர் கம்பீரமாக நின்று கொண்டுதான் படித்திருக்கிறார்! அதைக் கேள்விப்படும் நாம்தான் தமிழக நிலை கண்டு கூனிக்குறுகி நிற்கவேண்டியவர்களாகியிருக்கிறோம்.

கழக சட்டமன்ற உறுப்பினர் தம்பி நன்னிலம் மணிமாறன் அந்த வேதனை தாங்க முடியாமல்தான் அவையில் நிதி நிலை அறிக்கையின் மீது அவர் உரையாற்றும்போது நாவலரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார். நற்றமிழ் படித்த நாவலர் இந்திரா

ஆவாஸ் யோஜனா என்று படிக்கிறார். யாராவது அப்படித்தான் படிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்களா? இருபுறமும் காவலர்களை வைத்துக்கொண்டு நிர்ப்பந்தப் படுத்தினார்களா?

இதுதான் தம்பி மணிமாறன் கேள்வி! ஏன் கேட்கமாட்டார்! ஆளுங்கட்சியில் இருந்தாலோ; அல்லது ஆளுங்கட்சியை அரவணைத்துச் சென்றாலோ; அது கிடைக்கும் இது கிடைக்கும் என்ற ஆசாபாசங்களுக்கு அடிமையாகி - கொள்கையை அடகு வைக்க நினைத்துக் கூடப் பார்க்காத உடன்பிறப்புகளில் ஒருவராயிற்றே தம்பி மணிமாறன் - அதனால் துடிப்போடுதான் கேட்டிருக்கிறார்! துன்பம் துளைத்திடும் நிலையில்தான் கேட்டிருக்கிறார்!

இந்தியில் எத்தனை வகை? அதில் ஆட்சி மொழியாகும் இந்தி எந்த வகை? என்பதை தனக்கேயுரியபாணியில் தமிழகத்து மேடைதோறும் முழக்கி, முரசுகொட்டி, இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு படைக்கலன்களை வழங்கிய தளபதிகளில் ஒருவராயிற்றே நாவலர்; அந்த நாவலர் - அவரே தயாரித்துப் படித்த நிதி நிலை அறிக்கையில் இந்திரா ஆவாஸ் யோஜனா என்ற பெயரில் குடியிருப்புகள் அமையுமென ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகிறார் என்றால் ஒரு காலத்தில் அவர் பேச்சையும் கேட்டு உணர்ச்சி பெற்ற உள்ளம்தானே தம்பி மணிமாறனின் உள்ளம்; அந்த உள்ளம் பதறாதா? இப்படிக்குள்ளமாகி விட்டாரே நாவலர் என்று குமுறாதா?

மணிமாறன் இப்படியொரு கேள்வியைக் கேட்டதும்; அண்ணா எழுதிய சந்திரமோகன் நாடகத்தில், சிவாஜியைப் பார்த்து சந்திரமோகன் மண்டிலங்களை வென்ற மாவீரனே! நீயா இப்படி மண்டியிடுவது காகபட்டரிடம்? என்று கேட்டபோது வீர சிவாஜி எப்படி மௌனமாக ஆகிவிட்டானோ; அதைப் போல நாவலர் ஆகியிருக்கக் கூடும்! மாவீரன் சிவாஜியின் மனச்சாட்சியைத்தானே சந்திரமோகன் என்ற பாத்திரமாகப் படைத்து அவனோடு வாதாட வைத்தார் அண்ணா! அந்த மனப்போர் நாவலரையும் ஆட்டிப்படைத்திருக்கும் அல்லவா; மணிமாறன்; வினாத் தொடுத்த வேளையில்!

அந்த நேரத்தில் அமைச்சர் ஒருவர் எழுந்து;
அரசாங்கம் ஆணையிட்டு அப்பெயர்

மாற்றப்பட்டாகி விட்டது
எனப் பதில் அளித்திருக்கிறார்.
ஆனால் மணிமாறன் விடவில்லை!

அரசாங்கம் ஆணையிட்டிருந்தால் அதன் பிறகும் ஏன் அதை மாற்றாமல் நிதி நிலை அறிக்கையுரையிலே அச்சடித்துப் படிக்கிறீர்கள்? எனக் கேட்டிருக்கிறார்.

இந்திரா நினைவு காலனி என்று மாற்றும்படி ஆணையிடப்பட்டுள்ளது.

என்று அந்த அமைச்சர் விளக்கமளிக்கிறார்.

அப்படியானால் நிதி நிலை அறிக்கையில் இந்திரா ஆவாஸ் யோஜனா என்று எழுதிப் படித்தது ஏன்?

என்ற மணிமாறனின் எதிர்க் கேள்விக்கு விடை கிடைக்கவில்லை!

விடை கிடைக்காது!

உடன்பிறப்பே; குறுக்கிட்டுப் பதில் அளித்த அமைச்சர் கூறியது உண்மையாக இருக்குமானால் இருக்க வேண்டும் இந்திரா நினைவு குடியிருப்பு என அந்தக் காலனிகளுக்குப் பெயர் இருப்பதில் உனக்கும் எனக்கும் கருத்து வேறு பாடில்லை!

எனவே; அரசாங்கம் அந்த இந்திப் பெயரை மாற்றுவதற்கு ஆணையிட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் - ஆங்காங்கு ஆவாஸ் யோஜனா என்ற சொற்றொடர் மாற்றப்பட்டு நினைவுக் குடியிருப்பு - அதாவது இந்திரா நினைவுக் குடியிருப்பு என்று, அமைந்திட உடனடியாகச் செயல்படத் தொடங்குவதுதான்; இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் தமிழர்கள் இன்னும் செத்துப் போய்விடவில்லை என்பதை இந்தி ஆதிக்க வெறியர்களுக்கும், இந்தி ஆதிக்க அடிமைகளுக்கும் உணர்த்துகின்ற செய்தியாக இருக்கும்!

அன்புடன்

மு.க.

30-03-1987

1495. புதுவையிலும் “சேடிஸ்ட்” நோய் பரவுகிறதா?

உடன்பிறப்பே,

புதுவை மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் இருந்தார்கள். தி.மு.கழக சட்டமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேர் இருக்கிறார்கள். அ.தி.மு.க. ஆறு பேர் என்பதால்; எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களது எண்ணிக்கையில் அவர்கள்தான் அதிகம் என்பதால்; புதுவை சட்டமன்ற அவையில் அவர்களுக்கு எதிர்க்கட்சி வரிசையில் முதலிடம் தரப்பட்டிருந்தது.

சில மாதங்களுக்கு முன்பு அ.தி.மு.க.விலிருந்து டாக்டர் எம்.ஏ.எஸ். சுப்பிரமணியமும் அன்பழகனும் அவர்களுடன் ஒரு பெரும் அணியினரும் விலகி, திராவிட இயக்கம் எனப் புதுக் கட்சி தொடங்கினர். எம்.ஏ.எஸ். சுப்பிரமணியமும், அன்பழகனும் புதுவை மாநில சட்டமன்ற உறுப்பினர்களும் கூட!

அவர்கள் விலகிவிட்ட காரணத்தால் புதுவை சட்ட மன்றத்தில் அ.தி.மு.க. எண்ணிக்கை நாலாக ஆகிவிட்டது!

ஆறு பேரில் இரண்டு பேர் விலகுவது என்பது மூன்றில் ஒரு பங்கு என்ற நிலையில் அந்த இரண்டு பேருக்கும், அவர்கள் விரும்பி எழுதிக் கேட்டது போல் திராவிட இயக்கம் என்ற கட்சிக்கு அவையில் இரண்டு இடங்கள் ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. சட்டப்படி அப்படி எதிர்பார்ப்பதில் தவறு இல்லை. ஆனால் ஆரம்பகால அரசியல் வாழ்க்கையிலிருந்து எந்தவொரு கட்சிக்கும் தாவாமல் ஒரே கட்சியில் நிலையாக இருந்து வரும்(?) புதுவை சபாநாயகர் காமி செட்டி அவர்கள் அ.தி.மு.க.விலிருந்து விலகிய இரு உறுப்பினர்களும் பதவியில் தொடர முடியாது என அறிவித்து விட்டார். அது குறித்து வழக்கு

நடைபெற்றுக் கொண்டிருப்பதால் விபரங்களுக்குள் நுழைய நான் விரும்பவில்லை.

இப்போது கவனிக்க வேண்டியது அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நாலு பேராக குறைந்துவிட்டதைத்தான்!

இரண்டு பேரை சபாநாயகர்; பதவியிலிருந்தே விலக்கி விட்டார். ஒருவேளை அவர்கள் வழக்கில் நீதி கிடைத்து மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவியில் தொடர்ந்தாலும் அ.தி.மு.க.வில் இருக்க மாட்டார்கள். திராவிட இயக்கம் எனப் புதுக்கட்சியை அவர்கள் ஏற்கெனவே அமைத்துக் கொண்டிருக் கிறார்கள்.

ஆனால் இந்த நிலையில் புதுவை சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் தி.மு.கழகத்தினர் ஐந்து பேர்!

அ.தி.மு.க. உறுப்பினர்கள் நாலு பேர்!

இப்போது எதிர் அணியில் முதல் வரிசையில் உட்கார வேண்டியவர்கள் யார்?

ஐந்து பேரா?
அல்லது நாலு பேரா?

ஐந்து பெரிதா? நாலு பெரிதா? என்ற ஆராய்ச்சி சுமார் ஆறுமாத காலமாக நடைபெற்று; புதுவைக்கு அருகில் உள்ள அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியைவிட ஆழமாக நடைபெற்று - ஆறு மாதத்திற்குப் பிறகு;

ஐந்துதான் பெரிது
நாலு ஐந்தைவிடச்

சிறியதுதான் என்ற முடிவுக்கு புதுவை இந்திரா காங்கிரஸ் ஆட்சியாளர்கள் சில நாட்களுக்கு முன் (மார்ச் 27-ந் தேதியன்று) வந்திருக்கிறார்கள்.

அந்த நீண்ட - ஆழ்ந்த ஆராய்ச்சியின் முடிவின்படி, புதுவை சட்டசபையில் தி.மு.க. உறுப்பினர்கள் ஐவருக்கும் எதிரணியில் முதல் வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டு, அதற்குரிய பெயர் அட்டைகளும் வைக்கப்பட்டுவிட்டனவாம். இந்தச் செய்தி தி.மு.க. சட்டமன்றக் குழுவின் தலைவர் முன்னாள் முதல்வர்

டி. ராமச்சந்திரனுக்கும் தெரிந்து; அவரும் பரவாயில்லை - பாண்டிச்சேரியிலாவது; அதுவும் தாமதமாகவாவது, ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்க முன் வந்துள்ளார்களே! என மகிழ்ச்சியடைந்திருக்கிறார்.

ஆனால் வாடிவதங்கிய அந்த ஜனநாயகச் செடியையும், சென்னை ராமாவரம் தோட்டத்திலிருந்து வீசிய புயல் வேரோடு பிடுங்கித் தாக்கி எறிந்து விட்ட செய்தியொன்று புதுவையில் திடீரெனப் பரவியது!

ஆம்; அதன் விளைவு?

நாலு பேராக உள்ள அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு எதிரணியில் முதல் வரிசையில் இடம்!

ஐந்து பேராக உள்ள தி.மு.க. உறுப்பினர்களுக்கு எதிரணியில் இரண்டாவது வரிசையில் இடம்!

என்னய்யா ஜனநாயகம் இது? என்று வேதனையோடு சிரிக்கத் தோன்றுகிறதல்லவா?

நினைவிருக்கிறதா உனக்கு? இங்கே, தமிழ் நாடு மேலவையில் ஐந்து பேராக நாமும் - காங்கிரஸ் நாலாகவும் ஆனபோது - நான் முன்வரிசையில் அமர்ந்துவிடக் கூடாதென்று; திட்டமிட்டு ஒரு சுயேச்சை உறுப்பினரை இழுத்து ஐந்தாக்கி - முதலிலேயே ஐந்து பேரான நம்முடைய கழகத்திற்கு மேலவையில் இரண்டாவது இடம்தான் என்று சொன்னார்கள்; பிறகு நமது வலிவு மேலவையில் ஏழாயிற்று - எதிர் அணியில் முதல் வரிசையில் அமர்ந்தோம்! உள்ளாட்சி மன்ற வாயிலாக சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் மேலும் பத்துப்பேர் தி.மு.க.வினர் வெற்றிபெற்று வரக்கூடும் எனத் தெளிவாகத் தெரிந்தவுடன் மேலவையையே கலைத்துவிட்டார்களே சேடிஸ்டுகள்; அது அதற்குள்ளே மறந்தா போய்விடும்?

இப்போது அந்த சேடிஸ்ட் நோய்; புதுவைக்கும் பரவியிருக்கிறது அவ்வளவுதான்!

அங்கும் ஒரு முயற்சி நடைபெறுகிறதாம்; ஒரு சுயேச்சையை நல்ல விலைக்கு வாங்குவதற்கு!

அப்படியே வாங்கினால்கூட - அங்கு அ.இ.அ.தி.மு.க.வின் எம்.எல்.ஏக்கள் எண்ணிக்கை இனிமேல்தானே ஐந்தாக முடியும்?

இப்போது ஐந்து பேராக இருக்கிற தி.மு.க. எம்.எல்.ஏக்கள் நியாயப்படி - ஜனநாயக முறைப்படி - சட்டமன்ற விதிப்படி - எதிர் அணியின் முதல் வரிசையில் அமருவதற்குத்தானே சபாநாயகர் அனுமதித்திருக்க வேண்டும்!

அந்த நியாயம் ஏன் கண்ணுக்குத் தெரியவில்லை?

ஜனநாயகத்தின் அரிச்சுவடிப் புத்தகத்தையே கிழித்தெறிந்து விட்டு - அகில இந்தியாவில் ஜனநாயகத்தை நிலைநாட்டிக் கிழிப்போம் என்று பேச; இந்திரா காங்கிரசுக்கு எங்கே முகம் இருக்கிறது? என்ன தகுதி இருக்கிறது?

இது குறித்து குடியரசுத் தலைவருக்கும் புதுவை ஆளுநருக்கும் கடிதம் எழுதியும்கூட பல மாதங்களாகப் பதில் வராததிலிருந்து மத்திய அரசு ஜனநாயகத்தைக் காப்பாற்றும் அழகும் புலனாகிறது என்று புதுவை மாநில கழக அமைப்பாளரும், முன்னாள் முதல்வரும் சட்டமன்ற கழகக் குழுத் தலைவருமான டி. ராமச்சந்திரன் அவர்கள் அறிக்கையொன்று விடுத்துள்ளார்.

இடப்பிரச்சினையில் இழிவுபடுத்துவதாலேயே தி.மு.கழகத்தை மதிப்பிழக்கச் செய்து விடலாமென்று சில சபாநாயகர்கள் கணக்கிட்டுக் காரியமாற்றுகிறார்கள்.

தமயந்தி சுயம்வரத்தில் நளனுக்கு உரிய இடம் தரப்படவில்லை - எனினும் தமயந்தி நளனைத் தேடித்தான் மாலையிட்டாள்!

சம்யுக்தை சுயம்வரத்தில் அவளது தந்தை ஜெயச்சந்திரன்; பிருத்விராஜனுக்கு அழைப்பு அனுப்பாதது மட்டுமல்ல - பிருத்வியைப் போல ஒரு சிலை செய்து வாயிற் காவலனைப் போல நிறுத்தியிருந்தான் - ஆனால் சம்யுக்தை அந்த சிலைக்கு மாலையிட்டு பிருத்வியுடன் குதிரையேறிக் கிளம்பி விட்டாள் என்றுதான் கதை!

இடப்பிரச்சினையில் அழுகுணித்தனமாக நடந்து கொள்கிறவர்களுக்கு இந்தக் கதைகள் அறிவு புகட்டாவிட்டால்; பிறகு மக்கள் சக்தியைத் திரட்டித்தான் ஜனநாயகப் பாடத்தைக் கற்றுத் தர வேண்டும்!

(குறிப்பு : உடன்பிறப்பே, இந்தக் கடிதம் எழுதி அச்சுக் கோத்து முடிந்த போது; புதுவையிலிருந்து செய்தி வந்துள்ளது; நியாயமான இட உரிமை கோரி சட்டமன்றத்தில் குரல் கொடுத்த தி.மு.கழக எம்.எல்.ஏக்களை எட்டு நாட்கள் சட்டசபை வளாகத்திற்குள்ளேயே நுழையக் கூடாது என்று வெளியேற்றப்பட்டுள்ளார்கள் மாண்புமிகு சபாநாயகர் அவர்களால்! வாழ்க; இந்திரா காங்கிரஸ் ஜனநாயகம்!)

அன்புடன்

மு.க.

31-03-1987

1496. பூமிக்குப் பொறுமை எனப் பெயர் உண்டு!

உடன்பிறப்பே,

மிகப் பொறுப்பு வாய்ந்த பதவி! நடுநிலை தவறாதவர்கள் மட்டுமே அமர்ந்திருக்கக் கூடிய பதவி! முதலில் ஒரு கட்சியைச் சார்ந்தவராக இருப்பினும்; அந்த இருக்கையில் அமர்ந்து விட்ட பிறகு - அந்தப் பதவிக்கென என்ன விதிமுறைகள், சட்டங்கள் உண்டோ அவற்றை வளைக்காமல் - திரிக்காமல் - மனச்சாட்சியை அடிப்படையாக வைத்து பாரபட்சமின்றி இயக்கப்பட வேண்டிய பதவி!

இன்று பல இடங்களில் அந்தப் பதவியின் மாண்பு சீர்குலைக்கப் படுவதைக் காணும்போது வேதனை வெள்ளமாகப் பெருக்கெடுக்கிறது!

தராசுமுள் தவறாமல் நீதி வழங்கும் நாணயமுள்ள நீதிபதிகளைப் போன்ற பலர் அலங்கரித்த; அந்த பதவிப்பீடம் இன்று நீதியையும் ஜனநாயகத்தையும் துடிக்கத் துடிக்க கொல்லும் பலி பீடமாகிவிட்டது!

நியாயமான உரிமைகளைக் கேட்டு - அமைதியாக வாதாடிப் பார்த்து ஆறு மாதம் பொறுத்திருந்தாலும் - அந்த உரிமை வழங்கப்படவில்லை!

உரிமை; ஆறு மாதமாக மறுக்கப்படுவது உலகுக்கு தெரியட்டுமென்று சற்று உரத்த குரல் எழுப்பினாலோ - போ வெளியே என்று ஆணவத்தின் அதிகாரக் கூச்சல் கிளம்புகிறது!

இது அநியாயமல்லவா? என்று கேட்கும் தூய உள்ளம் சில பத்திரிகைகளுக்கு இல்லை என்பது மட்டுமல்ல; என்னதான் உண்மை? ஏன் அவர்கள் உரிமைக்குரல் எழுப்பினார்கள்?

என்பதையும் மறைத்துச் செய்தி வெளியிட்டுத் தங்களது தீய உள்ளத்தை திசையெட்டும் பறை சாற்றிக்கொள்கின்றன!

இந்தியாவின் மிகப் பெரும் பதவியில் இருப்பவர், தேச விரோதிகளுக்குத் தனது இருப்பிடத்தில் அபயம் கொடுத்தார் என்று பேசும் போது மட்டும்; நடுநிலைத்தராசு(?) அதனைத் தடுத்து நிறுத்தாதாம்!

ஆனால் அந்த உச்ச இடத்தில் இருப்பவர்; தனது நிலையை விளக்கி; தனக்கு அடுத்த இடத்தில் இருப்பவரின் குறைபாடுகளைக் குறிப்பிட்ட பிறகு; அக்குறைபாடு குறித்து மூச்சுப் பேச்சு கூடாதாம்! அதற்கு மட்டும் சட்டத்தில் இடமில்லையாம்! நடுநிலைத் துலாக்கோல் இப்படி நாணலாய் வளைகிறது! நாசமாகப் போகிறது ஜனநாயகம்!

ஜனநாயகத்தின் பெயரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எங்கே அமர்ந்திருக்கிறார்களோ; அந்த இடத்திலேயே - ஜனநாயகத்தின் கற்பு குலைக்கப்படுகிற நிகழ்ச்சியென்றால்; இந்த நாடு இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

கேள்வியல்ல இது! சுடுகணை!

சர்வாதிகார மனம் கொண்டோர்; இன்றில்லாவிட்டாலும் எதிர்காலத்திலாவது எதிர்ப்பு நெருப்பின் கனலைத் தாக்குப்பிடிக்க முடியாமல் திணறுவர்! அலறுவர்! கதறுவர்!

இவை, கடந்த காலத்து நடந்து முடிந்த வரலாறுகள் மட்டுமல்ல, நடக்கப்போகிற வரலாறுகளும் கூட!

என்னைவிடப் பெரியவன் எவனுமில்லை; என் கையில் தான் அலாவுதீன் அற்புத தீபத்தைக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறான் - அந்த அதிகார தீபத்தை தேய்த்து வானமளாவிய ஆதிக்க பூதத்தை வரவழைப்பேன்; உங்களைக் கூண்டோடு வெளியேற்றுவேன் - வெறிபிடித்து ஆடுவேன் - இங்கே உட்கார்; அங்கே உட்கார் என்று இழுத்தடிப்பேன் - நீதி மன்றங்கள் - அங்குள்ள நீதி தேவன்கள் எல்லாமே என் கைக்குள் அடக்கம். இப்படிப் பித்தமேறிக் குதிப்பவர்களின் காலடியில் ஜனநாயக மலர்; கசங்கி, வதங்கி, கருகிச் சீரழிகிறது!

அதையும் இந்த நாடு வேடிக்கை பார்த்துக் கொண்டு தானிருக்கிறது!

அமைதி; கோழைத்தனம் ஒளிந்து கொண்டிருக்கும் புதர் அல்ல!

புகைவதற்கு முன்பும் - பூதாகரமாக வெடித்து நெருப்புக்குழம்பைக் கக்குவதற்கு முன்பும் - எரிமலை கூட மோனத்திலிருக்கும் முனிவனைப்போலத்தான் அமைதியாக தோற்றமளிக்கும்!

நாலு பெரிதா? ஐந்து பெரிதா? என்று கணக்கிடத் தெரியாதவர்கள் எல்லாம் நாட்டாண்மைக்கு வந்துவிட்டால்;

நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால்; கிடைக்கு எட்டு ஆடு கேட்கும் என்ற பழமொழியைத்தானே நமக்கு நினைவுபடுத்துவார்கள்!

உலகத்தின் மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா!

இங்கே இப்போது எமர்ஜன்சி இல்லாமலே; ஜனநாயகத்தின் தாலி அறுக்கப்படுகிறது.

புத்த பீடத்தில் ஆட்டுக் குட்டிக்கு மஞ்சள் தடவி மாலை போட்டு அதன் வயிற்றைக் கிழித்து குடலை எடுத்து அதனை மாலையாக்கிப் புத்தர் சிலைக்கு அணிவிக்கும் அநியாயம் நடைபெறுகிறது.

அருட்பெருஞ்ஜோதி - தனிப்பெருங் கருணையென முழங்கிக் கொண்டே; அந்தச் சந்நிதியில் மாமிச உணவு தயாரிக்கப்படுகிறது!

மகாத்மா காந்தியின் பெயரைக் கூறிக்கொண்டே; ஜனநாயகத்துக்கு மரணப் படுகுழி தோண்டப்படுகிறது!

இந்த முரண்பட்ட மோசடிச் செயல்களுக்கு அண்ணாவின் பெயரும் திரையாகப் பயன்படுத்தப்படுகிறது!

பூமிக்குப் பொறுமை
எனப் பெயர்
ஒன்று உண்டு!
பூகம்பத்தை உருவாக்
குவதும் அதே பூமிதான்

என்பதை அறியாதோர்
அறிவற்றோரே!

ஜனநாயகத்தில் தராசுகள்தான் நீதி வழங்கும்; நீதி வழங்க வேண்டும் - ஜனநாயகம் கொல்லப்பட்டு சர்வாதிகாரம் வியாபிக்குமானால்; அப்போது; வலுத்தவன் கை ஆயுதங்கள் மட்டுமே நீதி வழங்கும் பொறுப்பை ஏற்கும்!

அப்படியொரு நிலை வரக்கூடாது என்ற ஆழ்ந்த கவலையின் காரணமாகத்தான் ஜனநாயகத்தைக் கொன்று விடாதீர்கள் என்று கூவுகிறோம்!

அன்புடன்

மு.க.

01-04-1987

1497. அன்று விடுத்த அறிக்கையும், இன்று வந்த விளம்பரமும்!

உடன்பிறப்பே,

திருவரங்கத்தில் ஜீயர் அவர்களது முயற்சியால் பல லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட 236 அடி கோபுர வேலை முடிவுற்று - அந்த ராஜகோபுர நீராட்டுவிழாவும் நிறைவுற்ற பிறகு; சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் என இலாகாக் குறிப்பிடப்பட்டு (அறநிலையத் துறை என குறிப்பிடவில்லை என்பது சுட்டிக்காட்டத் தக்கது) வி.வி.சாமிநாதன் அவர்களின் பெயரால் ஒரு விளம்பரம் நாளேடுகளில் தரப்பட்டுள்ளது. எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்று சொன்னதான ஒரு வேடிக்கைக் கதை சிறுவயதில் கேட்டு சிரித்திருக்கிறோம் அல்லவா? அதைப்போலத்தானிருக்கிறது அமைச்சர் செய்துள்ள விளம்பரமும்!

அதில்; திருவரங்கம் திருக்கோயில் ராஜகோபுர புனித நீராட்டு விழா நிகழ்ச்சி 25.3.87க்கு பதிலாக வேறு ஒரு தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டதாக 19.3.87 காலை வெளிவந்த அறிவிப்புக்கு நானே பொறுப்பு. முதலமைச்சர் அவர்களைக் கலந்து கொண்டு வெளியிடப்பட்ட அறிவிப்பு அல்ல அது!

என்பதுதான் அந்த விளம்பரத்தின் முக்கிய சாராம்சமாகும்!

திருவரங்கம் கோபுர நீராட்டு விழா என்பது திருவரங்கம் கோயிலோடு முடிகிற நிகழ்ச்சியல்ல!

அந்த விழாவில் துணை ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன், கவர்னர் குரானா, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மற்றும் கேரளா, ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி முதலமைச்சர்கள் எல்லாம் கலந்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டு, அது குறித்த செய்திகள் தினந்தோறும் ஏடுகளில் பெரிய அளவில் வந்தவாறு இருந்தன!

அப்படிக் கலந்து கொள்கிறவர்கள் பெரும் பொறுப்பில் இருப்பவர்களாக - முதல்வர்களாக, கவர்னராக, குடியரசுத் துணைத் தலைவராக இருக்கும்போது; மிகப்பிரமாண்டமாக ஏற்பாடுகள் நடைபெற்று - நீராட்டு விழாவுக்கான யாகசாலைகள், அவற்றில் மந்திரமோத வேண்டிய வேத விற்பன்னர்கள், அனைத்துக்கும் ஏராளமாகச் செலவுகள் செய்தபிறகு; அந்த நிகழ்ச்சியைத் தேதி குறிப்பிடாமலே ஒத்தி வைக்கிற உத்திரவை ஒரு அமைச்சர்; 18ந் தேதி வரையில் சென்னையிலிருந்த முதலமைச்சரைக் கலந்து கொள்ளாமலே 18ந் தேதி இரவு பிறப்பிக்கிறார் என்றால்; இதைவிட ஆணவமான செயல் ஒரு முதலமைச்சரை வேறு எங்காவது காண முடியுமா?

அதுமட்டுமல்ல; நாற்பது லட்ச ரூபாய் செலவில் உருவான அந்தக் கோபுரப் பணிக்குக் காரணகர்த்தாவான ஜீயர் அவர்களுக்குத் தெரிவிக்காமல்; தேதியை ஒத்தி வைத்து இந்த அமைச்சர் தன்னிச்சையாக உத்திரவிடுகிறார்!

அமைச்சரின் ஒத்திவைப்பு உத்திரவை ஜீயர் ஏற்றுக்கொள்ளவில்லை! திட்டமிட்டபடி கோபுர நீராட்டு விழா 25ந் தேதி நடந்தே தீரும் என்கிறார் ஜீயர்! அந்தச் செய்தி ஏடுகளில் வருகிறது!

ஜீயரின் மறுப்பு அறிக்கைக்குப் பிறகாவது, அமைச்சர் சாமிநாதன் முதலமைச்சரைக் கலந்து பேச வேண்டும் என்று கருதினாரா?

இல்லை! இல்லை!

ஏன்? முதலமைச்சரை நேரில் காணமுடியாவிட்டாலும்; தோட்டத்துக்குச் சென்று கீழேயிருந்தவாறு இண்ட்டர் காம் எனப்படும் கருவி மூலம் ஒத்திவைப்பு அறிக்கை பற்றிக் கூறியிருக்கலாமே!

வெளியூரில் முதலமைச்சர் ஒருவேளை இருந்திருந்தாலும் - தனது ஒத்திவைப்பு அறிக்கை; ஜீயரின் மறுப்பு அறிக்கை; இரண்டையும் குறிப்பிட்டு முதலமைச்சரின் கருத்தைக் கேட்டிருக்கலாமே!

செய்தாரா சாமிநாதன்?

அதைச் செய்யாதது மட்டுமல்ல; ஜீயரின் மறுப்பு அறிக்கைக்கு இன்னொரு மறுப்பு அறிக்கை விடுக்கிறார். அதில்; பாதுகாப்பு

ஏற்பாடு - பக்தர்களின் கோரிக்கை - முதலிய அனைத்தையும் பரிசீலித்தே அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. எனவே ஒத்திவைப்பில் எந்த மாற்றமும் இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்.

அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

உடன்பிறப்பே; அமைச்சர் சாமிநாதன் மட்டும் எடுத்த முடிவு எப்படி அரசின் முடிவாகும்? அரசு என்பது அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பில் இயங்குவது தானே!

அரசு எடுத்த முடிவு என்கிறார் அறிக்கையில்! ஆனால் இப்போது வெளியிட்டுள்ள விளம்பரத்தில் தானே பொறுப்பு என்கிறார்!

ஆக; அரசு எனத் தன்னை மட்டுமே கருதிக் கொள்ளக்கூடிய நிலைமைக்குச் சாமிநாதனின் தனிச்செல்வாக்கு, தலைதூக்கி நிற்கிறது!

அந்த அளவுக்கு அவருக்கு இடம் கொடுத்தது யார்?

18ந் தேதி முதலமைச்சர் ஊரிலே இருக்கும் போதே முதலமைச்சரைக் கலக்காமலே முதல் முடிவு எடுத்து அறிவிக்கிறார் சாமிநாதன்!

மந்திரி நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா? எனக்கேட்கும் தெருக்கூத்து ராஜாவாக முதலமைச்சர் இருப்பதால்; அந்த முதல் முடிவு - அதாவது ஒத்திவைப்பு அறிவிப்பு முடிவு; முதலமைச்சருக்குத் தெரியவில்லை! எனவே அவர் குறுக்கிடவில்லை என்கிறாரா திரு. சாமிநாதன்?

அடுத்து ஜீயரின் மறுப்புக்கு மறுப்பளித்து - அரசின் முடிவில் மாற்றமில்லை - என சாமிநாதன் அறிவிக்கிறார்!

இப்போதும் மந்திரி, நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழை பொழிகிறதா? என்ற பாடல்தான் ராமாவரம் தோட்டத்திலிருந்து ஒலித்ததாகச் சொல்கிறாரா திரு.சாமிநாதன்?

சாமிநாதனின் இரண்டாவது அறிக்கையும், முதலமைச்சருக்குத் தெரியாமலே வெளியிடப்படுகிறது! அதுவும் அரசின் முடிவு இதுதான் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கும் அறிக்கை, அரசின் தலைவரான முதல்வருக்கே தெரியாமல் திரு.சாமிநாதனால் வெளியிடப்படுகிறது!

பிறகு ஜீயர், யார் தடுத்தாலும் சரி; 25ந் தேதியென முடிவு செய்தபடி நானே கோபுரத்திலேறி ஒரு சொம்பு தண்ணீரை கலசத்தில் ஊற்றியே தீருவேன் என அறிவிக்கிறார்!

அரசின் அறிவிப்பைக் கண்டித்து திருவரங்கத்து வியாபாரிகள் கடையடைப்பு நடத்துகின்றனர்!

இவ்வளவுக்கும் பிறகே எம்.ஜி.ஆர். பணிந்தார் என்பதுதான் உண்மை!

ஜீயரைச் சந்தித்துப் பேசிய அமைச்சர் சௌந்தரராசன் அவர்கள்; ஜீயர் சொன்னதை முதலமைச்சரைச் சந்தித்துக் கூறுவதாகக் குறிப்பிட்டார் என இந்தியன் எக்ஸ்பிரசில் 20.3.87 அன்று வெளியாகியிருக்கிறது.

இவைகளையெல்லாம் மறைத்துவிட்டு, முதலமைச்சருக்கு எதுவும் தெரியாதென்று - தன் மீது பொறுப்பை ஏற்றிக் கொள்ளும் அமைச்சர் சாமிநாதன்; இத்தனை திடீர்க் குழப்பங்களுக்கும் அவரே காரணமென்பதை ஒப்புக்கொண்டிருப்பதால் கௌரவமாகப் பதவி விலகுவாரா? அல்லது விலக்கப்படுவாரா?

ஏ, அப்பா! அவரை முதலமைச்சரால் நெருங்க முடியுமா?

முடியாது என்பது உண்மையானால் அந்த முடியாது என்பதற்கு மர்மமான காரணங்கள் பல இருக்கின்றன என்பதும் தெளிவான உண்மையாகும்! பலருக்குத் தெரிந்த உண்மையுமாகும்!

அன்புடன்

மு.க.

02-04-1987

1498. மூலையில் தள்ளினாலும் முழங்கும் முரசொலி!

உடன்பிறப்பே,

முரசொலி, வண்ணம் கொண்டு உங்கள் இல்லம் வருகிறது. இதன் முன்னாள் வடிவம் அறிவீரா? படித்து மடித்தால் பொடியாகும்; பிரித்துப் பார்த்தால் எழுத்துக் கலையும் என்று எண்ணத்தக்க விதத்தில் துண்டு வெளியீடாக திருவாரூர் மாணவரிடையே உலவிற்று அன்று!

இன்று கதையும் கவிதையும் சுவைபட! ஓவியம் விதவிதமாக! பளபளப்பா? உண்டு! வழவழப்பா? அழகாக! என்று இத்துறை எமக்கென்றே ஏற்பட்ட துறையென்று எண்ணிக் கிடந்தாரே வியந்து கூறும் வண்ணம், வெளி வந்து வீடுதோறும் விருந்தாகிறது.

ஆரூர் நமக்களித்த அருந்தம்பியின் உள்ளத்தில் தேங்கியும் தூங்கியும் உள்ள திறமைத்தனையும், கல்லி எடுத்திட்டால், காணலாம் மேலும் பல வெற்றிகள்!

..... நரம்பு தடவினோம்; நாதம் கிளம்பி விட்டது; பண்ணமைப்போம் வாரீர் - என்று அழைத்திடத் துணிவும் பிறந்து விட்டது, பண் அமைத்திட இயலும் என்பதை அறிவிக்கும் முறையில் முரசொலி இல்லமெங்கணும் இன்னிசையாகி நல்லோர் யாவரையும் ஒன்றுபடுத்தி நமது குறிக்கோள் வெற்றி பெற வழிகாண வேண்டும் - முரசொலி எனும் இந்த ஏடு என்று மட்டும் கூறுகிறேன் என்றெண்ணாதீர் - இதனை எழில் உள்ளதாக்கி, எனை நோக்கி கண்டீரா கைத்திறனை? என்று விழியால் கேட்டிடும் தம்பியையுந்தான்!

அதைத்தான் கூறுகிறேன் பார்வையால்! தம்பி அறிந்துதான் மகிழ்கிறான்!

உடன்பிறப்பே; 1959ஆம் ஆண்டு முரசொலி பொங்கல் மலரில் அண்ணா எழுதியது இது!

திருவாரூரில் நானும் மன்னையும் இளங்கோவும் முன்னின்று நடத்திய மாநாடு - தஞ்சை மாவட்டக் கழக மாநாடு - கழக மாநாடொன்றில் முதன் முதலாக இருபதாயிர ரூபாய் மிச்சப்படுத்தித் தலைமை கழகத்திற்கென அண்ணாவின் கையில் நிதி வழங்கிய மாநாடும் அதுவேதான்!

திருவாரூர் மாநாடென்றதும் பலருக்குப் பல சுவையான நினைவுகள் மலரக் கூடும்! பாவம்; வெளியில் சொல்லி மகிழ முடியாத நிலையில் இருப்பர் இன்று!

மாநாடு முடிந்த மறுநாள் காட்டூர் கே.வி. ராமய்யா அவர்கள் இல்லத்தில் அண்ணாவுடன் அமர்ந்து நான் பேசிக் கொண்டிருக்கும்போது திருவாரூர் கிருஷ்ணா ஸ்டுடியோக்காரர் புகைப்படமெடுத்துவிட்டார்.

அண்ணா; அப்பொழுதே சொன்னார் அந்தப் புகைப்படத்தை முரசொலி மாறனுக்கு அனுப்பி வையுங்கள் - இந்த ஆண்டு பொங்கல் மலர் முரசொலியில் இந்தப் புகைப்படத்தை வைத்துத்தான் வாழ்த்து எழுதப் போகிறேன் என்று!

1959 முரசொலி பொங்கல் மலருக்கான அண்ணாவின் வாழ்த்தே இப்படித்தான் தொடங்குகிறது!

ஆரூருக்கு அணித்தே உள்ள சிற்றூர் - சீரூர் என்ற பெயரிட்டிருக்கலாம். ஆனால் யாது காரணமோ அறியேன் - பெரியோர் அதனைக் காட்டூர் என்றழைத்தனர் - அங்கு அன்பர் ராமய்யா அவர்கள் இல்லத்தில் அமர்ந்திருந்த வேளை, தம்பி கருணாநிதி, மலர்ந்த முகத்துடன் எனைக் கண்டு பேசிடும் காட்சியைக் காணுகின்றீர். நேர்த்தியான முறையில் அமைந்த படம் என்பீர்! விரித்த மெத்தையில் அமர்ந்துள்ளார் என்று பேசுவீர்! ஆனால் என் நகையின் பொருளும், தம்பியின் கண்களிலே காணக் கிடைக்கும் ஒளியின் பொருளும் அறிந்திடல் எளிதன்று; அறிவித்து அகமகிழவே இது.

இப்படித்தான் அண்ணா அவர்கள் அந்த ஆண்டு முரசொலி பொங்கல் மலருக்கான வாழ்த்தைத் தொடங்குகிறார்.

முரசொலி, துண்டு வெளியீடாக திராவிட இயக்கத்தின் கொள்கை விளக்கமளித்த அந்தக் காலகட்டத்தை அண்ணா மறக்காமல் குறிப்பிடுகிறார்.

நான், அண்ணன் டி.எஸ்.இராசகோபால், வி.எஸ்.பி.யாகூப், தென்னன் ஆகியோரின் கூட்டு முயற்சியால் - சேரன் என்ற புனைப் பெயரில் நான் எழுத; முரசொலி துண்டு வெளியீடாக பல்லாயிரக்கணக்கில் அச்சியற்றப்பட்டு மாநில முழுதும் பல ஊர்களுக்கு பிரச்சாரப் பணிக்காகவே அனுப்பி வைக்கப்பட்ட காலம் அது!

ஆம்; 1942ஆம் ஆண்டு! அதாவது நாற்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு!

இன்று முரசொலிக்கு மூலையில்தான் இடமென்று முண்டா தட்டுகிறவர்களும் - ஏடா அது? என இழிமொழியுரைக்கும் எட்டப்பர்களும் - பிறந்திருப்பாரோ என்னவோ; அப்படியே பிறந்திருந்தாலும் - தொட்டில் பருவத்தினராக - அல்லது நடைவண்டி மழலையராக - அறிவு வராத வயதினராக இருந்திருப்பர்!

அந்தத் துண்டு வெளியீடு எழுப்பிய புயல் சாதாரணமானதல்ல; அதற்கே என்னை மாறு கால் மாறு கை வாங்கிவிடுவோம் என்று மாற்றார் மிரட்டினர்! பங்களாக்கள் பணம் தந்து படை குவித்துப் பார்த்தன! பயப்படவில்லை; நானும் சரி - என்னுடன் இருந்த இளைஞர்களும் சரி!

தென்னன் இன்றைக்கும் என் நண்பன்; தீமைகள் வந்துற்ற போதும் எனைவிட்டு ஓடாத என் இனிய நண்பன்! இன்று அவன் மகன் ஆரூர் இளைஞர் அணியின் செயல்வீரன் முத்து!

வி.எஸ்.பி. யாகூப் இறுதிவரையில் பெரியாரின் தொண்டனாக இருந்து கழக ஆட்சிக் காலத்தில் மறைந்து விட்டார். அவர் உயிரைக் காப்பாற்ற நானும் வீரமணியும் அரும்பாடு பட்டும் பயனில்லை.

அண்ணன் டி.எஸ். இராசகோபால் நெல்லை மாவட்டத்தில் தென்காசி ஆய்குடி எனும் சிற்றூரில் இப்போது இருக்கிறார். கடந்த வாரம்கூட கடிதம் எழுதியிருந்தார். புரட்சிக் கவிஞருக்குப் பணமுடிப்பு வழங்கிய குழுவில் உறுப்பினராக இருந்தவரும் - அண்ணா அவர்கள் டி.எம்.பி. அவர்களின் உதவியுடன் தொடங்கிய மாலைமணி நாளிதழின் நிர்வாகியாக இருந்தவரும் - பழம்பெரும் சுயமரியாதை வீரருமான மறைந்த டி.என். இராமன் அவர்கள் டி.எஸ். இராசகோபால் அவர்களின் சொந்த சித்தப்பா!

திருவாரூரில் 1940ஆம் ஆண்டு நடந்த நீதிக்கட்சி மாநாட்டுக்கு டி.எஸ்.இராசகோபால் தொண்டர் படைத் தலைவர் - என்னைப்போன்றோர் தொண்டர்கள் என்றால் பார்த்துக் கொள்ளேன்!

இத்தனை கதையும் எதற்குத் தெரியுமா?

இழிமொழிகள் - எதிர்ப்புக்கணைகள் - ஏசல்பாணங்கள் - தரக்குறைவான தாக்குதல்கள் - நன்றி மறந்த நரிகளின் ஊளைச்சப்தம் - இவை முரசொலியை நோக்கிப் பாயும்போதும், கிளம்பும் போதும் - முரசொலி; பிறந்தது - வளர்ந்தது - தவழ்ந்தது - அண்ணாவின் அரவணைப்பைப்பெற்றது - கழகச் செயல்வீரர்களின் கைவேலாகவும், கயவர்களின் சுடுசொல்லைச் சுக்கு நூறாக்கும் கேடயமாகவும் இருப்பது; ஆகிய இவற்றையெல்லாம் மலரும் நினைவுகளாக்கி எனக்கு நானே அகமகிழ்கிறேன்! ஆறுதல் பெறுகிறேன்! அதற்காகத்தான் இந்தப் பழைய நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன்!

துண்டு வெளியீடான முரசொலியின் ஆண்டு விழா - திருவாரூரில் கொண்டாடப்பட்டது!

அதற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து இரண்டு மாணவர்கள் அழைக்கப்பட்டார்கள்!

அந்த விழாவுக்கு அச்சியற்றி நானும் தென்னனும் டாக்டர் விசயராகவனும் ஊரெல்லாம் ஒட்டிய சுவரொட்டிகளின் தலைப்பு வாசகம் என்ன தெரியுமா?

வீறுபாய்ச்சும் விரிவுரையாளர்கள் வருகை

யார் அந்த விரிவுரையாளர்கள்! அப்போது நாவலர், பேராசிரியர் என்றெல்லாம் அடைமொழிகள் இல்லை!

நெடுஞ்செழியன்

அன்பழகன்

இருவரும் வந்துதான் முரசொலி துண்டு வெளியீட்டின் ஆண்டுவிழாவில் பாராட்டுரை வழங்கினர்.

முரசொலி; அன்றைக்கு எந்தப் பாதையில் அடியெடுத்து வைத்ததோ அந்த சுயமரியாதைப் பாதையிலிருந்து இம்மியளவும்

தவறவில்லை! பெரியாரும் அண்ணாவும் ஊட்டிய சுயமரியாதை உணர்வின் சுடராகத் திகழும் பேராசிரியர் அவர்கள் இன்றைக்கு இனமான முரசொலியாகவே தமிழகத்தில் முழங்கிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் - அன்று முரசொலித் துண்டு வெளியீடு - ஆண்டுவிழாவில் அரிமா என முழங்கிய அதே நாவலர் இன்று; எம்.ஜி.ஆர். ஆட்சியில் அவை முன்னவர்!

அவரே, முரசொலியை ஒரு மூலைக்குத் தள்ளுவதற்கு உடன்பட்டு உட்கார்ந்திருக்கிறார்!

ஒருக்கணம் அவரது மனக்காட்சியில் பல நிகழ்ச்சிகள் உருண்டோடியிருக்கும்!

- முரசொலி ஆண்டுவிழாவில் அவர் பேசியது!
- முரசொலி வாரஇதழில் அவர் கட்டுரைகள் வெளிவந்தது!
- முரசொலி நாளிதழான பிறகு அவரது பேச்சுக்கள் பக்கம் பக்கமாக வெளிவந்தது!
- முரசொலி பொங்கல் மலர் ஒவ்வொன்றுக்கும் அவர் அளித்த வாழ்த்துக்கள்!
- 45 வருட காலம்; பத்திரிகை உலக ஜாம்பவான் களுக்கு மத்தியில் இலட்சியத்தில் பின்வாங் காமல் நிலைத்து நின்று தாக்குப்பிடித்துத் தன்மான முரசு கொட்டுவது!

முரசொலி

முரசொலி

முரசொலி

இவற்றை நாவலர் மறந்திருக்க முடியாது - ஆனால்; பாழும் பதவி எத்தனை பேருடைய சுயமரியாதையைப் பறித்து விடுகிறது!

சுயமரியாதை என்பது; மூடநம்பிக்கையை எதிர்ப்பது - கோயிலுக்குப் போகாமல் இருப்பது - வகுப்புரிமைப் பிரதிநிதித்துவத்துக்கு வாதாடுவது - இன உணர்வு கொள்வது - ஆகியவை மட்டுமல்ல!

பதவிக்காக, சலுகைக்காக, எவரிடமும் சென்று பஜனைபாடிக் கிடப்பது கூட; சுயமரியாதையற்ற ஜென்மங்களின் செயலேதான்!

எப் பதவி வரினும் எந்த வசதி தரினும்; கொண்ட கொள்கையை விட்டு எவனிடமும் கையேந்தி நிற்க மாட்டேன் என்பதும் சுயமரியாதை என்பதை மறந்துவிடக்கூடாது!

உடன்பிறப்பே; இடங்கள் திட்டமிட்டு மாற்றப்படும் போது உரிமைக்குரல் கொடுப்பது ஜனநாயகத்தில் மறுக்க முடியாதது!

அந்தக் குரலுக்கு துணை நிற்க யார் வருகிறார்கள் - அந்த குரலை யார் மதிக்கிறார்கள் - அல்லது மதிக்க மறுக்கிறார்கள் - என்பது முக்கியமல்ல!

எந்த நிலையிலும் கழகத்திற்கென உள்ள தனித்தன்மையை நாம் இழக்கப் போவதில்லை!

முரசொலிக்காக - சிலர் வாதாட வரலாம்; சில ஏடுகள் பரிந்து பேசலாம் - பிறர் வாயை மூடிக் கொண்டிருக்கலாம்; பிற ஏடுகள் நமக்கேன் வம்பு என்று மௌனம் சாதிக்கலாம்!

ஆனால்; இதுபோல் ஒரு நிலைமை மற்றவர்களுக்கோ - மற்ற ஏடுகளுக்கோ வருமானால்; அப்போது நாம் நமது கடமையை என்றைக்குமே தட்டிக் கழிப்பவர்கள் அல்ல!

முரசொலி இடத்தை மாற்றியது பற்றி நான் கவலைப் படவில்லை. இடம் குறித்து அறிவித்தது போல இதுவரை நிருபர்கள் யாரும் அதே இடங்களில் உட்கார்ந்ததுமில்லை!

ஆனால் இது குறித்து நாஞ்சிலார் அவர்கள் பிரச்சினை எழுப்பியதைத் தொடர்ந்தும் பத்திரிகைக் குழுவினர் கலந்து ஆலோசிக்கப்பட்டனரா? எனக் கேட்டதைத் தொடர்ந்தும்; இடமாற்றத்துக்காக சொல்லப்பட்ட காரணங்கள்தான் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை!

ஏன்? என்பதை நடுநிலை நின்று சிந்திப்பவர்கள் நன்கு புரிந்து கொள்வார்கள்.

முரசொலிக்குப் பாரம்பரியப் பெருமை உண்டா இல்லையா என்று பதவிக்காகப் பல் இளித்துக் கொண்டிருக்கும் பச்சோந்திகளால் உணர முடியாது!

ஒவ்வொரு ஆண்டும் முரசொலி பொங்கல் மலரில் நமது அண்ணா எழுதிய தீர்ப்புக்குப் பிறகு - இந்தத் தீர்ப்புகளை யார் பொருட்படுத்தப் போகிறார்கள்?

உடன்பிறப்பே; உன்மத்த உள்ளம் படைத்தோர் - முரசொலியை ஒரு மூலைக்குத் தள்ளலாம்!

எங்கிருப்பினும்; அதன் ஒலி கேட்டுக் கொண்டிருக்கும்!

செவிடர்கள் காது கிழிபடக் கேட்டுக் கொண்டிருக்கும்!

இடத்திலிருந்து மாற்றலாம்; உடன்பிறப்பே - உன் இதயத்திலிருந்து மாற்ற முடியுமா?

மாற்ற முடியாது என்பதை மதோன்மத்தர்களுக்கு உணர்த்த வேண்டியது உன் பொறுப்பு! உன் கடமை!

அன்புடன்

மு.க.

04-04-1987

1499. விவசாயி கண்ணீர் வடிக்கிறான்; வேடிக்கை பேசுகிறார் அமைச்சர்!

உடன்பிறப்பே,

விவசாயக் கடன் - வட்டி வசூல் கெடுபிடிகளை, கடும் வறட்சி நிலை காரணமாகத் தள்ளி வைக்க வேண்டுமென்று சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் பலரும் வலியுறுத்திக் கோரிய போது; அது இயலாது என்று பதில் அளித்துள்ள நிதியமைச்சர் நாவலர் அவர்கள்; ஒரு எதிர்க்கேள்வியையும் போட்டிருக்கிறார்.

கடனைச் செலுத்த இயலவில்லை; வறட்சி என்கிறார்கள்; அதற்காக கஜபூஜை, கும்பாபிஷேகம், திருவிழாக்கள், திருமணங்கள், நின்று விட்டதா? இவையெல்லாம் குறைவில்லாமல் நடக்கத்தானே செய்கின்றன?

இதுதான் நிதியமைச்சரின் எதிர்க்கேள்வி!

வறட்சியின் கோரப்பிடியில் சிக்கிக் கொண்டு தவிக்கிற விவசாயி வீட்டில் மிச்சமிருப்பதை விற்றோ; அல்லது அடகு வைத்தோ - அந்தச் சிறு தொகையைக் கொண்டு மகனுக்கோ, அல்லது மகளுக்கோ திருமணத்தை வேண்டுமானால் நடத்திக் கொண்டிருக்கலாம் - ஆனால் கஜபூஜை நடத்தவும், கும்பாபிஷேகம் நடத்தவும், திருவிழாக்கள் நடத்தவும், லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிப்பவர்களுக்கும் வறட்சியால் வாடும் விவசாயிக்கும் சம்பந்தமில்லை என்பதை நிதியமைச்சர் நாவலர் உணர்ந்திருப்பார் என்றே நம்புகிறேன்.

நாவலர் குறிப்பிட்ட பூஜைகள், யாகங்கள், கும்பாபிஷேகங்கள், இவைகளுக்கு மட்டுமல்ல; அரசாங்க செலவில் மூகாம்பிகை கோயில் போன்ற க்ஷேத்திராடனங்களுக்கும் - ஆயிரக்கணக்கான போலீசார் புடைசூழ - முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் பணவிரயம் செய்து விஜயம் செய்து கொண்டுதானிருக்கிறார்கள்.

குடியரசுத் தலைவரோ, பிரதமரோ வந்தால் அதற்கு எப்படி போக்குவரத்து நிறுத்தப்பட்டு போலீசார் குவிக்கப் படுகிறார்களோ - அதைப்போல; ஏன் - அதைவிட அதிகமாகவே போலீஸ் ஜபர்தஸ்துகள்; முதலமைச்சர்; தோட்டத்திலிருந்து கோட்டைக்கு வருவதாக இருந்தாலும், முதலமைச்சரின் அன்றாட அலுவல்களுக்குச் செல்வதாயினும்; திருமணம், திறப்பு விழா போன்றவைகளுக்குப் போவதாக இருந்தாலும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவே; அதற்கெல்லாம் எத்தனை லட்சம் ரூபாய் விரயமாக்கப்படுகிறது என்பது நிதியமைச்சருக்கு தெரியாதா?

அரசுக்கு என ஒரு ஹெலிகாப்டர் வாங்கி விட்டு, அதில் ஒருநாள் கூட முதலமைச்சர் ஏறாமல்; அதனுடைய பராமரிப்பு செலவுக்கு மட்டும் பல லட்ச ரூபாய் செலவிடப்படுவதோடு; மாவட்டத்துக்கு மாவட்டம் முதலமைச்சர் பறந்து செல்வதற்கு ராணுவ இலாகாவின் ஹெலிகாப்டருக்குத் தரப்படும் வாடகை மட்டும் எத்தனை லட்ச ரூபாய் ஆகியிருக்கிறது என்ற கணக்கை யாரும் அறிய மாட்டார்களா?

எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த சுமார் பத்து ஆண்டுக்காலத்தில் பத்திரிகை விளம்பரங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளது எத்தனை கோடி?

அரசுத்துறை, அரசின் சார்புடைய வாரியங்கள் -பொது மக்கள் தருகிற வரிப்பணத்தில்; எதற்கெடுத்தாலும் விளம்பரம் பக்கம்பக்கமாக - அதுவும் முதலமைச்சரை தெய்வம் என்று ஏற்றிப் போற்றி; கடவுளே! உன் காலடி பட்ட மண்ணை எடுத்துக் கண்ணிலே ஒற்றிக் கொள்கிறோம் என்கிற அளவுக்குப் புகழ்ந்து - முன்பிருந்த அரசுகளிலும் சரி; இப்போதுள்ள மற்ற மாநில அரசுகளிலும் சரி; ஒரு முதலமைச்சரைக் குறித்துப் பயன்படுத்தாத பஜனாமிர்த பதங்களை சரமாரியாகத் தொகுத்து - வருக! வருக! நன்றி! நன்றி! என எத்தனை வகை! எத்தனை வாரிய வாயிலாக! எத்தனை கோடி இவற்றுக்குச் செலவு!

இந்த விளம்பரங்களுக்கு இதுவரை ஆன செலவு என்ன?

அது போல - முதலமைச்சர் மட்டுமல்ல; எல்லா அமைச்சர்களும் - அமைச்சர் மட்டுமல்ல; முப்பது வாரியத் தலைவர்களும் - புகைவண்டியில் ஏ.சி. கோச்சுக்களில்தானே

பயணம் செய்கிறார்கள்; இதுவரையில் அதற்கும், விமானங்களுக்கும் ஆன பயணச் செலவு எவ்வளவு?

இந்தக் கேள்விகளை உறுப்பினர்கள் பலமுறை எழுப்பியும் அமைச்சர்கள் மௌனமே சாதித்திருக்கின்றனர்!

சட்டமன்ற மேலவையில் நானேகூட இந்தக் கேள்விகளை சட்டமன்ற மேலவை இலாகாவுக்கு எழுதி அனுப்பியிருந்தேன்.

என்ன காரணத்தாலோ வினாத்தாளில் அந்தக் கேள்விகள் இடம்பெறவேயில்லை.

இருந்தால்தானே இதையெல்லாம் கேட்டுத் தொலைப்பார்கள் என்று ஒரேயடியாக மேலவைக்கே மூடுவிழா நடத்தி விட்டார்கள்!

விளம்பரம் - பிரயாணச் செலவு என்ற முறையில் விரயமாகிற தொகை ஏராளம்! ஏராளம்!

அடிக்கல் நாட்டவோ; அல்லது ஏற்கெனவே தொடங்கி நடைபெறும் திட்டத்தை மீண்டும் தொடங்கி வைக்கும் விழா நடத்தவோ - முதலமைச்சர்; அடுத்துள்ள ஒரு மாவட்டத்துக்கு சென்றால் கூட கோடிக்கணக்கான ரூபாய்கள் அந்த விழாவுக்காகச் செலவிடப்படுகின்றது! அதற்கான வசூல் கட்டாயமாக நடைபெறுகிறது! அத்துடன் பொது மக்கள் தரும் வரிப்பணமும் அரசாங்கக் கருவூலத்திலிருந்து கரைகிறது!

கப்பல் வாங்க ஜப்பானுக்குப் பதினாலு பேர் - குடும்ப சமேதராய் அமைச்சர்கள் உட்பட சென்றது மட்டுமல்ல; அப்படியே அந்த கோஷ்டியினர் அமெரிக்காவுக்கும் சென்று மொத்தத்தில் ஒரு மாதம் சுற்றிவிட்டு வந்தனரே - அந்தச் செலவு எத்தனை லட்சம்?

விவசாயி வீட்டில் வறட்சி நேரத்தில் திருமணம் நடக்கவில்லையா? என்று எதிர்க் கேள்வி போடும் நிதியமைச்சர் அவர்கள் - அந்தக் கணக்கையெல்லாம் பார்த்தாரா?

பணமில்லை எனப் பரிதாபச் சிந்து ஒருபுறத்தில் பாடிக் கொண்டே - தனியார் துறையிலிருந்து பொதுத் துறைக்கு வந்து விட்டதும்; ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு லாபம் தந்து கொண்டிருந்ததுமான தமிழ்நாடு கெமிக்கல்ஸ் என்ற தொழிற்சாலையை - தனியார் ஒருவருக்கு விற்பனை செய்ய வேண்டிய காரணம் என்ன?

வறட்சியால் பாதிக்கப்படும் விவசாயியைப் பார்த்து; உன் வீட்டில் திருமணம் நடக்கவில்லையா? எனக் கேட்கும் நிதியமைச்சர் நாவலரைப் பார்த்து - அந்த விவசாயி; இந்த விவகாரத்தைக் கேட்டால் அதற்கு நாவலர் என்ன பதில் சொல்வார்?

டெல்லியில் தமிழகஅரசு சிறப்புப் பிரதிநிதி என்ற பெயரில் - அமைச்சருக்குரிய அந்தஸ்தில் இதுவரையில் மூன்று நான்கு பேரை நியமித்து; அவர்கள் முதலமைச்சர் முன்னால் பதவிப் பிரமாணமெடுக்கும் விழா நடத்திக் கொண்டு டெல்லியில் சகலசௌபாக்கியங்களுடன் இருந்தனரே - இருக்கின்றனரே - அவர்கள் அங்கு ஆற்றும்பணி என்ன? எம்.பி.க்கள் சிலர் தமிழகத்தின் தேவைகளை உணர்த்துகிற அளவுக்குக் கூட அவர்கள் அங்குள்ள அமைச்சர்களையோ, அதிகாரிகளையோ சந்தித்து - மாநிலத்துக்காக வாதாடிப் போராடி சாதனைகள் நிகழ்த்தியதுண்டா? அந்தத் தேவையற்ற பதவிக்காக பொதுமக்களின் வரிப்பணம் எவ்வளவு வாரி இறைக்கப்படுகிறது!

நிர்வாகத்தில் இந்தச் சீர்கேடுகள் மட்டுமா? தலைமைச் செயலாளர்கள் அந்தஸ்தில் ஆறு பேர்! ஐ.ஜி. அந்தஸ்தில் ஐந்து பேர்! எம்.ஜி.ஆர். 1977-ல் பதவியேற்றபோது எனது ஆட்சியில் யாருக்குமே பதவி நீடிப்பு கிடையாது என்று அண்ணா சிலைக்கருகே அமைத்த மேடையில் நின்று வானமதிர முழக்கினார் - ஆனால்; சட்டத்துறை செயலாளர் வடிவேலுவுக்கு மூன்று தடவைகள் பதவி நீடிப்பு தந்து; இப்போது மீண்டும் ஆறுமாதம் பதவி நீடிப்பு அறிவிப்பு! (இந்தப் பதவி நீடிப்பு காலத்தில் அவருக்கு உயர்நீதிமன்ற நீதிபதி பதவியை எப்படியும் வாங்கிவிட எம்.ஜி.ஆர். சபதம் செய்திருப்பதாகத் தகவல்) இப்படிப் பல அதிகாரிக்குப் பதவி நீடிப்பு! இதுபோல நிர்வாகச் சீர்குலைவு காரணமாக ஏற்படும் விரயம் கொஞ்சமா?

விரும்பி வேண்டி நிற்போருக்கெல்லாம் வெளிநாட்டுப் பயண அனுமதி! அவர்களுக்குப் பக்கத் துணையாகப் பலபேர்! எல்லாம் அரசின் செலவுதான்!

வீராணம் திட்டம் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டது என்பதை மறந்துவிட்டு, நான் பொறுப்பேற்றிருந்த போது செயல்படத் தொடங்கியது என்பதால் அதனை நிறுத்திவிட்டு அதற்கென கவர்னரால் அமைக்கப்பட்ட சாத்யக்கூறு ஆய்வுக்குழு; அந்தத் திட்டம் நிறைவேற்றப்படக் கூடியது என அறிவித்தும்கூட -

அதைக் குறித்து இழித்துரைத்துவிட்டு - நிதானமாகச் செய்யுங்கள் என்றும் சிந்தித்துச் செயல்படுங்கள் என்று எச்சரித்ததையும் கேட்காமல் மூன்றே ஆண்டுகளில் சென்னைக்குக் கிருஷ்ணா தண்ணீர் வரப்போகிறதெனக் கூறி; நாற்பத்தேழுகோடி ரூபாயைக் கொடுத்துவிட்டு - இப்போது விழித்துக் கொண்டிருக்கிறீர்களே; நீங்களா; வறட்சியால் பாதிக்கப்படும் விவசாயியைப் பார்த்து உன் வீட்டில் திருமணம் நடக்கவில்லையா? என்று கேட்பது என அந்த விவசாயி திருப்பிக் கேட்டால் நிதியமைச்சர் என்ன பதில் சொல்வார்?

வீண் செலவுகள்!
விரயமாகும் வரிப்பணம்!
விளம்பரத்துக்கு கோடிக் கணக்கில்!
ஆடம்பரத்துக்கு அளவில்லை!
ஆர்ப்பாட்டமோ குறையவில்லை!

ஸ்டீல் ரீரோலிங்மில் அதிபர்களுக்கென்றால் பல கோடி ரூபாய் வரியை ரத்து செய்து கொடுத்து பெற வேண்டியதைப் பெறுகிறீர்கள்! ஆனால் விவசாயிகள் கடனுக்கும் வட்டிக்கும் கிட்டி கட்டுகிறீர்களே; நியாயமா? என்று கேட்டால்

விவசாயி வீட்டில்
திருமணம் நடக்க
வில்லையா?
நாட்டில் திருவிழா
நடக்க வில்லையா?
என்றா ஒரு அமைச்சர் கேட்பது!

செத்த பிள்ளைக்கு இறுதிக் கடனாற்ற கொள்ளிப் பணம் இல்லையென்று சொன்ன சந்திரமதியைப் பார்த்து சுடலை காக்கும் வேடத்திலிருந்த அரிச்சந்திரன்; உன் கழுத்தில் இருக்கும் தாலியைக் கழற்றி; கொள்ளிப்பணம் கொடு என்று கேட்டதாக ஒரு கதை!

அதைப்போலத்தானிருக்கிறது அமைச்சர் நாவலரின் எதிர்க் கேள்வி!

அன்புடன்

மு.க.

05-04-1987

1500. இருட்டிலேயிருந்து - வெளிச்சத்திற்கு!

உடன்பிறப்பே,

நீதித்துறை, நிர்வாகத்துறை, சட்டமன்றத் துறை போன்ற சில அமைப்புகள், மக்களுக்காக - மக்களின் நலஉரிமைகளை மையமாகக் கொண்டு இயங்க வேண்டியவை.

அந்த அமைப்புகள் மதிக்கப்பட வேண்டுமென்பதில் இருவிதமான கருத்துக்களுக்கு இடமே இல்லை.

அதேபோல அந்த அமைப்புகளை இயக்குகிற பொறுப்பில் இருப்போரும், நல்லோர் மதிக்கத்தக்க அளவுக்கு அந்த அமைப்புகளை நடத்திச் செல்ல வேண்டும்.

நீதித்துறையின் தராசில் உள்ள முள்; நேராக நிற்காமல் ஆடிக் கொண்டிருக்குமானால் - பதவி உயர்வு, பணம், செல்வாக்கு போன்றவைகளைச் சுமக்கும் தராசுத்தட்டு கீழே இறங்கி, நீதி நிலைகுலையுமானால் மதிக்கப்பட வேண்டிய நீதித்துறை என்ற அமைப்புக்கே மாசு வந்து சேர்ந்துவிடும்!

பெரும்பான்மையிருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக ஜனநாயகத்தின் கழுத்தை நெரிக்கும் காரியங்கள் நாடாளுமன்றத் திலோ சட்டமன்றங்களிலோ நடைபெறுமானால்; தலைக்குள் என்ன இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்காமல் தலைகளை மட்டும் எண்ணிப் பார்த்து முடிவுகள் எடுக்கும் ஒரு காட்டு தர்பார்தான் நாட்டில் காட்சி தரும்!

நிர்வாகத் துறையிலும்; அதிகாரம் என்பது மக்கள் நலன்களுக்கான செயல்களை முறைப்படுத்த, செம்மைப்படுத்த, பயன்படுத்தப்படும் கருவியாக இருந்திட வேண்டுமேயன்றி; பழி வாங்கும் குரூர நடவடிக்கை கொண்டதாகவோ - அல்லது எதற்கோ பல் இளிக்கும் இழிகுணம் கொண்டதாகவோ

விளங்கிடுமானால் - ஜனநாயகத்தில் பற்றுக் கொண்டவர்கள் - நேர்மையான நிர்வாகத்தில் நாட்டம் கொண்டவர்களால் - அதனை சகித்துக்கொள்ள முடியாது!

எதற்கு இத்தனை பீடிகை எனக் கேட்கத் தோன்றும்!

ஆளுநர் குரானா அவர்களின் நூல் வெளியீட்டு விழா ஒன்று நடைபெற்றிருக்கிறது சென்னையில்!

அந்த நூலைப்பற்றி விமர்சனக் கடிதமல்ல இது!

வெளியீட்டு விழாவில் ஆளுநர் குரானா அவர்கள் ஆற்றிய உரையினை ஏடுகளில் படித்தபோது ஏற்பட்ட வியப்பின் வெளிப்பாடுதான் இது!

நிர்வாகத் துறையில் - மாநிலங்களில் மத்திய அரசின் ஏஜண்டுகளாகக் கவர்னர் பதவி தேவையில்லை என்பது பல ஆண்டுகளாகத் தி.மு.கழகம் அழுத்தமாகத் தெரிவித்து வருகிற கருத்து!

எனினும்; அந்தப் பதவியும் அதற்கென ஒரு அமைப்பும் - அதற்குரிய வரைமுறைகளும் இருக்கிற வரையில் அப்பதவியில் உள்ளோர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் - அதேபோல அப்பதவிப் பொறுப்பில் உள்ளவர்களிடம் எத்தகைய நடுநிலைத்தன்மை இருந்திட வேண்டும் என்பதை; அவற்றில் ஊனம் ஏற்படும்போது எடுத்துக்காட்டி இடித்துரைக்கும் உரிமையை ஜனநாயகம் வழங்கியிருக்கிறது!

ஆளுநர் மாளிகைகள் சில மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி அலுவலகங்களாகவே செயல்படுவதாகச் செய்திகள் வந்ததுண்டு!

ஆந்திராவில் ஒரு கவர்னர், திடீரென்று ஒருநாள் கணக்குப்புலியாகி - என்.டி.ராமராவை ஆதரிக்கும் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவு; பாஸ்கரராவை ஆதரிக்கும் உறுப்பினரே அதிகமெனப் பொய்யுரைத்து; அதன் காரணமாக நாடே கொந்தளித்து என்.டி.ஆர். பக்கம் உள்ள நியாயம் நிலைநாட்டப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது!

அன்றொரு நாள் - காஷ்மீரத்தில் பரூக் அப்துல்லா ஆட்சியைக் கவிழ்க்க; அங்கிருந்த கவர்னரே காங்கிரஸ் தலைவராகத் தன்னை மாற்றிக் கொண்டு பாடுபட்டார் என்பது கடந்த கால வரலாறு!

இங்குள்ள ஆளுநர் குரானா மீது என்னதான் அந்தப் பதவிக்கான மதிப்பையும் மரியாதையையும் தருவதற்கு நாம் தயார் என்றாலும் - எம்.ஜி.ஆர். அவர்களுக்கு முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்ததாக (ஒலிபெருக்கி இல்லாமல், நிருபர்களை அனுமதிக்காமல்) ரகசிய நாடகம் ஒன்றை நடத்தித் தலைசிறந்த பொய்யைச் சொன்ன பிறகு; இவரா இப்படி? என்ற பெரியதோர் கேள்விக் குறி இதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டதை எப்படி மறைக்க இயலும்?

இப்படியொரு விரும்பத்தகாத பின்னணியைக் கொண்ட - ஆளுநர் குரானா அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு அவரது நூல் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை; மீண்டும் ஒருமுறை எல்லோரையும் ஆச்சரியக்கடலில் மூழ்க அடித்து விட்டது என்றே சொல்ல வேண்டும்.

நான் ஒரு அதிர்ஷ்டசாலியான கவர்னர். தமிழ்நாட்டின் கவர்னராக விமான நிலையத்தில் வந்து இறங்கிய நாள்முதல் இதுநாள் வரையில் முதல் அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் என்னுடன் ஒத்துழைக்கிறார்கள். நானும் முதல்வரும் இரண்டு மூன்று மணி நேரம் கூட விவாதித்து இருக்கிறோம். வேறு எந்த முதல்வரும் இதுபோல் விவாதித்திருக்க மாட்டார்கள். பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிக்கும் போதும் கலந்து பேசித்தான் முடிவெடுக்கிறோம். இதில் கருத்து வேறுபாடு இருந்ததில்லை. என் மகன் திருமணம் டெல்லியில் நடந்த போது என் குடும்பத்தில் ஒருவர் போல முதலமைச்சர் எல்லா ஏற்பாடுகளையும் கவனித்தார்.

தனது நூல்வெளியீட்டு விழாவில்; முதலமைச்சரின் முன்னிலையில் ஆளுநர் குரானா அவர்கள் ஆற்றிய உரை இதுதான்!

உடன்பிறப்பே; எம்.ஜி.ஆர். முதல்வராக பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார் என்று மேதகு குரானா அவர்கள் சொன்னதை எப்படி நம்பலாமோ; அதே வண்ணம் இப்போது அவர் ஆற்றியுள்ள உரையையும் நம்புவோமாக!

அப்படி நம்புவதின் நிமித்தம் - மதுரை காமராசர் பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்தின் போது ஆளுநர் குரானாவும் - கல்வி அமைச்சர் அரங்கநாயகமும் பலமாக மோதிக் கொண்டு மாறி மாறி அறிக்கைகள் வெளியிடப்பட்டு நாடே சிரித்ததே; அந்த நிகழ்ச்சியை வசதியாக மறந்துவிட வேண்டும்!

அமைச்சர் அரங்கநாயகம், முதலமைச்சர் சொற்படிதான் முதலில் கருத்தறிவித்தார் என்பதையும் கடும்மோதலுக்குப் பிறகுதான் பிரச்சினையில் ஒரு முடிவு ஏற்பட்டது என்பதையும் கஷ்டப்பட்டு மறந்துவிட்டால்தான்;

பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிப்பதில் அரசுக்குத் தனக்கும் கருத்துவேறுபாடு இருந்ததேயில்லை.

என்ற கவர்னரின் நேற்றைய பேச்சை நம்பித் தொலைக்க முடியும்.

அதை மறந்தால் மட்டும் போதாது - முதல்வர் எம்.ஜி.ஆருக்கு கவர்னர் குரானா அவர்கள் எழுதிய கடிதமொன்று (1986 மே மாதம் 20-ந் தேதியிட்டது) "இந்தியா டுடே" (INDIA TODAY) என்ற பிரபல ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்ததே - அந்தக் கடிதத்தையும் கூட மறந்துவிடவேண்டும்!

"Of late I find that I learn about major policy decisions mainly through the News papers. Unfortunately I have been kept in the Dark."

அதாவது; அண்மைக் காலமாக தமிழக அரசின் முக்கியமான கொள்கை முடிவுகள் குறித்து நான் பத்திரிகைகள் மூலம்தான் தெரிந்துகொள்ள முடிகிறது. அவை எனக்கு தெரிவிக்கப்படாமல் துரதிர்ஷ்டவசமாக நான் இருட்டில் தள்ளப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு கவர்னர் குரானா அவர்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாரே - அதில் உள்ள இருட்டு என்பதை மறந்து விட்டு வெளிச்சம் என்று நினைத்துக் கொள்ள வேண்டும்!

கவர்னர் கடிதத்தில் உள்ள துரதிர்ஷ்டம் என்ற சொல்லை மறந்து விட்டு அதிர்ஷ்டசாலி என்று இணைத்துக் கொள்ள வேண்டும்!

இவற்றோடு; கவர்னர் பெயரால் தமிழ்நாடு அரசு ஒரு கொள்கை விளக்க ஆணையை நகராட்சிகளுக்கு விடுத்துள்ளதே;

அதில் இனிமேல் நகராட்சி மன்றங்களில் மத்திய மாநில அரசுகளின் அமைச்சர்களைத் தவிர அரசியல் கட்சித் தலைவர்கள் வேறு யாரையும் திறப்பு விழா, அடிக்கல்நாட்டு விழாக்களுக்கு அழைக்கக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டுள்ளதாக இன்றைய ஏடுகளில் வெளிவந்துள்ள செய்தியில் ஜனநாயகம் எப்படிச் சிரிக்கிறது என்பதை ஆளுநரோடு சேர்ந்து அனைவருமே மறந்துவிட வேண்டும்! அடடா; கவர்னர் பெயரால் எவ்வளவு முக்கியமான கொள்கை அறிவிப்பு! வாழ்க எம்.ஜி.ஆரின் சேடிஸ்ட் ஆட்சி!?

அன்புடன்

மு.க.

11-04-1987

1501. நாம் என்பதோ - அவர்கள் என்பதோ முக்கியமல்ல!

உடன்பிறப்பே,

தி.மு.கழகத்துக்கும் பிற அரசியல் கட்சிகளுக்குமிடையே கொள்கைகள், நடைமுறைத் திட்டங்கள் போன்றவைகளில் வேறுபாடுகள் இருப்பினும் அஃதேபோல் கழகம் நடத்துகிற ஏடுகளுக்கும் கழகத்தின் இலட்சியங்களிலேயிருந்து வேறுபட்ட ஏடுகளுக்கும் கருத்து மோதுதல்கள் இருப்பினும் - மொத்தமாக எந்தவொரு அரசியல் கட்சியைச் சார்ந்தோரின் அல்லது ஏடு நடத்துவோரின் சுதந்திரம் அநியாயமாகப் பறிக்கப்பட்டு அடக்குமுறை தாண்டவமாடினாலும்; எதிர்த்துக் குரல் கொடுத்து மக்கள் சக்தியை ஓரணியில் திரட்டுவதற்கும் நியாயத்தை நிலை நாட்டுவதற்கும் தி.மு.க. என்றைக்குமே தயங்கியதில்லை.

1975ல் எமர்ஜன்சி பிறப்பிக்கப்பட்டபோது கூட நம்மீது அக்கறை கொண்ட நடுநிலையாளர்களான நண்பர்கள் சிலர் நம்மைக் கேட்டதுண்டு; ஜெயப்பிரகாஷ்நாராயண் அவர்களையும், மொரார்ஜி தேசாயையும், ஜோதிர்மாயி பாசுவையும், ஜார்ஜ் பெர்னாண்டசையும் கைது செய்தார் - பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தினால் - பேச்சுரிமையைத் தடுத்தால் - தமிழ்நாட்டில் உள்ள உங்களுக்கு என்ன வந்தது? இங்கே எமர்ஜன்சி என்ற பெயரால் இந்திரா காந்தி அம்மையார் உங்களுக்கு எந்தத் தொல்லையும் கொடுக்காத போது - இந்தியாவிலேயே முதன் முதலாக செயற்குழுவைக் கூட்டி எமர்ஜன்சியை எதிர்த்தும் கண்டித்தும் திரும்பப் பெறக் கோரியும் அனைவரையும் விடுதலை செய்வதோடு, பத்திரிகை கட்டுப்பாடுகளை நீக்கிட வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய அவசியம்; தி.மு.க.வுக்கு என்ன வந்தது? அதுவும் ஆளுங்கட்சியாக இருந்து கொண்டு இப்படிச் செய்வதால் அரசாங்கத்துக்கே ஆபத்து வராதா? கவிழ்த்துவிட்டு கவர்னர் ஆட்சி கொண்டு வர மாட்டார்களா? என்றெல்லாம் அன்புடன் அவர்கள் நம்மைப் பார்த்துக் கேட்டதுண்டு!

அதற்கு நாம் அளித்த பதில்; இதில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் எந்தத் தலைவர்கள் என்பதோ; அல்லது எந்தப் பத்திரிகைகள் என்பதோ பிரச்சினையல்ல - ஜனநாயகம் பாதிக்கப்பட்டு விட்டது; சீர்குலைந்து விட்டது என்பதே எங்கள் கவலை! அண்ணா அவர்கள் பெரிதும் போற்றிய ஜனநாயகத் தத்துவத்தைக் கட்டிக்காத்திட ஆட்சியை இழக்க நேரிட்டாலும், அவதிகள் பல வந்துற்றாலும் கவலையில்லை; எமர்ஜன்சி பிரகடனத்தை தி.மு.க. ஏற்பதற்கில்லை - எதிர்த்தே நிற்போம் - என்பதேயாகும்!

அதன் காரணமாக நாம் ஏற்றுக்கொண்ட விழுப்புண்ணின் வடுக்கள் இன்னும் மாறவில்லை!

சிக்மகளூரில் வெற்றி பெற்ற இந்திரா காந்தியை உரிமைக்குழுவின் பரிந்துரையைக் காட்டி நாடாளுமன்றத்தில் ஜனதா ஆட்சி வெளியேற்றிய போது - ஜனதாவின் நண்பர்களாயிருந்த நாம்; கழகச் சார்பில் அந்தச் செயலைக் கண்டித்து ஜனநாயக விரோதமான காரியம் என அறிக்கை விடுத்திடவும் தவறவில்லை!

எமர்ஜன்சி தவறுக்கு இந்திரா காந்தி வருத்தம் தெரிவித்துக் கொண்டு பகிரங்கமாகவே அதனை அறிவித்த நிலையிலும் - மத்தியில் அமைந்த ஜனதா ஆட்சியினர் தங்களுக்குள் பூசலிட்டுக் கொண்டு நிலையற்றநிலை இந்தியாவில் ஏற்பட்ட சூழலிலும் - 1980ல் தி.மு.க.வுக்கும் இந்திரா காங்கிரசுக்கும் தேர்தல் உறவு ஏற்பட்டதையும் அதன் தொடர்பான நிகழ்ச்சிகளையும் மாற்றங்களையும் எண்ணிப் பார்த்தால்; ஏதோ ஒரு கட்சியை எதிர்க்க வேண்டும் என்பது தி.மு.க.வின் இலட்சியமல்ல என்பதும்; அக்கட்சி நாட்டின் பொதுவான ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபடும் போது எதிர்ப்பதை தவிர வேறு வழியில்லை தி.மு.க.வுக்கு என்பதும் தெளிவாகவே புரியும்.

1980க்குப் பிறகு தி.மு.க., இ.காங்கிரஸ் கூட்டணி ஆட்சி புதுவையில் அமைந்திருந்த போது - கர்நாடகத்தில் ஹெக்டே அவர்கள் கூட்டிய தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டுக்கு புதுவை முதல்வர் டி.ஆர். அவர்களும் சென்று கலந்து கொண்டார் என்பதில்தானே கசப்பு வளர்ந்து இந்திரா காங்கிரஸ் தனது ஆதரவை திரும்பப் பெற்றுக்

கொண்டு, கழகத் தலைமையிலிருந்த ஆட்சியே புதுவையில் கவிழ்க்கப்பட்டது.

மாநில உரிமைகளை வலியுறுத்திக் கொண்டிருக்கிற தி.மு.கழகம் மாநில உரிமைகளை வலியுறுத்தக் கூட்டப்பட்ட முதலமைச்சர்கள் மாநாட்டுக்குச் செல்வது - இந்திரா காங்கிரஸ் பார்வையில் குற்றமாகப்பட்டாலும் கூட; ஆட்சிக்கு விபத்து ஏற்படக் கூடுமேயென்று கருதி அந்த மாநாட்டில் கலந்து கொள்ளத் தயக்கம் காட்டவில்லை. ஏனெனில் மாநில சுயாட்சிக் கொள்கையை மனதார ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் நாம்! 1974ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முதலாக அரசின் சார்பில் சட்டப் பேரவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள் நாம்! நமக்கு மாநில அதிகாரங்களைப் பரவலாக்கிடுக எனப் பேசும் உரிமையில்லையென வாய்ப்பூட்டு மாட்டிட இந்திரா காங்கிரஸ் முனைந்த போது - அந்த உறவைப் புதுவையிலும் இழக்கத் தயாராக இருந்தோமே தவிர, நமது கொள்கையைத் தளர்த்திக் கொள்கிறோம் எனக்கூறி; அங்கே ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள இந்திரா காங்கிரசின் ஆதரவைத் தேடித் துடிக்கவில்லை!

எமர்ஜன்சி காலத்தில் யார் யாருக்காக நாம் போர்க்குரல் கொடுத்தோம் - அதன் காரணமாக எத்தகைய இன்னல்களுக்கு ஆளானோம் - அவர்களாவது நம்மோடு நன்றியுடன் இருந்தார்களா என்பது மட்டுமல்ல - அவர்களால் நமக்கு அநீதி இழைக்கப்படாமலாவது இருந்ததா? என்பதெல்லாம் வேறு விஷயம்!

நாட்டுக்குத் தேவையானதும் - உயிர்த் துடிப்பானதுமான ஜனநாயகத்தைக் காத்திட எந்த இன்னலை ஏற்கவும் நாம் தயங்கவில்லை; இனியும் தயங்கப் போவது இல்லை என்பதே நமது உறுதியான நிலை!

அந்த உறுதி அடிப்படையில்தான் இன்றைக்கும் தமிழகத்தில் பொதுவான சில கொள்கைகள் - நடைமுறைகள் - திட்டங்கள் - ஜனநாயகத்தை பாதுகாக்கும் குறிக்கோள் - இன்னபிற நற்கருத்துக்களைச் செயல்படுத்த தோழமைக் கட்சிகளின் அணியில் இணைந்து மக்கள் இயக்கத்தை; அடக்குமுறை,

அராஜக, சர்வாதிகார, சேடிஸ்ட் துரைத்தனத்துக்கு எதிராக வலுப்படுத்திடவும் துணைநிற்கிறோம்!

எடுத்துக்காட்டாக ஆனந்த விகடன் பத்திரிகைக்கும் தி.மு.க.வுக்கும் என்ன உறவு?

அது தேசிய இயக்கத்தை வலுப்படுத்திய ஏடு! பெருந்தகையாளர் எனப் போற்றப்பட்ட எஸ்.எஸ்.வாசன் அவர்கள் தனிப்பட்ட முறையில் பெரியாரிடத்தில் மரியாதையும், அண்ணாவுடன் நட்பும், என்னிடம் தோழமையும் கொண்டவர் எனினும் தமிழ்நாடு தமிழருக்கே! என நாம் முழங்கிய காலத்தில் எலிவளை எலிகளுக்கே! எனக்கேலி செய்து விகடனில் எழுதியவர் தானே! 1967ல் கூட்டணிக்கட்சி தலைவர்களான அண்ணா, ராஜாஜி, காயிதேமில்லத், பி.ராமமூர்த்தி போன்றவர்களை கழுதை ஊர்வலம் போவது போலக் கேலிச்சித்திரம் விகடனில் வெளியிட - அதனைப் பெரிய சுவரொட்டிகளாக அச்சடித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தேர்தல் பிரச்சாரத்துக்கு ஊரெல்லாம் ஒட்டிய நிகழ்ச்சி; கடந்த கால வரலாறு தானே! அதைப்பார்த்து காங்கிரஸ் கோட்டையைப் பிடிக்க இந்தக் கழுதையே போதும் என்று மூதறிஞர் ராஜாஜி சொன்னதை இப்போது நினைத்தாலும் சிரிப்பு தாங்கமுடியாதே!

அதே காங்கிரஸ்காரர்கள் இன்றைக்கு விகடனில் வெளிவந்த ஒரு கேலிச் சித்திரத்துக்காக வாசனின் அருமைப் புதல்வர் அன்பு நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்களைத் தண்டிக்க வேண்டுமென வலியுறுத்திட - எம்.ஜி.ஆர். ஆட்சி; அவருக்கு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை வழங்கி கைதி உடையும் கொடுத்திட - இப்படியொரு உரிமை பறிக்கும் செயல்; எந்தவித விசாரணையுமின்றி சர்வாதிகாரத் தன்மையில் நடைபெறும் போது - நமக்கு நெஞ்சில் அலைமோதுவதெல்லாம் - விகடனுக்கும் நமக்குமுள்ள பந்தபாசம் என்பதல்ல; ஜனநாயகம் மலர வேண்டிய இடமான சட்டமன்றப் பேரவையிலேயே ஜனநாயகத்தின் கழுத்தை நெரித்துக் கொல்லுகிறார்களே; அதைத் தடுத்திட வேண்டுமென்பதுதான்!

ஏப்ரல் நாலாம் நாள் மாலை திருவண்ணாமலை நோக்கி சென்று கொண்டிருக்கிறேன்; மதுராந்தகம் தாண்டியதும் காரில் உள்ள வானொலி கருவியில் செய்தி! விகடன் ஆசிரியர்

கைது செய்யப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டார் என்று! குறுக்குவழியொன்றுண்டு திருவண்ணாமலைக்கு! அவ்வழி செல்லாமல் நேரே திண்டிவனம் நகருக்குள் காரை விடச் சொல்லி; அங்கிருந்தே கண்டன அறிக்கை தயாரித்து சட்டமன்றத்தை கழக உறுப்பினர்கள் ஒருநாள் புறக்கணிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டு அந்த அறிக்கையைத் தொலைபேசி வாயிலாக சென்னை ஏடுகளுக்கு தெரிவித்து விட்ட பிறகே திருவண்ணாமலைக்குப் புறப்பட்டேன் காரணம் என்ன?

ஆயிரம் கருத்து மோதல்கள் - எண்ணங்கள் கொள்கைகளில் வேறுபாடுகள் இருப்பினும்; பொதுவாகக் கட்டிக்காக்கவேண்டிய உரிமைகள் யாரிடமிருந்து அநியாயமாகப் பறிக்கப்பட்டு அராஜகம் தலைவிரித்தாடினாலும் அதனைத் தட்டிக் கேட்க - அதனால் வரும் விளைவுகளை ஏற்றிட தி.மு.க. என்றைக்கும் தயங்காது என்பதுதான்! நண்பர் பாலு அவர்கள் கூட நெஞ்சு நெகிழ்ந்து எனக்கும் கழகத்துக்கும் நன்றி தெரிவித்து விகடனில் தலையங்கம் எழுதியுள்ளார். கடமையைச் செய்தோம். அவ்வளவுதான்! என்றைக்கும் தொடர்ந்து செய்து கொண்டேயிருப்போம்!

ஒரு நண்பர் கேட்டார் என்னிடம்! அநீதி தலையெடுக்கும் போது அதனை எதிர்த்து தோழமைக் கட்சிகளுடன் இணைந்து அணி திரளுகிறீர்களே -

அதே சட்டப் பேரவையில் ரகுமான்கானின் இடம் இரண்டாவது வரிசையிலிருந்து கடைசி வரிசைக்குத் தள்ளப்பட்ட போது; உங்கள் கழகம் மட்டும் தானே தனித்து நின்று குரல் கொடுத்தது? என்று!

அதே நண்பர்; இன்னொன்றையும் நினைவுபடுத்தினார் - அதே சட்டமன்றப் பேரவையில் திடீரென முரசொலி நிருபரின் இடம் 19-வது வரிசைக்கு தள்ளப்பட்டதே; அப்போதும் உங்கள் கழகம் மட்டும்தானே எதிர்க்குரல் எழுப்பியது? என்று!

அவ்வளவு ஏன்; இன்றைக்குக் கூட சென்னை மாலைப் பத்திரிகையொன்றுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக நமது கழக உறுப்பினர்கள் கண்டனக் குரல் கொடுக்கிறார்கள் - முரசொலியில் சின்னக் குத்தூசி கட்டுரை - கொட்டையெழுத்தில் கண்டனச் செய்தி - ஆனால் அந்த சென்னை மாலைப் பத்திரிகை; முரசொலி

என்ற பெயரைக் கூட என்றைக்கும் வெளியிட விரும்பியதில்லை! முரசொலி நிருபர் இடம் மாற்றப்பட்ட செய்தியைக்கூட - அது குறித்து நான் எழுதிய கடிதத்தைக்கூட - அந்த மாலை ஏடு வெளியிடவில்லை! முரசொலி எனக் குறிப்பிட்டால் விளம்பரம் கொடுத்ததாக ஆகிவிடுமாம்! எனவே முரசொலி என்ற பெயருக்கு அப்படி ஒரு இருட்டடிப்பு!

அவர்கள் நமக்காக வாதாடவில்லையே என்பதற்காக - நாம் அவர்களுக்காக வாதாடாமல் இருக்க முடியுமா?

இதில் நாம் என்பதோ அவர்கள் என்பதோ முக்கியமல்லவே!

நம்மைப் பொறுத்த வரையில் இந்த அரசின் பாரபட்ச நடவடிக்கைகள் - உரிமை பறிப்பு அடாவடித்தனங்கள் - சர்வாதிகார வெறியாட்டம் - இவற்றை எந்தநிலையிலும் கண்டித்து; பாதிக்கப்படுவோர் யார் என்று பார்ப்பதை விட - பாதிக்கப்படுவது ஜனநாயக உரிமைகள் அல்லவா? என்ற துடிப்புடன் நமது தூயபணியைத் தொடருவோம்!

நல்ல எண்ணத்துடன் நண்பர்கள் கேட்பினும்; நச்சு எண்ணத்துடன் மாற்றார் எவரேனும் கேட்பினும் - அவர்களுக்கு இதுவேதான் நான் தரும் விளக்கம்!

அன்புடன்

மு.க.

13-04-1987

1502. யாருக்கு மனநலம் சரியில்லை?

உடன்பிறப்பே,

மக்கள் தரும் வரிப்பணம் ஒரு முதலமைச்சரின் சுற்றுப்பயணம் என்ற பெயரால் மாதம் ஒருமுறை ஒவ்வொரு மாவட்டத்திலும் எப்படிப் பாழாகிறது என்பதற்கு நாம் மட்டுமல்ல; நடுநிலையிலிருந்து விமர்சிக்கும் வார ஏடுகள் எத்தனையோ ஆதாரங்களைக் குறிப்பிட்டு எழுதியுள்ளன.

இப்போது முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களின் தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணம் குறித்து சில விவரங்கள்.

ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கிற திட்டங்கள் - இனி நடைபெறும் என அறிவிக்கப்படும் திட்டங்கள் - இவற்றையெல்லாம் மாவட்டம் தழுவிய அளவில் எல்லா இடங்களுக்கும் செல்லாமல் நாலைந்து இடங்களில் மட்டும் பெரிய விழா நடத்தி - எல்லாத் திட்டங்களையுமே ஒரே இடத்தில் இருந்து திறப்பது - அல்லது தொடங்குவது - தொடங்கியதையே மீண்டும் தொடங்குவது - இப்படி ஒரு கேலிக்கூத்து தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதற்கு அரசு இயந்திரம் முழுவேகத்தில் முடுக்கி விடப்பட்டுள்ளது. எதற்கு? திட்டங்களை வகுத்து அவற்றை நிறைவேற்றிடவா? அல்ல! அல்ல! எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களின் பவனியைப் பளபளப்பாக - பகட்டாக - படாடோபமாக - பண்டார சன்னதிகளின் பட்டினப்பிரவேச உற்சவங்களைப் போல நடத்துவதற்கு!

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், போலீஸ் துறை அதிகாரிகள்; பழையகால ராஜதர்பார்களில்

ராஜாதிராஜ
ராஜகம்பீர
ராஜகுலதிலக

ராஜமார்த்தாண்ட
மகாராஜாதி ராஜா பராக்! பராக்!

என்று சிலர் ஓடிவந்து பராக்கு கூறுவார்களே; அவர்களைவிட மோசமான நிலைக்குத் தங்களைத் தாழ்த்திக் கொண்டு விட்டார்கள்!

அடிமைகளாகவோ - தாசானு தாசர்களாகவோ அதிகாரிகள் இருந்து; அல்லது - நடித்து அவர்கள் எக்கேடாவது கெட்டுப் போகிறார்கள் - அல்லது கொள்ளையடித்துக் குவித்துக் கொள்கிறார்கள்; அதனால் நமக்கென்ன வந்தது என்று யாரும் இருந்துவிட முடியாதல்லவா?

காரணம்; கண்ணீரைச் சிந்தி, வியர்வையை பிழிந்து உழைப்பவன் தருகிற வரிப்பணத்தில் எம்.ஜி. இராமச்சந்திரனும், அமைச்சர்களும் அதிகாரிகளும் ஒய்யாரம் கொட்டுவதைத் தட்டிக் கேட்காமல் இருந்தால் - நடைபெறும் அநியாய ஆடம்பரங்களை கண்டும் கேட்டும் வாய்மூடி மௌனியாக இருந்தால் - இவன் தொடையிலேயே கயிறு திரித்தாலும் தூக்கம் கலையமாட்டான் என்ற இளிச்சவாய்ப் பட்டத்தையல்லவா எதிர்க்கட்சிகள் சுமக்க வேண்டியிருக்கும்.

இதோ ஏழைகளின் வரிப்பணம் வாரியிறைக்கப்படும் கொடுமையைப் பார்!

குடந்தையில் ஒரு மணவிழாவுக்காக சென்னையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் முதலமைச்சர் செல்கிறார்.

அந்த ஹெலிகாப்டர் அரசாங்கம் வாங்கியது அல்ல! ராணுவ இலாகாவிடமிருந்து லட்சக்கணக்கான ரூபாய் வாடகை கொடுத்து பயன்படுத்தப்படுகிற ஹெலிகாப்டர்!

குடந்தை; சென்னையிலிருந்து இருநூறு மைல் தொலைவு! இரவில் இரண்டு இரயில்கள் சென்னையிலிருந்து செல்கின்றன. அவற்றில் ஒன்றில் அவர் சென்றிருக்கலாம். விமானத்தில்தான் போக வேண்டுமென்றால் திருச்சி வரை சென்று அங்கிருந்து தஞ்சை சுற்றுப் பயணத்தை ஆரம்பித்திருக்கலாம். தஞ்சை வரையில் செல்லக்கூட வாயு தூத் என்ற விமானப் போக்குவரத்து இருக்கிறது. இத்தனையும் தேவையில்லையென்று ராணுவ ஹெலிகாப்டருக்கு எத்தனை லட்சரூபாய் வாடகை மக்கள்

வரிப்பணத்திலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் நாட்டுக்குத் தெரிய வேண்டாமா? அரசாங்கத்திற்கென சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்ட அரசின் சொந்த ஹெலிகாப்டர் என்ன ஆனது? அதில் ஒருமுறையாவது எம்.ஜி. இராமச்சந்திரன் ஏறிப் பயணம் சென்றதுண்டா? அந்த ஹெலிகாப்டருக்கு மாதந்தோறும் ஆகிற பராமரிப்பு செலவு எவ்வளவு?

ரயிலை விடுத்து, காரை விடுத்து லட்சக்கணக்கில் வாடகை கொடுத்து ஹெலிகாப்டரில் செல்கிறாரே; ஆங்காங்கு ஹெலிகாப்டர் இறங்கவும் - ஏறிப் பறக்கவும் தேவையான ஹெலிபேட் எனப்படும் தளங்கள் அமைக்க ஆகிற செலவு எவ்வளவு?

சரி; சென்னையிலிருந்து குடந்தைக்கு இரு நூறு மைல் - அதிக தொலைவு என்பதால் ஹெலிகாப்டரில் சென்றார் என்று வாதத்திற்காக ஒத்துக்கொள்வோம்; தஞ்சை மாவட்டத்துக்குள்ளேயே ஒவ்வொரு இடத்துக்கும் அவர் எப்படிச் சென்றார் என்பதைச் சிறிது கவனிப்போம்!

குடந்தையிலிருந்து தஞ்சைக்கு செல்கிறார்! தொலைவு எத்தனை மைல்? சுமார் இருபத்தி ஐந்து மைல்!

அந்த இருபத்தி ஐந்து மைல் காரில் சென்றிருக்கலாம் அல்லவா? அப்படிச் செல்லவில்லை! அதற்கும் ஹெலிகாப்டர் தான்!

மயிலாடுதுறையில் சர்க்கரை ஆலையைத் திறந்து வைக்கிறார் என்று பிரம்மாண்டமான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன அல்லவா?

அந்த சர்க்கரை ஆலை தனது உற்பத்தியைத் தொடங்கிப் பல மாதங்கள் ஆகின்றன! அதற்கு இப்போது இத்தனை லட்சரூபாய் செலவில் விழா!

அதிலும் வேடிக்கை என்னவென்றால் அந்த சர்க்கரை ஆலை மயிலாடுதுறையில் இல்லை - மயிலாடுதுறையிலிருந்து பலகல் தொலைவில் உள்ள தலைஞாயிறு என்ற இடத்தில்தான் அந்த ஆலை இருக்கிறது! முதலமைச்சரும் அவரது பரிவாரங்களும் அங்கே செல்லவில்லை - மயிலாடுதுறையில்

இருந்தவாறே தொலைதூரத்தில் உள்ள அந்த சர்க்கரை ஆலைக்கான திறப்புவிழாப் பொத்தானை அழுத்துகிறார்!

மயிலாடுதுறையில் இருந்தவாறே கொள்ளிடம் யூனியனில் உள்ள சமுதாயக் கூடம், பட்டுக்கோட்டையில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம், சீர்காழி ஒன்றியத்தில் உள்ள காலனி, குடவாசலில் கட்டப்பட்டுள்ள வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் இத்தனையும் திறக்கிறார்.

இப்படி செலவு செய்து கொண்டு தஞ்சை மாவட்டம் சென்று பல லட்சக்கணக்கில் மக்களின் வரிப்பணத்தை விரயமாக்குவதற்குப் பதிலாக - சென்னை கோட்டையிலிருந்தோ - அல்லது ராமாவரம் தோட்டத்திலிருந்தோ - இந்தப் பொத்தான்களையெல்லாம் அழுத்தியிருக்கலாமே என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

நிகழ்ச்சிகளை ஒருவாறு முடித்துக் கொண்டு 17ந் தேதி காலையில் திருவாரூரில் இருந்து சென்னை திரும்புவதாக ஒரு யோசனை!

ஆனால் திருவாரூரில் எந்த நிகழ்ச்சியும் முதலமைச்சருக்குக் கிடையாது.

16ந் தேதி இரவு திருவாரூரில் தங்கிவிட்டு 17ந் தேதி காலையில் புறப்படுகிற நிகழ்ச்சி ஒன்றுதான்!

திருவாரூரில் ஹெலிகாப்டர் இறங்க அங்கேயும் பெரும் செலவில் ஹெலிபேட் எனப்படும் தளம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த தளத்திலிருந்து அவர் தங்கப் போகும் விடுதி வரையில் இருபுறமும் பேரிகாட் சவுக்குக் கட்டைகளால் ஒரு மைல் தூரம் அமைத்திட ஆளுங்கட்சிக்காரருக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அந்தச் சாலையில் ஒரு குழியோ - நொடியோ - கடுகளவு ஆழம் கூட இருக்கக்கூடாது என்பதற்காக மாவட்ட ஆட்சித்தலைவரே சாலைமுழுதும் நடந்தேசென்று இரவு விடிய விடிய சோதனை செய்து பார்த்திருக்கிறார். முதலமைச்சரின் கார், அந்த வழியே போகும்போது ஒரு குலுங்கு குலுங்கினாலும் - சாலைப்பணி அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்படுவார்கள் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறார்களாம்!

இந்த அழகில் முதலமைச்சர் ராமச்சந்திரன் திருவாரூக்கு வருகிறாரா இல்லையா என்பது நிச்சயமாகாத நிலையில் 17ந் தேதி முதல்வர் புறப்படுகின்ற நிகழ்ச்சிக்காக 15ந் தேதியே 1500 போலீசார், 200 சப்-இன்ஸ்பெக்டர்கள், 80 இன்ஸ்பெக்டர்கள், 3 எஸ்.பி.க்கள் திருவாரூரில் முகாமிட்டு பந்தா செய்து கொண்டிருக்கிறார்கள்.

குடந்தை, தஞ்சை, மயிலாடுதுறை, வேதாரண்யம், திருவாரூர் என நாலைந்து ஊர்களுக்கு மட்டுமே பத்தாயிரம் போலீசார் பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டு உள்ளார்கள் என்றால் - ஏ! தாழ்ந்த தமிழகமே! ஏழைகளின் வரிப்பணத்தில் இப்படி வாணவேடிக்கை நடத்தும் ஒரு முதலமைச்சரை இது வரையில் நீ பார்த்ததுண்டா? என்று வேதனையோடு வினா கிளம்பத்தானே செய்கிறது!

பத்து நாட்டு ஜனாதிபதிகள் - இருபது நாட்டு பிரதமர்கள் - ஒன்றாக வந்தாலும் இல்லாத போலீஸ் ஜபர்தஸ்து - ஆடம்பர ஏற்பாடு - அதிகாரிகளின் ஆட்டபாட்டம் - ஒரு முதலமைச்சருக்கு - வரிப்பணத்தை வாரியிறைத்து நடத்தப்படுவதை எத்தனை நாளைக்குப் பொறுத்துக்கொள்ள முடியும்?

டாம்பீக ஆலவட்டம் சுழல - தஞ்சைத் தரணியில் பறந்து சென்று இறங்கிய முதலமைச்சர் இராமச்சந்திரன் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய பேருரை இருக்கிறதே; அதைப் படிக்கும் பேறு? உனக்குக் கிடைத்திருக்குமென்றே நம்புகிறேன்.

மனநலம் இல்லாதவன் நானா அல்லது கருணாநிதியா?

என்று பேசியிருக்கிறார்! இல்லை; படித்திருக்கிறார்! இல்லை; இல்லை; அப்படி அவர் படித்ததாக அதிகாரிகள் நிருபர்களுக்கு டைப் செய்த காகிதங்களைக் கொடுத்திருக்கிறார்கள்!

இந்திதான் இந்தியாவின் அதிகார பூர்வமான மொழி என்பதை ஒரு தாளில் எழுதிக் கொளுத்தியதற்காக - அதுவும் 1963ல் அண்ணா அவர்கள் எந்த முறையைக் கையாண்டாரோ, அதே முறையைக் கையாண்டு அறப்போரில் ஈடுபட்டதற்காக பேராசிரியர் உள்ளிட்ட பத்து பேரை சட்டமன்றத்திலிருந்து வெளியேற்றியது சரியில்லை என்பது நமது வாதம்! அறிஞர்கள் சட்ட நிபுணர்கள் - நீதிமான்கள் பலரும் வழங்கிய கருத்தும் அதுதான்!

அரசியல் சட்டம் 191-வது பிரிவில் உள்ள தகுதியின்மை என்ற பட்டியலில் மனநலம் சரியில்லாதவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடாது என்றிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் போது; இந்தக் காலத்தில் முதலமைச்சராகவே இருக்கிறார்களே - என்று கூறிவிட்டு, மனநலமுள்ள பத்து பேரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கமுடியாது என வெளியேற்றுவது அநியாயத் தீர்ப்பல்லவா? என்று நான் கூட்டங்களில் கேட்டதுண்டு!

இது முதலமைச்சருக்கு சுருக் என்று தைத்ததோ; அல்லது அவருக்கு பேச்சு எழுதிக் கொடுக்கிற நபருக்கு மனதில் திடுக் எனப் பட்டதோ நானறியேன்; முதலமைச்சர் பேசியதாக ஏடுகளில் செய்தி வந்துள்ளது.

மனநலம் இல்லாதவர் கருணாநிதான்! என்று எம்.ஜி.இராமச்சந்திரன் பேசினாராம்! ஆமாம்; பேசினாராம்!

எனக்கு ஏழு வயதாக இருக்கும்போது முதல் உலகப் போரில் சென்னையில் எம்டன் குண்டு போட்டான் என்றவர் எம்.ஜி.ராமச்சந்திரன்!

முதல் உலகப் போர் நடந்தது 1914ல்! எம்.ஜி.ஆர். பிறந்த ஆண்டு 1917 என்று மேலவையில் அவரே (Who is Who) (யார் யார் என்ற விபரம்) எனும் புத்தகக் குறிப்புக்குத் தகவல் கொடுத்திருக்கிறார். அது மாத்திரமா? எம்டன் என்பது ஒரு மனிதனல்ல! ஒரு கப்பல்!

மனநலம் யாருக்கு இல்லை என்பது இப்போது புரிகிறதா?

நான் எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்த போது ப. ஜீவானந்தம் என் வீட்டுக்கு வந்து ஆறுதல் சொன்னார் என்றவர் எம்.ஜி.ஆர்.!

இவர் எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்வதற்கு முன்பே ஜீவானந்தம் காலமாகி விட்டார் என்பது தான் வரலாறு!

மனநலம் யாருக்கு இல்லை என்பது இப்போது புரிகிறதா?

உயிரோடுள்ள பட்டாபிராமன் மேடையில் அமர்ந்திருந்த போதே, மறைந்த பட்டாபிராமனின் படத்திறப்பு விழாவில் - உயிரோடுள்ள பட்டாபிராமனின் படத்தை திறப்பதாக

எண்ணிக்கொண்டு எம்.ஜி.ஆர். பேருரையாற்றிய நிகழ்ச்சி; சரித்திரப் பிரசித்தமானது; இப்போது புரிகிறதா; மனநலம் யாருக்கு இல்லை என்பது?

அம்பேத்கர் சிலை திறப்பு விழாவில் டாக்டர் அம்பேத்கர் என்பது சிறப்புப் பட்டம் எனத் தெளிவில்லாமல் - அம்பேத்கர் மருத்துவ நிபுணராக விளங்கி டாக்டர் பட்டம் பெற்றார் என்று முதல்வர் எம்.ஜி.ஆர். ஆற்றிய உரையை யார் தான் மறக்க முடியும்?

மனநலம் இல்லாதவர் யார் என்று இப்போது புரிகிறதா?

1925ஆம் ஆண்டு மறைந்த தியாகராயர், 1932ஆம் ஆண்டு கள்ளுக்கடை மறியல் போராட்டத்தின் போது கதராடைகள் வழங்கினார் என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசியது - வரலாற்றுப் புகழ் வாய்ந்த புதிர் வரிகள் அல்லவா?

மனநலம் யாருக்கு சரியில்லை என்பது இப்போது புரிகிறதா?

1952ல் ராஜாஜி அவர்கள் ராமநாதபுர மாவட்டத்தில் குற்றப்பரம்பரை சட்டத்தை ரத்து செய்துவிட்டார். ஆனால் 1977 தேர்தல் பிரச்சாரத்தின் போது நான் ஆட்சிக்கு வந்தால் குற்றப்பரம்பரை சட்டத்தை ரத்து செய்வேன் என்று எம்.ஜி.ஆர். உறுதிமொழி கொடுத்ததை கேட்டு விபரமறிந்தோர் சிரித்தனர்!

மனநலம் யாருக்கு சரியில்லை என்பது இப்போது புரிகிறதா?

நபிகள் நாயகம் அவர்கள் குர்ஆன் எழுதினார் என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தான் பேசினார்!

மனநலம் யாருக்கு சரியில்லை என்பது இப்போது புரிகிறதா?

கவர்னரிடம் முக்கிய கொள்கை விவரங்கள் குறித்து கலந்து பேச வேண்டுமென்பதை தலைமைச் செயலர் அந்தோணி என்னிடம் சொல்லவில்லை என்று கவர்னருக்கே பதில் கடிதம் எழுதினார்.

மனநலம் யாருக்கு சரியில்லை என்பது இப்போது புரிகிறதா?

இன்சால்வெண்ட் ஆன ஒரு நடிகையை மேலவை உறுப்பினராக்கினார் எம்.ஜி.ஆர்.! வழக்கு ஒன்று அதை எதிர்த்துக்

கிளம்பியது! நடிகைக்காக பத்துலட்சம் ரூபாய் கோர்ட்டில் கட்டப்பட்டது. பிறகு அந்த நடிகையை எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்யச் செய்தார். அந்த நடிகையைத் தவிர்த்து இரண்டு பேரை மேலவைக்கு நியமனமும் செய்தார். பிறகு ஒருநாள் திடீரென்று மேலவையைக் கலைத்துவிட்டார்.

மனநலம் யாருக்கு சரியில்லை என்பது இப்போது புரிகிறதா?

திரு. கே.ஏ. கிருஷ்ணசாமியின் இலாகாவை அவருக்கு அறிவிக்காமலே மாற்றிவிட்டு, அவரை அமைச்சர் பதவியிலிருந்து விலகச் செய்தார். மீண்டும் அமைச்சராக்கினார். அவர் வீட்டு திருமணத்துக்குக்கூட செல்லாமல் அதே நாளில் ஒரு நடிகை வீட்டு திருமணத்திற்கு சென்று ஒரு மணி நேரம் அங்கேயே இருந்து இசை நிகழ்ச்சியை ரசித்தார். அடுத்து இரண்டொரு நாளில் கே.ஏ. கிருஷ்ணசாமியை மந்திரி பதவியிலிருந்து விலக்கினார்!

மனநலம் யாருக்கு சரியில்லையென்று இப்போது புரிகிறதா?

திரு. ஆர்.எம். வீரப்பனை நெல்லை சட்டமன்ற இடைத்தேர்தலில் வேட்பாளராக நிறுத்தினார். அவரை மந்திரியாக நீடிக்க வாக்களியுங்கள் என நெல்லைக்கு சென்று தேர்தல் கூட்டத்தில் கேட்டார். வீரப்பன் வெற்றிபெற்ற பிறகு; திடீரென்று அவரை மந்திரி பதவியிலிருந்து தூக்கி எறிந்தார்.

மனநலம் யாருக்கு சரியில்லையென்று இப்போது புரிகிறதா?

சேலம் கண்ணன் என்பவரை அ.தி.மு.க.விலிருந்து விலக்கிவிட்டதாக அறிவித்தார். ஆனால் அந்தக் கண்ணன் இன்னமும் மாநிலங்களவையில் அ.தி.மு.க. எம்.பி.க்களின் வரிசையில்தான் அமர்ந்திருக்கிறார்.

மனநலம் யாருக்கு சரியில்லையென்று இப்போது புரிகிறதா?

திருவரங்கம் கோபுர நீராட்டு விழாவுக்கு ஜீயர் குறித்த நாளை ஒத்தி வைக்கச் சொல்லி அரசின் சார்பில் அமைச்சர் சாமிநாதன் மூலம் அறிவிக்கச் சொன்னார். ஜீயர் அதை ஏற்க முடியாது என மறுத்தவுடன் - நான் சொல்லவில்லை; அமைச்சர் சாமிநாதனாக சொல்லி விட்டார் என்றுகூறி, கும்பாபிஷேகம் குறித்த நாளில் நடக்குமெனக் கூறி, அவரே விழாவுக்கு சென்று கலந்து கொண்டார்.

மனநலம் யாருக்கு சரியில்லையென்று இப்போது புரிகிறதா?

கேலிச் சித்திரம் வரைந்ததற்காக ஆனந்த விகடன் ஆசிரியருக்கு மூன்று மாதக் கடுங்காவல் விதிக்கச் சொல்லி அவை முன்னவர் நாவலர் நெடுஞ்செழியன் மூலம் தீர்மானம் நிறைவேற்றச் செய்தார். பிறகு அன்றைக்கே தனது போலீசைக் கொண்டு விகடன் ஆசிரியரைக் கைது செய்து மத்திய சிறையில் அடைக்கச் செய்தார். மூன்று மாதக் கடுங்காவலில் இருந்தவரை மூன்றே நாளில் விடுதலை செய்தார்.

மனநலம் யாருக்கு சரியில்லை என்பது இப்போது புரிகிறதா?

தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழக விழா என்பது பொதுவான விழா –

அங்கே சென்று தனிப்பட்ட முறையில் ஒரு கட்சியின் தலைவனாகிய என்னை தாக்கிப் பேசியதிலிருந்தே;

முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு மனநலம் சரியில்லை என்பது தெளிவாகி விட்ட பிறகு இத்தனை ஆதாரங்கள் எதற்கு என்று கேட்கிறாயா?

அன்புடன்

மு.க.

17-04-1987

1503. அன்று தந்தது களம்புக!
இன்றோ காயம் ஆற்றிட!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவதற்காக ஏற்கெனவே திரட்டப்பட்ட ஐந்து கோடி ரூபாயில் நான்கு கோடி ரூபாயை பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவிடவும்; அந்தத் தொகையை மறு வாழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்கள் மூலமாக வழங்கிடவும் ஏற்பாடு செய்யப்படுமென்று சட்டப்பேரவையில் தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டிருப்பது; தாமதமான ஓர் அறிவிப்பு எனினும் - வரவேற்கத்தக்க அறிவிப்பே ஆகும்!

உணவு, உடை, மருந்து போன்ற வகையில் இந்த நான்கு கோடி ரூபாய் உதவி தரப்படுமென்றும் அமைச்சர் விளக்கமளித்திருக்கிறார்!

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பேரவையில் நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நமது நாஞ்சிலார் அவர்கள்; வெளியுறவுத் துறையின் முன்னாள் செயலர் திரு. வெங்கடேசுவரன் வெளியிட்டுள்ள கருத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தென் மாநிலங்களில் பிரச்சினைகள் மத்திய அரசின் மனதைத் தொடுவதில்லை வடமாநிலங்களின் பிரச்சினைகளில் தான் மத்திய அரசு அக்கறை காட்டுகிறது. இலங்கையில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதைப் போல வட இந்திய மொழிப் பிரிவைச் சேர்ந்த எவரேனும் துன்புறுத்தப்பட்டால் மத்திய அரசு நிச்சயமாக உறுதியுடன் செயல்பட்டிருக்கும். தமிழ் நாட்டை ஆளும் கட்சியான அ.தி.மு.க.வும் இந்த உணர்வுகளை எடுத்துக் கூறத் தவறி விட்டிருக்கிறது. இதற்குக் காரணம்; அது இந்திரா காங்கிரசின் தோழமைக் கட்சியாக இருப்பதுதான்!

வெங்கடேசுவரனின் இந்த வேதனை; அவர் வெளியேற்றப் பட்ட பிறகு அல்ல - வெளியுறவுச் செயலர் பதவியிலே இருந்த பொழுதே வெளிப்படுத்தப்பட்ட காரணத்தினால்தான் - எப்படி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை காட்டிய திரு.ஜி.பார்த்தசாரதி அவர்களை ஒதுக்கிவைத்தார்களோ - அதே போல வெங்கடேசுவரனையும் விலக்கி மகிழ்ந்தார்கள் என்ற உண்மை; இந்த அறிக்கையின் மூலம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகத் தெரிகிறது!

அணிசேரா நாடுகளின் மாநாட்டிலோ, காமன்வெல்த் மாநாடுகளிலோ, சார்க் மாநாட்டிலோ, இப்படி எந்த உச்சி மாநாட்டிலாவது இலங்கைப் பிரச்சினை குறித்து ராஜீவ் காந்தி பேசியிருக்கிறாரா? வங்க தேசப் பிரச்சினை ஏற்பட்டபோது இந்திரா காந்தி உலக முழுவதும் அறியத்தக்க அளவுக்கு நிலைமைகளின் கொடுமைகளை எடுத்துச்சொல்லி உலக அபிப்பிராயத்தை உருவாக்கியது போல ராஜீவ் காந்தி அப்படி ஒரு முயற்சியில் ஈடுபட்டது உண்டா?

பேரவையில் நாஞ்சிலார் இந்தக் கேள்விக்கணையையும் தொடுத்துள்ளார்!

உடன்பிறப்பே; தமிழ்மக்களிடம் திரட்டிய நிதியிலிருந்து நாலு கோடியை இன்றைக்கு தமிழக அரசு இலங்கைத் தமிழர்களுக்கு உதவுகிறது!

எதற்காக?

உணவு, உடை, மருந்து போன்றவைகளுக்காக!

கழக ஆட்சி நடைபெற்றபோது தமிழ் மக்களிடம் திரட்டிய நிதி ஆறு கோடி ரூபாயை, பிரதமர் இந்திரா காந்தியின் கரங்களில் நான் ஒப்படைத்தேன் தீவுத்திடலில்; சென்னையில்!

எதற்காக?

பங்களாதேஷ் போராட்டத்தில் இந்தியா வெற்றி பெறுவதற்காக! ஆம்; பாகிஸ்தான் படைகளை எதிர்த்து விரட்டியடிப்பதற்காக! பாகிஸ்தானின் ஆதிக்க வெறியாட்டத் திலிருந்து வங்க தேசத்தை விடுவிப்பதற்காக!

ஆனால் இப்போது?

உணவு, உடை, மருந்து போன்ற செலவினங்களுக்காக மறுவாழ்வுத் தொண்டு நிறுவனங்களின் சார்பாகத் தமிழக அரசு வழங்கப்போவதாக அறிவிக்கப்படுகிறது. நான் இதனைக் குறை கூறவில்லை. மீண்டும் சொல்கிறேன்; வரவேற்கிறேன்!

ஆனால்! ஆனால்!!

என்ன ஆனால்? என்று கேட்கத் தோன்றும் சில பேருக்கு!

வெளியுறவுத் துறையின் முன்னாள் செயலர் வெங்கடேசுவரன் தெரிவித்துள்ள கருத்தை ஆழமாக சிந்தித்தால் - ஆனால் என்று நான் ஆதங்கப்படுவதற்கு அர்த்தம் புரியாமல் போகாது!

களம் காண்பதற்காக அன்றைக்கு - அதாவது பங்களாதேஷ் போருக்காக; இந்திய அரசே நாடு முழுவதும் எல்லா மாநிலங்களிலும் யுத்த நிதி திரட்டியது! அதற்கு எல்லா மாநிலங்களையும் விட அதிக நிதி தந்தது தமிழ் நாடு தான்! ஆம்; உத்திரபிரதேசமென்ற பெரிய மாநிலத்தில் பாதியளவேயுள்ள தமிழகம் ஆறு கோடி ரூபாய் தந்தது! உத்திரபிரதேசம் அதற்கும் குறைவாகவே கொடுத்தது!

களம் காண்பதற்கென - வெற்றியீட்டுவதற்கென - வீரர்களுக்குப் படைக்கலன்கள் வழங்குவதற்கென - அன்று தமிழகம் தந்தது ஆறு கோடி!

ஆனால் இன்றோ; காயம் பட்டவர்களுக்கு மருந்துக்கென - ஆதரவற்று அலைக்கழிந்து கிடக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு உணவுக்கு உடைக்கு என நாலு கோடி உதவப்படுகிறது!

நான் நாலு கோடிக்கும் ஆறு கோடிக்குமுள்ள வித்தியாசத்தைக் கோடிட்டுக் காட்டுவதாகக் கொள்ளக் கூடாது!

அன்று தந்தது களம்புக! இன்று தருவது காயமாற்றிட!

இதிலிருந்து புரிகிற உண்மை என்ன?

வெங்கடேசுவரன் கூறியிருப்பது போல;

வடஇந்திய மொழிப் பிரிவுகளை சேர்ந்த எவரேனும் துன்புறுத்தப்பட்டால் நிச்சயமாக உறுதியுடன் செயல்படுகிறது மத்திய அரசு!

அதனால்தான் அன்று களம் புகுந்தது; நமது தமிழகமும் ஆறு கோடியைக் காணிக்கையாகத் தந்தது! அஃதன்னியில்

இந்திய அரசின் கரத்தை வலுப்படுத்த போர்க்குரல் கொடுத்து ஆர்த்தெழுந்தது.

இன்றைக்கு சிங்கள ராணுவத் தாக்குதலால் சீரழியும் தமிழர்களுக்கு சிகிச்சையளிக்க, உணவு உடை வழங்க உதவிட மட்டுமே தமிழகத்தால் முடிகிறது!

வெங்கடேசுவரன் விளக்குவது போல மத்திய அரசு; தமிழ் மக்களின் இந்தக் கவலையைப் புரிந்து கொள்ளவில்லை. தமிழ் நாட்டை ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வும் இந்த உணர்வுகளை எடுத்துக் கூறத் தவறி விட்டது.

கூறுவது நாமல்ல; வெளியுறவுத் துறையின் செயலாளராக இருந்தவர் கூறுகிறார் இப்படி!

மாநிலங்களவையில் ராஜீவ் காந்தியின் அணுகுமுறை பற்றி ஆதரித்துப் பேசிய ஒரு உறுப்பினர்; நமது பிரதமர் ஒரு சிறந்த மாலுமி எனக் குறிப்பிட்டபோது தம்பி கோபால்சாமி கேட்டாராம்; – நல்ல மாலுமிதான் இலங்கைத் தமிழர்களை இப்படி நடுக்கடலில் விட்டு விட்டாரா? என்று!

பேர்பாக்ஸ் – போபார்ஸ் – ஸ்விஸ்பாங்க் – என்றெல்லாம் இந்தியா முழுமையும் சந்தைக் கடை வரையில் வந்து விட்ட பல கோடி ரூபாய் விவகாரங்களை திசை திருப்பும் நடவடிக்கையாக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மீண்டும் ஒரு நாடகத்தை அரங்கேற்ற முனையாமல் –

நாளும் அழிந்து கொண்டிருக்கும் நமது தமிழ் இனத்தைக் காத்திட மத்திய அரசு; இதய சுத்தியோடு முன்வருமா?

இதுதான் உடனடியாக விடையளிக்கப்பட வேண்டிய கேள்வி!

அனபுடன்

மு.க.

29-04-1987

1504. உள்ளாட்சி மன்றங்களுக்கான உரிமைப் போர்!

உடன்பிறப்பே,

உள்ளாட்சித் துறைக்கு பல அமைச்சர்கள் வந்து விட்டார்கள்; இந்தப் பத்தாண்டுக்காலத்தில்!

வந்தவர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள் - சொல்லுகிறார்கள் - சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள்!

மாநகராட்சி மன்றங்களுக்கென ஒரே மாதிரியான சட்டம் கொண்டு வரப்போகிறோம். அந்தச் சட்டம் வந்த பிறகே மாநகராட்சிகளின் தேர்தல் நடக்கும் என்று சொல்லோ சொல் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள்.

கூட்டுறவுத் துறைக்கான தேர்தல்களை ஒத்திப்போட்டுக் கொண்டே போனதற்கும் சட்டம் வருகிறது சட்டம் வருகிறது என்றே சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதற்கென ஒரு சட்டம் தயாரான பிறகுகூட கூட்டுறவில் தேர்தல் நடைபெறவில்லை. ஒவ்வொருமுறை சட்டமன்றம் கூடும்போதும் தனி அதிகாரிகளின் பதவிக்காலம் நீடித்துக் கொண்டுபோக மசோதாக்களை நிறைவேற்றுகிற காரியமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் எத்தனை எத்தனை கொள்ளைகள் என்பதை மேலவையில் தம்பி எல். கணேசன் பெரியதோர் பட்டியலையே ஆதாரங்களுடன் எடுத்து விளக்கினார். மழுப்பல்தான் பதிலாக வந்ததே தவிர மறுப்பதற்கு முடியாமல் அரசினர் தவித்தனர். அந்தக் கொள்ளை இப்போதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கழக ஆட்சிக்காலத்தில் கூட்டுறவுத் துறையில் பொறுப்பில் இருந்தவர்கள் மீது டெலிபோன் கட்டணம் நாற்பது ரூபாய்க்கும் - ஐம்பது ரூபாய்க்கும் - அதிக செலவு செய்து விட்டார்கள் என்று இந்த ஆட்சியாளர்கள் ஊழல் வழக்குப் போட்டு அத்தனை

வழக்குகளும் தள்ளுபடியாகிவிட்ட நிலையில்; இன்று இவர்கள் கூட்டுறவுத் துறையையே லஞ்சலாவண்ய ஊழல் குகையாக ஆக்கிக் கொண்டு குதியாட்டம் போடுவதை ஆங்காங்குள்ள மக்கள் அறிந்து கொள்ளாமல் இல்லை!

உள்ளாட்சி மன்றத்துறையின் அமைச்சர்; ஊழல் ஒழிப்பு வீரரைப்போல் பாவலா பண்ணிக் கொண்டு புனிதம் பற்றிப் பேருரை நிகழ்த்தியிருப்பது கண்டு பண்ருட்டி வட்டாரமே கைகொட்டிச் சிரிக்கிறது!

உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் தவறு செய்தால், அவர்களைத் திரும்ப அழைக்கிற உரிமையை மக்களுக்கு அளிக்கும் சட்டம் கொண்டு வருவோம்

இப்படி முழங்கியிருக்கிறார் அவர்! கடலூர் நகராட்சித் தலைவர்; நகர் நலத்திற்கென வசூல் செய்கிற பணத்தை நகராட்சிமன்றக் கணக்கில் வைத்து நகராட்சியின் சார்பாகத்தான் செலவிடவேண்டும் - என்று தி.மு.க. தலைமையின் சார்பாக எடுத்துச் சொல்லப்பட்டதைக் கேட்காமல் முறைகேடாக நடந்து கொண்டார் என்பதை அறிந்ததும் தலைமைக்கழகம்; அவரைக் கழகத்திலிருந்தே விலக்கி அறிக்கை வெளியிட்டது! அவருக்கு உடனடியாக அ.தி.மு.க.வில் புகலிடம் கொடுக்கப்பட்டதை இந்த நாடு இன்னும் மறந்து விடாமல் இருக்கும்போதே;

இப்படியொரு திரும்ப அழைக்கிற மக்கள் உரிமைச் சட்டம் பற்றி அமைச்சர் திருவாய் மலர்ந்தருளியிருப்பது இந்த ஆண்டின் தலைசிறந்த நகைச்சுவைகளில் ஒன்று தான்!

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எம்.ஜி.ஆர். கூட பல கூட்டங்களில் அறிவித்தார். தேர்தல் நேரத்துப் பிரகடனமாகவே வெளியிட்டார். தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் தவறு செய்தால்; அவர்களைத் திரும்பப்பெறும் உரிமை மக்களுக்கு வழங்கப்படுமென்று! அந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற அறிவிப்பை இப்போது அவரே மறந்து போயிருப்பார்!

அது மட்டுமா? அமைச்சர்களைக்கூடத் தானே நியமிக்க மாட்டேன் என்றும்; பொது மக்கள்தான் அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்பார்கள் என்றும் எம்.ஜி.ஆர். அறிவித்தார்!

ஆனால் - இந்த அறிவிப்புகள் எல்லாம் மாயா பஜார் வாண வேடிக்கைகளாக ஆகி விட்டன என்பதை மாண்புகள் மறுப்பார்களா? மறுக்க முடியுமா?

தவறு செய்கிற நபர்கள் உள்ளாட்சி மன்றங்களில் எந்தப் பதவியில் இருந்தாலும் அவர்கள் சுட்டிக்காட்டப்பட்டு அவர்கள் மீது முறையாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்பதை நூற்றுக்கு நூறு நான் வரவேற்கிறேன்!

ஆனால் இது அமைச்சர்களுக்கும் பொருந்தும் என்பதை அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் வசதியாக மறந்து விடுகிறார்களே; ஏன்?

ரிவிஷன் ஆபீசர்கள் என்ற வரிவிதிப்பு மறுபரிசீலனை அதிகாரிகளை நியமிப்பதிலேயே அமைச்சர்களின் மட்டத்திலே லஞ்சம் நடமாடிய காரணத்தினால்தானே; அந்த அதிகாரிகள் பலர் - அந்தப் பணத்தை ஈடுசெய்ய - லஞ்சம் கொடுத்தவர்களுக்கு ஒரு விதமாகவும், கொடுக்காதவர்களுக்கு ஒரு விதமாகவும் பாரபட்சமான சொத்து வரிகளை விதித்தனர். அதனை தி.மு.க. வன்மையாக எதிர்த்த காரணத்தினால்தானே இந்த அரசு பணிந்தது!

சேலத்தில் ஐம்பது ரூபாயாக இருந்த ஒரு வீட்டின் பழையவரி எழுபத்து ஐந்து ரூபாயாக உயர்த்தப்பட்டது! காரணம் கொடுக்கவேண்டியதை அதிகாரிக்குக் கொடுத்ததால்! அதே போன்ற இன்னொரு வீட்டுக்காரர்; தரமறுத்து விட்டதால் ஐம்பத்து ஆறு ரூபாயாக இருந்த பழையவரி ஐநூற்றி அறுபத்தி நாலு ரூபாயாக பலமடங்கு உயர்த்தப்பட்டு விட்டது!

இப்படிப் பல ஊர்களில் - பல வீடுகளுக்கு ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன!

விழுப்புரத்தில் கவிதா திரையரங்கத்திற்கு பழைய வரி ஐநூற்று எண்பத்து ஆறு ரூபாய்! புதிய வரி; 139 மடங்கு உயர்வு - அதாவது எண்பத்து ஓராயிரத்து ஐநூறு ரூபாய்க்கு மேல்! கண்ணன் திரையரங்கத்திற்கு பழைய வரி எழுநூற்றுப் பதினைந்து ரூபாய்; ஆனால் புதிய வரி 147 மடங்கு உயர்வு - அதாவது ஒரு லட்சத்து ஐயாயிர ரூபாய்க்கு மேலாக! அதே விழுப்புரத்தில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. அவர்களின் தியேட்டருக்கு பழையவரி ஆயிரரூபாய்! புதிய வரியோ; பத்தொன்பதாயிர ரூபாய் தானாம்! அதாவது 19 மடங்கே அதிகம்!

இது உண்மைதானா அல்லவா என்பதை விசாரித்தறிந்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா?

இந்த பாரபட்சமானதும் ஊழல் மலிந்ததுமான பல மடங்கு வரி உயர்வைத்தான் கழகம் எதிர்த்தது. சீரானதும் செம்மையானதுமான வரி உயர்வு பற்றிச் சிந்திப்பது என்று கழக நகராட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இந்த முடிவைத்தான் தாஜா செய்வது என்று அமைச்சர் வர்ணிக்கிறார்!

எது ஆளுகிற கட்சியோ அதன் தலைவர்களைத் தாஜா செய்தே தாள்பிடித்துக் கிடப்பவராயிற்றே!

இன்னொரு அரிய கருத்தையும் அமைச்சர் உதிரோ உதிர் என்று உதிர்த்திருக்கிறார். உள்ளாட்சி மன்றங்களில் கட்சி அரசியல் கூடாது! எப்படி வீட்டுக்குள் நுழையும்போது காலணியைக் கழற்றி வெளியில் விட்டபிறகு வீட்டுக்குள் செல்கிறோமோ அதுபோல கட்சி அரசியலை உள்ளாட்சி மன்றங்களுக்கு வெளியே விட்டுவிட வேண்டும்.

அமைச்சரின் இந்தக் கருத்தில் யாருக்கும் மறுப்பு இருக்க முடியாது!

ஆனால் பல்கலைக்கழக நூலகத் திறப்புவிழாவானாலும், மயிலாடுதுறையில் சர்க்கரை ஆலை உள்ளிட்ட பல ஊராட்சி ஒன்றிய தொடர்புடைய தொகுப்பு விழாவானாலும், வேதாரண்யத்தில் நடந்த பல ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் ஒருமித்த விழாவானாலும் - அங்கெல்லாம் முதலமைச்சரும் அமைச்சர்களும் கழகத்தையும் என்னையும் தாக்கோ தாக்கு என்று ஏசிப்பேசி - அரசியல் கட்சி விழாக்களாக அரசு விழாக்களை ஆக்கினார்களே; தஞ்சைத் தரணியிலும் மற்ற மாவட்டங்களிலும் - அப்போது மட்டும் காலணியை வெளியே கழற்றிப் போட மறந்து விட்டது ஏன்?

ஓகோ - ஒருவேளை உள்ளே போன பிறகு பாத்ரூம் செருப்பு மாட்டிக் கொண்டார்களோ-?? !!!

மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு கொள்ளையடிப்பதற்கும் குபேரர் ஆவதற்கும் கட்சிகளை வளர்த்துக் கொள்ள விரும்புகிறவர்களுக்கும் இந்த ஆட்சியில் அனுமதியில்லை

என்று அமைச்சர் முழங்கியிருக்கிறார்!

நகராட்சி, ஒன்றிய, பேரூராட்சி, ஊராட்சி தலைவர்களே! உறுப்பினர்களே! நீவிர் யாரும் - ஆம்; யாருமே எள்முனையளவு தவறுகூட செய்யாமல் மக்கள்நலப் பணிகளை ஆற்றிடுக!

என்று மீண்டும் மீண்டும் வேண்டுகிறேன்! மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள் என்பதே என் பணிவான கோரிக்கை!

உடன்பிறப்பே; இக்கடித வாயிலாக இதை உள்ளாட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்!

கொள்ளையடிப்பது
குபேரர்களாவது

இந்த அரிய பணிக்கு அ.தி.மு.க. அமைச்சர் பெருமக்களே முழுமையான - முழுமையான - முழுமையான - உரிமையாளர்களாகக் கொடி கட்டிப் பறக்கட்டும்!

உள்ளாட்சி மன்றங்களின் அதிகாரங்களைப் பறிக்க இன்னும் ஏதேதோ கோல்மால்கள் செய்யப்போகிறதாம் எம்.ஜி.ஆர். அரசு!

இப்போது பறிக்கப்பட்டுள்ள உரிமைகளை மீட்கவும் - இனியும் பிடுங்கப்பட இருக்கிற உரிமைகளைத் தடுத்துக் காத்திடவும் - மாநிலம் தழுவிய ஒரு மாபெரும் அறப்போராட்டத்திற்கு மக்கள் இயக்கத்தை ஒரு முனையில் திரட்டிட இப்போதே ஆங்காங்கு ஆயத்தமாகிட வேண்டுகிறேன்!

விரைவில் உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்கள் உள்ளிட்ட கழகத்தின் செயற்குழு கூடும்; அறப்போருக்கான அறிவிப்பு வரும்; இந்த அரசு உள்ளாட்சிகளின் உரிமை பறிக்கும் நடவடிக்கைகளைத் திரும்பப் பெறா விட்டால் அந்த அறப்போர் அறிவிப்பு தவிர்க்க முடியாத ஒன்றாகும்!

அன்புடன்

மு.க.

30-04-1987

1505. புயல் - மையம் கொண்டிருக்கிறது!

உடன்பிறப்பே,

குறிக்கோளைப் பெரிதெனக் கொண்டவர்கள் அந்தக் குறிக்கோளை, நாடு ஏற்றுச் செயல்படுவது எப்போது என்பதில் நாட்டங் கொண்டவர்கள் மீது சட்டமாகட்டும் அவசரச் சட்டமாகட்டும் வீசப்பட்டால் விசாரப்படவா செய்வர்? வழக்குமன்றம் தன் கடமையைச் செய்கிறது, நாம் நமது கடமையைச் செய்யலாம் என்றே இருப்பர்.

மக்களாட்சி முறைப்படி பெருவாரியான இடங்களை மக்கள் மன்றத்திலே பெற்ற கட்சியினர், என்ன தேவையென்று நினைக்கிறார்களோ அவ்விதம் சட்டம் இயற்றிக்கொள்ள முடிகிறது. எதிர்ப்பு இருக்கலாம். அந்த எதிர்ப்புரையில் நியாயம் இருக்கலாம். நிபுணர்கள், சிக்கல்களை எடுத்துக்காட்டலாம். அவை உண்மையாக இருக்கலாம்; ஆனால் கடைசியில் ஓட்டுதானே சட்டமாகிவிடுகிறது.

எதிர் தரப்பினர் ஆவலுடனும் நம்பிக்கையுடனும் எடுத்துச் சொல்வதையெல்லாம் துளியளவு உணர்ச்சியும் காட்டாது கேட்டுக் கொண்டிருந்து விட்டு - எழுந்து நின்று; இன்னார் சொன்னதை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று பேசி விட்டு உயர்த்தப்படும் கரங்களைத் துணைக்கு அழைத்துக் கொள்ளலாம். இவ்விதத்தில் சட்டங்கள் இயற்றிக் கொள்ள வாய்ப்பு பெற்ற ஆளுங்கட்சியை, ஆட்சிப் பொறுப்பில் மக்கள் அமர்த்தியது, இந்த விதமான சட்டங்கள் இயற்றுவார்கள், இயற்ற வேண்டும் என்பதற்காக அல்ல!

1960-ல் அண்ணா எழுதிய கடிதத்திலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டவைதான் மேலேயுள்ளவை.

எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் அரசில் இன்று இயற்றப்படும் சட்டங்களையும் அவற்றின் உள் நோக்கங்களையும்

கூர்ந்து கவனிக்கும் போது; சட்டங்களைப் பற்றி அண்ணா வழங்கிய கருத்துக்கள் என்றைக்குமே பொருந்தக்கூடியவையன்றோ!

உள்ளாட்சி மன்றங்களின் உரிமைகளைப் பறிக்க அடிக்கடி வெளியிடப்படும் அரசு ஆணைகள் போதாமல் - புதிய புதிய சட்டங்கள்!

உள்ளாட்சி மன்ற விழாக்களுக்கு அவற்றின் தலைவர்கள் தலைமை வகிக்கக் கூடத் தகுதியற்றவர்களாம் - வரவேற்புரை மட்டுமே வழங்கிட உரிமையுண்டாம்!

ஏன் இந்தத் திடீர் ஆணை? பெரும்பான்மையான உள்ளாட்சி மன்றங்கள் தி.மு.க. வசமும் அதன் தோழமைக் கட்சிகளின் வசமும் இருப்பதால் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட எரிச்சலின் விளைவு இது!

உள்ளாட்சி மன்றங்களின் அடிக்கல்நாட்டு விழா, திறப்பு விழாக்களுக்கு ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் சபாநாயகர்கள் போன்ற பதவிகளில் இல்லாத அரசியல் தலைவர்கள் அடிக்கல்நாட்டு விழாவோ திறப்பு விழாவோ ஆற்றிட அழைக்கப்படக் கூடாதாம்!

அம்மிக்கல்லை எடுத்து அடிவயிற்றில் குத்திக் கொண்ட காந்தாரியின் கதையைத்தான் இந்த எரிச்சல் உத்திரவு நினைவூட்டுகிறது!

உள்ளாட்சி மன்றங்களுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை அந்தப் பதவிகளில் இருந்து திரும்பப் பெறுவது என்ற பெயரால் ஆளுங்கட்சியினர் தமது இஷ்டத்துக்கு எதிர்க்கட்சிகளின் மீது பாய்ச்சல் நடத்த வசதியாக ஒரு சட்டத்தையும் இந்திரா காங்கிரஸ் உள்ளிட்ட எல்லா எதிர்க்கட்சிகளும் எதிர்த்து வெளிநடப்பு செய்த பிறகும் கூட; தமக்குள்ள பெரும்பான்மை காரணமாக நிறைவேற்றிக் கொண்டுள்ளனர்.

திரைப்பட விளம்பரங்களுக்கு தணிக்கையும் - பதிவு சான்றிதழ் பெறுவதும் கட்டாயமாக்கப்பட்டு அதற்கென ஒரு சட்டம்!

அமைச்சர்களையோ, எம்.எல்.ஏ.க்களையோ விமர்சனம் செய்யும் திரைப்படங்களை திரையிடும் திரையரங்க உரிமையாளர்களைத் தண்டிக்க ஒரு சட்டம்! மத்திய அரசுக்குள்ள அதிகாரப் பட்டியலின் அடிப்படையில் ஒரு திரைப்படத்தை வெளியிடும் அனுமதியை வழங்கும் முழு உரிமையும் மத்திய

அரசின் தணிக்கைக் குழுவுக்கு இருக்கிற நிலையில் - அதற்கு முற்றிலும் மாறாக எம்.ஜி.ஆர். அரசு; மத்திய சென்சார் சர்டிபிகேட் வாங்கிய படங்களையே திரையிடக்கூடாதென - இப்படியொரு சட்டத்தை திடீரென நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது!

மத்திய அமைச்சர்களை கடுமையாக விமர்சித்து இந்திப் படங்கள் வெளிவந்துள்ளன. ஆந்திராவில் முதலமைச்சரையே விமர்சித்து கேலி செய்து படங்கள் திரையிடப்பட்டுள்ளது. கேரளத்தில் பெரு வாரியான திரைப்படங்கள், அமைச்சர் களையும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கடுமையாக விமர்சித்தே வெளிவந்துள்ளன. ஆனால் இங்கு மட்டும்; கருத்துக்கு எதிர்க்கருத்து எடுத்து வைக்க வக்கு வகையின்றிப் போனவர்கள் - திரைப்படங்களையே தடுப்பதற்குச் சட்டம் கொண்டு வந்துள்ளார்கள்.

இந்தத் திரைப்படத் தடைச் சட்டம்; நீதி மன்றத்தில் நிற்குமா என்பது வேறு விஷயம் - நிற்கவே நிற்காது; இச்சட்டம் அரசியல் சட்டத்துக்கு முரண் ஆனது என்று சட்டவல்லுநர்கள் கூறுகிறார்கள். ஒருவேளை அந்த மன்றத்திலும் நீதிக்குத் தண்டனையே தொடர் கதையாகுமேயானால் - மக்கள் மன்றத்தில் இத்தகைய கருத்துக்கள் மேலும் விரிவாகவும் வேகமாகவும் பரவவே செய்யும்!

அண்ணா எழுதிய சொர்க்கவாசல் திரைப்படத்தின் மைய இழையை யாரும் மறந்திருக்க முடியாது!

ஒரு கவிஞன்! அவன் பாடுவான்! கவிஞர் வேடத்தை நடிப்பிசைப் புலவர் தாங்குவார்! என்ன பாட்டு தெரியுமா?

ஆகும் நெறி எது?
ஆகா நெறி எது?
அறிந்து சொல்வீரே;
நன்றாய்ப் புரிந்து
கொள்வீரே!

இப்படித் தொடங்கும் பாடல் அது! அந்தப் பாட்டுக்கு மன்னன் தடை விதிப்பான்! கவிஞனே கூட நாடு கடத்தப்படும் நிலை! அரசாங்கத்தின் அந்த ஆணவ உத்திரவு கண்டு நாட்டு மக்கள் கொதிக்கிறார்கள்!

அரசாங்கத்தின் தடையை மீறி அந்தப் பாடலை ஒருவன் பாடுகிறான்!

அடுத்து பத்து பேர் பாடுகிறார்கள்!
பிறகு பலநூறு பேர் பாடுகிறார்கள்!
பின்னர் பல்லாயிரக்கணக்கானோர் பாடுகிறார்கள்!

தடைசெய்யப்பட்ட அந்தப் பாட்டை நாடு முழுதும் பாடுகிறார்கள்!

ஆம்; மையம் கொண்டிருந்த புயல் கரை நோக்கி வீச ஆரம்பித்து விடுகிறது!

அதில் மகுடமும் மாளிகையும் கோட்டையும் கொத்தளமும் ஆட்டங் கொடுக்கிற காட்சியை அண்ணாவின் சொர்க்கவாசல் படம் அற்புதமாகச் சித்தரிக்கிறது!

சொர்க்கவாசல் படம் போதிக்கும் பாடத்தை மறந்துவிட்டு - இன்றைக்குப் பதவிச் சொர்க்கவாசலில் பல் இளித்துக் கிடப்பவர்களுக்கு - அதே பாடம் பதிலாக கிடைக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை!

அதுவரையில் சேடிஸ்ட் ஆட்சி எத்தனை உரிமை பறிக்கும் சட்டங்களை வேண்டுமானாலும் இயற்றட்டும்! உத்திரவுகளைப் பிறப்பிக்கட்டும்!

புயல், மையம் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் மறந்து விட வேண்டாம்!

தனது கட்சியினர் பெரும்பான்மையாக இல்லாத உள்ளாட்சி மன்றங்களை ஒழித்துவிட வேண்டும் - தானில்லாத சினிமாத் துறைக்கு மூடுவிழா நடத்திவிட வேண்டும் - இப்படியொரு குரூர எண்ணங்கொண்ட கொடுங்கோலராக எம்.ஜி.ஆர். ஆட்டம் போடுகிறார்!

மையங்கொண்ட புயல் கரைகடக்கும்போது அந்த வஞ்சக எண்ணம் தரைமட்டமாகிவிடும் என்பதே எனது எச்சரிக்கை!

அன்புடன்

மு.க.

13-05-1987

1506. இனியும் பொறுத்திடல் பயனில்லை; இன்றே போரிட வாருங்கள்!

உடன்பிறப்பே,

மே 25ஆம் நாள் தி.மு.க., மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆகிய கட்சிகளின் சார்பில் தமிழக முழுதும் மாவட்ட ஆட்சி, வட்ட ஆட்சி அலுவலகங்களின் முன்னால் அறவழியில் ஆர்ப்பாட்டம் நடத்திட ஊர்வலப் பேரணிகள் நடைபெறுவதற்கான ஆயத்தங்களில் ஆங்காங்கு ஆர்வத்துடன் ஈடுபடும் ஏற்பாடுகளைத் தோழமைக் கட்சி நிர்வாகிகளுடன் கலந்து பேசி முடிவுகள் மேற்கொள்ளப் பட்டிருக்குமென நம்புகிறேன்.

காலையிலோ மாலையிலோ நடைபெறும் பேரணிகள், ஆர்ப்பாட்ட அறப்போர் முடிவுற்ற பிறகு ஆங்காங்கு கூட்டங்கள் வாயிலாக போராட்டத்திற்கான காரணங்களை விளக்கிப் பொதுமக்களுக்குக் கூறுவதும் அவசியமான ஒன்றாகும்.

வறட்சி நிவாரணப் பணிகளில் காட்டப்படும் மெத்தனம் - பணிகள் நடைபெறும் இடங்களிலும் ஆளுங்கட்சியினர் புரிந்திடும் ஊழல் - குடிநீருக்கு வழியின்றி குடங்கள் பானைகளுடன் தாய்க்குலத்தினர் தவித்திடும் நிலைமை - மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் சார்பில் கிராம, நகரப் பகுதிகளில் நடக்கின்ற பொதுப்பணிகளுக்கும் மூடு விழா நடத்துகிற அளவுக்கு எம்.ஜி.ஆர். அரசு புதிது புதிதாக வெளியிடுகிற ஆணைகள் - ஜனநாயகத்தின் தொட்டில்களெனப்படும் உள்ளாட்சி மன்றங்களின் உரிமைகளை ஒவ்வொரு நாளும் பறிக்கிற சர்வாதிகாரக் குரூர மனப்பான்மை - எழுத்துரிமை, பேச்சுரிமை, பிரச்சார உரிமைகளைத் தடுத்து நிறுத்தித் தனது அரசின் மோசடிகளுக்குத் திரைபோடக் கொண்டு வரும் கறுப்புச் சட்டங்கள் - கூட்டுறவுத் துறையில்

தேர்தலே நடத்தாமல் கொள்ளையடிக்கும் கூட்டத்தின் எதேச்சாதிகார வெறியாட்டம் - சென்னை, மதுரை, கோவை மாநகராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்குப் பதிலாக நடத்த இயலாது என்பதற்கு சொல்லப்படும் நொண்டிச் சமாதானங்கள் - ஆட்சிப் பொறுப்பு வகிப்போரின் கூடாரத்தில் அடி மட்டம் முதல் மேல் மட்டம் வரையில் பரவிப் புழுத்துப் போய் புரையோடிச் சீழ்வழியும் லஞ்சலாவண்ய நோய் - இவற்றையும் இன்னோரன்ன எம்.ஜி.ஆர். அரசின் இன்னாச் செயல்கள் பலவற்றையும் கண்டித்து மக்களின் ஒருமித்த சக்தியைத் திரட்டி வெற்றி காண்பதற்காகவே;

மே 25 தமிழக முழுதும்
ஊர்வலப் பேரணிகள்!
அறவழி ஆர்ப்பாட்டங்கள்!
விளக்கப் பொதுக் கூட்டங்கள்!

இது நமது உரிமைப் போராட்டத்தின் முதற்கட்டம்! ஊழல் சாம்ராஜ்யத்தை வேரோடு சாய்ப்பதற்கு மக்களைத் திரட்டிப் போர்க்கொடி உயர்த்தும் நாளே மே 25!

புண்ணுக்குப் புனுகுதடவி - இரத்தம் கசியும் ரணத்தை சல்லாத்துணி கொண்டு மறைப்பது போல -இன்றுள்ள ஆட்சியாளர்களும் அவர்களின் துதிபாடிகளும்;

நிர்வாகச் சீர்கேடுகளை,
நேர்மைத் திறமற்ற ஆட்சியை,
நிம்மதியற்றுப் போய் மக்கள்
நித்த நித்தம் வாடிடும் நிலையை

பிறர் அறியாமல் செய்திடும் பித்தலாட்டப் பிரச்சாரங்களில் ஈடுபடுகின்றனர்!

அவர்தம் மாய்மாலத்தைத் தகர்த்தெறியத் தடந்தோள் உயர்த்திப் புறப்பட்டதுகாண் நமது அணி வகுப்பு எனப் பெருமிதம் கொள்ளத்தக்க அளவுக்கு தமிழக முழுதும் மாவட்ட - வட்டத் தலைநகர்களில் அரசு அலுவலகங்களுக்கு முன்னால் அறவழி ஆர்ப்பாட்டப் போராட்டத்தை நடத்திட வேண்டுமெனப் பணிவன்புடன் கோருகிறேன்.

ஊர்வலப் பேரணியில் முழங்கிச் செல்ல வேண்டிய ஒலி முழக்கம் எவ்வாறு இருத்தல் வேண்டுமென தோழமைக் கட்சிகள் கலந்து பேசி அந்த முழக்கங்கள் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளன.

காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லை!
கம்மாய் குளங்களில் தண்ணீர் இல்லை!
துன்பத்தில் துடிக்கும் மக்களுக்கு
துயர் துடைக்க திட்டம் இல்லை!

வறட்சி எங்கும் வாட்டுது!
வறுமைக்கடலில் முழ்குது!
ஏழைகள் வயிறு காயுது!
எம்.ஜி.ஆர். ஆட்சி தூங்குது!

காட்டிலுள்ள மரங்களை அழித்து
கோடி கோடி சேர்த்தவரே
வாடி நிற்கும் மக்களுக்கு
வழி என்ன சொல்வீரே!

குடிக்கத் தண்ணீர் கிடைக்கலியே;
கூறு கெட்ட ஆட்சியிலே!
குளங்கள் தூரு எடுக்கலையே;
குழப்பவாதிகள் ஆட்சியிலே!

மத்திய மாநில அரசுகளே!
மக்களைக் கொல்லும் அரசுகளே!
உரிய தொகையினை ஒதுக்கிடுங்கள்!
மக்களின் உயிரைக் காத்திடுங்கள்!

அனுதினமும் சட்டங்களா?
அடுக்கடுக்காய்ச் சட்டங்களா?
ஒடுக்கும் நோக்குடன் சட்டங்களா?
உரிமை பறிக்கும் சட்டங்களா?

சட்ட மன்ற உறுப்பினர்கள்
சட்டத்திற்கு அப்பாற் பட்டவரோ?

மாண்புமிகு மந்திரிகள்
மாசு மரு அற்றவரோ?

குற்றம் சொல்லக்கூடாதாம்!
குறைகள் சொன்னால் ஆகாதாம்!
சினிமா படத்தில் விமர்சித்தால்!
சிறையில் தள்ள சட்டங்களாம்!

அடுக்கடுக்காய் சட்டங்கள்!
அடக்குமுறை சட்டங்கள்!
அ.தி.மு.க. ஆட்சியிலே
அவசர கோல சட்டங்கள்!
சுவரொட்டிகள் போடக் கூட
அனுமதி கோரும் சட்டங்கள்!

உள்ளாட்சிகள் அதிகாரத்தை
உருக்குலைக்கும் சட்டங்கள்
அடுக்கடுக்காய் சட்டங்கள்
அடக்குமுறை சட்டங்கள்!

அ.தி.மு.க.வின் சட்டங்கள்!
அர்த்தமற்ற சட்டங்கள்!

தேர்ந்தெடுத்த மன்றங்களை
செயல்படாது முடக்கிவைக்க
திருட்டுத் தந்திரம் செய்யாதே
குருட்டுச் சட்டங்கள் போடாதே!
கொல்லைப்புற வழியாக
உள்ளே நுழையும் சர்க்காரே!
உள்ளாட்சி மன்றங்களை
ஒழித்துக்கட்ட நினைக்காதே!

மாநகராட்சி தேர்தலை நடத்த
மனமில்லாத சர்க்காரே!
தோல்வி பயத்தால் ஓடாதே!
தொடர்ந்து கேடுகள் தேடாதே!

போக்கு வரத்து தொழிலாளியின்
போராட்டத்தை தடை செய்ய
ஆள் தூக்கி சட்டம் போட்டு
அடிவயிற்றில் அடிக்காதே!
உரிமங்களைப் பறிக்காதே
உரிமைகளைத் தடுக்காதே!

போலீஸ் ராஜ்யம் நடத்தாதே!
அவசர கால நிலை ஆக்காதே!
பத்திரிகை சுதந்திரம் பறிக்காதே!
சட்டமன்ற மரபுகளைக் கொல்லாதே!

மக்கள் ஒன்றாய் சேர்ந்து விட்டால்
மக்கள் சக்தி எழுந்து விட்டால்
அடக்கு முறைகள் தூளாகும்!
சட்டங்கள் எல்லாம் பொடியாகும்!

ஒன்றாய்ப்போரிட வாருங்கள்!
ஜனநாயகம் காத்திட வாருங்கள்!
இனியும் பொறுத்திடல் பயனில்லை!
இன்றே போரிட வாருங்கள்!

இந்த முழக்கங்களை மட்டுமே எழுப்பி ஊர்வலப் பேரணிகள் நடைபெறட்டும்!

பேரணி முடிவில் கூட்டங்களில் விளக்கங்கள் அளிக்கப்படட்டும்!

ஆர்ப்பாட்ட அறப்போர் - முதல் கட்டம் முடிந்த பிறகு; அடுத்த கட்டம் குறித்து தோழமைக் கட்சிகள் கலந்து பேசி அறிவிக்கப்படும்!

அன்புடன்

மு.க.

21-05-1987

1507. கருங்கடல் - கண்ணீர்க்கடல்; பொங்கி எழுக!

உடன்பிறப்பே,

கழகத்தின் நிர்வாகக்குழு கூடி ஒருநாள் அவகாசம் மட்டுமே உனக்குத் தந்து; ஜூன் ஆறாம் நாள் மாலை 4 மணிக்கு சென்னைத் தலைநகரிலும், தமிழக முழுவதும் அமைதிப் பேரணி நடத்திடுமாறு முடிவு அறிவித்துள்ளது.

கறுப்புச் சின்னங்களை அணிந்து, கரங்களில் கறுப்புக் கொடிகளை ஏந்தி - இலங்கைத் தமிழினம் அழிக்கப்படுவது கண்டு எம் இதயம் இரத்தக்கண்ணீர் வடிக்கிறது என்பதை இந்திய நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல - உலக நாடுகள் அனைத்துக்கும் அறிவிக்க ஆயிரம் - பத்தாயிரம் - இலட்சம் என்று கருங்கடல் பொங்கி எழுந்து ஊர்களில், நகர்களில் நுழைந்தது போல் ஜூன் ஆறாம் நாளன்று எங்கெங்கும் அமைதி வழியில் மவுனப் பேரணிகள் நடைபெற வேண்டும்.

பேரணி முடிவில் பேரணிக்குத் தலைமை தாங்குவோரில் ஓரிருவர் உரை நிகழ்த்தப் பேரணியை நிறைவு செய்வது தவிர எந்தவித ஒலிமுழக்கமும் ஊர்வலத்தில் இருத்தல்கூடாது! இலங்கைத் தமிழ்இனம் அழிக்கப்படுவதைக் கண்டித்து அனுதாப - மவுன ஊர்வலம் என எழுதப்பட்ட ஓரிரு பதாகைகளும் - பெரிய அளவிலான கழகத்தின் கொடி; அதுவும் ஒரே ஒரு கொடியை மட்டும் ஊர்வல முகப்பில் ஒருவர் ஏந்திச்செல்வதும் தவிர; மற்றவர் கரங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடிகளே இருந்திடல் வேண்டும்.

1983 முதல் கழகம் தொடர்ந்து எடுத்துச் சொல்லி வந்த எந்தக் கருத்து ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களாலும் - ஒரு சில மாற்றுக்கட்சிப் பத்திரிகைகளாலும் கண்டிக்கப்பட்டு

எள்ளி நகையாடப்பட்டதோ; அந்தக் கருத்தை இப்போது செயல்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை இந்தியாவுக்கு என்ற நிலை பிறந்து விட்டது!

இலங்கையில் தமிழ் இனப்படுகொலையைத் தடுக்க, இந்தியா - ராணுவ ரீதியில் தலையிட்டாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

இது; இரண்டொரு நாட்களுக்கு முன்பு நமக்கு மாற்று முகாமிலேயுள்ள மாலை நாளேடு ஒன்று முதல் பக்கத்தில் எழுதிய திட்டவட்டமான தீர்க்கமான கருத்து!

இந்தக் கருத்து கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட போது எள்ளி நகையாடியவர்கள், ஏகடியம் புரிந்தவர்கள் - இன்றைக்காவது உண்மை நிலையை உணர்ந்து கொண்டு எழுதுகிறார்களே; பேசுகிறார்களே என்கிற போது நமக்கு ஒரு வகையில் பெரும் ஆறுதல் ஏற்படத்தான் செய்கிறது!

பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் சாவை முன் கூட்டியே தடுத்து நிறுத்தக் கூடிய அளவுக்கு கால தாமதமின்றி - விரைந்து இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இந்திய அரசு நடவடிக்கை எடுத்திருந்தால் ஈழத்தமிழின அழிவைத் தவிர்த்திருக்க முடியும்.

இப்போது மிச்சமிருக்கிற இலங்கைத் தமிழ் மக்களையாவது காப்பாற்ற -அழிவிலிருந்து பாதுகாக்க - இந்தியா என்ன செய்யப் போகிறது? என்ற கேள்வி வானத்துக்கும் பூமிக்குமாக வடிவெடுத்து நிற்கிறது!

அப்பாடா, இதையாவது செய்தார்களேயென்று கண்ணீர் நனைந்த பெருமூச்சுக் காற்றைத் தாய்த் தமிழகத்தார் விடுத்திடும் வகையில் படகுகளில் உணவு, மருந்து பொருள்களை இந்திய அரசு, செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு அனுப்புவதாகத் தெரிவித்தது!

ஆனால் அந்த முயற்சியும் சில மணி நேரங்களில் பொடிப் பொடியாகப் போய்விட்ட செய்திதான் செந்தேளாக நமது செவிகளில் கொட்டி சிந்தை நோகச் செய்து விட்டது!

இலட்சக்கணக்கான அகதிகளை இந்தியாவுக்கு அனுப்புகிற அளவுக்கு வெறியாட்டம் நடத்துகிற ஜெயவர்த்தனே - இந்தியாவிலிருந்து இலங்கையில் பாதிக்கப்படும் தமிழர்களுக்கு அனுப்புகிற உணவு மருந்து போன்ற உதவிகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதற்கு மட்டும் உலக நாடுகளுக்கிடையேயுள்ள சட்டத்தைப் பேசுவது விந்தையானது! வேதனையானது! இரத்தம் சொட்டும் நாக்கோடு வேங்கை பேசும் வேதாந்தம் போன்றது!

வட்ட மேசை திம்பு பேச்சு
டெல்லி பேச்சு
பெங்களூர் பேச்சு

இப்படிப் பேச்சுக்காட்டியே; இலங்கைச் சிங்கள அரசு தனது வலிமையைப் பெருக்கிக் கொள்ள வழி செய்து கொண்டது!

முள் மரத்தை இளையதாக இருக்கும் போதே வெட்டிவிட வேண்டும் - அது முதிர்ந்து வளர்ந்து விட்ட பிறகு; வெட்டு கின்றவரின் கரங்கள் வலியெடுக்கும் என்பதை;

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து

என்ற குறள் பகைத்திறம் தெரிதல் என்னும் அதிகாரத்தின் வாயிலாக விளக்குகிறது.

எப்படியோ முள் மரத்தை வலிமையோடு வளர விட்ட தவறைச் செய்தாகி விட்டது! இனியாவது அதனை வெட்டி வீழ்த்த வேண்டாமா?

இந்த வினாவுக்குரிய விடையை இந்திய அரசு செயல் வடிவமாகக் காட்ட வேண்டும்.

அந்த அக்கறையுடன் இந்திய அரசு செயல்படுமானாலும் - அல்லது செயல்படத் தவறினாலும் - செயல்பட வேண்டிய காலக் கட்டாயம் ஏற்பட்டுள்ளதை எடுத்துக் காட்டுபவைதான் ஜூன் 6 தமிழக முழுதும் நடைபெற இருக்கிற மவுனப் பேரணிகளாகும்!

ஜூன் 6க்குள் இந்திய அரசு, இலங்கைத் தமிழர்களைக் காத்திட உரிய நடவடிக்கை மேற்கொண்டு விட்டால் அந்த நடவடிக்கைக்கு ஆதரவாக - வலிமை சேர்க்க - நமது மவுனப் பேரணி அமையும்!

இந்திய அரசு இதற்கு மேலும் (Sleeping Giant) உறங்கும் பூதமாக இருக்குமானால் - அதனைச் சூழ்ந்து எழுப்பும் பெரு முயற்சியாக நமது மவுனப் பேரணி அமையும்!

எனவே, உடன்பிறப்பே - ஜூன் 6ஆம் நாள் மாலை எந்த வேலையிருந்தாலும் - அது எவ்வளவு தவிர்க்க முடியாத வேலையாக இருந்தாலும் - ஒதுக்கி வைத்து விட்டு - குடும்பம் குடும்பமாகப் பேரணிகளில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்!

கண்ணீர் வடிக்கும் உரிமையை யாரும் பறித்துக் கொள்ளவில்லை!

கண்ணீர் சாதாரணமல்ல! அதற்கெனப் பெரும் சக்தி உண்டு!

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே

செல்வத்தைத் தேய்க்கும் படை

எனக் கொடுங்கோலர்களுக்குக் குறள் எச்சரிக்கை விடுத்துள்ளதை நினைவில் கொள்க!

நெடுங் கடலென - ஆம்; கருங் கடலெனப் பொங்கி எழுக! கண்ணீர்க் கடலாய்க் குமுறி எழுக!

அன்புடன்

மு.க.

05-06-1987

1508. குமுறும் தமிழகத்தின் கொந்தளிப்பைக் காட்டிட வா! வா! வா!

உடன்பிறப்பே,

உணவு, மருந்துகள் போன்ற பொருள்களை ஏற்றிச் சென்ற படகுகள் இலங்கையின் மிரட்டல் கண்டும் கேட்டும் உடனடியாகத் திரும்பி விட்ட செய்தியினால் இந்தியா முழுமையுமுள்ள மக்கள் தலைகுனிந்தார்கள். டெல்லியின் மானமே பறிபோய் விட்டதான உணர்வு; மனத்தைக் குடைந்தது. நாடு முழுவதும் இந்தியாவின் திட்டமிடப்படாத குழப்பமான ராஜதந்திரத்தை எள்ளி நகையாடக் கூடிய சூழல் ஏற்பட்டது. இப்படி இந்து போன்ற ஏடுகள் இதயம் வெதும்பி செய்தி வெளியிடக்கூடிய அளவுக்கு படகுப் பயணம் அமைந்தது என்றாலும் - முகத்தில் பூசப்பட்ட கரியைத் துடைத்துக் கொள்ளும் அவசர முயற்சியான இந்திய விமானங்கள் உணவுப் பொட்டலங்களைச் சுமந்து சென்று இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வானத்திலிருந்து வழங்கி விட்டு வந்திருக்கின்றன.

நீண்ட நெடிய நிலப்பரப்பும் பெருத்த இராணுவ வலிமையும் கொண்ட இந்தியா; கரிபூசப்பட்ட முகத்தைக் கழுவிக் கொள்வதற்காக மட்டும் ஒரு நாள் நிகழ்ச்சியாக இந்தச் செயலைச் செய்திருக்குமானால் - அது; சடுகுடு விளையாட்டில் கோடு தாண்டி வந்து மூச்சடக்கிச் சிறிது நேரம் ஆட்டம் காட்டிவிட்டு, எதிர் தரப்பில் யாரையும் அவுட் ஆக்கி வீழ்த்தாமல் திரும்பத் தன் அணியினை நோக்கி ஓடிவந்து விடுவதைப்போன்ற ஒன்றாகத்தான் கருதப்படும்!

விமானங்களில் இருந்து விழுந்த பொட்டலங்களை பசியால் துடித்துக் கொண்டிருந்த தமிழர்கள் பறந்தோடி வந்து எடுத்துப் புசித்தனர் என்ற செய்திகளைப் படிக்கும்போது என்ன தோன்றுகிறது?

42224

தி.மு.க. அறக்கட்டளை பொதுநிதியர் அலுவலகம்

பல நாள் பட்டினி கிடக்கிறார்கள் பரிதாபத்திற்குரிய நம் தமிழர் என்ற உண்மை தானே வெளிப்படுகிறது... இன்று நேற்றல்ல; இது ஒருநாள் ஏற்பட்ட வெள்ளக் கொடுமையின் விபத்தல்ல! பல மாத காலமாக - அதிலும் குறிப்பாக இந்த ஆண்டு மே மாதம் 20-ந் தேதியன்று சிங்கள இராணுவம் தனது முழு சக்தியோடு யாழ் பகுதிகளைத் தாக்கத் தொடங்கியது முதல் ஈழத் தமிழர்கள் - கும்பி எரிந்திட குடல் கருகிடக் குழிகளுக்குள் குழந்தை குட்டிகளுடன் பதுங்கிக் கொண்டு பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள் - அந்தச் சாவைத் தடுத்திடுவதற்கு இந்தியா விமான மூலம் செய்துள்ள ஒரு நாள் உதவி; நிச்சயமாகப் போதுமானதல்ல!

அடுத்து உடனடியாக எடுக்க இருக்கும் உறுதியான நடவடிக்கைக்கு இது ஒரு ஆரம்பமாக இருக்கும் என்ற நம்பிக்கை யோடுதான் கழகத்தின் சார்பில் இந்திய அரசின் இந்த முயற்சியை நான் வரவேற்று அறிக்கை விடுத்துள்ளேன்.

அறுவை சிகிச்சைக்கு நாளும் நேரமும் குறித்து விட்ட நிலையில் - நோயாளிக்கு வலி தீர்க்கத் தற்காலிகமாக மருந்து தடவி விடுவது போலத்தான் இந்தியா செய்துள்ள ஒரு நாள் உதவியைக் கருத முடியுமே தவிர; வெற்றி! வெற்றி! என்று முழக்கமிடவோ விடுதலைபெற்று விட்டது தமிழ் ஈழம் எனக் களிப்படையவோ - எதுவும் இப்போது நடைபெற்று விடவில்லை!

ஈழத்தில் பசிப்பிணி ஏன் வந்தது? பட்டினிப் பட்டாளம் ஏன் பெருகிற்று?

கடந்த நாலாண்டு காலமாகக் கொஞ்சம் கொஞ்சமாக - ஆனால் மொத்தத்தில் ஏராளமாகத் தமிழர்களை மடியச் செய்து, மானபங்கப்படுத்தி, தட்டிக் கேட்க இந்தியா தயாராயில்லை என்ற தைரியத்தில் சிங்கள அரசு நடத்திய இனநாசத்தின் உச்ச கட்டமாக மே 20 தொடங்கி இன்று வரையில் தமிழர்கள் மீது நடத்துகிற யுத்தத்தின் விளைவல்லவா; தமிழ் இனம் ஈழத்தில் பசியால் பட்டினியால் துடித்து அழிவது?

பசிக்கு உணவு; அதுவும் ஒரு நாள் உதவி போதாது; நீண்டநாட்களுக்கு அளித்திட இந்தியா முயற்சி எடுத்தாலும் - பசி தீர்க்கும் வரம் மட்டும் ஈழத்தமிழர் கேட்கவில்லையே!

அவர்கள் உயிருக்கு உத்திரவாதம் அல்லவா முக்கிய பிரச்சினை! அந்த உத்திரவாதம் அளிக்க இந்தியா எடுக்க இருக்கும் உறுதியான நடவடிக்கை என்ன?

விமான மூலம் உணவுப் பொட்டலங்களை வழங்கப் போகிறோம் - என இலங்கைத் தூதரிடம் முன்னதாக இந்தியா அறிவித்து விட்டு, செயல்பட்டிருக்கும் போது; இந்தியா இப்படிச் செய்தது அட்டூழியமான காரியம் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

எது அட்டூழியம்? எங்கள் சொந்தச் சகோதர சகோதரிகளை மிதித்துத் துவைத்துக் கொளுத்திக் கொடுமைப்படுத்தி, சுட்டுச் சாம்பலாக்கி - அய்யோ! அம்மா! என்ற கூக்குரல் ஈழத்தமிழ் நிலத்தில் எந்நேரமும் கேட்கச் செய்திடும் ஜெயவர்த்தனா அரசு புரிவதன்றோ அட்டூழியம்?

இந்நேரம் அந்த அட்டூழிய அரசுக்குப் பாடம் கற்பித்து - தமிழ் ஈழ சுதந்திரக் கொடியைப் பறக்கவிடச் செய்வதற்கு நாலாண்டு காலமாக நடவடிக்கை எடுக்கத் தயங்கி - இப்போது உணவுப் பொட்டலங்களையாவது விமான மூலம் வழங்க இந்தியா முன் வந்துள்ளதே; இதுவா அட்டூழியம்?

இலங்கைக்குப் பறந்து வந்து உணவுப் பொட்டலங்களைப் போட்டுவிட்டுக் கோழைத்தனமாக ஓடிவிட்டார்கள்

என்று இலங்கைப் பிரதமர் பிரேமதாசா பேசியுள்ள ஏகடியத்துக்கு இந்தியா; வீரத்தனமாக விடையளிக்கப் போகிறதா; அல்லது இலங்கைப் பிரதமரின் கொழுப்பு நிறைந்த பேச்சுக்கேற்ப நடந்து கொள்ளப் போகிறதா?

இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் தீட்சித்; இன்னமும் இந்தியாவும் இலங்கையும் நட்பு நாடுகள்தான்! என்று நேற்றுகூட அறிவித்திருக்கிறார்.

இன்னமும் நட்பா?
இதற்கு மேலும் உறவா?
ஈழத்தமிழர் சமாதியின் மீது
இலங்கை இந்தியா நேசக் கொடியா?

இதோ; இந்த வாரம் ஆனந்தவிகடன் தலையங்கத்தில் இறுதியாகக் காணப்படும் வாசகம் வருமாறு:-

சகோதரர்களின் மரண ஓலத்தை
மிக அருகாமையில் கேட்டும்,

எதுவும் செய்ய முடியாமல் கையைப்
பிசைந்து கொண்டு தமிழக மக்கள்
புலம்புகிறார்கள். அதட்டினாலோ
மிரட்டினாலோ சிங்கள அரசுக்கு
இனி உறைக்காது என்பது மத்திய
அரசுக்கு நன்கு தெரிந்தும் சும்மா
இருப்பது கையாலாகாத்தனம்

குமுறும் தாய்த் தமிழகத்தின் உணர்வினை வெளிப்படுத்த கொந்தளிக்கட்டும் எங்கெங்கும் கருங்கடல்! வா! வா! வா!

அன்புடன்

மு.க.

06-06-1987

1509. கடமை உணர்த்தும் கழகப் பொதுத்தேர்தல்!

உடன்பிறப்பே,

கழக அமைப்புக்களுக்கான பொதுத் தேர்தல் முதல் கட்டம் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முப்பது லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்ட நாற்பதாயிரம் கிளைக் கழகங்களின் தேர்தலுக்கான ஆயத்தங்கள்; தலைமைக் கழகத்திலும் மாவட்டக் கழகங்களிலும் செய்யப்பட்டு - தேர்தல் விதிமுறைகள் அறிவிக்கப்பட்டு; எல்லா இடங்களிலும் கிளையமைப்புகளின் தேர்தல் செம்மையாக நடைபெறுவதற்கு ஏற்ற வண்ணம் ஆணையாளர்கள் கடமையாற்றுமாறு பணிக்கப்பட்டு மிகப் பிரம்மாண்டமான ஜனநாயகப் பணி கழகத்தின் அடித்தளத்திலிருந்து ஆரம்பமாகி விறுவிறுப்புடன் அமைந்துள்ளதைக் காணும்போது களிபேருவகை கொள்கிறேன்.

பல்வேறு மாவட்டங்களில் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருக்கும் போதும், அன்றாடம் சென்னையில் தலைமைக் கழகத்திற்குச் சென்றிடும் போதும் கிளைக் கழகத் தேர்தல் பற்றி வருகின்ற செய்திகள் - தாங்கள் விரும்புகிற நிர்வாகிகளுக்கு வாக்களிக்க ஆவலுடன் தேர்தல் நடைபெறும் இடங்களில் குழுமிடுகின்ற உறுப்பினர்கள் காட்டுகின்ற ஆர்வம் - கழக அமைப்பெனும் பாசறைப் பொறுப்புகளை ஏற்றிடத் தொண்டுள்ளம் கொண்ட உடன்பிறப்புகள் பம்பரமெனச் சுழன்று பணியாற்றிடும் தகவல்கள் - இவற்றுக்கிடையே ஓரிரு இடங்களில் சுட்டிக்காட்டப்படுகிற குறைபாடுகள் - அவற்றை உடனடியாகத் தீர்த்து வைக்கத் தலைமைக் கழகத்தில் எடுக்கப்படும் விரைவான முயற்சிகள் - அனைத்தையும் பார்ப்பது கேட்பது மட்டுமல்ல; அப்பணியில் என்னையும் இணைத்துக்கொள்ளும்போது எத்துணை பூரிப்பு ஏற்படுகிறது - எவ்வளவு உற்சாகம் கரைபுரள்கிறது!

1949-ஆம் ஆண்டு அண்ணா அவர்களால் கொட்டும் மழையில் நீர்சொட்டும் கண்களுடன் உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் இயக்கமாகத் தனது இலட்சியப் பயணத்தைத் தொடங்கி, இன்றைக்கு அண்ணா வழியில் அயராது தொடர்ந்து உழைத்து, அவரது அடியொற்றிச் செயல்புரிந்து முப்பது லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இயக்கமாக வளர்ந்து வலிமை பெற்றிருக்கிறது.

செந்நீரும் கண்ணீரும் வளர்த்த கழகம் என்று நமது அண்ணன் குரல் தழுதழுக்க எத்தனையோ முறை சொல்லக் கேட்டு உணர்ச்சிப் பிழம்பாக ஆகியிருக்கிறோம்.

ஜனநாயகத்தை எல்லா முனைகளிலும் நிலைநாட்ட வேண்டும் என்பதில் அசைக்க முடியாத உறுதி பூண்ட கழகம்; அடிமட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் தனது அமைப்புகள் அனைத்தும் ஜனநாயக முறைப்படி உருவாக வேண்டுமென்பதிலும் - இயங்க வேண்டுமென்பதிலும் அக்கறை மிகக் கொண்டுள்ள காரணத்தினால்தான் கழகத்திற்கென வகுக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களின் படியும் விதிமுறைகளின் படியும் கழகத்தின் எட்டாவது பொதுத் தேர்தலை இப்போது நடத்துகிறது.

கிளைக்கழகச் செயலாளர் பொறுப்புக்கு யார் தேர்ந்தெடுக்கப்படுவது என்பதிலிருந்து - கழகத்தின் தலைமையை இயக்குவதற்குத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் யார் என்பது வரையில் அண்ணா காலத்திலிருந்து இன்று வரையில் ஜனநாயக முறையையே நமது கழகம் கடைப்பிடித்து வருகிறது.

கிளைக்குச் செயலாளர் யார்? ஒன்றியத்துக்கு யார்; மாவட்டத்துக்கு யார்; தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்? என்றெல்லாம் என்னையோ பேராசிரியரையோ கேட்டால் - இவர்தான் அல்லது அவர்தான் என என்றைக்கும் கூறக்கூடியவர்கள் அல்ல நாங்கள்!

ஆனால் நாங்கள் சொல்லுவோம்; எத்தகையோர் அந்தப் பொறுப்புகளுக்குத் தக்கவர்கள் என்று!

அதாவது யாருடைய பெயரையுமல்ல!

பிறகு யாரை? எவரை?

யார் முழுநேரமும் பம்பரமெனச் சுழன்று ஓய்வறியாது உழைக்கக் கூடியவர்களோ - யார் அடக்குமுறைகளுக்கு அஞ்சாதவர்களோ - யார் மாற்றாரின் மிரட்டலுக்கு இமை கொட்டுவது கூட கோழைத்தனமென்று கருதுகின்றவர்களோ - யார் கழக உடன்பிறப்புக்கள் அனைவரையும் அரவணைத்துக் கண்போல் காத்திடும் உளப்பக்குவம் கொண்டவர்களோ - யார் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றக் கூடியவர்களோ - யார் எந்தநிலையிலும் சலனப்படவோ; சபலத்திற்குப் பணியவோ மறுக்கும் மனோதிடம் கொண்டவர்களோ - அவர்களில் ஒருவர்தான் அடித்தளத்திலிருந்து மேல்தளம் வரையில் உள்ள பொறுப்புகளுக்கு வர வேண்டுமென்பதே எங்கள் எண்ணமாக இருக்க முடியும்.

உடன்பிறப்பே; என்னாலே கூட இத்தனை தகுதிகளையும் பெற இயலாத அளவுக்கு உடல் நிலையோ - வயதோ - சூழ்நிலையோ குறுக்கிடுகிறது என்றால் எனக்குப் பதிலாகவும் வேறு ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உன்போன்றவர்க்கு உரிமை அளித்திருப்பதே கழகம் கட்டிக் காத்துப் போற்றிவரும் ஜனநாயகத் தத்துவமாகும்.

வாக்குகளை அதிகம் பெற்றுவிடுவதாலேயே ஒன்றியக்கழகம் நகரக்கழகம் போன்ற நிர்வாகப் பொறுப்புக்கு வந்துவிடும் ஒரு சிலர் அந்தப் பொறுப்பிற்குரிய பணிகள் எதையும் ஆற்றிடாமல் பலமுறை தலைமைக் கழகத்தினால் விளக்கம் கேட்கப்பட்டு, கழகப் பணியினைப் பொறுப்புடன் ஆற்றக்கூடியவர்களிடம் அந்த அமைப்புகளின் நிர்வாகப் பணியாற்றும் கடமை ஒப்படைக்கப்பட்ட ஒரு சில நிகழ்வுகளும் கடந்த காலங்களில் தவிர்க்க முடியாததாகிவிட்டதும் உண்டு.

அக்குறை மீண்டும் நேராதவாறு; வாக்களித்து தேர்ந்தெடுப்போரும் - வேட்பாளராகப் பொறுப்புகளுக்குப் போட்டியிடுவோரும் பார்த்துக்கொள்வது கழக வளர்ச்சிக்கும் வலுவுக்கும் ஏற்றதாகும்.

கழகப் பணியாற்றுவதற்கு நான் முந்தி - நீ முந்தி என்ற நிலையில் போட்டிகள் கழக அமைப்பின் தேர்தல்களில் இருந்திட வேண்டுமேயல்லாமல் உட்பகை என்பது ஒரு

துளியளவும் தலைகாட்டிடக் கூடாது. அப்படிப் பகை பாராட்டுவோர் யாராயினும் அவர்கள் தங்களையுமறியாமல் கழகத்தின் வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக விளங்குகிறார்கள் என்றே - வெளியில் சொல்லாவிடினும் - மனதுக்குள் வேதனைப்பட்டு நான் வெந்து நொந்து போவேன் என்பதையும் என்னையறிந்த உடன்பிறப்புகள் நன்றாகவே உணர்வர்!

உணர்ந்தும் என் உள்ளம் நோகும் நிகழ்ச்சிகள் நடைபெறக் காரணமாயிருப்போர் யாராயினும் அவர்கள்; கழகத்தின் வேரில் வெந்நீர் ஊற்றுபவர்களாகவே கருதப்படுவர்.

ஜனநாயகத்தின் மாண்பு குலையாமல் போற்றிப் பாதுகாக்கும் தி.மு.கழகம் போன்ற ஒரு பெரும் அமைப்பில் பல்வேறு பொறுப்புகளுக்கும் வந்திடப் போட்டிகள் இருக்கத்தான் செய்யும், அட்ஹாக் கமிட்டி அமைத்து அரசியல் கட்சி நடத்துபவர்களல்ல நாம்!

எனினும் அமைப்புகளுக்கான தேர்தல் போட்டி, இயக்கத்தின் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்க வேண்டுமே தவிர, நலிவுக்கு எள் முனையளவும் காரணமாக இருந்திடலாகாது!

தனிப்பட்டோர் விருப்பு வெறுப்புக்குக் கிஞ்சிற்றும் இடம் தராமல்; பந்தய மைதானத்தில் பரிசைத் தட்டிச் செல்வோர் - பரிசைப் பெற முடியாதோர் இருவரிடையே நாகரிகமாக விளைகிற நட்புணர்வு போலவே கழகஅமைப்புகளின் தேர்தல் முடிவிலும் வென்றோருக்கும் வெற்றி வாய்ப்பை நழுவ விட்டோருக்கும் இடையிலே நல்லுணர்வு தோன்ற வேண்டும். அதுவே கழகத்தை அசைக்க முடியாத அரணாக ஆக்கிடும் மகத்தான சக்தியாகும்.

ஏற்கெனவே பொறுப்புகளில் இருப்போர் மீண்டும் பொறுப்புகள் ஏற்றிட விரும்பிப் போட்டியிடும்போது - இருக்கின்ற பொறுப்புக்குரிய உரிமைகளை எந்த வகையிலும் தவறான வழியில் பயன்படுத்தக்கூடாது என்பதை நானும் நமது பேராசிரியரும் திட்டவட்டமாக அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

குறிப்பாகத் தலைமைக் கழகத்தின் செயலாளர்களாகவோ தலைமைக் கழகக்குழு உறுப்பினர்களாகவோ இருப்போர்

தங்களுக்குத் தொடர்புடைய மாவட்டங்களிலோ அல்லது பிற பகுதிகளிலோ - கழகத்தின் தேர்தலில் கடும் போட்டிகள் எழுந்து அதன் தொடர்பாக கசப்பு உணர்வுகள் உருவாகும் நிலையைத் தவிர்த்திட முயற்சிகள் மேற்கொள்ளவேண்டுமே தவிர அவர்களே தலைமைக் கழகச் செயலாளர்கள் அல்லது குழு உறுப்பினர்கள் எனும் பொறுப்பில் இருந்துகொண்டு போட்டியிடுவோரில் ஒரு அணியினரை ஆதரிக்கும் நிலை ஏற்படக் கூடாது என்பதும் கழகக் கட்டுப்பாட்டுக்கு மிக மிக முக்கியமானதாகும். இது கழகத்தில் உள்ள மூத்த முன்னோடிகளுக்கும் பொருந்தும்!

அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு இடங்களில் தவிர - பொதுவாக எல்லா அமைப்புகளிலும் போட்டியிடும் கழக உடன்பிறப்புகள் எத்தனை அணியினராக நின்று போட்டியிட்டாலும் அனைவருமே கழகமெனும் இந்தப் பாடி வீட்டின் பட்டாளத்துச் சிப்பாய்கள்தான்! அடக்கு முறையேற்றுச் சிறை ஏகிய அடலேறுகள்தான்! கழகம் கட்டளையிட்ட காலத்தில் எல்லாம் களம் கண்டு விழுப்புண் ஏற்ற வீரர்கள்தான்! கழகத்திற்குற்ற வாழ்வு தாழ்வு எதுவாயினும் கலங்காது தயங்காது கொட்டியும் ஆம்பலும் போல் ஒட்டி உறவாடுகிறவர்கள்தான்!

எனவே கழகம்; தொடர்ந்து போற்றிவரும் ஜனநாயக மாண்பின் வழியில் அமைப்புகளுக்கான இந்தத் தேர்தல் நடைபெறுகிறது என்பதை மனதிற் கொண்டு விருப்பு வெறுப்பு இவற்றுக்குத் தினையின் முனையளவுகூட இடம் தராமல்;

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்ற குறளுக்கேற்பக் கழகத்தின் எல்லா மட்டத்திலு முள்ளோரும் - வாக்களிக்கும் உரிமை பெற்ற உறுப்பினர்களும் - செம்மையாகச் செயல்பட வேண்டுகிறேன்!

இந்திய நாட்டு ஜனநாயகம் காக்கும் போராட்டத்தில் - தியாகவேள்வியில் குதித்து ஆட்சியையே விலையாகக் கொடுத்துச் சொல்லொணாச் சோதனைகளை ஏற்றுக் கொண்டது நமது கழகம்!

இன்றும் சிற்றூர் முதல் பேரூர் நகரமெனவும் - ஏன்; தமிழக முழுவதும் - சொல்லப் போனால் இந்திய நாடு முழுமைக்கும் ஜனநாயகத்தின் அடித்தளம் குலையாமல் பாதுகாக்கும் அரணாகச் செயலாற்றுவது நமது கழகம்!

இந்தக் கழகத்திற்குள் நடைபெறும் அமைப்புத் தேர்தல்களையும் ஜனநாயகத்தின் வளப்பம் சற்றும் சிதையாமல் நடத்தி முடிப்பதே பெருமைக் குரியதாகும் என்பதை உணர்ந்து கடமையாற்றிட வேண்டுமெனக் கழகக் கண்மணிகளாம் உன் போன்ற உடன் பிறப்புகள் அனைவரையும் உரிமையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்

மு.க.

27-06-1987

1510. எம்.ஜி.ஆரின் திடீர்த் தமிழர் உணர்வு!

உடன்பிறப்பே,

இன்று குடியரசுத்தலைவர் தேர்தல் நடைபெறுகிறது. மத்திய அரசின் ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரஸ் சார்பில் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களும், எதிர்க்கட்சிகளின் சார்பில் திரு. கிருஷ்ணய்யர் அவர்களும் களத்தில் நிற்கிறார்கள்.

ஆர்.வி.யின் வெற்றிக்கான வாய்ப்புக்களே அதிகம் என்பது பாராளுமன்றத்தில் இந்திரா காங்கிரசுக்கு உள்ள மிகப்பெரும்பான்மையின் அடிப்படையிலே அனைவரும் யூகிக்கக் கூடிய ஒன்றேயாகும். இருப்பினும் இந்தப் போட்டியில் கணிசமான ஆதாயம் பெறவேண்டுமென்று கணக்கிட்டுக் கொண்ட தந்திரசாலிகள் சிலர்; பல்வேறு கற்பனைப் பயமுறுத்தல்களைச் செய்து; ஏடுகளில் அவ்வாறு எழுதவும் செய்து கோடிக்கணக்கான ரூபாய்ச் செலவினை இந்திரா காங்கிரஸ் தலைமைக்கு ஏற்படுத்தித் தங்கள் சூழ்ச்சியில் வெற்றி பெற்று மேலும் தங்கள் குடும்ப வசதிகளைப் பெருக்கிக் கொண்டு விட்டிருக்கிறார்கள்.

தங்கள் கட்சியின் ஓட்டுரிமையுள்ள உறுப்பினர்களைக் கூட்டி; உங்கள் மீது எனக்குச் சந்தேகமில்லையென்றாலுங் கூட; எதற்கும் இந்தப் பொட்டலங்களை வைத்துக் கொள்ளுங்கள் என்றாராம் அந்தக் கட்சியின் மூலவர்!

என்னங்க இது? எங்கள் மீதே நம்பிக்கையில்லையா? வேண்டாங்க இந்த பொட்டலம்! என்று தலையை ஆட்டி மறுத்துக் கொண்டே கையை மட்டும் நீட்டிக் கொண்டிருந்தார்களாம் அழைக்கப்பட்டவர்கள்!

நானா கொடுக்கிறேன்? மேலேயிருந்து வந்தது! அப்படி வந்தது ஆளுக்கு ஐந்து என்றால்; அதில் ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல் உங்களுக்குத் தருகிறேன். மிச்சத்தை எத்தனையோ கல்யாணம் காட்சிகளுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற

உண்மையைக் கூறி பொட்டல உபயத்தை உடனடியாக முடித்து வைத்து வாழ்த்தி வழியனுப்பினாராம். இப்படி லட்சங்கள் அள்ளி வழங்கப்பட்ட நிகழ்ச்சி விபரத்தை, அந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற ஓரிருவரே வெளியில் சொல்லி வேதனைப்பட்டிருக்கிறார்கள்! ஒருவேளை ஐந்தில் இரண்டுதானே கிடைத்தது என்ற விசாரமாகக்கூட இருக்கலாம்!

ஜனநாயகக் கடமையை நிறைவேற்றப் பொறுப்புள்ள எதிர்க்கட்சிகளின் சார்பில் திரு.கிருஷ்ணய்யர் அவர்களை வேட்பாளராக நிறுத்தியுள்ளது தவிர்க்க முடியாத ஒன்று என்பதை ஜனநாயக மாண்பினை உணர்ந்தோர் அனைவரும் அறிவர். எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் கலந்துபேசி போட்டியைத் தவிர்த்து ஒரு பொதுவான வேட்பாளரை நிறுத்தப் போவதாக பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் முதலில் அறிவித்து; அதனை ஒரு நாடகமாக; அதுவும் அரைகுறை நாடகமாகவே முடித்து விட்டார்.

தி.மு.கழகத்தை அழைத்து அவர் பேசியிருந்தால் அவர் கூறும் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ; அதுவேறு விஷயம் - ஆனால் அவர் கழகத்தை அழைத்துப் பேசவில்லை. கழகத் தலைவர் என்ற முறையில் என்னை சந்திக்கப் பிரதமர் விரும்பினார். அந்தத் தகவலை தொலைபேசியில் ஒட்டுக் கேட்ட போலீஸ் அதிகாரிகள் உடனே அதனைப் பரபரப்புடன் உரியவரிடம் தெரிவிக்க; பாவம்; அவர் பதைபதைப்புடன் டெல்லிக்கு ஓடிச் சென்று உடல்நிலையையும் கெடுத்துக் கொண்டு - இந்த விஷயமாக தி.மு.க. தலைவரை டில்லிக்கு ராஜீவ் காந்தியை அழைக்கக்கூடாது என்று ராஜீவ் காந்தியை மிரட்டித் தடுத்து விட்டார். ராஜீவ்தான் என்ன செய்வார்? தென்னகத்தில் கர்நாடகம், ஆந்திரம், கேரளம் மூன்று மாநிலங்களும் கைவிட்டுப் போன பிறகு - தமிழ்நாட்டிலாவது - கிணற்றில் விழுந்தவனுக்குப் பிடித்துக் கொள்ள ஒரு ஓணான் கொடி கிடைத்தது போல கிடைத்துள்ள உதவியையும் உதறிவிட முடியுமா?

அதனால்தானே இந்த மாநிலத்தில் ஜனநாயகத்துக்கு விரோதமாக - தேர்தல் விதிமுறைகளுக்கு மாறாக - அரசியல் சட்டத்துக்கு முரணாக - மரபுகளையெல்லாம் மீறி நடைபெறுகிற பல்வேறு காரியங்களுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி பச்சைக் கொடி காட்டிக் கொண்டிருக்கிறார்!

இவ்வாறு ஜனாதிபதி தேர்தலில் பொது அபிப்பிராயத்தைத் திரட்டுவது என்ற கூத்துக்கு இடைவேளைக்கு முன்பே முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாகிவிட்டது.

கடந்த பொதுத்தேர்தல்; முற்றிலும் அனுதாப அலைவீச்சினால் ஏற்பட்ட விளைவுகளைக் கொண்டதாக அமைந்த காரணத்தினால் பாராளுமன்றத்திலோ - சட்டப் பேரவையிலோ கழகத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை கணிசமான அளவுக்கு பெறமுடியாமல் இந்தக் குடியரசுத்தலைவர் தேர்தலில் கழகத்திற்கு ஒரு முக்கியமான பாத்திரம் இல்லாமற் போய்விட்டது. சட்டப் பேரவையில் இருந்த உறுப்பினர்களிலும் பேராசிரியர் உள்ளிட்ட பத்துப்பேரை - தமிழர்களின் உரிமையை நிலைநாட்டும் மொழிப் போரில் கலந்து கொண்டதைக் குற்றமெனக் கூறி வெளியேற்றிவிட்டது எம்.ஜி.ஆர். அரசு!

இந்தியை ஆதரிக்கும் காங்கிரஸ் ஆட்சியிலே கூட இப்படி ஒரு பழிவாங்கும் காரியம் நடைபெறவில்லை. ஆனால் இந்தி எதிர்ப்பு வேடதாரியான எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழர் நிலை உயர்த்த களம் புகுந்த கழக சட்டமன்ற உறுப்பினர்களைப் பழி தீர்த்துக் கொண்டார்.

இந்தத் தமிழ்ப்பற்றாளர்தான்; 11-ந்தேதியன்று செய்தியாளர்களைச் சந்தித்த போது தமிழர் என்ற உணர்வுக்கே, தன்னை மட்டுமே சொந்தக்காரராக்கிக் கொண்டு பதில் அளித்திருக்கிறார்.

பிரதமர் இவரை அழைத்து டெல்லியில் ஜனாதிபதி தேர்தல் குறித்துப் பேசியதாக செய்தி வந்தபோது டெல்லி நிருபர்கள் இவரைக் கேட்டார்கள்; யாரைப் பரிந்துரை செய்திருக்கிறீர்கள்? என்று!

அப்போது இவர்; தமிழராகிய ஆர். வெங்கட்ராமன் அவர்களைத்தான் பரிந்துரை செய்திருக்கிறேன் என்று கூறவில்லை.

பிறகு என்ன கூறினார்?

பிரதமர் விருப்பம் எதுவோ; அதுவே என் விருப்பம்!

என்று பிரதமரிடம் கூறியிருப்பதாகத்தான் செய்தியாளர் களிடம் சொன்னார்!

இப்போது செய்தியாளர் ஒருவர் கேட்டிருக்கிறார் சென்னையில்!

ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழர் போட்டியிடும் போது அதைத் தமிழ்நாட்டுக்குள்ளிருக்கிற சில கட்சிகள் ஆதரிக்காதது பற்றி உங்கள் கருத்து என்ன?

இந்தக் கேள்விக்கு எம்.ஜி.ஆரின் பதில் இதோ:-

தமிழரை ஆதரிக்கக் கூடாது என்பது அவர்களின் கொள்கை!

இந்தப் பதிலை எம்.ஜி.ஆரே இரண்டு மூன்று முறை தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொள்வது நல்லது!

திரு. கிருஷ்ணய்யர் அவர்கள் தமிழரல்ல; அவர் பாலக்காட்டில் - அதாவது கேரள மாநிலத்தில் பிறந்தவர் - எனவே ஜனாதிபதி தேர்தலில் ஒரு கேரளத்துக்காரரை ஆதரிக்கக் கூடாது என்பது எம்.ஜி.ஆரின் கொள்கையாக இருக்கிறது!

தமிழராகிய - அதுவும் தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்த வெங்கட்ராமன் அவர்களைத்தான் தமிழராக ஒப்புக் கொண்டு அந்தத் தமிழரை ஆதரிக்க வேண்டுமென்பதும் எம்.ஜி.ஆர். பதிலிலிருந்து அவர் கொண்டுள்ள கொள்கையாக விளங்குகிறது!

இந்திய நாட்டு ஜனாதிபதி பல்வேறு மாநிலங்களுக்கும் உரிய ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவர். அந்த வாய்ப்பு ஒரு தமிழருக்குக் கிட்டவேண்டுமென்று கொள்கை வகுத்துக் கொண்டு எம்.ஜி.ஆர். பதில் அளித்திருப்பதைப் பார்க்கும் போது - கேரளத்தில் பிறந்த கிருஷ்ணய்யர் அவர்கள்; அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - சென்னை பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும் சென்னையில் சட்டமன்ற உறுப்பினராகப் பதவி வகித்திருந்தாலும் - எம்.ஜி.ஆரின் கணிப்புப்படி அவர் தமிழர் என்ற பட்டியலில் சேர்க்கப்படவில்லை. இந்தியாவின் மிக உயர்ந்த பதவிக்கு - அதிலும் பல்வேறு மொழிவழி மாநிலங்களடங்கிய துணைக் கண்டத்தின் குடியரசுத் தலைவர் பதவிக்கு எந்த மாநிலத்தவர் வேண்டுமானாலும் வர வேண்டுமென்று வாதாடும் போது - அந்த வாதத்தை மாநில அளவில் முன்வைத்துப் பார்த்தால்; இப்போதாவது - அல்லது இனிமேலாவது இங்குள்ள தமிழர்களுக்குப் புதிய சிந்தனையும் விழிப்புணர்வும் ஏற்படுமென்று எதிர்பார்க்கலாம் அல்லவா? அவ்விதம் எதிர்பார்ப்பது தவறாகாது அல்லவா?

தமிழர் என்பதைவிட தமிழர்க்காக என்ன செய்தார்? என்பதும் முக்கியமில்லையா?

இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கவும் - தமிழ் ஈழம் பெற்றுத் தரவும் - இந்திய அரசு பங்களாதேஷில் மேற்கொண்டது போன்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழகத்தில் குரல் எழுந்த போது - அதனை முட்டாள்தனம் என்று இழித்து பேசியவர் திரு. ஆர்.வி. என்பதை எப்படி மறந்து விட முடியும்?

எம்.ஜி.ஆர். அவர்களே சூசகமாகக் குறிப்பிடுகிறபடி கேரளத்தில் பிறந்த காரணத்தினால் திரு. கிருஷ்ணய்யர் அவர்கள் தமிழர் அல்லாவிடினும் கூட; இலங்கைத் தமிழ் இன மக்களுக்காக உரத்தக் குரல் கொடுத்தவர் என்பதை மறுத்து விட முடியுமா?

உடன்பிறப்பே; 1980 பாராளுமன்றத் தேர்தலில் தென்சென்னையில் ஆர்.வி. போட்டியிட்ட போது; அவர் தமிழர்தானே - அவர் வெற்றிபெற்றால் மத்தியில் முக்கிய பொறுப்பேற்கும் அமைச்சர் வாய்ப்பு இருக்கிறதே என்ற உணர்வு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஏற்படவில்லையே ஏன்? தென்சென்னையில் வெங்கட்ராமன் வெற்றி பெற்று விட்டால் தூக்குமாட்டிக் கொள்வோம் என்று சூளுரைத்து மேடையிலே எம்.ஜி.ஆர். கட்சியின் தளகர்த்தர்கள் முழங்கியதையெல்லாம் இன்றைக்கும் பழைய ஏடுகளில் படித்துப் பார்க்கலாமே!

ஆளும்கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்தியுள்ளது - எதிர்க்கட்சிகள் ஒரு வேட்பாளரை நிறுத்தியுள்ளன - இதில் வெங்கட்ராமன் அவர்களை ஆதரிக்காதவர்கள் எல்லாம் தமிழர் என்ற உணர்வற்றவர்கள் என்பதுபோல எம்.ஜி.ஆர். பதில் கூறியிருப்பது - முதலில் நான் சுட்டிக்காட்டியிருப்பதுபோல எம்.ஜி.ஆர். அளித்துள்ள பதில்; எம்.ஜி.ஆர். அவர்களே; ஒரு முறைக்கு இருமுறை தனக்குத்தானே சிந்தித்து அசைபோட வேண்டிய பதிலாகும்!

அப்படி சிந்தித்து அசைபோடும்பொழுது அ.தி.மு.க.வை சேர்ந்த குடிநீர் வாரியத் தலைவர் உக்கம்சந்தும் ஹீராசந்த் எம்.பி.யும் நினைவுக்கு வராமல் இருந்தால் சரி!

அன்புடன்

மு.க.

13-07-1987

1511. சுதந்திரத்திற்கு ஒரு சுதந்திரம்!

உடன்பிறப்பே,

இந்திய சுதந்திரத்துக்கு இன்று வயது நாற்பது நிறைவெய்துகிறது. வீரசுதந்திரம் பெற்றிட விழுப்புண் பெற்றோர் - விழிகளை இழந்தோர் - உயிரினைத் தந்தோர் - உடைமைகள் பறிகொடுத்தோர் - சிறை வாழ்ந்தோர் - செக்கிழுத்தோர் - கஞ்சிக்கலயம் ஏந்தியோர் - கல்லறையாக மாறினோர் - துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர் - தூக்குக் கயிறை முத்தமிட்டோர் - அனைவரது காலடிகளிலும் அன்றலர்ந்த மல்லிகை மலர் தூவி வணங்குகின்றோம். சிலர் படமாகி விட்டனர். சிலர் சிலையாகி விட்டனர். சிலர் நம் நெஞ்சில் நிலையாகி விட்டனர்.

நெருப்பாக மூண்டெழுந்த அந்நாள் ஆதிக்கத்தை அன்பு நீரூற்றி அணைத்திட்ட பெருமான் காந்தியண்ணல் - அவர் வழி நின்று தாயக விடுதலைக்குத் தன்னலம் துறந்து களம் புகுந்த தானைத்தலைவர் பெருமக்கள் - அணி அணியாய்த் திரண்டெழுந்து அந்நிய ஆட்சிதனைத் தங்கள் வீர மூச்சால் ஊதித் தள்ளிய தியாகச் செயல் மறவர்கள்!

அவரெல்லாம் சிந்திய வியர்வை வெள்ளம் - பெய்திட்ட குருதிமழை - பொழிந்த கண்ணீர் அருவி - சுதந்திரப் பயிருக்கு உரமாகும்!

பயிர் நடுவே களையின்றிப் பாதுகாப்பதற்கும் - நெல்மணிகள் பதராகாமல் பார்த்துத் தடுப்பதற்கும் - நேரம் பார்த்து நீர் பாய்ச்சுவதற்கும் - நோய் நொடிகள், பூச்சி புழு அணுகாமல் விரட்டுவதற்கும் இடைவிடாது பணியாற்ற வருக; எனும் அழைப்பை ஏற்றிட மறுத்தோமில்லை! ஆயினும் உரிய பயன் கண்ட உவகையில் நாடு இருக்கிறதா? என்ற வினாவுக்கு விடையிறுத்திட நிமிர்ந்து நிற்கும் வலிவு முதுகெலும்பிற்கில்லாத நிலையில் இத்துணைக் கண்டத்தை ஆள்வோர் தொங்கிய தலையுடன்தான் காட்சி தருகின்றனர்!

உள்ளம் துள்ளும் நாள் இந்நாள் என்று மகிழ்கின்றோம் - ஆரத்தழுவி அகமலர் கண்டு - முகமலர் ஒத்தி ஆனந்தப்பள்ளும் பாடுகின்றோம்!

இருட்குகையில் நாற்பது ஆண்டுகட்கு முன்பு ஏற்றி வைக்கப்பட்ட விளக்கு!

அதனைப் புயலிலும் பெருமழையிலும் அணையாது என்றும் காக்கின்ற எண்பது கோடி மக்களின் கரங்கள்!

சம்மட்டி பிடித்துத் தழும்பேறிய கரங்கள்! ஏர் ஓட்டிக்காய்ப்பேறிய கரங்கள்! ஆலையின் சக்கரம் சுழற்றிடும் கரங்கள்! நாற்று நடுகின்ற கரங்கள்! நூல் நூற்றுத் தருகின்ற கரங்கள்!

பால்கிண்ணம் ஏந்தும் கரம் - பழரசக் கோப்பை எடுக்கும் கரம் - பாதாம் - பிஸ்தா - பச்சை முந்திரி பொறுக்கும் கரம்; மிக மிகக் குறைவு!

எல்லாக் கரங்களும் இந்திய மண்ணில் முளைத்த கரங்களே! அவற்றிலே சில கரங்களாகவும்; சில மரங்களாகவும் இருப்பானேன்?

ஏற்றத் தாழ்வு இன்னும் இருந்திடவா இந்தச் சுதந்திரம் பெற்றோம் அன்று? இல்லை - இல்லை - இல்லவே இல்லை! இல்லையெனில்; முல்லை நட்ட கொல்லையிலே சுள்ளி முளைப்பானேன்? அது காலில் குத்தித் தொல்லை பல தருவானேன்?

இனி இல்லார் இல்லை - கல்லார் இல்லை - நல்லார் மீது பாய்கின்ற வல்லார் இல்லை - எங்கும் புதுமை, எதிலும் புதுமை, அனைத்தும் பொதுவுடைமை என்றுதானே ஆர்த்தெழுந்தது விடுதலை முரசம்!

எல்லோர்க்கும் விடுதலையென்றுதானே பாரதி பாடினார் - விடுதலைக்குப் பிறகுள்ள நிலை கண்டு விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும் என வேதனைக் கவிதை எழுதுமளவுக்குப் பாவேந்தர் பாரதிதாசனைக் கொண்டுபோய்த் தள்ளியது; சாதியிருக்கின்றதென்பான் இருக்கின்ற நிலைமையும் - தம் கையில் கிடைத்தவற்றைச் சுருட்டுகின்ற தன்மையும் - பாரதப் பெருநாட்டில் பல்லக்கில் ஏறிக் கொண்டதால் அல்லவா?

அணுகுண்டால் அழிந்துபட்டதென்று அறிவிக்கப்பட்ட சுண்டைக்காய் நாடு ஜப்பான் இன்று இந்தியாவுக்குக் கடன் கொடுக்கிறது! கொடுக்கிற நாடாக ஜப்பானும் - வாங்குகிற நாடாக இந்தியாவும்!

நாற்பது ஆண்டுச் சுதந்திரத்திற்குப் பிறகு ஏட்டிலே காட்டப்படுகிறது ஏராளமான புள்ளிகள்! ஆனால் நாட்டு மக்களில் பாதிக்கு மேற்பட்டோர் வாழ்வோ; காய்ந்து கருகிய சுள்ளிகள்!

கொடிய வறுமையின் கோரப் பிடியில் சிக்குண்டு குடும்பம் குடும்பமாகப் பூவும் பிஞ்சுமாகக் காயும் கனியுமாக விஷமருந்தித் தற்கொலையில் வீழ்ந்துபடும் மக்களின் பட்டியல் நின்றபாடில்லை; நீண்டு கொண்டேயிருக்கிறது!

வேலியே பயிரை மேய்கிறது என்ற முதுமொழிக்கு வேறெங்கும் சாட்சி தேடிப்போக வேண்டியதில்லை; நமது காவல்துறையினர் பலரே கண்கண்ட சாட்சிகளாகக் காட்சி தருகின்றனர்!

கொல்லைவழி மேல்வரும்படி வந்தால்தான் கோப்புகள் நகருவேன் என்கின்றன; கோட்டை தலைமைச் செயலகத்திலிருந்து குக்கிராமத்து அதிகாரிகளின் அலுவலகம் வரையில்!

தலைகளை எண்ணுவது ஜனநாயகத்தின் மேலெழுந்த வாரியான கணக்கு எனினும் அந்த தலைகளுக்குள் என்ன இருக்கின்றது என்பதையும் சிந்திக்க வேண்டிய பொறுப்பு; ஜனநாயகவாதிகளின் கடமை என்பது துரத்தியடிக்கப்பட்ட தத்துவமாகி விட்டது இப்போது!

அதனால் தான் முரட்டுப் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு முழுப் பூசணியை ஒரு கவளம் சோற்றில் மறைக்க முடியுமென நம்பி; ஊழல் கோபுரத்தின் உச்சிக் கலசத்தில் ஏறி ஆடுகிறார்கள்; ஊராள வந்தவர்கள்!

நிர்வாகம்; எதுவோ தேய்ந்து எதுவோ ஆனது போன்ற கதையாகி விட்டது!

ஆட்சி மன்ற அமைப்புக்களோ; ஆணவத்தின் கொடிபறக்கும் கொத்தளங்களாக மாறி வருகின்றன!

நீதி தேவதையோ நல்லவளைப் போலக் கண்ணைக் கட்டிக் கொண்டாளே தவிர; காசோசை கேட்டால் போதும்; கையை நீட்டுகின்றாள்!

மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம் கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது? என்று தேவர் திருமகன் அடிக்கடி கேட்பாரே அது போல - கங்கையைத் தூய்மைப்படுத்துவதாக அறிவித்தோர் எல்லாம்; தங்கள் பாதாதி கேசம் வரையில் களங்கச் சேறு பூசிக் கொண்டு எந்த வெள்ளம் கரை புரண்டு பெருக்கெடுத்தாலும் கழுவிட முடியாதபடி வானுக்கும் பூமிக்குமாக வளைந்து நிற்கின்றனர்!

இதயங்கள் துடிக்கின்றன; ஏழை எளியோர்க்கு; இல்லாமை தாக்குவதால்!

இரும்புப் பெட்டிகளோ நடிக்கின்றன; இரக்கமெனும் அரிதாரம்பூசி!

இத்துயரம் தொலைந்தால்தானே இந்நாடு சுதந்திரம் பெற்றதில் பொருள் இருக்க முடியும்!

தியாகிகளின் கல்லறைகள், ஏழை எளியோர் விடும் பெருமூச்சைத் தென்றலாக எண்ணி இதம் பெற இயலுமோ?

அல்லற்படுவோரின் கண்ணீரைப் பனிமழையென அந்தக் கல்லறைகள் கருதிப் பரவசமடைய முடியுமோ?

தியாகிகளின் கல்லறைகளாயிற்றே; அவர்தம் தியாகத்தில் அமர்ந்து பதவி தேடும் சுகபோகிகளின் கட்டிலறைகள் அல்லவே!

இந்தியர் என்பதில் பெருமிதம் கொள்கிறோம்! இல்லையென்று மறுக்கவில்லை!

ஆனால் ஒன்று;

இந்தியர் என்பதில் பெருமிதம் கொள்வதற்காகவே; தமிழன் என்போன் தலை தாழ்ந்து கிடக்க வேண்டுமோ?

மொழியை விழியென்பர்! அந்த விழியாம் தமிழை இழந்துவிட்டு - இந்தியர் எனும் சித்திரத்தை வாங்க வேண்டுமா?

அப்படியானால்; கண்களிரண்டையும் விற்றுச் சித்திரம் வாங்குவரோ? என்று கவிச்சக்கரவர்த்தி கேட்ட கேள்வி அர்த்தமற்றதா?

அர்த்தமுள்ள கேள்விதான் எனில் இந்தி மொழி ஆதிக்கத்தால் தமிழன் இரண்டாந்தர குடிமகன் ஆகும் நிலைமை; கண்களை விற்று ஓவியம் வாங்கும் கதையல்லவோ?

பங்களாதேஷ் போரில் இந்தியர் என்பதில் பெருமையுற்றோம்; இல்லையென்று எவரும் கூறிடார்!

ஆனால் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நாமெல்லாம் தமிழர் என்பதால் சிறுமையன்றோ பெற்றோம்!

இந்தியர் எனும் பெருமிதம்; தமிழ் - தமிழர் என்ற மொழியுணர்வை; இன உணர்வைப் பலி கொடுத்துவிட்டுப் பெற வேண்டிய ஒன்றோ?

அப்படித்தான் என்றால் அந்த வீண் பெருமிதம் தேவைதானா?

உழைப்பதற்குப் பலர் - உண்டு கொழுப்பதற்குச் சிலர் - இப்படி உரிமையை ஊசலாட விட்டு; அதற்குப் பெயர்தான் சுதந்திரம் எனல் பொருந்துமா?

எனவே; பொருள் தெரிந்து சுதந்திரத்தின் புகழ் பாடுவோம்!

ஆதிக்கம் செலுத்துவோர் சிலர் - அடிமைகளாய்ப் பலர் - இதுதான் சுதந்திரமெனல் தகுமோ?

எனவே உண்மையான சுதந்திரம் எதுவென்பதை உணர வைத்திட உறுதி ஏற்போம்!

விளம்பர வெளிச்சங்களில் சுதந்திரம் ஒளி விடவில்லை; மாறாக - ஏமாற்றுகிற இருட்குகைகளாகவே அவை இருக்கின்றன!

தியாகிகள் சுதந்திரம் பெற்றனர்! அந்த சுதந்திரத்தை சுகபோகிகளின் கைகளில் இருந்து மீட்போம்! ஆம்; சுதந்திரத்துக்கு சுதந்திரம் அளிப்போம்!

அன்புடன்

மு.க.

15-08-1987

1512. வியர்வையின் விளைவு!
விளைவின் வெற்றி!

உடன்பிறப்பே,

பதினைந்து ஆண்டுக்கால முயற்சியில் ஒரு பெரும் பகுதி நிறைவுற்று முதல் கட்டமாக பதினாறாவது ஆண்டில் - ஆம் இந்த ஆண்டு செப்டம்பர் பதினாறாம் நாளன்று அண்ணா அறிவாலயம் திறப்புவிழா சென்னையில் நடைபெற இருக்கிறது.

அண்ணா அறிவாலயம் அமைப்பதற்காக தி.மு.க. அறக்கட்டளை உருவாக்கப்பட்டு - சென்னை அண்ணா சாலையில் பெரியதோர் இடம் வாங்கப்பட்டு ஆண்டுகள் பல ஆன நிலையில் 1985ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்துதான் அண்ணா அறிவாலயம் எழுப்புவதற்கான நிதி திரட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது.

10.6.85ல் நற்பணி - ஓர் அருந்திருப்பணி என்ற தலைப்பில் முரசொலியில் நான் எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை இப்போது நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

கட்டிடப்பணிகள் முடிக்கப் படவும் வங்கிக் கடன் வட்டியுடன் அடைக்கப் படவும் - தேவைப்படுகிற தொகை ஒரு கோடி ரூபாயைத் தாண்டும் என்றே தோன்றுகிறது.

உடன்பிறப்பே அந்தத் தொகையை உன்னிடமிருந்துதான் எதிர்பார்க்கிறேன்.

எப்படிக் கேட்பது என்று பலமுறை யோசித்த பிறகுதான் - வேறு வழியில்லை என்ற நிலையில் எப்போதும் போல் உன்னிடமே கைநீட்டுகிறேன்.

கொடியேற்று விழா, திருமண நிகழ்ச்சி, பொதுக்கூட்டம், இப்படி எல்லாம் கழக விழாக்களிலும் தி.மு.கழக வளர்ச்சி நிதியும் தேர்தல் நிதியும் பெறுவதில் நான் மிகக் கண்டிப்பாக

இருந்து உன்னைப் போன்ற உடன்பிறப்புகளைக் கசக்கிப் பிழிந்திருக்கிறேன்.

நினைத்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது; உன்னையே திரும்பத் திரும்ப தொல்லைக்கு ஆளாக்க வேண்டியிருக்கிற தேயென்று!

இருப்பினும் என் இனிய உடன்பிறப்பே, உன்னைத் தவிர வேறு யாரிடத்தில் நான் உரிமையுடன்; அணுகமுடியும்! அப்படி அணுகிப் பழக்கமில்லாதவன் என்பதை நீ அறிந்துதானே இருக்கிறாய்!

என் வாழ்நாளின் குறிக்கோள்களிலே ஒன்று தி.மு.க. அறக்கட்டளை வாயிலாக ஏழை எளியோர்க்கு இயன்றதைச் செய்திடல் - அண்ணா அறிவாலயம் எதிர்காலத்தில் திராவிட இயக்கப் பூஞ்சோலையாக விளங்குதல் - நமது கலை, பண்பாடு, வரலாறு, இலக்கியம், இவைகுறித்த ஆய்வுகளேயன்றி வளர்ந்து வரும் அறிவுயுகத்திற்கு ஏற்றவாறு தமிழ்ச் சமுதாயத்தைப் பக்குவப்படுத்துதல் - இவற்றுக்கான முழுமையான முயற்சிகளை என் கண் மூடுவதற்கு முன்பாக நிறைவேற்றி முடித்து விடவேண்டுமென்பதுதான்!

என் நம்பிக்கை வீணாகாமல் காத்திட வேண்டிய பொறுப்பு உனக்கு உண்டல்லவா!

அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க மாட்டாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

உன்போன்ற ஒவ்வொரு உடன்பிறப்பும் உடனடியாக பத்து ரூபாய்க்குக் குறையாமல் தி.மு.க. அறக்கட்டளை நிதியினை அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தனிப்பட்ட முறையில் உன்போன்ற உடன்பிறப் புகளேயன்றி கழகத்தின் பல்வேறு அமைப்புகள், அணிகள், சார்பு மன்றங்கள் பெருந்தொகை வசூலித்து குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பியும், அல்லது நேரிலே வழங்கியும் அதற்கான ரசீதுகளையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அமைப்புகளோ, சார்பு மன்றங்களோ, அணிகளோ அறக்கட்டளை நிதி வசூலிப்பதெனில் முறைப்படி தலைமைக்கழகத்தில் அனுமதி

பெற்று நன்கொடைச் சீட்டுகளில் தலைமைக் கழக முத்திரை பெற்று அந்தப் பணியில் ஈடுபட வேண்டும்; ஏற்கெனவே நாம் கடைப்பிடித்து வரும் வழக்கப்படி!

ஆயிரம் இரண்டாயிரம் என்று ஒரு சிலர்தான் நிதிவழங்க முடியும்!

அதைவிட அதிகமாக வழங்கக் கூடியவர்கள் மிகச் சிலரே இருப்பர்!

அந்தச் சிலரும் - மிகச் சிலரும் ஆண்டாண்டுக் காலத்திற்கு அழியாமல் நிலைத்து நிற்கப் போகும் அறக்கட்டளைப் பணிக்கும் அண்ணா அறிவாலயத்திற்கும் பயனுள்ள உதவியளித்திட முந்திக் கொண்டு முன்வர வேண்டுமென விரும்புகிறேன்.

இவ்வாறு கடித வாயிலாக 1985 ஜூன் திங்களில் நான் விடுத்த வேண்டுகோளையேற்று பணவிடைத்தாள் மூலமும் - நிகழ்ச்சிகளுக்கு நான் வந்த நேரத்திலும் - சென்னைக்கே வந்து நேரிலும் - ஐந்து ரூபாய் பத்து ரூபாய் என்று உடன்பிறப்புகள் வழங்கியுள்ள நிதி; பதினைந்து லட்ச ரூபாயைத் தாண்டி நிற்கிறது என்பதை அவ்வப்போது அறக்கட்டளையின் சார்பில் முரசொலியில் வெளியிடப்பட்ட நிதி வழங்கியோர் பெயர் பட்டியல் விவரப்படி நீ மட்டுமல்ல; நானுமறிந்து அடைந்துள்ள மகிழ்ச்சிக்கு அளவேயில்லை!

உன் போன்ற உடன்பிறப்புகள் இவ்வாறு வழங்கிய நிதியும் - வங்கியில் பெற்ற கடன் தொகையும் அறிவாலய கட்டிடத்தின் தொடக்கப்பணிகளுக்குப் போதுமானவைகளாக இருந்த போதிலும் - வங்கிக் கடனை தீர்க்கவும்; அறிவாலயக் கட்டிடங்களின் ஒரு பெரும் பகுதி வேலை முழுமை பெறவும் பெரும் நிதி தேவைப்பட்ட காரணத்தால் இந்த ஆண்டு (1987) மார்ச் திங்கள் இறுதி வாரத்தில் தொடங்கி; ஏப்ரல், மே, ஜூன் என மொத்தம் மூன்றே மாதங்களில் மாவட்டங்களில் கடுமையான சுற்றுப்பயணம் மேற்கொண்டதின் விளைவாக ஆர்வமுள்ள மாவட்டக் கழகங்கள் ஒன்றோடொன்று போட்டிபோட்டுக் கொண்டு கழக நிதியாக வழங்கிய மொத்தத்தொகை அறுபத்தி மூன்று லட்ச ரூபாயாகும்! அந்த நிதியில் அறக்கட்டளையின் அண்ணா அறிவாலயத்திற்காக நாற்பத்தி ஆறு லட்ச ரூபாய் சேர்க்கப்பட்டதற்கான விபரக் கணக்குகள் அவ்வப்போது முரசொலியில் வெளியிடப்பட்டுள்ளன.

1985 முதல் ஒவ்வொரு மாவட்டமும் அண்ணா அறிவாலயத்திற்கென்றும் - கழக நிதியென்றும் இதுவரையில் எவ்வளவு வழங்கியுள்ளது என்ற கணக்கு சரிபார்க்கப்பட்டு அறிவிக்கப்பட இருப்பதோடு - நிதி வழங்கிட முயற்சி எடுத்துக் கொண்ட ஒவ்வொரு மாவட்டக் கழகத்துக்கும் செப்டம்பர் 16ஆம் நாள் திறப்பு விழாவன்று அண்ணா அறிவாலயம் படம் பதித்த கேடயம் ஒன்று வழங்கப்பட இருக்கிறது.

அஃதன்னியில் அதிக நிதி வழங்கியுள்ள மாவட்டங்களுக்கு வரிசைப்படி - முதற் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, ஆறுதல் பரிசு, என நான்கு பரிசுகள் செப்டம்பர் 16ஆம் நாள் திறப்புவிழா நிகழ்ச்சியில் அளிக்கப்படவும் இருக்கிறது.

செப்டம்பர் 15 நமது அண்ணன் பிறந்த நாள் - செப்டம்பர் 17 நமது அண்ணனைத் தந்த அய்யா பெரியார் பிறந்த நாள் - அன்று தான் அந்த அண்ணன் உருவாக்கிய கழகம் பிறந்த நாள்.

இதனை முப்பெரும் விழாவாகக் கழகம் பல ஆண்டுகளாகக் கொண்டாடி வருகிறது.

15க்கும் 17க்கும் இடையில் 16ஆம் நாள் அண்ணா அறிவாலயத் திறப்புவிழா சென்னை மாநகரில் நடைபெற இருக்கிறது!

15 ஆண்டுகால முயற்சியின் முதற் கட்டம் நிறைவுறுகிற 16வது ஆண்டல்லவா இஃது; அதனால் 16ஆம் நாள் திறப்பு விழா!

செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளில் மாநில முழுதும் அந்தந்த நகர்கள் ஊர்களில் அண்ணா சிலைக்கு மாலையணிவித்து விட்டு 16ஆம் நாளன்று சென்னைக்கு வர வசதியாக அண்ணா அறிவாலயத் திறப்பு விழாத் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

முப்பெரும் விழாவையும், அத்துடன் இந்த ஆண்டு இணையும் முத்தான திருவிழாவாம்; அண்ணா அறிவாலயத் திறப்பு விழாவையும் முன்னிட்டு செப்டம்பர் 16 மாலையில் சென்னை அண்ணா சாலைப் பெரியார் சிலையிலிருந்து மாபெரும் ஊர்வலத்திற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

தமிழகத்தின் பட்டி தொட்டி முதல் பட்டினக் கரை வரையுள்ள உடன்பிறப்புகள் அனைவரும் - அவர்களால் உருவாக்கப்பட்ட அறிவாலயம் காண வந்திடப் போகும் அந்த விழா; எழுச்சிக் கோலமாக இருக்குமென்பதில் ஐயம் சிறிதுமுண்டோ?

அண்ணா அறிவாலயத்தில் அமைய இருக்கும் ஆய்வகம் அன்றைக்குத் தனது பணியைத் தொடங்கி விடும். ஆய்வகத்திற்கு மிக முக்கியமாகத் தேவை; நூலகம் என்பதை அறிவாய்! ஆராய்ச்சி மேதைகள், வரலாற்று வல்லுநர்கள், மொழி வித்தகர்கள் - பயன்படுத்தவும்; சமுதாயத்தை, நாட்டைப் பண்படுத்தவும் ஏற்ற நூல்களை, ஏடுகளை, உன் போன்றோர் வசமுள்ளவை அனைத்தையும் உடனடியாக அனுப்பி வைக்குமாறு இக் கடித வாயிலாக வேண்டுகிறேன்.

தி.மு.க. அறக்கட்டளையின் சார்பில் அமைகிறது அண்ணா அறிவாலயம் எனினும்; கட்சி சார்பற்ற முறையில் அனைவரின் அருள்கனிந்த ஆதரவையும் அறிவாலயத்தின் அரிய பணிகளுக்காக அளிக்குமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆதரவைப் பெற்றுத்தருவது உன்போன்ற உடன்பிறப்புகளின் கடமையுமாகும்.

உடன்பிறப்பே; இந்த அறக்கட்டளை இன்று மட்டுமல்ல; எதிர்காலத்திலே கூட உன் போன்றோரால் தலைமைக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் என்ற பொறுப்புகளுக்கு யார் வருகிறார்களோ; அவர்களையும் - தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த தலைவரால் கழக செயற்குழு உறுப்பினர்களில் இருந்து நியமிக்கப்படும் இரு அறங்காவலர்களையும் கொண்டு இயங்கக்கூடிய வகையில் ஜனநாயக அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள காரணத்தால் இது உனக்கு உரிமையுடைய அறக்கட்டளை - உன் உழைப்பால் தழைக்கக்கூடிய அறக்கட்டளை - இந்த அறக்கட்டளை எழுப்பிடும் அண்ணா அறிவாலயம் முழுக்க முழுக்க உன் வியர்வையின் விளைவு! அந்த விளைவின் வெற்றி அறுவடை!

இன்னும் பல வெற்றிகளைக்காண - அண்ணா வழியில் அயராது உழைத்திட சூளுரை மேற்கொள்ள இந்த ஆண்டு முப்பெரும் விழாவுடன் அறிவாலயத் திறப்புவிழாவும் ஒரு பெருவாய்ப்பாக அமையட்டும்!

அன்புடன்

மு.க.

21-08-1987

1513. இளைய தலைமுறைக்கு இதய வாழ்த்துகள்!

உடன்பிறப்பே,

அன்பழகனுக்கும் மு.க. ஸ்டாலினுக்கும் லடாய். தி.மு.க.வில் நடைபெறும் வட்டம், மாவட்டம், உட்கட்சித் தேர்தலில் கட்சி இளைஞர் அணியினர் போட்டியிடவோ, வேட்பாளரை ஆதரிக்கவோ கூடாது என்று கட்சி விதியை மேற்கோள் காட்டி உத்திரவு போட்டு விட்டார் பொதுச்செயலாளரான அன்பழகன்.

ஸ்டாலினுக்கு இது பெருத்த அடி! பதிலுக்கு ஸ்டாலின் இன்னொரு விதியைச் சுட்டிக்காட்டி அன்பழகனின் பெயரில் உள்ள மன்றங்களை கலைத்து விட்டார்.

இந்த மோதலில் கலைஞரின் நிலை என்ன? அன்பழகனிடம் ஏதேதோ காரணம் சொல்லி, சற்று விட்டுக் கொடுக்குமாறு சொல்வாரே தவிர, மகனைக் கண்டிக்க மாட்டார். பயம்.

இப்படியொரு செய்தியை குமுதம் வார இதழ் தெரியாது என்று தலைப்பு கட்டி வெளியிட்டுள்ளது.

தெரியாத விஷயங்களில் தலையிட்டுத் தேவையற்றவைகளை - வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற நிலையில் குமுதம் போன்ற ஏடுகள் வெளியிட்டு வலிமை வாய்ந்த ஒரு அரசியல் சமுதாயப் பேரியக்கத்திற்கு இழுக்கு ஏற்படுத்தவோ - அல்லது பலவீனப்படுத்தவோ முடியாது எனினும்; இனியாவது இத்தகைய போக்குகளை மாற்றிக் கொண்டு கழக உடன்பிறப்புகளை குழப்புகிற முயற்சியில் ஈடுபடாமல் இருந்திட வேண்டுமென்று குமுதத்திற்கு உணர்த்த இந்தக் கடிதம் பயன்படுமென்று நம்புகிறேன்.

கழகத்தைச் சாராத பல வாசகர்கள்; குமுதம் படிப்பவர்கள் - ஓகோ! அப்படியா? கருணாநிதியின் மகனுக்கும் அன்பழகனுக்கும்

தகராறா? அப்படியானால் கருணாநிதி - அன்பழகன் கோஷ்டியென்று தி.மு.க.வில் இருக்கிறது போலும்! என்று அனைவருமில்லாவிடினும் ஒரு சிலராவது நினைத்திட இந்த விஷமப் பிரச்சாரம் பயன்படுமல்லவா; அத்தகைய பிரச்சாரத்தை முனை மழுங்கச்செய்யவும் - முளையிலேயே கிள்ளி எறியவும் இந்தக் கடித வாயிலாகச் சில விபரங்களைத் தெரிவிக்க வேண்டியுள்ளது.

கழகத்தின் உட்கட்சித் தேர்தல்; முறைப்படி அறிவிக்கப்பட்டு ஜனநாயக ரீதியில் எல்லா அமைப்புகளுக்கும் நடைபெறுவது என்பது அண்ணா காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறையாகும்.

அதன்படி கழகத்தின் உட்கட்சி எட்டாவது பொதுத் தேர்தல் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாற்பதாயிரம் கிளைக் கழகங்களுக்கான நிர்வாகிகள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட முப்பது லட்சத்துக்கு மேற்பட்ட கழக உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் சில கிளை அமைப்புகளின் தேர்தல் மட்டுமே இன்னும் நடத்தப்படாமல் அவற்றுக்கென வேறு தேதிகள் அமைப்புச் செயலாளர் நீலநாராயணன் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன. அறிவிக்கப்படவுமுள்ளன. நிர்வாகப் பொறுப்புக்கோ, அல்லது பிரதிநிதிகளாகவோ வருவதற்குக் கழக உடன்பிறப்புகள் ஆங்காங்கு போட்டியிடும்போது தொண்டாற்றத் துடிக்கும் முனைப்பான உணர்வு தலை தூக்குகிறதேயன்னியில் ஒருவரோடொருவர் மோதிடும் பகையுணர்வு தலைநீட்டுவதில்லை. விதிவிலக்காக ஓரிரு இடங்களில் அத்தகைய கசப்பு தோன்றினாலும் - கட்டுப்பாடு மீறிய காரியம் நடைபெற்றாலும் - தலைமைக்கழகம்; உடனடியாகக் கவனம் செலுத்தி உண்மையை அறிந்து நடுநிலை முடிவுகளை எடுத்திடத் தவறுவதே இல்லை!

தமிழ்நாட்டில் எந்த இயக்கத்திலும் இப்படி அடிமட்டத்திலேயிருந்து படிப்படியாகத் தலைமை நிர்வாகம் வரையில் தேர்தல்களை நடத்திடும் ஜனநாயக மாண்பு இந்த அளவுக்கு கடைப்பிடிக்கப்படவில்லையென்று கட்சிச் சார்பற்ற நிலையில் உள்ளவர்களே கூட போற்றிப் புகழுகிற ஏற்றத்தை நமது தி.மு.கழகம் பெற்று உள்ளது.

கிளை அமைப்புகளின் தேர்தல் தொடங்கிய போதே நான் எழுதிய கடிதத்தில் கட்சியில் முக்கியமாகத் தலைமைக் கழகப் பொறுப்பில் உள்ளவர்கள் - தலைமைக் கழகச் செயலாளர்கள் - தலைமைக் குழுக்களின் உறுப்பினர்கள் - மூத்த முன்னோடிகள் - ஆங்காங்கு தேர்தல்கள் சுமுகமாகவும் - தொண்டாற்றுவதற்குப் போட்டி என்ற முறையிலே மட்டும் நடைபெறுவதற்குத் துணை நிற்கவேண்டுமேயல்லாது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ; போட்டியிடுவோரில் ஒருசாராரைச் சார்ந்து நிற்பது கூடாது என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

இதேபோல தி.மு.க. இளைஞர் அணியில் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள்; கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய சில செயல்பாடுகளை இந்தத் தேர்தலைப் பொறுத்து அறிவித்து இருந்தார். அந்த அறிவிப்புகள் பின்வருமாறு:-

(1) கழக சட்ட திட்டம் விதி 9 பிரிவு 2(ஆ)வின்படி இளைஞர் அணியைச் சார்ந்தவர்கள் நடைபெற இருக்கும் கிளைக் கழகத் தேர்தலில் நிர்வாகப் பொறுப்புக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றால் அவர்கள் இளைஞரணியில் தொடர்ந்து உறுப்பினராக நீடிக்க முடியாது.

(2) தி.மு.க. இளைஞரணி மாநில மாவட்ட பொறுப்பில் உள்ள நிர்வாகிகள்; கழகத்தின் தேர்தலில் போட்டியிடவோ போட்டியிடுவோரில் ஒரு சாராரை ஆதரித்து பணியாற்றவோ கூடாது. அப்படிப் போட்டியிடவோ, போட்டியிடுவோரை ஆதரித்துப் பணியாற்றவோ வேண்டுமென்று விரும்புகிறவர்கள், அவர்கள் ஏற்றுள்ள இளைஞரணிப் பொறுப்பில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். இதை மீறி நடக்கின்ற முயற்சியில் ஈடுபடுவோர் மீது தலைமைக் கழக சார்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

இந்த இரண்டு அறிவிப்புகளும் நானும் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும், தலைமைக்கழக இளைஞரணிச் செயலாளர்

ஸ்டாலினும் - கலந்து விவாதித்து எடுக்கப்பட்ட முடிவின்படி முறைப்படி பொதுச்செயலாளர் அவர்களால் வெளியிடப் பட்டவைகளாகும்.

இதில் எப்படி லடாய் ஏற்பட்டது என்று குமுதம் கூறுகிறது?

இளைஞரணியின் தொடக்க காலத்தில் இருந்தே அதன் அமைப்புகள், அமைப்புகளுக்கான விதிமுறைகள் குறித்து அவ்வப்போது இளைஞர் அணியினருடனும் மாவட்டக் கழகச் செயலாளர்களுடனும் கலந்துபேசித் தலைமைக் கழகச் சார்பில் பொதுச்செயலாளர் அவர்கள் முக்கியமான அறிவிப்புகளை வெளியிடுவது வழக்கமாக இருந்து வருகிறது.

இளைஞரணியின் செயலாளர் எடுத்துரைத்த கருத்தின் அடிப்படையிலேதான் பொதுச்செயலாளர் அவருடன் விவாதித்து இந்த அறிக்கைகளே விடப்பட்டிருக்கும்போது லடாய் - பெருத்த அடி! - மோதல் என்றெல்லாம் பரபரப்பான பொய்களை அள்ளியிறைக்க வேண்டிய அவசியம் குமுதம் போன்ற ஏடுகளுக்கு ஏன் ஏற்பட வேண்டும்?

பேராசிரியர் பெயரில் உள்ள, மன்றங்களையெல்லாம் இளைஞரணிச் செயலாளர் கலைத்து விட்டாராம். இப்படியும் குமுதம் செய்தி வெளியிட்டுள்ளது. வெள்ளைக் காகம் மல்லாந்து கொண்டு பறக்கிறது என்று சொல்வது போலல்லவா இது இருக்கிறது என உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் சிரிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். ஒரு நாலுபேராவது ஊரிலே இருப்போர் நம்ப மாட்டார்களா என்ற பிழையான கணக்கைப் போட்டுப் பார்க்கிறது குமுதம்! கழக சார்புமன்றங்களைக் கலைக்கும் அதிகாரம் இளைஞரணிக்கு ஏது? நல்லவேடிக்கை; குமுதத்தின் வேடிக்கை!

மகனுக்குப் பேராசிரியரை விட்டுக்கொடுக்குமாறு சொல்வேனாம்; மகனைக் கண்டிக்க மாட்டேனாம் - மகனிடம் எனக்கு பயமாம் - இப்படியெல்லாம் மண்ணை வாரி இறைத்துள்ளது குமுதம்!

பிரபல வார ஏடான குமுதத்துக்கு திராவிட இயக்க வரலாறு தெரியுமென்றே நம்புகிறேன்.

இந்த இயக்கத்தில் குடும்பம் குடும்பமாக உறுப்பினர்களாகி; அந்தக்கால முதல் இந்தக் காலம் வரையில்; பாட்டனார், தகப்பனார், மகன், பேரன், பேத்திகள் வரையிலே தலைமுறை தலைமுறையாக பெரியார் - அண்ணாவின் கொள்கை கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு பணியாற்றுகிறவர்கள்! தான் மட்டுமல்ல; தனது மனைவி, மக்கள், வீட்டார் அனைவருமே இந்த இயக்கத்தில் ஆர்வம் கொண்டவர்கள், உழைப்பவர்கள் என்று சொல்லிக் கொள்வதிலே நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கங்களின் காலந்தொட்டு பெருமையடைபவர்கள் அன்று முதல் இன்று வரையில் உண்டு!

அதே நேரத்தில் மகனோ - மகளோ - தாயோ - தந்தையோ - யாராக இருந்தாலும் இந்த இயக்கத்தின் கட்டுப்பாடு குலைக்கவோ, கண்ணியம் சிதைக்கவோ முற்பட்டால் அவர்களைப் பின்னால் தள்ளிவிட்டு - இயக்கத்தை முன்னால் நிறுத்தி, இயக்கத்தையே உயிர் மூச்சாகக் கருதும் மனநலமும், நெஞ்சுறுதியும், இயக்கப்பற்றும் கொண்டவர்கள் நிறைந்ததே இந்தக் கழகம் என்பதையும் - அவர்களில் நான் ஒருவன் என்பதையும் உன்னைப் போன்ற - என்னை உணர்ந்த உடன்பிறப்புகள், கடந்த கால அனுபவங்களைக் கொண்டே நன்கு அறிவீர்கள்! எனவே குமுதம் போன்றோரின் குதர்க்கங்கள், குறுக்குச்சால் ஓட்டும் காரியங்கள், குடுமி முடிந்துவிடப் பார்க்கும் தந்திரங்கள் உன் போன்றோரிடம் எடுபட முடியாது!

இருந்தாலுங்கூட; இன்றைக்குக் கழகத்திற்கு நாள்தோறும் பெருகிவரும் செல்வாக்கு - அத்துடன் எதிர்காலத் தமிழினத்துக்கு அரணாக விளங்குவோம் என அலை கடலென ஆர்ப்பரித்து முழங்கிடும் இளைஞரணியின் வெகுவேகமான வளர்ச்சி - இவற்றைக் காணும் போது ஒருவகை எரிச்சல் குமுதம் போன்றோர்க்கு எழுகிறது!

அந்த எரிச்சலில் இல்லாதது பொல்லாததை எல்லாம் எழுதவும் பேசவுமான அவலத்துக்கு ஆட்படுகிறார்கள்!

எப்படி உடன்பிறப்பே; அவர்களுக்கு எரிச்சல் வராமல் இருக்கும்?

ஜூலை 5-ந் தேதி தஞ்சையில் நடைபெற்ற மாநில மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட

முடிவுக்கேற்ப மத்திய - மாநில ஆட்சிகளின் மக்கள் விரோதப் போக்குகளையும் - ஊழல் நிர்வாகத்தையும் - ஜனநாயகம் கேலிக் கூத்தாகிவிட்ட நிகழ்ச்சிகளையும் தமிழகமுழுதும் விளக்கிட ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய இருமாதங்களிலும் இளைஞர் அணியின் சார்பில் கிராமங்கள், நகரங்கள் தோறும் சைக்கிள் பேரணிகள் நடந்து கொண்டிருக்கின்றன!

எழுச்சியுற்ற இளைஞர்கள் ஏறுநடை சிங்கங்களாய் இனி கொழித்துவிட்ட உமிகள்தான் குள்ளநரிக் கூட்டத்தார் என்று முழங்கிக் கொண்டு மாவட்டந்தோறும் சைக்கிள் பேரணிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாவட்டக்கழகத்தின் மூத்த முன்னோடிகள், தளகர்த்தர்கள் - இளைஞர் அணியின் எழுஞாயிறுகளை ஊக்கப் படுத்திடும் வகையில் அவர்களுக்கு துணைநின்று வாழ்த்திப் பாராட்டுகிறார்கள்.

இதோ இன்றைக்குக்கூட செய்தி வந்துள்ளது; தம்பி கோபால்சாமி எம்.பி. நெல்லை மாவட்டத்தில் இளைஞர் அணியினர் நடத்தும் சைக்கிள் பேரணியில் ஒன்பது நாட்கள் இணைந்து கலந்து கொள்கிறார் என்று! பூரிப்பான செய்தியன்றோ இஃது!

பல இடங்களில் சைக்கிள் பேரணிகளை நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் தொடங்கிவைத்து ஆற்றியுள்ள உரைகள், இளைய தலைமுறைக்கு படைக்கலனாக அமைந்துள்ளன!

மதுரை மாநகரில் சில ஆண்டுகளுக்கு முன்பு இளைஞரணியை முதன் முதலாக ஆரம்பித்த விழாவில் நான் கண்ட கனவு; இதோ நிறைவேறுகிறது!

இளைஞர் அணியின் அரிமாக்களை - ஆகா; அந்த கம்பீரமான அணி வகுப்பை இதோ என் கண்முன்னால் காணுகிறேன். அகமிக மகிழ்கிறேன். அந்த அன்புத் தம்பிகட்கு ஆங்காங்கு கழகத்தின் மூத்த முன்னணியினர் அரவணைப்பாக இருந்திடும் செய்தி; செந்தேனாக இனிக்கிறது எனக்கு! அஃதே போல் இளைஞர் அணித் தம்பிமார்களும் மூத்தோரை மதித்து நடப்பதறிந்து பெருமை கொள்கிறேன்!

எதிர்கால இளைய தலைமுறையின் வெற்றி முழக்கம்; குமுதங்களுக்கு குமட்டுகிறது!

அதனால் கலாம் விளைத்திடக் கருதுகிற முயற்சி முளைவிடுகிறது!

இந்தத் தடைக் கற்களையெல்லாம் தகர்த்தெறியத் தடந்தோள் உண்டு எம்மிடம் என இளைஞர் அணியினர் பட்டாள நடை பயிறுகின்றனர்!

அவர்களை வாழ்த்துகிறேன்!
அவர்களை வாழ்த்துவோரைப்
பாராட்டுகிறேன்!
வழிமறித்து நிற்கும் குமுதம்
போன்றோர் விழி திறக்கும் நாள்
விரைவில் வரும் என எதிர்பார்க்கிறேன்!

அன்புடன்

மு.க.

31-08-1987

1514. சென்னை அழைக்கிறது உன்னை; வா! வா! வா!

உடன்பிறப்பே,

செப்டம்பர் பதினாறு!

சென்னையில் அண்ணா அறிவாலயம் திறப்புவிழா! பெரியார், அண்ணா, கழகம் பிறந்த நாளைக் கொண்டாடும் முப்பெரும் விழா!

நாஞ்சிலார்
நீலநாராயணன்
பொற்செல்வி இளமுருகு
ஆகியோர்க்கு விருது வழங்கிடும் விழா!
அண்ணா அறிவாலயம் அமைந்திட
நிதி திரட்டி அளித்திட்ட
மாவட்டக் கழகங்களுக்குக்
கேடயங்கள் வழங்கும் விழா!
கழக நிதியும் அறிவாலய நிதியுமாக
1985 முதல் இதுவரையில் ஐந்து
லட்ச ரூபாய் தந்த மாவட்டக் கழகச்
செயலாளர்களுக்கும்
முதலாவது, இரண்டாவது, மூன்றாவது
என்ற வரிசையில் நிதியளித்துள்ள
மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும்
பரிசுகள் அளிக்கும் விழா!

இத்தனை விழாக்களுக்கும் தொடக்கமாக அன்று மாலை 4 மணிக்கு காமராசர் சாலை அண்ணா சதுக்கத்திலிருந்து மாபெரும் ஊர்வலமும்!

சென்னையில்!
சென்னையில்!
சென்னையில்!

ஆம்; செப்டம்பர் 16 -

உடன்பிறப்பே! உன் சிந்தை, அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடச் செய்யும் திருநாள்! பெருநாள்! தி.மு.க. வரலாற்றில் ஒரு பொன்னாள்!

இப்பொழுதே சென்னை மாநகரின் முக்கிய பகுதிகளில் எல்லாம் செப்டம்பர் 16 விழாக்களுக்கான விளம்பரத்தட்டிகள் எழுச்சியும் எழிலும் நிறைந்த நிலையில் காட்சி தந்து கொண்டிருக்கின்றன. உன்போன்ற உடன்பிறப்புகளும் ஒவ்வொரு ஊரிலும் சென்னையில் செப்டம்பர் 16 விழா குறித்த விளம்பரங்களைச் செய்திருப்பார்களென நம்புகிறேன். தட்டிகள் வைத்தோ - சுவரொட்டிகள் அச்சிட்டோ - இயன்ற அளவு சுவர்களில்; உரிமையுடையோரிடம் அனுமதி பெற்று எழுதியோ - துண்டறிக்கை வெளியிடல் - ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துதல் - இன்னோரன்ன முறைகளைக் கடைப்பிடித்து செப்டம்பர் 16 சென்னையில் கழகமெடுக்கும் விழாவுக்கான விளம்பரங்களை உடனே தொடங்குக!

ஐந்து பத்து என்று பணவிடைத்தாள்கள் வாயிலாக நிதி வழங்கியவர்களும் மாவட்டக் கழக முயற்சிகளுக்கு நிதி வழங்கியவர்களும் - தாங்களே முன்னின்று எழுப்பிய கவின் மாளிகை- கருத்து மாளிகை - கழகத்தின் அறக்கட்டளை மாளிகை - அண்ணா அறிவாலயம் என்ற உணர்வுடன்; அதன் திறப்பு விழாவைத் தங்கள் குடும்பத்துத் திருவிழாவாக எண்ணிப் பல்லாயிரவர் - பல்லாயிரவர் பல திசைகளிலிருந்தும் வந்து கூடிடுவர்!

இரும்புப் பெட்டிகள் திறக்கப்பட்டு அதனால் எழுந்த மாளிகையல்ல!

இது, எறும்புகள் சேர்ப்பது போல் சேர்த்து எழுப்பப்பட்ட மாளிகை!

மலர் தோறும் சென்று தேனீக்கள் திரட்டி அமைத்த தேனின் கூடுதான்; நீயும் நானும் கண்டு மகிழும் இந்த மணிமண்டபம்!

அதன் மாட்சி காணவும் - கழகம் கட்டிக் காக்கும் மாண்பினை மாற்றாரும் உணர்ந்து மகிழவும் -

உடன் பிறப்பே!
உனது உழைப்பு,
உனது வியர்வை,
உனது மூச்சு,

உனது ஆர்வம்,
உனது அக்கறை,
உனது ஆற்றல்,

இதோ சென்னையில் அண்ணா சாலையில் அண்ணா அறிவாலயமெனும் உப்பரிகையாக உயர்ந்து நிற்கிறது! அதன் சிறப்பினைக்காண - சிந்தை குளிர்ந்திட - இனியும் ஆற்றிட வேண்டிய பணிகளுக்கு உன்னையும் என்னையும் தயார்படுத்திக்கொள்ள - அமைந்திடும் நாள் தான் செப்டம்பர் பதினாறு!

இன்று முதலே சென்னை பயணத்துக்குத் தயாராகு!

நீ மட்டும் வந்தால் போதாது - தாய், தந்தை, மனைவி, மக்கள், அண்ணன், தம்பி, அக்காள், தங்கை - முடிந்தால் பாட்டன் பாட்டிகளுடன் கூட; குடும்பம் குடும்பமாக வா!

இது கோலாகல விழா மட்டுமல்ல;
கொள்கை விழா!
எழில்மிகு விழா மட்டுமல்ல!
இலட்சிய விழா!

நம் விழி திறந்த பெரியார் - ஒளி வழங்கிய அண்ணா - வழிகாட்டும் கழகம் - முப்பெரும் விழா காணும் நேரத்தில்;

ஃ மொழி

ஃ இனம்

ஃ உரிமை

இவை காத்திடச் சூளுரைக்க;
கழக அடலேறே; வா! என்
உயிரினுமேலான
உடன்பிறப்பே; வா!
கண்ணின் மணியெனும் தமிழ்
மண்ணின் பெருமை உணர்த்த
வா!
சென்னை அழைக்கிறது; உன்னை!
வா! வா! வா!

அன்புடன்

மு.க.

02-09-1987

1515. அலைபாயும் கடலை வெல்ல அணி திரள்க!

உடன்பிறப்பே,

இடையில் இன்னும் இரண்டே நாட்கள் தான், செப்டம்பர் பதினாறு சென்னையில் கழகம் எடுக்கும் விழாவில் நீயும் நானும் சந்திக்க - மகிழ - அளவளாவிட - அய்யா, அண்ணன் இருவரின் புகழ் பாடிட - அவர்கள் வகுத்த கொள்கை அடிப்படையில் நாம் வலிவுடன் உருவாக்கிக் காத்து வரும் கழகத்தின் கட்டுக்கோப்பினை நாடறியச் செய்திட - நீ வர இருக்கிறாய்; நான், உன் வருகை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

சென்னை மாவட்டக் கழகம், விழா ஏற்பாடுகளை மிகுந்த ஆர்வத்துடன் - விறுவிறுப்புடன் - செயல்படுத்தும் பாங்கினைக் கண்டு பரவசமடைகிறேன்.

மாவட்டங்கள் மட்டுமல்ல; மாநில அமைப்புகளும் மற்றும் பம்பாய், ஆமதாபாத், அந்தமான், துபாய் வாழ் கழக உடன்பிறப்புகளும் கழக வரலாற்றில் ஒரு பொன்னாள் இதுவெனக் கருதி சென்னை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நாம் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி சேமித்து அளித்த நிதியல்லவோ; சிறுதுளி பெருவெள்ளமென மாறி - இதோ சென்னை அண்ணா சாலையில் அண்ணா அறிவாலயம் என செம்மாந்து நிற்கிறது என்ற பெருமிதத்துடன் குடும்பம் குடும்பமாக செப்டம்பர் 16-ஆம் நாளன்று கூடுகின்ற காட்சி கண்டு; உடன்பிறப்பே! என் உள்ளம் துள்ளும்!

அடித்தளம் உருவாக்க மண்ணைத் தோண்டிய நேரம் முதல் - இன்று அழகுக் கலைவடிவாய் ஆகாயமளாவ உயர்ந்து நிற்கும் வரையில் - ஒவ்வொரு நாளும் - கட்டிடத்தின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும் உடனிருந்தே பார்த்துக் கொண்டிருந்த எனக்கே இப்போது இந்த எழில் மாடத்தைக் காணும் போது

இதயம் களிநடம் புரிகிறதென்றால் - ஏ, அப்பா - நாமா? நம்மாலா? நமது உடன்பிறப்புகளின் ஆற்றலாலா? - அவர்தம் ஆர்வத்தாலா? என்ற இன்ப வினாக்கள் என்னையே உவகைப் பெருக்கில் ஆழ்த்துகின்றதென்றால் - நீண்ட இடைவெளிக்குப் பிறகு சென்னைக்கு வரப்போகும் உன்போன்ற உடன்பிறப்புகள் அறிவாலயம் கண்டு அடையப் போகிற அகமகிழ்வுக்கு அளவும் இருக்கப் போகிறதோ?

இதயத் துடிப்பில் - இழைந்தோடும் மூச்சில் - உதிரப்புனலில் - உணர்வுக் கனலில் - எந்த அண்ணன், என்றென்றும் இருக்கிறார் - இயக்குகிறார் - என எண்ணிக் கிடக்கிறோமோ; அந்த அண்ணன் பெயரால் அமையும் அறிவாலயம் கண்டு நமக்கே எத்துணை ஆறுதல்! எத்துணை இன்பம்!

முப்பெரும் விழாவும் அறிவாலயத் திறப்பு விழாவும் இணைந்த விழா - ஈடற்ற விழா - இனமானம் காத்திடும் விழா - உரிமை முழக்கம் எழுப்பிடும் விழா - மொழி காக்கும் பட்டாளத்துச் சிப்பாய்களாம் கழகப் பாசறையின் கண்மணிகள் எடுத்திடும் விழா - மக்களாட்சியின் மாண்பினைக் குலைப்போர் எவரேயாயினும்; அவரை எதிர்த்து நிற்பதால் இழப்புகள் எத்தனை வருமேயாயினும் - அதற்கெனத் துவண்டு போகாத தூய நல் தியாகிகள் நடத்திடும் விழா - சாதாரண, சாமானிய, ஏழை, நடுத்தர வர்க்கத்தினரின் அரணாக விளங்கும் கழகத்தின் எழுச்சி விழா - உன்னை நான்; என்னை நீ - உடன்பிறப்பே - உள்ளத்தால் தழுவி நலந்தானா? எனக் கேட்கவும், நலந்தான்! என விடையளிக்கவும் அமைகிற நாள் மட்டுமல்ல; கழகம் கட்டிக் காக்கும் ஜனநாயக மாண்புக்கு அடையாளமாக நடைபெறும் உட்கட்சித் தேர்தல் குறித்தும் உரையாடிடவும் - அங்கொன்றும் இங்கொன்றுமாக துளி கசப்பு தலை நீட்டியிருந்தாலும் அதனைக் களைந் தெறியவும் பயன்படும் நாளாக பதினாறாம் நாள் விழா இருந்திடும் - இருந்திடல் வேண்டும்!

கிளையமைப்பில் - ஒன்றியத்தில் - மாவட்டத்தில் பணியாற்றிட மட்டுமா போட்டி?

இதோ, அண்ணா அறிவாலயத்துக்கும், கழகத்துக்கும் நிதி வழங்குவதிலேகூட எவ்வளவு போட்டி?

அந்தப் போட்டியை உசுப்பி விடுவதில் தவறில்லை யென்று நானும் கூட பல மாவட்டச் செயலாளர்களை உசுப்பி விட்டேன். உசுப்பி விட்டதால் மட்டுமல்ல உருவான காரியமொன்றுக்கு உதவுகிறோம் - உறுதுணையாகிறோம் - ஏன்; நாமேதான் உருவாக்குகிறோம் என்ற உணர்வுடன் பணியாற்றி நிதி குவித்த மாவட்ட, ஒன்றிய, நகர, சிற்றூர், பேரூர் கழக அமைப்புகளை - கழக இளைஞர் அணி, மாணவரணி, தொழிலாளர் அணி, மகளிர் அணி, வழக்கறிஞர் அணிகளைச் சார்ந்தோரை - எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

கழகநிதி - அறிவாலய நிதி 1985 முதல் இதுவரை வழங்கியுள்ள மாவட்டங்களை; அவை அளித்துள்ள நிதித்தொகைக்கேற்பத் தொகுத்துத் தெரிவிக்கிறேன் இக் கடிதவாயிலாக!

வட ஆற்காடு (வடக்கு)	ரூ. 3,18,253
மதுரை (புறநகர் மாவட்டம்)	ரூ. 3,01,428
தர்மபுரி மாவட்டம்	ரூ. 3,10,775
புதுக்கோட்டை மாவட்டம்	ரூ. 3,00,000
பெரியார் (தெற்கு)	ரூ. 2,05,790
காமராசர் மாவட்டம்	ரூ. 2,04,155
வடஆற்காடு (தெற்கு)	ரூ. 1,74,250
மதுரை மாநகர் மாவட்டம்	ரூ. 1,61,088
குமரி மாவட்டம்	ரூ. 1,31,001
மதுரை அண்ணா மாவட்டம்	ரூ. 1,05,060
பசும்பொன் தேவர் மாவட்டம்	ரூ. 1,03,370
இராமநாதபுரம் மாவட்டம்	ரூ. 1,00,000

இந்தப் பன்னிரண்டு மாவட்டக் கழகச் செயலாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் விழா நாளன்று அண்ணா அறிவாலயம் பதித்த பெரிய கேடயங்களைப் பரிசாகப் பெற இருக்கின்றனர்.

கர்நாடக மாநிலம்	ரூ. 45,165
புதுவை மாநிலம்	ரூ. 28,030

ஆந்திர மாநிலம்	ரூ. 10,405

இந்த மூன்று மாநில அமைப்பாளர்களும் அண்ணா அறிவாலயக் கேடயம் பரிசு பெறுவர்!

ஐந்து லட்சரூபாயும் அதற்கு மேலும் நிதி வழங்கிய மாவட்டங்கள் இதோ:-

கோவை மாவட்டம்	ரூ. 6,50,622
பெரியார் (வடக்கு)	ரூ. 6,43,170
தென்னாற்காடு மாவட்டம்	ரூ. 6,05,383
செங்கை அண்ணா மாவட்டம்	ரூ. 5,78,995
தஞ்சை மாவட்டம்	ரூ. 5,13,539

இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் அல்லது பொறுப்பாளர்கள் அண்ணா அறிவாலயம் பதித்த பெரிய கேடயங்களன்னியில் ஒரு பவுன் கணையாழியும் பரிசாகப் பெறுவர்.

எஞ்சியுள்ள சென்னை, திருச்சி, சேலம், நெல்லை மாவட்டங்கள் முதல் பரிசு, இரண்டாவது பரிசு, மூன்றாவது பரிசு, ஆறுதல் சிறப்புப் பரிசு என்ற நான்கு பரிசுகளில் எந்தப் பரிசை எந்த மாவட்டம் பெறும் என்ற ஆவல் - என்ற எதிர்பார்ப்பு - உனக்கு இருப்பது போலவே எனக்குமிருக்குமல்லவா?

கடந்த கடிதத்தில் பரிசுகளை சுட்டிக்காட்டி எல்லா மாவட்டங்களையும் கோதாவுக்கு அழைத்திருந்தேன். பாவம், அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு அலைந்து திரிந்து ஓய்வின்றிப் பாடுபட்டு இந்தத் தொகைகளை வழங்கியுள்ளனர் என்று தெரிந்திருந்தும்; கட்சிக்கு நிதி திரட்டும் ஒரு விஷயத்தில் மட்டும் இரக்கமின்றி நடந்து கொள்ளும் நான்; இப்போது மட்டும் இயல்பை மாற்றிக்கொள்ள முடியுமா என்ன! அதுவும் என் வாழ் நாளில் மிகப்பெரும் குறிக்கோள் ஒன்று நிறைவேறுகிறது என்கிற போது!

நான்கு மாவட்டப் போட்டியில் மூன்றாவதாக இருந்த சென்னை மாவட்டம்; 11-ந் தேதி பிற்பகல் முதலாவது இடத்துக்கு வந்து விட்டது. தர்மபுரி மாவட்ட சுற்றுப்பயணத்தை முடித்து

விட்டு வரும் வழியில் ராணிப்பேட்டையில் தங்கியிருந்த நானும் நண்பர் வீராசாமியும் தம்பி துரைமுருகனும் சென்னைக்கு தம்பி டி.ஆர். பாலுவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது சென்னை மாவட்ட நிதி ரூ. 14,00,011 என்று அறிவித்தார். முதல் பரிசுக்குரியதாயிற்று சென்னை!

ஏற்கெனவே ரூ. 10,37,000 அளித்திருந்த சேலம் மாவட்டச் செயலாளர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம், தருமபுரி மாவட்டத்தில் அனுமந்தபுரம் என்ற ஊர்ப்பொதுக் கூட்டத்தில் 10-ந் தேதி இரவு நான் பேசிக் கொண்டிருந்தபோது மேலும் ஐம்பதாயிர ரூபாய் அனுப்பினார். அத்துடன் 11-ந் தேதி மாலை என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேலும் சேர்ந்த நிதித்தொகையை இரவே அனுப்பி வைப்பதாக கூறியதற்கேற்ப எழுபத்தி ஐயாயிரம் ரூபாய் வந்து சேர்ந்தது. ஆக மொத்தம் சேலம் மாவட்டம் ரூ. 11,62,000 நிதி வழங்கி; இரண்டாவது பரிசுக்குரிய இடத்தை அடைந்துள்ளது.

திருச்சி மாவட்டச் செயலாளர் எஸ்.கே. வடிவேலு ரூ. 11,55,000 என்ற அளவில் இருந்தவர்; கடைசிநேரப் போட்டி விறுவிறுப்பில் முதல் இடத்திலிருந்து மூன்றாவது இடத்திற்கு சென்றாலும் அவரும் அதற்குரிய பரிசை பெறுகிறார்.

எங்களுக்கு எந்தப் பரிசுமில்லையா என ஏக்கக் குரலை உரிமைக் குரலாக ஒலித்தனர் தம்பி கோபாலசாமி, சவுந்திரபாண்டியன் இருவரும்! எனினும்; ரூ. 7,45,000 நிதியினை ஒரே தடவையில் இரண்டே நிகழ்ச்சிகளில் வழங்கிய நெல்லை மாவட்டம் நான்காவது இடம் பெற்று ஆறுதல் சிறப்புப் பரிசு பெறுகிறது!

முதல் பரிசு; அண்ணா அறிவாலயம் பதித்த பெரிய கேடயமுடன் இரண்டரை பவுன் கணையாழி!

இரண்டாவது பரிசு; அண்ணா அறிவாலயம் பதித்த பெரிய கேடயமுடன் இரண்டு பவுன் கணையாழி!

மூன்றாவது பரிசு; அண்ணா அறிவாலயம் பதித்த பெரிய கேடயமுடன் ஒன்றரை பவுன் கணையாழி!

நாலாவது ஆறுதல் பரிசு; அண்ணா அறிவாலயம் பதித்த பெரிய கேடயமுடன் ஒண்ணேகால் பவுன் கணையாழி!

இந்தப் பரிசளிப்பு விழா - பாராட்டு விழா - அறிவாலயத் திறப்பு விழா - நாஞ்சிலார், நீலநாராயணன், பொற்செல்வி ஆகியோருக்கு விருது வழங்கும் விழா - மாலை மூன்று மணிக்குத் தொடங்க இருக்கும் மாபெரும் ஊர்வலம் - அனைத்திலும் உன்னைக் காண என் பார்வை அலையும்!

நீயோ அலை பாயும் கடலையும் வெல்லும் விதமாக அணி திரளுவாய்!

அன்புடன்

மு.க.

13-09-1987

1516. விளக்கக் கடிதம் ஏன் தேவைப்பட்டது?

உடன்பிறப்பே,

காவிரிப் பிரச்சினையைப் பற்றிய அரிச்சுவடி கூடத் தெரியாத ஒரு அமைச்சர்; கூறியுள்ள சில கருத்துகள் இதயம் பேசுகிறது (13.9.87) இதழில் வெளிவந்துள்ள காரணத்தால் - அந்த அமைச்சரைப் பொருட்படுத்தி நான் எதுவும் பதில் சொல்ல விரும்பாவிட்டாலும்; அவர் வெளியிட்டுள்ள அபத்தமான கருத்துக்கள் தான் தமிழக அரசின் கருத்து என்று நாளைக்கு கர்நாடக மாநிலம் தனது தவறான வாதத்துக்கு வலிமை சேர்த்துக் கொண்டு - அதனால் தமிழ்நாட்டு காவிரிப்பகுதி விவசாயிகளின் வருங்காலம் பாழாகி விடக்கூடாதே யென்பதற்காக - அன்றும் சரி; இன்றும் சரி; தமிழக அரசின் கருத்து - அந்த அமைச்சர் வெளியிட்டுள்ளது போன்றதல்ல என்பதை விளக்க வேண்டியது எனது கடமையாகிறது. தமிழ்நாட்டு மக்களின் பொதுப்பிரச்சினையில் கட்சிக் கண்ணோட்டமின்றி அணுகுமுறை கடைப்பிடிக்கும் நண்பர் மணியன் கூட எப்படி வெளியிட்டார் என்று நானே வியப்படைகிறேன்.

முரசொலி இதழில் 30.8.87 ஞாயிறன்று எனது குடந்தைப் பொதுக்கூட்டப்பேச்சு முழுமையாக வெளிவந்துள்ளது. அதைப் படித்துப் பார்த்தவர்களுக்கு - கடந்த காலத்தில் பல நேரங்களில் காவிரிப் பிரச்சினை குறித்து நான் வெளியிட்ட அறிக்கைகள், சட்டப்பேரவையில் பேசியவை ஆகியவற்றை மறக்காமல் இருப்பவர்களுக்கு இதயம் பேசுகிறது இதழில் தமிழகப் பொதுப்பணி அமைச்சர் தந்துள்ள தகவல்கள் தவறானவை; அறியாமையின் பாற்பட்டவை என்பது தெளிவாகும்.

பொதுப்பணி அமைச்சரிடம் பேட்டி கண்டவர் ஒரு கேள்வி கேட்கிறார் - அந்தக் கேள்வி இதோ:-

கேள்வி : மேட்டூர் அணைக்கு 100 டி.எம்.சி. தண்ணீர் விடுவதாகத் தமிழகத்திற்கும் கர்நாடகத்திற்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. மேட்டூர் அணைக்கு வரும் 100 டி.எம்.சி. நீரை எந்த விதத்திலும் கர்நாடகம் தடுக்க கூடாது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் இந்த உடன்பாடு கையெழுத்தாவதற்கு முன்பு தி.மு.க. அரசு பதவியிலிருந்து நீக்கப்பட்டது; அதற்குப் பிறகு ஏற்பட்ட கவர்னர் ஆட்சியின் போது கர்நாடகத்திற்குச் சாதகமான செயல்களே நடந்தது என்று கருணாநிதி கூறுகிறாரே?

இந்தக் கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர்; நான் அப்படிக் கூறியதாகவே கருதிக் கொண்டு கருணாநிதி பத்தாண்டு காலத்தில் தஞ்சை மக்களையும் காவிரி பிரச்சினையையும் மறந்து விட்டார் என்று ஒரு போடு போட்டிருக்கிறார்.

கடந்த ஆகஸ்டு மாதம் 28ந் தேதி காவிரிப் பிரச்சினை குறித்து குடந்தைப் பொதுக்கூட்டத்தில் நான் பேசி அந்தப் பேச்சு முரசொலி (30.8.87) இதழில் வெளிவந்துள்ளது. 100 டி.எம்.சி. பற்றி என்ன பேசியிருக்கிறேன் என்பதைக் கேள்வி கேட்டவரும், பதிலளித்த அமைச்சரும், வெளியிட்ட பத்திரிகை நண்பரும் படித்துப் பார்ப்பது நல்லது.

கடைசியாக தமிழ்நாடு சர்க்கார், தமிழ் நாட்டில் உள்ள தஞ்சை, திருச்சி போன்ற டெல்டா பிரதேசத்திற்கு, இதுவரையில் வருகிற காவிரி தண்ணீரில் நூறு டி.எம்.சி. தண்ணீர் சிக்கனப்படுத்தினால் போதும் - குறைத்துக் கொள்வதல்ல - நூறு டி.எம்.சி. தண்ணீரைச் சிக்கனப்படுத்துவது; modernisation - தஞ்சை மாவட்டத்தில் வாய்க்கால்களை தூய்மைப்படுத்தி, ஆழப்படுத்திப் பயிர்களுக்குச் செல்கிற தண்ணீர் வீணாகப் பாழாகாமல் சிக்கனப்படுத்தி - அந்த வகையில் நூறு டி.எம்.சி.யை நாங்கள் சிக்கனப்படுத்துகிறோம் என்று ஒப்புக்கொண்டு அந்த ஒப்பந்தம் எழுதப்பட்டு இரவு மூன்று மணிக்கு, கையெழுத்தாகும் நேரத்தில் அதிலே இரண்டொரு வரிகளில் சில ஆட்சேபணைகள் இருந்த காரணத்தால் தமிழக அரசு அதிகாரிகள் அந்த வரிகள் ஆட்சேபகரமாக இருக்கின்றன என்று எடுத்துக்காட்டி நாங்களும் ஜெகஜீவன்ராமிடம் எடுத்துச் சொல்லி அன்றைக்கு கையெழுத்து போடமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அடுத்து இரண்டொரு மாதங்களில் கூடிப்பேசி

ஒரு முடிவிற்கு வரலாம் என்று இருந்தபோது கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. இதுதான் நிலைமை.

அதற்கடுத்து - கழக ஆட்சி கலைக்கப்பட்டதும், கவர்னர் ஆட்சி வந்தது. அந்த ஆட்சியில் - கவர்னர் ஆட்சியில் கர்நாடக மாநிலம் சொன்னதை யெல்லாம் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். ஆட்சி வந்தது. எம்.ஜி.ஆர். ஆட்சியில் நாங்கள் தி.மு. கழக ஆட்சியில் எந்த அளவிற்கு ஒப்பந்தம் வந்து நின்றது என்பதை எடுத்துச் சொன்னோம். ஆயிரம் வேறுபாடுகள் நமக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையில் இருந்தாலுங்கூட தி.மு.கழக ஆட்சியில் எந்த அளவிற்கு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடத் தயாராக இருந்தோமோ அந்த அளவிற்குத்தான் நாங்களும் ஒத்துக் கொள்ள முடியும் என்று எம்.ஜி.ஆர். ஆட்சியில் அவர்களும் கறாராக இருந்தார்கள். அதிலே எங்களுக்குள் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை.

இருக்கிற சங்கடமெல்லாம் தொடர்ந்து இந்தப் பத்தாண்டு காலம் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தால் - அவர்கள் வலிய வலிய வந்தார்கள்; மத்திய அமைச்சர்கள் வந்தார்கள்; கேரள அமைச்சர்கள் சென்றார்கள்; கர்நாடக அமைச்சர்கள் சென்றார்கள்; தலைவலி இல்லாதவன் எல்லாம் வருவான்; தலைவலி உள்ள நாம் போகவில்லை. இப்படி போகாத காரணத்தால் பல மாநாடுகளுக்கு நாம் செல்லாத காரணத்தால், இன்று காவிரி வறண்டுபோய் கிடக்கிற காட்சியைக் காணுகிறோம்

இது முரசொலியில் வெளிவந்துள்ள எனது குடந்தைப் பேச்சின் ஒரு பகுதி! 100 டி.எம்.சி. தண்ணீரை சிக்கனப்படுத்துவது என்றால் - அதைப் புரிந்து கொள்ளாமல் 100 டி.எம்.சி. தண்ணீரே தமிழ்நாட்டுக்குப் போதுமென்று கழக அரசு ஒப்புக் கொண்டதாகவும் அப்படி நான் சொன்னதாகவும் கேள்வி கேட்டவர் தான் தெரியாமல் கேட்டார் என்றால் - காவிரி பேச்சுவார்த்தை பற்றிய அரசின் கோப்புகளைப் படித்த அமைச்சரும் தெரியாத்தனமாக பதில் சொல்வதா? பாவம்; அவர் அந்தக் கோப்புகளை இனிமேலாவது படித்து உண்மையை அறிவாராக! அல்லது ப.உ.ச. போன்ற அமைச்சர்களையாவது அணுகித் தெரிந்து கொள்வாராக!

பத்திரிகை சார்பில் அமைச்சரிடம் இன்னொரு கேள்வி கேட்கப்படுகிறது.

கேள்வி :- 1924ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி ...?

பதில் :- கருணாநிதி காலத்தில்தான் இந்த ஒப்பந்தம் காலாவதியானது.

அடப்பாவி! என்று வாய்விட்டு அலறத் தோன்றுகிறது; இந்த பதிலைப் படிக்கும்போது!

1924 ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டு அதாவது 50 ஆண்டு கழித்து காலாவதியாகும் என்று எந்த ஷரத்தும் இல்லை.

இதைத்தான் அன்றும், இன்றும் தமிழக அரசின் சார்பில் வலுவான வாதமாக வைக்கப்பட்டு வருகிறது.

ஆனால் அமைச்சர் தமிழக அரசின் அடிப்படையான வாதத்துக்கு விரோதமாகவே தமிழ்நாட்டையே காட்டிக் கொடுக்கும் ஒரு பதிலை அளித்து - கர்நாடக அரசுக்கு நல்ல பிள்ளையாக மாறி நிற்கிறார்!

1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் குறித்து நான் கடந்தமாதம் ஆகஸ்டு 28ந் தேதி குடந்தைக் கூட்டத்தில் தந்த விளக்கம் 30ந் தேதி முரசொலியில் வந்துள்ளது. அது ...

1974-ம் ஆண்டோடு காவிரி ஒப்பந்தம் முடிந்து விட்டது; அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க கருணாநிதி ஆட்சியில் தவறி விட்டார்கள் என்றெல்லாம் பேசுவார்கள். ஆனால் இது பாமரத்தனமாக - கேட்கிற மக்களுக்கு, ஓகோ, அப்படியா! என்று கூட எண்ணத் தோன்றும். ஆனால் உண்மை என்ன என்பதை ஆதாரப்பூர்வமாக அணுகிப் பார்த்தால் நிச்சயமாக உண்மை கிடைக்கும். எது ஒன்றையும் தவறியும் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. 1974-ம் ஆண்டோடு ஒப்பந்தம் முடிவடைந்து விட்டது என்று சொல்வதே இமாலயத்தவறு. 1924-ம் ஆண்டு காவிரி ஒப்பந்தம் போடப்பட்டது. அதற்கு முன்பு போடப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில், 1924-ம் ஆண்டு காவிரி தண்ணீருக்கான அதை எப்படி பகிர்ந்து கொள்வது என்பதற்கான ஒப்பந்தம் தமிழ்நாட்டிற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையே வெள்ளைக்காரன் காலத்தில் போடப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில் முக்கியமான ஷரத்து என்னவென்றால், காவிரி டெல்டா பகுதியில் இருக்கும் விவசாயிகளுக்கு அவர்களுடைய ஆயக்கட்டு உரிமைப்படி அவர்களுக்குச்

சேரவேண்டிய தண்ணீர் எவ்வளவு என்று கணக்கிட்டு அது எந்தெந்த காலக் கட்டங்களில் திறக்கப்பட வேண்டும் என்பதற்கான அளவுகள் எல்லாம் நிர்ணயிக்கப்பட்டு காவிரியில் கிருஷ்ணராசசாகர் அணைக்கட்டில் மைசூரில் எவ்வளவு தண்ணீர் இருந்தால் எவ்வளவு திறந்து விட வேண்டும் என்றெல்லாம் கணக்கெடுக்கப்பட்டு; தண்ணீர், அடி மட்டத்தில் இருந்தால் இருபது அடிக்கு கீழேதான் மைசூர் கிருஷ்ணராசசாகரில் தண்ணீர் இருக்கிறது என்றால், அப்போது அந்தத் தண்ணீர் முழுவதையும் தமிழ்நாட்டிற்குத் திறந்துவிட வேண்டும் என்பது ஒப்பந்தம்.

இவை எல்லாம் கூட மக்களுக்கு அறிவிக்கப்படாமலே போய்விட்ட விவகாரங்கள். ஆனால் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் இன்னுமொரு முக்கியமான ஷரத்து, 1974-ம் ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டோம் என்பதல்ல - அதோடு ஒப்பந்தம் காலாவதியாகி விடுகிறது என்பதல்ல.

1974-ம் ஆண்டு என்ன செய்வதென்றால் காவிரியில் வருகிற உபரி தண்ணீர் - இப்பொழுது வருகிற தண்ணீர் இவ்வளவு டி.எம்.சி. என்றால், இந்தத் தண்ணீரைவிட அதிகமாக வருகிற தண்ணீரை எப்படிப் பங்கிட்டுக் கொள்வது என்பதைப்பற்றி 74-ம் ஆண்டு கலந்து பேசி முடிவு செய்யலாம் என்று தான் இருக்கிறதேயல்லாமல், 74-ம் ஆண்டோடு காவிரி ஒப்பந்தம் ரத்து, அதற்குப் பிறகு காவிரி ஒப்பந்தத்திற்கு உயிர் கிடையாது என்று கூறினால் அது மிகத்தவறு. அப்படிச் சொன்னால் அது தமிழ் நாட்டிற்குச் செய்கிற மாபெரும் துரோகம்.

24-ம் ஆண்டு ஒப்பந்தம் 74-ம் ஆண்டு புதுப்பிக்கப்பட வேண்டிய ஒப்பந்தமே தவிர ரத்தாகும் ஒப்பந்தம் அல்ல; அப்படி புதுப்பிக்கப்படும்போது அதிலே உள்ள ஷரத்து, உபரி தண்ணீரை (Surplus water) எப்படிப் பங்கிட்டுக் கொள்வது? என்கிற பிரச்சினை ஆராயப்பட வேண்டும். அப்படி ஆராய்வதில் தகராறு ஏற்படுமேயானால் மத்திய சர்க்கார் அதைத் தீர்த்து வைக்க வேண்டும். அதிலும் முடிவு ஏற்படாவிட்டால் நடுவர் தீர்ப்பிற்கு விடப் படவேண்டும். இதுதான் 74-ம் ஆண்டில் நாம் எப்படி அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்வது; அதிலே தகராறு ஏற்பட்டால் எப்படி முடிவு மேற்கொள்வது என்று இருக்கின்ற ஷரத்துக்களாகும்.

இதுதான் நான் குடந்தைக் கூட்டத்தில் அளித்த விளக்கம்!

இந்த நிலையைக் கூடப் புரிந்து கொள்ளாமல் என்மீதும் கழக ஆட்சியின் மீதும் களங்கம் கற்பிப்பதற்காக உண்மையை மறைத்து ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்று கூறி கர்நாடக அரசின் வாதத்திற்குப் பக்க பலமாக நிற்பது தமிழகத்தின் நலன்களுக்கு முழுக்க முழுக்க விரோதமானது என்பதை இந்த அமைச்சரைப் போன்ற அவசரக் குடுக்கைகள் உணராமல் தத்துப்பித்தென்று ஏதோ சொன்னாலும்; தமிழக நலனில் அக்கறையுள்ள இதயம் போன்ற ஏடுகள் அந்தத் தவறான கூற்றுக்கு இடமளித்து விடக்கூடாது என்பதே எனது பணிவன்பான வேண்டுகோளாகும்.

பேட்டியளித்தவர் பெரிது படுத்தப்படவேண்டியவர் அல்ல என்றாலும் பிரச்சினை பெரியது - தமிழர்கள் அனைவருக்கும் பொதுவானது என்பதால் இந்த விளக்கக் கடிதம் தேவைப்பட்டது!

அன்புடன்

மு.க.

14-09-1987

1517. உடன்பிறப்பே! என்னை மன்னித்துவிடு!

உடன்பிறப்பே,

தமிழ்மணக்கும் திசையெல்லாம்
தேடினேன் உன்னை

சான்றோர்த்தும் அவையெல்லாம்
அலையவிட்டேன் கண்ணை

கமழ்கின்ற பைந்தமிழே
காவியமே அண்ணா

கண்கலங்க கதறவிட்டு
சென்றனையோ அண்ணா

எங்கே சென்றாய்?
எங்கே சென்றாய்?

எங்களை ஏங்கவிட்டு எங்கே சென்றாய்?

அண்ணா அறிவாலயத் திறப்பு விழா மேடையில் இசைமுரசு நாகூர் அனிபா இந்தப் பாடலை பாடத்தொடங்கியதுமே,குழுமியிருந்த லட்சோப லட்சம் தமிழ்ப் பெருங்குடிமக்களின் கண்களிலேயிருந்து அருவிகள் கொட்டத் தொடங்கின!

அண்ணியார் அவர்களுக்கு அடுத்த நாற்காலியில் நான் அமர்ந்திருந்தேன். அவர்கள் கண்களைத் துடைத்துக் கொண்டார்கள் எனினும் கண்ணீர் வெள்ளம் அடைபடவில்லை. என் நிலையும் பேராசிரியர் மற்றும் கழக முன்னணியினர் நிலையும் அதுவேதான்!

‘‘சுமார் முப்பத்தி மூன்று ஆண்டுகட்கு முன்பு ராயபுரத்திலே அறிவகம் திறக்கப்பட்ட போதும் நான்தான் பாடினேன்; இன்று அறிவாலயத் திறப்பு விழாவிலும் நான்தான் பாடுகிறேன்’’

என்று இசை முரசு கூறிய போது! ஏ, அப்பா எத்தனை ஆண்டுக்காலம் குரல் வளம் மட்டும் அப்படியே இருக்கிறது என்று வியப்படைகிற பலருக்கு குரல் வளம் மட்டுமல்ல; கொள்கை வளம் கூடத்தான் என்று பதில் அளிக்கும் நமக்கு எவ்வளவு பெருமையாக இருக்கிறது.

இசை முரசு அனிபாவைத் தொடர்ந்து இந்தக் கழகத்தின் கலைச்செல்வங்களாக, இசைவாணர்களாகப் பலர், பட்டி தொட்டியெங்கும் நிகழ்ச்சிகள் நடத்திக் கொள்கை விளக்கப் பிரச்சாரம் செய்வதையும், இன்னல்கள் பலவற்றுக்கிடையே உறுதிபடைத்த நெஞ்சினராய் அவர்கள் பணியாற்றுவதையும் நான் அவ்வப்போது பாராட்டுகிறேன் எனினும், எப்போதும் நினைத்து நினைத்து மகிழ்கிறேன் எனினும், அவர்களும் போற்றிப் புகழக்கூடிய மூத்த இசைச் செல்வராக நமது நாகூரார் திகழ்கிறார் என்பது தெளிவான உண்மையல்லவா?

எங்கே சென்றாய்?
எங்கே சென்றாய்?
எங்களை ஏங்க விட்டு எங்கே சென்றாய்?

என்று அண்ணனை நினைத்து உருகினோம்; மகிழ்ச்சியாக இருந்திட வேண்டிய அந்த விழாவிலே - அண்ணன் இருந்திருந்தால் மகிழ்ச்சிக்கு எல்லையே இருந்திருக்காதே என்ற ஆதங்கம் நம்மை வாட்டிக் கொண்டிருந்ததில் வியப்பில்லையே!

எங்கே சென்றாய்?

என்ற ஏக்கக்குரல் அறிவாலய விழா மேடையில் மட்டுமா; அனிபா அவர்களின் பாடலில் மட்டுமா? அண்ணனை எண்ணி எழுந்த அந்த உருக்கமிகு கேள்வி அந்த விழா முடிந்து மூன்று நாட்கள் வரையில்! உடன்பிறப்பே உன்னைப் பற்றியுமல்லவா என் இதயத்தில் எழுந்து துளைத்துப் போட்டு விட்டது!

வா! வா! என அழைத்துக் கடிதம் ஏன் எழுதினோம் என்ற கவலை என்னைப் பிடித்துக் கொண்டது!

நீ மட்டுமல்ல; உன் குடும்பத்தோடு - பாட்டன், பாட்டி, பேரன், பேத்திகளோடு வருக என அழைத்ததால் அல்லவா அவ்வாறே வந்தனர்; இப்போது அவதிக்கு ஆளாயினர் எனக் கலங்கினேன்!

இதுவரை இத்தனை பெரிய கூட்டம் அண்ணாவின் மறைவின் போது தான் சென்னையில் கூடியது - அதற்கு அடுத்து அண்ணா அறிவாலய நிகழ்ச்சியில்தான் இன்று அந்தக் கூட்டத்தைக் காண முடிந்தது எனக் கட்சிச் சார்பற்றோரும் வியந்து பாராட்டுகிற அளவுக்கு லட்சோப லட்சமெனத் திரண்ட ஆர்வத்தை எண்ணி மகிழ்கிற போது - இருபத்தி நான்கு மணி நேரம் தொடர்ச்சியாக என்னால் மகிழ்ச்சியாக இருக்கமுடியாது என்ற என் வழக்கமான நிலை தான் எனக்கு ஏற்பட்டது! ஆம்! 17, 18, 19 மூன்று நாட்கள் - 19ந் தேதி மாலை வரையில் எனக்கும் பேராசிரியருக்கும் கழக முன்னணியினருக்கும் நிம்மதியில்லை.

அறிவாலயம் எழக்காரணமாக இருந்தது உன் போன்ற உடன்பிறப்புகள் தந்த ஒவ்வொரு காசும் தான் என்கிற போது அந்த உடன்பிறப்புகள் இல்லாமல் அறிவாலயத் திறப்பு விழாவா? என்ற நினைவில் தான் உன்னை வரவேண்டுமென வலியுறுத்திக் கடிதங்கள் தீட்டினேன்!

கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செங்கல்லும் - ஒவ்வொரு தூணும் - ஏன் எல்லாப் பொருளுமே நீ தந்ததன்றோ?

அந்த அன்பின் பெருக்கினால்தான் ஆருயிரே வருக என அழைத்தேன்.

அழைத்தபோது இப்படியொரு அல்லலுக்கு ஆளாவாய் வழியில் என நான் எதிர்பார்க்கவில்லை.

சாலை மறியல் போராட்டக் கிளர்ச்சியில் இடையே ஒரு பகுதியில் நீ சிக்கிக்கொள்ள நேரிட்டதைத்தான் குறிப்பிடுகிறேன்.

மறியல் அறிவித்த தலைவர்களை அரசு அழைத்து பேசியிருக்க வேண்டும்.

அப்படிப் பேச முன்வராதது இந்த அரசின் பெருந்தவறு!

மறியல் போராட்டம் நடந்தே தீரும் என்று அறிந்த பிறகாவது பொதுமக்களுக்கும் போக்குவரத்து வாகனங்களுக்கும் அரசின் சார்பில் நிலைமை குறித்து முன்விளக்கம் தரப்பட்டிருக்க வேண்டும்.

அதற்கு மாறாக - போக்குவரத்துக்கு எந்தத் தடையுமிருக்காது என்று அரசின் மிக முக்கிய அதிகாரிகள் அறிக்கை விடுத்தது இன்னொரு பெருந்தவறாகும்.

17ந் தேதி காலையில் தான் மறியல் தொடங்குமென எண்ணி உன்போன்ற உடன்பிறப்புகள் சென்னையிலிருந்து 16ந் தேதி இரவே திரும்பும் போது அந்த இரவே மறியல் தொடங்கி விட்டதை தலைமைக் கழகக் கவனத்துக்கு சென்னையில் உள்ள அதிகாரிகள் முன்கூட்டியே தெரிவித்திருந்தால் - விரும்பத் தகாத நிலைமைகள் ஏற்படாமல் தவிர்த்திருக்க முடியும்.

காலமெல்லாம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டச் சமுதாயத்திற்காக - சாதாரண சாமானிய ஏழை எளிய நடுத்தர மக்களுக்காக வாதாடுவதையும், போராடுவதையும் இலட்சியமாகக் கொண்ட இந்த இயக்கம் எந்தவொரு பிற்படுத்தப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளையும் குறைத்து மதிப்பிடக் கூடிய கோணல் புத்தி கொண்டதல்ல என்பதை அறிந்திருந்தும் சில குறைமதியாளர்கள் - குரோத மனங்கொண்டோர் சிண்டு முடிந்து சீண்டிவிடப் பார்த்தனர்.

ஆனால் உடன்பிறப்பே! நமது கழகத்தின் அடிப்படை உணர்வைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிற நீ எதிர் நின்று யார் அடித்தாலும் - மறித்தாலும் - ஏசினாலும் - பேசினாலும் - அவர்களும் நம்மவர்தான்; அவர் வேறு நாம் வேறு அல்லர் நீர் இடித்து நீர் விலகப் போவதில்லை என்ற பாசமுடன் பொறுமையாக இருந்தாய் என்பதைக் கேள்விப்பட்டுப் பூரித்துப் போகிறேன்.

ஓரிரு ஆண்டின் முன்னர் மதுராந்தகம் பாலம் வெள்ளத்தில் பாழடைந்தது. அதன் காரணமாக சில நாட்கள் சென்னையிலிருந்து திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, மதுரை, சேலம், கோவை, நெல்லை, குமரி போன்ற இடங்களுக்குப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மதுராந்தகம், விக்ரவாண்டி, விழுப்புரம் ஆகிய இந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டால் பெரும்பகுதி போக்குவரத்தே பாதிக்கப்படும் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை! ஆனால் நமது அரசின் அதிகாரிகள் கவனத்திற்கு அந்த உண்மை எப்படித் தெரியாமல் போனதோ; அறிய முடியவில்லை!

அதிகாரிகள் அதுபற்றி முன் கூட்டி யோசித்திருந்தால் - நிலைமை இந்த அளவு வன்முறையாக உருவெடுத்து பத்து பன்னிரெண்டு தமிழர்கள் பிணங்களாகியிருக்கத் தேவையே இருந்திருக்காது!

விழாவுக்கு வந்த உனக்கு ஏற்பட்ட எதிர்பாராத துன்பம் கண்டு இடிந்து போய் உட்கார்ந்திருந்த எங்களுக்கு இப்போதுதான் சிறிது ஆறுதல்!

ஆயிரம் பேர் பத்தாயிரம் பேர் என்று குழுமியிருந்தும் கூட; ஆத்திரப்படக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டும் கூட; கழகத்தின் மாவட்ட தளகர்த்தர்கள், முன்னணியினர், செயல்வீரர்கள், கழகக் குடும்பத்தினர், இவர்களுடன் நமது மதுரை ஆதீனகர்த்தர் அடிகளார் அவர்கள் மூன்று நான்கு நாட்கள் அமைதி காத்திடப் பெரும் பொறுப்பேற்று;

எங்களுக்கு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்ள வாய்ப்பு வழங்கியிருப்பதொன்றே; இந்த இயக்கத்தின் கடமையுணர்வுக்கும், கண்ணியமனப்பான்மைக்கும் கட்டுப்பாட்டுத் தன்மைக்கும் பொருத்தமான எடுத்துக் காட்டாகும்.

அழைத்தேன் வந்தாய்!
இடையில் என்ன ஆனாயோ?
எங்கே சென்றாயோ; என நினைத்து
இளைத்தேன்!
பத்திரமாக ஊர் போய்ச் சேர்ந்தாய்
எனக்கேட்டு இன்று களித்தேன்!

என் அழைப்புக் கடிதம் உனக்கு விளைத்த தொல்லைக்காக என்னை மன்னித்துவிடு!

அன்புடன்

மு.க.

21-09-1987

1518. அமைச்சர்களும் - அரைவேக்காடுப் பேச்சுகளும்!

உடன்பிறப்பே,

வன்னியர் சங்கத்தின் சார்பில் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட சாலை மறியல் தொடர் போராட்டம்; இடையில் நுழைந்த சமூக விரோத சக்திகளால் வன்முறை வடிவம் கொண்டது மட்டுமல்லாமல் தாழ்த்தப்பட்டோர் - வன்னியர் மோதல் என்கிற அளவுக்கு சாதிக் கலவரமாகவும் உருவெடுத்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

அப்படியொரு நிலைமை வளர்ந்து விடாமல் தடுக்கவும் - அதனை ஊக்கப்படுத்தாமல் இருக்கவும் சகல தரப்பாரும் கடமையுணர்வுடன் பொறுப்பேற்று செயலாற்ற வேண்டும் என்பதில் இருவிதமான கருத்துக்கு இடமே இல்லை!

கோரிக்கை வைத்துப் போராடுகிறவர்களின் நோக்கம்; அரசின் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காகத்தான் இருக்க முடியுமே தவிர பிற வகுப்பாரோடு - அல்லது பிற கட்சிகளோடு மோதிக் கொள்ள வேண்டும் என்பதாக இருக்க முடியாது! இருக்கவும் கூடாது!

அமைதி காண்பதற்கும் - அமளி ஓய்வதற்கும் வழிவகைகளைக் காண வேண்டிய இடத்தில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் சிலர்; கிளர்ச்சியாளர்களை மேலும் ஆத்திரப்படுத்துகிற அளவுக்கு பிரசங்கங்கள் புரிவதும், பேட்டிகள் அளித்துக் கொண்டிருப்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாக இல்லை!

ஏற்கெனவே அரசின் அலட்சியப் போக்கையும் அதனால் பத்து பனிரெண்டு பேர் துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டு போக நேர்ந்ததையும் சுட்டிக்காட்டி தி.மு.க., மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளின் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையிலும் - தி.மு.க. சார்பில் நான் வெளியிட்ட மற்றொரு அறிக்கையிலும் - போராட்டம் அறிவித்த வன்னியர் சங்கத்தினரை போராட்டத்துக்கு முன்பே அரசின் சார்பில் அழைத்துப் பேசியிருக்க வேண்டும் என்பது கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் இந்த அரசின் அணுகுமுறை எப்படியிருக்கிறது என்பதற்கு அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் மதுரையில் நிருபர்களுக்கு அளித்துள்ள பேட்டியே போதுமான சான்றாக அமைந்துள்ளது.

வன்னியர் போராட்டம் பற்றி உங்கள் நிலை என்ன? என்று நிருபர்கள் அவரைக் கேட்கிறார்கள்.

அதற்கு அமைச்சர் அளித்துள்ள பதில் வருமாறு:-

கடந்த 4ந் தேதி தென் ஆற்காடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்த போதே வன்னியர் கிளர்ச்சியைக் கண்டித்தேன். அப்பாவி மக்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தி வசதியுள்ளோர் வாய்ப்பைத் தேடிக் கொள்ளும் போராட்டம் என்றும், அதை மக்கள் ஆதரிக்கக் கூடாதென்றும் முதல்வர் எம்.ஜி.ஆர். சார்பிலும் எங்கள் இயக்க சார்பிலும் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன்.

அமைச்சரின் இந்த பதிலில் இருந்து என்ன தெரிகிறது? போராட்டத்தை மக்கள் ஆதரிக்கக் கூடாதென்று இவரும் இவரது தலைவர் எம்.ஜி.ஆரும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்களே தவிர, போராட்டம் அறிவித்த சங்கத்தினரை அழைத்து அவர்களிடம் பேசி, அவர்களைச் சமாதானப்படுத்த முயற்சி எதுவும் எடுக்கவில்லை என்பது தானே அமைச்சரின் பதிலில் இருந்து தெளிவாக விளங்குகிறது!

அமைச்சரின் பேட்டி இத்துடன் நிற்கவில்லை - அரசியல் கட்சிகள் மீது குறிப்பாக தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றின் மீதும் சீறிப் பாய்ந்துள்ளார்.

அரசுக்கு எப்படியாவது கெட்ட பெயர் வரட்டும் என்று பேசாமல் இருந்து விட்டு முற்போக்குக் கட்சிகளான தி.மு.க., மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள், போராட்டம் நடந்த பிறகு ஏற்பட்ட அசம்பாவிதத்துக்கு அரசின் மீது வீண்பழி சுமத்துவது சரியல்ல.

இப்படியொரு பழியை நம் மீதும் நமது தோழமைக் கட்சிகள் மீதும் அமைச்சர் சுமத்துகிறார். செப்டம்பர் 17ந் தேதி போராட்டத்தை செப்டம்பர் 4ந் தேதியே கண்டித்துப் பேசியதாகக் குறிப்பிடுகிற அமைச்சர் அந்தச் சங்கத்தினரை அழைத்து அவர்கள் கோரிக்கை பற்றிக் கலந்துரையாடினாரா? இல்லையென்றால் ஏன்? கலந்துரையாடிய பிறகும் அவர்கள் போராட்டம் நடத்தியே தீருவோம் என்று அறிவித்திருந்தால் அதனை எப்படி அணுகுவது என்பது குறித்து அமைச்சரவைக் கூட்டமாவது கூட்டப்பட்டதா? கூட்டப்படவில்லையென்றால் அதற்கு என்ன காரணம்?

இத்தனை அசம்பாவிதங்களுக்குப் பின்னராவது இன்று 22ந் தேதி வரையில் அமைச்சரவைக் கூட்டம் கூட்டப்பட்டு கலந்து பேசியதுண்டா?

அப்படிப் பேசாத காரணத்தினால்தானே அமைச்சர்கள் தலைக்குத் தலை ஏதேதோ - பேசுவதும் - அவை பத்திரிகையில் வெளியான பிறகு - அப்படிப் பேசவில்லையென்று மறுப்பதுமான முரண்பாடுகள் விளைந்துள்ளன.

போராட்டத்தை ஆதரிக்காமல் முன்கூட்டியே அ.தி.மு.க. அறிக்கை விட்டதாம்; மற்ற கட்சிகள் முன்கூட்டி அறிக்கை விடவில்லையாம், அது தவறாம்.

இப்படி அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார். போராடுகிறவர்கள் - அல்லது போராட்டத்தை அறிவித்தவர்கள் - தங்கள் கோரிக்கைகளைப் பற்றிய முடிவான கருத்துக்களை அரசாங்கத்திடம் எதிர்பார்க்கிறார்களே தவிர - அரசியல் கட்சிகளிடமா எதிர்பார்க்கிறார்கள்?

அவர்களை ஏமாற்றுவது போல் எம்.ஜி.ஆர். பெயரால் வந்த அறிக்கை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்ற முகவரியுடன் வந்ததே தவிர, தமிழக அரசின் முதலமைச்சர் என்ற முகவரியிட்டு வெளியிடப்படாத காரணம் என்ன?

போராட்டம் நடத்துகிறவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்துவீர்களா?

என்று மதுரையில் நிருபர்கள் கேட்கிறார்கள். அதற்கு அமைச்சர் பண்ருட்டியின் பதில் என்ன?

"No compromise with communal force at any time."

அதாவது ‘‘வகுப்புவாத சக்திகளிடம் எந்த நேரத்திலும் சமாதானம் என்ற பிரச்சினைக்கே இடமில்லை”

எனக்கூறி பேச்சு வார்த்தையே கிடையாது என அமைச்சர் ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்.

வகுப்புவாத சக்திகள் அவர்கள் - அவர்களோடு பேச்சுவார்த்தையே இல்லை என்று அமைச்சர் சொல்லுகிற அதே நேரத்தில் - எப்போதோ ஒரு தடவை அந்த வகுப்புவாத(?) தலைவர்களை முதலமைச்சர் சந்தித்து இரண்டு மணிநேரம் உரையாடியிருக்கிறார் என்று அமைச்சராக முன்பு இருந்த ஒருவர் ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டுள்ளார்.

வகுப்புவாத சக்தியென்று புறக்கணித்திருந்தால் முன்னொரு காலத்தில் அவர்களை முதலமைச்சர் எப்படி சந்தித்தார்? சந்தித்த போது வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்ன? அவற்றை நிறைவேற்றுவதாக முதலமைச்சர் வாக்குறுதி தந்தாரா? அது இப்போது மீறப்பட்டதால் தான் போராட்டமா?

ஆளுங்கட்சியில் அமைச்சராக இருப்போர் - அமைச்சராக இருந்தோர் - இப்படி ஆளுக்கு ஆள் அறிக்கைகளை விடுத்து நிலைமையை மோசமாக்குவதற்குப் பதிலாக நிதானம் கடைப்பிடித்து அமைதிக்கு வழி காண்பாராயின் நல்லது.

இப்போது தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு இருக்கிறதா?
சர்க்கார் நடைபெறுகிறதா?
இப்படிக் கேள்விகள் எழத் தொடங்கி விட்டன!
இந்தக் கேள்விகளை
அமைச்சர்களின்
அரைவேக்காட்டுப்
பேச்சுகள் தடுத்து
நிறுத்த முடியாமல்

போய்விடக் கூடும் என்பதே
இக்கடிதˆ வாயிலாக விடுக்கும்
எச்சரிக்கையாகும்!

அன்புடன்

மு.க.

23-09-1987

1519. உண்மையா? இல்லையா?
உரியவர்கள் விளக்கிடுக!

உடன்பிறப்பே,

கேள்வி :

இந்த ஆண்டு ஆகஸ்டு ஏழாம் தேதி பிறப்பிக்கப்பட்ட அரசு இலாக்கா ஒன்றின் ஆணையின்படி தமிழ்நாடு ரிக் ஓனர்ஸ் சர்வீஸ் சொசைட்டி மூலம் ரிக்ஸ்களை மொத்தமாகப் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டு அதற்காக அமைச்சர் ஒருவருக்கு அறுபது லட்ச ரூபாய் காணிக்கை தரப்பட்டிருக்கிறதாமே?

பதில் :

ஒரு பாயிண்ட்டில் ரிக் மூலம் போர்வெல் போட - அமைச்சருக்கு இரண்டாயிரம் வீதம் மொத்தமாக இந்த சொசைட்டி மூவாயிரம் பாயிண்ட்களுக்கான பணத்தை லஞ்சமாகக் கொடுத்தால் 3000 x 2000 = அறுபது லட்சம் கொடுக்கத்தானே வேண்டியிருக்கும்! டெண்டர் போடாமல் ஒரு குறிப்பிட்ட சொசைட்டிக்கு மட்டும் இப்படியொரு தாராளத்தைக் காட்டியிருப்பதால் மற்ற ரிக்ஸ் உரிமையாளர்கள் கொதித்துப் போயிருப்பதாக கேள்வி!

இவ்வாறு முரசொலி 4.9.87 இதழில் கரிகாலன் பதில்கள் என்ற பகுதியில் எழுதியிருந்தது உனக்கு நினைவிருக்குமென நம்புகிறேன். அதனை மெய்ப்பிப்பதுபோல இந்தக் கடிதம் திருச்செங்கோடு எஸ். மகாலிங்கம் என்பவரால் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு 28.9.87ல் எழுதப்பட்டு அதன் பிரதிகள் முக்கிய பொறுப்பில் இருப்பவர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டுள்ளன. அந்த ஆங்கிலக் கடிதத்தையும் அதன் தமிழாக்கத்தையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

28.9.87

From :

S. Mahalingam,
Borewell Contractor,
36, East Car Street,
TIRUCHENGODE-637 211
Salem District, Tamilnadu.

To :

Sri Rajeev Gandhi,
Prime Minister, NEW DELHI.

Respected Sir,

Sub.: Corruption in Drought Relief work in Tamilnadu - Mininster Sri K. Rajaram, Sri Ponnaiyan and the M.D. of TWAD Board, Madras involved - reg.

This is to inform you that Drought Relief Work aided by the Central Government is carried on in Tamilnadu and there is very good example of corruption done by the Tamilnadu Ministers are naratted below:

Upto last month, Drought Relief Work was carried on by M.D. of TWAD Board, Madras directly for allocating of borewells in drought affected villages through private registered Rig operators of TWAD Board, Madras.

But this time, the brothers of the Law Minister, Sri Ponnaiyan and friends of TWAD Board Minister, Sri K. Rajaram, came to the picture for collecting Rs. 2,000/- per point from the rig owners through one unauthorised Society by name Tamil Nadu Rig Service Society (Not a Govt or Co-operative unit), in which the minister's brothers and friends are doing management work. Now they are selling borewell points as LOTTERY TICKETS. Nearly 2,500 points are given to this unauthorised society. But nearly 600 rig units are registered TWAD Board Madras now there is no need of TWAD Board and you ca issue order to abolish it and it will

save expenditure to the Goverment by means of Salary and other administrative expenditure.

So you are requested to give orders to the Managing Director, TWAD Board, Madras to do direct work to the registered contractors as before and you try to stop this Corruption of 50 laks to be given to the Ministers, Sri K. Rajaram & Sri Ponnaiyan. Actually this Central Govt. aid is going to the Ministers, house and not to the common people. Please treat this telegram and stop corruption.

Tanking you, Sir.

Yours faithfully

(Sd.) S. Mahalingam

28.9.87

C.C. to

Thiru R. Venkatraman, President of India, New Delhi

Thiru G.K. Moopanar,General Secretary, A.I.C.C., New Delhi

Thiru Chidambaram, M.P., Minister, New Delhi

Thiru Arunachalam, M.P., Minister, New Delhi

The Managing Director, TWAD Board, Madras

The Chief Minister of Tamil Nadu, U.S.A.

The Chief Secretary, Secretariat, Madras

The Chief Vigilance Offce, C. Cell, Madras

பெறுநர் :

திரு. ராஜீவ் காந்தி,

பிரதமர், புதுடில்லி.

மதிப்புக்குரிய ஐயா,

பொருள் : தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணியில் ஊழல்

- அமைச்சர் திரு. ராஜாராம், திரு. பொன்னையன், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநரின் பங்கு தொடர்பாக -

- - - - -

மத்திய அரசின் உதவியுடன் தமிழ்நாட்டில் அமல் நடத்தப்படும் வறட்சி நிவாரணப் பணியில் தமிழ்நாடு அமைச்சர்கள் புரியும் ஊழல்களுக்கு மிகச் சிறந்த உதாரணம் ஒன்றை உங்கள் தகவலுக்காகக் கீழே தருகிறேன்.

கடந்த மாதம் வரை, வறட்சி நிவாரணப் பணியை தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் நிர்வாக இயக்குநர் நேரடியாக ஆற்றிவந்தார். வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு, ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணியை, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திடம் பதிவு செய்து கொண்டுள்ள தனிப்பட்ட ரிக் உரிமையாளர்கள் மூலம் (Rig Operators) ஒதுக்கி வந்தார்.

ஆனால் இப்போது, சட்ட அமைச்சர் திரு பொன்னையனின் சகோதரர்களும், அமைச்சர் கே. ராஜாராமின் நண்பர் ஒருவரும் இதில் தலையிட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு ரிக் சர்வீஸ் சொசைடி என்ற பெயரில் உள்ள அங்கீகாரமற்ற ஒரு சொசைட்டியின் மூலம் ரிக் உரிமையாளர்களிடமிருந்து ஒரு பாயிண்டுக்கு ரூ. 2,000/- வீதம் வசூலித்து வருகிறார்கள் (இந்த சொசைட்டி ஒரு அரசாங்க அமைப்போ அல்லது கூட்டுறவு அமைப்போ அல்ல). இந்த சொசைட்டியில் அமைச்சரின் சகோதரர்களும் நண்பர்களுந்தான் நிர்வாகப் பணிகளைக் கவனித்து வருகிறார்கள். இப்போது இவர்கள் ஆழ்துளைக் கிணறு பாயிண்டுகளை லாட்டரி டிக்கட்டுகளைப் போல விற்பனை செய்து வருகிறார்கள். இந்த அங்கீகாரமற்ற சொசைட்டிக்கு கிட்டத்தட்ட 2,500 பாயிண்டுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தினிடம் கிட்டத்தட்ட 600 ரிக் உரிமையாளர்கள் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இனி இந்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே தேவை இல்லை. அதை ரத்து செய்து விடலாமென்று நீங்கள் ஆணை பிறப்பிக்கலாம். இதன்மூலம் சம்பளம் என்றும் நிர்வாகச் செலவுகள் என்றும் அரசாங்கத்துக்கும்

ஏற்படும் செலவுகளையாவது மிச்சப்படுத்தலாம்.

ஆகவே, ஏற்கெனவே இதுவரை நடந்து வந்ததுபோல, பதிவு பெற்றுள்ள காண்டிராக்டர்களுக்கு நேரடியாக பணிகளை ஒதுக்குமாறு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரிய நிர்வாக டைரக்டருக்கு நீங்கள் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர்கள் கே. ராஜாராம், மற்றும் பொன்னையன் ஆகியோருக்கு ரூ. 50 லட்சம் லஞ்சம் கொடுக்கப்படவிருப்பதைத் தடுத்து நிறுத்த முயலுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மத்திய அரசு அளிக்கும் இந்த உதவித் தொகை உண்மையில் அமைச்சர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும்தான் போய் சேருகிறதே ஒழிய, பொது மக்களை எட்டுவதில்லை. இந்த கடிதத்தை தந்தி போல அவசரமாக கவனித்து, இந்த ஊழலைத் தடுத்து நிறுத்துங்கள்.

நன்றியுடன்

தங்கள் உண்மையுள்ள

(ஒப்பம்) எஸ். மகாலிங்கம்

28.9.87

கடிதத்தில் காணப்படும் விஷயங்கள் உண்மையா அல்லவா? என்பதை உரியவர்கள் விளக்கிடக் கடமைப்பட்டுள்ளனர்.

அன்புடன்

மு.க.

05-10-1987

1520. திருச்சி வழக்கம்போல் திருப்புமுனையாகட்டும்!

உடன்பிறப்பே,

உனக்கு மடல் எழுத வேண்டாமென்று தான் நினைத்திருந்தேன்.

திருச்சியில் இம்மாதம் 11-ஆம் நாள் ஞாயிறன்று மாலை நடைபெறும் பேரணியும் மாநாடும் குறித்து திருச்சி மாவட்டக் கழகத்தினரோ - அல்லது நகரக் கழகத்தினரோ - அல்லது கூட்டுக் குழுவினரோ விரிவான அறிக்கைகளையும் விளம்பரச் செய்திகளையும் அறிவிப்பார்கள் என எண்ணியிருந்தேன். அவர்கள் அப்படித் தெரிவிக்க இருக்கும் போது நான் வேறு உனக்கு எழுதவேண்டுமா என்ற கேள்வி என் இதயத்தைக் குடைந்தது.

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை! அண்ணா அறிவாலயத் திறப்பு விழாவுக்கு உன்னை வா என அழைத்து - அதுவும் குடும்பத்தினருடன் வருக! என அழைத்து - நீயும் உன் குடும்பத்தாரும் திரும்பும் வழியில் குழந்தை குட்டிகளுடன் நீ பட்ட பாட்டையும், பசித்து வாடிய கொடுமையையும் - பல்வேறு வேதனைகளுக்கு ஆளாகிய நிலைமையையும் - நானுணர்ந்தும் அறிந்தும் நெஞ்சு நெகிழ்ந்து கிடக்கும் பொழுது மீண்டும் உனக்குக் கடிதம் எழுதி திருச்சிக்கு வா! என அழைக்கும் தெம்பு எனக்கு இல்லாமல் தான் போய்விட்டது.

அதனால் உனக்குக் கடிதம் எழுதித் தொல்லை கொடுக்கக்கூடாது என்ற முடிவோடு தான் இருந்தேன்.

பிறகுதான் பார்த்தேன் ஜனசக்தி, தீக்கதிர் போன்ற ஏடுகளில் வந்த அளவுக்கு பாதி அளவுகூட திருச்சி மாநாடு குறித்த செய்திகளை முரசொலியில் வெளியிட வேண்டுமென்ற ஆர்வம் அதன் துணை ஆசிரியர்களுக்கு இல்லாமற் போய்விட்டது

என்பதை! அவர்களைக் கேட்டால்; யாரும் எந்த செய்தி விபரமும் அனுப்பித்தரவில்லையென்கிறார்கள்!

தொல்லைப்பட நீதானே இருக்கிறாய் - தொல்லைகொடுக்க நான்தானே இருக்கிறேன்; தொல்லையை இருவருமே தொண்டு எனக் கருதுவதால், திருச்சிக்கு வா! எனத் திருமுகம் தீட்டுவதில் தவறில்லை என நினைத்து இக்கடிதம் வரைந்துள்ளேன்.

திருச்சியில் தி.மு.க., மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு ஆகிய மூன்று கட்சிகளின் பேரணியும் மாநாடும் எதற்காக என்பது குறித்து ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்திருநாடு பாலை நிலமாக ஆகிக் கொண்டிருக்கிறது!

தர்பார் நடத்துகிறவர்களோ சுருட்டிய வரையில் ஆதாயமெனக் கோட்டையைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றனர்.

வறட்சி வாட்டுகிறது!
குடிநீர் இல்லை; மக்கள்
குமுறி அழுகிறார்கள்!
கால்நடைகளை விற்றாவது
கஞ்சி குடிக்க முடியுமா
எனக் கண்ணீருடன்
கலங்குகிறார்கள்!
விவசாயிகளும் விவசாயத்
தொழிலாளர்களும் வடிக்கின்ற
விழிநீர்; அருவியாகக்
கொட்டுகிறது!

பசி, பஞ்சம், பட்டினி - இவைகண்டும் பரிதாபப்படாத பிறவிகள் ஆளுங்கட்சியில் இருப்பதால்; இந்தக் கொடிய நேரத்திலும் கூட்டுக் கொள்ளை அடிக்கிறார்கள்! வீட்டுக்கு வளம் சேர்க்க மூட்டை கட்டுகிறார்கள்!

நூற்பு ஆலைகள்
இருபதுக்கு மேற்பட்டவை
இழுத்து மூடப்பட்டுள்ளன!
திறப்பது குறித்து சிந்திக்கவே இங்குள்ள அரசினர்க்கு
மனந் திறக்கவில்லை!

நெசவுத் தொழிலோ – நாளும்
நசித்துத் தொலைகிறது!

கைத்தறியாளரின் கண்ணீர் துடைக்கத் துளிக் கருணையும் பிறக்கவில்லை இந்த துரைத்தனத்தாருக்கு!

பரவலாக்குக அதிகாரங்களை! என மத்திய அரசைப் பார்த்துக் கேட்கும் மாநில அரசினர், பட்டிதொட்டி, சிற்றூர், பேரூர் நகரங்களின் மக்கள் பிரதிநிதிகளாம் உள்ளாட்சிமன்றத் தலைவர்கள், உறுப்பினர்களின் அதிகாரங்களையெல்லாம் அடியோடு பறித்துக்கொண்டு ஆட்டம் போடுகின்றனர்!

இவையும் இவை போன்ற மக்கள் விரோதச் சேட்டைகளையும் மறைத்துவிடலாம் என எண்ணிச் செயல்படும் மாண்புகளின் வக்கிரங்களை ஊர் அறிய – உலகறியச் செய்யவும்;

வாங்குகிற வரிப்பணத்துக்கு வாடுகிற மக்களைக் காப்பாற்றும் பணிபுரியத் தயக்கமேன்? என்று கேள்விக்கணைத் தொடுக்கவும்;

காட்டுமரம் வெட்டி வீழ்த்தி நாட்டைக் கடும் வறட்சிக்கு உள்ளாக்கியதோடல்லாமல் – வீட்டு வரியும் உயர்த்தி ஏழை நடுத்தர மக்களை வேட்டையாடும் போக்கை நிறுத்தாவிடில் போர் மூண்டே தீரும் என எச்சரிக்கவும்;

பட்டி தொட்டி வாழ்வோர் –
பட்டினக்கரையில் வசிப்போர் –
பாட்டாளி வர்க்கத்தினர் –
பழிவாங்கப்படுவோர்

அனைவரின் பாதுகாப்பு அரணாகத் திகழ்வோம் நாம் என உறுதியளிக்கவும்,

திருச்சியில்
அக்டோபர் 11ல்
அன்பில் தலைமையில்
நான்
நல்லசிவன்
மாணிக்கம்
ஆகியோர் முறையே,
தி.மு.க.

மார்க்சிஸ்டு
இ. கம்யூனிஸ்டு

கட்சிகளின் சார்பில் உன்னையும் உன் போன்ற உடன்பிறப்புகளையும் சந்திக்க இருக்கிறோம்.

நமது
தோழமை அணியின்
கொடிகள்
தோள்களை
அலங்கரிக்கட்டும்!
பேரணி முழங்கட்டும்
காரிருள் விலகட்டும்!
திருச்சி; வழக்கம் போல் ஒரு
திருப்பு முனையாகட்டும்!

அன்புடன்

மு.க.

10-10-1987

1521. திடீர்க் காதல் அல்ல; இரத்தத்தில் ஊறிய இனப்பற்று!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற இந்திய அரசே நடவடிக்கை எடுத்திடுக! எனத் தமிழக மக்கள் கூவிக் கூவி அழைத்ததற்குப் பரிசு கிடைத்துக் கொண்டிருக்கிறது.

ஆம்! இந்திய இராணுவத்தினரே தமிழ்ப் போராளிகளைக் கொன்று குவிக்கின்றனர். தமிழ்க்குல மக்களை இரத்த வெள்ளத்தில் பிணங்களாக மிதக்கவிடுகின்றனர்.

கொழும்பு ஒப்பந்தம் நிறைவேறியபோதும் - அதற்கு இலங்கை சென்று ராஜீவுக்கு அருகில் நின்று தமிழக அரசின் அமைச்சர் கையொலி எழுப்பி வரவேற்பு தந்தபோதும்; சென்னையில் ஒப்பந்த வெற்றி விழாவுக்கு ராஜீவ் வரவும்; ஒப்பந்தத்தைப் பாராட்டி எம்.ஜி.ஆர். பேசவும்; இவ்வாறு நாடு முழுதும் வாணவேடிக்கை காட்டப்பட்ட போதும் - யார் ஒத்துக்கொண்டாலும் சரி; இந்த ஒப்பந்தம் குறித்து ஆரம்பத்திலிருந்து கழகத்தின் சார்பில் எடுத்து வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் அப்படியே இருக்கின்றன. அதில் மாற்றமில்லை என்றே நான் திட்டவட்டமாக கூறியிருக்கிறேன். இது அப்போதே முரசொலி, தினகரன் போன்ற ஏடுகளில் வெளிவந்துள்ளது.

ஜூலையில் கொழும்பு ஒப்பந்தம் நடைபெற்ற போதே

முரசொலி கரிகாலன் பதில்கள் என்ற தலைப்பில் நான் பின்வருமாறு எழுதியுள்ளேன்.

கொழும்பு ஒப்பந்தம் யாருக்கு ஆதாயம்?

நிச்சயமாக ஜெயவர்த்தனாவுக்குத்தான்! ஜெயவர்த்தனாவின் ஆட்சியைக் கவிழ்க்கக் கூடிய பயங்கரப் புரட்சி

யொன்றுக்கு இலங்கையில் ஒரு சதி உருவாகிக் கொண்டிருந்தது. அதைச் சமாளிக்க அவர் திணறிக் கொண்டிருந்தார். காரணம் அந்தச் சதிகாரர்கள் பலர் இலங்கை ராணுவத்தில் ஊடுருவியிருந்தார்கள். இலங்கையின் ராணுவமும் பெரும் அமளிகளை அடக்குகிற அளவுக்குத் திறமை பெற்றதாக இல்லை. எனவே சதிகாரர்களை ஒடுக்க வேண்டுமென்பதற்காகவும் - அதே நேரத்தில் தமிழ் ஈழப் போராளிகளின் ஆயுதங்களைப் பறித்து அவர்களையும் செயலற்றவர்களாக்க வேண்டுமென்பதற்காகவும் - அவசர அவசரமாக இந்தியாவுடன் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டு - அதன் தொடர்பாக இந்திய ராணுவத்தை இலங்கையில் குவித்து வைத்துக்கொண்டு, அது தன் கட்டளைப்படி இயங்கக்கூடிய சூழ்நிலையையும் உருவாக்கிக் கொண்டு, தமிழ்ப் போராளிகளையும், தன் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்துள்ள சதித்திட்டத்தையும் இந்திய ராணுவத்தின் மூலமே தாக்குப்பிடிக்கும் முயற்சியில் வெற்றி பெற்று விட்டார். எனவே கொழும்பு ஒப்பந்தம் ஜெயவர்த்தனாவுக்கு லாபம் தரக்கூடிய ஒப்பந்தம்.

உடன்பிறப்பே ஜூலையில் கொழும்பு ஒப்பந்தம் வெளிவந்தவுடனேயே - மூன்று மாதங்களுக்கு முன்பே கழகத்தின் சார்பில் நான் வெளியிட்ட கருத்து இது!

ஒப்பந்தம் தமிழ் இனத்தை ஒடுக்கவே பயன்படும் என்பதும் உண்மையாகிவிட்டது! நமது விரலைக் கொண்டே நமது கண்ணைக் குத்திப் புண்ணாக்கிக் கொள்வதுபோல நமது இந்திய ராணுவத்தைக் கொண்டே ஈழத்தமிழ் இனத்தையும் அந்த இனத்துக்காகப் போரிடுகிற போராளிகளையும் கொன்று குவிக்கிற செயலும் ஆரம்பமாகி விட்டது!

தமிழனாகப் பிறந்தவன் இதை எப்படி சகித்துக் கொண்டிருக்க முடியும்! தசைப் பிண்டமாகக் கிடக்கிற தமிழனுக்குக் கூட குருதி கொதிக்கிற காரியம் இன்று இலங்கையில் நடைபெறுகிறது என்கிறபோது - தமிழ் இனத்தின் வாழ்வுக்காகவே இயங்கிக் கொண்டிருக்கிற கழகம் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கமுடியுமா?

எனவேதான் கழகத்தினரின் உள்ளக்குமுறலை - திருச்சியிலே அக்டோபர் 11 ஆம் நாளன்று செய்தியாளர்களிடத்திலே கொட்டினேன்!

சென்னையிலிருந்த பேராசிரியர், இலங்கைச் செய்திகள் கண்டு அதிர்ச்சியுற்று சைதையில் கண்டனப் பொதுக் கூட்டத்தை அறிவிக்கச் செய்தார்.

அதன் பிறகு அக்டோபர் 13 நான் சென்னை வந்தவுடன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கடிதத்துடன் தளபதி கிட்டு, சுப்பிரமணியம், ரகீம் ஆகியோர் என்னையும் பேராசிரியர் அவர்களையும் சந்தித்து நிலைமைகளை விளக்கினர்.

கழகச் சார்பில் முதல் கட்டமாக அக்டோபர் 15 தமிழக முழுவதும் கண்டனப் பேரணிகள்!

அக்டோபர் 17, 18 நாட்களில் கண்டனப் பொதுக் கூட்டங்கள்!

இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பாரபட்சப் போக்குடன் நடந்து கொள்வதைக் கண்டித்தே இந்தப் போர்க்குரல் கொடுக்கிறது கழகம்!

இந்திய ராணுவம் உடனடியாக தாக்குதலை நிறுத்திக் கொண்டு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இந்திய ராணுவம்; ஒரு பெரிய நாட்டின் பலம் பொருந்திய ராணுவம் - அதன் வலிமையைக் காட்ட எங்கள் தமிழ் இனம்தான் கிடைத்ததா? என்பதே இப்போது தமிழ் நாட்டில் வெடித்துக் கிளம்பியுள்ள கேள்வி!

தமிழக மக்களின் உணர்வை இந்திய அரசு மதிக்க வேண்டும்!

மதிக்க மாட்டோம்; மிதித்தே தீருவோமென்றால் - மிதிக்க மிதிக்கப் புழுக்களும் புலிகளாகுமென அண்ணா அடிக்கடி கூறுவதைத்தான் நினைவு படுத்த வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் மீது தி.மு.க.வுக்கு திடீர்க் காதல் ஏன்?

"Why this Sudden D.M.K. Love for LTTE?"

இவ்வாறு இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் தலைப்பிட்டு குடம்குடமாக நஞ்சைக் கொட்டியிருக்கிறது!

திசை திருப்பும் எந்த சூழ்ச்சியிலும், யார் வலையிலும் - கழகம் விழாது!

இலங்கைத் தமிழ்க் குலத்தைக் காத்திடும் கருமமே கண்ணாகவுள்ள கழகத்தினர் திசை திருப்புவோர் பக்கம் திரும்பியும் பார்க்கத் தேவையில்லை!

ஆனால் எக்ஸ்பிரஸ் ஏட்டுக்கு ஒரு தகவல்!

இது ஒன்றும் திடீர்க் காதல் அல்ல! இரத்தத்தில் ஊறிப்போன இனப்பற்று! எக்ஸ்பிரசின் செய்தியாளர் எரிச்சலுக்கு வீணாக இரையாவதை விடுத்து எட்டு மாதங்களுக்கு முன்பு பிப்ரவரி 10-ஆம் தேதியன்று சென்னையில் கூடிய நிர்வாகக் குழுவின் தீர்மானத்தை ஒருமுறை படித்துப் பார்த்தால் தெளிவு பெறக் கூடும்.

இதோ அந்தத் தீர்மானம் :-

இலங்கையில் 1983-ம் ஆண்டு நடைபெற்ற தமிழ் இனப்படுகொலை, மூன்றாண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது தமிழ்இனத்தை அடியோடு அழிக்கும் சிங்கள ராணுவப் படையெடுப்பாகவே மாற்றம்பெற்று அன்றாடம் தமிழ்ப்போராளிகளைத் தாக்குவது மட்டுமின்றி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்தும், உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் தமிழர்கள் வாழும் பகுதிக்குச் செல்லாமல் தடுத்தும், நிறுத்தியும் அவர்களைப் பட்டினி போட்டுப் பணிய வைக்கும் ஈவு இரக்கமற்ற அராஜக நடவடிக்கைகள் தொடர்நிகழ்ச்சிகளாகி வருகின்றன.

மத்திய மாநில அரசுகளைப் பெரிதும் நம்பியதோடு அதிகாரப் பொறுப்பில் இருக்கும் அவற்றின் உதவியோடு ஈழத்தமிழர் உரிமைகளைப் பெறமுடியும் என்று இறுதிவரை எண்ணியிருந்த தமிழ் ஈழத் தலைவர்களும், தமிழ் ஈழப் போராளிகளும் இன்று பெரும் ஏமாற்றத்துக்கு ஆளாகி நொந்துபோய் நிற்கின்றனர்.

தமிழ்ப் போராளிகளைக் கைது செய்தும், அவர்களிடமிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றியும், தொடர்புக் கருவிகளைக் கூட கைப்பற்றியும், கிரிமினல் கைதிகளைப் போல அவர்களை நடத்தியும், அவர்தம் அசைவுகளை வீடியோ படமாக எடுத்தும், அடைக்கலமென வந்தவர்களை அலைக்கழித்து அதுவும் போதாமல் பொய்வழக்குகளை அவர்கள் மீது புனைந்து போராளிகளுக்குள்ளேயே முட்டி மோதிக் கொள்கிற சூழ்ச்சிகளையும் வகுத்து அவர்களை எம்.ஜி.ஆர். அரசு

படுத்தியபாடு கொஞ்சநஞ்சமல்ல! இன்னமும்கூட போராளிகள் தமிழ்நாட்டில் பழிவாங்கப்படுகிறார்கள் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டு உண்டு.

அண்மையில் பெங்களூரில் மத்திய அமைச்சர்களும், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரும், புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் கலந்துகொண்ட பேச்சுவார்த்தையில் இரண்டாக இருக்கும் தமிழ் ஈழத்தின் வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைக்க வேண்டுமென்ற தமிழர்களின் கோரிக்கைக்கு நேர் மாறாக - இரண்டை நாலாகக் கூறுபோடும் யோசனை இலங்கை அரசால் கூறப்பட்டு அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நமது மத்திய மாநில அரசுகளால் திரும்பத் திரும்பக் கூறப்பட்டு அதனைப் போராளிகளின் சார்பில் பிரபாகரன் ஏற்க மறுத்துவிட்டதை அவரே பத்திரிகைப் பேட்டியொன்றில் குறிப்பிட்டிருப்பதோடு, அந்தப் பேட்டியில் தமிழ்நாட்டு அரசின் போலீசார் தங்களைக் கிரிமினல் கைதிகளைப் போல நடத்தினார்கள் என்பதையும் வெளியிடப்பட்டிருப்பதிலிருந்து எம்.ஜி.ஆர். அரசையும், மத்திய அரசையும் நம்பி இருந்த போராளிகள் எப்படி வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மை தெளிவாகிறது.

நயவஞ்சகத்தின் மூலம் புலிகள் இயக்கத்தையும், பழிவாங்குதல், வழக்கு தொடுத்தல் மூலம் டெலோ இயக்கத்தையும் - கலகமூட்டி மோதவிடுவதின் மூலம் மற்ற போராளிகளின் இயக்கங்களையும் திட்டமிட்டு குலைத்துவிட அரசு முயன்று அதில் ஓரளவு வெற்றியும் பெற்று விட்டது.

இன்று நேற்றல்ல 1958ம் ஆண்டுக்கு முன்பிருந்தே இலங்கைத் தமிழர்களுக்காக குரல் எழுப்பி வருவது தி.மு.கழகம்.

அதன் தொடர்ச்சியாகத்தான் 1983-ல் நடைபெற்ற இலங்கைத் தமிழ் இனப்படுகொலைச் செய்தி கேட்டு தி.மு.கழகம் ஆர்த்தெழுந்து சிங்கள அரசின் வெறியாட்டத்தைத் தடுத்து நிறுத்த மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தும் வகையில் தனித்து நின்றும், டெசோ இயக்கச் சார்பிலும் பல போராட்டங்களை நடத்தியுள்ளது.

மத்திய மாநில அரசுகள் விளம்பரப்படுத்திய பேச்சுவார்த்தைகள் என்ற அறிவிப்புகளை தமிழ் மக்களில் ஒருசாரார் உண்மையென நம்பி நல்ல விளைவுகள் ஏற்படுமென

எதிர்பார்த்த காரணத்தால் அதற்கு குறுக்கே நிற்க வேண்டாமென தி.மு.கழகம் கருதியது.

ஆனால் இன்று இலங்கையின் நிலைமை முற்றிலும் படுமோசமாகி, ஈழத் தமிழர்கள் சிங்களப் பட்டாளத்தின் குண்டு வீச்சுகளுக்கிடையே குருதி வெள்ளத்தில் பிணமாக மிதக்கின்றனர்.

இந்திய அரசு காட்டிய மெத்தனப் போக்கினாலும், இந்தப் பிரச்சினையில், உண்மையான அக்கறையற்ற எம்.ஜி.ஆர். அரசு ஆடிய நாடகத்தாலும், இலங்கையில் நமது தமிழினம் நாள்தோறும் அழிந்து கொண்டிருக்கிறது என்ற வேதனையை தி.மு.கழகத்தின் இந்த நிர்வாகக்குழு வெளிப்படுத்துவதோடு; இலங்கையில் தமிழ் இன அழிவைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மனிதாபிமான உணர்வோடும் இதயசுத்தியோடும் உடனடியாக முன்வரவேண்டுமென வலியுறுத்துகிறது.

இவ்வளவு நீண்டதும் விளக்கமானதுமான பிப்ரவரி மாதத் தீர்மானத்தைப் படித்துப் பார்த்த பிறகாவது கழகம் பிரச்சினைகளைப் பார்க்கிறதே தவிர, தனிப்பட்ட மனிதர்களையல்ல என்ற உண்மை புலப்படுமென நம்புகிறேன்.

உடன்பிறப்பே! தமிழினம் அழிந்தால் என்ன? அலட்சியம் காட்டுவோர் - அழியத்தான் வேண்டுமென ஆர்ப்பரிப்போர் - இவர்களுக்கு எதிராக தமிழினத்தை அழியாமல் காப்போம்! எனச் சூளுரை மேற்கொள்ளத்தான்; அந்தச் சூளுரையைச் செயல்படுத்திடத்தான்

அக்டோபர் 15 பேரணிகள்!

அக்டோபர் 17, 18, பொதுக்கூட்டங்கள்!

அடுத்தது என்ன? கழகம் பிறகு அறிவிக்கும்!

அன்புடன்

மு.க.

15-10-1987

1522. அக்டோபர் 24 - ஆர்த்தெழுக தமிழகம்!

உடன்பிறப்பே,

வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளை திறந்தால் காலையிலும் மாலையிலும்; ஏன் - இரவிலுங்கூடத் திட்டமிட்டுப் பொய்ப் பிரச்சாரம் நடக்கிறது!

அரசாங்கப் பிரச்சார சாதனமாக மட்டுமே; அதிலும் குறிப்பாக ராஜீவ்காந்தி அவர்களின் விளம்பரத்துக்காக மட்டுமே; வானொலி, தொலைக்காட்சிகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன!

அதிலும் அண்மைக் காலமாக இலங்கைத் தமிழ் ஈழபூமியில் இந்திய ராணுவம் நடத்துகிற மனித வேட்டைக்கு வானொலியும் தொலைக்காட்சியும் சரியான பொய்ப் பிரச்சார ஊதுகுழல்களாகச் செயல்படுவதை மிகத்தெளிவாகவே உணரமுடிகிறது!

தமிழ்ச்சமுதாயம் இலங்கையில் மட்டுமல்ல உலகில் எந்தப் பகுதியிலும் உயிர்வாழக் கூடாது; அடியோடு அழிந்து பூண்டற்றுப் போய்விட வேண்டும் எனத் தவம் இருக்கிற வன்னெஞ்சக் கூட்டத்தினர் -

அதற்கு எட்டப்பர் வேலை பார்க்கிற கூலித்தமிழர்கள் - ஈழத் தமிழர்களைக் கொல்வது நியாயமே என வாதாடுகிறார்கள்!

அந்த இரக்கமற்ற பிறவிகளும் எடுபிடிகளும் ஏடுகளில் விடுக்கின்ற அறிக்கைகள் போதாதென்று; வானொலியிலும் ஊளையிடுகின்றன! தொலைக்காட்சியிலும் தோன்றி ஓங்காரக் கூச்சலிடுகின்றன!

மிரட்டப்பட்ட பத்திரிகைகள் - மிருகமனம் கொண்டு வெளியிடப்படுகிற வானொலி - தொலைக்காட்சிச் செய்திகள் - இவற்றால் ஈழத்தில் இந்திய ராணுவம் நடத்துகிற கொடுமைகளை மறைத்து இங்குள்ள தமிழனைக் குருடாக்கிச் செவிடாக்கிப்

போட்டுவிடலாமென மனப்பால் குடிப்போரின் மமதையை அடக்கிட கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம் எனும் வீரவாசகத்தை மெய்ப்பிக்கும் வகையில் வருகிற 24ந் தேதியன்று தமிழகத்தில் ரயில் நிறுத்த அறப்போர் நடைபெறுகிறது!

பேச்சுவார்த்தைக்குத் தயார் எனப் பலமுறை விடுதலைப் புலிகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட பிறகும் கூட என்னமோ; 1962ல் சீனாக்காரன் ஆக்ரமித்துப் பிடித்துக் கொண்டு இன்னமும் தனதுவசம் வைத்துள்ள அக்சைசன் பகுதியான பல்லாயிரம் சதுரமைல் பரப்பினை மீட்பதற்கு படையெடுத்தது போல

ஓ! இன்றைக்கு நமது இராணுவம் - அதைப் பிடித்து விட்டது! இதைப் பிடித்து விட்டது! முன்னேறுகிறது! தன்னை நிலைப்படுத்திக் கொண்டு விட்டது! என்றெல்லாம் மணிக்கு மணி செய்திகளை அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கிறார்களே

யார்மீது படையெடுப்பு?

என ஒரு கேள்வியைக் கேட்டு, அதற்கான பதிலைப் பார்த்தால்

தமிழர்கள் மீது
படையெடுப்பு!
தமிழ் ஈழ விடுதலைப்
புலிகளின் மீது
படையெடுப்பு!
தஞ்சமென வந்து
இந்தியாவில் உள்ள
பேரரசின் துணை கிடைக்குமென
எதிர்பார்த்தார்களே;
அந்த விடுதலை வீரர்கள் மீது
படையெடுப்பு!
மருத்துவமனைகள் பொடிப்

பொடியாகின்றன; இந்திய
ராணுவத்தின் வெடிகுண்டுத்
தாக்குதலால்!

பல்கலைக் கழகம் நொறுங்கு
கிறது; அமைதிப்படையாம் இந்த
அமளிப்படையால்!
அப்பாவித் தமிழர்கள்

கொல்லப்படுகிறார்கள்!
தமிழச்சிகள் கற்பழிக்கப்
படுகிறார்கள்!

அய்யகோ! 1983ல் நடந்தது; இப்போது 1987லும் நடக்கிறது!

அப்போது நடத்தியது சிங்களச்சேனை!
இன்று நடத்துவதோ இந்தியச்சேனை!

குறைமலிந்த ஒப்பந்தம் கொழும்பு ஒப்பந்தம்! முள்ளு முனையிலே மூன்று குளம் வெட்டி; அதில் இரண்டு குளம் பாழ் - ஒன்றில் தண்ணீரே இல்லை! என்பது போல அந்த ஒப்பந்தத்தையும் சிங்கள ஜெயவர்த்தனா அரசு காலில் போட்டு மிதித்துவிட்டது!

அது காலில் போட்டு மிதித்ததை எடுத்துக் கண்ணில் ஒத்திக்கொண்டு; இந்திய அரசு - சிங்கள அரசுக்குச் சேவகம் புரிகிறது! ஜெயவர்த்தனா கட்டளை கேட்டுத் தமிழினத்தை அழிப்பதற்கு ஒரு படையை இந்தியா அனுப்புவதா? அப்படை அமைதிப்படை என்ற பெயரால் நமது இனத்தை நசுக்கி ஒழிப்பதா?

உணர்ச்சியுள்ள தமிழன்;
பிணமாகாமல் இன்னமும்
உயிரோடுள்ள தமிழன்;

தன்மானமுள்ள தமிழன்;
தமிழ்க்குருதி நரம்புமண்டலத்தில்
ஓடுகிற தமிழன்;

தலைகுனிந்து, கைபிசைந்து; கண்ணீர் மல்கி நிற்பதா?
இல்லை!
இல்லை!

இங்கிருக்கும் தமிழனுக்கும் இதயம் உண்டு - அந்த இதயத்தில் வீரமும் தீரமும் உண்டு - தடித்த தோல் படைத்த பிராணியாகிவிடவில்லை அவன்; தனது கண்டனக் குரலை எழுப்ப இதோ தயாராகிவிட்டான்!

ஆம்; இந்தத் திங்கள்
இருபத்தி நாலாம் தேதி!
இருபத்தி நான்கு மணி நேரம் ரயில் நிறுத்தம்!

ஒரு இனம், திட்டமிட்டு
அழிக்கப்படுகிறது!

அந்த திட்டத்தைத் தகர்க்கத்
தான் நமது அறவழிப்போர்!

கல்தோன்றி
மண்தோன்றாக் காலத்தே
முன்தோன்றி
மூத்த குடி - தமிழ்க்குடி!
அதன் ரத்தத்தைக் குடி குடியெனக் குடிக்கிறார்கள்!

அதைத் தடுக்க
தலைநிமிர்ந்து கேட்க
தணலாய் எரியுது நெஞ்சம்
எனத் தமிழகமே கொந்தளிக்க

எதைப் பற்றியும் கவலையின்றி இங்குள்ள மத்திய அரசினர் மதோன்மத்தம் கொண்டு திரிவதைக் கண்டிக்கும் நாள்தான்;

அக்டோபர் 24 -
அந்த நாளில்
அண்ணா வழியில்
ஆர்த்தெழட்டும்
தமிழகம்!

குறிப்பு :- 24 காலை 6 மணி முதல் 25 காலை 6 மணி வரை ரயிலில் பயணம் செய்வோர்; இலங்கையில் உயிரைப் பணயம் வைத்துப் போராடும் ஈழத் தமிழ்ப் போராளிகளுக்காகவும் - ஈழத் தமிழ் இனத்துக்காகவும் ஒரு நாள் தங்களுக்கு ஏற்படும் வசதிக் குறைவைப்பொருட்படுத்தாமல் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்
மு.க.
23-10-1987

1523. மாநில முழுதும் மறியல் களம்; மான மரபே! எழுக!

உடன்பிறப்பே,

ஈழத்தில் அழிந்து கொண்டிருக்கும் தமிழ் இனத்துக்காகத் தாய்த் தமிழகம் வடிக்கும் ரத்தக்கண்ணீரை உலகம் பார்த்துவிடாமல் மறைத்துத் திரையிடுவதிலும் - ஈழத்தில் இந்திய ராணுவம், சிங்கள ராணுவத்தை விட மிகக் கொடுமையாகச் செயல்படுவதைத் தமிழ் நாட்டு மக்கள் எதிர்த்துக் கண்டனம் செய்வதை உலக நாடுகளின் செவிகளில் நுழையா வண்ணம் தடுப்பதிலும் - இந்தியப் பேரரசு காட்டுகிற அக்கறையில் நூறில் ஒரு பங்கு... இல்லை இல்லை... ஆயிரத்தில் ஒரு பங்கு அக்கறை காட்டி நமது வேண்டுகோள்களை ஏற்றுக்கொண்டு யுத்தத்தை நிறுத்திடும் என நாமும் பதினைந்து நாட்களுக்கு மேலாகவே எதிர்பார்த்தோம். ஆனால் ஏமாந்தோம்.

அக்டோபர் 10ஆம் நாளன்று ஈழத்தில் விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் மீது இந்திய ராணுவம் தாக்குதலைத் தொடங்கியது.

ஏற்கெனவே குறைபாடுகள் மலிந்த கொழும்பு ஒப்பந்தம் - அந்த அரைவேக்காட்டுச் சமையலிலும் ஜெயவர்த்தனே நஞ்சு கலந்து மகிழ்ந்தார்!

நஞ்சு என நன்கு தெரிந்தும் அதை எடுத்துப் பரிமாற நமது ராஜீவ் காந்தி துடியாய்த் துடித்தார்!

ஒப்பந்தம் எப்படியெல்லாம் சிங்கள அரசினரால் மீறப்பட்டது - அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு இந்திய அரசு, எப்படியெல்லாம் சிங்கள அரசுடன் ஒத்துழைத்தது என்பதற்கான விளக்கங்கள் ஏராளமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன!

பஞ்சாப் ஒப்பந்தம் போல
அசாம் ஒப்பந்தம் போல
கொழும்பு ஒப்பந்தமும்

குறைப் பிரசவ முளிக்குழந்தையாகப்
பிறந்து தொலைந்த காரணத்தால்

அந்த வெட்கக்கேட்டை மூடிமறைக்க ராஜீவ் காந்திக்குக் கிடைத்த ஒரே வழி - ஈழத்தமிழர்களைப் பகடைக் காய்களாக்கி விளையாடுவதுதான்!

ஒப்பந்தம் உருப்படாதது
உடைந்து சிதறுகிறது

இப்படியொரு அவலம் உருவானவுடன் உலக மக்களின் கவனத்தைத் திசை திருப்ப யார்மீது பழிபோடலாம் என்று ராஜீவும் அவரது அவசர ஆலோசகர்களும் திட்டம் தீட்டினர்!

தீட்டப்பட்டது திட்டமா?
அல்ல! அல்ல!
தென்னிலங்கைத் தமிழனின்
தலையைச் சீவியெறியக்
கத்தியன்றோ தீட்டப்பட்டது!

ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்றாலும்; அதனை நடைமுறைப்படுத்த விரும்பும் இந்திய அரசின் முயற்சிகளுக்கு தமிழர் நலன் பாதிக்கப்படாத வகையில் ஒத்துழைப்பு வழங்குகிறோம் என்பதற்கேற்ப விடுதலைப்புலிகளின் இயக்கம் நடந்து கொண்டதை இங்குள்ள பிரச்சார சாதனங்களின் மூலம் இந்திய அரசு நாள் முழுதும் விளம்பரப்படுத்தத் தவறவில்லை!

ஆனால் சிங்கள ராணுவத் துணையுடன் தமிழர் நிலப்பகுதிகளில் பெருவாரியான சிங்கள குடியேற்றம்!

நிர்வாகச் சபை அமைப்பதில் தகராறு; ஜெயவர்த்தனாவின் பிடிவாதமான மறுப்பு!

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைவதற்கு எதிராக நானே பிரச்சாரம் செய்வேன் என்று ஜெயவர்த்தனாவின் பிரகடனம்!

விடுதலைப் புலிகளின் தளபதிகள் உட்பட பதினேழு போராளிகளைக் கைது செய்து சித்ரவதை செய்த கொடுமை!

மேலும் சித்ரவதை செய்ய கொழும்பு சிறைக்குக் கொண்டு போக முயற்சி!

அதைத் தடுக்க முடியாமல் இந்திய அரசு கைகட்டிக் கொண்டிருந்த கோலம்!

சித்ரவதைக் கொடுமைகளை அனுபவிப்பதைவிடச் சாவதே மேல் என சயனைடு அருந்தி 13 போராளிகள் சாவு!

உணர்ச்சியும் மானமும் உள்ள தமிழர்கள் என்பதால் இலங்கைத் தமிழர்கள் குமுறினர்! கொந்தளித்தனர்!

சிங்களவன், ஒப்பந்தத்தாளைக் கிழித்தெறிந்து விட்டு ஆட்டம் போட்ட போது பக்கவாத்தியமிசைத்த இந்திய அரசும், இந்திய ராணுவமும் - இலங்கைத் தமிழன் கொந்தளித்த போது மட்டும்; அவன் மீது யுத்தத்தைத் தொடங்கி விட்டன!

அக்டோபர் 10-ல் யுத்தம் தொடங்கப்பட்டவுடன்

அக்டோபர் 11-ல் திருச்சியில் செய்தியாளர்களிடம் கொழும்பு ஒப்பந்தம் ஈழத்தமிழர்களின் பலிபீடமாகி விட்டது என்று அறிவித்தேன். இந்திய ராணுவம் யுத்தத்தை நிறுத்த வேண்டுமெனக் கழகச் சார்பில் வேண்டுகோள் விடுத்தேன். இந்திய ராணுவத்தின் தாக்குதலைக் கண்டித்து சென்னையில் கூட்டம் நடைபெறுமென அக்டோபர் 12-ல் கழகம் அறிவித்தது.

அக்டோபர் 13 - காலை தளபதி கிட்டு அவர்கள் என்னையும் பேராசிரியர் அவர்களையும் சந்தித்து தம்பி பிரபாகரன் அவர்களின் கடிதத்தை அளித்தார்.

அக்டோபர் 14 - ஏற்கெனவே அறிவித்தவாறு சைதாபேட்டையில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

அக்டோபர் 15-ல் மாநில முழுதும் இந்திய அரசின் பாரபட்ச போக்கையும் இந்திய ராணுவ அட்டூழியத்தையும் கண்டித்து கழகப் பேரணிகள்!

அக்டோபர் 16 - சென்னையில் தளபதி கிட்டுவை வீட்டுக்காவலில் வைத்தது மத்திய அரசு! அவரை சந்திக்கச் சென்ற தம்பி வை. கோபால்சாமி எம்.பி.யைக் கைது செய்து மத்திய சிறைச்சாலையில் ரிமாண்டில் அடைத்தனர் எம்.ஜி.ஆர். அரசினர்! இந்த அடக்குமுறையைக் கண்டித்து

அக்டோபர் 17-ந் தேதி கழகச் சார்பில் தனி நபர் சத்தியாகிரகம் போல ஒவ்வொரு நாளும் அறப்போர் எனக் கழகம் அறிவித்தது. அதன்படி ஆற்காடு வீராசாமியும், தம்பி என்.வி.என். சோமு

எம்.பி.யும் அறப்போர்க்களம் புகுந்தனர். அவர்களை கைது செய்த மாநில அரசு அதன் பிறகு தளபதி கிட்டுவை சந்திப்பதற்கு விதித்திருந்த தடையை விலக்கிக் கொண்டது.

அக்டோபர் 17, 18 நாட்களில் மாநில முழுவதும் கண்டனப் பொதுக் கூட்டங்கள்.

அக்டோபர் 20-ல் கழகத்தின் நிர்வாகக்குழு கூடி, இந்திய ராணுவம் ஈழத் தமிழர் மீது தொடர்ந்துள்ள யுத்தத்தை நிறுத்தாவிடில் ரயில் நிறுத்தப் போராட்டம் நடக்கும் என அறிவித்தது. அக்டோபர் 22-ல் கழகச் சார்பில் ஆந்திர முதல்வர் திரு. ராமராவ், தெலுங்கு தேசக் கட்சி பொதுச்செயலாளர் திரு. உபேந்திரா எம்.பி., லோக்தள தலைவர் திரு. அஜீத்சிங் எம்.பி., லோக்தள பொதுச்செயலாளர் திரு. சுப்பிரமணியசாமி கலந்து கொண்ட மாநாடு - அந்த மாநாட்டில் என்.டி.ஆர். முன்மொழிந்த தீர்மானம்!

அக்டோபர் 24 - கழகம் அறிவித்தபடி ரயில் நிறுத்தப் போராட்டம்! ரயில்கள் தானாகவே நின்றன! புகை வண்டி நிலையங்கள் 35 மணி நேரம் வெறிச்சோடிக் கிடந்தன!

அக்டோபர் 25 - சென்னையில் விமான நிலையத்துக்கு முன் கழகத்தினர் மறியல் அறப்போர்!

அக்டோபர் 27 - தமிழக முழுதும் மத்திய அரசு அலுவலகங்களின் முன்னால் கழகத்தினர் மறியல் அறப்போர்!

15 நாட்களாக விடுதலைப் புலிகள், உயிரைத் துச்சமெனக் கருதி வீரப்போர் புரிகிறார்கள்!

ஏ, அப்பா! என இந்திய ராணுவ தளபதிகள் பெருமூச்சு விடுகிறார்கள்!

புறநானூறு காலத் தமிழனை இலங்கைத் தீவிலே காணமுடிகிறது!

சாவைப்பற்றி எண்ணிப் பார்க்காமல் சரித்திரம் படைக்கும் அந்தத் தமிழ்க்குல மறவனுக்காக - நாம் ஏற்றுக் கொள்ளும் அடக்குமுறைகள் - சிறைவாசங்கள் - இழப்புகள் எல்லாம் சாதாரணம்தான்!

உடன்பிறப்பே! ஆந்திர முதல்வரையும் மற்ற தலைவர்களையும் வரவேற்க நானும் நமது பேராசிரியரும்

விமானநிலையம் சென்றபோது; நமது ஆவடித் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் டாங்குகள் அய்யோ! நமது தமிழினத்தை அழித்திட இலங்கைக்கு இந்திய விமானங்களில் ஏற்றப்படுவதைக் கண்டு நெஞ்சு படபடத்தது! வயிறு எரிந்தது!

வெள்ளையனிடமிருந்து சுதந்திரம் பெறப் போராடிய இந்தியாவிலிருந்து ஈழத் தமிழ்ச் சுதந்திர வீரர்களை சுட்டுப் பொசுக்க ராணுவமா? ஆயுதங்களா? டாங்குகளா? கப்பல் படையா? விமானக் கூட்டமா?

தாய்த் தமிழகத்தில் தமிழின உணர்வு அறவே பட்டுப் போய் விடவில்லை; குற்றுயிரும் குலை உயிருமாகவாவது கொஞ்சம் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவது கூடத் தவறு என மிரட்டுகிறது ஒரு கும்பல்!

இருப்பது ஒரு உயிர் - அது
போகப்போவது ஒரு முறை!
அந்த உயிர் எங்கள்
சொந்த தமிழனுக்காகப்
போகட்டுமே என்று
எந்த தியாகத்துக்கும்
துணிந்துவிட்ட
வீரர்கள் பாசறையே தி.மு.க.!

அந்தப் பாசறையிலிருந்து புறப்படும் பட்டாளத்துச் சிப்பாய்களாம் கழகக் கண்மணிகள்

அக்டோபர் 27 ஆம் நாள்

மாநில முழுதுமுள்ள மத்திய அரசு அலுவலகங்களின் முன்னால் மறியல் களம் காணுகிறார்கள்!

முன்கூட்டியே பல்லாயிரம் உடன்பிறப்புகள் கைதாகியுள்ளனர்!

அவர்களை வாழ்த்துகிறேன்! 27-ல் களம் காணும் கண்மணிகளை வழியனுப்புகிறேன்! வணங்குகிறேன்! நானும் காத்திருக்கிறேன்; கடமை ஆற்றிட!

அன்புடன்

மு.க.

26-10-1987

1524. சிக்கலில் மாட்டாதீர்!
சினத்துக்கு ஆளாகாதீர்!

உடன்பிறப்பே,

இந்திய அரசு தமிழ் ஈழத்தில் இந்திய ராணுவத்தைக் கொண்டு நடத்துகிற கொடுமைகள் மறைக்கப்பட்டு பொய்ப் பிரச்சாரம் முடுக்கி விடப்படுகிறது என்று சொன்னால்; ஆகா! கருணாநிதி அரசியல் ஆதாயத்துக்காக இப்படியெல்லாம் கூறுகிறார்! என்று மண்ணுக்கும் விண்ணுக்குமாகத் துள்ளிக்குதித்து ஏசியும், பேசியும், எழுதியும் திருப்திப்பட்டுக் கொள்கிறவர்களுக்கு இதோ சில விளக்கங்கள்!

யாழ்ப்பாண யுத்தத்தை நேரடியாகப் பார்க்க 23.10.87 வெள்ளிக்கிழமையன்று தமிழ்நாட்டு பத்திரிகை நிருபர்களை அரசினர் தனி விமானத்தில் அழைத்துச் சென்றார்கள். சென்று திரும்பிய அவர்கள் சொன்னதை ஆனந்தவிகடன் இதழ் தொகுத்து வெளியிட்டுள்ளது. அவற்றில் சில பகுதிகளை இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு உள்ளேன்.

எனக்கென்னவோ அங்குள்ள போர் நிலைமைகளைப் பார்த்த போது ஒரு கருத்து மனதில் பட்டது.

நம் இந்திய வீரர்களிடம் கொஞ்சம் உற்சாகம் குறைந்திருக்கிறாற் போல் படுகிறது. எவனுடைய நாட்டிலோ, எவனுக்கோ சமரசம் செய்யப் போய், நம் உயிர்களை இழக்கிறோமே என்கிற துயரம் மெலிதாய் அவர்களுக்குள் மொட்டுவிடத் தொடங்கியுள்ளது.

இந்திய அரசு, புலிகளை எப்படியாவது சந்தித்துப் பேசி அவர்களையும் சமாதான வழிக்குக் கொண்டு வருவது பற்றியும் யோசிக்க வேண்டும். ஏனென்றால், புலிகள் இன்றி யாழ்ப்பாணப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு இருக்க முடியாது!

– முராரி

(டெக்கான் ஹெரால்டு)

இதுவரையில் நடந்த எந்த யுத்தத்திலும், ஏன் வியட்நாமிலுங் கூடத் தங்கள் சொந்த ரிஸ்கில் நிருபர்கள் யுத்தத்தை நேரிலேயே பார்த்திருக்கிறார்கள். ஆனால், இங்கே யாழ்க் கோட்டை வாயிலோடு எங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது அநியாயம்!

- கே.வி. நாராயணன்

(யு.என்.ஐ.)

ரொம்பவும் தாமதமாகத்தான் புலிகளின் கண்ணி வெடிகளைத் தந்திரமாய் முறியடிக்க நம் வீரர்கள் கற்றிருக்கிறார்கள். கொஞ்சங் கொஞ்சமாய் இந்தியப்படை முன்னேறியிருந்தாலும் புலிகள் அனைவரையும் நிராயுதபாணிகளாக்கும் என்று சொல்ல முடியாது! ஏனெனில், யாழ்நகரிலிருந்து படகுகள் மூலம் மற்ற தீவுகளுக்குச் சுலபமாய்ப் போக முடியுமென்பதை எங்களால் பார்க்க முடிந்தது. எனவே, அப்படித் தப்பிச்செல்லும் புலிகள் மீண்டும் போர் தொடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. யாழ்த்தீவின் தெருக்களில் மருந்துக்குக் கூட மனித நடமாட்டமில்லை. பொது மக்களோடு மக்களாக மறைந்திருக்கும் புலிகளை அடையாளங் கண்டுகொள்வது இந்தியப் படைக்கு மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கும்!

நம் ஊர் டி.வி.யில் நாலைந்து வருடங்களுக்கு முன் இடிந்து போன கட்டடங்களையும், நம் இந்தியப் படை ஏற்படுத்திய புகை மண்டலங்களையும் காட்டி ..... வன்முறையாளர்கள், எல்.டி.டி.ஈ.யினரால் சேதமாக்கப்பட்ட இடங்கள் என்று செய்தி வாசிக்கிறார்கள்!

- வின்சென்ட் டி சௌஸா

(தி வீக்)

கைப்பற்றினோம் என்ற வார்த்தைக்கு இவர்கள் அகராதியில் என்ன அர்த்தமென்றே எனக்குப் புரியவில்லை ..... காரணம், ஒரு இடத்தைக் கைப்பற்றினால் அங்கு இந்திய வீரர்கள் இருக்க வேண்டுமல்லவா? அப்படி இவர்கள் கைப்பற்றியதாகக் குறிப்பிட்ட எந்த இடத்திலும் இந்திய வீரர்களை நாங்கள் பார்க்கவில்லை!

நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு மேலாகப் பறந்த போது, என்னால் ஒரே ஒரு சைக்கிளையும், ஒரு பாதசாரியையும் மட்டுமே பார்க்க முடிந்தது. ஊரடங்கு சட்டம் அமலிலிருக்கிறது என்பதால், பொதுமக்கள் நடமாட்டமில்லை .... சரி! ஆனால் அந்த இடங்களைக் கைப்பற்றித் தங்கள் பாதுகாப்பில் வைத்திருப்பதாகச் சொல்லும் இந்திய வீரர்கள் என்ன ஆனார்கள்? அவர்களில் ஒரு தலையையும் காணோமே! நான் யுத்த ஆரம்பத்தில் வவுனியா வழியாக யாழ்க்கோட்டைக்குச் சென்றிருந்தேன்.

அப்போது எங்கள் கார் கூடவே ஏகப்பட்ட இந்திய ராணுவ டிரக்குகள் ஊர்ந்து வந்தன. யாழ்க் கோட்டைக்குள் செல்ல அனுமதி கிடைக்காமல் நான் அதே வழியாகத் திரும்பிய போது, அந்த ஐம்பது கிலோ மீட்டர் தூரத்துக்கு என்னால் ஒரே ஒரு இந்திய வீரனை மட்டுமே (அதுவும் சென்ட்ரி போல) பார்க்க முடிந்தது.

– வெங்கட்ரமணி

(இண்டியா டுடே)

கோபமாயிருக்கும் யாழ் மக்களுக்குச் சோறும், மருந்தும் கொடுத்துச் சாந்தப்படுத்தி விடலாம் என்று இந்திய அரசு நினைக்குமானால், அது தவறான அனுமானம். நம் மக்கள் போலில்லை யாழ்மக்கள்! அந்த ஊரிலிருக்கும் சாதாரண ஆள்கூடப் புத்திசாலி! நான் இருபத்திரண்டு நாட்களுக்கும் மேலாக அங்கே தங்கியிருந்ததில் புரிந்து கொண்ட உண்மையிது ..... அவர்கள் ஒப்பந்தம் கையெழுத்தானதும் வெகு நாளைக்குப் பின் அமைதியான வாழ்க்கையென்பதால் சந்தோஷப்பட்டார்கள். ..... இந்திய சமாதானப் படையைப் பூரிப்போடு வரவேற்றார்கள். ..... ஆனால் அத்தனையும் ஆகஸ்டு இரண்டாம் வாரத்துக்குள்ளாகவே தலைகீழானது ..... அப்போதிலிருந்து, ஆங்காங்கே திறக்கப்பட்ட புலிகளின் அரசியல் அலுவலகத் திறப்பு விழாக்களில், ஜெயவர்த்தனாவையும், இந்திய சமாதானப் படையையும் அவர்கள் பகிரங்கமாகத் தாக்கியதை என்னால் காண முடிந்தது.

இப்படி இந்திய சமாதானப் படைக்கெதிராகப் போடப்பட்ட தூபம், மக்கள் மனத்தில் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்தது.

ஆனால், ஒன்று சொல்ல வேண்டும் ..... வெறுப்பனைத்தும், தமிழர்களின் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்படாதது போன்ற நியாயமான கோரிக்கைகள் தகர்த்தெறியப்பட்டதும் தொடங்கியதுதான்! பிறகு திலீபன் மரணமும் புலிகளின் தற்கொலையும் புலிகள் தாம் நம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற ஆழமான நம்பிக்கை யாழ்மக்கள் மனத்தில் பதிந்துள்ளது.

அங்குத் தனி ஈழம்தான் தீர்வென்று தீர்மானமாயிருக்கும் யாழ் மக்களை .... புலிகளை ஆதரிக்கும் அந்த மக்கள் வெள்ளத்தை இனி எந்த விதத்திலும் இந்திய ராணுவத்தால் சமாதானப்படுத்தவோ மனமாற்றம் ஏற்படுத்தவோ முடியாது!

– பாலசந்தர்

(நியூஸ்டைம்)

உடன்பிறப்பே! இவைகளேயன்னியில் இந்து, தினமணி, எக்ஸ்பிரஸ் ஏடுகளில் நிருபர்கள் வெளியிட்டுள்ள செய்திகளின்படி இந்திய ராணுவத்தின் மீது யாழ் மக்கள் வெறுப்புடன் இருக்கிறார்கள் என்ற உண்மையே படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

எல்லா நிருபர்களிடமும் பொதுவாகப் பேசித் தெரிந்து கொண்டவை என்று தலைப்பிட்டு ஆனந்த விகடன் எழுதியுள்ள செய்தித் தொகுப்பில் பின்வரும் விவரங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

- நம் ராணுவ அதிகாரிகளே ஒப்புக் கொள்வதற்கிணங்க, புலிகளிடம் இருக்கும் ஆயுதங்கள், வெடிகளனைத்தும் மேற்கத்திய நவீன ஸ்டைலில் உள்ளவை, இதுவரை கிழக்கத்திய நாடுகளில் இதுபோன்ற அதிமுன்னேற்ற ஆயுதங்களை நம் ராணுவ அதிகாரிகள் பார்த்ததில்லை என்று வியந்தார்கள்.

- புலிகளின் தகவல்தொடர்புச் சாதனங்களும் பக்காவாக இருக்கின்றன. எல்லாம் ரிமோட் கண்ட்ரோல்தான்! இதனால் தப்பித்தலும் பொதுமக்களிடையே ரகசியப் பிரச்சாரமும் புலிகளுக்கு வெகு சுலபம்.

ஃ புலிகள் எங்களுடைய பெயரைப் பொது மக்களிடையே சீரழிப்பதில் ஓரளவு வெற்றி பெற்றுவிட்டார்கள் என்று சொல்லியிருக் கிறார் ராணுவ அதிகாரி மஞ்சித்சிங்.

ஃ புலிகள் புத்திசாலிகள் ..... பயங்கரத் திறனுள்ள எதிரிகள் ..... தந்திரமானவர்கள், பலமுள்ளவர்கள்! என்று வர்ணித்திருக்கிறார் அதிகாரி குல்வந்த்சிங்.

ஃ இதுவரை இந்தியா நடத்திய எந்த யுத்தத்திலும் இவ்வளவு இந்திய வீரர்கள் மாண்டதில்லை. இந்தப் போரில்தான் 153 வீரர்கள் இறந்து போனார்கள். 535 வீரர்கள் படுகாயமுற்றுள்ளார்கள் ..... 47 வீரர்கள் காணாமற் போயிருக்கிறார்கள் ..... (இதுகூட அன்றைய கணக்கின் படிதான். அதாவது போர் தொடங்கிய பதினான்கு நாட்களுக்குள் இத்தனை இழப்பு ....) இந்தப் போரில்தான் நிறைய ராணுவ இளநிலை அதிகாரிகளை இந்தியா இழந்துள்ளது! என்றும் ராணுவ அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள்.

ஃ இது கடுமையான யுத்தம் ..... கடந்த ஐந்து நாட்களாக ஒரு விநாடி கூடத் தூங்காமலிருக் கிறோம் ..... சிரித்துக் கொண்டே எங்களை நோக்கி நடந்து வரும் சின்னச் சின்ன சிறுவர்களும், கையிலிருக்கும் கண்ணி வெடியை எங்கள் ட்ரக்கில் வீசியெறிந்து விட்டு மாயமாய் மறைகிறார்கள்.

..... பெண்கள் திடீரென்று புடைவைக்குள்ளிருந்து வெடிநிறைந்த சிமெண்ட் பைப்புகளைத் தூக்கியடிக்கிறார்கள் ..... இந்நிலையில், இச்சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பதெனத் தெரியாமல் திகைக்கிறோம்! என்று இந்திய வீரர்கள் கூறியிருக்கிறார்கள்.

உடன்பிறப்பே!

இத்தகைய ஒரு சூழலில் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று விடுதலைப்புலி இயக்கத்தின் சார்பில் கூறப்பட்டுள்ளதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு தாய்த் தமிழகத்து

மக்களும், யாழ்ப்பகுதித் தமிழ் மக்களின் சார்பில் பல்வேறு அமைப்பினரும் விடுத்துள்ள வேண்டுகோளை மதித்து இந்திய அரசு உடனடியாகத் தனது இராணுவத் தாக்குதலை நிறுத்திக் கொண்டு பேச்சுவார்த்தை வாயிலாக அமைதி காண முனைய வேண்டும்.

இந்த வேண்டுகோள் தமிழின அழிவைத் தடுக்கும் முயற்சி!

தமிழக மக்களின் இந்த வேண்டுகோளைப் புறக்கணித்து இந்திய அரசு சிக்கலில் மாட்டிக் கொள்ளவே விரும்புகிறதா? தமிழர்களின் நீங்காச் சினத்துக்கு ஆளாகவே தயாராக இருக்கிறதா?

விடையளிக்க வேண்டியது இந்திய அரசின் பொறுப்பாகும்!

அன்புடன்

மு.க.

31-10-1987

1525. கை கோர்த்து நிற்போம்; கடமையாற்றிடுவோம்!

உடன்பிறப்பே,

ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பின் சார்பாக பல்வேறு கட்சியினர், தமிழ்ப் புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர், மாணவர், மகளிர், பாட்டாளிமக்கள் அனைவரும் பங்கு கொள்ளும் மனிதச் சங்கிலி நிகழ்ச்சியொன்று கடந்த இரண்டாம் தேதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெருமழை, புயல் இவற்றின் காரணமாக அந்த நிகழ்ச்சி நவம்பர் ஆறாம் நாள் மாலை 4 மணிக்கு என ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெருமழை; ஈழத்தில் ஓயவில்லை! தமிழ் மக்களின் குருதி மழையாக அது பொழிந்து கொண்டிருக்கிறது!

புயல்; ஈழத்தில் குறையவில்லை! இந்தியப் பெரும்படை தமிழ்ஈழ விடுதலைப் புலிகளின் மீதும்; தமிழ் மக்கள் மீதும் புயல் வேகத்தில் தாக்கத் தொடங்கியுள்ளது.

எந்தத் தமிழகத்தையும், எந்த இந்தியப் பேரரசையும் இலங்கைத் தமிழினம் நம்பியிருந்ததோ அந்த நம்பிக்கை இன்று கேள்விக் குறியாகிவிட்டிருக்கிறது.

எனினும், மத்திய - மாநில அரசுகளை வலியுறுத்திடவும் - இலங்கைத் தமிழினம் அழியும் நிலையைத் தடுத்து நிறுத்திடவும் - இந்தியப் படையின் தாக்குதலை உடனடியாகக் கைவிட்டு, பேச்சுவார்த்தை வாயிலாக ஈழத்து மண்ணில் அமைதியை உருவாக்கிடுக என வற்புறுத்திடவும் - இந்திய நாட்டு குடிமக்கள் என்ற முறையில் தமிழ் நாட்டு மக்களுக்கு உரிமையில்லை யென்று எவரும் கூறமுடியாது!

வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஏடுகளின் மூலம் என்னதான் பொய்ப் பிரச்சாரத்தைச் செய்தாலும் இந்தியப் படையினரின் தாக்குதலுக்கும் அவர்கள் நடத்துகிற அட்டூழியங்களுக்கும் நியாயத்தைக் கற்பிக்க எடுக்கும் முயற்சியில் இந்திய அரசு வெற்றி பெற முடியாது!

அரசின் அச்சுறுத்தலுக்கும், அது வழங்கும் சலுகைகளுக்கும், அதன் விளம்பரங்களுக்கும் - எமர்ஜன்சி காலத்தைப் போல ஏடுகளும் வளைந்து கொடுக்கத் தொடங்கியிருக்கிற காரணத்தால்; தமிழ் ஈழ நிலத்தில் இந்திய ராணுவத்தின் பலம் பொருந்தியதும் - மனிதாபிமானமற்றதுமான தாக்குதலில் எத்தனை எத்தனை அப்பாவித் தமிழ் மக்கள், ஆடவர், பெண்டிர், குழந்தைகள் அன்றாடம் பிணங்களாகச் சாய்கிறார்கள் என்ற உண்மைகள் மறைக்கப்படுகின்றன!

இட்லர் காலத்துக் கோயபல்ஸ் பிரச்சாரம் முடுக்கி விடப்பட்டிருக்கிறது!

கொழும்பு ஒப்பந்தமே குறைபாடு மலிந்தது! இந்த அழகில் அந்த ஒப்பந்தத்தைச் சிங்கள அரசே மீறியதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு! ஒப்பந்தம் நிறைவேற இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் மசோதா முற்றிலும் தமிழர்க்குக் கேடு பயப்பதாகுமென; ஏற்கெனவே ஒப்பந்தத்திற்கு இசைவு தந்த வேறு பல போராளிகளின் இயக்கங்களும் - குறிப்பாக (டி.யு.எல்.எப்.) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் சுட்டிக்காட்டி இப்போது அறிக்கைகளை வெளியிட்டுள்ளன!

ஆனால் இன்னமும் இந்த ஒப்பந்தம் சிலாக்யமானது - சிரேஷ்டமானது - என ராஜீவ் காந்தி காட்மாண்டுவில் கூட கர்ச்சனை செய்கிறார்!

குழந்தை பிறந்ததோ குறைமாதத்தில்!

பிறந்து விட்டதே என வளர்க்க விரும்பினாலோ அன்றாடம் ஒரு நோய்கூட அல்ல; மணிக்கு மணி நம்மை மலைக்க வைக்கும் நோய் அந்தக் குழந்தைக்கு!

அதிலும் அந்தக் குழந்தைக்கு மூக்கில்லை - அதற்குப் பதிலாக முகத்தில் இரண்டு துவாரங்களேதான்!

நாக்கு அசைவதில்லை! உதடுகளோ திறந்தால் மூடுவதில்லை; மூடினால் திறப்பதில்லை! விழிகள் கிடையாது!

இரு குழிகள் மட்டுமே நெற்றிக்குக் கீழே உண்டு! ஒரு கால் ஊனம்! மற்றொரு கால் இல்லை! முடமாக ஒரு கை! முளைக்கவேயில்லை மற்றொரு கை! ஆணா - பெண்ணா என அறிவதற்குமோர் அடையாளமில்லை!

மொத்தத்தில் ஒரு முண்டம்! மூச்சு மட்டும் இழையோடிக் கொண்டிருக்கிறது!

இதற்குப் பெயர்தான் கொழும்பு ஒப்பந்தம்!

பிரசவம் எனக் கேள்வியுற்றுக் கண்ணே மணியே! என ஆசையுடன் காத்திருந்தவர்கள் கூட பிறந்து விட்ட முண்டத்தின் அழகு (?) கண்டு அட கர்மமே! எனத் தலையைப் பிய்த்துக் கொள்கிறார்கள் இப்போது!

இந்த ஒப்பந்தத்தை அப்படியே நிறைவேற்ற வேண்டியது; தமிழர்களின் உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் உயிரைப் பணயம் வைத்துக் களத்தில் நிற்கும் விடுதலைப் புலிகளின் கடமையென ஆணையிடுகிறது; ராஜீவ் காந்தியின் இந்திய அரசு!

இப்படியொரு நிர்ப்பந்தம் நியாயந்தானா?

இங்குள்ள தமிழன் எழுப்புகிற கேள்வியிது!

அந்த நிர்ப்பந்தத்தையும் யுத்தத்தின் மூலம் செய்திட இந்திய அரசு எதற்காகத் துடிக்க வேண்டும்?

ஆயிரக்கணக்கானத் தமிழ்ப் பொதுமக்கள் இந்திய ராணுவத்தாக்குதலால் உயிர் இழந்தும், உடைமை இழந்தும், அகதிகளாகியும் அல்லற்படுவதை வெளிநாட்டு, உள்நாட்டுப் பத்திரிகை நிருபர்களே ஒரு சிலர் அச்சமின்றி எடுத்துரைத்துள்ளனரே!

கடந்த இருபது இருபத்தைந்து நாட்களாக தமிழ் நாட்டிலிருந்து இந்திய அரசுக்கு எத்தனை வேண்டு கோள்கள்!

எத்தனை முயற்சிகள்! எத்தனை அறவழிப் போராட்டங்கள்!

இத்தனைக்கும் பிறகு, இன்னும் ஈழத்தமிழ் இனத்தை வேகமாக - விரைவாக அழிப்பேன் என்று விமானங்களில் குண்டு

பொழிகிற அளவுக்கு இந்திய அரசு தாக்குதல் நடத்துகிறதென்றால்; இங்குள்ள தமிழர்கள் ஒன்றாகக் கூடிடுதல் வேண்டாமோ?

ஆம்; அப்படிக் கூடியிருக்கிறோம் - மேலும் கூடுவோம் - நாங்களே கூடாகிப் போனாலும் பரவாயில்லை; கூடுவோம் என்பதற்கு முன்னறிவிப்புதான்;

நவம்பர் 6
சென்னையில்
மனிதச் சங்கிலி!

மாலை 4 மணிக்கு!

அன்புடன்

மு.க.

05-11-1987

1526. வியட்நாம் - ஒரு எடுத்துக்காட்டு!

நெருக்கடி நிலை காலத்தில் கழக ஆட்சி கலைக்கப் பட்டு பத்திரிகைச் சுதந்திரமும் பறிக்கப்பட்டிருந்த போது - முரசொலியில் வெளிவரும் ஒவ்வொரு எழுத்தும் அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட்டு அதன் பிறகே வெளியிடப் பட்டன. அந்தக் கால கட்டத்தில் (1976ஆம் ஆண்டு மே மாதம் 31ந் தேதி) எழுதப்பட்டு முரசொலியில் வந்த கடிதம்தான் இது! விடுதலைப் போர் குறித்த கருத்து இப்போதும் பொருத்தமாயிருக்கிறது என்பதற்காக - மீண்டும் நினைவு படுத்துகிறேன்.

உடன்பிறப்பே,

(VIETNAM A HISTORICAL SKETCH)

வியட்நாம் - ஒரு வரலாற்று வரைவு என்ற நூலை படிக்கும் வாய்ப்பு கிட்டியது எனக்கு! ஆண்டுக்கணக்கில் அமெரிக்கப் போர்த்தளவாடங்களின் எதிர்ப்பைச் சமாளித்து கோசிமின் தலைமையிலே திரண்டெழுந்த மக்கள் சக்தி இறுதியாகச் செங்குருதியில் தோய்ந்த வெற்றிமணிக் கொடியை, தன் வீறுகொண்ட கரங்களிலே தூக்கிப்பிடித்த நிகழ்ச்சி என்றாவது ஒருநாள் ஆதிக்கக்காரர்களுக்குப் பாடம் கிடைத்தே தீரும் என்பதற்கானச் சான்றாக அமைந்ததை உலகம் அறியும்.

வானை வளைத்துக் கொண்டு அமெரிக்க விமானங்கள் குண்டுமாரி பொழிந்த காட்சிகளும்; வயல்வெளிகளில் நின்றவாறு தங்கள் திண்தோள்களை உயர்த்தி வியட்நாம் மக்கள் அவைகளை சமாளித்த வீரகாவியங்களும் அந்நாட்டு வரலாற்றில் வைர எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சிகளாகும்.

வியட்நாமியர்கள், இன்று நேற்றல்ல - ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுக்காலமாக ஏதோ ஒரு போராட்டத்தில் ஈடுபட்டே தீரவேண்டியவர்களாகி விட்டார்கள்.

நூலாசிரியர் ஒரு இடத்திலே அழகாகக் குறிப்பிடுகிறார்; The Vietnamese land is no freegift from nature அதாவது வியட்நாம் மக்களின் நிலம், இயற்கையின் மூலம் அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட வெகுமதி அல்ல என்று உருக்கம் மேலிட உணர்ச்சி பொங்கிடக் கூறுகிறார்.

அங்குலம், அங்குலமாக அந்த மண்ணை வளப்படுத்தும் முயற்சியில் மக்கள் தொடர்ந்து ஈடுபட்டார்கள். ஆண்டுக்கு ஆண்டு, நூற்றாண்டுக்கு நூற்றாண்டு வியட்நாம் மக்கள், வெள்ளப் பெருக்கினோடும்; வறட்சி, புயல் போன்ற இயற்கை கொடுமைகளோடும் விடாது போர் நடத்த வேண்டியிருந்தது. ரத்தம், வியர்வை ஆகியவற்றைப் பாய்ச்சி அயராமல் உழைத்ததின் விளைவாகத்தான் அந்த மண்ணை செழுமை மிக்கதாகச் செய்திட முடிந்தது. இப்படியெல்லாம் வியட்நாம் மக்களின் கடும் போராட்டத்தையும், கடின உழைப்பையும் சித்தரிக்கிற நூலாசிரியர் "One easily understands why he is so deeply attached to his land" என்று முடிப்பது இதய நாளங்களின் எழுச்சித் துடிப்பை எதிரொலிப்பதாய் அமைகிறது. ஒரு வியட்நாமியன் ஏன், தன்னுடைய நாட்டை இவ்வளவு ஆழமாக நேசிக்கிறான் என்பதை இந்தக் காரணங்களின் வாயிலாக, எளிதாகப் புரிந்துகொள்ள முடியும் என்பதே ஆசிரியரின் கருத்தாகும்.

இயற்கைச் சேட்டைகளை எதிர்த்து மட்டுமல்ல பகைவர்களின் படையெடுப்புகள் பலவற்றையும் பல நூற்றாண்டுக்காலமாக சந்தித்து வாகைசூடிட வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகள் அந்த நாட்டுக்கு இடைவிடாது முளைத்துக் கொண்டேயிருந்தன. கணவன் மனைவிக்கிடையே உள்ள அன்பு எனினும், தாய் மகனுக்கிடையே எழுந்திடும் பாசமெனினும் - யாரோ ஒருவருக்கு அபாயம் ஏற்பட்டு அதிலிருந்து அவர்கள் மீண்டும் எழுகிறபோது முன்னைக்காட்டிலும் அதிகமாகிவிடுகிறதல்லவா; அன்பும், பாசமும்!

சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிக் கொண்டு தளராது பீடுநடைபோட்ட வியட்நாம் மக்கள் தங்கள் திருநாட்டின் மீது அளவற்ற பாசத்தைப் பொழிந்தனர்.

சீனப் பேரரசர்களின் படையெடுப்புகளுக்கு ஆளான நாடு; கொள்ளைக்காரர்களின் கொடுமைக்கும், அடிமைப்படுத்தும்

ஆதிக்ககாரர்களுக்கும் ஈடுகொடுத்து நொந்துபோன நிலைக்கு ஆளான நாடு!

அந்த நாட்டின் வீரக்கனலை அணைந்துவிடாமல் காப்பாற்றிய பெருமை, ஆங்கு தோன்றிய இலக்கியங்களுக்கு உண்டு! கவிதை ஆர்த்த பாவலர் பெருமக்களுக்கு உண்டு!

தீரம் செறிந்த அந்த இலக்கியப் படைக்கலன்களை அந்நாட்டு மக்கள், தங்கள் இதயங்களில் ஏந்தியிருந்த காரணத்தால்தான், துப்பாக்கிக் குண்டுகள் வெடித்துக் கொண்டிருந்த சமயத்திலும், அமெரிக்கப் படைகளின் ஆரவாரம் மிகுந்திருந்த நேரத்திலும், விமானங்கள் மூலம் மனிதவேட்டை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலும் வியட்நாமில் உள்ள அகழ்வாராய்ச்சியாளர்கள் பூமியைத் தோண்டி பழங்கால வரலாற்று மனிதர்களைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். விஞ்ஞானிகள் அறிவுக் கூடங்களில் அமர்ந்து விஞ்ஞான ரகசியங்களைக் கண்டுபிடிப்பதில் முனைந்திருந்தனர். தலைவர்கள், எதிர்கால இருபதாண்டுக்கான ஆக்கப்பூர்வமான வளர்ச்சித் திட்டங்களுக்கான புதிய கண்ணோட்டத்தைச் செலுத்தினர் என்று வரலாறு செய்திகளை செதுக்கிக் காட்டுகிறது.

உடன்பிறப்பே! வியட்நாம் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புக்களை நான் சுட்டிக் காட்டுவது வேறு எதற்காகவு மல்ல! மிக்க சிரமப்பட்டு கஷ்ட, நஷ்டங்களை அனுபவித்து, வியர்வையும், குருதியும் கொட்டி, தொடர்ந்து சோதனைகளோடு போராடிய மக்கள், தங்களின் தேசத்தை எல்லாவற்றுக்கும் மேலாக மதிப்பார்கள் என்பதற்கு வியட்நாம் ஒரு எடுத்துக்காட்டு!

இந்த இலக்கணம், வியட்நாம் போன்ற நாடுகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடியவை அல்ல!

சற்று சிந்தித்துப் பார்! அறுபது ஆண்டுக் காலமாகப் பல முனைகளிலே எதிர்ப்பைச் சந்தித்து, சுயமரியாதை இயக்கமாக, நீதிக்கட்சியாக, திராவிடர் இயக்கமாக, திராவிட முன்னேற்றக் கழகமாக இயங்குகிற நமக்கும் நமது இயக்கத்தின் மீது அத்தகைய பற்றும் பாசமும் எழுகிறதல்லவா?

அவரவர் சார்ந்திருக்கிற ஒவ்வொரு இயக்கமும் அல்லது கட்சியும் எத்தனையோ சோதனைகளுக்கும், தியாகத்திற்கும் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கக் கூடும்.

அப்படிப்பட்ட கட்சிகளில் ஒன்றாகத் தி.மு.க. திகழ்கிறது! வேதனை நெருப்பில், சோதனைப் புயலில் நமது கழகம் தள்ளப்பட்ட போதெல்லாம் வியட்நாம் மக்கள் சோர்வடையாமல் எழுந்து நின்றதைப்போல், நமது கழக வீரர்கள் சோர்வடையாமல் - தங்கள் சுகம் மறந்து கழகத்தை காப்பாற்றியிருக்கிறார்கள்.

நமது தானைத் தலைவர் அண்ணாவை, அறுபதாம் ஆண்டு கூட அவருக்கு நிறைவடைவதற்கு முன்பு, இழந்தோம் - அதை விடப் பெரிய சோதனையா, இனிமேல் நமக்கு வரப் போகிறது!

வியட்நாமில் பழங்காலத்துப் போர் ஒன்றுக்கான வீரக் கவிதைகளைப் பாடுகிறார் ஒரு கவிஞர் பெருமகன் (Nguyen Tral) கியென் இத்ரே என்பது அவர் பெயர்! மிங் என்னும் அயல்நாட்டு வம்சத்தினரின் ஆட்சியை அகற்றுகிற அந்நாளைய போர் ஒன்றில் மா என்ற ஆற்றங்கரையில் வியட்நாம் வீரர்கள் பெற்ற வெற்றியைக் குறிக்கும் கவிதை வரிகள் அவை!

அதில் ஒரு இடத்தில் கூறுகிறார்;

"On our chariot, the best seat was left empty, waiting for a talented General", நமது ரதத்தின் உன்னதமான பீடம் ஆற்றல் மிக்க தளபதிக்காக வெற்றிடமாக விடப்பட்டுக் காத்திருக்கிறது என்று சோகத்தை வெளிப்படுத்துகிறார்.

உடன்பிறப்பே, நமது அண்ணன் மறைந்த போது - நமது கழக ரதத்திலும் அதே நிலை தானே ஏற்பட்டது!

இன்றைக்கும் அந்த வெற்றிடம் நிரப்பப்பட்டு விட்டதாக நான் கூறவும் தயாராக இல்லை. நம்பவும் தயாராக இல்லை. அவ்வாறு நம்பி என்னையே நான் ஏமாற்றிக் கொள்ளவும் தயாராக இல்லை.

எனினும், ரதம் ஓடிக்கொண்டிருக்கிறது! வெற்றிடத்தில் என்னைத் தூக்கி உட்கார வைத்திருக்கிறாய்! நாம் அனைவருமே அண்ணாவின் ஒவ்வொரு கூறாக இருக்கின்ற காரணத்தால் அந்த வெற்றிடம் நிரப்பப்பட்டதுபோல் கழகப் பணிகள் தொய்வின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தேர் ஓடுகிறது என்றால், தேர், தானாக ஓடுகிறது என்று பொருள் அல்ல! தேரை இழுக்கிறார்கள் அல்லது இயந்திரம் வைத்துத் தள்ளுகிறார்கள் என்று பொருள்!

அதுபோல தலைமையில் இருக்கிற நாங்கள் உன்னால் இழுக்கப்படுகிறோம் - எங்களை நீதான் செயல்பட வைக்கிறாய்! உன் ஆர்வமும், கொள்கைப் பற்றும்தான் கழகத்தைக் காத்திடுகிறது! அதைத்தான் நாள்தோறும் காண்கிறேன்.

வியட்நாம் மண்மீது, அந்த மக்களுக்கு ஏற்பட்ட பாசம், அவர்கள் உழைப்பாலே உயர்ந்த மண் என்பதால்!

உனக்கு கழகத்தின் மீதுள்ள பாசம், இது உன் உழைப்பாலே உயர்ந்தது என்பதால்! அல்லவா உடன்பிறப்பே!

அன்புடன்

மு.க.

08-11-1987

1527. நவம்பர் 11 - மாவட்டத் தலைநகரங்களில் மகத்தான மனிதச் சங்கிலி!

உடன்பிறப்பே,

சென்னை மாநகரில் ஈழத் தமிழர் பாதுகாப்பு கூட்டமைப்பின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட மனிதச் சங்கிலி அறப்போரில் தி.மு.கழகமும் கலந்து கொண்டது. கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள் என்னையும் பேராசிரியர் அவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடி அவர்கள் தெரிவித்த விருப்பத்திற்கிணங்க சென்னை மாவட்டம், செங்கை அண்ணா மாவட்டக் கழக அமைப்புகள் எடுத்த முயற்சியின் காரணமாக கழக உடன்பிறப்புகள் சென்னை மனிதச் சங்கிலி நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

அந்த எழுச்சியைப் பிறர் சொல்லிக் கேட்பதைக் காட்டிலும், நானே நேரில் காண விரும்பினேன். நவம்பர் ஆறாம் தேதி மாலை 4 மணிக்கெல்லாம் வீட்டை விட்டுப் புறப்பட்டு - மீனம்பாக்கம் வரையில் சென்று - திரும்ப மறைமலையடிகள் பாலத்துக்கு மாலை 4.25 மணிக்கு வந்து சேர்ந்தேன். அங்கிருந்து மனிதச் சங்கிலியின் மகத்தான எழுச்சியைப் பார்த்துக் கொண்டே சென்ட்ரல் ரயில் நிலையம் வரையில் சென்றேன்.

அதற்குள் மணி ஐந்து ஆகி விட்டபடியால் காரை வேறு வழியாகத் திருப்பிக் கொண்டு அண்ணா அறிவாலயத்துக்கு வந்து விட்டேன்.

கட்சிச் சார்பற்ற முறையில் தமிழ்ப் பெருங்குடிமக்கள் திரண்டிருந்த அந்தக் காட்சியும், அவர்கள் ஒருவரோடொருவர் கைகோர்த்துக் கொண்டு பத்து கிலோ மீட்டர் தொலைவுக்கு மேலாக வரிசையாக - கட்டுப்பாடு குலையாமல், அமைதி

காத்து ஆர்வம் குன்றாமல் ஆவேச முழக்கமிட்ட காட்சியும் வெள்ளம்போல தமிழர் கூட்டம் - வீரங்கொள் கூட்டம்! உள்ளத்தால் ஒருவரே; மற்றுடலினால் பலராய்க் காண்பர் என்ற புரட்சிக் கவிஞரின் கவிதைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தன என்றே கூற வேண்டும்.

இந்திய அரசு ஈழத் தமிழர்கள் மீது இராணுவத் தாக்குதல் நடத்தி அட்டூழியம் செய்வதைக் கண்டிக்கும் வகையில் நடைபெற்ற மனிதச் சங்கிலி அறப்போராட்டத்தை பெரிதுபடுத்தி விடக்கூடாது என முடிவு கட்டிக் கொண்டு செய்தி வெளியிட்ட பரந்த மனப்பான்மையும் (?) பத்திரிகா தர்மச் சிந்தனையும் (?) கொண்ட சில ஏடுகள் கூட அந்த அறவழிக் கிளர்ச்சி அமைதியாகவும் கட்டுப் பாட்டுடனும் நடந்தது என்பதை ஒப்புக் கொண்டிருக் கின்றன.

அறிஞர் பெருமக்கள்
புலவர் ஏறுகள்
கவிஞர்கள், கலைஞர்கள்
எழுத்தாளர், ஓவியர்
மகளிர், மாணவர்
பாட்டாளிகள், பல்வேறு
கட்சிகளின் முன்னணியினர்
தொண்டர்கள்

பல்லாயிரக்கணக்கில் குறள் அகம் முனையிலிருந்து சைதை மறைமலை அடிகள் பாலம் வரையில் கைகோர்த்து நின்றது, தமிழக வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் என்பேன்!

ஏன் மனிதச்சங்கிலி?
எதற்காக மனிதச்சங்கிலி?

ஈழத் தமிழினத்தைக் காத்திட - இந்திய அரசின் நியாயமற்ற இராணுவத்தாக்குதலை நிறுத்திட - தமிழகமே கிளர்ந்தெழுந்துள்ளது என்பதை மத்திய அரசுக்கு உணர்த்திடவே மனிதச்சங்கிலி!

தி.மு.க. போன்ற ஒருசில கட்சிகளின் பிரச்சினையல்ல இது; யார் எந்தக் கட்சியைச் சார்ந்தவராயிருப்பினும் - அவர் தமிழராயின் அவரது உணர்வு ஈழத் தமிழினத்தைக் காப்பாற்ற முற்படுவதாகத்தானே அமைய முடியும்!

அந்த உணர்வின் ஆரமாகத்தான் சென்னை மாநகரின் மனிதச் சங்கிலி விளங்கிற்று!

அதேபோல் தமிழகம் முழுதும் - ஈழத் தமிழருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் ஆதரவாக எழுந்துள்ள கொந்தளிப்பை எடுத்துக் காட்டிடவே

நவம்பர் 11ஆம் நாள்

மாவட்டத் தலைநகரங்களில் மனிதச்சங்கிலி அறப்போர் நிகழ்ச்சி நடைபெற வேண்டுமென தமிழுணர்வு கொண்ட அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், ஆசிரியர், மாணவர், தொழிலாளர் அனைவரும் விரும்புகின்றனர்.

அந்த எண்ணத்தின் தூதுவனாக இருந்து தி.மு.க. செயல்பட வேண்டும் என்பதற்காகவே

நவம்பர் 11

மாவட்டக் கழக அமைப்புகள், மற்ற அமைப்புகளுடனும் - குறிப்பாகத் தமிழ் அமைப்புகளுடனும், ஈழத் தமிழர் பிரச்சினையில் ஒருமித்த கருத்துடைய இயக்கங்களுடனும் கலந்து பேசி, மனிதச் சங்கிலியை மாவட்டத் தலைநகர்களில் நடத்திட முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் நடைபெற்றபோது மனிதச் சங்கிலிக்காகக் குறிக்கப்பட்டிருந்த சாலையில் எந்தெந்த இடங்களுக்கு எந்தெந்த பகுதிக் கழகத்தினரும் பொதுமக்களும் வர வேண்டுமென்பது பற்றி விவரமான அறிக்கைகள் வெளிவந்துள்ளன. அதனைப் படித்துப் பார்த்து மாவட்டத் தலைநகர்களில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுகிறேன்.

சுவரொட்டிகள் ஒட்டுதல், துண்டு அறிக்கைகள் வெளியிடுதல், சென்னை மனிதச் சங்கிலிக்காக நான் எழுதிய வேண்டுகோள் கடிதத்தை ஆயிரக்கணக்கில் அச்சிட்டு வழங்குதல் போன்ற காரியங்களை உடனடியாகச் செய்திட வேண்டும். சென்னைக்காக நான் எழுதிய கடிதத்தில் தேதியையும் ஊரின் பெயரையும் மாற்றி அச்சியற்றிக் கொள்க!

11ஆம் நாள் மனிதச்சங்கிலி நடப்பது குறித்து ஊர் ஊராகப் பிரச்சாரம் செய்திடல் வேண்டும். வீடுவீடாகச் சென்று

மனிதச்சங்கிலியில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்திடல் வேண்டும்.

மாலை 4 மணிக்கே சாலைகளில் குறிப்பிட்ட இடத்தில் போய் வரிசையாக நிற்கவேண்டும். 4.30 மணிக்கு கைகோர்த்துக் கொண்டு முழக்கமிடல் வேண்டும்.

இந்திய அரசே!

உடனடியாகப் போர் நிறுத்தம் செய்

இதுவே மூலமுழக்கமாக - முக்கிய முழக்கமாக இருக்க வேண்டும்!

இந்த ஒரு முழக்கம் தவிர வேறு முழக்கம் அன்று தேவையில்லை!

ஈழத்தில் குவியல் குவியலாக விழுந்து கொண்டிருக்கும் தமிழினத்தின் பிணங்கள் - குளமாகப் பெருகித் தேங்கி நிற்கும் தமிழினத்தின் ரத்தம் - அதை நிறுத்த நாம்; தமிழர்களாகப் பிறந்த நாம்; இந்த ஒரு கடமையையாவது செய்திடக் கூடாதா?

செய்வீர்கள் என நம்புகிறேன்!

அன்புடன்

மு.க.

09-11-1987

1528. இன அழிவைத் தடுத்திட இணைந்து நிற்போம்!

உடன்பிறப்பே,

சென்னை மாநகரிலும் அதைத் தொடர்ந்து மாவட்டத் தலைநகர்களிலும் மனிதச்சங்கிலி அறப்போர் மகத்தான எழுச்சியுடன் நடைபெற்றுள்ளது. இலங்கையின் தமிழ் நிலப்பகுதிகளில் இந்திய அரசு, தனது இராணுவத்தை ஏவி - விடுதலைப் புலிகளை வேட்டையாடுகிறோம் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்து வருவதைக் கண்டித்தும், உடனடியாக இந்திய இராணுவம் போர் நிறுத்தம் செய்துவிட்டு பேச்சுவார்த்தைக்கு வசதியான சூழலை உருவாக்கவேண்டுமென்று வலியுறுத்தியும் நடத்தப்படுகிற இந்த மனிதச்சங்கிலி அறப்போராட்டத்தினை வருகிற 16.11.87 திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு (சென்னை, மற்றும் மாவட்டத் தலைநகர்கள் நீங்கலாக) எல்லா நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் அமைதியான முறையில் நடத்திட வேண்டுமென்று தலைமைக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொண்டு அறிக்கை விடுத்துள்ளேன்.

கழகத்தினரேயன்னியில் ஈழத்தமிழர் பிரச்சினையில் ஒத்தகருத்துடைய கட்சிகளின் அமைப்புகள், புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர், மாணவர், அலுவலர், வணிகர், வழக்கறிஞர், தொழிலாளர், மகளிர் எனத் தமிழுணர்வுகொண்ட அனைவரும் பங்கு பெறுகிற அளவுக்கு மூன்றாவது கட்டமாக நடைபெறும் இந்த மனிதச் சங்கிலியும் அமைந்திட நமது கழக அமைப்பின் நிர்வாகிகள், மகளிர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, தொழிலாளர் அணி, இளைஞர் அணியின் நிர்வாகிகள் முனைப்பான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சென்னையைப் போலவே மாவட்டத் தலைநகர்களிலும் மனிதச்சங்கிலி மிக்க எழுச்சியுடனும் உணர்ச்சி உத்வேகத்துடனும் நடைபெற்றிருக்கிறது. மாவட்டத் தலைநகர்களில் ஆங்காங்கு திராவிடர் கழகத்தினர், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியினர், தமிழ்நாடு பார்வார்டு பிளாக் கட்சியினர் கலந்து கொண்டிருக்கின்றனர். கட்சி சார்பற்ற ஏராளமான பொதுமக்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், வழக்கறிஞர்கள், மாணவர்கள் குழுமி நின்று கைகோர்த்து அணிவகுத்துள்ளனர்!

கடந்த ஒருமாத காலத்திற்கு மேலாகத் தமிழக மக்கள் எத்தனையோ போராட்ட முறைகளின் வாயிலாக அமைதி வழியில் தங்களின் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்த போதிலும் இந்திய அரசு - பொய்ப் பிரச்சாரத்தின் மூலம் தமிழ்நாட்டு மக்களின் கண்களைக் கட்டி ஏமாற்றிவிட்டு, ஈழத்தமிழர் இனப்படுகொலையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்கிறது.

எல்லாமே இலங்கைத் தீவில் எம்.ஜி.ஆர். அவர்களைக் கேட்டுக் கொண்டுதான் செய்தேன் என்று ராஜீவ் காந்தி பாராளுமன்றத்திலேயே கூறி, தமிழ்நாட்டு அரசின் வாயை அடைத்து விட்டது மாத்திரமல்ல - மத்திய அரசு செய்வதனைத்தும் மாநில அரசுக்கு ஏற்றவையே என்று எம்.ஜி.ஆர். அறிக்கை விடுகிற அளவுக்கும் தமிழக அரசின் சுயவடிவத்தைத் தோலுரித்தும் காட்டிவிட்டிருக்கிறார்.

டெல்லியின் மாநிலங்களவையிலும், மக்கள் அவையிலும் நம்முடைய கழக உறுப்பினர்கள் எடுத்துவைத்த அத்தனை கருத்துக்களையும் உடன்பட்டு ஏற்றுக் கொள்ளாவிட்டாலும்கூட; பல்வேறு எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் கொழும்பு ஒப்பந்தம் சரியல்ல என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இந்திய அரசு, உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்று அந்தக் கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்திப் பேசியுள்ளார்கள்.

ஏதோ, இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மசோதா - தமிழர்களின் எல்லா உரிமைகளையும் அளித்து விட்டது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குவதில் இந்திய அரசின் பிரச்சார இலாகா மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் மாநிலம் அமைக்க சட்டம் நிறைவேறி விட்டது என்றும், தமிழருக்கு சுயாட்சி உரிமை என்றும் கொட்டை எழுத்துக்களில் தலைப்பிட்டுச் செய்திகளை வெளியிட்டுள்ளன தமிழ் நாட்டு ஏடுகள்! வானொலியும், தொலைக்காட்சியும்கூட அப்படியே முழங்குகின்றன!

பாண்டிச்சேரி மாநிலத்துக்கு உள்ள அதிகாரங்கள்கூட இல்லாத நிலையில்தான் மாநில அமைப்புகள் இலங்கையில் உருவாக இருக்கின்றன!

சிங்கள மொழியும், தமிழ் மொழியும் இலங்கையின் ஆட்சி மொழிகள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டதற்கு மாறாக சிங்கள மொழி மட்டுமே ஆட்சிமொழியாக இருக்குமென்பதும், தமிழும் ஆட்சி மொழியாக இருப்பது உறுதியாக்கப்படாத இழுபறி அறிவிப்பாகவும் ஆக்கப்பட்டுவிட்டது!

இஸ்லாமியர், கிறித்தவர், இந்துக்கள் எனப் பல மதத்தினர் இருந்தாலும் அந்த மதத்தினர் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு பௌத்த மதத்தினருக்கே தேசிய அந்தஸ்து என்ற முதல் நிலைமை!

தமிழர்கள் நிறைந்த வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைக்கப்படும் என்பது ஏட்டுச் சுரைக்காய் அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் - அந்த இணைப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்வேன் என்று இலங்கைப் பிரதமர் பிரேமதாசா இலங்கை பாராளுமன்றத்திலேயே இப்போது அறிவித்திருப்பதோடு அதிபர் ஜெயவர்த்தனேயும் அந்த இணைப்புக்கு விரோதியே எனக் கூறி - தமிழர் தாயகம் அல்லது தமிழ் மாநிலம் என்ற சொற்றொடரையே சுக்கல் சுக்கலாக உடைத்து விட்டிருக்கிறார்.

அவ்வளவு விளக்கமேன்; ஓரளவு மனக்குறையின் ஆரம்ப நிலையில் கொழும்பு ஒப்பந்தத்தை வரவேற்றுக் கருத்துத் தெரிவித்த இலங்கைத் தமிழர்களின் சில அமைப்புகளே கூட அந்த ஒப்பந்தம், தற்போது வந்துள்ள சட்டத்தால் உயிரற்றுப் போய்விட்டது என்ற கருத்தை வெளிப்படையாகக் கூறியுள்ளன.

தமிழருக்கு சுயாட்சி உரிமை என்று முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ள தினமணி ஏடு கூடத் தனது தலையங்கத்தில் (அதே தேதியில்) என்ன எழுதியுள்ளது

என்பதை நம்மீது வீணாகக் காய்ந்து விழுந்து, காழ்ப்புக் கொட்டுவோர் படித்துணர்வது நல்லது என்று கூறக் கடமைப் பட்டுள்ளேன்;

தமிழ் ஈழப்பகுதிகளைப் பொறுத்தவரை இந்தியப்படை ஏராளமான உணவு மற்றும் மருத்துவ வசதிகளைப் பொதுமக்களுக்கு அளித்தும் அங்கே அமைதி குலைந்ததற்கு விடுதலைப் புலிகளை விட இந்திய அமைதிப்படையின் ஆயுத நடவடிக்கையே காரணம் என்று பெரும்பான்மையான மக்கள் நினைப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

இவ்வாறு 13.11.87 தினமணி சென்னை பதிப்பு தலையங்கம் சுட்டிக்காட்டுகிறது!

தமிழ் ஈழப்பகுதிகளில் நடைபெறும் உண்மை நிகழ்ச்சிகளை மறைத்துவிட்டு - புரையோடிவிட்ட புண்ணுக்குப் புனுகு தடவுவது போன்ற வேலையில் இந்திய அரசினர் தனது அதிகாரவர்க்கத்தின் துணைகொண்டு பத்திரிகைகளில் தமிழ்மக்களை திசைதிருப்பும் தலைப்புகளைப் போடச் செய்வதாலேயே புனிதர்களாகி விடலாம் என்று கருதுவது புத்திசாலித்தனமாகாது!

இலங்கை பாராளுமன்றத்தில் 13-வது திருத்த மசோதா சட்டமாகும் போது இலங்கைப் பிரதமர் பிரேமதாசா ஆற்றிய உரையை இந்திய அதிகாரவர்க்கத்தின் அச்சுறுத்தலுக்கு அடங்கி நடக்கும் ஏடுகள்கூட மறைக்க முடியாமல் வெளியிட்டிருக்கின்றனவே!

"Mr. Premadasa accused the Indian peace keeping Force of Genocide in Jaffna and said "there is nobody who accuses Indian of Genocide. Whatever faults big people do, no one speaks about it."

~ யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதி காக்கும் படையினர் இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இந்தியா நடத்தும் இனப்படுகொலையைக் குறைகூற யாரும் முன் வரவில்லை. பெரியவர்கள் தப்பு செய்தால் அதை யாரும் கண்டு கொள்வதில்லை என பிரேமதாசா குற்றம் சாட்டினார்.

உடன்பிறப்பே, இலங்கைப் பிரதமர் பிரேமதாசாவுக்கு தமிழர்கள் என்றாலே அலர்ஜி! இம்மியளவு உரிமையும் தமிழர்க்கு அளிக்கப்படக்கூடாது என்பதிலே அழுத்தமான கருத்துக் கொண்ட மனிதர். அவரே தனது நாட்டில் ஒரு பகுதியில் - ஆம்; தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணப் பகுதியில் இந்திய ராணுவம் இனப்படுகொலை நடத்துவது உண்மைதான் என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறார். அதுவும் யார்? இலங்கையின் பிரதமர்! எங்கே நின்று பேசுகிறார்? இலங்கைப் பாராளுமன்றத்தில் நின்று!

பேசுகிறவர் பிரேமதாசா என்றாலும் அவர் பேசிய விஷயம் உண்மைதானே! தமிழ் இனப்படுகொலையை சிங்கள ராணுவத்தைக் கொண்டுதான் செய்வோம்! இந்திய ராணுவம் செய்வதற்கு என்ன உரிமை இருக்கிறது? என்று உள்ளூர நினைத்துக் கொண்டு அவர் அப்படிப் பேசியிருக்கிறார்.

எப்படியோ, சிங்கள ராணுவமானாலும் - இந்திய ராணுவமானாலும் தமிழ் ஈழத்தில் நடத்தியதும், நடத்துவதும் இனப்படுகொலைதான்!

இந்திரா காந்தி அம்மையார் ஈழத்தில் நடப்பது இனப்படுகொலை என்று மாநிலங்களவையில் குற்றம் சாட்டினார்! அப்போது அந்த இனப்படுகொலையில் ஈடுபட்டது சிங்கள அரசு!

இப்போது அதே இனப்படுகொலையை இந்திய அரசின் சார்பாக இந்திரா காந்தி அவர்களின் மகன் ராஜீவ் காந்தி நடத்தி மகிழ்கிறார்.

நாள்தோறும் ஈழத்தில் தமிழர்கள் பிணங்களாக வீழ்வதும், அவலம் அங்கே அன்றாட நிகழ்ச்சிகளாக இருப்பதும், இந்தியாவின் தேசிய கௌரவத்துக்காக அல்ல என்பதும்; ராஜீவ் காந்தி என்ற ஒரு தனி மனிதரின் கௌரவத்துக்காக மட்டுமே என்பதும் மிகத் தெளிவாகி விட்ட பேருண்மையாகும்!

இந்த உண்மையை இருட்டுக்குள் தள்ளிக் கதவைப் பூட்ட ஒப்பந்த நிறைவேற்றம், ஆயுதப் பறிப்பு, வன்முறை ஒழிப்பு என்பன போன்ற வாய் ஜாலங்கள் காட்டப்படுகின்றன!

ஒப்பந்தம்; ஓட்டை உடைசல்!
அதையும் பொடிப் பொடியாக

ஆக்கிப் போட்டு விட்டது இப்போது
நிறைவேற்றப்பட்டுள்ள மசோதா!

மாநில சுயாட்சியுமில்லை; மண்ணாங்
கட்டியுமில்லை!
இந்தியாவிலேயே மாநிலங்களுக்கு
அதிகாரங்கள் குறைவு!
அதைவிடப் பலமடங்கு அதிகாரங்கள்
இலங்கையில் அமையும்
மாநில அமைப்புகளுக்கு குறைக்கப்
பட்டுள்ளது என்பதே மெய்!

அந்த உதவாக்கரை ஒப்பந்தமாவது
நிறைவேற்றப்படுமா? என்றால்
அதுவும் சந்தேகமே!
இந்த அழகில் கோடிக்கணக்கான
ரூபாய்களை செலவழித்துக்
கொண்டு - இந்திய அரசு,
இந்தியப்படையினரை ஈழத்
தமிழர்களோடு மோதவிட்டுக்
கொண்டிருக்கிறது!

பண இழப்பு! நமது
படைவீரர் இழப்பு!
பாதுகாக்க வருகிறார்கள்
என எண்ணி ஏமாந்த
ஈழத்தமிழர்கள் பலரது
உயிர் இழப்பு!
தேவைதானா?

இதனை ராஜீவ்காந்திக்கு உணர்த்திடவே அமைகிறது மனிதச்சங்கிலி; 16.11.87-ல்!

நகரங்கள், பேரூர்களில் நவம்பர் 16 திங்கள் மாலை 4 மணிக்கு எந்த இடத்திலிருந்து மனிதச்சங்கிலி

ஆரம்பமாகிறது என்பதை முன்கூட்டியே அறிவித்திடல் வேண்டும்.

எந்த இடத்திலிருந்து தொடங்கி, எந்தச் சாலை வழியே தொடருகிறது என்பதையும் தெரிவித்திடல் வேண்டும்.

எந்தெந்த பகுதியினர் எந்தெந்த இடத்திற்கு வந்து சங்கிலியில் இணைந்திடல் வேண்டுமென்பதையும் ஏடுகள் வாயிலாகவும் துண்டு அறிக்கைகள் வாயிலாகவும் - விளக்கிட வேண்டும்.

இன அழிவைத் தடுத்து நிறுத்திட தமிழர்கள் அணிவகுப்போம்; இணைப்புச் சங்கிலியில்!

அன்புடன்

மு.க.

14-11-1987

1529. உண்மைக்கும் மின்னலுக்கும் ஒளி அதிகம்!

உடன்பிறப்பே,

தொலைக்காட்சியின் அண்டப் புளுகுகள் - வானொலியின் ஆகாசப்புளுகுகள் - அவற்றையும் மிஞ்சி இங்குள்ள சில ஜெயவர்த்தனாவின் கொத்தடிமைகள் நடத்திய கோயபல்ஸ் பிரச்சாரம்; அனைத்துக்கும் கடந்த 19-ந்தேதி வியாழக் கிழமையன்று சரியான சம்மட்டி அடி விழுந்து பொய்ப் பித்தலாட்டங்களின் கபால ஓடுகள் நொறுங்கிச் சிதறிச் செதில் செதில்களாகப் போய் விட்டன!

ஏ, அப்பா - எப்படியெல்லாம் உண்மைக்குப் புறம்பான செய்திகளை ஊர்வலம் விட்டு மக்களை ஏமாற்றுகிற பணிக்குக் கட்டியம் கூறி வந்தனர்! அவர்களின் வாயெல்லாம் அடைத்து போகவைத்து விட்டது நவம்பர் 19ந் தேதி!

விடுதலைப் புலிகளிடம் சிறைப்பட்ட இந்தியப்படை வீரர்களை விடுதலைப் புலிகள் டயரைப் போட்டு தீவைத்து உயிரோடு கொளுத்தி கொன்று விட்டார்கள்.

இந்திய ராணுவத்தினர் அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்கவே இல்லை.

அகதிகள் முகாம்களில் உள்ளவர்களுக்குப் போதுமான அளவு உணவு வழங்கப்படுகிறது.

எந்த உண்மையையும் இந்திய ராணுவம் மறைக்கவில்லை. இந்திய ராணுவ அதிகாரிகள் சொல்வதெல்லாம் உண்மை - உண்மையைத் தவிர வேறொன்றுமே இல்லை.

இப்படி நடைபெற்ற இந்திய அரசின் திட்டமிட்டப் பொய்ப் பிரச்சாரத்தையும் - அதற்கு ஆமாம் போட்ட குட்டிப்

பூசாரிகளையும் நவம்பர் 19ந் தேதியன்று இலங்கையில் நடைபெற்ற இந்திய ராணுவக் கைதிகள் ஒப்படைப்பு நிகழ்ச்சி; நன்றாகவே தோலுரித்துக் காட்டி விட்டது.

ஏறத்தாழப் பதினைந்து பத்திரிகைகளின் நிருபர்கள் அந்த நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பத்திரிகை நிருபர்களின் முன்னிலையில்தான் இந்திய ராணுவக் கைதிகளை விடுவிக்க முடியும் என்று விடுதலைப் புலிகளின் இயக்கம் விதித்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டு, இந்திய அரசின் சார்பில் விமானத்தில் பத்திரிகை நிருபர்கள் இந்தியாவிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சிறைப்பட்ட இந்தியப்படை வீரர்களை ஒப்படைத்த விடுதலைப் புலிகளின் இயக்கத் துணைத் தலைவர் மாத்தையா நிருபர்களுக்கு மத்தியில் பின் வருமாறு குறிப்பிட்டார் என்று எல்லா ஏடுகளுமே செய்தி வெளியிட்டன.

''எங்களைப் பற்றிய செய்திகள் இருட்டடிப்பு செய்யப் படுகின்றன. எங்களைப் பற்றித் தவறான பிரச்சாரம் செய்யப்படுகிறது. இந்த நிலைமையில் உண்மையை உலகத்துக்கு எடுத்துக் காட்டவே பணயக் கைதிகள் விடுதலைக்குப் பத்திரிகையாளர்கள் வரவேண்டுமென்று வலியுறுத்தினோம்''

மாத்தையா சுட்டிக்காட்டியது சரிதான் என்பது போலத்தான் இலங்கை சென்று வந்த நிருபர்கள் செய்திகளைத் தந்துள்ளார்கள்;

நிருபர்கள் நேரிலே கண்ட, கேட்ட அனைத்தையும் வெளியிட முடியாமல் சில பத்திரிகை அலுவலகங்களிலே அவர்களுக்குள்ள சிக்கலை நான் நன்கு அறிவேன்.

அவர்கள் திரட்டி வந்த செய்திகள் எந்த அளவுக்கு வடிகட்டப்பட்டுள்ளன என்பதையும் நான் அறியாதவனல்ல!

அரசின் கடுமையான அச்சுறுத்தலுக்குமிடையே பத்திரிகா தர்மம் துளியளவாவது காக்கப்பட வேண்டும் என்ற நினைவுடன் சில ஏடுகள் தமது நிருபர் தந்த செய்திக்கு இடமளித்துள்ள தகவலும் எனக்குத் தெரியும்!

முரசொலி, தினகரன், விடுதலை போன்ற ஏடுகளில் வந்துள்ள செய்திகள் என்றால் அவை வாடிக்கையாக வருகிற செய்திகள்தானே என எண்ணி விடக் கூடும்! அல்லது அவற்றில் அப்படித்தான் வருமென்று எதிர் முகாமினர் கதை கட்டக் கூடும்!

கடந்த ஒரு மாத காலமாக தமிழகமன்னியில் பிற மாநில ஏடுகளில் வந்துள்ள உண்மைத் தகவல்கள் பலவற்றை நான் தொகுத்துத் தந்திருக்கிறேன்! இந்தியாவில் உள்ள ஏடுகள் மட்டுமன்றி வெளிநாட்டு ஏடுகளில் இந்திய ராணுவம் தமிழ் ஈழத்தில் நடத்தும் அட்டூழியங்கள் பற்றி வந்த செய்திகளை அவ்வப்போது எடுத்துக் காட்டியிருக்கிறேன்! கூட்டங்களில் பேசி விளக்கியிருக்கிறேன்!

இதோ! இப்போது நான் தொகுத்திருப்பது தமிழ்நாட்டுச் செய்தியாளர்கள் - நவம்பர் 19-ல் இலங்கை சென்று திரும்பியதும் வெளியிட்ட தகவல்கள்!

காரிருளில் மின்னல் போலப் பளிச்சிடும் மிகச்சுருக்கமான செய்திகள்தான்! எனினும் மின்னலுக்கு ஒளி அதிகமல்லவா? இதோ அந்த உண்மைகளின் ஒளியைப் பார்!

★

சிப்பாய் வாமன் சித்தே என்ற பணயக் கைதி நிருபர்களிடம் ''விடுதலைப் புலிகளின் முகாமில் நாங்கள் நன்றாக நடத்தப்பட்டோம். நன்றாக இருக்கிறோம்'' என்று கூறினார்.

இந்து

இந்திய அமைதிப்படையினால் அழைத்து வரப்பட்ட மக்கள் கமிட்டி உறுப்பினர்கள் உடுவில் என்னுமிடத்தில் நிருபர்களிடம்; இந்திய அமைதிப்படையினர் தெரியாமல் நடத்திய குண்டு வீச்சில் அகதி முகாம்களில் இருந்த 10 பேர் ஆரம்பத்தில் இறந்து போனார்கள் என்று தெரிவித்தார்கள்.

இந்தியன் எக்ஸ்பிரஸ்

பணயக் கைதியாக இருந்து விடுதலையான சித்தே நிருபர்களிடம் கூறியபோது ''விடுதலைப் புலிகள் எங்களை

நன்றாக நடத்தினார்கள். நேரா நேரத்துக்கு உணவு கொடுத்தார்கள்'' என்று குறிப்பிட்டார்.

தினத்தந்தி

தளபதி மாத்தையா, நிருபர்களிடம் சில புகைப்படங்களைக் கொடுத்தார். அதில் குண்டு பாய்ந்து இறந்தவர்களின் பிணங்கள் காணப்பட்டன. அந்தப் புகைப்படங்களை இந்திய அமைதிப்படை அதிகாரிகள் நிருபர்களிடமிருந்து பறிமுதல் செய்து விட்டனர்.

மாலைமுரசு - சென்னை

சிங்கள ராணுவத்தினர் பிடித்து வைத்திருந்த 13 தம்பிமார்கள் சயனைடு விஷமருந்து சாப்பிட்டு உயிர்விட்டதுதான் இந்த சண்டைக்கு காரணமாக அமைந்துவிட்டது என்று எல்லோரும் ஒருமித்துக் கூறினார்கள். இந்தச் சண்டையில் பெருமளவு பொதுமக்கள் பலியாகியிருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு பற்றி கேட்டதற்கு ஓரளவுக்கு அது உண்மைதான் என்றனர். கடந்த வாரத்தில் கூட நாங்கள் இருந்த அகதிகள் முகாமில் குண்டுகள் வந்து விழுந்ததில் பலர் கொல்லப்பட்டனர் என்று (நகர மக்கள் கமிட்டி உறுப்பினர்) திருமதி குமாரசாமி கூறினார்.

மக்கள் குரல்

செய்தியாளர்களிடம் பேசும்படி சில பெண்கள் உள்ளிட்ட பொதுமக்களை முதலில் இந்திய ராணுவத்தினர் உற்சாகப்படுத்தினர். விரைவில், பேச்சுவார்த்தைகள் தமிழுக்கு மாறின. இந்திய அமைதிப்படையினரால் விளைவிக்கப்பட்ட உயிரிழப்புகள் பற்றி அந்த மக்கள் கூறுவதை கவனித்துவிட்ட ஒரு அதிகாரி உடனே சரி நேரமாகிவிட்டது என்று திடுதிப்பென்று அறிவித்து அந்த மக்களைச் சற்று வலுக்கட்டாயமாகவே அந்த இடத்திலிருந்து அப்பால் இழுத்துச் சென்றுவிட்டார்.

இந்தியன் எக்ஸ்பிரஸ்

புலிகளுடன் இந்திய ராணுவத்தினர் மோதி உயிரிழக்கும் போது, சிங்கள ராணுவத்தினர் அதைக் கண்டு கொள்ளாமலே மிகுந்த மகிழ்ச்சியுடன் பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்

என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய அதிகாரி ஒருவர், இங்கிருந்து சென்ற நிருபர்களிடம் கூறியுள்ள செய்தியும் சில ஏடுகளில் வெளிவந்துள்ளது.

உடன்பிறப்பே, குறைகள் மலிந்த கொழும்பு ஒப்பந்தம் - அதையும் குற்றுயிரும் குலை உயிருமாக ஆக்கிவிடுகிற அளவுக்கு அண்மையில் இலங்கை அரசு நிறைவேற்றியுள்ள சட்டம் - முதலில் ஆதரித்தவர்களே இப்போது ஆமையோட்டுக்குள் தலையை மறைத்துக் கொள்கிற அவலம் -

இந்த நிலையில்தான் ஒரு மாத காலமாக தமிழகம் கொந்தளித்த பிறகு - இருபதாயிரத்துக்கு மேற்பட்டோர் சிறை சென்ற பிறகு - இரண்டு தமிழ் இளைஞர்கள் தீக்குளித்துச் செத்த பிறகு - தமிழகம், கர்நாடகம், புதுவை மாநிலங்களில் மனிதச் சங்கிலி போராட்டம், மறியல் அறப்போர், ரயில் நிறுத்தப் போர் முதலியவை தொடர்ந்து நடைபெற்ற பிறகு - போர் நிறுத்தம் என அறிவித்து விட்டு அதன் தொடர்ச்சியாக இந்திய அரசு மேலும் பொய்ப் பிரச்சாரப் போர்வையில் ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த இரத்தக் கரங்களை மறைத்துக் கொள்ளப்பார்க்கிறது!

ஆனால் தமிழ்நாட்டு மக்கள் ஏமாறத் தயாராக இல்லை!

அன்புடன்

மு.க.

22-11-1987

1530. தடந்தோள் தட்டிக் கிளம்பிடுவோம்; நாம் தமிழர் என்பதை உணர்த்திடுவோம்!

உடன்பிறப்பே,

தலைமைக் கழக நிர்வாகக் குழு, விரிவானதும் விளக்கமானதுமான தீர்மானமொன்றை நிறைவேற்றி அதனை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவேண்டிய அவசியம் குறித்தும் சுட்டிக்காட்டி, செயல்படவேண்டிய பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறது.

ஈழத்தமிழ் மக்களுக்கு தனித்தமிழ் ஈழம் என்ற ஒன்றைத் தவிர, மற்ற எல்லா உரிமைகளும் கிடைத்துவிட்டன என்றும், இந்தியாவில் உள்ளது போன்ற மாநில அந்தஸ்து ஈழத்தமிழர்களுக்கு கிடைக்க வழிவகை வகுக்கப்பட்டுள்ளது என்றும், வடக்கு கிழக்கு இணைந்த ஒரு மாநிலம் உருவாக்கப்பட்டு அதனால் இலங்கையின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு தமிழர்களுடைய நிர்வாகத்தின் கீழ் அமைகிறது என்றும், தமிழ்மொழியும் சிங்கள மொழிக்கு நிகரான இலங்கை ஆட்சிமொழியாக்கப்பட்டுள்ளதென்றும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நம்பினாரோ இல்லையோ, உலகத் தமிழ் மக்கள் அனைவரையும் நம்பச் செய்யுமளவுக்கு அவரும், அவரது கட்சியினரும், அவரது செல்வாக்கைப் பரப்புவதற்கென்றே செயல்படும் வானொலி, தொலைக்காட்சிச் சாதனங்களும் பிரச்சாரம் செய்யத் தவறவில்லை.

ஆனால் நடந்தது என்ன? இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமல்படுத்த இலங்கைப் பாராளுமன்றத்தில் மசோதா கொண்டு வருவதற்கு முன்பு இலங்கை அரசு இந்திய அரசுடன் பேசி முடிவு செய்யும் என்ற வாக்குறுதியைக் கூட இலங்கை அரசு, காலில் போட்டு மிதித்து விட்டு ஏற்கெனவே குறைபாடு மலிந்த கொழும்பு ஒப்பந்தத்தின் குரல்வலையை இலங்கைப் பாராளுமன்றத்தில்

கொண்டு வந்த திருத்தச் சட்டங்களின் மூலமாக நெரித்துக் கொன்று போட்டு விட்டது.

இந்த விபரங்களைத்தான் ஆதாரங்களுடன் நமது கழகத்தின் தலைமை நிர்வாகக்குழு தீர்மானமாக வடித்தெடுத்துள்ளது. அந்த விளக்கமான தீர்மானம் தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலே கூட நூல் வடிவில் அச்சியற்றப் பட்டு உலக நாடுகள் அனைத்திலுமுள்ள அரசியல் வித்தகர்கள், பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் அனுப்பப் படவுள்ளது.

உன்போன்ற உடன்பிறப்புகள் டிசம்பர் மூன்றாம் நாள் முதல் ஒரு வார காலம் பட்டி தொட்டி முதல் பட்டினங்கள் வரையில் சைக்கிள் பேரணிகள் நடத்தியும், வழிநடைப் பயணங்கள் மேற் கொண்டும் நமது தமிழின மக்கள் இலங்கையில் ஈழத்து மண்ணில் நமது இந்திய நாட்டு இராணுவத்தினராலேயே இனப்படுகொலைக்கு ஆளாகிற கொடுமையையும் - இந்திய அரசு கடைப்பிடிக்கும் முதிர்ச்சியற்ற ராஜதந்திரத்தின் காரணமாக நமது இந்தியப் படை வீரர்களும் தேவையற்ற நிலையில் மாண்டிடும் அவலத்தையும் - விளக்கிடுவதற்கும் தமிழ் மக்களின் உணர்வை ஒன்று திரட்டுவதற்கும் தலைமை நிர்வாகக்குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் பெரிதும் பயன்படும்.

அறிவித்தவாறு வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணையவு மில்லை - இணைந்தாலும் அது தமிழர் தாயகமாக நீடிக்குமென்ற உறுதியுமில்லை - எனவே இலங்கையில் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பு தமிழர்களின் நிர்வாகத்தின் கீழ்வரும் என்ற பேச்சுக்கே இடமில்லை!

தமிழும் ஆட்சி மொழி என்பது ஏட்டுச் சர்க்கரையே தவிர, இலங்கையின் அரசியல் சட்டத்தையும் - திருத்தச் சட்டங்களையும் ஒப்பிட்டு ஆய்ந்து பார்க்குமிடத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஜெயவர்த்தனா நன்றாக ஏமாற்றியிருக்கிறார் என்பதைத் தெளிவாகவே புரிந்து கொள்ள முடியும்!

இலங்கை அரசு ஒப்பந்தத்தை எப்படியெல்லாம் மீறியுள்ளது என்பதையும், அதனை இந்திய அரசு எப்படி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது என்பதையும் தலைமை நிர்வாகக்குழுவின் தீர்மானம் படம் பிடித்துக்காட்டுகிறது!

எனவே உன் போன்றோர் தீர்மானத்தைப் படிப்பதோடு மட்டுமின்றி மற்றவர்க்கு விளக்கிச் சொல்லவும் முற்பட வேண்டும். அந்த அரும்பணியை டிசம்பர் 3-ந் தேதி முதல் தொடங்கிட வேண்டும்!

3 முதல் 10-ந் தேதிவரை சைக்கிள் பேரணிகள் - வழிநடைப் பயணங்கள் - ஏன்? டிச.9 முதல் மாவட்டந்தோறும் பேரணிகள், பொதுக்கூட்டங்கள் நடைபெறுவதால் டிசம்பர் திங்கள் முழுவதுமே இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் குறைபாடுகளையும் - அந்த ஒப்பந்தத்தைக் கூட நிறைவேற்ற முன்வராத சிங்கள அரசின் போக்கையும் - அதைக் கண்டிக்கவோ தட்டிக் கேட்கவோ துணிவில்லாத இந்திய அரசு உரிமைக்குப் போராடுகிற விடுதலைப் புலிகளை வேட்டையாடுவது என்ற பெயரால் தமிழினத்தை அழிக்கப் புறப்பட்டுள்ள தமிழின விரோத நடவடிக்கைகளையும் - மக்களிடம் எடுத்துக்கூறும் வாய்ப்பை நாம் பெறுகிறோம்.

இந்த உண்மை நிலைகளை நாம் எடுத்துச் சொல்லும்போது இங்குள்ள இந்திரா காங்கிரசார் நாம் ஏதோ கற்பனைக் கதைகளைக் கட்டி விடுகிறோம் என்கிறார்கள்.

இலங்கையில் வீரகேசரி என்றவொரு தமிழ் ஏடு! அரசின் ஆதரவு ஏடு! விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான ஏடல்ல! அந்த ஏட்டில் நவம்பர் 21-ந் தேதி எழுதப்பட்டுள்ள தலையங்கத்தின் ஒரு பகுதியைப் படித்துப் பார்த்தால் தமிழ் ஈழத்தில் இந்திய ராணுவத்தின் நடவடிக்கை தமிழர்களின் மானத்துக்கே எப்படி அறைகூவலாக அமைந்துள்ளது என்பது புரியும்.

"வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போன்று ஏற்கெனவே இராணுவ நடவடிக்கைகளினால் நொந்துபோன யாழ் மக்களுக்கு பஸ் சோதனை என்ற பெயரிலும் துன்பங்களை விளைவிப்பது மனிதாபிமானமாகமாட்டாது. பஸ் சோதனைகளின் போதும், வீடுகளிலும் பெண்கள் அநாவசியமான தொந்தரவுகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்க செயலாகும்.

பெண்களை பெண்களைக் கொண்டே சோதனை நடத்துவிப்பதே உரிய நடவடிக்கையாகும். அதை விடுத்து பெண்களை ஆண்களைக் கொண்டு சோதனை செய்விப்பது எந்த நாகரிக உலகிலும் ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும். இது போன்ற சம்பவங்கள் அண்மைக் காலமாக வட, கிழக்கு

மாகாணங்களில் பரவலாக இடம் பெற்று வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

சோதனை நடவடிக்கைகளை தொடரும் போதும் இனியாவது பெண் போலீஸாரை ஈடுபடுத்தும் புத்திசாதுர்யமான நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும். வாழ்வதற்கு அவசியமான மானமும், கற்பும் சூறையாடப்பட்ட பின்னர் உயிர் வாழ்வதில் எவ்வித அர்த்தமுமே இல்லை. அத்தகையதொரு நிலை இனியும் தோன்றாதவாறு அமைதிப்படையினருக்கு உடனடி அறிவுறுத்தல் வழங்குவது மிகவும் இன்றியமையாததாகும்.

அண்மைக் காலத்தில் இல்லத் தலைவர்கள், பெற்றோர்கள், குழந்தைகளைப் பறிகொடுத்து நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் ஒவ்வொருவரும் கூறும் கண்ணீர்க் கதைகள் நெஞ்சை நெகிழ வைப்பவை. இவர்களது இழப்புகளை எவ்வாறு ஈடு செய்வது? யார் ஈடு செய்வது? உயிரிழப்புகளை ஈடு செய்வது சாத்தியமான காரியமா? இழந்த உயிர்களை மீண்டும் உயிர்ப்பிக்க முடியுமா?

நாயோட்டம் பேயோட்டமாக தமிழ் மக்களது வாழ்க்கை மாறிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் வட, கிழக்கில் அமைதிப்படையினர் எந்த நோக்கத்திற்காக நிலை கொண்டுள்ளார்களோ அந்த நோக்கம் நிறைவேறாமல் மக்களை இம்சிப்பதால் என்ன லாபத்தை அடைய முடியும்?

உடன்பிறப்பே, இவ்வாறு எழுதியிருப்பது இல்லை - இல்லை - அழுது புலம்பியிருப்பது வீரகேசரி ஏடு! இலங்கை அரசின் ஆதரவு ஏடு என்றாலும் கூட கொஞ்சநஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கிற தமிழ் உணர்வு பட்டுப் போகவில்லையென்பதற்கு அடையாளமாக - தானாடாவிடினும் தன் தசையாடும் என்ற பாசத்தின் அடிப்படையில் கண்ணீரால் எழுதப்பட்டுள்ள வாசகங்கள் இவை!

ஆனால் இங்குள்ள திடீர்த் தேசியங்களும், எட்டப்பர்களும், கூலிப் பிரச்சாரகர்களும் இந்திய ராணுவம் இலங்கையில் மெத்தவும் புனிதமாக நடந்து கொள்கிறது என நாள்தோறும் வாய்கிழியக் கத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இலங்கை அரசுக்கு ஆதரவான பத்திரிகையே தமிழ் ஈழத்தில் நடக்கும் உண்மையை மறைக்க முடியாமல் வெளிப்படுத்துகிறது!

இந்த விபரங்களையெல்லாம் சிற்றூர், பேரூர், நகரங்கள் அனைத்திலும் மக்களைச் சந்தித்து எடுத்தியம்பத்தான் கழகத்தின் அறவழிப்படையினர் டிசம்பர் மூன்றாம் நாள் முதல் புறப்படுகிறார்கள்!

உடன்பிறப்பே, அவர் போவார் இவர் போவார் என்றில்லாமல் அனைவருமே இந்தப் பணியில் தங்களை ஒப்படைத்துக் கொள்ள வேண்டுமென யாசிக்கிறேன்!

தமிழினத்தை அழித்து விட நடக்கும் சதிக்கு இப்போது இடம் கொடுத்து விட்டால் எதிர்காலம் நம்மைச் சபிக்கும்!

எனவே, இந்தியப் பிரதமர் ராஜீவ் நடத்துகிற தமிழ் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்திட;

உடன்பிறப்பே;

தடந்தோள் தட்டிக் கிளம்பிடுக!
நாமெல்லாம் தமிழர் என்பதை
உணர்த்திடக் குழுமிடுக!
அறவழி - அமைதி வழி -
அதுவே அண்ணா வழி! அவ்வழியில்
தமிழினம் காத்திட
முரசு கொட்டுவோம்!

அன்புடன்

மு.க.

29-11-1987

1531. கடிதங்கள் - கடிதங்கள் - கண்ணீர் கடிதங்கள்!

உடன்பிறப்பே,

வானொலியில் அன்பு வழி என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சி! நாள் தோறும்! எது அன்பு வழி தெரியுமா? அமைதிப் படை என்ற பெயரால் தமிழ் ஈழத்தில் உள்ள இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ மதங்களைச் சார்ந்த தமிழர்களை இந்திய அரசு கொன்று குவிக்கிறதல்லவா? அதற்குப் பெயர் அன்பு வழி! அதற்காக வானொலியில் முற்பகலில் ஒரு நிகழ்ச்சி! அதில் பக்திப் பாடல்கள் - திரைப்படப் பாடல்கள் - இடையிடையே விடுதலைப் புலிகளுக்கு எதிரான அபாண்டச் செய்திகள்! இந்திய ராணுவத்துக்கு வாழ்த்துகள்!

அன்பு வழிக்குப் பிறகு மாலையிலே வானொலியில் வெற்றி மாலை என்றொரு நிகழ்ச்சி! ஈழத் தமிழ் மக்களை இரக்கமின்றிக் கொன்று, பெண்களை மானபங்கப் படுத்தி, கற்பழித்து, சித்ரவதை செய்து - அப்பாவிப் பொதுமக்களைக் குண்டு மாரி பொழிந்து சாக அடித்து, செத்துப் போன ஒப்பந்தத்தை ஒத்துக் கொள்ளச் சொல்லி விடுதலைப் புலிகளை வற்புறுத்த அவர்களையும் வேட்டையாடுகிறார்களே இந்திய நாட்டுச் சிப்பாய்கள் அவர்களுக்கு இங்குள்ள வானொலியார் போடுகிறார் வெற்றி மாலை! இதுவும் அன்றாடம் நடக்கின்ற நிகழ்ச்சிதான்! இந்திய ராணுவத்தினரை உற்சாகப்படுத்த பக்திப் பாடல்கள் - சினிமாப் பாடல்கள் - இடையிடையே பொய்ச் செய்திகள்!

கேட்கும்போது குருதி கொதிக்கிறது - நாடி நரம்புகள் துடிக்கின்றன - என்ன செய்வது! தமிழ் நாட்டு வானொலியிலும், தொலைக்காட்சியிலும்தான் இந்த அநியாயம்! அக்ரமம்! அபாண்டம்! ஆணவத் தாண்டவம்!

அந்த இரு நிலையங்களும் லஞ்சலாவண்ய மஞ்சங்களாகி நெடுநாட்களாகின்றன என்பது தெரிந்த விவகாரந்தான் எனினும், இப்போது தமிழர்களின் உணர்வுகளின் மீது வெளிப்படையாகவும் நேரடியாகவும் விளையாடுகிற துணிச்சல் பெற்றிருக்கின்றன என்கிற போது இந்தக் கொடுமையை நிறுத்த வழியே கிடையாதா என்றுதான் இதயம் ஏங்குகிறது!

இரண்டொரு நாட்களுக்கு முன்பு தமிழகத்திலிருந்து இந்திய அரசின் சார்பில் அழைத்துச் செல்லப்பட்ட பத்திரிகையாளர்கள் கூட தமிழ் ஈழத்து மக்கள் சொன்ன உண்மைகள் சிலவற்றை மறைக்காமல் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த மக்கள் தமிழ் ஈழத்து நிலைமைகளைப் பற்றி இந்திய வானொலியும் தொலைக்காட்சியும் பரப்புகின்ற செய்திகள் பொய்யானவை என்று கூறிக் கண்டித்திருக்கின்றனர். தமிழ் ஈழத்தில் இப்போது ஏற்பட்டுள்ள சூழலுக்கு இந்திய ராணுவம்தான் ஆரம்பத்தில் காரணம் என்பதை இலங்கையில் உள்ள அந்த மக்கள் இங்கிருந்து சென்ற பத்திரிகையாளர்களிடம் தெளிவாகக் கூறியிருக்கின்றனர். இதனை இங்குள்ள நடுநிலை ஏடுகள் மட்டுமல்ல; இந்திரா காங்கிரசின் ஆதரவு ஏடுகள்கூட தவிர்க்க முடியாமல் வெளியிட்டிருக்கின்றன!

இத்தனைக்கும் பிறகு இன்னமும் இந்திய அரசின் அமைச்சர்களும், பிரதமர் ராஜீவும், இந்திரா காங்கிரஸ் நண்பர்களும், கூலி ஒலிபெருக்கிகள் சிலரும் இந்தியப் படையினர் ஈழத் தமிழர்கள் மீது பூச்செண்டு கொண்டு வீசி, பன்னீர் தெளித்து, பழரசம் கொடுத்து அமைதியை நிலை நாட்டுவதாகக் கூறி, தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற முனைகிறார்கள்.

தமிழகப் பத்திரிகையாளர்கள் கண்டு வந்த, கேட்டு வந்த உண்மைகள் மட்டுமல்ல - பிற மாநிலப் பத்திரிகைகளில் வெளிவரும் உண்மைகள் மட்டுமல்ல - லண்டன் பி.பி.சி.யில் சொல்லப்படும் உண்மைகள் மட்டுமல்ல - ஆஸ்திரேலியா வானொலி நிருபர் வெளியிட்ட உண்மைகள் மட்டுமல்ல - அயல் நாடுகள் பலவற்றின் பத்திரிகையாளர்கள் அறிந்து வந்த உண்மைகள் மட்டுமல்ல - இதோ இலங்கைத் தீவிலிருந்து அஞ்சல் வாயிலாக வந்த சில கடிதங்கள்! விமானத் தபாலில் வந்தவை! எழுதியவர் பெயரை மட்டும் குறிப்பிட்டுள்ளேன் - எந்த

முகவரியிலிருந்து எழுதியுள்ளார் என்பதை வெளியிட்டால் இந்திய ராணுவம் அல்லது இலங்கை ராணுவம் அந்த முகவரியாளரின் வீட்டின் மீது குண்டு வீசி அழித்துவிடும்; இதுவரை அவர்கள் அழியாமலிருந்தால்!

இங்கே எந்த முகவரியாளருக்கு எழுதப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டாலும் - இங்குள்ள அரசுகள் அவர்களைத் தேடிப் பிடித்து தினற அடிக்கும்!

எனவே, எழுதியவர்கள் பெயர் - எழுதியுள்ள விபரங்களை மட்டும் குறிப்பிடுகிறேன்! இதற்கு ஏதாவது நடவடிக்கை என்றால் அதற்கு ஆட்பட நான் தயாராக இருக்கிறேன். தமிழ் ஈழத்தில் இந்திய ராணுவம் விளைத்து வரும் அநியாயங்களுக்கெல்லாம் ஒரு உரிய விசாரணை வைத்தால் அப்போது என் பாதுகாப்பில் இருக்கும் அந்தக் கடிதங்களை சான்றாகக் காட்டுவதற்கும் நான் தயாராகவே இருக்கிறேன்.

ஒரு கடிதம் ஸ்டீபன் என்பவர் தமிழகத்தில் உள்ள உறவினருக்கு எழுதியது;

இதோ அந்தக் கடிதம்...

இறை ஆசி வேண்டி எழுதிக்கொள்வது. நீங்கள் சுகமாக போய்ச் சேர்ந்ததற்கு இறைவனுக்கு நன்றி.

அக்டோபர் 15, தன்னாமுனைக்கும் சத்துருகண்டானுக்கும் இடையில் கண்ணிவெடியில் சிக்கி இந்தியன் கமாண்டர்ஸ் டிரக்குகளில் இருந்து இருபது பேர் இறந்ததையொட்டி நள்ளூமுனை, கௌனனி, சத்துருகண்டான், கெத்தானி, கருவிப்பங்கேனி, கொக்குவில் போன்ற இடங்களில் துப்பாக்கிச் சூடும், அடியும், கற்பழிப்பும் நடந்தது. நான் யாரைப் பாதுகாப்பது, பெண் பிள்ளைகளையா, ஆண்களையா? ஒன்றும் செய்ய முடியவில்லை. அன்றைய தினம் ஐந்து முறை வந்து பிரச்சினை தந்தார்கள். நமது புதுக்கட்டிடம் நெசவு நூல் ஆகியவற்றுக்கு நெருப்பு வைத்தார்கள். நீங்கள் இருந்த வீடு, மோட்டார் கார் எல்லாம் தரைமட்டம். பிரீஸ்ட் என்று ஒருவர் தன்னை ஆதாரத்தோடு சொல்லியும் கேட்கவில்லை. அவரை உருட்டி உருட்டி அடித்து கை முறிந்தது. நல்லகாலம் நீங்கள் தப்பி விட்டீர்கள். எல்லா வீடுகளும் எரிக்கப்பட்டு அகதிகளாக பாடசாலைகளில் இருக்கிறார்கள்!

அகதிகளுக்கும் நல்ல அடி. எமது பிள்ளைகள் மன்றாடி வேண்டி நிற்கிறார்கள்.

இந்தக் கடிதம் பெண்கள் பள்ளிக்கூடத்திலிருந்து பெண்களின் நிலைகுறித்து எழுதப்பட்டது. எழுதிய தேதி 21.11.87.

அடுத்து 23.11.87இல் சாந்தினி என்ற பெண் தமிழ் ஈழத்திலிருந்து எழுதிய கடிதம் இது...

எமது மக்கள் இங்கு படும் துன்பங்களைப் பார்த்து அதை சகித்துக் கொண்டு உயிருடன் இருப்பது என்பது பெரிய சாதனை. அக்டோபர் 21, ஜாப்னாவில் நடந்த குண்டு வீச்சு, யாரும் எதிர்பாராத மிகவும் பயங்கரம்! விமானத் தாக்குதல்களும் நடந்தன. இலங்கை அரசின் உச்சக்கட்டம் வடமராச்சி. ஆனால் இந்திய ராணுவத்தின் ஆரம்பமே யாழ்ப்பாணம் நகருக்கு சுடுகாடாகி விட்டது. வீதியோரங்களில் இருந்த மனித பிணங்களும் அவற்றை உண்ட நாய்களும், காகங்களும், இதைவிட வீட்டிற்கு வீடு பட்டினிச் சாவுகள். யாழ்ப்பாணம் நகரை நீங்கள் கண் கொண்டு பார்க்க மாட்டீர்கள், வீதிகளில் எங்கும் மண்டையோடுகள், வீதிக்கு வீதி ராணுவ சோதனை இல்லாத இடங்களைப் பார்க்க முடியாது.

அக்டோபர் 21-ந் தேதி தான் ராணுவம் யாழ்ப்பாணம் நகருக்குள் நுழைந்தது. அன்று யாழ்ப்பாணம் மருத்துவ மனையில் நடந்த சம்பவம் உலக வரலாற்றிலேயே நடைபெறாதது. ராணுவம் மருத்துவ மனைக்குள் நுழைந்ததும் 69 நோயாளிகளையும் மூன்று டாக்டர்களையும் சுட்டுக் கொன்றனர்.

இரண்டு பத்திரிகை அலுவலகங்களின் மீதும் குண்டு வீசினார்கள். அதன்பின் எந்தப் பத்திரிகைகளும் இல்லை. மானபங்கப்படுத்தப்பட்ட பெண்கள், கொள்ளையடிக்கப்பட்ட நகைகள், இப்படி ஒரே அட்டகாசம். இது எமது மக்களுக்கு நல்ல பாடம். ஏனெனில் இந்த முறை ஏற்றத் தாழ்வு இல்லாமல் எல்லோரும் அகதிகளாக இருந்தனர் அல்லவா?

இண்டியன் நியூஸ் சொல்வது எல்லாமே பொய். தற்போது நாம் ஒரு போர் நடைபெறும் நாட்டில் ஜீவிப்பது போன்ற பயத்துடனும் நிம்மதியில்லாமலும் வாழ்கிறோம்.

நாளை என்ன நடக்குமோ என்று தெரியாத நிலைமை. இப்படி கேவலமாக எமது தமிழ் மக்களின் வாழ்க்கை மாறி விட்டது. எதையோ எதிர்பார்த்த மக்களுக்கு எல்லாம் ஏமாற்றமாகி விட்டது.

ஆனால் இவற்றை அனுபவிக்க நாம் கொடுத்து வைத்தவர்கள். புது சரித்திரம் படைத்தவர்கள். இவ்வளவும் நடைபெற்றது அமைதியைக் காக்க வந்தவர்களினால்.

இப்படிக்கு,

சாந்தினி

அதே 23.11.87இல் அன்புமிக்க தம்பி என்று அழைத்து ஒரு அக்காள் தமிழகத்தில் உள்ள தம்பிக்கு எழுதிய கடிதம் இதோ...

தம்பி

நீ எழுதிய கடிதம் நேற்று இங்கு கொண்டு வந்து தந்தார்கள். மிகவும் நன்றி. தம்பி, நீ எங்களுக்காக பூஜையில் மன்றாடுவது போல் அடிக்கடி கனவு காண்பேன். பிள்ளைகளுக்கும் சொல்வேன்.

திலீபன் செத்ததிலிருந்து பெரிய ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், இந்தியாவிற்கு எதிராக சுலோகங்களும் - இந்தியன் ஆர்மியை ரோட்டில் போக விடாமல் வழிமறிப்புகளும், திடீரென ஊரடங்கு சட்டம் போட்டார்கள். தொடங்கினான் குண்டு வீச்சை, விடிய விடிய காலம், நேரம், இடம் தெரியாமல் குண்டு வீசிக் கொண்டே இருந்தார்கள். நாவற்குரியிலிருந்து, மண்டைத் தீவிலிருந்து, கோட்டையிலிருந்து ஜனங்கள் பயத்தில் ஓடிப்போன இடங்களில் எல்லாம் குண்டுபட்டு யாழ்ப்பாணத்தில் ஏராளமானவர்கள் இறந்து விட்டார்கள். குடும்பம் குடும்பமாக செத்துள்ளார்கள். இங்குள்ள ஜனங்கள் பேட்ரிக் பள்ளிக்கூடத்திலும் பெரிய கோவிலுக்குள்ளும் கால்வைத்துப் போக முடியாத அளவிற்கு குவிந்தார்கள். படுக்கக்கூட இடம் இல்லை. ஒரு மூலையில் குந்திக்கொண்டு விடிய விடிய முழித்திருந்தோம். பிள்ளைகளை ஒரு மாதிரி படுக்க வைத்துவிட்டு குண்டு எந்தச் சுவரை துளைத்துக்கொண்டு வருகிறதோ என்று அடுத்த நாள் விடிய காத்திருந்தோம்.

குண்டு வீச்சு ஒரு மாதிரி ஓய்ந்தது. பிறகு காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வீட்டிற்குப் போய் சமைத்து

எடுத்துக் கொண்டு திரும்பி பள்ளிக் கூடத்திற்கு ஓடினோம். அங்கு நாங்கள் இருந்த இடம் போய்விட்டது. பிறகு பெரிய கோவிலுக்கு ஓடினோம். இப்போது எந்த மூலை முடுக்கிலும் ஆர்மி காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள். திடீரென வீட்டிற்குள் புகுந்து பொடியன்கள், கிழவர்களைக்கூட பிடித்துக் கொண்டு போய் வைத்திருந்து பிறகு விட்டுவிட்டார்கள். வேலை இல்லை; பள்ளிக்கூடம் இல்லை; சாப்பாட்டிற்கே சரியான கஷ்டம்; சாமான்கள் எல்லாம் அதிக விலை. நல்ல தண்ணீர் இல்லை. லைட் இல்லை. கிணற்றுத் தவளைகள் மாதிரி இருக்கிறோம். உலகத்தில் என்ன நடக்கிறது என்றே தெரியாது. ஒரு பேப்பர் கிடையாது. ரேடியோவைத் திருப்பினால் சொல்வது எல்லாம் பொய். பெண்களை மிக மோசமாக செக் பண்ணுகிறார்கள்.

கன்னி வீடு, எமிலி வீடு, முத்தம்மா வீடு, அங்கிள் வீடு எல்லாம் ஆர்மிக்காரன் சுட்டு சுவரெல்லாம் குடைந்து ஒரே ஓட்டை, இப்படி ஒரு கஷ்டத்தை எதிர்பார்க்கவும் இல்லை. அனுபவிக்கவும் இல்லை.

மேலும் தம்பி, பாக்கியம் என்ற ஒரு பெண்மணியின் மகன் மொட்டை என்பவரும் அவருடைய மூன்று பிள்ளைகளும் சுடப்பட்டார்கள். ஒரு பிள்ளை உடனே காலி; மற்ற பிள்ளைகளுக்கு பலத்த காயம், காயப்பட்டவர்களை தூக்கிப் போட்டுக் கொண்டு வேனில் வெள்ளைக் கொடி கட்டிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய் இருக்கிறார்கள். ஆர்மிக்காரர்கள் ஆத்திரத்தில் அந்த வேனோடு சேர்த்து ஆட்களையெல்லாம் கொளுத்தி விட்டார்கள்.

அவர்கள் என்ன மாதிரி துடிதுடித்துப் போய் இருப்பார்கள். இங்கே ஒரே அழுகைக் குரல்தான். மகிழ்ச்சிக்கு இடமே இல்லை. ஆஸ்பத்திரிக்குள் புகுந்து நான்கு டாக்டர்களை வெட்டிக் கொன்றார்கள். நாற்பது ஆஸ்பத்திரி நோயாளிகளை ஒரு அறைக்குள் போட்டு சுட்டுக் கொன்றார்களாம். பஸ்லியாம் என்பவரின் இரண்டு பிள்ளைகளில் ஒன்று குண்டு பட்டு இறந்து விட்டது. இப்படி குண்டுபட்டு சாகின்ற பிள்ளைகளை - அழக்கூட முடியாமல் - பாயில் சுற்றிக் கொண்டு போய் அடக்கம் பண்ணிவிட்டு அழுது கொண்டிருக்கிறார்கள். ஒரே அவலச்சத்தம், இப்படி ஒரு நிகழ்ச்சி எந்த யுகத்திலும் நடந்திராது.

உடன்பிறப்பே,

இந்த மூன்று கடிதங்களைத் தொடர்ந்து மற்றொரு கடிதத்தையும் இந்தக் கடிதத்தில் இணைக்கிறேன்.

இது தமிழ் ஈழப் போர்க்களத்தில் தம்பி பிரபாகரனோடு அணி வகுத்து நிற்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் கடிதம்.

வீர இளைஞன் திலீபன் உண்ணாவிரதம் இருந்து இறந்தபோது ஈழத்து மேடையில் நின்று திலீபனுக்கு நேராக காசி ஆனந்தன் பாடிய உணர்ச்சிமிகு கவிதையை வீடியோ மூலம் உன்போன்ற உடன்பிறப்புகள் பார்த்திருப்பீர்கள், அந்தக் கவிஞன் களத்தில் இருந்து எனக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை இங்கே தருகிறேன். இதோ அந்தக் கடிதம்...

அன்பின் கலைஞர் அண்ணன் அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் உடல் நலத்திற்கும், நீண்ட நல்வாழ்விற்கும் என் உளம் நிறைந்த வாழ்த்தினை முதலில் தருகிறேன்.

1977ஆம் ஆண்டு சிங்களப் படையினர் மட்டக்களப்பில் என்னைத் தேடியபோது தலைமறைவாகி - தம்பி பிரபாகரனோடு தமிழ் நாடு வந்தேன். அது மிசா காலம் - அந்த நேரத்திலும் உங்களைத்தான் நான் சந்தித்தேன். மெரினா கடற்கரை மணலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த உங்களுக்கு அன்று பிரபாகரனை நான் அறிமுகம் செய்து வைத்தது இன்னமும் நினைவிருக்கிறது!

1983ஆம் ஆண்டு மீண்டும் சிங்கள இராணுவம் என்னைத் தேடிய நேரத்திலும் தப்பி - உயிர் பிழைத்து தமிழ்நாடு வந்த நான் உங்களைத்தான் முதலில் சந்தித்தேன், தமிழீழத்தின் அன்றைய நிலையை உங்களிடம் எடுத்துக் கூற என்னால் முடிந்தது.

இப்போது இந்தியப் படை இங்கே என்னைத் தேடிக் கொண்டிருக்கிறது. அக்டோபர் திங்கள் 9ஆம் நாள் இங்கே போர் தொடங்கிற்று. தமிழ்ஈழ மக்களின் கண்ணீரிலும், இரத்தத்திலும் இந்த நிலம் நனைந்துபோய் இருக்கிறது. குண்டுகளுக்கு நடுவில் நான் இறந்துபோய் இருந்தால்கூட துன்பங்களே தெரியாத சடலமாய் ஆகியிருப்பேன். ஆனால் என் மக்களின் சாவை - துன்பத் துடிப்பினை கொஞ்சமும் மறக்க முடியாத பாவியாக அன்றோ இங்கே விம்முகிறேன்... துடிக்கிறேன்...

அண்ணனே,

சென்ற இடமெல்லாம் செல் குண்டுகள் விழுந்து கொண்டிருக்கின்றன. முதலையின் வடிவத்தில் ஒரு ஹெலிகாப்டர் விமானம் ஏவுகணைகளை அடிக்கடி வீசுகிறது. ஓயாத குண்டுகளின் முழக்கம் - ஒரே நேரத்தில் பத்து முனைகளிலிருந்தும் பீரங்கி செல்களை வீசினால் மக்கள் எந்தப் பக்கம் தப்பி ஓட முடியும்?

தலைகள் இல்லாத உடல்கள்; உடல்கள் இல்லாத தலைகள் - இப்படி சடலங்கள் குவிந்து கொண்டிருக்கின்றன.

இளம் பெண்கள் வாழும் வீடுகளில் எப்போது இந்தியப் படை வீட்டில் நுழையுமோ என்று அஞ்சியபடியே தாய் தந்தையர் இருக்கிறார்கள். கற்பழிப்பு சேதிகள் காதில் விழாத நாளே இல்லை! தமிழீழம் காயம் தாங்கி மட்டுமல்ல - களங்கப்பட்டு நிற்கிறது.

இந்திய டாங்கிகளின் இரும்புக் கால்களால் மிதிபட்டு அழிந்து போன வாழைத் தோட்டங்கள் - அந்த நகரும் பீரங்கிகளின் குண்டுகள் மோதி சாய்ந்து போன அழகான கட்டிடங்கள் - என் தாய்நாட்டை சிங்கள வெறிப்படை ஒரு புறம் தாக்க - இன்னொரு புறம் இந்தியப் படை எதிர்த்து நொறுக்க - ஓ! மேளத்துக்கும் இரு பக்கமும் அடி.... என் தாயகம் ஈழத்துக்கும் இரு பக்கமும் அடியா?....

அண்ணனே,

கொடுமையான இந்தக் களத்தில்தான் நமது விடுதலைப் புலிகள் போராடுவது கடமையான காரணத்தால் குமுறி நிற்கிறார்கள்! தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதிகள் கழுத்தில் இப்போது ஒரு சயனைட் புட்டி அல்ல; இரண்டு சயனைட் புட்டிகள் தொங்குகின்றன. எங்கள் மீது திணிக்கப்பட்டுள்ள போரை உறுதியோடு எதிர்கொண்டு களம் ஆடுகிறோம். இந்தப் போரில் ஆறு பெண் விடுதலைப் புலிகள் இன்னுயிர் இழந்திருப்பதை - சங்க காலத்தில் கூட இல்லாத வரலாறு படைத்திருப்பதை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

பொது மக்கள் - சாவுக்கும் இழப்புகளுக்கும் நடுவிலும் புலிகளுக்கு உறுதுணையாக நிற்கிறார்கள். இந்தியப் படைக்கு அஞ்சி வீட்டு வாசல்களில் அவர்கள் வெள்ளைக் கொடிகளைப் பறக்க விட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நெஞ்சங்களில் பறந்து கொண்டிருப்பதெல்லாம் சிவந்த புலிக் கொடிகளே!

அண்ணனே,

தமிழீழத்தின் இன்றைய நிலையை எடுத்துச் சொன்னேன்.

இந்நிலையில் -

என்னால் புரிந்து கொள்ள முடியாமல் - தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கும் ஐயம் இது தான்! பாரதத்தை என்றைக்கும் எதிர்க்காத - எதிர்க்க விரும்பாத - எங்களை பாரதம் எதிர்ப்பது ஏன்?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கையில் இடைக்கால அரசைத் தருவது என்று ராஜீவ் காந்தி வாக்குறுதி தந்தார். புலிகள் அந்த இடைக்கால அரசுக்கான பெயர்ப் பட்டியலை வழங்கியபோது எனது பெயரையும் இணைத்திருந்தார்கள். ஆனால் தீட்சித் அவர்கள், காசி ஆனந்தன் இந்தியாவின் எதிரி - அவர் பெயரை ஏற்கமாட்டோம் என்று அழுத்தமாக கூறினார்.

நான் இந்தியாவின் எதிரியா? பிரபாகரனும் - விடுதலைப் புலிகளும் இந்தியாவின் எதிரியா? நேற்றும் இன்றும் நாளையும் இந்தியாவோடு இணைந்தே நிற்போம் என்று கூறும் நாங்களா இந்தியாவின் எதிரிகள்?

அமெரிக்கா - ருஷ்யா - சீனா எந்த அரசிடமாவது நாங்கள் உதவி கேட்டோமா? இந்திய அரசு ஒன்றைத்தானே அணுகினோம். இந்தியாவிற்கு எதிராக நிற்கும் இஸ்ரேலையும் பாகிஸ்தானையும் இன்றும் தலையில் வைத்துப் போற்றும் ஸ்ரீலங்கா அரசுக்கு முட்டுக் கொடுத்து - தமிழீழ மக்களின் அடிப்படை உரிமைகளையும் - அந்த உரிமைகளுக்காக போராடும் விடுதலைப் புலிகளையும் - தமிழீழ மக்களையும் இந்திய அரசு படைகொண்டு அழிப்பது என்ன நீதி?

என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அண்ணனே,

நெருப்பின் நடுவில் நிற்கிறோம். தமிழீழ மக்கள் உங்கள் மீதும், தமிழ் நாட்டின் மீதும் - மிகப் பெரிய நம்பிக்கை வைத்து - தமது இலட்சியப் போரில் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள்.

பனந்தோப்புகளில் விடுதலைப் புலிகள் ஆங்காங்கே கூட்டமாய் நின்று உங்களை மனந்திறந்து பாராட்டுவதை நான் கேட்கிறேன்.

ஒரு காலத்தில் - சிங்கள அரசு வெறி கொண்டு பாய்ந்தது! தமிழ் நாட்டுக்கு - பாரதத்துக்கு ஓடிவந்தோம்.

இன்று -

பாரதமே பாயும் போது எங்கே செல்வோம்?
கடலுக்கு அப்பால்
கரையுண்டு என்றிருந்தோம்....
கரையே கடலானால்
எங்கே போய் கால் வைப்போம்?

தம்பி,

காசிஆனந்தன்

உடன்பிறப்பே,
நான்கு கடிதங்கள்;
நமது நெஞ்சை உருக்கும் கடிதங்கள்!
தமிழீழத்தின் நிலையை விளக்கும் கடிதங்கள்!

கடிதங்களா இவைகள்? அல்ல; அல்ல; கண்ணீரில் தோய்ந்த மடல்கள்!

கயமைத்தனம் மிகுந்த பொய்ப் பிரச்சாரத்திற்குத் தரப்படும் கசையடிகள்! தமிழீழத்திலிருந்து நமது உடன்பிறப்புகள் உகுத்திடும் கண்ணீர்த்துளிகளுக்கு நாம் தரப்போகும் பதில் என்ன?

கண்ணீர்தானா? கண்ணீர் மட்டும்தானா?

அன்புடன்

மு.க.

07-12-1987

1532. எம்.ஜி.ஆர். மறைந்த நாளில் சென்னை அண்ணா சாலையில்!

உடன்பிறப்பே,

செயல்படவிட்டோர்
சிரித்து மகிழ்ந்து நின்றாலும்
அந்தச் சின்னத் தம்பி
என் முதுகிலே குத்தவில்லை –
நெஞ்சிலே தான் குத்துகிறான்;
அதனால் நிம்மதி எனக்கு!
வாழ்க! வாழ்க!

அன்புடன்

மு.க.

27-12-1987

1533. நம்பிக்கையுடன் நம் பணி தொடர்வோம்!

உடன்பிறப்பே,

எத்துணை துன்ப துயரங்கள் உள்ளத்தைக் காரிருள் எனக் கப்பியிருந்த போதிலும், மின்னல் கீற்றென ஒரு மகிழ்ச்சி பொங்கல் வாழ்த்து வழங்கிடும் போது பாய்ந்திடத்தான் செய்கிறது! இலங்கை தமிழர்க்குற்ற வேதனைகளை எண்ணுகிறேன். இங்கு உள்ள தமிழ்க் குலமும் மாய்க்கப்படுவதற்கான மறைமுகச் செயல்கள் நாள்தோறும் நடைபெறுவதைக் காணுகிறேன். இவற்றுக்கிடையே உறுதிப்பாடுமிக்க நம்பிக்கையெனும் ஊன்றுகோல் கொண்டு வழுக்கு நிலத்தைக் கடக்கலாம் என்றும் துணிவு பெறுகிறேன்! உன் துணையுடன் நடக்கிறேன்!

கவலைகள் சூழ்ந்து முற்றுகையிட்ட போதும் நமது கலாச்சார விழாவாம் பொங்கல் விழாவில் ஒரு துளி பூரிப்பு, அடிக்கரும்பின் சுவையாகத் தலைகாட்டத்தான் செய்கிறது! எனவே நான் வாழ்த்து குவிக்கின்றேன், உனக்கும் உனைப் போன்ற என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளுக்கும்!

கருவூர் கதப்பிள்ளை சாத்தனார் பாடியுள்ள நற்றிணைப் பாடல் ஒன்று!

படையுடன் வந்து என்னை வதைக்கும் இந்த மாலைப்பொழுது, என்னைப் பிரிந்து பொருள் தேடச் சென்றுள்ளாரே என் காதலர் - அவர் சென்றுள்ள நாட்டில் வருவது கிடையாதோ? எனத் தோழியிடம் கேட்கிறாள் பிரிவாற்றாத ஒரு காதலி!

படையொடு வந்த பையுள் மாலை இல்லைகொல் வாழிதோழிநம் துறந்து அரும்பொருள் கூட்டம் வேண்டிப் பிரிந்துரை காதலர் சென்ற நாட்டே

காதலியை வாட்டும் மாலைப்பொழுது, காதலனையும் வாட்டுமல்லவா? அதனால்தான் அந்த மாலைப்பொழுது தன் காதலன் சென்ற ஊரில் இல்லையோ? என ஏங்குகிறாள்!

மாலைப்பொழுது, காதலன்-காதலி இருவரையும்தான் படையுடன் வந்து வாட்டுகிறது! மாலைப்பொழுது மகிழ்ச்சியூட்டவும் வல்லது - எப்போது? பிரியாமல் இருவர் இருந்திடும் போது! பிரிந்து விட்டாலோ அந்த மாலைப்பொழுது இன்பத்திற்குப் பதிலாக ஈட்டி வீசுகிறது நெஞ்சில்!

உடன்பிறப்பே, இன்பம் துன்பம் இரண்டையும் தரும் மாலைப்பொழுது போலவே பொங்கல் விழாவும் அமைந்திடுகிறது பார்த்தாயா? பொங்கல் நாளன்றும் உலையிலிட ஏதுமில்லார் எண்ணற்றோர் தமிழகத்தில்! அவர்களுக்கெல்லாம் படையொடு வந்த பையுள் மாலை போன்றதுதானே இந்தப் பொங்கல்!

கதப்பிள்ளை சாத்தனார் எனும் அந்தக் கருவூர் புலவரின் மற்றொரு பாடல், புறநானூற்றுப் பனுவலில் இடம் பெற்றுள்ளது.

தினை விளைத்துத் தின்று வாழும் குறவர் குடிமக்களின் வளம் எவ்வாறு இருந்தது என்பதையும் - அவர்கள் வாழ்ந்த பகுதியின் செழிப்பு எத்தன்மை வாய்ந்தது என்பதையும் அந்தப் புறப்பாடல் குறிக்கிறது!

பிட்டங்கொற்றன் என்னும் சேரர் தளபதியைப் புகழ்ந்து பாடுமிடத்து அவன் உலவும் குதிரை மலையைச் சிறப்பித்துப் பாராட்டுகிறார் புலவர்!

பாடலின் பொருளை மட்டும் விளக்குகிறேன்! பழைய நாள் பாட்டு வளத்தை மட்டுமல்ல! நாட்டு வளத்தையும் கூட!

அருவிகள் சிந்துபாடும் பரந்த இடத்தில் மிளகுக் கொடிகள் வளரும் மலைச்சாரல்! அதனையடுத்துக் கேழல் உழுத புழுதியிலே விதைக்கப்பட்டு விளைந்து கதிர் விட்டுக் குலுங்கும் தினைப்புனம்! அந்த புத்தம்புதிய தினையை உண்பதற்காக விரும்பி நாள் குறித்த குறவர் குடிமக்கள் உலை வைக்கப் பானை தேடுகின்றனர். மான் கறி சமைத்து கழுவாமல் புலால் நாறுகிற ஒரு பானை! அந்தப் பானையில் ஆவின்பாலை உலைநீருக்கு பதிலாக ஊற்றித் தினையை இட்டு அந்த அடுப்பைச் சந்தன விறகுகளால் எரித்துச்

சமையலை முடிக்கின்றனர். பின்னர் அகன்ற வாழையிலையில் இட்டுப் பலரோடும் பகிர்ந்து உண்ணுகின்றனர்.

உடன்பிறப்பே, குறவர் குடிமக்கள்தான்! தினை விதைக்கின்றனர்! மான் கறி சமைத்து உண்ணுகின்றனர். பானையில் வெறும் நீருக்குப் பதிலாக ஆவின் பாலையே ஊற்றி அந்த உலைநீரில் தினையை வேக வைக்கின்றனர்! அடுப்போ சந்தன விறகினால் மூட்டப்படுகிறது!

அந்தநாள் தமிழக வளத்தையும் இந்த நாள் தமிழக நிலையையும் ஒப்பிடத் தோன்றுகிறதல்லவா? அன்று அடுப்பெரிக்கவே சந்தன விறகாம்! இன்று அடுப்பு எரிந்தால் அதுவே ஆண்டவன் செயல் என உருகிடும் காலம்!

அந்நாளை நினைந்திடும் போது பொங்கல் நாள் மகிழ்ச்சியூட்டுகிறது! இந்நாளை எண்ணினாலோ கண்ணீர் தானே இமைக் கதவோரம் எட்டிப் பார்க்கிறது!

நம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நலிவுற்றோர் கண்ணீரைத் துடைப்பதற்கு இந்தப் பொங்கல் நாளில் நம்பிக்கையுடன் நம் பணி தொடர்வோம்!

இதுவே என் பொங்கற் புதுநாள் செய்தி!

அன்புடன்

மு.க.

15-01-1988

1534. உன் பயணம் தொடர்ந்து நடக்கட்டும்!

உடன்பிறப்பே,

ஒரு திங்களுக்குப் பிறகு உன்னுடன் கடிதத் தொடர்பு கொள்கிறேன். இந்த இடைவெளியில் எவர் எவரோ எத்தனை எத்தனையோ யூகங்கள்! கற்பனைகள்! கதைகள்! அவரவர் மனோ நிலைக்கு ஏற்றவாறு புனைந்துரைத்து நமது கழகத்தைப் பற்றிய கணிப்புகளைச் செய்து பார்த்தனர்! இன்னமும் அந்தப் பணியில் பரபரப்பாகவே உள்ளனர்.

உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் ஆயிரக்கணக்கானோர் எனக்கு எழுதியுள்ள கடிதங்கள்! அன்பின் வார்ப்படங்கள்! அறிவுச்சுடர் விளக்குகள்! இந்தக் கழகத்தின் குக்கிராமத்துச் செயல்வீரன்கூட எப்படிச் சிந்திக்கிறான் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகள்! அந்தக் கடிதங்கள் பலவற்றைக் கண்களில் ஒற்றிக் கொண்டேன். கழக முன்னணியினரிடம் படித்துக் காட்டிப் பரவசமுற்றேன். உன் போன்றோர் என்ன கருத்துக்களைக் கடிதங்கள் வாயிலாகத் தீட்டினார்களோ, அந்தக் கருத்துக்களின் தொகுப்பாகத்தான் கடந்த 19ஆம் நாள் கழகத்தின் தலைமை நிர்வாகக்குழு நிறைவேற்றிய தீர்மானம் அமைந்தது.

அ.தி.மு.க.வின் இரு குழுக்களில் எந்தக் குழு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் அல்லது நீடித்தாலும், தமிழ்நாட்டு மக்களின் மொழி, இன உணர்வுகள், மாநிலத்தின் உரிமைகள், மக்களின் தேவைகள், தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள், கடந்த பத்தாண்டு காலத்தில் இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகரித்துவிட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழே அல்லலுறும் ஏழை எளியோர்களின் உயர்வுக்கான திட்டங்கள், ஈழத் தமிழினத்தின் பாதுகாப்பு போன்றவைகளுக்காக இந்தியப் பேரரசுடன் வாதாடவோ அல்லது வற்புறுத்தவோ தயாராக இல்லாமல், லஞ்சலாவண்ய

ஊழலில் திளைப்பதே லட்சியம் என்று பதவிச் சண்டையில் ஈடுபட்டுள்ள நிலையில் - இந்த இரு குழுக்களில் எந்தக் குழுவின் போக்கும் தி.மு.கழகத்திற்கு உடன்பாடானதல்ல என்பதை இந்த நிர்வாகக்குழு திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துகிறது.

இதுதான் கழகம் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியுள்ள தீர்மானம். இந்தத் தீர்மானத்தின் மையக்கருத்து அ.தி.மு.க.வின் இரு குழுக்களில் எந்தக் குழு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் அதை எதிர்ப்பதுதான் என்பது சாதாரண அரசியல் அறிவு படைத்தோர்க்கும் புரியும்! காரணம், இரு குழுக்களுமே அண்ணா பெயரைச் சொல்லி அண்ணாவின் கொள்கைகளுக்கு மாறுபாடாகச் செயல்படும் குழுக்களேயாகும் என்பதால்!

இதைக்கூட தினமணி போன்ற ஏடுகள் புரிந்து கொள்ளாமல் முதலில் நடுநிலை என்ற தீர்மானம் நிறைவேற்றியதாகவும் - பேரம் படியாத காரணத்தால் எதிர்ப்பு என்ற நிலை எடுத்ததாகவும் தி.மு.கழகத்தின் மீது புழுதி வாரித்தூற்றியிருக்கின்றன! பேரம் பேசுவது - கொள்கையில் சோரம் போவது - என்றுமே நமது கழகம் எடுத்த நிலையல்ல! இரு குழுக்களின் போக்கும் கழகத்திற்கு உடன்பாடானதல்ல என்றாலே இரு குழுக்களில் எதையும் ஆதரிக்கமாட்டோம் என்பதுதான் உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற தெளிவான உண்மை நிலையாகும்!

19ந் தேதி நிர்வாகக்குழு - 20ந் தேதி காலையில் திருச்சியில் நிருபர்கள் கேட்கிறார்கள், இரு குழுக்களையும் ஆதரிக்க மாட்டோம் என்றால் இப்போதுள்ள ஆட்சியாளர் மீது நம்பிக்கை கோரும் தீர்மானம் வந்தால் என்ன செய்வீர்கள்? என்று!

அதற்கு நான் அளித்துள்ள பதில், 19ந் தேதி நிர்வாகக்குழு தீர்மானத்திற்கு மேலும் ஒரு விளக்கமாக அந்த தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க மாட்டோம் - எதிர்த்து வாக்களிப்போம்! என்பதாக அமைந்தது.

ஆளுங்கட்சி, தனக்கு சட்டப் பேரவையில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு முன்பு அரசின் கொள்கையுரையான கவர்னர் உரையை ஆற்றுவது முரண்பாடான காரியமாகும் என்று 19ந் தேதி நிர்வாகக்குழு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப் படித்த பிறகும் தினமணி கட்டுரையாளர் குழம்பிக் கொள்கிறார் என்றால், அவர்

குழம்பவில்லை - தமிழ் மக்களைக் குழப்ப முனைகிறார் என்றுதான் கருத வேண்டியுள்ளது.

எத்தனையோ பேர் எங்கிருந்து குழப்பிட முனைந்தாலும் - குழப்பம் மட்டுமல்ல, கொந்தளிப்பு - கொக்கரிப்பு - இவற்றுக்கு மத்தியில் நின்று அனைத்துக்கும் ஈடுகொடுத்து இந்தக் கழகத்தை வலிவோடு வளர்த்துவரும் பெருமை உன் போன்ற உடன்பிறப்புகளுக்கு உண்டு!

எனவே நமக்கென்றுள்ள பணிகளில் நாட்டம் செலுத்துவோம்! ஓணான் பழிப்புக் காட்டுகிறதே என்றெண்ணி உதயசூரியன் ஓடி ஒளிந்து கொள்வதில்லை! தான் தொடங்கிய உலாவை நிறுத்திக் கொள்வதில்லை!

இன்று ஜனவரி 25! மொழிப்போரில் பல உயிர்களை இழந்து, பாளையங்கோட்டைகளைச் சந்தித்து, பத்து சட்டமன்ற உறுப்பினர்களின் பதவியைப் பறிகொடுத்து, தீக்குளித்த தியாகிகளின் கல்லறைகளைக் குளிப்பாட்டி, இன்னமும் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கத் தடந்தோள் தட்டி நிற்பது தி.மு.கழகம்! அந்தப் போர் மறவர்கள் இன்றைக்கு மொழிப்போர்த் தியாகிகளின் கல்லறைகட்கும் திருவுருவப் படங்களுக்கும் மாலை அணிவித்து மலர் தூவி வீரவணக்கம் செலுத்துவர்!

அத்துடன் ஈழத்தமிழினத்தைக் காத்திட நாம் தொடர்ந்து எழுப்பிவரும் இனமானக் குரல் இந்த வையம் அறிந்த ஒன்றேயாகும்!

தமிழினத்தைத் தனது படைகொண்டு அழித்தது போதாமல் இந்தியப் படையின் துணை கொண்டும் அழித்துவரும் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா இன்றைக்கு இந்தியா வருகிறார், குடியரசு தின விருந்தினராக! தமிழ்நாட்டு மக்களின் உணர்வைக் காலில் போட்டு மிதித்து, தமிழர்களின் குரலை அலட்சியப்படுத்தும் இந்திய அரசின் இச்செயலைக் கண்டித்து வேதனையை வெளிப்படுத்த - இந்த நாள் (ஜனவரி 25) வேதனை நாள் என அறிவித்துக் கறுப்புச் சின்னம் அணிந்திடவும் - கறுப்புக் கொடி ஏற்றிடவும் வேண்டுமெனக் கழகம் சென்ற திங்களே அறிவித்துள்ளது. கழக நிர்வாகக்குழுவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மொழி காக்கும் நாள், ஜனவரி 25! இனம் காக்கும் நாளும் ஜனவரி 25 தான்!

இதனை உணர்ந்து இலட்சியப் பணியாற்றிடுக உடன்பிறப்பே!

ஓநாய்களும் நரிகளும் ஊளையிட்டுக் கொண்டிருக்கட்டும்,

கோட்டான்கள் கத்திக் கொண்டிருக்கட்டும்,

ஆந்தைகள் அலறிக் கொண்டிருக்கட்டும்,

சிங்கக் குட்டியே! உன் கம்பீரப் பயணம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கட்டும்!

அன்புடன்

மு.க.

25-01-1988

1535. எழுதியிருப்பது கடிதமல்ல; எச்சரிக்கை!

உடன்பிறப்பே,

இ.காங்கிரஸ் என்றால் இந்திரா காங்கிரஸ் என்றும் சொல்லலாம், அல்லது இன்றைய காங்கிரஸ் என்றும் சொல்லலாம்.

அதற்கென்று ஒரு கலாச்சாரம் உண்டு! அதைத்தான் நேற்றைய எனது அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருந்தேன். அந்த அறிக்கையின் விரிவாக்கமாக கடந்த காலத்துப் பழைய நிகழ்வுகளை உனக்கும், அதைப்போலவே அ.தி.மு.க.வின் இரு குழுக்களிலும் உள்ள எம்.ஜி.ஆர். அவர்களின் உண்மையான ஆதரவாளர்களுக்கும் நினைவூட்டுவதுதான் இந்தக் கடிதத்தின் முக்கிய நோக்கமாகும்.

அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட தி.மு.கழகம், அண்ணா வாழ்ந்த காலத்திலும் சரி, அவர் நம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தக் காலத்திலும் சரி, எந்த ஒரு முடிவினை எடுத்தாலும் - அது; நாடு, இனம், மொழி, சமத்துவம், சமதர்மம், ஜனநாயகம், சுயமரியாதை, மாநில உரிமைகள் போன்ற கழகத்தின் அடிப்படை லட்சியங்களை விட்டு அணுவளவுகூட அகலாத நிலையிலேயே அமைந்திடும் என்பதுதான் நமது வரலாறு!

நாட்டின் ஒற்றுமையும் பாதுகாப்பும் முக்கியம் என்பதற்காகத்தான் தி.மு.கழகம் பிரிவினைக் கோரிக்கையை கைவிடுகிறது என அண்ணா அறிவித்தார். பிரிவினை கேட்டதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன; எனினும் பிரிவினைக் கோரிக்கையைக் கழகம் கைவிட்டுவிட்டது எனக் கூறிய அண்ணா அவர்கள் மாநில உரிமைகளும் சுயமரியாதையும் பாதுகாக்கப்பட மாநில சுயாட்சி முழக்கத்தை எழுப்பினார். மத்தியிலே குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்ற அண்ணாவின் கருத்தைத்தான்

மாநிலத்தில் சுயாட்சி - மத்தியிலே கூட்டாட்சி என்ற நமது முழக்கமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம்.

அதனால்தான் அண்ணாவுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்கும் நிலை வந்தபோது, இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார் கலந்து கொண்ட சென்னை விழாவில் மத்திய அரசுடன் உறவுக்குக் கை கொடுப்போம் - உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தினேன்.

மத்திய அரசின் ஆளுங்கட்சியான காங்கிரஸ் இரண்டாக உடைந்தது! வங்கிகள் தேசியமயம் - ராஜ மான்யம் ஒழிப்பு போன்ற முற்போக்குத் திட்டங்கள் காங்கிரசின் ஒரு குழுவினரால் எதிர்க்கப்பட்டபோது தி.மு.கழகம் இந்தியாவின் இடதுசாரிக் கட்சிகளுடன் சேர்ந்து இந்திரா காந்தி அவர்களை ஆதரித்து அவரது மைனாரிட்டி அரசுக்குத் துணைநின்றது. சமதர்மக் கொள்கை செயல்படுத்தப்படுகிறது என்ற ஒரே காரணத்துக்காகத்தான் இந்திரா அரசை தி.மு.க.வின் இருபத்தி ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து ஆதரித்தார்கள்.

1971ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி.மு.க. தமிழகத்தில் 185 சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற அளவுக்கு மகத்தான வெற்றியை (மூதறிஞர் இராஜாஜி - பெருந்தலைவர் காமராஜர் இருவரது வலிமை மிக்க கூட்டணியை எதிர்த்து) பெற்றபோது, இந்திரா காங்கிரஸ் யோசிக்க ஆரம்பித்தது! 1967ல் அண்ணா அவர்களால் அமைக்கப்பட்ட திராவிட இயக்க ஆட்சி 1971ல் மேலும் பலம் வாய்ந்த ஆலமரமாக விழுது விட்டு நிற்பதை இந்திரா காங்கிரசால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எனவே தி.மு.கழகத்தை இரண்டாகப் பிளக்கத் திட்டம் தீட்டினர். அதற்கு மத்திய ஆட்சியாளர்களான இந்திரா காங்கிரசார் கையாண்ட முறைகளை விவரிக்கும் நேரமுமில்லை - தேவையுமில்லை!

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். (கழகத்தின் பொருளாளர்) - 1972ல் புதிய கட்சியைத் தொடங்கினார்.

வெளிநாடு சென்று வந்த என்னை விமான நிலையத்தில் கலைஞர் வரவேற்றார். அண்ணாவைப்போல் என்னைவிட வயதில் மூத்தவரில்லாவிடினும் அண்ணாவுக்குரிய தகுதியைப் பெற்ற கலைஞர் என் கழுத்தில் மாலையை அணிவித்தார்.

ஆம்! கலைஞர் கருணாநிதியின் உருவில் அண்ணா என்னை ஆரத் தழுவினார்.

என்று பொம்மை என்ற இதழில் எந்த எம்.ஜி.ஆர். கட்டுரை தீட்டினாரோ; அவரை என்னிடமிருந்தும் கழகத்திடமிருந்தும் பிரித்து, தமது கலாச்சார மகிமையை வெளிப்படுத்தியவர்கள் இந்திரா காங்கிரசார்!

ஜனநாயகம் நிலைக்க வேண்டும் என்பதற்காக 1975ல் கழகம் எமர்ஜன்சியை எதிர்த்தபோது - கழகப் பொதுக்குழுவின் வேண்டுகோளைக் காதில் போட்டுக்கொள்ளவே இ.காங்கிரஸ் ஆட்சி மறுத்துவிட்டது. 1969ல் 1971ல் கைகொடுத்துக் காப்பாற்றிய கட்சியாயிற்றே கழகம் என்ற நன்றியை மறந்து - எமர்ஜன்சி நடவடிக்கையாக கழக ஆட்சியையே கலைத்து, தனது கலாச்சார மகிமையை மேலும் பறைசாற்றிக் கொண்டது இந்திரா காங்கிரஸ்!

1977ல் அமைந்த ஜனதா ஆட்சி, 1980ல் தன்னைத்தானே கவிழ்த்துக் கொண்டபோது கூட, சரண்சிங்கின் இடைக்கால அமைச்சரவையிலிருந்த பிஜுபட்நாயக் ஓடோடி வந்து தி.மு.க.வையும் அ.தி.மு.க.வையும் இணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். அப்போது கழகச் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் என்ன?

(1) அண்ணா உருவாக்கிய தி.மு.க. என்ற பெயரிலேயே இயக்கம் இருக்கவேண்டும்.

(2) எம்.ஜி.ஆரே முதல்வராக நீடிக்கட்டும்.

(3) தி.மு.க. எம்.எல்.ஏக்கள் யாருக்கும் எந்தப் பதவியும் ஆட்சிப் பொறுப்பில் தேவையில்லை.

(4) கட்சியின் தலைமை நிர்வாகிகள் குறித்து பிறகு விவாதித்து முடிவு எடுக்கலாம்.

(5) பெரியார், அண்ணா கொள்கைகளுக்கு விரோதமாக இடஒதுக்கீட்டில் ஒன்பதாயிரம் ரூபாய் உச்சவரம்பு என பிறப்பித்துள்ள ஆணையை எம்.ஜி.ஆர். அரசு திரும்பப்பெற்று பழைய நிலையே தொடர வழிவகுத்திட வேண்டும்.

இந்தக் கருத்துக்கள் எம்.ஜி.ஆர். அவர்களால் முதலில் ஏற்கப்பட்டு அன்று மாலையிலேயே வேலூர் பொதுக் கூட்டத்தில் அவராலேயே மறுக்கப்பட்டுவிட்டன என்பது நாடறிந்த உண்மை!

பதவியிழந்திருந்த இந்திரா காந்தி அவர்கள் எமர்ஜன்சி பிரகடனத்துக்காக மன்னிப்பு கோரியது - இந்தியை தமிழ்நாட்டில் திணிக்க மாட்டேன் என உறுதி கூறியது - அத்துடன் இந்தியாவில் நிலையான ஆட்சி வழங்கிட ஜனதா அரசு தவறியது - இத்தகைய காரணங்களால் 1980ல் தி.மு.கழகம் இந்திரா காங்கிரசுக்கு ஆதரவு தர முன்வந்தது.

அப்போதுதான் புதுவை மாநிலத்தில் தி.மு.க. தலைமையிலான அமைச்சரவையும் பொறுப்பேற்றது. இ.காங்கிரசாரும் அந்த அமைச்சரவையில் இடம் பெற்றனர். பெங்களூரில் முதல்வர் ஹெக்டே அவர்கள் கூட்டிய மாநில உரிமை மாநாட்டுக்கு புதுவை மாநில முதல்வர் டி.ஆர். சென்றார் என்ற காரணத்துக்காக, 1980ல் (எமர்ஜன்சி கொடுமைகளை மறந்து விட்டு நிலையான ஆட்சி நாட்டுக்கு வேண்டும் என்பதற்காக) இந்திரா காங்கிரசை ஆதரித்த தி.மு.கழகத்தின் பெருந்தன்மைக்குக் கூட மதிப்பளிக்காமல் புதுவை அரசைக் கலைத்த கலாச்சாரப் பெருமை கொண்ட கட்சிதான் இந்திரா காங்கிரஸ் கட்சி!

ஒருமுறைக்கு இருமுறை இந்திரா காங்கிரசின் சுயநலப் போக்கையும் சுய உருவத்தின் பயங்கரத்தையும் உணர்ந்து கொண்ட தி.மு.கழகம், இனி அந்த உறவே தேவையில்லையெனப் பிரகடனப்படுத்தியது.

அ.தி.மு.க. இந்திரா காங்கிரசுடன் தனது உறவை புதுப்பித்துக் கொண்டு பலப்படுத்திக் கொண்டது மட்டுமல்ல; தொடர்ந்து பறிக்கப்படும் மாநில அதிகாரங்களுக்காகத் திடமாக எதிர்ப்பு தெரிவிக்கவே தயங்கியது. கண்துடைப்பாக சில நேரங்களில் குரல் எழுப்பியதோடு நிறுத்திக் கொண்டு மத்திய அரசின் கையில் கடிவாளத்தை ஒப்படைத்து விட்டுத் தன்னை ஒரு சவாரிக் குதிரையாக ஆக்கிக் கொண்டு விட்டது. இந்தி ஆதிக்க எதிர்ப்பு அரசாகத் திகழ வேண்டிய நிலையிலிருந்து மாறியது மட்டுமல்ல; அண்ணா வழியில் இந்தி ஆதிக்க எதிர்ப்பு அறப்போரில் ஈடுபட்ட

பேராசிரியர் உள்ளிட்ட பத்து சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவி விலக்கம் செய்து எஜமான விசுவாசத்தை அப்பட்டமாகக் காட்டிக் கொண்டது. ஈழத்தமிழர் பிரச்சினையில் கூட மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள், தனது மனச்சாட்சிக்கு விரோதமாக மத்திய அரசின் இராணுவ நடவடிக்கைகளை ஆதரித்து அறிக்கை விடவும், செயல்படவுமான நிலைமைக்கு தன்னை ஆளாக்கிக் கொண்டு தமிழினப் பாதுகாப்பு முதல்வர் என்ற விருதுக்கு பதிலாக (நேஷனல் லீடர்) தேசியத் தலைவர் என்ற பதக்கத்துக்குத் தனது தலையைக் குனிய வேண்டிய நிலைமை தான் ஏற்பட்டது!

இருபது ஆண்டுகளுக்கு மேலாக அமர முடியாமல் போய்விட்ட முதலமைச்சர் நாற்காலியில் இ.காங்கிரஸ் எப்படியாவது அமர்ந்து விட வேண்டுமென்ற எல்லையற்ற ஆசைக்கு ஒரு வழி கிடைத்து விட்டது போல எம்.ஜி.ஆரின் மறைவை, இ.காங்கிரசார் கணித்துக் கொண்டு செயல்பட்டார்கள்.

எம்.ஜி.ஆர். மறையும் வரையில் அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சி இந்திரா காங்கிரஸ்!

அவர் மறைவுக்குப் பிறகு அ.தி.மு.க. பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்கள் (97 பேர்) திருமதி ஜானகி ராமச்சந்திரன் அவர்களை முதல்வராகத் தேர்ந்தெடுக்கிறார்கள். திருமதி ஜானகி அவர்களுக்கு சட்டசபைக் கட்சியில்தான் பெரும்பான்மையிருக்கிறது. அ.தி.மு.க. கட்சியில் பெரும்பான்மை கிடையாது என மற்றொரு குழு வாதிடுகிறது!

ஏறத்தாழ ஒரு மாத காலமாக நடைபெறும் இந்த வாதப்பிரதிவாதச் சூழலில் - அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சியான இ.காங்கிரஸ் தனது ஆதரவு எந்தக் குழுவுக்கு என ஜானகி அரசின் மீது நம்பிக்கை கோரும் தீர்மானம் வருகிற நாளுக்கு முதல்நாள் கூட தெரிவிக்கவில்லை! ஏன், 28ந் தேதி காலை எட்டுமணி வரையிலே கூட தெளிவாக்கவில்லை!

சரித்திரம் திரும்பியது! 1972ல் தி.மு.க.வைப் பிரிக்க அ.தி.மு.க.! அதாவது இ.காங்கிரசின் சதிவலைச்சாகசம் வெற்றி பெற்றது. இப்போது அந்த அ.தி.மு.க.வைப் பிளந்து இரண்டு பூனைகளுக்கு அப்பத்தைப் பங்கிட்ட குரங்கின் நயவஞ்சக நாடகம் அரங்கேறியுள்ளது.

ஜனநாயகத் தத்துவம் சமத்துவக் கொள்கை
சமதர்மப் பாதை
தமிழ் இன உணர்வு
இந்தி ஆதிக்க எதிர்ப்பு
மாநில உரிமைப் பாதுகாப்பு

போன்ற அண்ணாவின் கொள்கைகளில் அசையாமல் ஆடாமல் நிற்கின்ற தி.மு.கழகத்தையே அழித்து ஒழித்து விட போலி தேசியங்கள்; புரிந்த கொடுமைகள், உருவாக்கிய சோதனைகள், அதற்குப் பயன்படுத்திக்கொண்ட படைக்கலன்கள், அவர்கட்குத் துணை போன துரோகங்கள் - அப்பப்பா, அனைத்தையும் எதையும் தாங்கும் இதயம் கொண்டு எதிர்த்து நடைபோடுகின்றோம் நாம்! காரணம் கொள்கைத் தெளிவு! அதைக் காப்பாற்றும் மன வலிவு!

ஆனால் இந்தக் கொள்கைகளில் ஆழமான பற்றினை வைக்காமலோ - அல்லது வைத்திருந்த பற்றினை இழந்து விட்டோ - இதுகாறும் செயல்பட்ட அ.தி.மு.க. கட்சி; எவ்வளவோ வளைந்து கொடுத்து, குனிந்து கொடுத்து, நெளிந்து கொடுத்து - இ.காங்கிரசுக்கு துளியளவும் மனம் நோகக் கூடாது என்று கவனமாகப் பார்த்துக் கொண்டும் கூட; இ.காங்கிரஸ் கட்சி, அ.தி.மு.க.வைப் பிளந்து இரு கூறுகளாக்கியது மட்டுமல்ல; பெரும்பான்மையான தனது கட்சி எம்.எல்.ஏக்களைக் கொண்ட திருமதி ஜானகி அவர்களைக் கடைசி நிமிடம் வரையில் நம்ப வைத்துக் கழுத்தை அறுத்திருக்கிறதே; இதுதான் அந்த தேசிய கட்சி வழிவழியாகக் கடைப்பிடித்துவரும் மிக உயர்ந்த(?) கலாச்சாரம்!

அன்று 1972ல் தி.மு.க.விலிருந்து பிரிந்த பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்களுடன் கூடிக்கொண்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் கூச்சல் போட்டனர்.

இன்று (16 ஆண்டுகளுக்குப் பிறகு) அ.தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர்கள் முப்பத்தி நான்கு பேருடன் சேர்ந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டப் பேரவையில் மிகப் பெரும் ரத்தக்களரி ஏற்படுகிற அளவுக்குக் காரணகர்த்தாக்களாக இருந்திருக்கின்றனர்!

இதைத்தான் சரித்திரம் திரும்புகிறது என்பர், சரித்திரம் உணர்ந்தோர்! அப்படித் திரும்ப வேண்டுமென விரும்புகிறவனல்ல நான்; பழி வாங்கும் குணத்தைப் பெற்றிராத காரணத்தால்!

ஜனவரி 28ஆம் நாள் தமிழக சட்டப் பேரவையில் நடைபெற்ற கலவரத்துக்கு யார் முன்னோடிகளாக இருப்பினும் அவர்கள் ஜனநாயக மாண்பை மதியாதோர் பட்டியலில் இடம் பெற வேண்டிய அராஜகவாதிகளேதான் என்பதில் இரு கருத்துக்கு இடமேயில்லை!

எத்தரப்பினராயினும் இக்கொடிய நிகழ்ச்சியில் தாக்குண்டோர், காயம்பட்டோர் அனைவருக்குமாக என் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டசபை ஒத்திவைக்கப்பட்டுள்ள இடைவேளையில் ஒருவரை சபாநாயகராகத் திடீரெனத் தேர்ந்தெடுத்து சபையை நடத்துவது என்ற முறை ஏற்றுக் கொள்ளப்பட்டால்; நாளைக்கு டெல்லியில் பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்படுகிற இடைவேளையில் வேறு ஒருவரை சபாநாயகராக உட்கார வைத்து பாராளுமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய விளையாட்டு நடத்துவதற்கு முன் மாதிரி ஆகிவிடக் கூடுமல்லவா?

ஆறு பேர்களை நாவலர் உள்ளிட்டவர்களை சபாநாயகர் பாண்டியன் பதவி நீக்கம் செய்ததால் பதற்றம் - கலவரம் - போட்டிச் சட்டசபை இடைவேளையில் என்று சமாதானம் சொல்லுகிறவர்கள் ஒன்றை மறந்து விடலாமா?

இதே நாவலர் அவர்கள்தானே; இந்தி ஆதிக்கத்தை எதிர்த்திட அண்ணா வழியில் அரசியல் சட்டத்தில் உள்ள இந்திதான் ஆட்சி மொழி என்ற வாசகத்தை ஒரு காகிதத்தில் எழுதி பொது இடத்தில் கொளுத்தினார்கள் என்பதற்காக பேராசிரியர் அவர்களையும் மற்றும் ஒன்பது பேரையும் பதவி விலக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்!

இப்போது சரித்திரம் திரும்பும் போது மட்டும் சங்கடப்படலாமா? சல்லடம் கட்டிக்கொண்டு சண்டைக்கு வரலாமா?

எந்த இ.காங்கிரசின் துணையோடு தி.மு.கழகத்தை அறவே ஒழித்திட அ.தி.மு.க. நண்பர்கள் கங்கணம் கட்டிப்

பணிபுரிந்தார்களோ; அந்த இந்திரா காங்கிரஸ் இன்றைக்கு அ.தி.மு.க.வின் கழுத்தில் கத்தி வைத்து விட்டது.

ஆமாம், ஒரு குழுவின் கழுத்தில் கத்தி! இன்னொரு குழுவின் கழுத்தில் பளபளப்பான பட்டுத்துணி! அது பட்டுத் துணியல்ல, பட்டென இறுக்கப்பட்டு உயிர் பறிக்கும் தூக்குக்கயிறு என்பதை அந்தக் குழுவினர் இப்போது உணர மறுப்பர்!

கடந்த கால அனுபவம் - இ.காங்கிரஸ் கட்சியின் கலாச்சார விசேஷம் - இவற்றை உணர்ந்தவன் என்பதால் இந்தக் கடிதம் எழுதினேன்!

எழுதியிருப்பது கடிதமல்ல,

எச்சரிக்கை! அதாவது

முன்னறிவிப்பு! எல்லோருக்கும்!

அன்புடன்

மு.க.

30-01-1988

1536. பிரியமுள்ள உடன்பிறப்பே; பிப்ரவரி 2ம் 3ம்!

உடன்பிறப்பே,

நமது கழகத்தின் எட்டாவது பொதுத் தேர்தல் பிப்ரவரி திங்கள் 2ஆம் நாள் நடைபெற இருக்கிற தலைமைக் கழக நிர்வாகிகள் தேர்தலுடன் நிறைவு பெற உள்ளது.

ஏறத்தாழ நாற்பதாயிரம் கிளைக் கழகங்களின் நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கான தேர்தல்.

கிளைக் கழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், பிரதிநிதிகளைக் கொண்டு அந்தந்த அமைப்புகளின் தேர்தல்.

அதனைத் தொடர்ந்து மாவட்டக் கழகத் தேர்தல். மாவட்டக் கழகத்துக்கென நிர்வாகிகள் மட்டுமின்றி, மாவட்ட பிரதிநிதிகளைக் கொண்டு தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைமைக் கழக நிர்வாகிகள் தேர்தல்.

இப்படிக் கட்டம் கட்டமாக ஜனநாயக முறையில் தேர்தல்களைக் கட்சிக்குள் நடத்தி கட்டுப்பாடு மிக்க ஒரு பெரும் அமைப்பாக விளங்குகிற பெருமை நமது கழகத்திற்கு உண்டு.

சில குறைபாடுகளை உடையதாயினும் ஜனநாயகமே மேலான தத்துவம் என்ற அழுத்தமான கருத்துடையது கழகம்.

அதனால் இந்தியாவில் ஜனநாயகத்தைக் காத்திட எமர்ஜன்சியை எதிர்த்து இந்திரா காங்கிரஸ் கட்சியின் கோபத்துக்கு ஆளாகி ஆட்சியையே அன்றைக்கு (1976) இழந்தவர்கள் நாம்!

அன்று ஆட்சிதான் பிரதானம் என்று எண்ணிச் செயல்பட்டிருந்தால் - சர்வாதிகாரத்துக்கு சாமரம் வீசியிருந்தால் ஆட்சிகூட இருந்திருக்கும், கட்சி இருந்திருக்காது! கட்சி என்பது ஏதோ போர்டு மாட்டிக்கொண்டு குந்தியிருக்கும் ஒரு கூட்டத்தின் இருப்பிடமல்ல!

கொள்கையின் உறைவிடம்!
அதற்காக எந்த தியாகமும்
செய்யக்கூடிய தீரர்கள் கொண்ட
முகாம்! போர்க்குணம் படைத்து
லட்சிய வாள் ஏந்தி நிற்கும்
வீரர்களின் பாசறை!

கட்சி, கவர்ச்சிக் கூடமல்ல - அப்படியிருந்தால் ஒப்பனை மறைந்ததும், ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம் உள்ளேயிருக்குமாம் ஈரும் பேனும் என்பது போல உண்மை சொரூபம் உலகத்துக்குத் தெரிந்து விடும்.

எதிர்க்கட்சியாக 18 ஆண்டுக்காலம் அண்ணா அவர்கள் தலைமையில், உடன்பிறப்பே, நீயும் நானும் உன் போன்ற உடன்பிறப்புகளும் ஏற்றுக் கொண்ட அடக்குமுறைகள்!

ஒன்பது ஆண்டுக்காலம் ஆட்சியிலிருந்த போதுகூட எதிர்கொண்ட சோதனைகள்! துரோகிகளின் சேட்டைகள்!

பின்னர் பத்தாண்டு காலமாக நாம் கண்ட களங்கள்! அனுபவித்த சித்ரவதைகள்! சிந்திய கண்ணீர் - செந்நீர்!

இத்தனைக்கும் ஈடுகொடுத்து, கழகத்தின் அடித்தளமாக அமைந்து, இம்மியளவு சேதாரமும் கழகக் கொள்கைகளுக்கு நேராதவாறு காத்திட்ட கண்மணிகளாம் என் உடன்பிறப்புகள்; இப்போதும் எத்தனையோ பிரச்சினைகளுக்கிடையே கழகத்தின் எட்டாவது பொதுத் தேர்தலையும் முடித்துவிட்டு - பீடுநடை பெருமித நோக்குடன் பிப்ரவரி 2ஆம் நாள் பொதுக்குழு கூட்டத்துக்கு வருகிறார்கள் என்றால் நானும் நமது பேராசிரியரும் அடையும் பூரிப்புக்கு அளவும் உளதோ?

உடன்பிறப்புகளுக்குள் யார் கழகப் பணியாற்ற பொறுப்புக்கு வருவது என்ற போட்டி எழுந்தது, அறிவேன் நான்!

சில இடங்களில் - ஆமாம், மிகச் சில இடங்களில் - அதுவும் மிகமிகச் சில இடங்களில் கசப்பு, தலைக்காட்டியிருக்கலாம்.

ஆனால் அது கதிரொலி பட்ட காலைப் பனி போல விலகி விட்டதையும் உணர்கிறேன். உவகை கொள்கிறேன்!

பிப்ரவரி இரண்டாம் நாள் பொதுக்குழு - தலைமைக் கழக நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கிறது.

இன்றைய அரசியல் சூழலை மனத்திற் கொண்டு பல்வேறு தீர்மானங்களை வடித்தெடுக்க விவாதம் நடத்த இருக்கிறது.

மறுநாள் பிப்ரவரி 3 - நமது ஊன், உயிர், உதிரத்தில் இரண்டறக் கலந்துள்ள - உள்ளமெலாம் கொள்ளை கொண்ட - இதயத்துடிப்பாம் அண்ணன் துயிலும் கடற்கரைக் கல்லறைக்குச் சென்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கழக அமைப்புகளின் அனைத்து நிர்வாகிகளும் பொதுக்குழு செயற்குழு உறுப்பினர்களும் மலர் வளையம் வைத்து வணங்குகிறோம்.

நம் மன வளையத்துக்குள் சிறைப்பட்டிருக்கும் அண்ணன் உருவத்தை எவரும் திருடிக் கொள்ள முயலலாம்! ஆனால் அந்த உள்ளம், நமக்குச் சொந்தம்! ஆம், நமக்கே சொந்தம்!

1969 முதல் 19 ஆண்டுக் காலமாக ஒவ்வொரு பிப்ரவரி 3ஆம் நாளும் அந்த இடம் நோக்கி அமைதி ஊர்வலம் செல்பவர்கள் நாம். இந்த ஆண்டும் செல்கிறோம்.

நம் உடலில் உயிர் ஒட்டிக் கொண்டுள்ள வரையில் அந்த உயிரனையார் உறங்கும் இடம் நோக்கிச் சென்று கொண்டுதானிருப்போம்!

நாம் அவரது கொள்கையின் தூதுவர்கள்!
அவரது கோட்பாட்டின்
பிரதி பிம்பங்கள்!
அவரது லட்சிய மாளிகையின்
தூண்கள்!
அவர் தொடங்கிய மொழிப்போரில்
தூக்கிய போர்வாளை இன்னமும்
உயர்த்திப்பிடித்துள்ள தளபதிகள்,
வீரர்கள்!

அவர் விரும்பிய
இனமான உணர்வுக்கு
உயிர் கொடுக்கவும் தயங்காத
தியாகத் தொண்டர்கள்!

அந்த பெருமிதத்துடன் பிப்ரவரி 2ஆம் நாள் பொதுக்குழுவும் - பிப்ரவரி 3ஆம் நாள் அண்ணா நினைவிடம் நோக்கி அணிவகுப்பதற்கும் உன்னை அழைக்கிறேன்.

குறிப்பு : பிப்ரவரி 3ஆம் நாள் மாவட்டக் கழகத்தின் செயலாளர்களுடன் கழகத் தலைவரும், பொதுச்செயலாளரும் கலந்துரையாடுகிற நிகழ்ச்சியும் இருக்கிறது.

அன்புடன்

மு.க.

01-02-1988

1537. நாம் பரம்பரை ஆண்டிகள்; பஞ்சத்துக்கு ஆண்டிகள் அல்லர்!

உடன்பிறப்பே,

பரம்பரை ஆண்டியா? பஞ்சத்துக்கு ஆண்டியா? என ஒரு முதுமொழி உண்டு!

தூய துறவிகள்; தம்மை ஆண்டிகள் என்று அடக்க உணர்வுடன் அழைத்துக் கொண்ட காலத்தில் சூழ்நிலை காரணமாக சிலர் ஆண்டிக் கோலம் பூண்டதும் உண்டு!

அதைத்தான்; தொடக்க காலத்திலிருந்தே தூய துறவியா? அல்லது வேறு வழியில்லாமல் வேடந்தரித்த போலித் துறவியா? என்று கேட்பதற்கு பதிலாக -

வார்த்தை அலங்காரமாக பரம்பரை ஆண்டியா? பஞ்சத்துக்கு ஆண்டியா? எனக் கூறுவது வாடிக்கையாகி விட்டிருக்கிறது!

இஃதென்ன முதுமொழி விளக்கவுரை? எனக் கேட்கத் தோன்றும் உனக்கு!

பரம்பரை ஆண்டிகளையும் - பஞ்சத்துக்கு ஆண்டிகளையும் ஒன்றுபோல் கருதி; சிலர் கருத்தறிவிப்பதையும், சில ஏடுகள் செய்தி வெளியிடுவதையும் காணும்பொழுது துறவிகள் குறித்து கூறப்பட்ட முதுமொழி நினைவுக்கு வந்தது!

உண்மைகளையும் போலிகளையும் ஒன்றாக முடிச்சுப் போட்டுப் பேசியும் - எழுதியும்; உண்மைகளை அழித்துவிட முடியும் என்று யாரும் கருதுவார்களேயானால் காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ? எனும் பாவேந்தரின் கவிதை வரிகளைத்தான் அவர்களுக்கு நினைவூட்ட வேண்டியிருக்கிறது.

தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவரும் - திராவிடக் கலாச்சாரத்தின் தூதுவரும் - ஜனநாயகக் காவலரும் - அரசியலில்;

தூய்மை, நேர்மை, துணிவு, கனிவு கொண்டவரும் - தமிழ் மொழியையும் தமிழரையும் பிறமொழி ஆதிக்கம் இரண்டாம் தரத்திற்கு தள்ளிவிடாமல் போர்க்கொடி உயர்த்தியவரும் - தமிழ் மாநில சுயமரியாதையைத் திடமாகக் கட்டிக் காத்தவரும் - சமதர்மச் சுடராகத் திகழ்ந்தவருமான தி.மு.கழகம் கண்ட பேரறிஞர் அண்ணா அவர்களுடன் சேர்ந்து வளர்ந்தவர்கள்; அவரது மறைவுக்குப் பிறகும் அவரது கொள்கை கோட்பாடுகள் குறிக்கோள் வெற்றியடைய ஆட்சிப் பொறுப்பில் இருந்த போதும் இல்லாத போதும் அளப்பரிய சோதனைகளை அடக்குமுறைகளை ஏற்றுக்கொண்டு இந்தக் கழகக் கொடி தாழாமல் உயர்த்திப் பிடித்துப் பயணம் நடத்துகிறோம் என்பது நாடறிந்த செய்தி! நல்லோர் உணர்ந்து பாராட்டும் செய்தி!

அந்த அண்ணன் மறைந்த 1969 பிப்ரவரி 3ஆம் நாள் முதல் 19 ஆண்டுக்காலமாக ஒவ்வொரு ஆண்டும் அவர் துயிலுமிடம் நோக்கி அமைதிப்பேரணி நடத்தி மலர்வளையம் வைத்து அமைதியாகக் கலைந்து செல்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளது தி.மு.கழகம்!

நினைவை நெஞ்சில் நிறுத்தி அமைதியாகச் சென்று; மறைந்த தலைவனுக்கு மரியாதை செலுத்திடும் பிப்ரவரி 3ஆம் நாள் நிகழ்ச்சியில் அமைதிப் பேரணி நடத்திப் பழக்கப்பட்டதே தவிர, என்றைக்கும் தி.மு.கழகம் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தியதில்லை! இந்த ஆண்டும் அப்படித்தான்!

ஆனால் சில ஏடுகள்; அண்ணா நினைவு நாள் போட்டிப் பேரணிகளின் பட்டியலில் தி.மு.க.வின் அமைதிப் பேரணியையும் இணைத்துச் செய்தி வெளியிட்டுள்ள விஷமச் செயல் கண்டு வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அண்ணா வழியில் அறப்போர் நடத்தியவர்கள் என்றுகூடப் பாராமல் நமது பேராசிரியர் உள்ளிட்ட பத்து சட்டமன்ற உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்தவர்கள்; இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவோம் என அண்ணாவின் கல்லறை முன்னால் உறுதிமொழி படிக்கிறவர்கள் என்பதைப் பார்க்கும்போது; சிரிப்பதா? அழுவதா? என்றே புரியவில்லை அல்லவா?

இலங்கை இந்திய ஒப்பந்தம் இனிப்பானது என்றும் - ஈழத்தமிழரைத் தாக்கி அழிக்கும் இந்திய இராணுவ நடவடிக்கை சரியானதே என்றும் - நேற்றுவரையில் முழங்கியதை மறைத்துக் கொண்டு, இன்றைக்கு இந்திய ராணுவ நடவடிக்கைக்கு எதிராக உறுதிமொழி எடுப்பதைப் பார்க்கும் போது; அந்தச் சந்தர்ப்ப வாதத்தைக் கண்டு - சந்தனப் பேழையில் உறங்கும் அண்ணா எப்படி வியந்து போவார்! எத்துணை வேதனையுறுவார்!

அத்தகைய அணிகளுடன் நமது அமைதி அணியையும் இணைக்க முயன்று போட்டி ஊர்வலங்கள் என்ற தலைப்பிட்ட ஏடுகளின் மீது நமக்கு வருத்தம் ஏற்படுவது இயல்புதானே!

அந்த வருத்தத்தை அந்த ஏடுகள் மீது காட்டுவதற்குப் பதிலாகத்தான்;

பரம்பரை ஆண்டியா? பஞ்சத்துக்கு ஆண்டியா? என்ற சொற்றொடரைப் பயன்படுத்தி நமது நிலையை விளக்க விரும்பினேன்!

அண்ணா பெயரைப் பயன்படுத்தும் அனைத்துச் சகோதரர்களும் என விளித்து ஒரு சகோதரர் அறிவுரை கூறி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்!

அண்ணா பெயரை பயன்படுத்துவோர் பட்டியலில் தி.மு.கழகத்தினர் என்றுமே இடம் பெற்றதில்லை!

காரணம்; அண்ணா வழியில் அயராது உழைப்போம்! என சூளுரைத்துக் கொண்டு - ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் - இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் - வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் - மாநிலத்தில் சுயாட்சி; மத்தியிலே கூட்டாட்சி - என முழங்குவதோடு, ஈழத் தமிழினத்தை சிங்கள ராணுவத்திடமிருந்தும் இந்திய ராணுவத்திடமிருந்தும் காத்திடப் போர்க்களம் கண்டு; தொடர்ந்து அக்களத்திலே நிற்கிற இயக்கம் தி.மு.கழகம்!

அண்ணாவே தி.மு.க.!

தி.மு.க.வே அண்ணா!

எனவே இதில் அவர் பெயரைப் பயன்படுத்துகிறோம் என்ற குற்றச்சாட்டுக்கும் இடமில்லை! போட்டி அணி நடத்துகிறோம் என்ற பொல்லாங்குப் பேச்சுக்கும் அர்த்தமில்லை!

யார் பரிகசித்தாலும்கூட பரவாயில்லை!

நாம் பரம்பரை ஆண்டிகள்!

பஞ்சதந்திரக் கதை ஆண்டிகள் அல்லா!

அன்புடன்

மு.க.

05-02-1988

1538. எல்லாரும் எம்மவரே! நம்மவரே!

உடன்பிறப்பே,

கழக அமைப்புகளின் தேர்தலை முடித்துவிட்டு தலைமைக் கழக நிர்வாகிகள் தேர்தலையும் சென்னையில் நடத்தி விட்டு - தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தலை நமது கழகம் சந்திக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

சட்டதிட்டங்கள், கொள்கை கோட்பாடுகள் கொண்ட குறிப்புப் புத்தகங்களே இல்லாத கட்சிகள்!

சட்டதிட்டங்கள் உண்டா இல்லையா எனும் சர்ச்சையில் இறங்கி அறிக்கைக் கணைகளை விடுத்துக் கொண்டிருக்கும் கட்சிகள்!

சட்டதிட்டங்களா? அப்படியென்றால் என்ன? என வியந்து வினவும் கட்சிகள்!

அநியாயமாக இருக்கிறதே; கட்சி அமைப்புகளின் நிர்வாகிகளுக்கு தேர்தலா? கட்சிக் கமிட்டி தவிர வேறு எதனையும் கண்டோமில்லையே நாங்கள் எனத் தொண்டர்கள் மூக்கில் விரல் வைக்கும் நிலையில் உள்ள கட்சிகள்!

இத்தகைய கட்சிகள் பலவற்றுக்கு மத்தியில் முறைப்படி உறுப்பினர் சேர்த்து - கிளைக் கழக, ஒன்றியக் கழக, நகர்க்கழக, மாவட்டக்கழக, தலைமைக்கழகத் தேர்தல்களைப் படிப்படியாக நடத்திடும் ஜனநாயகப் பேரியக்கமாக 1949 முதல் திராவிட முன்னேற்றக் கழகம் விளங்கி வருகிறது.

காலை முதல் மாலை வரையில் கியூ வரிசையில் கழக உறுப்பினர்கள் ஆடவரும் பெண்டிருமாக நின்று அமைப்புகளின் தேர்தலுக்கு வாக்களித்த காட்சியை நானே பல இடங்களில் பார்த்து மகிழ்ந்து போனேன்.

ஆட்டோக்களில், சைக்கிள் ரிக்ஷாக்களில் இருவண்ணக் கொடி கட்டிக் கொண்டு கழக அமைப்புத் தேர்தலில் தங்கள் தங்கள் அணியின் வேட்பாளர் வெற்றி பெறவேண்டுமென்ற ஆர்வத்துடன் கழக உறுப்பினர்களாம் வாக்காளர்களை அழைத்துச் சென்ற காட்சியையும் பல பகுதிகளில் பார்த்து அயர்ந்து போனேன்.

ஏ, அப்பா, கழக அமைப்புகளின் தேர்தல்களில் அந்த அணிகள் காட்டும் இதே ஆர்வம், பொதுத் தேர்தல்களில் காட்டப்படுமேயானால் நமது கழகத்தை வெல்வோர் யார் இருக்க முடியும் என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன்!

எல்லாம் சரி, அணி பிரித்து அமைப்புத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்து விட்டன!

இது கழகத்தைப் பொறுத்து எட்டாவது தேர்தல்!

ஒவ்வொரு தேர்தலிலும் அமைப்புகளின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க அண்ணா காலத்திலிருந்தே அணிகள் உருவாவது உண்டு!

அந்த அணி ஒரு முறை தலைமைக் கழகத் தேர்தல் வரையிலே நீண்டு வளர்ந்து சென்றதும் உண்டு!

அமைப்புகளின் தேர்தலுக்காக ஏற்பட்ட அணிகள்; தேர்தல் முடிந்தவுடன் ஈரணியோ மூன்றணியோ எல்லாமே ஓரணியாகி விடவேண்டும்! இல்லையேல் –

அணி; பிணியாகிவிடக்கூடும் கழகத்துக்கு!

அணி பிரிந்து தேர்தல் வேலை மும்முரமாக நடைபெறும்போது அவர் ஆதரிக்கிறார் இவர் ஆதரிக்கிறார் எனத் தொடங்கி, எப்படியும் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் தலைவரே ஆதரிக்கிறார் என்கிற அளவுக்கு என் பெயர் கூட இழுக்கப்பட்டதும் உண்டு!

அதற்குத்தான் ஒரு எடுத்துக்காட்டு நான் திருச்சியிலே நிருபர்களிடத்திலே சொன்னேன், எங்கள் கட்சியில் எவ்வளவு ஜனநாயகம் இருக்கிறது என்பதற்கு தஞ்சை மாவட்ட அமைப்புத் தேர்தலில் செயற்குழுவுக்கு போட்டியிட்ட எனது பால்ய நண்பன் தென்னனே தோற்கடிக்கப்பட்டிருக்கிறார் என்பதை!

தென்னனுக்கு ஆதரவாக வாக்களியுங்கள் என்று நான் தஞ்சை மாவட்டக் கழகப் பிரதிநிதிகளுக்கு கண்ஜாடை காட்டியிருக்க முடியாதா?

ஒன்றாக உண்டு உறங்கி திருவாரூர் வீதியிலே சேர்ந்து விளையாடி இயக்கம் வளர்க்க இரத்தம் சிந்தியது மட்டுமல்ல; எந்தச் சோதனையிலும் என்னையும் இயக்கத்தையும் பிரியாமல் - மிசாக் கைதியாக ஓராண்டு வாழ்ந்தவர்தான் தென்னன்!

எனினும் ஒரு தென்னன் அல்லவே; இப்படிப் பல தென்னன்கள் தான் தி.மு.கழகத்தின் தூண்களாக இருக்கிறார்கள் என்கிறபோது - நானோ அல்லது தலைமையில் உள்ளவர்களோ; ஒரு ஜனநாயக அமைப்பில் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை உணராமல் இருக்க முடியுமா?

அதனால்தான் பிப்ரவரி 2ஆம் நாள் சென்னையில் நடந்த பொதுக்குழுவில் நானும் பேராசிரியர் அவர்களும் பேசும்போது கழக அமைப்புத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் மட்டுமே கழகத்தினர் - வெற்றி பெறாதவர்கள் வேறு யாரோ என எவரும் எண்ணிவிடாதீர்! எல்லாரும் எம்மவரே! நம்மவரே! என்பதை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திப் பேசினோம்.

எந்தவொரு மாவட்டத்திலும் அக்குறை தோன்றக் கூடாதென்றுதான் கழக சட்டதிட்டவிதிப்படி கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் என்ற முறையில் நாங்களிருவரும் கலந்து பேசி தலைமைக் கழக நிர்வாகிகள், குழு உறுப்பினர்கள் நியமனப் பட்டியலை அறிவித்துள்ளோம்.

இனியும் கழகத் தேர்தல் நேரத்தில் தோன்றிய அணிகள் இருந்திடல் ஆகாது! அனைத்தும் ஓரணியாக உருப்பெற்றிடல் வேண்டும்!

இந்த உமது எண்ணத்தைச் செயல்படுத்திட முந்திக் கொண்டு முன் வந்துள்ள மாவட்டங்கள், ஒன்றியங்கள், நகரங்கள், பேரூர்கள் அனைத்திலுமுள்ள கழகச் செயல் வீரர்களையெல்லாம் காணுகிறேன்! களிப்பு துள்ளுகிறது!

எஞ்சியுள்ள ஒன்றிரண்டு ஊர்கள் அல்லது பகுதிகளிலும் பாச உணர்வும் நேச மனப்பான்மையும் கழகத்தினரிடையே ஒற்றுமையை உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

நம்மை நாமே வீழ்த்திக் கொண்டால் தவிர நம்மை வேறு யாரும் வீழ்த்த முடியாது என்று திருவொற்றியூர் காவலர் கூட்டத்திலே அன்றொரு நாள் நமது அண்ணன் சொன்ன வாசகம்

கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கல்மேல் செதுக்கிய எழுத்துப் போல் கலையாமல் இருந்திடல் வேண்டும்.

பணிகள் நிரம்ப இருக்கின்றன! இதோ; பிப்ரவரி 16ஆம் நாள் காலையில் தலைமைக் கழகத்தின் புதிய நிர்வாகக்குழு கூடுகிறது.

எதிர்கால கழகப் பணிகள் குறித்தும், சந்திக்க இருக்கிற பொதுத் தேர்தல் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்படும்.

அதுமட்டுமல்ல, தேர்தலை மாத்திரமன்றி நமது தலைமுறையைப் பற்றியும் தேர்தலைவிட அதிகமாகச் சிந்திப்பவர்கள் நாம்!

அதனால்தான் இலங்கைத் தரணியில் தமிழ் ஈழத்தில் அழிந்து கொண்டிருக்கும் தமிழ் இனம் காத்திட நமது தொடர் பணிகளில் தொய்வின்றி ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

அதற்கென தமிழக முழுதும் பிப்ரவரி 20ஆம் நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்கிறோம். அதில் கழகத்தினர் மட்டுமன்றி தமிழ் உணர்வு கொண்ட அனைவரையும் பங்கு பெறச்செய்ய வேண்டும். அது குறித்தும் 16ஆம் தேதி நிர்வாகக் குழு விவாதிக்கும்.

அடுத்து - பத்தாண்டு காலத் தமிழகத்தின் படுபாதாள வீழ்ச்சியிலிருந்து தமிழ் மக்களை மீட்டு - அவர்களுக்கு செம்மையான, சீரான, நேர்மையான, நாணயமான, பயனுள்ள, நிர்வாகத்தை அளிக்கவும் நல்லாட்சி வழங்கவும் நமக்குள்ள கடமையைத் தட்டிக்கழிக்க முடியாது!

மாற்றார் கோடி கோடியாக குவித்துக் கொண்டு - யாரிடம் எத்தனை கோடியிருக்கிறது என்பதை இன்றைக்கு தெருக் கோடிகளில் பறையறைந்து தெரிவிக்கிறார்கள்!

அவர்களைத் தேர்தல் களத்தில் எதிர்த்து நிற்கப் போகும் நமக்கோ கொடித் தோரணம் கட்டவும் காசுக்கு வசூலுக்குத்தான் துண்டேந்த வேண்டும்! உண்டியல் தூக்க வேண்டும்!

முடியும் நம்மால் - அவர்களைப் போல அந்த வழியில் அல்ல - நமது உடன்பிறப்புகள் ஓடியாடி உழைத்து தேனீக்களைப் போல சேகரித்த தொகை தான் சென்னையில் அண்ணா அறிவாலயமாக உயர்ந்து நிற்கிறது!

எனவே மீண்டும் அதே வழியில் தேர்தல் நிதி திரட்டியாக வேண்டும்!

செங்கை அண்ணா மாவட்டச் செயலாளர் நன்கொடைச் சீட்டுகளை அச்சடித்து, தலைமைக் கழக முத்திரையிட்டுக் கொண்டு புறப்பட்டு விட்டார்!

அவரைத் தொடர்ந்து திருச்சி மாவட்டச் செயலாளரும் பணிகளைத் தொடங்கி விட்டார்!

பெரியார் மாவட்டமும் தயார் என்று கூறியுள்ளது!

மற்ற மாவட்டச் செயலாளர்களையும் தலைமைக்கழக நிர்வாகக் குழு உறுப்பினர்களையும் பிப்ரவரி 16ல் சந்திக்கும் போது தேர்தல் நிதி திரட்டும் பணி குறித்தும் விவாதிக்கப்பட இருக்கிறது!

நாடு நம்மிடம் நிறைய எதிர்பார்க்கிறது!

உலக முழுதும் பரவிக்கிடக்கிற தமிழர்கள் ஆவலுடன் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

ஆசைகளை வளர்த்துக் கொள்ளாமல் ஆர்வத்தைப் பெருக்கிக் கொண்டு - அடக்கமாகத் தொண்டாற்றினால், ஒற்றுமையுடன் செயல் புரிந்தால் - 1976ல் கலைக்கப்பட்ட நமது அண்ணன் உருவாக்கிய கழக ஆட்சியெனும் கதிரொளி - காரிருளைக் கிழித்துக் கொண்டு புறப்படும்!

எல்லாரும் எம்மவரே! நம்மவரே! என்ற எண்ணமுடன் உன் போன்ற கழக உடன்பிறப்புகள் ஓரணியில் நின்றிடில் நமது கொள்கைக்கு வெற்றி உறுதி! தமிழ் இனம் தலைநிமிர்ந்து நிற்கும்; அதுவும் உறுதி!

அன்புடன்

மு.க.

13-02-1988

1539. பிரபாகரனை அழிக்கலாம்; பிரளயத்தை அடக்க முடியுமா?

உடன்பிறப்பே,

இன்றைய (13.2.88) இந்து இதழில் முதல் பக்கத்தில் வந்துள்ள பெட்டிச் செய்தி:-

'Prabakaran encircled'

COLOMBO, Feb. 12

The State-run Ceylon Daily News said today that the Indian Peace Keeping Force (IPKF) had encircled Mr. Velupillai Prabakaran, leader of the Liberation Tigers of Tamil Eelam and the remnents of his 150 men bodyguard in his northern Jaffna peninsula birthplace of Velvettiturai.

The report could not be independently confirmed. The newspaper said the IPKF hoped to capture the elusive leader alive after more than four months of operations to ensnare him–UPI

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை எப்படியும் பிடித்துவிட இந்திய ராணுவம் சுற்றி வளைத்து வியூகம் அமைத்துவிட்டது என்பதே அந்தச் செய்தியாகும்.

தமிழ் ஈழ விடுதலைக்காகக் களத்தில் நிற்கும் அந்தத் தலைவனை உயிருடன் பிடிப்பதாலோ - அல்லது கொன்று குவிப்பதாலோ - ஈழத் தமிழர்களின் விடுதலை தாகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என்று ராஜீவ் காந்தி கருதுகிறார்.

இந்திய ராணுவத்தினரை; ஏறத்தாழ லட்சம் பேரை - தமிழ் ஈழத்தில் குவித்து வைத்துக் கொண்டு, சுமார் நான்கு மாதங்களாக விடுதலைப் போராளிகளை வேட்டையாடுவது என்ற பெயரால் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களைக் கொன்று - இந்திய சிப்பாய்களையும் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களைப் பலி

கொடுத்து வீண் வீராப்பு ஒன்றுக்காகவே ராஜீவ் காந்தி கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்.

இந்தியாவில் தமிழ்நாட்டு மக்களேயன்றி, நாடு முழுவதுமுள்ள அரசியல் தலைவர்கள் பலரும் ராஜீவ் காந்தியின் முரட்டுப் பிடிவாதம் குறித்துக் கண்டனக் குரல் எழுப்பியும்கூட அவர் அதை செவிமடுத்ததாகவே தெரியவில்லை.

மக்கள் குரலை அவர் மண்ணுக்குச் சமமாக நினைக்கிறார் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் இருப்பினும் ஒரே ஒரு உதாரணம் இப்போது போதுமென்று நம்புகிறேன்.

கோடிக்கணக்கான ரூபாய் செலவிட்டு லட்சத்தீவில் ஓய்வெடுக்கச் சென்ற ராஜீவ்காந்தி; தனது குடும்பத்தினர் உற்றார் உறவினர் மட்டுமன்றி, இந்தியாவில் பெரும் பிரச்சினை உருவாகக் காரணமாயிருந்த அமிதாப்பச்சன் சகோதரர்களையும் அழைத்துச் சென்று உற்சாகமாகப் பொழுது போக்கினார் என்றால் அதற்கு என்ன பொருள்?

எவன் பேசினால் என்ன; யார் எப்படி விமர்சித்தால் என்ன; என் போக்கைச் சிறிது கூட மாற்றிக் கொள்ள மாட்டேன் என்கிற அலட்சிய மனோபாவமல்லவா இந்திய மக்கள் மீது அவருக்கு ஏற்பட்டிருக்கிறது - அதனால் மக்களின் குமுறலை அவர் மதிக்க மாட்டார்!

அதற்குப் பிறிதோர் எடுத்துக்காட்டாகத்தான் ஈழத்தமிழர் பிரச்சினையில் அவர் கொண்டுள்ள கொடுமையான கொள்கை அமைந்துள்ளது.

கொழும்பு ஒப்பந்தமே ஈழத்தமிழர்களுக்குப் பயன் அளிக்கக் கூடியதல்ல; ஈழத்தமிழ் மக்களின் பிரதிநிதிகளைக் கலந்து பேசி செய்யப்பட்டதுமல்ல என்பதை எத்தனையோ முறை விளக்கியாகிவிட்டது.

குறைபாடுடைய அந்த ஒப்பந்தத்தைக் கூட ஜெயவர்த்தனா அரசு நடைமுறைப்படுத்த முன்வராது - மாறாக ஒப்பந்தத்திற்கு முரணான செயல்களில் தான் ஈடுபடும் என்றும் எச்சரித்தோம்!

அவ்வாறே ஜெயவர்த்தனா அரசு ஒப்பந்த மீறல் நடவடிக்கைகளைப் பகிரங்கமாகவே மேற்கொண்டதை இந்திய

அரசும் அறியும்! அறிந்திருந்த போதிலும்கூட; பிரபாகரனின் இயக்கம் தனக்கு அடிமையாகவும் எடுபிடியாகவும் இருந்திட ஒப்பவில்லையே என்ற ஆத்திரத்தில் அந்த இயக்கத்தை அடியோடு அழித்து விட ராஜீவ் காந்தி முடிவு எடுத்துவிட்டார்!

அதற்காக இந்திய ராணுவ வீரர்கள் இன்னும் பல ஆயிரம் பேரைக்கூட இழப்பதற்கு அவர் தயாராகி விட்டார்! இந்திய மக்கள் நல்வாழ்வுக்காக செலவிடப்பட வேண்டிய பணத்தைக் கோடி கோடியாக இலங்கையில் இந்திய ராணுவத்தினருக்காகச் செலவழித்து தமிழ் இனத்தைப் பூண்டோடு அழிப்பேன் எனத் தோள் தட்டுகிறார்!

இதோ ஏடுகள் பலவற்றில் வந்துள்ள செய்தி, மட்டக்களப்பு நகர மக்கள் வெள்ளியன்று அதிகாலை இடைவிடாது குண்டு வெடிக்கும் சப்தம் கேட்டு அலறி எழுந்தனர். இந்திய அமைதிப் படையினர் ஹெலிகாப்டரில் பறந்த வண்ணம் மட்டக்களப்பு ஏரி மற்றும் கடற்கரை பகுதியில் யந்திரத் துப்பாக்கிகளால் சுட்டுக் கொண்டிருந்ததாக நகரவாசிகள் தொலைபேசிகள் மூலம் தெரிவித்தனர்.

இப்படி எல்லா ஏடுகளிலும் செய்திகள் வந்த பின்னரும் - இந்திய ராணுவம் அப்பாவித் தமிழர்கள் மீது குண்டு வீசவில்லை என்று வானொலி, தொலைக்காட்சிகள் வாயிலாக பிரச்சாரம் செய்து தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றலாம் என்ற கணக்குப் போடுவது பைத்தியக்காரத்தனமேயாகும்.

அப்பாவித் தமிழர்களை மட்டுமல்ல; விடுதலைப் புலிகளையும்தான் எதற்காகக் கொல்ல வேண்டுமென்று இத்தனை பெரிய படையெடுப்பை ராஜீவ் காந்தி நடத்துகிறார்?

அந்தத் தமிழர்களும் போராளிகளும் இவரை நம்பியிருந்ததற்கு இவர் தரும் பரிசு இதுவா?

பாலஸ்தீன விடுதலை கீதம் என்றால் பாரதப் பிரதமர் காதுகளுக்குப் பைங்கிளியின் மழலையமுதம் போல் இனிக்கிறது!

நமீபியா விடுதலை இயக்கமெனிலோ ராஜீவின் நரம்பு மண்டிலமே யாழிசையைப் பொழிகின்றது!

ஆனால் தமிழினம் இலங்கையில் அமைதியாக வாழ - உரிமைப்போர், விடுதலைப்போர் நடத்துகிறது என்றால் அந்த இனத்தையே தரை மட்டமாக்குகிறேன் என்று தொடை தட்டுகிறார் காந்தியின் பெயரைத் தன் பெயருடன் இணைத்துக் கொண்டிருக்கும் ராஜீவ்!

இன்றோ நாளையோ இன்னும் சில நாட்களிலோ அல்லது இதனை நான் எழுதிக் கொண்டிருக்கும் போதே பிரபாகரனை வீழ்த்திவிட்டோம் என்று இந்திய அரசு எக்காள முழக்கமிடக் கூடும்!

ஆனால் அப்படியொரு செய்தி வருமேயானால் தாய்த் தமிழகம் வடிக்கும் ரத்தக் கண்ணீர்; எரிமலைக் குழம்பாகிப் பொங்கி வழியும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதை நான் உணர்த்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலங்கையில் அமைதி ஏற்படத் துப்பாக்கி மட்டும் போதாது; பேச்சு வார்த்தைகள் தொடங்க வேண்டும்; பேச்சு வார்த்தைகளைத் தொடங்கப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று தலையங்கம் தீட்டியுள்ள தினமணி இதழ்; இலங்கை அரசின் பிரித்தாளும் சூழ்ச்சியையும் - கொழும்பு ஒப்பந்தத்திற்கு மாறாக நடந்து வருவதையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை!

ஒரு பிரபாகரனை அழித்துவிட்டால் ஓய்ந்து விடும் தமிழ் ஈழவிடுதலைப் போர் என்று ராஜீவ் காந்தி எண்ணக் கூடும்!

அவர் ஆளுகிற இந்த இந்தியநாட்டு விடுதலைக் குரலை ஒடுக்க நினைத்த ஆங்கிலேயன் எத்தனையோ விடுதலை இயக்கத் தலைவர்களைத் தீர்த்துக் கட்டினான் - தூக்கில் தொங்கவிட்டான்; ஆனால் அந்தத் தலைவர்கள் செத்தார்களே தவிர - அவர்கள் மூட்டிய விடுதலைத் தணல் அணையவில்லை! அணைக்க முடியவில்லை!

சொந்த நாட்டு வரலாறை மறந்து விட்டு, ராஜீவ் காந்தி; இலங்கையில் இந்திய ராணுவத்தை வைத்து இறுதிப் போர் நடத்துவாரேயானால் - அது ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் நிச்சயம் இறுதிப் போராக இருக்காது! பெரும் பூகம்பக் குலுக்கலையும் அதனால் ஏற்படும் சேதங்களையும் சமாளிப்பது என்பது இயலாத காரியம்!

இதனை உணர்ந்து; தமிழின அழிப்புப் படலத்திலிருந்து ராஜீவ் காந்தி - தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும்!

பிரபாகரனை அழித்து விடலாம்; அதன் பிறகு ஏற்படும் பிரளயத்தை அடக்க முடியாது!

அந்தப் பிரளயம்; உடனடியாக வராவிடினும் என்றோ ஒரு நாள் வந்தே தீரும்!

அது வரலாற்றுக் கட்டாயம்!

அன்புடன்

மு.க.

14-02-1988

1540. ராஜதந்திரமல்ல; ராஜீவ் தந்திரம்!

உடன்பிறப்பே,

இந்திரா காங்கிரஸ் கட்சி எந்தவொரு மாநிலத்திலும் எதை வேண்டுமானாலும் - எப்படி வேண்டுமானாலும் செய்து, தனது ஆட்சி ஆதிக்கத்தை உருவாக்கிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு சில மாநிலங்களில் காஷ்மீர் பாணி வேலைகளைச் செய்கிறது! சில மாநிலங்களில் ஆந்திரா போல பாஸ்கரராவ் அணுகுமுறைகளை வைத்து ஆழம் பார்க்கிறது! சில மாநிலங்களில் மேகாலயா வழிமுறைகளைப் பின்பற்றுகிறது!

இவற்றில் எந்த முறை தகுந்த முறையாக இருக்கும் தமிழ்நாட்டுக்கு என்று சிந்தித்து முடிவு செய்வதற்காக டெல்லியில் பலத்த மந்திராலோசனை சபைகள் அடிக்கடி கூடுகின்றன.

இங்கே ஜானகி ராமச்சந்திரன் அவர்கள் தனக்கு 97 எம்.எல்.ஏக்கள் ஆதரவு இருக்கிறது, எனவே தனக்கு காங்கிரசின் ஆதரவு தர வேண்டுமென்று கேட்ட போது அ.தி.மு.க. ஒற்றுமையாக இருந்தால்தான் ஆதரவு தரப்படும் என்று ராஜீவ் காந்தி அறிவித்தார்.

ஒற்றுமையாக இருந்தால்தான் அ.தி.மு.க.வினர் சட்டப் பேரவையில் 130 பேர் இருப்பார்களே, பிறகேன் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு என்று ஒற்றுமை உபதேசம் செய்தவருக்குப் புரியாமல் போனது எப்படியோ?

தமிழ்நாட்டு நலன்கள், உரிமைகள், ஈழத்தமிழர் பாதுகாப்பு இவைகளைப் பற்றியெல்லாம் கூட கவலைப்படாமல் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் மத்திய அரசுடனும் இந்திரா காங்கிரசுடனும், உறவு கொண்டிருந்தார். அவர்களுக்கு அடங்கி நடந்தார். உடல்நலங் குன்றி அமெரிக்காவுக்குப் புறப்பட்டவரைக் கூட உடனடியாகப் போகவிடாமல் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவு தந்து உரையாற்றிட மெரினா கடற்கரைக் கூட்டத்தில்

கலந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு அவரும் வேறு வழியின்றி கலந்து கொண்டு கொழும்பு ஒப்பந்தத்தை ஆதரித்துப் பேசினார்.

அப்படியெல்லாம் ராஜீவ் காந்திக்கு வளைந்து கொடுத்து - இந்திரா காங்கிரசை ஆதரித்த எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு, அவரது கட்சியின் ஆட்சியைத் தமிழகத்தில் தொடரவிடாமல் - ஆதரிப்பது குறித்து ஆலோசிக்கிறோம் என்று கூறிக்கொண்டே, அந்தத் தோழமைக் கட்சிக்கு ஆதரவு இல்லையென்று ஜனவரி 28ந் தேதி காலையிலே அறிவித்து அந்தக் கட்சியின் முதுகிலே குத்திவிட்டு, அதுதான் அரசியலிலே ராஜதந்திரம் என்று பெருமைப்பட்டுக் கொண்டார்கள்.

ராஜதந்திரம் தேவைதான்! அதற்கும் ஒரு நாகரீக மரபு உண்டு - அது கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் அது ராஜ தந்திரம்தான்! இல்லையேல் அது வெறும் ராஜீவ் தந்திரம் என்றே அழைக்கப் படும்.

சட்டசபையில் நடக்கக் கூடாதவை நடந்து அந்த ஒரு நாள் அசாதாரணக் கூத்தின் காரணமாக சட்டசபை கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது.

பழைய கவர்னர் குரானாவும் தொலைக்காட்சி வாயிலாகத் தன் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்கும் முறையில் ஒரு நீண்ட வாக்குமூலத்தை வழங்கி விட்டு - அந்த உரைக்கும் விடைபெறும் உரை என்று பெயர் பண்ணிவிட்டுக் கிளம்பி விட்டார்!

அடுத்து அலெக்சாண்டர் அவர்கள் ஆளுநராக வருகிறார். அவர் லண்டனிலேயே கூறியிருக்கிறார் தமிழ்நாட்டில் தனக்கு பிரதானப் பணி தேர்தல் நடத்தும் பணிதான் என்று!

ஆனால் பிரதமர் ராஜீவ் காந்தியின் டெல்லி பேட்டிகளைப் பார்க்கும் போது, காங்கிரஸ் கட்சி, தமிழகத்தில் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும் முயற்சிகளையெல்லாம் முடித்துவிட்டு, முழுத்திருப்தி ஏற்பட்டு, காங்கிரஸ் முதலமைச்சர் பதவியேற்க முடியும் என்ற நிலை வந்தால்தான் இங்கே தேர்தலே நடத்தப்படும் என்பது போலத் தெரிகிறது.

"In Tamilnadu, the election schedule had to be worked out by the Governor after studying the political situation."

என்று ராஜீவ் காந்தி கூறியதாக இந்து ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அரசியல் சூழ்நிலைகளை ஆளுநர் ஆய்வு செய்து அறிந்து கொண்ட பின்னரே தமிழ்நாட்டுத் தேர்தல் பற்றிக் கூற முடியும் - ராஜீவ் காந்தி

என்பதாக தினமணி செய்தி வெளியிட்டுள்ளது.

எனக்கு ஏற்படுகிற ஐயமெல்லாம் ஆய்வு செய்யப் படவேண்டிய அளவுக்கும் - அது வரையில் பொறுத்திருக்க வேண்டிய அளவுக்கும் அப்படியென்ன தமிழ்நாட்டில் அரசியல் சூழ்நிலைகள் உருவாகியுள்ளன?

அரசியல் மேடைகள் ஆபாச அர்ச்சனைக் களங்களாக மாறியிருப்பதும் - அ.தி.மு.க.வின் இரு அணியினரும் ஒரு தரப்பார் ஊழலை இன்னொரு தரப்பார் விமர்சிப்பதும் தவிர - வேறு என்ன அரசியல் சூழல்கள்?

பஞ்சாப் மாநிலத்தில் நாள் ஒன்றுக்கு பத்து பேர் இருபது பேர் என்று பிரபலமானவர்களும் - அதிகாரிகளும் - தீவிரவாதிகளும் கொல்லப்படுவது தொடர் கதையாகியுள்ளதே, அது போன்று ஏதாவது அரசியல் ரணகளங்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டு அதனை ஆய்வு செய்து அந்த நிலை சூடாக இருக்கிறதா, அல்லது குளிர்ந்துவிட்டதா என்று புதிய ஆளுநர் அறிவிக்கப்போகிறாரா?

உடன்பிறப்பே, ராஜீவ் காந்தியின் அரசியல் சூழல் ஆய்வு என்பது அதுவல்ல! இந்திரா காங்கிரசுக்கு பெரும் பான்மையான இடங்கள் அல்லது சமமான இடங்கள், தொகுதி உடன்பாட்டில் கிடைக்கக்கூடிய அளவுக்கு அ.தி.மு.க.வின் மற்றொரு அணியினர் இறங்கி வந்தாக வேண்டும்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக இழந்திருந்த முதலமைச்சர் பதவி இந்திரா காங்கிரசுக்குத்தான் என்ற அந்த அணியினர் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

அல்லது அப்படி ஒப்புக்கொள்ள வைக்கப்பட வேண்டும்.

முதலில் பேரம் - அந்த பேரம் படியாவிட்டால் மிரட்டல்! எச்சரிக்கை!

அதன் தொடர்பாக இந்திரா காங்கிரசுக்கே முதலமைச்சர் பதவியென்பதற்கு கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறோம் என ஒப்புதல்!

மக்கள் ஒப்புக்கொள்கிறார்களோ இல்லையோ, முதலில் உடன்பாடு அணி ஒப்புக் கொண்டாக வேண்டும்!

இந்தக் காலகட்டம் உருவாவதைத்தான் ஆளுநரால் ஆய்வு செய்யப்பட வேண்டிய அரசியல் சூழ்நிலை என்று பிரதமர் ராஜீவ் கூறுகிறார்.

பேரம் முடியும் வரையில் தேர்தல் தள்ளிப் போடப்படும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் பேரவைக்கு இப்போதைக்கு செல்ல முடியாது.

காங்கிரசை வலுப்படுத்திக் கொள்ள காகிதத் திட்டங்கள் பல பிரகடனப் படுத்தப்படும்.

எப்படியும் எந்த வழியிலாவது காங்கிரஸ் தமிழக ஆட்சியில் மீண்டும் தோன்றிட வேண்டுமென்ற ஆசையின் வெளிப்பாடுதான்.

ராஜீவ் காந்தி அவர்கள்

தமிழக அரசியல் சூழ்நிலையின் மீது

பழி போடும் காரியமாகும்.

அன்புடன்

மு.க.

16-02-1988

1541. நாதியற்றுப் போனதோ நமது தமிழ் இனம்?

உடன்பிறப்பே,

அமெரிக்க நாட்டில் வாழும் தமிழர்கள் நியூயார்க் நகரத்தில் ஊர்வலம் ஒன்று நடத்தி, ஐ.நா. மன்றம் சென்று கண்ணீரால் எழுதப்பட்ட முறையீடு ஒன்றை அளித்துள்ளனர்.

அந்த முறையீட்டில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் பின்வருமாறு:-

தமிழ் ஈழத்தில் இந்திய அமைதிப் படையினர் இதுவரை இரண்டாயிரம் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்துள்ளனர்.

அவர்களில் எண்பது வயதுக்கு மேற்பட்ட முதியோர்களும், இரண்டு வயதுக் குழந்தைகளும்கூட அடங்குவர்.

இலங்கையின் கிழக்குப் பகுதி வடபகுதிகளில் தகவல் தொடர்புகளை இந்திய இலங்கை அரசுகள் துண்டித்து விட்ட காரணத்தால் தமிழினப் படுகொலை பற்றிய செய்திகள் பரவாமல் தடுக்கப்படுகின்றன.

1987 அக்டோபர் பத்தாம் நாள் தொடங்கிய இந்த இனப்படுகொலை இன்னமும் நிறுத்தப்படாமல் தொடர்வதுடன், ஐநூறு பெண்களுக்கு மேல் இந்தியப் படையினரால் கற்பழிக்கப்பட்டும் பயங்கர கொடுமைக்கு ஆளாகியிருக்கின்றனர்.

எனவே தமிழ் ஈழப்பகுதியிலிருந்து இந்தியப் படை திரும்பப் பெறப்பட்டு ஐ.நா. அமைதிப் படையை உடனடியாக அங்கு நிறுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறு ஐ.நா. மன்றத்தில் முறையீடு அளித்திருப்பவர்கள் அமெரிக்க நாட்டில் வாழும் தமிழர்கள். ஆம்; பல ஆயிரம் மைல்கள் தூரத்துக்கு அப்பால் மிகத் தொலைவில் வாழுகிற தமிழர்களால் தாங்கிக் கொள்ள முடியாத வேதனை, இன்றைக்குத் தமிழ் ஈழத்தில்!

அவர்களால் இயன்றதைச் செய்கிறார்கள். ஐ.நா. மன்றத்துக்கு முறையீடு அளிப்பதின் வாயிலாக அனைத்து நாடுகளுக்கும் இலங்கையில் தமிழ் இனத்துக்கு இந்திய அரசு செய்யும் துரோகத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

நீண்ட நிலப்பரப்பாலும் விரிந்த கடற்பரப்பாலும் வெகு தூர இடைவெளிக்கு அப்பால் வாழுகின்ற அந்தத் தமிழர்களுக்குள்ள ரத்த பாசம், உணர்வு - இவை இங்கே மிக அருகாமையில்; இருபது கல் தொலைவுக்குள் வாழுகிற தமிழ்நாட்டு மக்களுக்கு இல்லாமலா போய்விடும்!

வெளிநாட்டுத் தமிழர்கள் அங்குள்ள வானொலி, தொலைக்காட்சிகள் வாயிலாகச் செய்தி அறிந்து துடிக்கிறார்கள்.

இங்கு வானொலியும், தொலைக்காட்சியும் பொய்மையின் கூடாரங்களாக ஆகிவிட்டாலுங்கூட; இலங்கைத் தீவில் இன்னலுற்றுக் கதறியழும் தமிழினத்தின் குரல் காதிலே விழுகிற தூரத்திலேதான் நாம் இருக்கிறோம்.

ஈழத்தில் இடிந்து விழும் வீடுகள், ஆலயங்கள், நூல் நிலையங்கள் ஆகியவற்றின் ஒலி; நம் இதயத்தில் பேரிடியாக விழுந்து கொண்டிருக்கிறது!

தமிழினத்தின் மரண ஓலம் நமது செவிகளைத் துளைத்து நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டுகிறது!

பந்தாடப்படும் குழந்தைகளின் தலைகள் - கற்பு பறிக்கப்பட்டுத் தணல் வீழ் புழுக்களாகத் துடிக்கும் தமிழ்ச் சகோதரிகள் - இப்படித் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் செய்திகளை எத்தனை நாளைக்குத்தான் தாங்குவது?

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டு மக்கள் இந்திய அரசுக்கு விடுத்த வேண்டுகோள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகவே போயிற்று.

தமிழக மக்கள் மட்டுமின்றி, இந்திய நாட்டு அரசியல் தலைவர்கள், அறிவுடை மேதைகள் பலரும் இந்திய அரசின் தவறான போக்கு குறித்து பலமுறை இடித்துக் காட்டியும்கூட, பிரதமர் ராஜீவ் காந்தி தனது முரட்டுப் பிடிவாதத்திலிருந்து இறங்கி வர மறுக்கிறார்!

நாளொன்றுக்குப் பல கோடி ரூபாய் இராணுவச் செலவை இந்திய அரசு ஏற்றுக் கொண்டு, இந்திய சிப்பாய்களைக் கொண்டு ஈழத் தமிழர்களைக் கொல்வது மட்டுமல்ல; இந்திய சிப்பாய்களும் பெருமளவுக்கு உயிரிழக்கவும் - ஏராளமானோர் படுகாயமுறவுமான நிலைக்கு ராஜீவ் காந்தியின் முரட்டுத்தனமும் முதிர்ச்சியற்ற அணுகுமுறையுமே காரணங்களாக இருந்து வருகின்றன!

இலங்கையில் சிங்களத் தீவிரவாத இயக்கத்தினர் வெடி குண்டுகளை வைத்தே நூற்றுக்கணக்கானவர்களைக் கொல்லுகின்றனர் - பிரபல அரசியல் தலைவர்கள் அவர்களது துப்பாக்கி குண்டுகளுக்குப் பலியாகியுள்ளனர். கொழும்பு ஒப்பந்தத்தையொட்டி இலங்கையில் அமைதி காக்கச் சென்றதாகக் கூறப்படும் இந்திய ராணுவத்தினர் இந்தச் சிங்களத் தீவிரவாத இயக்கத்தைக் கண்டு கொள்வதேயில்லை.

அதே நேரம் விடுதலைப்புலிகளைத் தேடுதல் - ஆயுதங்களைக் கைப்பற்றுதல் என்ற பெயரால் அனுதினமும் அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்து கொண்டே ஆங்காங்கு மிச்சம் மீதியிருக்கும் தமிழர்களைப் படம்பிடித்து தொலைக்காட்சியில் காட்டி, ஆகா! இலங்கையில் தமிழர்கள் எத்துணை இன்பமாக இருக்கிறார்கள்! என்று தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற முனைகிறார்கள்.

தமிழ் மக்களின் உள்ளக் குமுறலை பலமுறை பல்வேறு அமைதி வழி அறப்போர்களின் வாயிலாக இந்திய அரசுக்கு உணர்த்தியிருக்கிறோம்.

தொடர்ந்து உணர்த்திக் கொண்டேயிருப்போம்.

நாதியற்றுப் போனதோ தமிழ் இனம்? என்ற அவப்பெயர் நம்மை அணுகிடாமல் இருக்க -

இலங்கையில் தமிழ் இனம் அழியும் போது இங்குள்ள தமிழன் சொரணையற்றுத் தூங்கிக் கொண்டிருந்தானா? என்று எதிர்காலச் சந்ததியினர் நமது கல்லறைகளின் மீது காறி உமிழாமல் இருக்க -

ஈழத் தமிழினத்துக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டேயிருப்போம்!

அதிலே ஒரு கட்டம்தான் நாளை இருபதாம் தேதி எங்கணும் ஒரு நாள் அடையாள உண்ணா நோன்பு!

அறவழியில்!

அமைதியான முறையில்!

வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம் உள்ளத்தால் ஒருவரே - மற்றுடலினால் பலராய்க் காண்பார்

என்ற புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகளை மெய்ப்பித்துக் காட்ட,

ஆங்காங்கு

அணி திரள்வோம்!

அலட்சியம் காட்டும் ராஜீவ் காந்தி அவர்களுக்கு தமிழன் என்றோர் இனம் உண்டு என்பதை உணர்த்துவோம்!

தமிழ்ப் பெரியீர்!
தமிழ் இளைஞர்காள்!
தமிழுணர்வுமிக்க மாணவர்காள்!
தமிழ்க் குல மகளிர்காள்!
தமிழ்ப் புலவர் கூட்டமே!
தமிழ்நாட்டுப் பாட்டாளி வர்க்கமே!
தமிழர்காள்! தமிழர்காள்!
தன்மானச் சிங்கங்காள்!

பிப்ரவரி 20 - எங்கணும் நிறைந்திடுக! ஒரு நாள் உண்ணா நோன்பு; பல நாளாய்ப் பரிதவிக்கும் ஈழத்தமிழ் இனத்துக்காக! வாரீர்! என அழைக்கிறேன்!

உடன்பிறப்பே, வகைப்படுத்தி இந்த அறப்போர் எழுச்சியுடன் நடைபெற உன் உழைப்பை நல்கிட எழுக!

அன்புடன்

மு.க.

19-02-1988

1542. உனக்கு மட்டும் புரிந்தால் போதாது! ஊருக்கும் புரியவைக்க வேண்டும்!

உடன்பிறப்பே,

காவிரிப் பிரச்சினையை விரைவில் தீர்த்திடும் முயற்சிகளை தீவிரமாக மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்தி தஞ்சை திருச்சி மாவட்டங்களில் அரசு அலுவலகங்களின் முன்னால் கழகப் பேரணிகள் நடத்தி அமைதி வழி ஆர்ப்பாட்டங்களை வரும் 25-ஆம் தேதியன்று நடத்த இருக்கிறாய்!

மத்திய அரசின் ஜவுளிக் கொள்கையால் பாதிக்கப்பட்டு பரிதவிக்கும் கைத்தறி நெசவாளர்கள் விசைத்தறி நெசவாளர்களின் அல்லல் போக்கிட உடனடியாக முன்வருமாறு மத்திய மாநில அரசுகளை வற்புறுத்த தமிழக முழுதும் மார்ச் முதல் நாளன்று அரசு அலுவலகங்களுக்கு முன் அணி வகுத்து அறவழி ஆர்ப்பாட்டங்களை நடத்த இருக்கிறாய்!

இனங்காக்கும் பணிக்காக, கடந்த 20ஆம் தேதி தமிழக முழுதும் பத்து லட்சத்துக்கு மேற்பட்டோர் உண்ணா நோன்பு மேற்கொண்டு, ராஜீவ் அரசு; தமிழ் ஈழத்தில் நடத்தும் இராணுவ நடவடிக்கையைக் கண்டித்துக் குரல் கொடுத்திருக்கிறோம்.

சென்னை உண்ணாநோன்பில் இறுதியாக உரையாற்றிய போது நான் குறிப்பிட்டேன் - இந்த நிகழ்ச்சி நமது வலிவைக் காட்டுவதற்காக அல்ல; நமது உணர்வைக் காட்டுவதற்காக என்று!

உணர்வு என்று சொன்னாலே இன்றைய காங்கிரஸ் காரர்களுக்கு எட்டிக் காயாக இருக்கிறது!

மொழி உணர்வு இன உணர்வு
தன்மான உணர்வு
உரிமை உணர்வு

என்றெல்லாம் பெரியார் வழியில் - அண்ணா வழியில் நடைபோடுகிற நாம் கூறுகிறபோது அது ஏதோ இந்த நாட்டின்

தேசிய உணர்வுகளுக்கு எதிரிடையானது எனக் கூறுகிறார்கள் அவர்கள்! பல்வேறு தேசிய இனங்களைக் கொண்டதுதான் இந்தியா என்கிற இந்தப் பெருநாடு என்பதை என்ன காரணத்தாலோ அவர்கள் மறந்து விடுகிறபடியால் - தேசியத்தையும், தேச ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காங்கிரஸ்காரர்கள் மொத்தக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்களைப் போலப் பேசுகிறார்கள்.

மத்திய அரசின் தவறுகளைச் சுட்டிக் காட்டினால் அது தேச விரோதம்!

மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று உரிமைக் குரல் எழுப்பினால் அது ஒருமைப்பாட்டுக்கு விரோதம்!

இலங்கையில் தமிழ் இன மக்களைக் கொன்று குவிக்க இந்திய ராணுவத்தைப் பயன்படுத்துவதைக் கண்டித்தால்; அது தேசிய நீரோட்டத்துக்கு விரோதம்!

இப்படி சில கோஷங்களைப் போட்டுக்கொண்டு - என்னமோ இவர்கள்தான் இந்தியாவைத் தூக்கிப் பிடித்து நிறுத்திக் கொண்டிருப்பவர்கள் போல காங்கிரசார் நாடகமாடுகிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்புகூட மத்திய அமைச்சர் நண்பர் அருணாசலம் அவர்கள் கூறியுள்ள கருத்தொன்றை ஏடுகளில் படித்தேன்.

திரு. மூப்பனார் அவர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டதையொட்டி மத்திய அமைச்சர் அருணாசலம் சென்னையில் பேசியுள்ளார்.

நம் தேசிய தலைவர் மீண்டும் தமிழகம் வந்திருக்கிறார். இருபது ஆண்டுகளுக்கு முன்பு தமிழகம் தேசிய நீரோட்டத்தை விட்டு விலகிச் சென்றது. மீண்டும் தேசிய நீரோட்டத்தில் தமிழகம் இணையப் பாடுபடுவோம்!

இது மத்திய அமைச்சர் அருணாசலம் அவர்களின் உரை!

அதாவது இருபது ஆண்டுகளாக தேசிய நீரோட்டத்திலிருந்து விலகியிருக்கும் தமிழகத்தை மீண்டும் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப் போகிறார்களாம்!

இருபது ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா அவர்கள் ஆட்சியில் அமர்ந்தவுடன் இருமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார்.

சென்னை ராஜ்யம் என்ற பெயரை மாற்றவே முடியாது என சாதித்துக் கொண்டிருந்த காங்கிரஸ் தலைவர்களின் பிடிவாதத்தைத் தகர்த்து இந்த மாநிலத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார் அதிகாரப்பூர்வமாக!

அண்ணா அவர்களைப் பின்பற்றி கழக அரசு மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி என முழங்கி உண்மையான கூட்டாட்சி தத்துவத்துக்கு உயிர் கொடுக்க வேண்டுமென்று சட்டப் பேரவையில் 1974ல் தீர்மானமே நிறைவேற்றியது!

இவையெல்லாம் தேசிய நீரோட்டத்திலிருந்து விலகிச் சென்ற செயல்கள் என்பது காங்கிரசார் எண்ணம்!

எனவே தமிழகத்தை மீண்டும் தேசிய நீரோட்டத்தில் இணைத்து - அண்ணா அவர்கள் உருவாக்கிய உணர்வுகளைத் தீர்த்துக் கட்ட காங்கிரசார் திட்டம் தீட்டுகிறார்கள் என்பது தெளிவாகிவிட்டது.

உடன்பிறப்பே,

இதில் ஒரு வேடிக்கை பார்த்தாயா; நேற்றுவரையில் எம்.ஜி.ஆர். அவர்களை ஒரு தேசியத் தலைவர் என்றும் - தேசிய நீரோட்டத்தில் தமிழகத்தை இணைத்த பெருமைக்குரியவர் என்றும் - தேசியவாதி என்பதற்காகத்தான் பாரத ரத்னா பட்டமே கொடுக்கப்பட்டதென்றும் இதே காங்கிரஸ் தலைவர்கள்தான் பேசினார்கள்.

எம்.ஜி.ஆர். மறைந்தபோது தொலைக்காட்சியில் இரங்கலுரையாற்றிய ராஜீவ் காந்தி முதல் சகல காங்கிரஸ் தலைவர்களும் (நண்பர் அருணாசலம் உட்பட) எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு தேசியத்தலைவர் என்றே குறிப்பிட்டார்கள்.

ஏன்; பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்கள்கூட; எம்.ஜி.ஆர். மறைவு குறித்து இரங்கல் தெரிவித்திடும் பகுதியில் தேசிய ஐக்கியத்துக்காக பாடுபட்டவர் எம்.ஜி.ஆர். என்று புகழ்ந்திருக்கிறார்.

இவ்வளவுக்கும் பிறகு இப்போது மத்திய அமைச்சர் அருணாசலம் அவர்கள் இருபது ஆண்டுகளாகத் தமிழகம் தேசிய நீரோட்டத்தைவிட்டு விலகி நின்றது என்றால்;

பீம்சிங் இது என்ன புதுக்குழப்பம்?

என்று ஒரு பழைய திரைப்படத்தில் வசனம் பேசப்படுமே - அதுபோல அல்லவோ இருக்கிறது!

எம்.ஜி.ஆர். தேசியத்தலைவர் - தேசியவாதி - தமிழ்நாட்டை தேசிய நீரோட்டத்தில் இணைத்த முதல்வர் - என்று காங்கிரசார் பேசுவது உண்மையானால் 1967ல் அண்ணா ஆட்சிக்கு வந்தபோது ஏற்பட்ட தேசிய நீரோட்ட தடை 1977ல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்தவுடன் உடைபட்டு தேசிய நீரோட்ட வெள்ளத்தில் தமிழகம் மூழ்கிப் போயிருந்தது என்பதுதானே உண்மை! இவர்கள் எம்.ஜி.ஆர். பற்றிக் கூறிய கூற்றின்படி; 67 முதல் 77 வரையில்தானே தேசிய நீரோட்டத்தில் தமிழ்நாடு இணைந்திருக்கவில்லை - பிறகு ஏன் இருபது ஆண்டுகாலமாக தேசிய நீரோட்டம் இல்லை என்ற தப்புக்கணக்கு சொல்கிறார்கள்.

ஓகோ; ஒருவேளை காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர் தமிழகத்தில் இல்லாததால் தமிழகமே தேசிய நீரோட்டத்தில் இல்லை என்று கூறுகிறார்களோ?

காங்கிரசின் உள்நோக்கம்; உடன்பிறப்பே! உனக்குப் புரியுமென்று நம்புகிறேன்!

ஊருக்குப் புரியவைக்க வேண்டியது உன் பணி!

அன்புடன்

மு.க.

24-02-1988

1543. பெருக்கெடுத்தோடும் தேசிய நீரோட்டம்!

உடன்பிறப்பே,

டெல்லி மாநிலங்களவையில் தேசிய நீரோட்டம் பெருக்கெடுத்து ஓடியிருக்கிறது!

இந்திய திருநாட்டின் குடியரசுத் துணைத்தலைவரும் - மாநிலங்களவைத் தலைவருமான திரு. சங்கர் தயாள் சர்மா அவர்களுக்கு திடீரென உடல் நலிவு ஏற்பட்டு டெல்லி மனோகர் லோகியா மருத்துவமனையில் பெரிய டாக்டர்கள் பரிசோதனை செய்து, அவருக்கு ரத்த அழுத்தம் அதிகமாக உள்ளதாகவும் அலட்டிக் கொள்ளாமல் ஓய்வெடுக்குமாறு கூறியிருப்பதாகவும் ஏடுகளில் செய்தி வந்துள்ளது!

மாநிலங்களவையில் காலையில் தேசிய நீரோட்டம் பெருக்கெடுத்து ஓடிய காரணத்தினால்தான் பிற்பகலில் மாநிலங்களவைத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் ரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பது - மாநிலங்களவைச் செய்திகளை விரிவாக வெளியிட்டுள்ள நாளிதழ்களைப் படித்தாலே புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றாகும்!

பிப்ரவரி 23ந் தேதியன்று காலையில் மாநிலங்களவையில் கேள்வி நேரம் தொடங்கியதும் திரு. வாஜ்பேயி அவர்கள் தனது முதல் கேள்வியைக் கேட்க எழுவதற்குள்ளாக ஆளுங்கட்சி உறுப்பினர் ஜகேஷ் தேசாய் என்பவர் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். அதனை எதிர்க்கட்சியினர் மறுத்தனர். இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியே தீர்வதென ஒற்றைக் காலில் நின்றனர்.

கேள்வி நேரத்தின் போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதிப்பது வழக்கமில்லை என்று சங்கர் தயாள் சர்மா தீர்ப்பளித்தார்.

வாஜ்பேயி கேட்ட கேள்வி அமிதாபச்சன் சகோதரர்களைப் பற்றியதாகும்! மத்திய அமல் பிரிவு இயக்குநர் அகமும், வருமானவரித் துறையும் பச்சன் சகோதரர்களுக்கு நமது நாட்டிலும் வெளி நாட்டிலும் உள்ள சொத்துக்கள் பற்றி விசாரணை செய்கின்றனவா என்று தெரிவிக்கும்படி அவர் கேட்ட கேள்வியையொட்டி இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆவேசமுற்றனர். பிரதமர் ராஜீவ் காந்தியின் நண்பர்கள் என்பதால் பச்சன் சகோதரர்களைக் காத்திட முனைகிறார்கள் என்று வாஜ்பேயி கூறியதும் அதை எதிர்த்து மத்திய அமைச்சர்கள் பூட்டாசிங், சிவசங்கர் முதலியோர் உரத்த குரலில் பேசினார்கள். பதிலுக்கு வாஜ்பேயியும், பிரதமரின் நண்பர் என்பதற்காக நான் யாருக்கேனும் உதவி புரிய முடியுமா? என்று ஆவேசமாகக் கேட்டார்.

அடுத்த கட்டம்தான் மாநிலங்களவையில் மிகவும் சூடுபறந்த கட்டமாகும்!

ஆந்திரா மாநில ஆளுநர் வரம்பு மீறி செலவு செய்வது குறித்து மாநிலங்களவையில் கருத்துச் சொல்ல அவைத் தலைவர் சங்கர் தயாள் சர்மா, தெலுங்குதேச கட்சி உபேந்திராவுக்கு அனுமதியளித்தார்.

அதையொட்டி உபேந்திரா பேசத் தொடங்கியதும், பாராளுமன்ற விவகார இணையமைச்சர் ஜேக்கப் அவர்கள் எழுந்து அவையின் விதிமுறைகளைச் சுட்டிக்காட்டி, ஆளுநர் குறித்து அவையில் பேச இடமில்லை என்றார்.

மத்திய நிதியமைச்சர் திவாரி அவர்களும் ஜேக்கப் கருத்துக்கு ஆதரவாக விளக்கமளித்தார்.

ஆளுநர் செலவு குறித்து அந்தந்த மாநில சட்டமன்றங் களில்தான் விவாதிக்க முடியுமென உள்துறை இணையமைச்சர் சிதம்பரம் சுட்டிக்காட்டினார்.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் பலரும் எழுந்து உபேந்திராவை பேசவிடாமல் தடுத்தனர்.

இந்தச் சூழலில் அவைத்தலைவர் சர்மா தலையிட்டு ஒரு விளக்கம் தந்தார்.

அவைக்கு அரசியல் சட்டம் உரிமைகளை வழங்கியுள்ளது. இந்த அவைக்கு பொறுப்பாளி நான்தான். நான் தவறான

முன்னுதாரணம் எதனையும் உருவாக்கவில்லை. மத்திய சட்டத்தில் கண்டுள்ளபடி ஒதுக்கப்பட்ட தொகையை ஆளுநர் செலவழிப்பதை இந்த அவையின் கவனத்துக்குக் கொண்டுவர உறுப்பினர் உபேந்திராவுக்கு உரிமை உள்ளது என்று சங்கர் தயாள் சர்மா குறிப்பிட்டார். அவைத்தலைவரின் கருத்தை இந்திரா காங்கிரசார் ஏற்கவில்லை. உரத்த குரல் எழுப்பி மறுத்தனர். அவைத்தலைவர் சர்மா அந்த எதிர்ப்பை பொருட்படுத்தவில்லை. உபேந்திராவை பேச அனுமதித்தார். உடனே அமைச்சர் சிதம்பரம் எழுந்து, அவைத் தலைவரின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களின் போக்கு காரணமாக ஏற்கனவே ஆந்திர மாநில கவர்னருக்கு பெரும் தவறு விளைவிக்கப்பட்டுள்ளது. உபேந்திராவை பேச அனுமதிக்கா விட்டால் ஏதோ தவறு நடந்துள்ளது என மக்கள் நினைப்பார்கள்.

என்று அவைத் தலைவர் சர்மா அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

ஆனால் அமைச்சர் சிதம்பரமோ, அவைத் தலைவரின் கருத்தை ஏற்காமல் பலமுறை குறுக்கிட்டார்.

சட்டப்படித்தான் உபேந்திரா பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார் இது சர்மா!

அனுமதித்தது அரசியல் சட்டப்படி விரோதமான காரியம் இது சிதம்பரம்!

உங்கள் நடவடிக்கையினால் பிரதமருக்கும் ஆளுநருக்கும் தவறிழைக்கிறீர்கள் இது சர்மா!

உபேந்திராவைப் பேச அனுமதிப்பதின் மூலம் எங்களை மிரட்டப் பார்க்கிறீர்களா? இது சிதம்பரம்!

நீங்கள் செய்வது போல வேறு யாராவது ஒரு உறுப்பினர் செய்திருந்தால் அவர்களை சபையை விட்டே வெளியேற்றி இருப்பேன். எல்லாவற்றுக்கும் ஒரு எல்லை இருக்கிறது இது சர்மா!

உடன்பிறப்பே, அமைச்சர் சிதம்பரத்துக்கும், அவைத் தலைவர் - அதுவும் குடியரசுத் துணைத் தலைவர் - சங்கர் தயாள் சர்மாவுக்கும் எவ்வளவு கடுமையான வாக்குவாதம் பார்த்தாயா?

சங்கர் தயாள் சர்மா, நிதானமான மனிதர்! நேர்மையான தேசியவாதி! நாணயமானவர்! நடுநிலையாளர் எனப் பெயர் எடுத்தவர்!

அவரைப் போன்றவர்களை இன்றைய தேசிய நீரோட்டத்தில் மிதக்கும் தெப்பங்கள் ஏற்றுக் கொள்ளுமா என்ன?

மாநிலங்களவை அமளி, எதிலே போய் முடிந்திருக்கிறது?

இந்திரா காங்கிரஸ்காரர்களைப் பார்த்து சர்மா கூறியது இது :-

இந்த அவையில் நீங்கள் பெரும்பான்மை பலத்தோடு இருக்கிறீர்கள். நீங்களே முடிவு செய்யுங்கள். இந்தச் சூழ்நிலையில் நான் அவைத் தலைவராகத் தொடர்ந்து இருக்கத் தேவையில்லை. நான் இந்தப் பதவியிலிருந்து வெளியேறத் தயார்.

சர்மாவின் இந்த முடிவை எதிர்க்கட்சியினர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவை ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகல் அவை கூடிய போது திரு. உபேந்திரா அவர்கள், ஆந்திர ஆளுநரின் வரம்பு மீறிய செலவு குறித்த தனது கருத்துரையால் அவைத் தலைவருக்கு ஏற்பட்ட சங்கடத்தைக் கருதி, அவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் தனது குறிப்புரைப் பிரேரணையை திரும்பப் பெற்றுக் கொள்வதாகச் சொல்லிவிட்டார்.

மாநிலங்களவையில் இந்திரா காங்கிரசார் பெரும்பான்மையாக இருந்து எதிர்ப்பு தெரிவித்து - அமைச்சர்களும் ஆவேசமடைந்து - அவைத் தலைவரையே ஆளுங்கட்சியினர் தர்ம சங்கடத்துக்கு ஆளாக்கி விட்டதினாலேயே ஆந்திர ஆளுநர் செய்த வரம்பு மீறிய செலவை நியாய புத்தியுள்ளவர்கள் எவரும் ஏற்றுக் கொண்டு விடுவார்கள் என எதிர்பார்ப்பது பெருந்தவறு!

தமிழக சட்டப் பேரவையில் மட்டுமல்ல, மாநிலங்களவையிலும் தேசிய நீரோட்டம் எப்படி பெருக் கெடுத்துப் பிரவாகமாகப் பொங்கியெழுந்து கரை புரண்டோடுகிறது என்பதற்கு நாளிதழ்களில் வந்துள்ள செய்திகளே போதுமான சான்றாகும்.

அன்புடன்

மு.க.

25-02-1988

1544. கண்களை விற்றுவிட்டுக் கவின்மிகு சித்திரம் வாங்குவதோ?

உடன்பிறப்பே,

தமிழகத்தில் தேர்தல் எப்போது வரும் என்று சொல்ல இயலாது.

விரைவில் வரும் என்பதுபோல கட்சிகள் பரபரப்படைந்து பணியாற்றுகின்றன.

ஆளுநர் ஆட்சியின் ஆலோசகர்களாக இரண்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டது போதாமல் -

மூன்றாவதாக மற்றொரு ஆலோசகரும் நியமிக்கப் பட்டுள்ளதைப் பார்க்கும் போதும்;

நாடாளுமன்றத்தில் தமிழக காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசுவதை ஏடுகளில் படிக்கும் போதும்;

தமிழ் ஈழத்தில் இந்திய அரசு நடத்தும் இராணுவ நடவடிக்கையை மேலும் தீவிரமாக்க சுமார் ஒரு லட்சம் இந்தியப் போர் வீரர்களைக் கொண்டு போய்க் குவித்திருக்கும் செய்தியைக் கேட்கும் போதும்;

இந்திரா காங்கிரஸ் பெரும்பாலான தொகுதிகளில் நிற்பது - அல்லது இந்திரா காங்கிரஸ்காரர்தான் முதலமைச்சராக வருவது என்பதற்கேற்ப தொகுதி உடன்பாடு வருகிற வரையில்; சாம, பேத, தான, தண்டங்களைப் பயன்படுத்துவது எனத் திட்டமிட்டுக் காரியமாற்றுவதைக் கவனிக்கும் போதும்;

எல்லாவற்றுக்கும் மேலாக கவர்னரின் ஆலோசகர்களில் ஒருவரான சித்து என்ற சிக்கிய அதிகாரி இப்போது தமிழ் கற்கத் தொடங்கியுள்ளார் என்ற செய்தியைக் கண்ணுறும் போதும்;

கவர்னர் ஆட்சியைப் பயன்படுத்தி காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்திக் கொண்ட பிறகோ அல்லது வலுப்பெற்று விட்டதாக நம்பிய பிறகோதான் தேர்தலை நடத்துவார்கள்.

மற்றபடி பெரியார் பாஷையில் சொல்ல வேண்டுமானால் - ஜனநாயகமாவது; வெங்காயமாவது - அதெல்லாம் ஒன்றும் பார்க்கமாட்டார்கள் இன்று டெல்லியில் உள்ள ஆதிக்கக்காரர்கள்!

ஆண்டு இறுதியில் வருமோ? அடுத்த ஆண்டு வரை தள்ளிப் போகுமோ? அல்லது ஆறு மாதத்திற்குள்ளாக வந்து விடுமோ?

எப்படி வந்தாலும் - எப்போது வந்தாலும்; நாம் நமது ஜனநாயகக் கடமை ஆற்றிட தேர்தல் களத்தில் நின்றுதான் ஆக வேண்டும்.

ஆனால் ஒன்று; தேர்தலில் நிற்பது - வெல்வது - பதவி பெறுவது - என்பனவற்றை மட்டுமே லட்சியங்களாகக் கொண்டு தொடங்கப்பட்டதல்ல இந்த இயக்கம்!

அதற்கும் அப்பாற்பட்டு நமக்கென அரும்பணிகள் பல காத்துக் கிடக்கின்றன.

தமிழ்ச் சமுதாயம் தலை நிமிர்ந்து தன்மானமிக்க சமுதாயமாக வீறு நடை போட வேண்டும் - நமது மொழி, இனம், இலக்கியம், கலாச்சாரம், மரபு, வரலாறு இவை காக்கப்பட ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இன்னும் ஐம்பது ஆண்டு காலத்துக்கு மேற்பட்ட பணி தி.மு.க.வுக்கு இருக்கிறது என;

மூதறிஞர் ராஜாஜி

கண்யத்துக்குரிய காயிதேமில்லத்

கம்யூனிஸ்ட் தலைவர் பி.ஆர்.

ஆகியோர் அமர்ந்திருந்த விருகம்பாக்கம் மாநாட்டு மேடையில் பேரறிஞர் அண்ணா சங்கநாதம் செய்தாரே - அந்தப் பணி தொடரத்தானே அணி திரண்டு நிற்கிறோம்!

அண்ணா வழியில் அயராதுழைப்போம் என நாம் சூளுரை மேற்கொண்டது; ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் என்பதற்கும் - இந்தி ஆதிக்கத்தை என்றும் எதிர்ப்போம் என்பதற்கும் - வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் என்பதற்கும் - மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி

என்ற கொள்கை வெற்றி பெறுவதற்கும் என்பதை மறந்து விட முடியுமோ?

அதனால்தான் நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும் இந்த லட்சியங்களின் அடிப்படையில் செயல்பட்டோம்!

அறிஞர் அண்ணா அறிவுறுத்திய கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு அடிப்படையில், அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர் திருத்தப் பணி ஆற்றிடவும், பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று, சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும், பிற மொழி ஆதிக்கத்துக்கு இடங்கொடாமல் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும், அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும், மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநிலங்களில் சுயாட்சியும் மத்தியில் கூட்டாட்சியும் (Autonomy for States Federation at Centre) உருவாகிடவும் தொண்டாற்றுவது

இவ்வாறு கழகத்தின் கொள்கை கோட்பாடுகளும் சட்ட திட்டங்களும் எழுதப்பட்டுள்ள புத்தகம் கோடிட்டுக் காட்டிடும் மேற்கண்ட வாசகங்களை என்றைக்குமே நாம் விட்டுக்கொடுத்து எவரிடமும் சமரசம் செய்து கொண்டவர்கள் அல்ல!

அப்படி நாம் இருந்திருந்தால் 1976ல் ஆட்சி கலைக்கப் பட்டதற்கு பதிலாக - மேலும் ஓராண்டுக்கு ஆட்சி நீட்டிப்பு கூட நமக்குத் தரப்பட்டிருக்கும்! ஐநூறுக்கு மேற்பட்ட கழக உடன்பிறப்புகள் மிசாக் கைதிகளாக ஓராண்டுக் காலம் வாடியிருக்கத் தேவையில்லை! சென்னை சிறைச்சாலையில் நமது கண்மணிகள் சித்ரவதைக்கு ஆளாகியிருக்க மாட்டார்கள்! சிங்கத்தம்பி சிட்டிபாபுவையும் பகுத்தறிவுப் பெட்டகம் சாத்தூர் பாலகிருஷ்ணனையும் சிறைக் கோட்டத்தில் பலி கொடுத்திருக்க வேண்டியதில்லை!

கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 18 ஆண்டுக் காலம் எதிர்க்கட்சியாக இருந்து; தான் கொண்டுள்ள கோட்பாடுகள் நிறைவேற வேண்டுமெனப் போராடியது!

ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகும் சிலவற்றை செயல்படுத்தியது - செயல்படுத்திட வேண்டியவைகளுக்கு

மத்திய அரசுடன் வாதாடியது! உரிமைக் குரல் கொடுத்தது! போராடியும் அடக்குமுறைகளை ஏற்றுக்கொண்டது!

ஆட்சியில் இல்லாத கடந்த பனிரெண்டு ஆண்டுக் காலத்தில், ஆட்சியில் இருந்தவர்களாயிற்றே என்ற கடந்த கால அந்தஸ்தை எண்ணிப் பாராமல் - தமிழ் மொழி, தமிழ் இனம் பாதுகாக்கப்படவும், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் - சாதாரண சாமானிய நடுத்தர மக்கள் - சிறுபான்மையோர் - நல உரிமைகள் பாதிக்கப்படாமல் காத்திடவும் பல்வேறு அறப்போர்க்களங்கள் கண்டு லட்சக் கணக்கானோர் சிறையில் அடைபடுகிற அளவுக்கு, தனது லட்சியப் பிடிப்பை நிலைநிறுத்தியுள்ளது.

எனவேதான்; தியாகம் புரிவதையும் பதவியில் அமர்வதையும் - இரண்டையும் சமமாகக் கருதுகிற நெஞ்சுரம் படைத்தோர் பாசறையாகத் தி.மு.க. திகழ்கிறது!

தேர்தல் - அதன் மூலம் கிடைக்கிற பதவி - அது; பணியாற்றக் கிடைக்கிற வாய்ப்பே தவிர - பவிஷு உயர்த்தும் வரப்பிரசாதமல்ல!

கண்களிரண்டையும் விற்றுவிட்டுக் கவின்மிகு சித்திரம் வாங்குவது போல, கொள்கைகளை இழந்துவிட்டு கோட்டைக் கொலுவில் அமர வேண்டுமெனக் கழகம் என்றைக்கும் எண்ணியதில்லை!

உடன்பிறப்பே, இந்த உறுதியுடன்தான் நாம் தமிழகத் தேர்தலை - அப்படியொன்று வருமேயானால் - அது தாமதமாகவோ, அல்லது விரைவிலோ நடத்தப்பட்டால் எதிர் கொள்ள வேண்டுமேயல்லாமல் ....

அதற்கெனப் பரபரப்பு அடையத் தேவையில்லை! இதையேன் நான் சுட்டிக்காட்ட வேண்டிய நிலை எழுந்தது என்றால் - ஒரு சில இடங்களில் இவர்தான் இல்லை இல்லை அவர்தான் என்று வேட்பாளர்கள் அடையாளம் காட்டப்படுவதாக என் காதுக்குச் சில செய்திகள் வந்தன!

தோழமைக் கட்சிகளுக்கு உடன்பாட்டின்படி அமைகிற தொகுதிகள் போக கழகத்திற்கென ஒதுக்கப்படும் தொகுதிகளில் யார் வேட்பாளர் என்ற கேள்வியே கிளம்பிடக் கூடாது!

அவ்வாறு ஆங்காங்கு யாரும் வேட்பாளர்களை அறிவிப்பதெனில் தலைமைக் கழகம் ஒன்று தேவையே இல்லை!

பிப்ரவரி 2 - சென்னை பொதுக் குழுவில் நான் குறிப்பிட்டது நினைவிருக்கிறதா?

அந்தத் தொகுதிகளில் எல்லாம் அண்ணா தந்த உதயசூரியன் சின்னம்தான் வேட்பாளர்!

உடன்பிறப்பாம் செயல் வீரர்கள் அனைவரும் யார் வேட்பாளர் என்று பெயர் அறிவிக்கப்படும் என்று காத்திருக்கத் தேவையில்லை!

இதோ மீண்டும் ஒருமுறை அறிவித்துவிட்டேன், உதயசூரியன் சின்னம் தான் வேட்பாளர்!

வர இருக்கும் பொதுத் தேர்தல் குறித்துச் சொல்லி விட்டேன்.

நடந்து முடிந்த நமது கழகத் தேர்தல் குறித்தும் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

அமைப்புகளின் தேர்தல்களில் பொறுப்புக்கு வந்தோர் அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் -

அமைப்புத் தேர்தல்களில் பொறுப்புக்கு வர இயலாதோர் அமைப்புக்குக் கட்டுப்பட்டு நடந்திடல் வேண்டும் -

உட்கட்சித் தேர்தல்களில் வென்றோர் வென்றிடாதோர் அனைவரும் எனது அன்பு உடன்பிறப்புகளேதான்! அவர்களும் ஒருவருக்கொருவர் உடன்பிறப்புகள் என்ற உணர்வோடு - பகையெனும் புகை நெஞ்சில் படராமல் - ஆங்காங்கு கழகப் பாசறைகளின் காவல் அரண்களாக விளங்கிட வேண்டும்!

ஆட்சியில் அமர வேண்டும் என்ற துடிப்பு, உணர்வு, அனைவர்க்கும் இயல்பான ஒன்று!

ஆனால் இன்று அதைவிட முக்கியமாக உருவாக்க வேண்டியது மக்களிடையே அரசியல், சமுதாய, பொருளாதாரத்துறையில் விழிப்பு உணர்வு என்பதை நினைவில் நிறுத்திச் செயல்பட்டால்தான் தமிழகத்தில் நிலையான நல்லொளி உதயமாகும். அதுவே என் ஆசை!

அன்புடன்

மு.க.

26-02-1988

1545. கைத்தறியாளர் கண்ணீர் துடைப்போம்!

உடன்பிறப்பே,

நெசவாளர்களின் துயர் துடைப்பதில் இன்று நேற்றல்ல; 1953ஆம் ஆண்டு முதல் தி.மு.கழகத்துக்கு தனி அக்கறையும் ஆர்வமும் உண்டு. தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளால், பூனை தூங்கிக் கிடக்கும் அடுப்படியில் அழுதழுது கண்கள் வீங்கிக் கிடந்த நெசவாளிகளின் இன்னல் போக்கிட அண்ணா அவர்களும் கழக முன்னணியினரும் கைத்தறித் துணிகளைத் தெருத் தெருவாக விற்றோம் 1953ஆம் ஆண்டு ஜனவரி நாலாம் நாளன்று!

அண்ணா அவர்கள் திருச்சி நகர வீதிகளில் கைத்தறி ஆடைகளை விற்ற அதே நாளில் தமிழக முழுதும் ஆயிரக்கணக்கான கழகத்தினர் கைத்தறி விற்றனர். செந்தமிழ் நாட்டுக் கைத்தறி சேலை வேட்டிகள் வாங்குவீர்; நந்தமிழ் நாட்டு நெசவாளர் வாழ்வு சீர் பெற்றோங்கவே வாங்குவீர்! என்று உடுமலை நாராயணக் கவிராயர் எழுதிய பாடலை நண்பர் செல்ல முத்து பாடிய சென்னை தெருக்களில் நான் கைத்தறித் துணிகளை விற்ற அந்த நாள் இன்னும் என் நெஞ்சில் பசுமையாக நிழலாடிக் கொண்டிருக்கிறது.

வேறு எந்தத் தொழிலையும் கற்றுக் கொள்ளாமல் சுமார் முப்பது லட்சம் பேர் நெசவாளப் பெருங்குடி மக்கள் கைத்தறித் தொழில் ஒன்றையே நம்பி வாழ்நாளைக் கடத்த வேண்டியிருப்பதால் அந்தக் குடும்பங்களின் குமுறலை அடக்கிடவும் - கண்ணீரைத் துடைத்திடவும் - நாம் கைகொடுத்திட வேண்டும் என்பதற்காகவே கழகத்தினர் அனைவரும் கைத்தறி ஆடைகளையே உடுத்த வேண்டுமென முடிவெடுத்தோம். அன்று எடுத்த முடிவின்படிதான் இன்றைக்கும் கைத்தறி ஆடைகளையே உடுத்துகிறோம்.

1952 - தஞ்சைப் புயல் நிவாரண நிதிக்கு என்னைத் தலைவனாகக் கொண்ட குழு ஒன்றை அண்ணா அவர்கள் பொதுக்குழுவில் அறிவித்தார்கள். நிவாரண நிதிக்கு அந்தக் காலத்தில் முப்பதாயிர ரூபாய் திரட்டப்பட்டு; அந்த ரூபாய் முழுமைக்கும் கைத்தறி துணிகளே வாங்கி பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு நெசவாளர்களுக்கு வேதனை வந்த போதெல்லாம் அவர்கள் சிறிது நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்ளக் கழகம் தன்னாலியன்ற கடமையைத் தொடர்ந்து செய்தே வருகிறது.

கழக ஆட்சிக் காலத்திலே நெசவாளர் குடும்பங்களுக்கு நிவாரணக் கடன் தொகையாக வழங்கப்பட்டிருந்த ஒரு கோடி ரூபாயைக்கூட அப்போது கழக ஆட்சி ரத்து செய்துவிட்ட நிகழ்ச்சியை யாரும் மறந்திருக்க முடியாது.

தேங்கிக் கிடக்கும் கைத்தறியை கோவாப்டெக்ஸ் மூலம் வாங்குவதற்கு அரசே நிதி உதவி செய்தது கழக ஆட்சியில்!

கைத்தறி இயக்குநர் நூற்பாலைகளில் இருந்து நூலை வாங்கி பிரதமக் கூட்டுறவு நெசவாள சங்கங்களுக்குத் தேவையான நூலைக் கொடுத்துவிட்டு, மீதியைத்தான் வெளிச்சந்தையில் விற்க வேண்டுமென கழக ஆட்சியில் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அமைச்சர்களை மாவட்டந்தோறும் அனுப்பி மாவட்ட ஆட்சித் தலைவரின் துணையோடு; தேங்கிக் கிடந்த கைத்தறி ஆடைகளை விரைவாக விற்பனை செய்ய வழி வகை காணப்பட்டது.

கரை போட்ட வேட்டி சேலைகளைக் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமென்று கழக ஆட்சிக் காலத்தில் சட்டப் பேரவையில் தீர்மானமே நிறைவேற்றப்பட்டது.

ஆனால் என்ன காரணத்தாலோ மத்திய அரசில் இருப்போர், நெசவாளர்களின் கோரிக்கைகளையோ - அந்தக் கோரிக்கைகளுக்காக நம்மைப் போன்ற இயக்கத்தினர் அளிக்கும் பரிந்துரைகளையோ - செவியில் போட்டுக் கொள்வதேயில்லை.

இப்போது வெந்த புண்ணில் வேல் சொருகுவதுபோல ராஜீவ் காந்தியின் புதிய ஜவுளிக் கொள்கை அமைந்து விட்டது. நாடு முழுதும் விவசாயத்துக்கு அடுத்ததாக மிகப் பெருந்தொழில் நெசவுத் தொழில் என்பதை யாரும் மறுக்க முடியாது. 1985ஆம்

ஆண்டு 97 ஆயிரம் பேர் வேலையிழந்திருந்த நெசவாளர்கள் என்றால் ராஜீவின் புதிய ஜவுளிக் கொள்கையினால் 1987 ஆம் ஆண்டு கணக்குப்படி வேலையிழந்துள்ள நெசவாளிகள் ஒரு கோடியே இருபத்தேழு லட்சம் பேர்!

தமிழ்நாட்டில் மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்படவில்லை.

இது தவிர சேலம், ஈரோடு, குமாரபாளையம், கரூர், பள்ளிப்பாளையம், பவானி, காஞ்சிபுரம், சின்னாளப்பட்டி போன்ற பல்வேறு பகுதிகளில் உள்ள லட்சக்கணக்கான விசைத்தறிகள் வேலையின்றி மூடப்பட்டு நெசவாளத் தொழிலாளர்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

கைத்தறிக்கான துணைத் தொழில்கள் எனப்படும் சாயம் போடுதல், சலவை செய்தல், துண்டு முடிதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டுள்ள இரண்டு லட்சம் பெண் தொழிலாளர்கள் உள்ளிட்ட லட்சக்கணக்கானோர் வேலையின்றி வாடிக் கிடக்கின்றனர்.

இருபதுக்கு மேற்பட்ட தனிப்பட்ட முதலாளிகட்கு 750 கோடி ரூபாயை அரசாங்கமே கொடுத்து, இந்தியாவில் உற்பத்தியாகும் நூல்களை வெளிநாடுகளுக்கு தாராளமாக ஏற்றுமதி செய்ய அங்கீகாரம் வழங்கிவிட்டதால் - நூலின் விலை 50 சதவிகிதம் ஏறியது!

இந்த விலையேற்றத்தினால் விளையும் ஆதாயம் பருத்தி உற்பத்தியாளர்களுக்குப் போய்ச் சேர்ந்ததா எனில் அதுவுமில்லை!

சிலர் கொழுப்ப - பலர் மாய்ந்திடும் நிலைதான்!

நூலின் விலையேற்றத்தால் இங்குள்ள நெசவாளர் திண்டாடும் பொழுது, நூல் ஏற்றுமதியின் அளவு 4 கோடி கிலோவிலிருந்து 6 கோடி கிலோவாக உயர்ந்துவிட்டது!

இப்படிப் பலவகையிலும் பாதிக்கப்பட்டுள்ள நெசவாளர்கள்; ஓரளவு ஆறுதல் பெறுவதற்காவது - அவர்கள் வைத்துள்ள கோரிக்கைகளை மத்திய மாநில அரசுகள் நிறைவேற்றிட முன் வர வேண்டும்.

கழகப் பொதுக்குழு, நிர்வாகக் குழு தீர்மானங்கள் மூலம் நெசவாளர் பிரச்சினை மத்திய மாநில அரசுகளின் கவனத்திற்குக் கொண்டு போகப் பட்டுள்ளது.

மாநிலங்களவையிலும் கழக உறுப்பினர் தம்பி டி.ஆர். பாலு, நெசவாளர் சீரழிவு குறித்து விரிவாகப் பேசியுள்ளார்.

பிப்ரவரி 16ல் நடைபெற்ற கழக நிர்வாகக் குழுவின் முடிவின்படி மார்ச் முதல் நாள் தமிழக முழுதும் அரசு அலுவலகங்களுக்குக் கழகத்தினர் பேரணி சென்று, அறவழி ஆர்ப்பாட்டங்கள் நடத்த இருக்கிறார்கள்.

நமது பேராசிரியர் தலைமையில் காஞ்சியில் பேரணி ஊர்வலமும் - அரசு அலுவலகத்தின் முன்னால் அறவழி ஆர்ப்பாட்டமும்!

நமது பொருளாளர் சாதிக், புவனகிரியில்!

நமது நாஞ்சிலார் கோவையில்!

மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் இடங்கள் தொடர்ந்து அறிவிக்கப்படும்.

நான் மார்ச் 1ஆம் நாள் சேலம்! சேலம் மாவட்ட முழுதும் காலையில் பல இடங்களில் பேரணிகள் - ஆர்ப்பாட்டங்கள்!

மாலையில் சேலம் நகரில் என் தலைமையில் பேரணி!

கைத்தறி நெசவாளர்களுக்கான கடமையை 1953 முதல் ஆற்றி வருகிறோம்! தொடர்ந்து ஆற்றிடுவோம்!

அன்புடன்

மு.க.

27-02-1988

1546. கடந்து வந்த பாதையை கண்டிடுக!

உடன்பிறப்பே,

நேற்று எழுதிய கடிதத்தில் 1953ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் நாலாம் நாளன்று தமிழக முழுதும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்து, நெசவாளர்களின் கண்ணீரைக் கழகத்தினர் துடைத்தனர் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா; அந்த ஆண்டு சென்னையில் பச்சையப்பன் திடலில் நடைபெற்ற திராவிடர் திருநாள் விழாவினையொட்டி பெரியவர் காஞ்சி மணிமொழியாரின் போர்வாள் இதழ் ஒரு மலர் வெளியிட்டிருந்தது. அந்த மலரை இன்று நாகர்கோயில் நண்பர் அப்துல் ரசாக் என்னிடம் தந்தார். அம்மலரில் வெளிவந்த மறைந்த தலைவர் என்.வி.என். அவர்கள் பேச்சின் ஒரு பகுதியை கோடிட்டுக் காட்டுகிறேன்.

சொல்லளவில் மட்டுமல்ல, செயலளவில் செய்து காட்டினோம். ஜனவரி 4ந் தேதியன்று சென்னையிலே கருணாநிதி, திருச்சியிலே அண்ணா, காஞ்சியிலே நடிப்புப் புலவர் இராமசாமி, மதுரையிலே சிற்றரசு, கோவையிலே சம்பத், காரைக்குடியிலே நெடுஞ்செழியன், விருதுநகரிலே ஆசைத்தம்பி மற்றும் பல ஊர்களில் எல்லாம் கழகத் தோழர்கள் கைத்தறித் துணியை விற்றார்கள். ஒருநாளில் ஏறத்தாழ லட்ச ரூபாய் துணிகளை வியாபாரம் செய்தோம்.

அந்த விழாவில் இறுதியாகப் பேசிய அண்ணா அவர்கள் கைத்தறி பற்றிக் கூறியது இன்றைக்கும் நமது நினைவில் நிற்க வேண்டியதாகும்.

நான் அணிந்திருப்பது கைத்தறிதான்! ஒவ்வொரு தோழரும் இனி கைத்தறி துணியையே வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொங்கல் நாளன்று நம் தாய்மார்கள் உடலிலே மில் துணிகள் இருக்கக் கூடாது. கைத்தறி புடவைகளையே வாங்க வேண்டும். ஒரு கஜம் மில் துணி வாங்கினால் பத்து நெசவாளிகளை நாம் கொலை செய்ததற்கு ஒப்பாவோம் என்பதை

மனதிலிறுத்திக் கொள்ள வேண்டுகிறேன். கலங்கிக் கண்ணீர் வடிக்கும் கைத்தறியாளர்களைக் காப்பதுதான் நம் கடமை.

1953 ஜனவரி பொங்கல் விழாவில் சென்னை பச்சையப்பன் திடலில் அண்ணா விடுத்த வேண்டுகோள் இது!

முப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த விழாவில் அண்ணா உரையாற்றும் காட்சியை இதோ இந்தப் படத்தில் காணுகிறோம்.

உடன்பிறப்பே, நமது அண்ணன் அன்றைக்கு வாலிபமுறுக்குடன் மேடையில் நின்று தென்றலாக வீசியதையும் - புயலாகச் சீறியதையும் - நேரில் கண்டு மகிழ்ந்தவர்கள் நிறைந்துள்ள பாசறையன்றோ நமது கழகப் பாசறை! எத்துணைக் கடும் உழைப்புக்குப் பிறகு தியாகத்துக்குப் பிறகு - இன்றும் இந்தக் கழகம் கட்டுக் கோப்புடன் கூடிய ஜனநாயக முகாமாகத் திகழ்கிறது என்பதை எண்ணிப் பெருமையடைந்திட இது போன்ற பழைய நாள் படங்கள், நிகழ்ச்சிகள் பெரிதும் உதவுகின்றன அல்லவா?

இன்று பளபளப்பாகத் தெரியும் சாலையை அமைத்திட - அன்று கண்ணீர் வடித்தோர், குருதி கொட்டியோர், கால் கொப்பளிக்கும் வெயிலில் கல் சுமந்தோர், காடுமேடு திருத்தியோர், எத்தனை பேர்?

பொற்றுகளை - கடல்முத்தை - மணிக்குலத்தை போய் எடுக்க அடக்கிய மூச்சு எவரின் மூச்சு?

என்று கேட்டாரே பாவேந்தர்; அந்த உழைப்பாளிகளின் பெரும்பணியினாலன்றோ; இன்றைக்குப் பொன்னாய் முத்தாய் மணியாய் மதிக்கப்படும் நமது கொள்கைகள் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன!

அண்ணன் பேசிய அதே மேடையில் அதே விழாவில் உரையாற்றுகிற இந்த மெல்லிய உருவத்துக்குரியவர் யார் தெரிகிறதா?

படத்தை உற்றுப்பார்! நமது பேராசிரியர், ஆம், நமது பொதுச்செயலாளர் என்பது விளங்கிடும். எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு? முப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1953ல்!

பேராசிரியரையும் நாவலரையும் திருவாரூரில் முரசொலி இதழ் ஆண்டு விழாவுக்கு நான் அழைத்துக் கூட்டம் போட்டது 1942ல்!

அதற்கு முன்பே 1937-38ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவர் அணிக்குத் தலைமையேற்று புலி, வில், கயல் பொறித்த தமிழ்க் கொடியேந்திக் களம் கண்ட வரலாறு என்னுடையது!

எனவே இன்று கழகத் தலைவராகவும் பொதுச் செயலாளராகவும் பொறுப்பேற்றுள்ள நானும் பேராசிரியரும் தலைமைக் கழகத்தினர் பலரும் கழகத்தின் தளகர்த்தர்கள் பலரும் ஏறத்தாழ இந்த இயக்கத்தில் ஐம்பது ஆண்டுக் கால வரலாற்றில் இடம் பெற்றவர்கள்.

இன்று கழகத்தில் புதுவெள்ளம் பாய்கிறது! பழைய வெள்ளம் அதனை வரவேற்கிறது! இளைய தலைமுறையை இரு கையேந்தி மூத்த தலைமுறை அழைக்கிறது!

வெள்ளம் பெருகுவதால் - கரை உயர்த்தப்படுவது போல; கழகத்தின் கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் காத்திட முனைதல் இயல்பு! மூத்தோர்க்கு இளையோர் காட்டும் மரியாதை; இளையோரிடம் மூத்தோர் காட்டும் வாஞ்சை; இரண்டும் இணைந்திடில் வெள்ளம் எவ்வளவு பெருகிடினும் கரையுடையாது, கட்டுப்பாட்டுடன் கொள்கைப் பயிர் வளர்க்கக் கழகக் கழனியில் பாய்ந்துவளமாக்கிடும்!

இளையோராய் இருந்த நாங்கள் இன்று மூத்தோர்!
இன்றைய இளையோர் நாளைக்கு மூத்தோர்!

உடன்பிறப்பே; போர்வாள் மலரில் என்னைப் பார்க்க வேண்டாமா நீ? இதோ இந்த படத்தைப் பார்!

1953 ஜனவரி 4ஆம் நாள் சென்னை பிராட்வே எனும் சாலையிலிருந்து தொடங்கி கைத்தறித் துணிகளை நான் விற்பனை செய்து கொண்டு வீதி வீதியாகப் போன போது எடுத்த படம்!

நடுவில் நிற்பது நான்! என் வலப்புறம் உயரமாக இருப்பவர் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த வீரர் மறைந்த நண்பர் கண்ணபிரான்! வேனின் மேலமர்ந்து பாடுகிறவர்

(வலப்புறம்) நண்பர் கே.ஆர். செல்லமுத்து (உடுமலைக் கவிராயரின் மாணவர்).

பழைய படங்கள்! பழைய நிகழ்ச்சிகள்! பழைய நினைவுகள்!

ஆனால் இன்றைக்கும் பயன்படக் கூடியவை!

அதனால்தான் அன்று அண்ணா காட்டிய வழியில் இன்று நெசவாளர்களைக் காத்திட மார்ச் 1ந் தேதி தமிழக முழுதும் பேரணிகளையும் அறவழி ஆர்ப்பாட்டங்களையும் நடத்துகிறோம்!

கடந்து வந்த பாதையை ஒரு முறை திரும்பிப் பார்த்து - மேலும் கடக்க வேண்டிய பாதையில் கம்பீர நடை போடுமாம் சிங்கம்!

அன்புடன்

மு.க.

28-02-1988

1547. முரட்டுத்தனம் - முதிர்ச்சியற்ற அணுகுமுறை!

உடன்பிறப்பே,

முரட்டுத்தனம் - முதிர்ச்சியற்ற அணுகுமுறை - இவற்றை முதலீடாக வைத்தே இந்தியப் பிரதமர் ராஜீவ் அவர்களின் பரிபாலனம் நடைபெறுகிறது என்பதற்கு அண்மையில் மாநிலங்களவை நிகழ்ச்சி குறித்து கமலபதி திரிபாதி போன்ற பழம்பெரும் தேசியத் தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களே போதுமான சான்றுகளாகும். சங்கர் தயாள் சர்மா போன்ற நிதானமும் அனுபவமும் தியாக வரலாற்று முத்திரையும் கொண்டவர்களைக்கூட மனம் புண்பட்டு நோகுமளவுக்கு மத்திய அமைச்சர்கள் ஒரு பிரதமரால் தூண்டி விடப்பட்டார்கள் என்கிறபோது - தமிழ்நாட்டு அரசியல்மட்டுமல்ல; இந்தியத் திருநாட்டின் அரசியலே எங்கே போய்க் கொண்டிருக்கிறது என வேதனைப்படாமல் இருக்க முடியாது.

அரசியல் அனுபவக் குறைவாலும் - அவசர முடிவுக்கும் விரைவான முடிவுக்கும் வித்தியாசம் தெரியாத காரணத்தாலும் - விபரீத விளையாட்டுக்கள் பல கடந்த நாலைந்து ஆண்டுக் காலமாக; தலைவிரி கோலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அரை வேக்காட்டுத்தனமான முடிவுகளின் பட்டியல்; ராஜீவ் நிர்வாகத்தில் நீண்டு கொண்டே போகிறது.

ஏழு மாத காலத்தில் பஞ்சாப் மாநிலத்தில் எழுநூறு பேர் படுகொலைக்கு ஆளாகியுள்ளனர்; அதாவது ராஜீவ் - லோங்காவால் ஒப்பந்தம் போடப்பட்ட பிறகு!

ஐந்து மாத காலத்திலே மட்டும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்களும் - விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளும் - சுமார் ஆயிரம் பேர் இந்திய ராணுவ வீரர்களும்

தமிழ் ஈழத்தில் உயிர் இழந்திருக்கிறார்கள்; கொழும்பு ஒப்பந்தம் ஆன பிறகு!

இந்தியாவில் உள்ள அரசியல் தலைவர்களும், தமிழக மக்களும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் நாளொன்றுக்கு சுமார் பத்து கோடி ரூபாய் செலவிட்டு, இந்தியப் படையை தமிழ் ஈழத்தில் மனித வேட்டை நடத்த; ராஜீவ் அரசு எல்லாவித சுதந்திரமும் அளித்த காரணத்தால் - இன்றைக்கு தேவையற்ற சிக்கலை உருவாக்கிக் கொண்டு உடும்பு வேண்டாம் கையை விட்டால் போதும் என்று கதறியவனின் நிலைக்கு ஆளாகியிருக்கிறது!

திலீபன் என்ற இளைஞன் உண்ணா விரதமிருந்தபோது - அவன் என்ன அண்ணல் காந்தியடிகளோ - என ஏளனம் செய்தது இந்திய அரசு! அரசின் ஊது குழாய்களான தொலைக்காட்சியும் வானொலியும் திலீபனைக் கேலி செய்தன! ஆனால் தண்ணீர்கூட அருந்தாமல் அந்தத் தமிழ்க்காளை உண்ணா நோன்பிருந்து இறுதியில் உயிர் நீத்தான்.

இப்போது எட்டு நாட்களுக்கு மேலாக தமிழ் ஈழத்தில் அன்னம்மாள் டேவிட், நேசம்மா வடிவேலு என்ற தமிழ்த் தாய்மார்கள் உண்ணா நோன்பு மேற்கொண்டு - கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகச் செய்திகள் வருகின்றன!

அவர்களது கோரிக்கை; இந்திய அரசு போர் நிறுத்தம் செய்துவிட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்பதுதான்!

அந்தத் தமிழ் வீராங்கனைகளைப் பற்றி இந்தியத் தூதர் தீட்சித் என்ன சொல்லுகிறார்? ராஜீவ் அரசின் தூதர் அல்லவா என்ன சொல்லுவார்!

அவர் சொன்னதை தொலைக்காட்சியில் கேட்டு துடித்துப் போனேன்! அடப்பாவி! என்று என்னையறியாமல் என் உதடுகள் முணுமுணுத்தன!

வயது முதிர்ந்தவர்கள் - நோயாளிகள் யாராவது கிடைத்தால் அவர்களைப் பிடித்து உண்ணாவிரதம் இருக்கச் செய்கிறார்கள் விடுதலைப் புலிகள்!

இப்படியொரு கருத்தை உதிர்த்திருப்பவர் இந்தியத் தூதர்!

நான் கேட்கிறேன்; இதுதான் அரசியல் பண்பாடுமிக்க அணுகுமுறையா?

அன்னம்மாவுக்கும் நேசம்மாவுக்கும் வயது ஐம்பது அல்லது ஐம்பத்தி ஐந்துதான்!

அது ஒன்றும் முதிர்ந்த வயதல்ல; தளர்ந்த வயதுமல்ல!

ஆனாலும் இந்தியத் தூதர் தீட்சித் கேலி பேசுகிறார் - சாவின் முனையில் நிற்பவர்களைப் பார்த்து!

ஏன்; வயது முதிர்ந்தோர் எனில் உண்ணா நோன்பு கடைப்பிடித்துத் தங்கள் கொள்கை வெற்றியடைய அறப்போர் நடத்தியது கிடையாதா?

உத்தமர் காந்தியடிகள் உண்ணா நோன்பு மேற் கொண்டபோது அவருக்கென்ன வயது இருபதா? இருபத்தி ஐந்தா?

ஆந்திர மாநிலம் பிரிய வேண்டுமென உண்ணா நோன்பிருந்து உயிர்விட்ட பொட்டி ஸ்ரீராமுலு பதினாறு வயது இளைஞரா?

சென்னை ராஜ்யம் என்ற பெயரை தமிழ்நாடு என மாற்ற வேண்டுமென காங்கிரஸ் ஆட்சியில் உண்ணா விரதமிருந்து உயிர் நீத்த சங்கரலிங்க நாடார் என்ன வாலிபரா? இளைஞரா? வயோதிகர் அல்லவா?

உணர்வுகளுக்கு மதிப்பு -

கோரிக்கையின் நியாயம் -

மனிதாபிமானம் -

இவைகுறித்த சிந்தனைகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு - ஆட்சியும், அதிகாரமும் கையில் இருக்கிறது; எதையும் செய்வோம் - எதையும் பேசுவோம் என்று செயல்பட்டால்;

எதிர்காலச் சரித்திரம்

ஏசிப் பேசிடும்!

இதனையோர் எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ளா விட்டால்; முரட்டுத்தனமும், முதிர்ச்சியற்ற அணுகுமுறையும் - அரசியலில் ஊனமுற்ற நிலைக்கு ஆளாக்கிவிடும்!

அன்புடன்

மு.க.

29-02-1988

1548. நித்தநித்தம் குவியும் பெருநிதி!

உடன்பிறப்பே,

நாள்தோறும் கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்ந்து கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொரு பொதுக் கூட்ட நிகழ்ச்சியிலும் நமது கழக முன்னணியினர் முன்னிலையிலும் - சென்னையில் தலைமைக் கழக அலுவலகத்திலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், இளைஞர்கள், பெரியோர்கள், தாய்மார்கள், மாற்றுக் கட்சி முகாம்களிலிருந்தும் - புதிதாகவும் தங்களைக் கழகத்தில் இணைத்துக் கொள்ளும் செய்தி வந்த வண்ணமிருக்கிறது!

கிலி படைத்த நெஞ்சினாய் போ! போ! போ! என்ற பாரதியின் பாட்டை ஒரு காலத்தில் நினைத்துக் கொள்ள வேண்டியிருந்தது!

இந்தியாவில் எமர்ஜன்சி அறிவிக்கப்பட்டபோது இந்தியாவின் தென்கோடி முனையில் தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க. ஒன்றுதான் முதன்முதலாக செயற்குழுவைக் கூட்டி, இந்திரா காந்தி அம்மையாரின் எமர்ஜன்சி பிரகடனத்தை எதிர்த்து - அதனைத் திரும்பப் பெறுமாறு முழக்கமிட்டது! அதனால் மிகக் கடுமையான விளைவுகளை கழகம் சந்தித்ததே, அப்போது பெரும் பெரும் தூண்கள் எல்லாம் கழகமெனும் மண்டபத்திலிருந்து கழன்று கொண்டு ஓடிவிட்டன. எமர்ஜன்சியை எதிர்த்ததன் விளைவு ஆட்சியை இழந்து, மிசாக் கொடுமையை அனுபவித்து, தேர்தல்களிலும் தோல்வி கண்டு நின்ற நிலையில்தான் அந்தத் தூண்கள் கழக மாளிகைக்குத் தோள் கொடுக்க அஞ்சித் தொலைவில் ஓடின! வேறு மண்டபங்களில் போய்த் தொத்திக் கொண்டன! அவற்றை நான் தூசுகள் எனத் தூற்றிட மாட்டேன்! தூண்களே தான்! எனினும் துவண்டுவிட்டன!

கிலி பிடித்த நெஞ்சினாய் போ! போ! போ! என என் இதய இதழ்கள் முணுமுணுத்தாலும், இனி இந்த மாளிகையை விழாமல்

தூக்கி நிற்பது யார்? நம்மாலே மட்டும் இயலுமா, என நானும் நமது பேராசிரியரும் எம்மோடு இருந்த முன்னணித் தளகர்த்தர்களும் ஒருக்கணம் யோசித்தபோது, இதோ நாங்கள் இருக்கிறோம் என்று முழங்கி - மண்டபம் தளர்ந்து விழாமல் இலட்சக்கணக்கான தலைகளை உயர்த்தி முட்டுக் கொடுத்து நிறுத்திய உன் போன்ற உடன்பிறப்புகளை - அப்போது நான்,

ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா!
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா! வா!

என்று - அதே பாரதியின் பாட்டைப் பாடி வாஞ்சையுடன் அழைத்தேன்!

வந்தாய், உடன்பிறப்பே! வரிசை வரிசையாய் வந்தாய்! அருகிலுள்ள காஞ்சியிலிருந்தும் வந்தும் அன்பைக் கொட்டினாய்! தொலைவிலுள்ள குமரியிலிருந்தும் வந்தும் வாழ்த்துக் குவித்தாய்!

அன்பகத்துக்கு பேருந்துகளில் கூட்டம் கூட்டமாக வருவாய் - இல்லத்துக்குத் திரள் திரளாக வருவாய் - ஐந்து, பத்து என்று வழக்கு நிதி வழங்குவாய்! அப்படி நீ ஓராண்டுக் காலம் அளித்த நிதியே ஐந்து லட்சத்தைத் தாண்டியது 1976ல்!

என்னை வந்து பார்க்கவும் - நிதியளிக்கவும் அன்றிருந்த கவர்னர் ஆட்சி உனக்குத் தடை போட்டது! கொடி கட்டி வரும் பேருந்துகள் வழியிலே தடுக்கப்பட்டன! இரு வண்ணக் கரையிட்ட ஆடையணிந்துவரும் உடன்பிறப்புகள் பேருந்துகளில் இருந்து இறக்கப்பட்டனர்.

அதற்கும் உன் போன்றோர் சிலர் உரிய வழி கண்டனர்! திருப்பதி, திருத்தணி செல்வதாக சுற்றுலா பேருந்துகளை எடுத்துக் கொண்டு - ஒரு சிலர் மொட்டை கூட அடித்து சந்தனத்தைத் தடவிக்கொண்டு - சென்னைக்கு வந்தனர். அன்னைக்கு நிகரான அன்பை என் மீது பொழிந்தனர். ஆவி கொடுத்தேனும் அண்ணன் கண்ட கழகம் காப்போம் அஞ்சிடாதே! என்று எனக்கு ஆறுதல் மொழிந்தனர்! உடன்பிறப்பே அவர்களில் நீயும் ஒரு உடன்பிறப்பாக இருந்தாய்! இன்றைக்கும் இருக்கிறாய்! அதனால்தான் -

உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா! வா!

என்ற பாரதியின் வரிகளால் உன் உச்சிமோந்து வரவேற்கிறேன்! வாழ்த்துகிறேன்!

பூட்டிய இருப்புக்கூட்டின் கதவு திறந்தது
சிறுத்தையே வெளியில் வா!

என பாவேந்தர் அழைத்தார்! நான் உன்னையல்ல; இருள் காட்டில் தவித்து நின்ற உடன்பிறப்புகளை அழைக்கிறேன் -

கப்பிய இருட்காட்டைக் கிழித்துக் கதிர் முளைத்தது -கடமையாற்றும் கழக மாமணியாய் வா! வா!

என்று

அருகே இலங்கையில் அழிந்திடும்
தமிழ் இனம் காத்திட -
ஆதிக்கக்கோட்டையாம் டெல்லியில்
குவிந்துள்ள அதிகாரங்களைப்
பரவலாக்கி மாநிலங்கள் சுயாட்சி
பெற்றுத் திகழ்ந்திட -
இந்தியாவில் இரண்டாந்தர
மக்களாகத்
தமிழர்கள் ஆகாமல் தடுத்திட -
வறுமைக் கோட்டுக்குக் கீழே
தொங்கித்துவரும் கோடானுகோடி
ஏழை எளிய மக்களின் வாழ்வில்
வளம் சேர்க்க -

வேலையில்லாமல் திண்டாடி வீதியோரத்தில் விலங்குகளாய்த் திரியும் இந்நாட்டு மன்னர்கள் மனிதர்களாய் வாழ்வதற்கு வகை கண்டிட -

ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வீட்டு விளக்குகள் அணைந்து போகாமல் சுடர் விட்டெரியச் செய்திட -

தனியுடைமையாளர் ஆதிக்கம் தகர்ந்திட - பொதுவுடைமைப்பூங்கா மலர்ந்து குலுங்கிட -

அயராது பணியாற்றும் பாடிவீடு தி.மு.க.! அண்ணா உருவாக்கிய அன்பகம் அறிவகம் தி.மு.க.!

கண்ணீர்
செந்நீர்
சிறைச்சாலை
சித்ரவதை
அடக்குமுறை
அளப்பரிய சோதனைகள்
எதிர்ப்பு
இருட்டடிப்பு

ஐம்பது ஆண்டு காலப் பொது வாழ்க்கையில் இத்தனையும் சந்தித்தவன் நான்!

என்னைப் போலப் பலர் இந்த இயக்கத்தில்!

அவர்கள் சார்பிலும் என் சார்பிலுந்தான் கழகத்தில் இணைந்திடும் உடன்பிறப்புகள் அனைவரையும் அழைக்கிறேன்.

ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா! என்று!

அன்று நம்மீது வஞ்சங் கொண்டு திரிந்தவர்கள் - நம்மை வீழ்த்திட முனைந்தோர் - இன்றைக்கும் இல்லாமல் இல்லை!

அந்தக் கெடு நினைப்பு - அவர்களைச் சுடு நெருப்பாய் ஆக்கி வைத்துள்ளது!

எனவே, நம்மைச் சுட்டெரிக்க முனைகிறார்கள்!

அக்கினியாஸ்திரங்களை

வருணாஸ்திரங்களால்

எதிர்கொள்வோம்!

புரிகிறதா? சொற்பொழிவு நிகழ்த்திடச் செல்லும் உடன்பிறப்புகள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன்! நம்மீது பாய்வோரை வென்றிடும் வழியிதுவெனக் கோடிட்டுக் காட்டுகிறேன்!

முட்டவரும் மாட்டை எதிர்த்திட மனிதன் ஒரு பட்டுத் துணியைத்தானே பயன்படுத்துகிறான், அவனும் கொம்புகளா கட்டிக் கொள்கிறான்? - இல்லையே!

பிரச்சினைகள் ஆயிரம்! ஆயிரம்!
பணிகளோ ஏராளம்! ஏராளம்!

மக்களுக்கு ஆற்றிட வேண்டிய
கடமைகளை என்றும் மறந்ததில்லை
கழகம்!

அதற்கிடையே தேர்தல் வரும்! ஜனநாயகத்தைக் காத்திட அதனையும் எதிர் கொள்ளத்தான் வேண்டும்!

எதிர் முகாம்களில் கோடி கோடி
யாகக் கொண்டு வந்து களத்தில்
கொட்டுவார்கள்!
இருப்பதை எடுத்துக்
கவிழ்ப்பர்!
நாமோ, தேடியலைய வேண்டும்
தேர்தல் நிதி திரட்ட!

மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் - பல்வேறு கழக அமைப்புகளின் நிர்வாகிகள் நன்கொடைச் சீட்டுகளைக் கையிலேந்தி அலைகிறார்கள் - ஊர் ஊராக! வீதி வீதியாக! கடை கடையாக!

தேனீக்களாகச் சுழன்று திரியும் அவர்தம் செயல் திறன் என்றைக்குமே வீண் போனதில்லை!

முதலில் திருச்சி மாவட்டத்தில் தேர்தல் நிதி வழங்கிட - ஒரு திங்களாக செயல்வீரர்கள் உழைக்கிறார்கள்!

பார்ப்போம், திருச்சி மாவட்டம் தேர்தல் நிதியில் மற்ற மாவட்டங்களுக்கு வழிகாட்டுமா என்று!

நிதி எவ்வளவு சேருகிறது என்பதை விட - நித்த நித்தம் இளைஞர்கள் - பெரியோர் - தாய்மார்கள் என்று கழகத்தில் சேருகிறார்களே, அதுவே பெரும் நிதி! மனம்மகிழக் குவியும் நிதி! அந்த நிதியைத்தான் -

ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா! என வாழ்த்தி வரவேற்கிறேன்!

அன்புடன்

மு.க.

01-03-1988

1549. நாட்டாட்சி,
காட்டாட்சியாகாமல் தடுத்திட!

உடன்பிறப்பே,

கழகத்தின் புதிய பொதுக்குழு பிப்ரவரி இரண்டாம் நாள் சென்னையில் கூடி நிறைவேற்றிய தீர்மானங்களின் அடிப்படையில் பிப்ரவரி 16ஆம் நாள் தலைமைக் கழகத்தின் புதிய நிர்வாகக்குழு கூடி எடுத்த முடிவுகளை ஆங்காங்கு கழகத்தின் உன் போன்ற உடன்பிறப்புகள் செயல்படுத்தி வரும் திறன் கண்டு பெருமிதம் கொள்கிறேன்!

தமிழ் ஈழ மக்கள் மீது தேவையற்ற போர் தொடுத்து தமிழ் ஈழ மக்களைக் கொன்று குவிப்பது மட்டுமன்றி ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்திய இராணுவ வீரர்கள் பலியாகியும் சுமார் இரண்டாயிரம் ராணுவ வீரர்கள் படுகாயமுற்றிடவுமான சூழ்நிலையை உருவாக்கி, நாள்தோறும் பத்து கோடி ரூபாய் அளவுக்கு அநியாயமாகச் செலவு செய்து வருகிற ராஜீவ் அரசின் பழி வாங்கும் குணம் - சுய கௌரவ முனைப்பு - இவற்றை எதிர்த்து பிப்ரவரி இருபதாம் தேதியன்று தமிழக முழுதும் பத்து லட்சம் பேர் உண்ணா நோன்பு அறப்போரில் ஈடுபட்ட மகத்தான எழுச்சியை உன் அரும்பணியினால் உருவாக்கிக் காட்டியுள்ளாய்!

அடுத்து - தீராத பிரச்சினையாக இருந்து வருகிற காவிரி நதி நீர்ப் பங்கீடு குறித்து விரைவில் முடிவு காணுமாறும் - 1975ல் கழக அரசு பேச்சு வார்த்தை நடத்தி உருவான இறுதிக் கட்டத்திலிருந்து பேச்சைத் தொடர்ந்து நல்ல தீர்வு காண முன் வருமாறும் - மத்திய அரசை வலியுறுத்திட திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் அரசு அலுவலகங்களின் முன்னால் ஒவ்வொரு ஊரிலும் பல்லாயிரவர் அணி திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்திய உன் அருந்தொண்டின் வாயிலாக காவிரி நதி தீரத்து விவசாயப் பெருங்குடி மக்களின் உணர்வினை வெளிப்படுத்தியுள்ளாய்; பிப்ரவரி 25ல்!

அதன் பிறகு நான்கே நாட்கள் இடைவெளியில் தமிழக முழுதும் பல லட்சம் பேர் கலந்து கொண்ட பேரணிகள்! கைத்தறி

நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள் மத்திய அரசின் ஜவுளிக் கொள்கையால் எந்த அளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை விளக்கிடும் வண்ணம் அரசு அலுவலகங்களின் முன்னால் அறவழி ஆர்ப்பாட்டங்கள்! காஞ்சியில் பேராசிரியர் தலைமையில் - புவனகிரியில் பொருளாளர் சாதிக் தலைமையில் - கோவையில் இளவல் நாஞ்சிலார் தலைமையில் - எல்லா மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட தளபதிகள் தலைமையில் - முன்னிலையில்; பல லட்சம் பேர்!

சேலத்தில் மூன்றே நாள் அறிவிப்பில் நான் கலந்து கொண்டேன் - முக்கடலின் சங்கமமாகத்தான் இருந்தது; அத்துணை எழுச்சி! மக்கள் வெள்ளம் - மாபெரும் பேரணி! ஆம், மார்ச் முதல் நாள்!

பிப்ரவரி 20 தொடங்கி மார்ச் முதல் நாள் முடிய ஒன்பது நாட்களில் மூன்று முக்கிய பிரச்சினைகளுக்காக மூன்று அறவழிப் போராட்டங்கள்!

என் உடன்பிறப்புகள் யார் என்று எனக்குத் தெரியும் - சீமான் வீட்டுப் பிள்ளைகள் அல்ல; செலவு பற்றிக் கவலைப்படாமல் இரும்புப் பெட்டியைத் திறந்து கரன்சிகளை எடுத்தெறிந்து இருந்த இடத்திலிருந்து ஏவிவிட்டு எவரையோ கொண்டு காரியமாற்ற!

உண்டியல் ஏந்துவதும் உன் வேலைதான் - ஊர் சுற்றி; வீதிக்கு வீதி; வீட்டுக்கு வீடு - கையேந்தி காசு பணம்; கழகத்துக்கு வசூலிப்பதும் உன் வேலைதான்! கஷ்டப்பட்டு காசும் நீதான் சேர்க்க வேண்டும் - மாசு மருவற்ற நமது கொள்கைகள் வெற்றி பெற மாபெரும் போராட்டங்களையும் நீதான் நடத்த வேண்டும் - உனக்கென்று குடும்பம் - மக்கள் - சுற்றம் உண்டெனினும் அவற்றை மறந்து அல்லும் பகலும் அயராது உழைத்துக் கழகக் கொடியை விண்முட்டப் பறக்க விட வேண்டும் - அப்பப்பா - இவ்வளவு வேலை வாங்குகிறோமேயென்று எனக்கே கூட வேதனைதான்!

ஒரு நிம்மதி; இந்தப் பணியில் நானும் உன்னோடு ஒருவனாக இருக்கிறேனே என்பதில்!

விளம்பரத்துண்டு நோட்டீசுகளை விநியோகித்துப் பழக்கப்பட்டதுதான் என் கரம்! சுவரொட்டிகளைப் பசை

தடவி ஒரு காலத்தில் ஒட்டியதுதான் என் கரம்! ஒலிபெருக்கி வைத்துக் கொண்டு ஆட்டோக்களில், சைக்கிள் ரிக்ஷாக்களில் தெருத்தெருவாக நான் கழக முழக்கம் செய்த காலத்தை என் வாழ்நாளின் பொற்காலமாகக் கருதிக் கொண்டிருப்பவன்தான் நான்!

எனக்கென ஒரு குலப்பெருமை - குடும்பப்பெருமை - படித்த பரம்பரை - பணக்கார பரம்பரை - என்றெல்லாம் பளபளப்பான பின்னணி கிடையாது!

நான் பெற்ற ஒரே பெருமை தந்தை பெரியாரின் அன்புக்குரிய மாணவர்களில் ஒருவன் - பேரறிஞர் அண்ணாவின் அருமைத்தம்பிகளில் ஒருவன் என்பது மாத்திர மேதான்!

அதனால்தான் எந்த சேலத்தில் அண்ணாவின் தீர்மானத்தின் மூலம்; மாளிகையிலிருந்த கட்சி; மண்குடிசை வாசிகளுக்கென இடத்தை மாற்றிக் கொண்டதோ - அந்த சேலத்தில் மார்ச் முதல் தேதியன்று லட்சம் பேருக்கு மேற்பட்ட சாதாரண சாமானிய நடுத்தர மக்களின் நம்பிக்கைக்குரியவனாக - அணிவகுத்துச் செல்லும் பேறு எனக்குக் கிடைத்தது!

என்னுடன் அணி வகுப்பிற்கு வந்திருந்த தலைமைக் கழகச் செயலாளர் வீராசாமி அவர்கள் அண்ணே! பாருங்கள்! பாருங்கள்! திரும்பிய பக்கமெல்லாம் மக்கள் கடலாக இருக்கிறது! என்று வியந்தார்.

நான் சொன்னேன்; நமக்குரிய இரண்டொரு ஏடுகளைத் தவிர மற்ற எல்லா ஏடுகளும் இதனை இருட்டடிப்பு செய்வார்கள் பாருங்கள் என்று!

உடன்பிறப்பே, நாம் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கை, கோட்பாடுகளுக்காகத் தொண்டாற்றுகிறோம் - போராடுகிறோம் - அதனால் விளைவது நன்மையோ, தீமையோ அதுபற்றி வேதனைப்படாமல் நமது பணியினைத் தொடருகிறோம்!

நமது பாதையில் இருட்டடிப்பு!

நரிகளின் ஊளைச் சப்தம்!
கோட்டான்களின் பழிப்பு!
குக்கல்களின் குரைப்பு!

இவையெல்லாம் நமது பயணத்தைத் தடை செய்து விட முடியாது!

அரசியல் அரங்கில் இன்றைக்கு அபஸ்வரங்கள் ஒலித்துக் கொண்டிருக்கும் நேரம்!

ஒழுங்கான சுருதியுடன் - தப்புத் தாளம் போடாமல் - இலட்சிய கீதம் முழங்கிக் கொண்டிருக்கிறோம் நாம்!

அபஸ்வரங்களை மக்களே புரிந்து கொண்டு - முகஞ்சுளித்து, வெறுப்பைக் காட்டி விடுவார்கள்!

அண்ணா கண்ட அரசியல் அரங்கம்; கொள்கை - கோட்பாடு - குறிக்கோள் - இன்னதெனக் கூறி, அதற்கெனப் போரிடும் வீரர்களைக் கொண்டது! அதற்கு என்றைக்குமே வீழ்ச்சியில்லை - எவராலும் வீழ்த்த முடியாது!

அந்த நம்பிக்கையுடன்தான் மூன்று அறப்போர்க்களத்தை ஒன்பது நாள் இடைவெளியில் கண்ட உன்னை மார்ச் 15ஆம் நாளன்று அனைத்திந்திய அளவில் நடைபெற இருக்கும் முழு அடைப்பு அறப்போரிலும்; ஆங்காங்கு தோழமைக் கட்சி அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு செயலாற்றிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தி.மு.க., மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளின் சார்பில் விடப்பட்டுள்ள வேண்டுகோள் அறிக்கையில் மார்ச் 15 முழு அடைப்புக்கான காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன.

நாட்டாட்சி; காட்டாட்சியாகாமல் தடுத்திட எடுத்திடும் முயற்சிதான் மார்ச் 15!

தொய்வின்றித் தொல்லை கொடுக்கிறானே என்று எண்ணாதே! எண்ண மாட்டாய்! எனக்குத் தெரியும்!

அன்புடன்

மு.க.

03-03-1988

1550. வன்முறை இருபுறம் கூர் உள்ள கத்தி!

உடன்பிறப்பே,

பஞ்சாபில் பயங்கரவாதச் செயல்களை ஒடுக்கிட ராஜீவ் காந்தி உறுதி கொண்டுள்ளார் என ஏடுகளில் தலைப்புகள் ஒளி விடுகின்றன!

அகாலிதளம் வளர்வதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் அன்றைய தினம் இந்திரா காங்கிரஸ் ஒரு பிந்தரன்வாலேயை உருவாக்கியது! அவருக்கு வானளாவிடும் வகையில் வரவேற்பு - பாராட்டு - அனைத்தும் டெல்லியில் நடந்தது! கால ஓட்டத்தில் காங்கிரஸ் வளர்த்துவிட்ட அந்த வன்முறைச்சக்தி, காங்கிரசுக்கே எதிர்ப்பாகத் தலை நிமிர்ந்தபோது அமிர்தசரஸ் பொற்கோயிலுக்குள்ளேயே இராணுவத்தை அனுப்பி - பீரங்கிகள் முழங்கப்பட்டு - குண்டுகள் வெடிக்கப்பட்டு பிந்தரன்வாலேயும் அவருடன் ஆயிரக்கணக்கானவர்களும் அழிக்கப்பட்டார்கள்!

பொற்கோயிலில் ராணுவ நடவடிக்கை என்ற புண், சீக்கியர்களின் நெஞ்சில் ஆறாத புண்ணாகவே ஆகி விட்டது!

அமிர்தசரசில் எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக - பஞ்சாப் தீவிரவாதிகளின் பழி வாங்கும் இதயத்துடன் படை திரண்டனர்! அந்தப் பழி தீர்க்கும் படலத்தில் பல அதிகாரிகள் - பல முக்கிய பிரமுகர்கள் - அது மட்டுமா? திருமதி இந்திரா காந்தி அவர்களையே பறிகொடுக்க வேண்டிய அவலம் உருவாயிற்று!

இந்திரா காந்தி கொல்லப்பட்ட நாளில் டெல்லிப் பட்டினத்தில் பயங்கர வன்முறை வெறியாட்டம்! அந்த வன்முறையின் கதாநாயகர்களாக ஆளுங்கட்சியின் இளைஞர்கள், வாலிபர்கள், குண்டர்கள் விளங்கினார்கள்! அடியாள் அரசியல் யார் நடத்தினால் என்ன; வன்முறை வன்முறையேதான்! அதனை நன்முறையென நடுநிலையாளர் எவரும் ஒப்பிடார்!

அதனால்தான் வன்முறை இருபுறமும் கூர்மை வாய்ந்த கத்தி என்று அண்ணா அவர்கள் சொல்லி வந்தார்கள். பஞ்சாபில் ஒரு ஒப்பந்த வாயிலாக அமைதியை உருவாக்குவதாக அறிவித்து விட்டு ராஜீவ் காந்தி அவர்கள் லோங்கோவால் அவர்களுடன் அவசர அவசரமாக ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டார்! ஆம் - அது அவசரக் கோலம் அள்ளித் தெளித்தது என்றே ஆகிவிட்டது! அந்த ஒப்பந்தம் லோங்கோவால் அவர்களின் உயிருக்கே உலை வைத்தது!

பயங்கரவாதச் செயல்கள் ஒன்றுக்குப் பத்தாக உயர்ந்தனவே தவிர நின்ற பாடில்லை. பின்னர் பஞ்சாப் மாநிலத் தேர்தல் நடத்தப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் ஆட்சியை அமைத்திட ராஜீவ் அரும்பாடுபட்டார். அயராது உழைத்தார் - தேர்தல் பிரச்சாரத்தில் மிக வேகமாக ஈடுபட்டார். ஆனால் காங்கிரஸ் வெற்றி பெறவில்லை - பர்னாலா தலைமையில் அகாலிதள ஆட்சி அமைந்திடவே மக்கள் வாக்களித்தனர்!

காங்கிரஸ் வெற்றி பெற முடியாத பஞ்சாப் மாநிலத்தில் அகாலிதள ஆட்சியா? மேல்பூச்சாக ஏதோ ஜனநாயகம் வென்றது என ராஜீவ்; சமாளிப்பு அறிக்கை விடுத்தாலும் - அவரது சிந்தனையும் செயற்பாடுகளும் பஞ்சாபில் அமைதியைக் கெடுக்கவே துணை போயின!

பர்னாலா ஆட்சிக்கு ஏகப்பட்ட தலைவலிகள் ஏற்படுத்தப்பட்டன! முடிவாக அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டு, சித்தார்த்த சங்கர் ரே அவர்களைக் கவர்னராக்கி - ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது!

ஆகா! ஊஹூ!! ஜனாதிபதி ஆட்சியில் பஞ்சாபில் அமைதி முளைக்கிறது - வேர் விடுகிறது - தழைக்கிறது - அரும்பு கட்டுகிறது - மலர் குலுங்குகிறது என்றெல்லாம் தூரதர்ஷணி துந்துபி முழங்கத் தவறவில்லை!

ஆனால் இன்று நிலைமை என்ன?

கடந்த ஏழு மாதங்களில் மட்டும் எழுநூறுக்கு மேற்பட்ட கொலைகள் நடைபெற்றிருப்பதாக பாராளுமன்றத்திலேயே புள்ளிவிபரம் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக நாள்தோறும் பஞ்சாப் மாநிலத்திலிருந்து வரும் செய்திகளை கேட்பதற்கே நமது உள்ளத்துக்குச் சக்தியில்லை!

குடும்பம் குடும்பமாக கொலை செய்யப்படுகிறார்கள்! கொடுமை; மிகக் கொடுமை!

பஞ்சாபில் ஆட்சி நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிகள், பயங்கரவாதத்தை எதிர்க்கத் தெளிவோடும் துணிவோடும் முன்வரவில்லை

என்று பிரதமர் ராஜீவ் அவர்கள் பாராளுமன்ற மக்களவையில் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை அகற்ற வேண்டும் என்பதில் உள்ள அக்கறையை விட ராஜீவ் காந்திக்கு எதிர்க்கட்சிகளைக் குறை கூறுவதில்தான் அக்கறை மிகுதி என்பதையே இந்த கூற்று மெய்ப்பிக்கிறது!

தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியின் அல்லது கட்சிகளின் ஆட்சியா இன்றைக்கு பஞ்சாபில் நடக்கிறது?

அந்தக் கட்சி அல்லது கட்சிகளின் ஆட்சி சரியில்லை என்று கூறித்தானே - பத்து மாதக்காலமாக ஜனாதிபதி ஆட்சியை அங்கு டெல்லி நடத்தி வருகிறது; அந்த ஆட்சியில் அமைதிக்கு வித்திடப்பட்டிருக்கிறதா?

ஒன்றுக்குப்பத்தாகக் கூட அல்ல; நூறு மடங்கு அதிகமாக அல்லவா இன்றைக்கு பஞ்சாப் மாநிலத்தில் வன்முறை தலைதூக்கி ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது!

ஒப்பந்த வீரர் ராஜீவ் காந்தி பஞ்சாப் என்றும் கொழும்பு என்றும் ஒப்பந்தங்களைப் போடுவது -

அவை எப்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலோ; அல்லது அந்த ஒப்பந்தங்கள் யார் யாரைத் தொடர்புபடுத்தி உருவாக்கப்பட வேண்டும் என்பதிலோ - ராஜீவ் காந்தி கவனம் செலுத்தாமல் சிக்சருக்கு பந்தை அடிப்பதாக எண்ணிக்கொண்டு முதல் பந்திலேயே எதிரணியிடம் கேட்ச் கொடுத்து வெளியேறும் கிரிக்கெட் வீரரைப் போலத்தான் அவசரமும் ஆத்திரமும் ஆட்கொள்ள செயல்படுகிறார் இந்த ஒப்பந்த விஷயங்களில்!

நாட்டின் ஒற்றுமைக்கும் - ஒருமைப்பாட்டுக்கும் - அபாயம் விளைவிக்கும் பயங்கரவாத வன்முறைச் செயல்களை அனுமதிக்கக் கூடாது என்று அழுத்தம் திருத்தமாக தி.மு.க. வற்புறுத்துகிறது!

ஆனால் இன்றைக்குக் கட்டுப்படுத்த இயலாத அளவுக்கு வன்முறைச் செயல்கள் வளர்ந்தோங்கி வருவதற்கு - இந்திரா காங்கிரஸ் ஆட்சியின் அணுகுமுறைகளும் காரணம் என்பதைப் புறக்கணித்து விட முடியாது!

நோயின் காரணத்தையும் - நோயின் மூலத்தையும் அறிந்து கொள்ளாமல் அலட்சியப்படுத்திவிட்டு - எந்த ஒரு மருத்துவரும் சிகிச்சையில் வெற்றி பெற வழியில்லை!

என்றைக்கோ இவ்வளவு ரத்தச் செலவின்றி தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய பிரச்சினை! இன்றைக்கு பஞ்சாப், படுகளமாகக் காட்சி தருகிறது!

இன்று இந்தியாவிலேயே வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்கள் தொகை குறைவானது பஞ்சாப் மாநிலத்தில் தான்!

இந்தியா முழுதும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடுவோர் 40 சதவீதம்!

பஞ்சாப்பில் 10.9 சதவீதம்தான்!

இந்த அளவுக்கு வறுமையை விரட்டி, வளம் கொழிக்கிற அந்த மாநிலத்தில் வன்முறை மிதமிஞ்சி - எல்லைதாண்டி - பேயாட்டம் போட்டுக் கொண்டிருக்கிறதே; இது இந்திய நாட்டு நிலப்படத்தில் ஒரு கரும்புள்ளியல்லவா?

ராஜீவ்காந்தி வன்முறையை வீழ்த்த உறுதி கொண்டுள்ளதாக வானொலி, தொலைக் காட்சிகளில் அறிவித்தால் மட்டும் போதாது - உரிய வழி காண வேண்டும்!

ஐம்பெரும் முழக்கங்களில் வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்! என்பதை ஒரு முழக்கமாகக் கொண்டுள்ள தி.மு.கழகம்; அந்த வன்முறை பஞ்சாப் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டாலும் - அல்லது இந்திய அரசால் ஈழத்தமிழகத்தில் நடத்தப்பட்டாலும் - அதனைக் கண்டித்துத் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டேயிருக்கும்!

அன்புடன்

மு.க.

04-03-1988

1551. நாவலர் எந்த இடத்தில் இருக்கிறார்?

உடன்பிறப்பே,

கொஞ்சம் பயத்தோடுதான் இந்தக் கடிதம் எழுதுகிறேன். உன்னிடம் எனக்கிருக்கும் பயத்தைத்தான் குறிப்பிடுகிறேன். சில நேரங்களில் சிலருடைய கருத்துக்களுக்கு நான் விளக்கமளிக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை எனக்கு ஏற்படும்பொழுது இவருக்கெல்லாம் போய் நீங்கள் பதில் சொல்ல வேண்டுமா? என்று நீ என்னைக் கடிந்து கொள்வதுண்டு!

இவருக்கெல்லாம்

என்று நீ ஒதுக்கி வைத்திருக்கிற பட்டியலிலே என்னால் நாவலர் அவர்களைச் சேர்த்துப் பார்க்க முடியாது! அவர் வேண்டுமானால் போய் அந்தப் பட்டியலில் இணைந்து கொள்ளலாம்; ஆனால் நான் என்றைக்கும் அவரை தாழ்த்திப் பார்த்தது கிடையாது! ஏன்; அப்படி நினைத்தது கூடக் கிடையாது! அதனால் அவர் உரை குறித்து சில விளக்கங்களை நான் அளித்தேதான் தீர வேண்டும்.

எனக்கும் அவருக்கும் இன்று நேற்று பழக்கமல்ல! 1942 முதல் பழக்கம், நட்பு, பாசம் என்றால் பார்த்துக் கொள்ளேன்!

என்றைக்கு நான் அவரை நாவலர் என அழைக்கத் தொடங்கினேனோ அன்று முதல் இன்று வரை நாவலர் என்ற அந்தச் சொல்லை விடுத்து அவரை எந்த ஒரு சமயத்திலும் குறிப்பிட்டது கிடையாது.

இன்னும் சொல்கிறேனே - நான் முதலமைச்சர், அவர் கல்வி அமைச்சர்! அந்த நிலையிலே கூட அவர் வந்தால் நான் எழுந்து நின்று மரியாதை செலுத்தும் பண்பைப் பெற்றிருந்தவன் - இன்றும் அந்தப் பண்பு பட்டுப் போனதில்லை! பட்டுப் போகாது!

பல்வேறு நிலையெடுக்க வேண்டிய அவசியம் நாவலருக்கு வந்தபோதும் - நான் அவரை விட்டு - அல்லது அவர் என்னை

விட்டுப் பிரிந்திடும் சூழல்கள் எப்படியோ முளைத்துவிட்ட போதிலும்; என்றைக்கோ 46 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட எங்கள் நட்பு இன்னும் பசுமையாக இருக்கிறது என்ற உணர்வுடன்தான் நான் நாவலரைப் பற்றி எண்ணுகிறேன்.

ஆனால் அவர்? ஏனோ தெரியவில்லை; திடீர் திடீரென்று என் மீது கடுமையாகக் காய்ந்து விழுகிறார். ஆவேசமாகச் சாடுகிறார். ஆத்திரப்பட்டு சாபம் கொடுக்கிறார்.

கலைஞர் கருணாநிதி என்னை நாராயணசாமி என்று கூறி கிண்டல் செய்கிறார். எனக்குத் தமிழ் உணர்வு உண்டு. எனவே நாராயணசாமி என்ற பெயரை நெடுஞ்செழியன் என மாற்றிக் கொண்டேன். ஆனால் கருணாநிதி தன் பெயரை மாற்றினாரா? என்னிடம் கேட்டிருந்தால் அவருக்கு அருட்செல்வம் என்ற தமிழ்ப் பெயர் சூட்டியிருப்பேன். என்னைக் கிண்டல் செய்யும் கருணாநிதியே நீ உருப்படுவாயா? உன் குணம் கெட்டதால்தான் நீ இப்படி இருக்கிறாய்! உனக்கு திமிர்! கொழுப்பு! அதனால்தான் அப்படி எழுதுகிறாய்! நீ உருப்படுவாயா? உன் கட்சி உருப்படுமா?

உடன்பிறப்பே, இது நாவலர் பேசி ஏடுகளில் வெளிவந்த செய்தி!

முதலில் அவர் ஒன்றைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அல்லது தெரிந்திருந்தும் அந்த உண்மையை மறைத்துக் கொண்டு அவர் பேசியிருக்க வேண்டும்.

நான் எழுத்திலோ, பேச்சிலோ, அல்லது நாலு பேருடன் உரையாடுகிற நேரத்திலேகூட அவரைப் பற்றிக் குறிப்பிட வேண்டியிருந்தால் நாவலர் என்றுதான் கூறியிருக்கிறேன். கூறியும் வருகிறேன். என்றைக்குமே அவரை நான் நாராயணசாமி என குறிப்பிட்டதே இல்லை!

முரசொலியில் கேலிச்சித்திரம் பகுதியில் நெடுஞ்செழியன் நாராயணசாமி ஆகிவிட்டார் என்ற பொருளில் படங்கள் வெளியிடப்பட்டன சில நாட்களுக்கு முன்பு! அதைப் பார்த்தவுடனே நான் முரசொலி நிர்வாகத்துடனும் ஆசிரியர் குழுவினருடனும் தொடர்பு கொண்டு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை, நாராயணசாமி என்று கேலி செய்வதை நிறுத்திக் கொள்க! என்று கேட்டுக் கொண்டேன்.

முரசொலியில் கடிதம் எழுதுகிற ஒரு பணியை மட்டும் உன் போன்ற உடன்பிறப்புகளுடன் தொடர்பு கொண்டிட நான் ஆற்றி வருகிற காரணத்தால் நாவலரைப் பற்றி மட்டுமே நான் இதைச் சொல்ல முடிந்தது! அவர்களும் என் வார்த்தையைத் தட்டாமல் நாராயணசாமி என்று குறிப்பிடுவதை நிறுத்தி விட்டார்கள்.

ஆனால் நாவலர் அதை விடேன் என்று வரிந்து கட்டிக்கொண்டு எல்லாக் கூட்டங்களிலும் பேசுகிறார். நான் சொல்லாத ஒன்றை நான் சொன்னதாக இட்டுக்கட்டி எனக்குச் சாபம் கொடுக்கிறார்.

உருப்பட மாட்டாய்!
மண்ணாய்ப் போவாய்!
நாசமாய்ப் போவாய்!

என்ற சாபங்களும் - நீ! உன்னை என்ற ஏகவசனச் சொற்பொழிவுகளும் நாவலர் பெயரால் ஏடுகளில் வரும்பொழுது எனக்கும் அவருக்குமிருந்த பாசப்பிணைப்பை எண்ணிப் பார்த்து நான் வேதனைப்படுகிறேன்.

சில நேரங்களில் தன்வசமிழந்து நாவலர் பேசுவதுண்டு! இன்று மட்டுமல்ல; அண்ணா இருந்த காலத்திலே கூட!

காமராஜர், கக்கன், பக்தவத்சலம், சுப்ரமணியம் என்று காங்கிரஸ் அமைச்சர்களின் முழுப் பெயரைச் சொல்லாமல் கூட்டங்களில் நாவலர் பேசும்போது; காமன், கக்கன், பக்தன், சுப்பன், என்றெல்லாம் ஏகடியம் செய்வார்!

அது குறித்து அண்ணா அவர்களே கடிந்து கொண்டதும் உண்டு. எனினும் நாவலர் அந்தப் பழக்கத்தை மாற்றிக் கொண்டதில்லை!

தமிழ் அருவியெனப் பொழியும் அவர் நாவில் சிலசமயம் இப்படித் தரக்குறைவான பேச்சுக்களும் வெளிப்பட்ட அந்தப் பழக்கத்தினால்தான் இப்போதும் அவர், ஏ, கருணாநிதி! உனக்கு திமிர்! கொழுப்பு! நீ உருப்படுவாயா? உன் கட்சி உருப்படுமா? என்றெல்லாம் கேட்கிறார்.

இவரிடம் கேட்டிருந்தால் கருணாநிதி என்ற என் பெயரை அருட்செல்வம் என்று தமிழில் மாற்றிக் கொடுத்திருப்பாராம்!

நாவலருக்கு நினைவிருக்குமென நம்புகிறேன்.

குடியேற்றம் அண்ணல் தங்கோ என ஒருவர் இருந்தார். அவர் வடமொழிப் பெயர்களையெல்லாம் தமிழில் மாற்றிட வேண்டுமெனப் பெரிதும் முயற்சி மேற்கொண்டார். எனக்கு அருட்செல்வம் என்றும் மறைந்த நண்பர் ஏ.பி. ஜனார்த்தனம் அவர்களுக்கு மன்பதைக்கன்பன் என்று பெயர் சூட்டினார். ஆனால் அந்த நேரம் எங்களிருவரின் பெயர்களும் ஏற்கனவே கட்சியிலும் பொது மக்களிடத்திலும் பரவலாக அறிமுகமாகிவிட்டிருந்த காரணத்தால், பெயர் மாற்றம் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்தோம். தந்தை பெரியாரின் பெயரே இராமசாமி என்றுதானே இருந்தது - இருக்கிறது!

தலைதாழாச்சிங்கம் நெடுஞ்செழியப் பாண்டியனின் பெயருக்குரியவர் தலைதாழ்ந்த பிறகு அப்பெயர் பொருந்தாது என முரசொலி எண்ணி, கார்ட்டூன் வரைந்திருக்கக் கூடும். ஆனால் நான் அதனை ஏற்கவில்லை! மராட்டிய மாவீரன் சிவாஜி, காகபட்டருக்கு மண்டியிட்டான் என்பதற்காக - மாவீரன் சிவாஜி என்ற பெயர் வரலாற்றில் மறைக்கப்பட்டு விடுமா?

உடன்பிறப்பே, நாவலர் என் பெயரை அருட்செல்வம் என மாற்றியிருப்பேன் என்கிறார்! என் பிள்ளைகள் பெயரும் பேரன் பேத்திகளின் பெயரும் (ஸ்டாலின் எனும் ரஷ்ய மொழிப்பெயர் ஒன்று தவிர) எல்லாமே தமிழ்ப்பெயர்கள்தான்!

ஆனால்; நாராயணசாமி நெடுஞ்செழியன் ஆனார்! அவர் தனது பேத்தியுடன் பிறந்த நாள் கொண்டாடிய புகைப்படம் ஒன்றை ஏடுகளில் பார்த்தேன்! அவர் மகன் பெற்ற அந்த செல்விக்குப் பெயர் என்ன தெரியுமா? ஸ்வப்பனா!

ஸ்வப்பனா, உடன்பிறப்பே; ஸ்வப்பனா! முதலில் பேத்தியின் பெயரை நாவலர் அவர்கள் நல்ல தமிழ்ப் பெயராக மாற்றுவார் என்று நம்புவோமாக!

இப்படியெல்லாம் நான் எழுதாததையும் பேசாததையும் இட்டுக்கட்டி எடுத்து வைத்துக்கொண்டு நாராச நடையில் என்னை வசைபாடும் நாவலர் அவர்கள்;

மத்திய அமைச்சர் சிதம்பரம் அவர்கள் நேற்று சாட்டியுள்ள குற்றச்சாட்டுக்கு விளக்கமளித்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்.

பொது விநியோக முறையில் ஏற்பட்ட தவறுகளினாலும், குறைகளினாலும் ஒவ்வொரு குடும்பக் கார்டுக்கும் பல மாதங்களாக பன்னிரண்டு கிலோ அரிசி கொடுக்கப்படவில்லை. இந்த நிலையை உடனடியாக சீர்திருத்த வேண்டும்.

சென்னையில் மார்ச் நாலாம் நாள் ப. சிதம்பரம் நிருபர்களிடம் வெளியிட்ட தகவல் இது!

பொது விநியோக முறையில் தவறு!
குறைகள்!
அதனால் பலமாதங்களாக பன்னிரண்டு
கிலோ அரிசி கொடுக்கப்படவில்லை!
ஆம்; பல மாதங்களாக!

அந்தப் பல மாதங்கள் தவறுக்கு முறைகேட்டுக்கு யார் காரணம்?

உணவு அமைச்சர் பொறுப்பை
நாவலரும் - அவருக்கு அடுத்து
அவரது அணியிலிருக்கும்
பண்ருட்டி ராமச்சந்திரன்
அவர்களுந்தானே ஏற்றிருந்தனர்!

அப்படியானால் மத்திய அமைச்சர் குற்றச்சாட்டுக்கு பதில் என்ன?

இதற்கெல்லாம் விளக்கம் அளிப்பதை விட்டுவிட்டு - வீணாக என் மீது எதற்காகச் சினந்து விண்முட்டக் குதிக்க வேண்டும்!

இதையெல்லாம் நாவலரால் இப்போது சிந்திக்க முடியாது! அவர் சிந்திக்கவே மறுக்கிறார்! அவர் இருக்குமிடம் அப்படி!

அன்புடன்

மு.க.

06-03-1988

1552. அடையாளமும் காண்பார்கள்! அறிவும் புகட்டுவார்கள்!

உடன்பிறப்பே,

தஞ்சை திருச்சி மாவட்டங்களில் பல்வேறு எழுச்சிமிக்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுவிட்டு இன்று காலையில்தான் சென்னை திரும்பினேன். சென்னையில் காலைப் பத்திரிகைகளில் எல்லாம் பெரிய பெரிய தலைப்புகளில் கருணாநிதிக்கு மூப்பனார் பதில் - கருணாநிதிக்கு மூப்பனார் பதிலடி - கருணாநிதிக்கு மூப்பனார் காட்டமான பதில் - இப்படி சரமாரியாக இஷ்டத்துக்குப் பொரிந்து தள்ளப்பட்டிருப்பதைக் கண்டேன்.

தலைப்புகளைப் பார்த்ததும் எனக்கு ஒரே ஆச்சரியம்! நாம் என்ன சொன்னோம்? எதற்கு அவர் இப்படி விறுவிறுப்பாக - வீராவேசமாக - காட்டமாக - கடுமையாகப் பதில் சொல்லியிருக்கிறார் என்று ஒருக்கணம் யோசித்துப் பார்த்தேன்.

நினைவுக்கு வந்தது! மார்ச் 7ந் தேதி காலையில் திருச்சியில் நிருபர்கள் பேட்டியின் போது ஒரு பிரபல ஆங்கில ஏட்டின் நிருபர் அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பினாமி நில ஒழிப்பு சட்டத்துக்கு மத்திய அரசு, இன்னும் அங்கீகாரம் தராதது குறித்துக் கேள்வி எழுப்பினார். அதற்கு நான் விளக்கமளித்தேன். எம்.ஜி.ஆர். ஆட்சியில் அந்த பினாமி ஒழிப்பு மசோதா அப்போது அமைச்சராக இருந்த எஸ்.டி. சோமசுந்தரத்தினால் கொண்டு வரப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவன் என்ற முறையில் அந்த மசோதாவை நானும் ஆதரித்து வரவேற்றுப் பேசினேன். அதற்கு இன்னமும் மத்திய அரசு ஒப்புதல் தரவில்லை. இப்போது மூப்பனாரும் எஸ்.டி.சோமசுந்தரமும் ஒரே அணியில் இருப்பதால் அந்த பினாமி நில ஒழிப்பு சட்டத்துக்கு ஒப்புதலை பெறுவதில் சங்கடம் இருக்காது, என்று கூறினேன்.

ஒரு வேளை அந்த பேட்டியை மூப்பனார் படித்துப் பார்த்துவிட்டு பதில் கூறியிருப்பார் என்று கருதினேன்.

திருச்சி நிருபர்கள் கூட்டத்தில் கருணாநிதி கூறிய பதிலைப் பார்த்தேன். அவர் சொல்லியுள்ளபடி, பினாமி நில ஒழிப்பு சட்டத்துக்கு விரைவில் மத்திய அரசு ஒப்புதலைப் பெற்றிட முயற்சிப்பேன். அநேகமாக தமிழக சட்டசபை தேர்தலுக்கு முன்னரே பினாமி நில ஒழிப்பு சட்டத்துக்கான மத்திய அரசு ஒப்புதல் கிடைக்கும்.

இப்படியொரு பதிலைத்தான் சொல்லி என்னையும் மற்றவர்களையும் மூப்பானார் மகிழ வைக்கப் போகிறார் என்று எதிர்பார்த்தால் அவர் முரசொலியில் வெளி வந்த கட்டம் கட்டிய ஒரு செய்திக்கு மறுப்பு விளக்கம் கொடுத்திருக்கிறார். முரசொலியில் வந்தது நான் பேசியதோ - அல்லது கடித வடிவில் எழுதியதோ அல்ல!

முரசொலி ஆசிரியர் அல்லது ஆசிரியர் குழுவினர் வெளிப்படுத்தியுள்ள கருத்து!

அதற்குத்தான் மூப்பனார் பதில் கூறியிருக்கிறார்!

முரசொலியில் வந்தது என்ன? கவர்னர் அலெக்சாண்டர் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுக்கப் போன மூப்பனார் அவர்களுடன் பழனியாண்டி அவர்களும் திண்டிவனம் ராமமூர்த்தி அவர்களும் சென்றது சரி; ஆனால் மத்திய அமைச்சர் சிதம்பரமும் மனு கொடுக்கப் போனது என்ன நியாயம்? இப்படி வினா எழுப்பியதோடு முரசொலியில் அலெக்சாண்டர், மூப்பனார், அமைச்சர் சிதம்பரம் ஆகியோர் இருக்கின்ற மனு தரும் படலம் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளார்கள்.

இப்படியொரு கேள்வி எழுப்பியதே நான்தான் என்று கருதிக்கொண்டு, மூப்பனார், கருணாநிதிக்கு பதில் என்று ஏடுகள் செய்திகளைப் பிரசுரித்து விட்டன!

நானே அந்தக் கேள்வியை எழுப்பி இருப்பதாகவே வாதத்துக்கு வைத்துக் கொண்டாலும் - அதற்கு மூப்பனார் அளித்துள்ள பதில் ஏதாவது பொருத்தமாக இருக்கிறதா?

மூப்பனாருடன் சேர்ந்து கொண்டு கவர்னரிடம் மனு கொடுக்க மத்திய அமைச்சர் சிதம்பரமும் போகலாமா? இது கேள்வி!

கவர்னர் ஆட்சியென்றால் குடியரசுத் தலைவர் ஆட்சி! அதாவது டெல்லியின் நேரடி ஆட்சி! டெல்லியில் உள்ள பேரரசின் அமைச்சர்களில் ஒருவர் சிதம்பரம்! கோரிக்கைகளைப் பெற்று பரிசீலனை செய்து அவற்றை தீர்த்து வைக்க வேண்டிய மத்திய அமைச்சரவையில் இருப்பவர்! கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய இடத்தில் இருப்பவரே, கோரிக்கை மனு கொடுப்பதற்குச் செல்கிறார் என்றால் - இந்த வேடிக்கைச் செய்தியைக் கேட்பவர்கள் அல்லது படிப்பவர்கள்; பெரியார் பாஷையில் சொல்ல வேண்டுமேயானால் பின்பொறியால் சிரிப்பார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இவ்வாறு தமிழக ராஜ்பவனத்தை காங்கிரஸ் கட்சியின் அலுவலகமாக மாற்றுகிற ஜனநாயக விரோதப் போக்கிற்கு மூப்பனார் சொல்லியுள்ள நியாயம் என்ன?

அமைச்சர் சிதம்பரம் முதலாவதாக காங்கிரஸ்காரர். அதன்பிறகுதான் அவர் அமைச்சர். ஒரு காங்கிரஸ்காரர் என்ற முறையில் கவர்னரிடம் மனு கொடுக்க என்னுடன் வந்ததில் தவறு இல்லை.

இதுதான் உடன்பிறப்பே, மூப்பனார் தந்துள்ள விளக்கம்!

அப்படியானால் ராஜீவ் காந்தி கூட முதலில் ஒரு காங்கிரஸ்காரர்! அதன் பிறகுதான் அவர் பிரதமர்!

ஒருநாள் பிரதமர் ராஜீவ் காந்தி திடீரென்று சென்னைக்கு வந்து, மூப்பனாருடன் பேசி இருவருமாகச் சேர்ந்து ஒரு கோரிக்கை மனுவைத் தூக்கிக் கொண்டு கவர்னர் அலெக்சாண்டரிடம் வழங்கி - அதைப் படம் எடுத்துப் பத்திரிகைகளில் போட்டுக் கொள்ளலாம் அல்லவா?

ஏனென்றால் ராஜீவ் காந்தி முதலில் காங்கிரஸ்காரர் - பிறகுதானே பிரதம மந்திரி! அதனால் அவரும் மின்கட்டண சர்சார்ஜ் விதிப்பதை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று கவர்னர் பெருமானைக் கேட்டுக் கொள்ள மூப்பனாருடன் மனு எடுத்துச் செல்வதில் தவறில்லையல்லவா?

உடன்பிறப்பே, திருச்சி நிருபர்கள் என்னிடம் இன்னொரு கேள்வியும் கேட்டார்கள். அண்மையில் ஜயில்சிங் அவர்கள்,

தன்னை மீண்டும் ஜனாதிபதியாக்க யாரோ சில மத்திய அமைச்சர்கள் நாற்பது கோடி செலவழிக்க முன்வந்தனர் என்று கூறியிருந்தார் அல்லவா; அதுபற்றி விசாரணை செய்யப்பட வேண்டுமா? வேண்டாமா? உங்கள் கருத்து என்ன? என்று கேட்டார்கள்! ஒரு பெரிய மர்மமான செய்தி வெளியிடப்பட்டிருக்கும் போது; அதுவும் முன்னாள் ஜனாதிபதியே வெளியிட்டிருக்கும் போது; நாட்டு மக்களுக்கு உண்மை தெரிய வேண்டியது அவசியம் - உரிய விசாரணை நடைபெற வேண்டியதுதான் என்று நான் விடையளித்தேன் நிருபர்களிடம்!

இதைப்பற்றியும் மூப்பனார் கூறியிருக்கிறார் - கருணாநிதியையும் அவரைச் சுற்றியிருப்பவர்களையும் அடையாளம் தெரிந்து கொண்டவர்கள் இந்தக் கோரிக்கையின் பின்னணியைப் புரிந்துகொள்ள முடியும் என்று அவர் கேலி பேசியுள்ளார்.

நாட்டு மக்கள் - யார்? எவர்? எப்படிப்பட்டவர்? என்பதையெல்லாம் நன்றாகக் கணக்கிட்டு அடையாளம் தெரிந்து வைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

உச்சவரம்பு சட்டம் வரப்போவதை முன் கூட்டியே அறிந்து கொண்டு, அடையாளம் தெரியாத அளவுக்கு 1956ல் பத்திரம் எழுதப்பட்டு; விற்கப்பட்டதாகக் கூறி; பினாமிகள் பெயரில் ஒரே நபரின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கின்ற நாலாயிரம் ஐயாயிரம் ஏக்கரா நிலங்களையே அடையாளம் தெரிந்து வைத்திருக்கிற மக்கள் -

யார்? எவர்? எப்படி? என்பதையெல்லாம் அடையாளம் கண்டு கொள்ளாமலா போய் விடுவார்கள்!

எனவே; மூப்பனாருக்கு அந்தக் கவலை தேவையில்லை! மக்கள் அடையாளம் காண வேண்டியவர்களைக் காணுவார்கள்! உரிய நேரத்தில் அறிவும் புகட்டுவார்கள்!

அன்புடன்

மு.க.

10-03-1988

1553. முழு அடைப்பு வெற்றி பெற முழங்கட்டும் சங்கநாதம்!

உடன்பிறப்பே,

மார்ச் 15 - அனைத்திந்திய முழுஅடைப்பு வெற்றிகரமாகவும் - அமைதியான முறையிலும் - சிறு சலசலப்புக்கும் இடந்தராத நிலையிலும் நடைபெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் தோழமைக் கட்சியினருடன் கலந்து பேசி ஆங்காங்கு செயல்படத் தொடங்கியிருப்பாய் என நம்புகிறேன்.

ராஜீவ் அரசு பதவி விலகி, நாடாளுமன்றத்துக்கு மறு தேர்தல் நடத்த வேண்டுமென்று வலியுறுத்தி இந்த அமைதிப் போராட்டம் நடைபெறுகிறது.

ராஜீவ் அரசு பதவி விலக வேண்டுமென்பது ராஜீவ் என்ற தனிப்பட்ட ஒரு மனிதரின் மீதுள்ள வெறுப்பினால் அல்ல! அதே போல விரும்பும் போதெல்லாம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற விபரீத எண்ணங்கொண்டவைகளுமல்ல எதிர்க்கட்சிகள்!

எமர்ஜன்சி போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள் - அதன் விளைவாக ஆட்டம் போட்ட அராஜகங்கள் - இவற்றின் உச்சகட்ட கொடுமைகளை இந்திய நாட்டு மக்கள் பார்த்தவர்கள் என்றாலும் கூட - இவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு முதல் பரிசு பெறுகிற அளவுக்கு இன்றைய தினம் ராஜீவ் காந்தியின் ராஜபரிபாலனம் எல்லா வகையிலும் சீரழிந்து செயலிழந்து போய்விட்டதையும் - முரட்டுத்தனமான போக்கு - முதிர்ச்சியற்ற அணுகுமுறைகளால் விளையாட்டுத்தனமான காரியங்கள் நடைபெறுவதையும் - வறுமைக் கோட்டுக்குக் கீழே எண்ணற்ற மக்கள்; புழுக்களாய் - தேரைகளாய் - பொட்டுப் பூச்சிகளாய் உழன்று கொண்டிருப்பதையும் - வேலையில்லாத் திண்டாட்டம் வேலென ஈட்டியென வாளின் முனையென படித்தோர் கூட்டத்தின் விலாவில் பாய்ந்து வதைப்பதையும் - மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை மக்கட் பணி

ஆற்றிட விடாமல் டெல்லியின் கைப்பாவைகளாக இருந்திட வேண்டுமெனக் கருதி அவற்றைச் செயல்பட விடாமல் தடுப்பதையும் - காங்கிரசல்லாத மாநில ஆட்சிகளைப் பழி வாங்குவதையே பெரும் நோக்காகக் கொண்டு வரம்பு மீறி நடந்து கொள்வதையும் - பிரச்சினைகள் எதனையுமே தீர்த்து வைக்கும் மனமும் இல்லாமல், வழியும் காணாமல், பொதுப் பிரச்சினைக்காக; சொந்த கௌரவப் பிரச்சினை பார்க்கக் கூடாது என்ற சாதாரண பொதுவாழ்வு இலக்கணத்தைக் கூட கற்றுக் கொள்ளாமல் - அல்லது கற்றிருந்தாலும் அதனைக் கடைப்பிடிக்க விரும்பாமல் - தன்னிச்சையாக முடிவெடுத்து எல்லாப் பிரச்சினைகளையுமே குரங்குப் புண்ணாக்கி வரும் கோணல் மாணல் நடத்தையும் - மார்ச் பதினைந்தாம் தேதி முழு அடைப்பின் மூலம் இந்திய மக்கள் வன்மையாகக் கண்டிக்கிறார்கள் என்பதை உலகுக்கு அறிவிப்பதே அனைத்து எதிர்க்கட்சிகளின் நோக்கமாகும்!

நாற்பதாண்டுக் கால சுதந்திரத்தின் பயன் நலிவுற்ற பிரிவினரின் பக்கம் - காற்றுடன் கலந்து கூடச் சென்றிடவில்லை!

துர்நாற்றமுள்ள காற்றையே சுவாசித்துக் கொண்டிருக்கும் ஏழை பாழைகள்; இப்போது விஷக் காற்றையே இழுத்துத் தீரவேண்டிய கொடுமைக்கு ஆளாகிக் கிடக்கிறார்கள்!

பிரதமர் ராஜீவ், ஓய்வெடுக்க லட்சத்தீவுக்கு செல்கிறார். போய் வந்தது சொந்தச் செலவு என்கிறார். ஆனால் அந்தத் தீவில்; ராஜீவ் சென்ற விமானம் இறங்க - ஓடுதளம் அமைத்திட மட்டும் மத்திய அரசாங்கம் மூன்று கோடி ரூபாய் செலவிட்டிருப்பதாக அரசின் கணக்கே கூறுகிறது!

ஓய்வெடுக்கப் போன இடத்துக்கு ஓடு தளம் அமைக்க மக்களின் வரிப்பணம் மூன்று கோடி!

ஒண்டக் குடிசையின்றி ஒட்டிய வயிறைப் பொத்திக் கொண்டு - ஆடை இல்லாக் காரணத்தால் மானம் காத்திடக் கால்களைப் பின்னிக் கொண்டு எத்தனை பேர் நடைபாதைகளில் நடைப்பிணங்களாக!

ஆனால் ராஜீவ் விமானம் இறங்கிட; ஓய்வெடுக்கும் தீவில் ஓடு பாதைக்கு மட்டும் மூன்று கோடி ரூபாய்!

முத்தனும் முனியனும் சிந்திய வியர்வைத் துளிகள் வரிப்பணமாக மாறி - ஓடுதளமாகிறது; ஓய்வெடுப்பவருக்கு

வசதியாக விமானம் இறங்க! ஓடுதளமா அது? குமுறியதும் குடல் செத்துப் போய் குப்புறக் கிடக்கும் குப்பன்கள் சுப்பன்களின் முதுகு உடன்பிறப்பே முதுகு அது!

ஏழை எளியோர் முதுகிலேதான் அவர்களை இந்நாட்டு மன்னர் எனத் தட்டிக் கொடுத்துக்கொண்டே இந்திய சுதந்திரத்தின் சவாரி, மிகச் சுதந்திரமாக நடைபெறுகிறது!

இருபத்தியொன்றாம் நூற்றாண்டுக்கு இந்தியாவை அழைத்துப் போகிறேன் என்றார் ராஜீவ்!

அந்தப் பயணத்தின் பாதையில் எவ்வளவு விசித்திரமான கைகாட்டி மரங்கள்! எவ்வளவு விபரீதமான அடையாளக் குறிப்புகள்!

ஃபேர்பாக்ஸ் - போபர்ஸ் - சுவிஸ் வங்கி - இவைதான் அந்த வழிகாட்டும் கை காட்டி மரங்கள்! கலங்கரை விளக்கங்கள்!

நாடு எனும் கப்பல்; நங்கூரம் போடப்பட்டுக் கூட நிற்கவில்லை!

கிட்டத்தட்ட கரை தட்டிவிட்டதென்றே கூறலாம்!

மத்திய அரசின் பட்ஜெட்! அதற்குப் பாராட்டுகள்! பளபளப்பு வரவேற்புகள்! ஆனால் உண்மை என்ன?

அதற்கு முன்பாகவே பெட்ரோல், நிலக்கரி, சிமெண்ட், சர்க்கரை, மருந்து வகைகள், சமையல் எண்ணெய், உருக்கு போன்ற பொருள்களின் விலையை அரசு உயர்த்தி - முழுச் சுமையும் ஏழை எளியோர் தலையில் விழுமளவுக்குச் செய்யப்பட்டாகி விட்டது!

அதனையடுத்து ரயில் கட்டண உயர்வு - தபால் தந்தி தொலைபேசி கட்டணங்களின் உயர்வு - ஏழைகளை நடுத்தர மக்களைத் தாக்கிடும் கணைகளாக ஏவப்பட்டுள்ளன!

மக்கள் மன்றங்களின் உச்ச மன்றங்களில் ஒன்றாகக் கருதப்படும் டெல்லி மாநிலங்களவையிலேயே ஜனநாயக முறைக்கு மாசு கற்பிக்கும் செயல்களுக்குத் தூண்டிவிடும் சக்தியாக ராஜீவ் காந்தி இருந்தார் என்பதும் குடியரசுத் துணைத் தலைவர் சங்கர் தயாள் சர்மாவே மனமுடைந்து பதவி விலகத் தயார் என்று அறிவித்தார் என்பதும் - நடுநிலை யாளர்களின் நெஞ்சைக் குலுக்கும் நிகழ்ச்சிகளன்றோ! எனவே, தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், அலுவலர்கள்,

இளைஞர்கள், மாணவர்கள், மகளிர் ஆகிய அனைத்துப்பகுதி மக்களும் இன்றுள்ள நாட்டுநிலை குறித்த தங்களின் அதிருப்தியைக் காட்டிட மார்ச் பதினைந்தாம் நாள் முழு அடைப்பில் கலந்து கொள்ள வேண்டியது கடமையாகும்!

முழு அடைப்பை முறியடிப்போம் என்றும் - சவாலாக ஏற்போம் என்றும் தமிழ் நாட்டு இந்திரா காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் அதன் தலைவர் விடுத்துள்ள அறிக்கை குறித்து தி.மு.க. - மார்க்சிஸ்டு - இந்திய கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சார்பில் தரப்பட்டுள்ள மறுப்பு அறிக்கையை நீயும் படித்திருப்பாய்!

ஒவ்வொரு மாவட்டத்திலும் - ஒன்றியத்திலும் - நகரங்களிலும் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகளுடன் அமைப்பு ரீதியாகத் தொடர்பு கொண்டு மார்ச் பதினைந்தாம் நாள் முழு அடைப்பு வெற்றியடைய ஒத்துழைப்பு நல்கிட உடனே ஆவன செய்திட வேண்டுகிறேன்.

எங்கள் அறிக்கைகளில் கேட்டுக் கொண்டிருப்பது போல - எள் முனையளவு கூட வன்முறைக்கு இடம் அளிக்காமல் - முழு அடைப்பு நடத்தப்பட வேண்டியது உன் போன்ற உடன்பிறப்புகளின் கடமையும் - தோழமைக் கட்சிகளின் செயல் வீரர்களின் கடமையுமாகும்!

அத்யாவசியமான பணிகளுக்கு எவ்விதக் குந்தகமும் முழு அடைப்பின் காரணமாக ஏற்படாமல் பாதுகாத்திட வேண்டும்!

ஒருநாள் தொல்லையினைப் பொதுமக்களும் பொறுத்துக் கொண்டு - முழு அடைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும்!

தீய நோக்குடன் திசைதிருப்ப முயல்வோர் யாராயினும் அவர்களைப் பொதுமக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டிய பணியும் உனக்கு உண்டு!

அமைதி வழி - அற வழி - அதுவே நமது வழி! இஃதன்றிப் பிறவழி தேவையற்றது! தீதானது! அன்றும், இன்றும் என்றுமே இதனை உணர்ந்து நடைபோடும் நீ மார்ச் பதினைந்தாம் நாள் முழு அடைப்பு எங்கணும் வெற்றியென்ற சங்கம் முழங்கிடத் தயாராகு!

அன்புடன்

மு.க.

11-03-1988

1554. எதையும் தாங்கும் இதயத்துடன் எடுத்த பணி முடித்திடுவோம்!

உடன்பிறப்பே,

முழு அடைப்பு தொழிலாளர்களுக்கு எதிரானதாம்!

மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருந்து நாடு மீண்டு வரும் போது இந்த முழு அடைப்பு தேவையற்றதாம்!

பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுமாம்!

முழு அடைப்பில் கலந்து கொள்ளும் அரசுத்துறை நிறுவன ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமாம்!

இவ்வாறு மத்திய தொழில் அமைச்சர் வெங்கல்ராவ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

பந்தை முறியடிப்போம்!

சவாலாக ஏற்றுக் கொண்டு எதிர்ப்போம்!

இவ்வாறு இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் முழக்கமிடு கின்றனர்!

அனைத்திந்திய முழு அடைப்புக்கு மத்திய அரசும் - இ.காங்கிரசும் - ஆளுங்கட்சி ஆதரவு ஏடுகளும் - எப்படியோ ஒரு வகையில் நல்ல விளம்பரத்தை வழங்கியுள்ளதாகவே நான் கருதுகிறேன்.

இந்தக் கடிதம் நான் எழுதுகிற வரையில் தமிழ்நாடு முழுதும் - பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்டோர் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தோர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் சிறைபிடிக்கும் படலம் தொடருகிறது!

இந்த முழு அடைப்பு, தொழிலாளர்களுக்கு விரோதமானது என்று வெங்கல்ராவ் கூறியிருப்பதுதான் நமக்கு விலாநோகச் சிரிப்பை வரவழைக்கிறது!

ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிற்சாலைகள், ஆலைகள் நாடு முழுதும் மூடப்பட்டு லட்சக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள், நாதியற்று நடுத்தெருவில் நிற்பதை சுட்டிக்காட்டி, அவர்தம் நலிவு தீர்த்திட முன்வராத ராஜீவ் அரசின் மூர்க்கத்தனத்தைக் கண்டித்து முழு அடைப்பு நடைபெறுகிறது! இது எப்படி தொழிலாளர்க்கு விரோதமானதாகும்?

மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருந்து நாடு மீண்டு வருகிறதாம் - அதனால் முழு அடைப்பு தேவையற்றது என்கிறார் மத்திய அமைச்சர்!

கஷ்டமான சூழ்நிலையில் இருந்து நாடு மீண்டு வருவது உண்மையானால்; மத்திய அமைச்சர் வெங்கல்ராவின் வாதப்படி பந்த் தேவையற்றதுதான்!

மேலும் மேலும் கஷ்டமான சூழ்நிலைக்கு நாடு தள்ளப் படுகிறது என்பது தெளிவான உண்மையாக இருக்கும்போது - பந்த் தேவையான ஒன்றுதானே!

பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் என்கிறார் டெல்லி மந்திரி! அதையே எதிரொலிக்கிறார் தமிழக ஆளுநர்!

திரிபுராவில் கம்யூனிஸ்டு ஆட்சியை எதிர்த்து இந்திரா காங்கிரஸ் பந்த் போராட்டம் நடத்தியபோது அந்த மாநிலப் பொதுமக்களுக்கு ஒருநாள் அசௌகரியம் ஏற்படுமென்று தோன்றவில்லையா?

ஆந்திராவில் தெலுங்குதேச ஆட்சியை எதிர்த்து, இந்திரா காங்கிரஸ் போராட்டம் நடத்தியபோது அந்த மாநிலப் பொதுமக்களுக்கு ஒரு நாள் அசௌகரியம் ஏற்படுமென்று தெரியவில்லையா?

மேற்கு வங்கத்தில் கம்யூனிஸ்டு ஆட்சியை எதிர்த்து, இந்திரா காங்கிரஸ் பந்த் போராட்டம் நடத்தியபோது அந்த மாநிலப் பொதுமக்களுக்கு ஒருநாள் அசௌகரியம் ஏற்படுமென்று நினைக்கவில்லையா?

ராஜீவ் காந்தி ஆட்சியை எதிர்த்து இந்தியாவில் முழு அடைப்பு நடத்த அனைத்துக் கட்சிகளும் முன்வந்தால் மட்டும் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டு விடுவதாக இ.காங்கிரஸ்; முதலைக் கண்ணீர் வடிப்பது வேடிக்கையாக இருக்கிறது!

ஒரு அநியாய - அராஜக - ஊழல் சாம்ராஜ்யத்தை எதிர்த்துத் தங்கள் கண்டனத்தை வெளிப்படுத்தப் பொதுமக்கள் ஒருநாளைக்குத் தங்கள் சிரமங்களை நிச்சயம் பொருட்படுத்தமாட்டார்கள்!

பொருட்படுத்தக் கூடாது என்று நாட்டு நலனில் அக்கறையுள்ள அனைவரையும் நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அமைதியான போராட்டத்தில் கலந்து கொள்ளும் அரசுத் துறை நிறுவன ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென இந்திரா காங்கிரஸ் அரசு எச்சரிக்கிறது!

இதே இ.காங்கிரஸ்தான் ஆந்திராவில் என்.டி.ஆர். அரசுக்கு எதிராக ஒரு பிரமாண்டமான என்.ஜி.ஓ. போராட்டத்தைத் தூண்டிவிட்டு நடத்தியது என்பதை இ.காங்கிரஸ் கட்சியினர் மறந்து விட்டிருந்தாலும் இந்த நாடு மறந்து விடவில்லை!

தோழர் ஈ.எம்.எஸ். கேரளத்தில் அரசு நடத்தியபோது மன்னத் பத்மநாபன் நடத்திய போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி ஊக்கப்படுத்தியது யார்? மத்தியில் அரசோச்சிய காங்கிரஸ் கட்சி அல்லவா? அப்போது கேரளாவுக்குச்சென்று ஆய்வு நடத்தி; கம்யூனிஸ்டு ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது இன்றைய ராஜீவின் அன்னையார் இந்திரா காந்தி அல்லவா? மக்கள் விரும்பவில்லை எனக்கூறி இந்திராவின் சிபாரிசை ஏற்று, பண்டித நேரு கேரள கம்யூனிஸ்டு அரசைக் கவிழ்த்தது மறந்து விட்டதோ?

இப்படி ஜனநாயகத்துக்கு புறம்பாகவும் எதிர்க்கட்சிகளின் ஆட்சிகள் மாநிலங்களில் நடப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாமலும் - தேவையற்ற போராட்டங்களை நடத்திப் பழக்கப்பட்ட காங்கிரசார்தான் - இன்றைக்கு இந்தியாவுக்கு மிகமிக அவசியமாகத் தேவைப்படுகிற முழு அடைப்பு மூலம் மக்கள் காட்ட விரும்புகிற ஜனநாயகப் போராட்ட உணர்வை சவாலுக்கு அழைக்கிறார்கள்!

அவர்களின் சவாலை எதையும் தாங்கும் இதயத்தோடு ஏற்றுக் கொண்டு -

முழு அடைப்பு வெற்றிபெற

அறவழி அமைதி வழியில்
அண்ணா வகுத்த வழியில்

அரசின் மிரட்டல் உருட்டல்கண்டு
அஞ்சி நடுங்காமல்
உறுதி படைத்த நெஞ்சுடன்
நிமிர்ந்து நிற்போம்!

எந்த நிலையிலும் நிதானம் இழக்காமல் எதிர்ப்புகளை அலட்சியப்படுத்தி எடுத்த பணியை முடித்திடுவோம்!

அன்புடன்

மு.க.

13-03-1988

1555. பாட்டைத் திருத்தலாம்; பாட்டையைத் திருப்ப முடியுமா?

உடன்பிறப்பே,

பொய்யைச் சொன்னாலும் பொருத்தமாகச்
சொல்லுங்கடா – அட
போக்கத்த பசங்களா!

உடுமலை நாராயணக் கவிராயர் அவர்கள் எழுதிய மூட நம்பிக்கையொழிப்பு குறித்த பாடல் ஒன்றில் வரும் வரிகள்தான் இவை!

ஆணித்தரமாகவும் அழுத்தம் திருத்தமாகவும் அவரது பாடல்களில் ஒலிக்கும் சொற்கள் வேகமாகச் சுழன்று வீசும் சாட்டையடிகள் போன்றவை!

இந்தப் பாடல் வரிகள் இப்போது ஏன் – எனக்கு நினைவுக்கு வந்தன தெரியுமா?

அனைத்திந்திய அளவில் ராஜீவ் காந்தியின் அரசின் போக்கைக் கண்டித்தும் – அவர் பதவி விலக வேண்டுமென்று கோரியும் நடைபெற்ற முழு அடைப்புப் போராட்டம் வெற்றியடைந்துள்ளதையும் – குறிப்பாகத் தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் உள்ளிட்ட ஓரிரு கட்சிகளைத் தவிர மற்ற கட்சிகள் கலந்து கொண்டு நடத்திய முழு அடைப்பு மகத்தான வெற்றி பெற்றுள்ளதையும் சகித்துக் கொள்ள முடியாத சிலரும் – அந்தச் சிலரின் தயவுக்காகத் தவம் இருக்கும் ஏடுகள் சிலவும் – பந்த் பிசுபிசுத்தது என்று உரக்கக் கூச்சலிடுவது கண்டதும்; எனக்கு உடுமலை நாராயணக் கவிராயரின் பாடல் வரிகள் நினைவுக்கு வந்துவிட்டன!

அவர் முதியவர் – பெருங்கவிஞர் – பழம்புலவர் – அவரளவுக்கு என்னால் கடுமையான பதப்பிரயோகம் செய்ய இயலாது!

ஆனால் என் நினைவைத் தொட்ட அந்தப் பாடல் வரிகளை உனக்குச் சொல்லாமல் இருக்க முடியவில்லை!

முறியடிப்போம் முழு அடைப்பை! ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு பந்தைத் தோற்கடிப்போம்! வாருங்கள் எல்லோரும் வரிந்து கட்டுங்கள்! என வானத்துக்கும் பூமிக்குமாக யார் குதித்தார்களோ; அந்தக் காங்கிரஸ்காரர்களின் அலுவலகம் உள்ள சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் அமைந்திருக்கும் கடைகள் அனைத்துமே மூடப்பட்டு வெறிச்சோடிக் கிடந்த காட்சியை பெரும்பாலான ஏடுகள் புகைப்படமெடுத்தும் - செய்தியாகவும் வெளியிட்டுள்ளன!

முழு அடைப்பு நடந்த நாளில் தொலைக்காட்சியில் செய்திகள் பாவம்; மிகவும் அழுது புலம்பின!

தங்குதடையின்றி ரயில் போக்குவரத்து நடந்தது என்று கூறி ரயில் போகும் படத்தையும் காட்டினர்! அந்தோ பரிதாபம்! எல்லாப் பெட்டிகளும் காலியாகவே இருந்தன!

ஒரு வெங்காயக் கடை - ஒரு தக்காளிக் கடை - அதில் வியாபாரம் நடப்பது போல ஒரு நாடக ஒத்திகை! அரங்கேறியவர்களோ இ.காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில அமெச்சூர் நடிகர்கள்! இதைப் படம் பிடித்துக் காட்டிய தொலைக்காட்சியினருக்கு, மார்ச் 15ஆம் தேதியன்று ஒரு ஜவுளிக்கடை - ஒரு மளிகைக் கடை கூட படம் பிடிப்பதற்கு கிடைக்காமல் போனதுதான் ஆச்சரியம்!

மதுரையிலிருந்து 15ந் தேதி காலை புறப்பட்ட வைகை எக்ஸ்பிரசில் எட்டு பேர் மட்டுமே பயணம் செய்திருக்கின்றனர்!

சென்னையிலிருந்து 15ந் தேதி காலை சேலம் சென்றடைந்த ஏற்காடு ரயில் வண்டியில் பதினெட்டு பேர் மட்டுமே பயணிகள் சேலத்தில் இறங்கினர் - பிறகு வண்டி காலியாகச் சென்றதாம்!

கோவை எக்ஸ்பிரஸ் ரயிலில் பத்து பேர் மட்டுமே சேலத்தில் இறங்கியுள்ளனர்!

திருச்சி சென்னை பல்லவன் எக்ஸ்பிரஸ் ரயிலில் 13 பேர் மட்டுமே பயணம் செய்தனர்!

ரயில்கள் மட்டுமல்ல; விமானங்களிலும் இதே கதைதான்! போதிய பயணிகள் இல்லாத காரணத்தால் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்கள் சிலவற்றின் புறப்படும் நேரம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலிருந்து திருப்பதி செல்லும் வாயு தூத் விமானம் ஒரே ஒரு பயணியுடன்தான் சென்னையை விட்டுப் புறப்பட்டிருக்கிறது. நெய்வேலி செல்லும் வாயு தூத் விமானத்திலோ இரண்டு பேர் மட்டுமே பயணம் செய்திருக்கின்றனர்.

விமானங்களில் மட்டும்தானா?

இப்படித்தான் பேருந்துகளிலும்!

அதுவும் சென்னைப் பொதுமக்களுக்கு பந்த் அன்று ஒரு சிறப்புச் சலுகை!

எதையெடுத்தாலும் ஓரணா ஒன்றரையணா என்பார்களே அது போல - எவ்வளவு தூரம் பயணம் செய்தாலும் ஒரு ரூபாய் கொடுத்தால் போதும்; என்று மூன்று நாட்களாகப் பெரும் அறிவிப்பு!

ஆனால் - ரயில்கள் ஓடலாம்; பஸ்கள் ஓடலாம்; அவை காலியாக ஓட வேண்டும்! மக்கள் அவற்றை 15ந் தேதி புறக்கணிக்க வேண்டும்! என்று விடுத்த வேண்டுகோளையேற்றுப் பொதுமக்கள் யாரும் அவற்றில் ஏறிடாமல் வெறுத்து ஒதுக்கினார்களே; அதுவன்றோ பெரும் வெற்றி! மாபெரும் வெற்றி!

ஆட்களே இல்லாத பஸ்கள் ஓடியதையும் - ரயில்கள் ஓடியதையும் - பெரிதாக விளம்பரப்படுத்தித் தம்பட்டம் அடித்துக் கொள்கிறவர்களைப் பார்க்கும் போது தமிழக மக்களுக்கு சிரிப்பு வந்தால் மட்டுமே போதாது! சிந்திக்கவும் வேண்டும்!

எதைச் சிந்திக்க வேண்டும்?

இரண்டு வெங்காயக் கடைகளையும் வெண்டைக்காய் வியாபாரங்களையும் நடுத்தெருவில் காட்டி - எல்லாக் கடைகளும் திறந்திருந்தன என்று தொலைக்காட்சியினர் கதையளக்கிறார்களே - பயணிகள் இல்லாத பஸ்களையும் ரயில்களையும் காட்டி; ரயில்கள் ஓடின! பஸ்கள் ஓடின! என்று பிரச்சாரம் செய்கிறார்களே - இந்த முழு அடைப்பு எவ்வளவு பெரிய

வெற்றி என்பதை நேரடியாகவே உணர்ந்துள்ள தமிழ்நாட்டு மக்களிடமே இந்தப் புளுகு புளுகுகிறவர்கள்; இப்படித்தானே தொலைக்காட்சி, வானொலிகளில் இலங்கையைப் பற்றியும் புளுகிக் கொண்டிருப்பார்கள் என்பது இப்போது அரைகுறையாக இல்லாமல் முழுமையாகவே தெளிவாகி விட்டது!

பள்ளிகள் நடக்கின்றன பாரீர்! பாலர்கள் படிக்கின்றனர் பாரீர்! மருத்துவமனைகளில் சிகிச்சை நடக்குது காணீர்! டாக்டர்கள் அங்கே இருக்கின்றனர் காணீர்! சாலையில் போக்குவரத்துகள்! ஆலையில் வேலைகள்! எல்லாம் சரியாகிவிட்டது! இந்திய அமைதிப் படையினர் ஈழத் தமிழகத்தை சொர்க்க பூமியாகவே மாற்றிவிட்ட காட்சியென்ன காட்சி; அந்த மாட்சியென்னே மாட்சி! இதோ ஒருவர் இந்திய ராணுவத்தின் சேவை எமக்குத் தேவையென்று அவரே நமது தொலைக்காட்சி நிருபரிடம் ஒலிபெருக்கியில் கூறுவதை செவிமடுப்பீர்!

இவ்வாறு இங்குள்ள தொலைக்காட்சிகள்; தமிழ் ஈழத்தில் நாள்தோறும் விழும் பிணங்களை மறைத்து விட்டு - புண்ணுக்குப் புனுகு பூசும் காரியத்தைச் செய்து கொண்டிருக்கின்றன என்பதை; பந்த் குறித்து தொலைக்காட்சி வெளியிட்ட பித்தலாட்ட செய்திகளுக்குப் பிறகும் தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியுமா?

தொலைக்காட்சிக்கும் வானொலிக்கும் இப்படிப் புளுகுணிப் பிரச்சாரம் செய்கிற வேலையைத் தவிர - மற்ற நேரமெல்லாம் இந்திரா காங்கிரஸ் பிரச்சாரம் செய்யத்தானே ஒதுக்கப்படுகிறது!

பந்த் தோல்வியடைந்துவிட்டது. அதனால் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி கூறுகிறேன் என்று டெல்லியிலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மூப்பனார் விடுத்துள்ள செய்தியை தொலைக்காட்சியும், வானொலியும் வாய் கிழியக் கத்திக் கூவுகின்றன!

ஆனால் - எல்லோருடைய வரிப்பணத்திலும் நடைபெறுகிற தொலைக்காட்சியும், வானொலியும் - பந்த் வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி என்று நானும், நல்லசிவன் அவர்களும், மாணிக்கம் அவர்களும் வெளியிட்ட செய்தியைக் கூட ஒரு வரி சொல்ல மறுத்து விட்டன.

திருச்சியிலே காங்கிரஸ் கூட்டம் என்றால் நடப்பதற்கு முன்பும் தொலைக்காட்சி, வானொலியில் அறிவிப்பு! நடந்த பிறகும் விளம்பரம்; தொலைக்காட்சி, வானொலிகளில்! ஆனால் லட்சக்கணக்கான மக்கள் திரளும் எதிர்க்கட்சிகள் பொதுக்கூட்டங்கள், நிகழ்ச்சிகளுக்கு தொலைக்காட்சியினரும் - வானொலியாரும் வருவதே இல்லையே ஏன்? அதற்கொரு ரயில் நிறுத்தப் போராட்டம் தேவைப்படுகிறது என்கிறார்களா? ஒன்று - வானொலி, தொலைக்காட்சிகளில் காங்கிரஸ் நிகழ்ச்சிப் பிரச்சாரங்களை நிறுத்த வேண்டும் - அல்லது எதிர்க்கட்சி நிகழ்ச்சிகளையும் தயக்கமின்றிக் காட்டிட, விளம்பரப்படுத்திட முன்வர வேண்டும்! இல்லையேல் அதற்கொரு போராட்டம்; வானொலி நிலையம் - டெலிவிஷன் நிலையத்துக்கு முன்பு அல்ல; மத்திய அரசின் ரயில்களுக்கு முன்பு நடத்தித்தான் தீரவேண்டுமென்றால் அது குறித்து எதிர்க்கட்சிகள் அனைத்தும் கலந்து பேசி விரைவில் முடிவு எடுத்தாக வேண்டும்.

மின் சப்ளை - குடிநீர் - பால் விநியோகம் எவ்விதத் தடையுமின்றி நடைபெற்றன. அதனால் அந்த பந்த் தோல்வியடைந்தது என்பது போல சில பிரமுகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அவ்வாறே சில ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

முழு அடைப்பு அறிவித்த கட்சிகளின் சார்பில் - விடுக்கப்பட்ட வேண்டுகோளிலேயே மின் சப்ளை, குடிநீர், பால்விநியோகம், மருத்துவ வசதி போன்ற அத்யாவசிய பணிகளுக்கு எவ்விதத் தடங்கலும் ஏற்படக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவசரத்தில் அதைக் கூடப்படிக்காமல் ஆனந்தநர்த்தனம் (?) ஆடுகிறவர்களைப் பார்த்தால் இப்படியும் விதூஷகர்களா? என்று கேட்கத்தான் தோன்றுகிறது!

புலிக்குப் பயந்த பசங்கள் எல்லாம்
வந்தென் மேலே விழுங்கடா!
புலியை அமுக்கிப் பிடித்துக்
கொண்டால் அடித்து நொறுக்க
மாட்டேனா?

பழைய திரைப்படமொன்றில் கலைவாணர் கிருஷ்ணன் பாடிய நகைச்சுவைப் பாடல் இது!

அதைப் போல தமிழ்நாட்டில் சமூக விரோதிகள் எனக் கூறி நகராட்சித் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சிகளின் மாவட்டநிர்வாகிகள் உள்ளிட்ட செயல்வீரர்கள் ஐம்பதாயிரம் பேரை சிறையில் அடைத்துவிட்டு - அதாவது புலியை அமுக்கிப் பிடிக்கச் சொல்லி விட்டு - அடித்து நொறுக்க மீசையை முறுக்கினார்கள் இந்திரா காங்கிரஸ் பிரமுகர்கள்!

ஆனால்; அமுக்கியவர்களையெல்லாம் தூக்கி எறிந்து விட்டு புலி; ஆற்றலைக் காட்டி விட்டது!

அந்தப் புலிதான் தமிழக மக்களின் சக்தி! ரயில் விடுகிறாயா? விட்டுக் கொள்! அதில் ஏறிட யார் வருவார்? என முகத்தில் கரிபூசி முறியடிப்பு வீரர்களை (?) முச்சந்திக்குத் துரத்தி விட்டது அந்த சக்தி!

பஸ் விடுகிறாயா பஸ்? விட்டுக் கொள்! அதில் நாலைந்து கதர் சட்டை வாலாக்களைத் தவிர அதுவும் கூலிக்குக் கிடைத்தவர்கள் - அவர்களைத் தவிர வேறு யார் ஏறுவர்? எனக் கூறி சவால் போர்வழிகளுக்கு சரியான பாடம் கற்பித்தது அந்த சக்தி!

உண்மைகளைப் படம் எடுக்கச் சென்ற நிருபர்கள், பத்திரிகைகளின் புகைப்படக்காரர்கள் பந்த் எதிர்ப்பாளர்களால் படுகாயப்படுத்தப்பட்டுள்ள செய்திகளை அநேகமாக எல்லாப் பத்திரிகைகளும் வெளியிட்டுள்ளன.

இதிலிருந்து பந்த்தின் வெற்றி கண்டு ஆளுங்கட்சியினரும் அவர்தம் ஆதரவுக் குண்டர்களும் எவ்வளவு எரிச்சல் அடைந்துள்ளனர் என்பது விளங்குகிறது அல்லவா?

என்னதான் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினாலும் - அடக்குமுறைகள் அதிரடிகளாகக் கிளம்பும் என அச்சுறுத்தினாலும் - ராஜீவ் குடும்பத்தின் ஊதுகுழல்களான டெலிவிஷனும், ரேடியோவும் தொண்டைக்கிழியக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தாலும் - அனைத்தையும் மீறி உன் போன்ற அனைத்துக் கட்சிச் செயல் வீரர்களும் உறுதியுடன் நின்று - கட்டுப்பாடு காத்து, கடமையுணர்ந்து ஆற்றிய பணிக்கு அரும்பெரும் வெற்றி கிடைத்துள்ளது!

ராஜீவ் அரசின் கொடுங்கோன்மை - கோணல் சேட்டைகள் - ஊதாரித்தனம் - ஊழல் - ஜனநாயக விரோதச் செயல் - இவற்றை எதிர்த்து தமிழ்நாட்டு மக்கள் மட்டுமின்றி இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஏகோபித்து ஒலித்த போர்ப்பிரகடனம்தான் மார்ச் 15ஆம் நாள் முழு அடைப்பு!

இந்த உண்மையைத் தங்களுக்கு வசதியாக மறைத்துக் கொண்டு - பொய்களை வாரியிறைப்போரின் செயலைக் கண்ணுறும் பொழுது, உடுமலை நாராயணக் கவிராயரின் பாடலை நான் பாட விரும்பாவிட்டாலும், அது விட மாட்டேன் என்கிறதே, என் செய்ய!

அதனால் கடுமையைக் குறைத்துப் பாட முயற்சி செய்கிறேன்!

பொய்யைச் சொன்னாலும் பொருத்தமாகச்
சொல்லுங்கய்யா - அந்தோ;
போக்கத்த மனுஷர்களா!

பாட்டைத் திருத்தலாம் - ஆனால் ஒரு சிலர் போகும் பாட்டையை நம்மால் திருப்ப முடியுமா? அவர்களுக்குப் பழகிய பாட்டை ஆயிற்றே! அதனால் மாற்றிக் கொள்ள மாட்டார்கள்! எனினும் மக்கள் சக்தியிடம் மாட்டிக் கொண்டே தீர்வார்கள்!

அன்புடன்

மு.க.

17-03-1988

1556. கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?

உடன்பிறப்பே,

அரசியல் சாசனத்தில் 59வது திருத்த சட்டமுன் வடிவு எதிர்க்கட்சிகளின் வெளிநடப்புக்கிடையே நிறைவேறியுள்ளது - மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகளின் கடுமையான கண்டனக் குரல்கள் எழுந்ததின் காரணமாக இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் நெருக்கடி நிலை அறிவிப்பதற்கு வசதியாகக் கொண்டு வரப்பட்ட அந்த மசோதாவுக்கு அரசின் சார்பிலேயே திருத்தம் கொண்டுவந்து, இந்தியாவின் எந்தப் பகுதியிலும் என்ற சொற்களுக்கு பதிலாக பஞ்சாப் அல்லது பஞ்சாப்பின் சில பகுதிகளில் என்று மாற்றப்பட்டுள்ளது.

இந்தியா முழுமைக்கும் மீண்டும் வர இருந்த எமர்ஜென்சி - பஞ்சாப் என்ற அளவோடு நிறுத்தப்பட்டுள்ளது! எதிர்க்கட்சிகளின் குரலுக்கு கிடைத்த ஓரளவு ஆறுதல் இது என்ற போதிலும்; எமர்ஜென்சி பிரகடனத்தினால் மட்டும் பஞ்சாப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியுமென்று எதிர்க்கட்சிகள் கருதவில்லை.

பஞ்சாப் பிரச்சினையை குரங்குப் புண்ணாக்கி விட்ட குற்றம் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தது என்பதை நான் பல முறை சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

இப்போது எமர்ஜென்சி மருந்து போட்டு அந்தப் புண்ணை ஆற்றிட முடியுமா என்று புண்ணை பெரிதாக்கியவர்களே மருத்துவர்களாக மாறி யோசிக்கிறார்கள்!

உடன்பிறப்பே, இப்போது நிறைவேறியுள்ள நெருக்கடி நிலை மசோதா; பஞ்சாப் மாநிலத்துக்கு மட்டும்தான் என்றாலும் - அந்த மசோதாவில் உள்ள முக்கியமான குறைகளைச் சுட்டிக்காட்டி; அவசர அவசரமாக இயற்றப்பட்டுள்ள சட்டம் இது என்பதால் சங்கடங்கள் ஏற்படத்தான் செய்யுமென்றும், விநோத விளைவுகள் உருவாகுமென்றும் தினமணி (சென்னை மார்ச் 16) தலையங்கம் தீட்டியுள்ளது.

அந்தத் தலையங்கத்தில் முக்கியமான அரசியல் சாசனச் சட்ட திருத்த மசோதா, பொதுமக்களிடையே விவாதத்துக்கு விடப்படாதது மட்டுமல்ல; நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரல் ஆலோசனைக் கமிட்டியில் கூட வைக்கப்படவில்லை. எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒரு நாளில் திடீரென மசோதாவைத் தாக்கல் செய்து மறுநாள் அதன் மீது வாக்கெடுக்கும் அவசரப் போக்கு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினமணி தலையங்கம்; 1975ஆம் ஆண்டு இந்திரா காந்தி அம்மையார் அறிவித்த நெருக்கடி நிலைச் சட்டத்தையும் விமர்சிக்கத் தவறவில்லை. அப்படி விமர்சிக்கும்போது தினமணியின் அரசியல் பரந்த மனப்பான்மை எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை மட்டும் நீயும் நானும் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா?

எமர்ஜென்சி 1975ல் வந்தபோது; தமது முன் ஒப்புதலைப் பெறவில்லை என்பதைக் காரணம் காட்டி இந்திராவின் அமைச்சரவையிலிருந்து ஒரு அமைச்சர் கூட ராஜினாமா செய்யவில்லை. கட்சியை கலந்தாலோசிக்கவில்லையென்று ஒரு காங்கிரஸ் தலைவர் கூட கட்சியிலிருந்து விலகவில்லை. மனச்சாட்சிக்கு விரோதமான சட்டத்தை ஏற்கமாட்டோமென்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட ராஜினாமா செய்யவில்லை. எமர்ஜென்சி ஆட்சியை எதிர்த்து ஒரு மாநில முதல்வர் கூட பதவியைத் துறக்கவில்லை.

இப்படி எழுதிக் கொண்டே போகிறது மார்ச் 16 தினமணியின் தலையங்கப்பகுதி எழுதுகோல்!

ஜனதாக் கட்சி எமர்ஜென்சியை எதிர்த்து ஒழித்தது என்பதைக் குறிப்பிட தினமணி தவறவில்லை!

இந்திரா கொண்டுவந்த எமர்ஜென்சியை எதிர்த்து வீழ்த்திய ஜனதா ஆட்சியாளர்கள்; எமர்ஜென்சி கொண்டு வருவதற்கான வாய்ப்புக் கூறுகள் அரசியல் சாசனத்தில் அறவே இருக்கக் கூடாது என அகற்றிவிடவில்லை!

மாநில அரசுகளைக் கலைக்கும் அரசியல் சாசனத்தின் 356வது பிரிவை நீக்க வேண்டுமென்று கழக சார்பில் முரசொலி மாறன், புபேஷ் குப்தா, பி. ராமமூர்த்தி ஆகியோர் மாநிலங்களவையில் கொண்டு வந்த தனிநபர் மசோதாவையும் ஜனதா ஆட்சியாளர்கள் தோற்கடித்தனர்.

ஜனதா குறித்த விமர்சனத்தில் இறங்க விரும்பவில்லை. எனினும் இந்திரா காந்தியின் எமர்ஜென்சியை எதிர்த்த காரணத்தால் (பழைய காங்கிரஸ்) அதாவது புதிய ஜனதா இயக்கத்தினர் கொடுமையான அடக்குமுறைகளைத் தாங்கிக் கொண்டதை மறக்க முடியாது!

அதேபோல - இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு ஆளுங்கட்சி, தனது செயற்குழுவைக் கூட்டி இந்திராவின் எமர்ஜென்சி சட்டத்தை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியது என்றால் அது, தி.மு.கழகம்தான் என்பதை தினமணிகள் மறைத்தாலும், வரலாறு மறைத்து விடாது! இதோ தி.மு.க. செயற்குழு 1975 ஜூன் 27 காலை 11 மணிக்கு நிறைவேற்றிய தீர்மானத்தின் ஒரு பகுதி! 1975 ஜூன் 26 நெருக்கடி நிலைப் பிரகடனம்! மறுநாள் காலையில் தி.மு.க. நெருக்கடி நிலையை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றுகிறது -

உண்மையின் உருவம் மறைக்கப்பட்டு பொய்யின் நிழலில் நின்று கொண்டு எதிர்க்கட்சிகளை அடக்குவதற்குத் திட்டம் தயாரித்து, அந்தத் திட்டம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான போலிக் காரணங்களைத் தேடியலைந்து, வீண் அபவாதங்களை வாரியிறைத்து எடுத்ததற்கெல்லாம்; சதி - வெளிநாட்டுத் தொடர்பு - பிற்போக்குவாதிகள் என்ற சொற்கணைகளைப் பொழிந்து காலா காலத்திற்கும் இந்திய நாட்டு மக்களுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் திருமதி இந்திரா காந்தி நேற்றைய தினம் (26.6.75) அதிகாலையில் சர்வாதிகாரத்திற்கான தொடக்க விழாவை நடத்தியிருக்கிறார் ....

.... சதி நடத்துவோர், வன்முறையில் ஈடுபடுவோர், தகாத முறையில் பேசுவோர், எழுதுவோர், தண்டிக்கப்பட ஏற்கனவே எத்தனையோ சட்டங்கள் இருக்கும் போது நாட்டை சர்வாதிகாரப் பாதைக்கு இழுத்துச் செல்லும் வகையில் இந்த அவசரச் சட்டம் அமலுக்கு வருவது தேவைதானா? ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறோம் எனக்கூறி, சர்வாதிகார கொற்றக்குடையின் கீழ் தர்பார் நடத்திட எடுக்கப்படும் முயற்சி, நாட்டுக்கு ஏற்றதுதானா?

இவை, அந்தத் தீர்மானத்தின் சில பகுதிகள்! உடன்பிறப்பே, இந்தத் தீர்மானத்தை தி.மு.க. வாபஸ் பெற்றுக் கொண்டால், கேரளத்தில் இந்திராவின் எமர்ஜென்சியை ஆதரித்த அச்சுதமேனன் அரசுக்கு ஓராண்டுக் காலம் மேலும் பதவி நீட்டிப்பு கொடுத்தது போல தி.மு.க. ஆட்சிக்கும் ஓராண்டு பதவி நீடிப்பு தரப்படும்

- இல்லையேல் முன்கூட்டியே ஆட்சி கலைக்கப்படும் என்று டெல்லியிலிருந்து தூது வந்த போதும் அதற்கு தி.மு.க. வளைந்து கொடுக்கவில்லை, ஆட்சி கலைக்கப்பட்டது! ஐநூறு பேர் மிசாக் கைதிகளாயினர்! அந்தக் கைதிகளில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் உண்டு! சிட்டிபாபு எம்.பி. சென்னை சிறையிலும், சாத்தூர் பாலகிருஷ்ணன் மதுரை சிறையிலும் மாண்டனர்! கழகத்தினர் மீது பல வழக்குகள்! குற்றச்சாட்டுகள்! விசாரணைகள்! அவையனைத்தும் அரசியல் காரணங்களுக்காக தொடரப்பட்ட வழக்குகள் (Politically Motivated) என்று ஜனதா தலைவர்களான மொரார்ஜி, ஜெகஜீவன்ராம், அசோக் மேத்தா, சாந்திபூஷண், ஜார்ஜ்பெர்ணான்டஸ், முதலியோர் சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களிலேயே அறிவித்தனர்.

ஜெய்ப்பூரில் திரு. சந்திரசேகரும் அவ்வாறே கூறினார்.

தினமணியில் தலையங்கம் எழுதியவருக்கு இவையெல்லாம் தெரியாது என்பதல்ல!

தி.மு.க.வுக்கு அப்படியொரு பெருமை அளிக்கவும் - நெருக்கடி நிலையை எதிர்த்து தி.மு.க.; நெருப்பாற்றில் நீந்த வேண்டியிருந்ததை நினைவுபடுத்தவும் - மனம் இடம் தரவில்லை! இடம் தராது!

அதுமட்டுமல்ல உடன்பிறப்பே; எமர்ஜென்சி அறிவிக்கப்பட்ட சில நாட்களுக்கெல்லாம் (ஜூலை 4) நானும் நாவலரும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் இல்லம் சென்று அவரை சந்தித்து அமைச்சரவையிலிருந்து அனைவரும் ராஜினாமா செய்துவிட்டு, ஜனநாயகம் காத்திடும் அறப்போரில் அவரது தலைமையேற்கத் தயார் என்றுரைத்தேன். அதற்குக் காமராஜர் அவர்கள்; பொறுமையாக இருங்கள். அவசரப்படாதீர்கள். இப்போது இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் ஜனநாயகம் இருக்கிறது. நீங்கள் ராஜினாமா செய்தால் அதுவும் போய் விடும். கொஞ்ச நாள் பொறுமையாக இருங்கள்! என்று கூறினார். இதனை நான் அப்பொழுதே எழுதியிருக்கிறேன். நெஞ்சுக்கு நீதி புத்தகத்திலும் குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. சஞ்சீவி ரெட்டி அவர்களிடத்திலும் அமைச்சரவை ராஜினாமா பற்றிக் கூறினேன். அவர் சென்னையிலேயே வந்து தங்கி, என்னையும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களையும் கலந்து பேசி, அமைச்சரவை ராஜினாமா செய்யக்கூடாது எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

எனது மணிவிழாவுக்கு (1984 ஜூன் 3) திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் அனுப்பிய வாழ்த்தில் குறிப்பிட்டிருப்பதை கவனித்தால் அன்றைய நிலைமை விளங்கும். அந்த வாழ்த்து வருமாறு:-

இருண்ட நெருக்கடி நிலை காலத்தில் நானும் கருணாநிதியும் இணைந்து பாடுபட்டதை நினைவு கூர்கிறேன். நெருக்கடி நிலையை எதிர்ப்பதால் தனது முதலமைச்சர் பதவிக்கு ஆபத்து என்ற போதிலும் கருணாநிதி அவர்கள், சர்வாதிகார திட்டங்களை எதிர்ப்பதில் உறுதியாக இருந்தார். நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட முதல் மூன்று மாத காலம் நானும் கருணாநிதியும் காமராஜரின் வழிகாட்டுதலையும் ஆசியையும் பெற்றோம்.

இருண்டகாலமான நெருக்கடி நிலை காலத்தில், தி.மு.கழகம் எத்துணை உறுதியோடு மத்திய அரசை எதிர்த்துப் போர்க்கோலம் பூண்டு நின்றது என்பதை - இன்னமும் இருட்டுக்குள் தள்ளி வைக்கவே சிலர் முயற்சி செய்கிறார்கள்!

அதன் ஒரு பகுதியே தினமணியின் தலையங்கம்!

எனினும் உடன்பிறப்பே, கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ? காரிருள்தான் சூரியனை மறைப்பதுண்டோ? பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ? என்ற பாவேந்தரின் கவிதைவரிகள் எடுத்துக் காட்டுவது போல -

தியாக தீபமாம் தி.மு.க.வை
ஜனநாயகத்திருவிளக்காம்
தி.மு.க.வை

உரிமைப்போர்ப்பாசறையாம்
தி.மு.க.வை

கறைச்சேறு
காரிருள்
பேரெதிர்ப்பு
எதுவுமே மறைத்து விடமுடியாது!

அன்புடன்

மு.க.

18-03-1988

1557. கழுத்து மணியை அறுத்திடும் காரியம்!

உடன்பிறப்பே,

1988-89ஆம் ஆண்டுக்கான தமிழக (பட்ஜெட்) நிதி நிலை அறிக்கை நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர் திவாரி அவர்களால் படிக்கப்பட்டுள்ளது.

நிதி நிலை அறிக்கையாக இல்லாமல் வெறும் தேர்தல் அறிக்கையாகவே அது அமைந்துள்ளதை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.

நிதி நிலை அறிக்கையின் முதற் பகுதியில் மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஒருமைப்பாட்டிலும் ஒற்றுமையிலும் எம்.ஜி.ஆர். மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். சாதி மத பேதமற்ற ஒருங்கிணைந்த நவபாரதத்தை உருவாக்க அயராது பாடுபட்டார்

இது அந்தப் பாராட்டின் ஒரு பகுதி! இந்தப் பாராட்டு குறித்து மகிழ்ச்சியடைகிறேன்! ஆனால் ஒன்று, ஒருமைப்பாட்டில் நம்பிக்கை - ஒற்றுமையில் நம்பிக்கை என்பதற்கு இந்திரா காங்கிரஸ்காரர்கள் கொண்டுள்ள பொருள் என்னவென்றுதான் நமக்கு விளங்கவில்லை.

தி.மு.க.வுக்கு இந்தியாவின் ஒருமைப்பாட்டிலும் ஒற்றுமையிலும் நம்பிக்கையில்லையென்று இ.காங்கிரசார் அடிக்கடி சபித்துக் கொண்டேயிருப்பார்கள்! ஏன் - என்ன காரணத்தால் அப்படிச் சொல்கிறீர்கள்? என்று யாராவது கேட்டால் மாநில சுயாட்சி கேட்பதே பிரிவினை வாதம் என்பார்கள்!

ஒரு முறை மேலவையில் மாநில சுயாட்சி பற்றி நான் பேசும்போது அ.தி.மு.க.வில் அமைச்சராக இருந்த நாவலர் அவர்கள் குறுக்கிட்டு; மாநில சுயாட்சி என்றால் பிரிவினை வாதமென்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கூட நினைத்திருந்தார்.

பிறகு நான் அவருக்கு விளக்கமளித்து மாநில சுயாட்சி என்பது பிரிவினைவாதமல்ல என்பதைப் புரியவைத்தேன் என்று சொன்னது எனக்கு நினைவிருக்கிறது!

இதோ; நான் கோடிட்டுக் காட்டும் வாசகம் கடந்த 1987-88ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை - மார்ச் 20 - 1987 அன்று பேரவையில் வைக்கப்பட்டதிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

இந்தியா உண்மையான கூட்டாட்சி நாடாகத் திகழ வேண்டும். மாநிலங்கள் உரிமையோடு கூடிய கூடுதல் அதிகாரங்களைப் பெற்ற தன்னாட்சி (சுயாட்சி) பகுதிகளாக விளங்க வேண்டும்

அதாவது எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் மத்தியிலே கூட்டாட்சி மாநிலங்களுக்கு சுயாட்சி என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

1974ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ராஜமன்னார் குழு அறிக்கை அடிப்படையில் சட்டப் பேரவையில் மாநில சுயாட்சி தீர்மானமே கொண்டுவரப்பட்டது!

நாட்டுப் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்ட கழகம்; மத்தியிலே உண்மையான கூட்டாட்சியும், மாநிலங்களில் சுயாட்சியும் அமைய வேண்டுமென்று தான் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது.

1972ல் புதிய கட்சி தொடங்கிய எம்.ஜி.ஆர். அவர்கள் சிறிது காலம் மாநில சுயாட்சிக் கொள்கைக்கு விரோதமாகப் பேசி வந்தார் என்றாலும்;

சட்டமன்ற மேலவையில் 14.3.83 அன்று நான் பேசும்போது; தி.மு.கழகம், தெளிவாகவும் திட்டவட்டமாகவும் மாநில சுயாட்சிக் கொள்கையில் இருக்கிறது. நாமெல்லாம் ஒன்றாக இருந்த போது நாமளித்த தேர்தல் அறிக்கையில் மாநில சுயாட்சி என்று குறிப்பிட்டிருப்பதை இப்போது தி.மு.க. திரும்பப் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை, விரும்பாது! என்று குறிப்பிட்டேன்.

உடனே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் எழுந்து; சுயாட்சிக்கும் தன்னாட்சிக்கும் வித்தியாசமில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதில் நாங்களும் பின்வாங்கவில்லை என்று திட்டவட்டமாகக் கூறினார்.

இவையனைத்தும் மேலவை நடவடிக்கை குறிப்புகளில் இடம் பெற்றுள்ளவையாகும்.

எதற்காக இவற்றையெல்லாம் நினைவு படுத்துகிறேன் என்றால் - மாநிலத்தில் சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி எனத் திராவிட முன்னேற்றக் கழகம் முழங்கினால் - அது ஒருமைப்பாட்டுக்கு விரோதம்! ஒற்றுமைக்குப் பகை! என்று கூறிடும் இந்திரா காங்கிரசின் திடீர் தேசியவாதிகள்,

கடந்த ஆண்டு பட்ஜெட்டிலே கூட முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் மாநில சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டிருப்பதை, எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான்!

மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்துவதால் ஒருமைப்பாட்டுக்கு விரோதமில்லையென்று மத்திய இந்திரா காங்கிரசார் கருதுவதால்தானே எம்.ஜி.ஆர். அவர்களை ஒருமைப்பாட்டிலும் ஒற்றுமையிலும் அக்கறையுள்ளவர் என வர்ணித்துள்ளார்கள்! அவர்களது பாராட்டு உதட்டளவில் வந்தது அல்ல - உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்தது என்றால், இந்த ஆண்டு பட்ஜெட்டில் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை ஏன் கோடிட்டுக் காட்டவில்லை?

மாநில சுயாட்சிக் கொள்கைக்காக வாதாடுவது ஒருமைப்பாட்டுக்கு ஊனமுண்டாக்குவதல்ல என்பதை எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மத்திய அமைச்சர் திவாரி வழங்கியுள்ள பாராட்டின் வாயிலாக இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் படிக்கின்ற அனைவரும் உணர்ந்திட முடியும்!

அப்படியானால் கடந்த சில ஆண்டுகளாக ஒவ்வொரு பட்ஜெட் உரையிலும் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்த மாநில தன்னாட்சி அல்லது மாநில சுயாட்சி என்ற சொற்றொடர் இந்த ஆண்டு டெல்லியில் படிக்கப்பட்ட பட்ஜெட் உரையில் காணாமற் போய்விட்டதற்குக் காரணம் என்ன?

உடன்பிறப்பே, ஒன்றைப் புரிந்துகொள்! ஒரு ஆறுமாதம் ஆளுநர் ஆட்சியென்கிற போதே மாநிலத்துக்கு அதிக அதிகாரம் கேட்பது என்ற உரிமை முடக்கப்பட்டு விட்டது!

இருக்கிற மாநில அதிகாரங்களையும் மத்திய அரசுக்கு எடுத்துக் கொள்வதில் யானைத்தீ பசி கொண்ட இந்திரா காங்கிரசின் ஆட்சி ஆதிக்கமே தமிழ் நாட்டுக்கு வந்து விடுமானால் என்ன ஆகும்?

எம்.ஜி.ஆர். ஒருமைப்பாட்டுக்கு உற்ற நண்பர். ஒற்றுமைக்குப் பாடுபட்டவர். நவபாரதத்தை உருவாக்க முனைந்தவர்

என்றெல்லாம் பாராட்டிக் கொண்டே மாநில சுயாட்சிக் கொள்கையை இந்த ஆண்டு பட்ஜெட்டில் இடம் பெறாமல் செய்து விட்டனர்!

ஆகா! நீ என்ன அழகு?
என்னே சௌந்தர்யம்?
ராஜா! கண்ணு! நீதான்
நல்லபிள்ளை - தங்கக் கட்டி!

என்று கொஞ்சிப் பேசிக்கொண்டே குழந்தையின் கழுத்து மணியை அறுத்திடும் காரியத்தைப் போல,

மிகத் திறமையான பாராட்டு!
வெகு திறமையான திருட்டு!

(பட்ஜெட் குறித்து மற்றவை நாளை எழுதுகிறேன்)

அன்புடன்

மு.க.

19-03-1988

1558. ஒதுக்கப்பட்ட தொகை; ஓடியது எங்கே? எங்கே?

உடன்பிறப்பே,

மார்ச் 18ந் தேதி 2.30 மணியளவில் திருச்சி வானொலி வாயிலாக தமிழக பட்ஜெட் பற்றிய கருத்துரைகள் ஒலிபரப்பப்பட்டதை செவிமடுத்தேன். மத்திய அரசுக்கு புகழார்ச்சனைகள் செய்வோராகப் பார்த்துப் பிடித்து அவர்களைக் கொண்டு சகஸ்ரநாம அர்ச்சனை - லட்சார்ச்சனை நடத்தி; அதிலே ஒரு திருப்தி காண்பதுதானே இன்றைய பிரச்சார பீரங்கிகளான தொலைக்காட்சிக்கும் வானொலிக்கும் முக்கியமான திருப்பணி!

பட்ஜெட் குறித்த பாராட்டுப் பஜனை பாடியோர் பட்டியலில், திருச்சியில் உள்ள இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் நண்பர் கோபால் அவர்களும் இடம் பெற்றிருப்பதறிந்து - விஷயம் புரிந்தவராயிற்றே; அவர் என்ன சொல்கிறார் என்று காதைத் தீட்டிக் கொண்டு கேட்டேன்.

இது ஒரு புதுமையான பட்ஜெட் என்று தொடங்கினார். பாராட்டு! பாராட்டு! பாராட்டு! அது அவரது அபிப்ராயம்; அதிலே குறுக்கிட நீயும் நானும் யார்? சுதந்திர நாட்டில் அவரது கருத்தைச் சொல்ல அவருக்கு உரிமை இல்லையா, என்ன? நமக்கு ஏற்காத கருத்தை யாருமே சொல்லக்கூடாதா? பிரச்சினை இப்போது அதுவல்ல! பட்ஜெட்டில் என்ன புதுமையென்று சொன்னார் என்பதுதான் முக்கியம்!

அ.தி.மு.க. ஆட்சியில் மூன்று வருடத்தில் முப்பது லட்சம் வீடுகள் ஏழைகளுக்கு இலவசமாகக் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் ஏட்டளவில் தான் இருந்தது. இப்போது மத்திய நிதி மந்திரி திவாரி படித்துள்ள தமிழக பட்ஜெட்டில் அந்தத் திட்டத்துக்காக இருபத்தியேழு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று எக்ஸ்பிரஸ் நிருபர் பாராட்டியுள்ளார்.

1986ல் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களையொட்டி, மக்களுக்கு அ.தி.மு.க. அரசு அளித்த வாக்குறுதிதான் மூன்றே ஆண்டுகளில் முப்பது லட்சம் வீடுகள் ஏழைகளுக்கு என்ற திட்டமாகும்.

அப்பொழுதே நான் கேட்டிருக்கிறேன்; வீடு ஒன்றுக்கு குறைந்தபட்சம் பத்தாயிரம் ரூபாய் ஆகும்! முப்பது லட்சம் வீடுகள் இலவசமாகக் கட்டித் தருவதென்றால் மூவாயிரம் கோடி ரூபாய் ஆகும்! மூன்று வருடத்துக்கு மூவாயிரம் கோடி செலவழிப்பதென்றால் ஒரு வருடத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் வேண்டுமே; அதற்கான ஒதுக்கீடு உங்கள் பட்ஜெட் கணக்கில் எங்கேயிருக்கிறது என்பதாக!

அதற்கு அப்போதிருந்த அமைச்சர்கள் யாரும் சரியான பதில் சொல்லவில்லை. சுமார் மூவாயிரம் கோடி ரூபாய்க்குள்ளாகவே பட்ஜெட்டில் ஆண்டு வருமானம் காட்டப்படும் நிலையில் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் கோடி ரூபாய் வீடு கட்டித்தர மட்டும் எப்படி செலவழிக்கப் போகிறீர்கள் என்ற கேள்வி அன்றைய அமைச்சர்களுக்கு நியாயமாகப்பட்டாலும்; பார்! பார்! ஏழைகளுக்கு முப்பது லட்சம் வீடு கட்டுவதை கருணாநிதி எதிர்க்கிறான்! என்று புலம்பினர்!

எந்தக் கருணாநிதியைப் பார்த்து அப்படிச் சொன்னார்கள்?

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு லட்சம் வீடுகள் கட்டுவதாக அறிவித்து அதன் தொடக்கமாக ஆதிதிராவிடர்க்கும் மீனவர்களுக்கும் அறுபதாயிரம் இலவச காங்க்ரீட் வீடுகள் கழக அரசின் சார்பாக கட்டித் தந்த கருணாநிதியைப் பார்த்து!

இந்தியாவிலேயே முதன் முதலாகக் குடிசை மாற்று வாரியத்தைத் தமிழகத்தில் கழக அரசின் சார்பில் உருவாக்கி மண் குடிசைகளில் மடிந்தோர்க்கு மாடி வீடுகள் கட்டித் தந்த கருணாநிதியைப் பார்த்து!

பரவாயில்லை; என்னையும் கழக ஆட்சியையும் பரிகசித்தவர்கள் - சொன்னபடி முப்பது லட்சம் இலவச வீடுகள் கட்டும் திட்டத்தைத் தொடங்கினார்களா? ஆண்டுக்கு பத்து லட்சம் வீடு கட்ட ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்களா? இல்லை - இல்லவே இல்லை!

ஆகா! இந்தப் புதுமையான பட்ஜெட்டில் இதோ ஒதுக்கீடு செய்து விட்டார்கள் என்கிறார்; எக்ஸ்பிரஸ் நிருபர் - எனது நண்பர் கோபால்; வானொலியில் வழங்கிய கருத்துரை வாயிலாக!

இப்போது ஒதுக்கீடு செய்துள்ள தொகை எவ்வளவு? இருபத்தியேழு கோடி! ஆண்டொன்றுக்கு ஆயிரங்கோடி ஒதுக்கப்படவேண்டும் அவர்கள் அறிவிக்கும் திட்டப்படி! ஆனால் ஒதுக்கியிருப்பதாக திவாரி அவர்கள் படித்துள்ள பட்ஜெட்டில் இருபத்தியேழு கோடியென்று கூறப்பட்டுள்ளது!

இதுவே யானைப்பசிக்கு சோளப் பொரி என்பது போல - கடலிலே பெருங்காயம் கரைத்தது போல!

பட்ஜெட் தொடர்பாக (Demands for Grants) மானிய ஒதுக்கீடுகள் என்ற புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தேன். பட்ஜெட்டில் சொல்லப்பட்டுள்ள இந்த 27 கோடி ரூபாய் வீட்டு வசதி திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறதா என்று தேடினேன். அதில் சென்ற ஆண்டு பட்ஜெட்டில் திட்ட மதிப்பீடு (Budget Estimate) 30 கோடி! இந்த ஆண்டு திட்ட மதிப்பீடு ஐந்தரைக் கோடி! (மானிய ஒதுக்கீடு புத்தகம் 1988-89 பக்கம் 129)

இந்த ஐந்தரைக் கோடிக்குள் 27 கோடி இருக்க முடியாது என்று எக்ஸ்பிரஸ் நிருபருக்கே தெரியும்!

ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் அவர்களின் நலப் பணிகளுக்கென்று 150 கோடி ரூபாயும் காமராஜர் புதிய ஆதிதிராவிடர் வீட்டு வசதி திட்டத்துக்காக 27 கோடி ரூபாயும், 1988-89ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப்படுவதாக கவர்னர் ஆட்சி பட்ஜெட்டை மத்திய நிதி அமைச்சர் திவாரி படித்துள்ளார் டெல்லியில்!

ஆனால் (Demands for grants 88-89) மானிய ஒதுக்கீடு மானிய ஒதுக்கீடு 88-89ஆம் ஆண்டு புத்தகத்தில் பக்கம் 125ல் தாழ்த்தப்பட்டோர் நலனுக்கான தொகை ஒதுக்கீடு பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. அதில் ஆதிதிராவிடர் பொருளாதார முன்னேற்றத்துக்கு 86 லட்சம், சிறப்பு மத்திய உதவிக்காக 11 கோடி, கல்விக்காக 28 கோடி, சுகாதாரத்துக்காக 22 லட்சம், வீட்டு வசதிக்காக 11 கோடியே 45 லட்சம் மற்றும் ஆதிவாசிகளுக்காக 5 கோடி என பல்வேறு தலைப்புகளில் மொத்தம் ஒதுக்கியுள்ள

தொகையே சுமார் 65 கோடி ரூபாய்தான்! கடந்த ஆண்டு (87-88) திருத்திய மதிப்பீட்டுடன் ஒப்பிடும்போது, இது பத்து கோடி ரூபாய்தான் அதிகம்! அதாவது கடந்த ஆண்டு இந்த தலைப்புகளில் செலவிட்டது 55 கோடி ரூபாய்!

கவர்னர் ஆட்சி பட்ஜெட்டை காங்கிரஸ் மத்திய அமைச்சர் திவாரி டெல்லியில் படித்ததில் ஆதிதிராவிடர்க்காக மொத்தம் ஒதுக்கீடு 177 கோடி ரூபாய் என்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது!

இந்தப் புதிய ஒதுக்கீடு 177 கோடி ரூபாய்க்கான எள் முனையளவு அடையாளங்கூட பட்ஜெட் சம்பந்தமான விபரக் குறிப்பு புத்தகம் எதிலுமே இல்லை!

ஏட்டுச் சர்க்கரை இனிக்காது

என்பது பழமொழி!

ஏழை எளியோர்க்காக - ஆதிதிராவிடர்க்காக ஏதேதோ அலாவுதீன் அற்புத தீபம் போல அள்ளிக் கொட்டுவதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த நிதி நிலை அறிக்கையில் - அறிவிக்கப்பட்டுள்ள தொகைகூட ஏட்டில் இல்லை என்பதுதான் வேதனையான வேடிக்கையாக உள்ளது!

ஏழை எளியோர்க்கும் ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஒரு அரசு பரிவு காட்டிப் பல திட்டங்களை நிறைவேற்றுமானால் அதனை வரவேற்கவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால் அந்த மக்களை ஏமாற்றும் வகையில் சொல்வது ஒன்று - ஏட்டில் இருப்பது ஒன்று - நாட்டில் நடப்பது இதற்கெல்லாம் முற்றிலும் விரோதமாக வேறொன்று என்றால் - தேர்தலுக்காக நடத்தும் தில்லுமுல்லுகள் என்றுதானே; இந்த பட்ஜெட் அறிவிப்புகள் பற்றி விளக்க வேண்டியுள்ளது.

மீதியை நாளை எழுதுகிறேன்.

அன்புடன்

மு.க.

20-03-1988

1559. எரிந்த மத்தாப்பு - எதற்கும் உதவாத கரிக்கட்டை!

உடன்பிறப்பே,

தமிழக அரசின் கவர்னர் ஆட்சி 1988-89ஆம் ஆண்டின் பட்ஜெட் குறித்து இரண்டு கடிதங்கள் எழுதிவிட்டேன். இது மூன்றாவது கடிதம்.

உன் நினைவுக்காக முதலில் சில குறிப்புகள் - 1967-68ல் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டின் வருவாய் (பட்ஜெட் கணக்குப்படி) 248 கோடி ரூபாய்!

1975-76ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்பு அந்த ஆண்டின் வருவாய் (பட்ஜெட் கணக்குப்படி) 501 கோடி ரூபாய்!

இப்போது 1988-89ஆம் ஆண்டு பட்ஜெட்டின் கணக்குப்படி வருவாய் 3188 கோடி ரூபாய்!

கடந்த ஆண்டு எம்.ஜி.ஆர். ஆட்சியில் மூவாயிரம் கோடி ரூபாயை தொடுகிற அளவுக்கு ஆண்டு வருவாய் காட்டப்பட்டிருந்தது!

எனவே எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலும் சரி, இப்போது கவர்னர் ஆட்சியிலும் சரி, தி.மு.க. ஆட்சியில் இருந்த வருவாயைவிட ஆறு மடங்கு அதிகமாக (500 x 6 = 3000) வருவாய் பெருகியுள்ளது.

ஐநூறு கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் இருந்த அந்தக் காலத்தில் தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள் எத்தனை - இப்போது ஆறு மடங்கு வருவாய் பெருகி மூவாயிரம் கோடி ஆகிவிட்ட எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலும் கவர்னர் அவர்கள் ஆட்சியிலும் நீர்த்தேக்கங்கள் எத்தனை? ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த விபரத்தைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்!

அது போலவே ஐநூறு கோடி ரூபாய் வருவாய் வந்த கழக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு முழுதும் கட்டப்பட்ட நீண்ட நெடிய பெரும் பெரும் பாலங்கள் எத்தனை? அந்த வருவாய் ஆறு மடங்காக உயர்ந்த நிலையில் கட்டப்பட்ட பாலங்கள் எத்தனை? இவற்றையும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கணக்கெடுத்தால் புரிந்து கொள்ளலாம்!

500 கோடி வருவாய் வந்த கழக ஆட்சிக் காலத்திலேதான் ஒன்பது ஆண்டுகளில் கிராமப்புற பின்னணி கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரிகள் பரவலாகத் தமிழக முழுதும் உருவாக்கப்பட்டன! ஆனால் அந்த வருவாய் ஆறு மடங்கு அதிகமாக உயர்ந்த நிலையில் எத்தனை கல்லூரிகள்? எங்கே? விரலை மடக்க முடியுமா? அதற்கு மாறாக தனியார் பொறியியல் கல்லூரிகள் - பாலிடெக்னிக்குகள் அமைத்திட உரிமங்கள் வழங்கப்பட்டு மாணவர்களிடம் பல்லாயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் பணம் உறிஞ்சும் காரியங்கள்தான் நடைபெற்று வருகின்றன.

கழக ஆட்சியில் 500 கோடி வருவாய் வந்தபோதுதான் புதிதாக ஆறு லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டது!

கழக ஆட்சியில் 500 கோடி வருவாய் வந்தபோதுதான் மின்சாரம் இல்லாத கிராமங்களே இருக்கக் கூடாதென்று எல்லா கிராமங்களுக்கும் மின் வசதி செய்யப்பட்டது!

25,000 ஆதி திராவிடர் குடியிருப்புகளில் 2000 குடியிருப்புகளுக்கு மட்டுமே காங்கிரஸ் ஆட்சியின் 20 ஆண்டு காலத்தில் மின் விளக்குகள் ஏற்றப்பட்டன. கழக ஆட்சிக் காலத்தில் மீதமிருந்த 23,000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் மின் விளக்குகள் ஏற்றப்பட்டன!

விவசாயத் தொழிலாளிகளுக்கான குடியிருப்பு மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்க சட்டம் கொண்டு வந்து ஒரு லட்சத்து நாற்பதாயிரம் குடும்பங்களுக்கு அவர்கள் குடியிருந்த மனைகள் உரிமையாக்கப்பட்டதும் கழக ஆட்சியில்தான்!

ஐநூறு கோடி ரூபாய் மட்டுமே வருவாய் இருந்த கழக ஆட்சியிலேதான் இந்தியாவிலேயே முதன் முதலாக குடிசை மாற்று வாரியத் திட்டம்!

இந்தியாவிலேயே முதன் முதலாக ஆதி திராவிடர்க்கும் மீனவர்க்கும் இலவச காங்க்ரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டம்!

இந்தியாவிலேயே முதன் முதலாக குடிநீர் வாரியத் திட்டம்!

இத்தகு வளர்ச்சித் திட்டங்களன்னியில் ஊனமுற்றோர் நல்வாழ்வு - பிச்சைக்காரர் மறு வாழ்வு - தொழுநோயாளிகட்கு புது வாழ்வு -கண்ணொளி வழங்கல் - விதவைத் திருமண ஊக்குவிப்புத் திட்டம் - ஆதரவற்ற சிறார்க்கு கல்வியும் உணவும் வழங்க ஆலயங்களில் கருணை இல்லங்கள் - மனிதனை வைத்து மனிதன் இழுத்த கை ரிக்ஷாக்களை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கிய திட்டம் - பணிக்காலத்தில் இறந்து விடும் அரசுப் பணியாளர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் - இப்படி எண்ணற்ற அன்பு வழித் திட்டங்கள்!

இவையனைத்தும் ஐநூறு கோடி ரூபாயே வருமானமிருந்த கழக ஆட்சிக் காலத்தில்!

ஆனால் இன்றைய பட்ஜெட் நிலவரம் என்ன?

1975-76 கழக ஆட்சியில் மொத்த வருவாயில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதி 23.64 சதவிகிதம்!

இப்போது 1988-89ஆம் ஆண்டு மொத்த வருவாயில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி 21.6 சதவிகிதம்தான்!

பட்ஜெட் மானியக் கோரிக்கை (Demands for grants) புத்தகத்தில் 66ஆம் பக்கத்தில் உள்ளபடி மருத்துவம் என்ற தலைப்பிலே இந்த ஆண்டு 156 கோடி ரூபாய்தான் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது மொத்த வருவாயில் 4.89 சதவிகிதம் தான்!

ஆனால் கழக ஆட்சியில் 75-76ஆம் ஆண்டு மருத்துவத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி 6.19 சதவிகிதம்!

நீர்ப்பாசனம் என்ற தலைப்பில் கழக ஆட்சியில் 1975-76ஆம் ஆண்டில் 3.94 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருந்தது! ஆனால் ஆறு மடங்கு வருவாய் உயர்ந்துள்ள கவர்னர் ஆட்சி பட்ஜெட்டில் பாசனத்துக்காக 2.73 சதவிகிதம்தான் நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது!

சாலைகள் பாலங்களுக்காக 1975-76ல் கழக ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதி, மொத்த வருவாயில் 4.20 சதவிகிதம்! ஆனால் இன்று ஒதுக்கியிருக்கும் நிதியோ மொத்த வருவாயில் 2.73 சதவிகிதம் தான்!

பிற்படுத்தப்பட்டோர் நலன் பேணுவதற்குக் கழக ஆட்சியில் தனித்துறை அமைக்கப்பட்டது! தனி அமைச்சர் நியமிக்கப்பட்டார்! ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது! பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனுக்காக, கழக ஆட்சியில் மொத்த வருவாயில் ஒதுக்கப்பட்ட நிதி 1.16 சதவிகிதம்! ஆனால் இந்த ஆண்டு கவர்னர் ஆட்சி பட்ஜெட்டில் 0.53 சதவிகிதம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது! கழக ஆட்சி ஒதுக்கிய விகிதாச்சாரப்படி இந்த ஆண்டு ஒதுக்குவதென்றால் 37 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்க வேண்டும் - ஆனால் ஒதுக்கியிருப்பது 17 கோடி ரூபாய்!

இப்படியொரு பட்ஜெட்டை வெளியிட்டுவிட்டு மத்திய அமைச்சர்களும் இந்திரா காங்கிரஸ் நண்பர்களும் இருபது ஆண்டுகளாக தமிழகத்தில் நல்லாட்சி நடைபெறவில்லையென்று - தி.மு.க. 1967 முதல் 1976 வரையில் நடத்திய ஆட்சியையும் சேர்த்துக் கண்டிக்கிறார்கள்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் ஆட்சியில், யார் யாரை எப்படியெல்லாம் குற்றம் சாட்டினார்கள் என்பதும் - நீர் என்ன பரசுராமர் அவதாரமா? என்று காங்கிரஸ் தலைவர்கள் ஒருவருக்கொருவர் லாவணி பாடினார்கள் என்பதும் அழிக்க முடியாத வரலாற்றுச் செய்திகளாக அந்தக் காலத்தில் அச்சியற்றப்பட்ட புத்தகங்களில் சாட்சிகளாக விளங்குகின்றன! பாவம், கெய்ரான் முந்திரா இவைகள் எல்லாம் மறந்து போய்விட்ட விஷயங்கள் என்றும், தற்காலத்து ரிலீஸ் புதுப்படங்களான போர்பாக்ஸ், போபர்ஸ், சுவிஸ் ஆகியவை தியேட்டர்களை விட்டுப்போய் விட்டதாகவும் காங்கிரஸ்காரர்கள் கருதிக் கொண்டிருக் கிறார்கள்.

மத்திய இணை அமைச்சர் ஒருவர் இருபது ஆண்டுக்காலம் ஊழல் ஆட்சி என்கிறார் - அதாவது கடந்த பத்து ஆண்டுக் காலத்து, எம்.ஜி.ஆர். ஆட்சியையும் சேர்த்துச் சொல்கிறார்!

ஆனால் அந்த எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நேற்று முன்தினம் தான் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டுள்ளது.

இதைப்பார்க்கும்போது, ஏ! காங்கிரசே! முரண்பாட்டுக்குப் பெயர்தான் காங்கிரசா? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

உடன்பிறப்பே, மொத்தத்தில் தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களை ஏமாற்றத் தயாரிக்கப்பட்டதே இந்த நிதி நிலை அறிக்கை என்பது தெளிவாகிவிட்ட ஒன்று!

25,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிட 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக இந்த ஆண்டு பட்ஜெட் அறிவிக்கிறது!

இன்றைய தினம் சித்தாள் சம்பளமே நாளொன்றுக்கு 25 ரூபாய்!

25 ஆயிரம் பேருக்கு ஒரு நாளைக்கு ஆறேகால் லட்சம் ரூபாய் சம்பளமாக மட்டும் தேவை!

ஆண்டுக்கு 22.81 கோடி ரூபாய் தேவைப்படும்!

ஆனால் 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக பிரமாண்ட (?) அறிவிப்பு!

பெருந்தலைவர் காமராஜரின் பெயர் சூட்டுவதாகவும் - நேருபெருமானின் பெயர் சூட்டுவதாகவும் அறிவித்து,

டெல்லியில்,
தமிழக பட்ஜெட்

என்ற பெயரால்
ஒரு மத்தாப்பு
கொளுத்தியிருக்கிறார்கள்.

அது வர்ணஜாலங்காட்டி எரிந்து விழுந்ததும் வெறுங்கரிக்கட்டை என்பது விளங்கும்! எதற்கும் பயன்படாத கரிக்கட்டை! ஆமாம், அவர்கள் எதிர்பார்ப்பது போல தேர்தலுக்கும் கூட!

அன்புடன்

மு.க.

21-03-1988

1560. ஆவலுடன் நோக்குகிறது அன்னைத் தமிழகம்!

உடன்பிறப்பே,

விடுதலைப்புலிகளுடன் இந்திய அரசு பேச்சு வார்த்தை நடத்திட வேண்டும் என்பதுதான் தாய்த்தமிழகத்தில் தமிழினப் பற்றுள்ள அனைவரது கோரிக்கையாகவும் இருந்து வருகிறது.

ஈழத்தமிழர் பிரச்சினைக்காக 1983 முதல் தமிழக மக்கள் சிந்திடும் கண்ணீர் கொஞ்ச நஞ்சமல்ல!

அவர்களுக்காக இந்தத் தமிழ் மண்ணில் நடைபெற்றுள்ள போராட்டங்களும் எண்ணற்றவை!

தமிழினம் அழிகிறதே என அழுது புலம்பி தன்னைத்தானே தீயிட்டு அழித்துக் கொண்ட நமது கழக உடன்பிறப்புகளின் கல்லறைகள், தமிழகத்தில் எத்தனையோ பகுதிகளில்!

ஒவ்வொரு முறையும் ஐம்பதாயிரம் அறுபதாயிரம் பேர் என சிறைப்பட்டுப் பல திங்கள் கைதிகளாகக் கிடந்துள்ளோம்!

சிறையில் சிலர் பிணங்களாகவும் ஆயினர்!

இலங்கை தூதுவர் நிலைய மறியல் என்றும் - தூத்துக்குடி கப்பல் மறியல் என்றும் - ரயில் நிறுத்தப் போர் என்றும் - தலைநகரில் மனிதச் சங்கிலி - தமிழக முழுதும் மனிதச் சங்கிலி என்றும் - தமிழக ஆளுங்கட்சியுட்பட அனைத்துக்கட்சிகள் நடத்திய முழு அடைப்பு என்றும் - பிரதமருக்கு லட்சோபலட்சம் தந்திகள் என்றும் - ஐ.நா. மன்றத்துக்கு இரண்டு கோடி தமிழர்களின் கையெழுத்து என்றும் - பல லட்சம் பேர் உண்ணா நோன்பு என்றும் - சட்டப் பேரவை உறுப்பினர் பதவிகளையே துறந்த நிகழ்ச்சி என்றும் - கருஞ்சட்டை அணிதல் - கறுப்புக் கொடி காட்டுதல் என்றும் - இன்னோரன்ன

அறப்போர் முறைகள் அனைத்தையும் கடைப்பிடித்துத் தமிழர்கள் தங்களின் உணர்வினை டெல்லிக்கு அறிவித்துங் கூட - இன்னமும் தம்பி பிரபாகரனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்தே தீருவது என்ற இரக்கமற்ற இதயத்துடன்தான் டெல்லி வட்டாரத்து செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன!

நான் இரண்டு நாட்களுக்கு முன்பு விடுத்த அறிக்கையில் மகனின் உயிருக்காக ஒரு தாய் மன்றாடுவது போல் - தாய்த் தமிழகம் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறது என்றுள்ள வாசகத்தைப் பார்த்துவிட்டு, சில தமிழ்க் கவிஞர்கள், புலவர்கள் என்னைச் சந்தித்தபோது கடிந்து கொண்டார்கள்!

நீங்களா? இப்படி? என்று கேட்டார்கள்.

அப்படிக் கேட்டவர்களின் கண்களும் கலங்கின - என் கண்களும் கலங்கின!

ஈழத்தமிழினம், நாளும் அழிந்து கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்திட, ஒரு தாயின் நிலையில் உள்ள தமிழகம், கண்ணீர் வடிய மன்றாடி - கடு நெஞ்சம் விடுத்து, கனிவுடன் முடிவெடுத்திட முன் வருக, என்று கேட்பதில் கோழைத்தனம் குடி கொண்டிருப்பதாக யாராவது சொன்னால் - அதற்கு நான் அளிக்கும் பதில் பரவாயில்லை - தாய்ப்பாசத்திற்குக் கோழைத்தனம் என ஒரு பொருள் உண்டென்றால், நீங்கள் அப்படியே சொல்லிவிட்டுப் போங்கள் என்பதுதான்!

ஒரு தாய், தன்னைக் காப்பாற்றிக் கொண்டு தனது மகனைக் காட்டிக் கொடுத்தால், அது கோழைத்தனம்கூட அல்ல - தாய்ப்பாசமற்ற துரோகச் செயல்! அவள் தாயே அல்ல, பேய்! தன்னலச்சுரங்கம்!

தமிழகம் இன்றைக்குக் கொதிப்புற்றுக் கதறினாலும் - குமுறியெழுந்தாலும் - கோவென அலறி அழுதாலும் - கொந்தளிக்கும் அலைகடலாய் ஆர்ப்பரித்தாலும் எல்லாமே ஒரு தாயின் பாச உணர்வின் வெளிப்பாடேயாகும்!

என்னைச் சந்தித்த கலைஞர்களும் கவிஞர்களும் புலவர்களும் வேறு யாருமல்ல, என் போல் உணர்வு கொண்டவர்கள் தான்! நானும் அவர்கள் போல் உணர்வு கொண்டவன்தான்!

மார்ச் 26 காலை சென்னையிலிருந்து கிளம்பும் எழுச்சிப் பயணத்தைத் தொடங்கி வைக்க என்னை அழைக்க வந்தவர்கள்!

ஈழத்தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பின் சார்பில் அந்த எழுச்சிப் பயணம் ஏற்பாடாகியுள்ளது.

போர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் இந்திய அரசு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தவே சென்னை முதல் கன்னியாகுமரி வரையில் தமிழ் அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள், மாணவர்கள் கொண்ட எழுச்சிப் பயணம்!

அந்தப் பயணத்தின்போது அவர்கள் வரும் வழிகளில் நமது கழக உடன்பிறப்புகள் பங்கு கொண்டு, எழுச்சிப் பயணத்தின் குறிக்கோள் நிறைவேற ஒத்துழைத்து உறுதுணை புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கழக உடன்பிறப்புகள் மட்டுமன்றி, கட்சிச் சார்பற்ற முறையில் எல்லாத் தமிழர்களும் அந்த எழுச்சிப் பயணத்திற்கு ஆங்காங்கு ஆதரவு நல்கிட வேண்டும்! நல்கிடுவர் என்ற நம்பிக்கை உண்டு!

மார்ச் 26 - அதற்குள் தமிழ் ஈழத்தில் என்னென்ன நடக்குமோ?

நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறது! இரத்த ஓட்டம் தடைபடுவது போல் - இதயத் துடிப்பு நின்றுவிடுவது போல் - ஒரு நிலை!

இதற்கிடையே இரண்டு நாட்களுக்கு முன் ஒரு செய்தி கிடைத்துள்ளது - இந்திய அரசு; சென்னையில் வீட்டுக் காவலில் இருந்த விடுதலைப்புலி ரகீம் மூலம் பிரபாகரனுக்கு ஒரு தகவல் தந்து - ரகீமை; தமிழ் ஈழத்துக்கு இராணுவ ஹெலிகாப்டரில் அனுப்பியிருப்பதாக!

இந்தச் செய்திகள் தொடர்ச்சியாக நல்ல நிகழ்ச்சிகள் மலரட்டும்! மலருமா? ஆவலுடன் எதிர்நோக்குகிறது அன்னைத் தமிழகம்!

பொதுப் பிரச்சினையில் சொந்தக் கௌரவப் பிரச்சினையை ஒதுக்கி வைத்து விட்டு அணுகினால் - அதுவே சிறந்த முடிவுகளுக்கு வழி வகுக்கும்!

இந்திய அரசு, இனிமேலாவது - இதனை உணர்ந்து செயல்படுமா?

அன்புடன்

மு.க.

22-03-1988

குறிப்பு :-

இதோ நம்மைத் திடுக்கிடச் செய்ய கடைசியில் வந்த செய்தி! ஹெலிகாப்டரில் ரகீமுடன் மற்றொரு விடுதலைப்புலி ஜானியும் அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு சென்ற ரகீம், ஜானி இருவரில் ஜானியை இந்திய ராணுவத்தினர் வவுனியா காட்டுப்பகுதியில் சுட்டுக் கொன்றுவிட்டனர். ரகீம் மட்டும் இந்தியா திரும்பியுள்ளார்!

1561. எச்சரிப்பதற்காகவே இந்தக் கடிதம்!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் சட்டப் பேரவைக்கான தேர்தல் எப்போது வரும்?

இந்தக் கேள்விக்கு சுலபமாகப் பதில் கூறிவிட முடியும்!

ஆரூடம் பார்த்து அல்ல; அதில் எனக்கு நம்பிக்கையு மில்லை!

தமிழகத்தில் கவர்னர் ஆட்சி எப்போது முடிந்து எப்போது தேர்தல் வரும் என்று கேட்டால், ஜனநாயக ரீதியான கணிப்பு எதுவாக இருக்க முடியுமோ; அந்த அடிப்படையில் - பிப்ரவரி முதல் ஜூலைக்குள்ளான ஆறு மாத காலத்திற்குள் கவர்னர் ஆட்சிக்கு முடிவு கட்டி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட ஆட்சி வருவதற்கு வழி விடுவதே மரபு!

எனவே இந்த ஆறு மாதத்திற்குள்ளாக அதாவது ஜூலைக்குள்ளாக தேர்தல் வரும் என்றுதான் எவரும் கூறுவர்!

பஞ்சாப்பில் கவர்னர் ஆட்சி எப்போது முடியும் - தேர்தல் எப்போது வரும் என்றால், பதில் சொல்வது கடினம்!

பஞ்சாப் பிரச்சினையை இந்திரா அம்மையார் காலத்திலிருந்து இந்திரா காங்கிரசார்; தமது கட்சி நலனை முன்வைத்து - குரங்குப் புண்ணாக ஆக்கி, ஒவ்வொரு நாளும் சராசரி பத்து பிணங்களுக்குக் குறையாமல் அங்கே விழுந்து கொண்டிருக்கின்றன - எனவே சூழ்நிலையின் மீது பழியைப் போட்டு - பஞ்சாப்பில் தேர்தலைத் தள்ளிப் போட்டுக்கொண்டே இருப்பார்கள்!

ஆனால் தமிழ்நாட்டில் இந்த ஆறு மாதத்திற்குள் - அதாவது ஜூலைக்குள் தேர்தல் நடத்துவதற்கு எந்தச் சூழ்நிலையும் பாதகமானதாக இல்லை!

காங்கிரஸ் கட்சியின் சொந்தச் சூழ்நிலைதான் பாதகமாக இருக்கிறது!

அந்தச் சூழ்நிலை அந்தக் கட்சிக்கு என்றைக்குமே சாதகமாக மாறப் போவதுமில்லை!

அதனால் அடுத்த ஆறு மாதத்திற்கும் - தேவைப்பட்டால் அதற்கு மேலும் குடியரசுத் தலைவர் ஆட்சி நீட்டிக்கப்பட்டு அலெக்சாண்டர் ஆண்டு கொண்டிருப்பாரா?

திடீர் திடீரெனத் தோன்றிக் கொண்டிருக்கிற; காங்கிரசுக்குப் பாதகமான சூழ்நிலைகளைப் பார்க்கும்போது - அது; தனது சொந்தக் காலில் நிற்கக் கூடிய பலத்தைப் பெறுகிறவரையில்; ஜனநாயகமாவது மண்ணாங்கட்டியாவது - தேர்தலாவது நடத்துவதாவது - என்றுதான் காலங்கடத்தும் எனத் தோன்றுகிறது!

நடுநிலை மாறாமல் ஒரு நல்ல கனவானாக நடந்து கொள்ள வேண்டுமென்ற உயரிய எண்ணங்கொண்டவராக ஆளுநர் அலெக்சாண்டர் இருந்திட முயன்றாலும்கூட, இங்குள்ள காங்கிரசாரும் - இவர்களின் தூண்டுதலால் மத்தியில் இருந்து வருகிற குறிப்புகளும், விரைவில் அவரையும் கட்சி வண்ணம் பூசிக் கொண்ட ஒருவராகவே காட்சியளிக்க வைத்துவிடக் கூடும் என்றே தெளிவாக உணர முடிகிறது!

இந்த நிலையில் - அன்பு உடன்பிறப்பே; தேர்தல் விரைவில் வந்தாலும் அல்லது இந்த ஆண்டின் இறுதியிலோ - அல்லது அடுத்த ஆண்டிலோ வந்தாலும்; அதனைச் சந்திக்க - ஜனநாயகக் களத்தில் நின்றிட, வென்றிட கழகம், தனது பாசறைப் பயிற்சிகளைத் தொய்வின்றித் தொடர்ந்திடல் வேண்டும் என்பதே எனது பணிவான வேண்டுகோள்!

நமது இயக்கம் தேர்தலுக்காக மட்டுமிருக்கிற இயக்கமல்ல!

தேர்தல் வாயிலாக ஈட்டுகிற அரசியல் வெற்றிகளைக் கொண்டும் நமது இயக்கத்தின் கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் ஆகியவை பெற வேண்டிய வெற்றிகளுக்காகப் பணியாற்றக் கூடியவர்கள் நாம்!

எனவே நமது பாதையில் தேர்தலும் - அதன் மூலம் பொறுப்புக்களை ஏற்பதும் - ஜனநாயகத்தில் நாம் ஏற்றுக் கொண்டவைகளேயாகும்!

ஆனால் ஒன்று; கழகம் - அதன் கட்டுப்பாடு - அது ஆற்ற வேண்டிய கடமை - கட்டிக்காக்க வேண்டிய ஒற்றுமை - இவற்றைத்

துறந்துவிட்டு - அன்னப்பறவையைப் பிடிக்க ஆடையை அவிழ்த்து வீசி விட்டு அம்போ என்று நின்ற நடுக்காட்டு நளனைப் போல, பதவியைப் பிடிக்க, கழகத்தை, கழக உணர்வுகளை, கழகக் கட்டுப்பாட்டை, கழகம் வளர்த்திடும் ஜனநாயக மாண்பை என்றைக்குமே பறி கொடுத்து விட மாட்டோம்!

இந்த உறுதியோடு இக்கழகம் வளர்க்கும் உன்போன்ற உடன்பிறப்புகள் லட்சோப லட்சம்பேர்!

அவர்கள்தான் கழகத்திற்கு வந்துறும் வாழ்விலும் தாழ்விலும் இணைந்தே இருந்தவர்கள் - என்றும் இருப்பவர்கள்!

அவர்களும் உள்ளிட்ட நாம் - ஆமாம்; அந்த நாம் என்பதிலே தான் எவ்வளவு சொந்தபந்தம் ஒரே குடும்பம் என்ற பாச உணர்வு பின்னிப் பிணைந்திருக்கிறது! அந்த உணர்வுதானே நமது பாதையில் குறுக்கிட்ட எத்தனையோ நெருப்பு நதிகளில் நீந்திக் கரையேறும் சக்தியை நமக்கு வழங்கியிருக்கிறது!

அந்த நாம் - என்று; அல்லது நமக்கு என்றே - சில சொல்ல விரும்புகிறேன்.

கழகத்தின் அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலை யொட்டி ஒரு சில இடங்களில் ஏற்பட்ட மனக்கசப்பு, இன்னும் இருக்குமேயானால் அதனை அகற்றிட சொந்த கௌரவம் பாராமல் பொறுப்பில் உள்ளோர் முன்வர வேண்டும்.

பொறுப்புக்கு வராதோர் - வர முயன்றிடாதோர் - வந்தோரைத் தட்டிக் கொடுத்துப் பணியாற்றிடும் உற்சாகம் வழங்கிட வேண்டும்.

வந்தோரும், விட்டுக்கொடுக்கும் மனோபாவத்துடன் அரவணைத்துச் செல்லும் பக்குவம் பெற்று கழகத்தை ஒற்றுமை சிதறிடாத பாசறையாக வளர்த்திட முன்வர வேண்டும்.

இளைஞர்கள், மாணவர்கள் எங்கணும் எழுச்சியுடன் திரளுகிறார்கள், கழக முகாம் நோக்கி! காணுகிறேன்! களிப்புறுகிறேன்!

அவர்களை மேலும் ஊக்கப்படுத்திட ஆங்காங்குள்ள கழகத்தின் மூத்தோர் முன்வர வேண்டும்!

அந்த மூத்தோரை மதித்து நடந்திட இளைய தலை முறையினரும் மறந்திடலாகாது!

பெருகி வரும் வெள்ளம் வழிந்தோடி வீணாகாமலிருக்க கரை உயர்த்தல் ஒரு முறை!

அணை போட்டுத் தேக்கி, சீராகப் பயன்படுத்தல் ஒரு முறை!

உரிய முறை - தேவையான முறை எதுவெனத் தேர்ந்திடுதல் நலமே தவிர; வெள்ளமே வேண்டாமென வெறுத்திடுதல் நலமல்ல!

ஒரு சில மாவட்டங்களில் - ஒரு சில ஊர்களில் நடந்தவை கேள்வியுற்று இதனை எழுதுகிறேன்!

கண்ணாடிக் குவளையை கரங் கொண்டு பிடிக்காமலிருந்தால் கீழே விழுந்து உடைய நேரிடும்!

அதற்காக மிகவும் அழுத்திப் பிடித்தால் அது கையிலேயே உடைந்து கையையும் காயப்படுத்தி விடும்!

இளைய தலைமுறை படரும் கொடி! மூத்தோர் கொழுகொம்பு!

சென்று படர் முல்லையினைக்
கத்தரித்தல் இன்றிக் கரம் தழுவும்
மாமரமும்!

என்றார் பாவேந்தர்!

படரும் கொடியைப் புறக்கணித்தலும் ஆகாது! படரத்துணை நிற்கும் கொழு கொம்பினை அந்தக் கொடி அலட்சியப்படுத்தவும் கூடாது!

அருகாமையில் நடந்தால் மட்டும்தான் தலைமைக்குத் தெரியும் என்றில்லை; அதிகத் தொலைவில் நடப்பதையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு தலைமைக்கு உண்டு!

அப்படிச் சில செய்திகள் வரத்தான் செய்கின்றன!

இன்னமும் கழகத்தின் முன்னோடிப் பேச்சாளர்களே சிலர், கையொலி பெறுவதில் மட்டும் கண்ணும் கருத்துமாக இருந்து - அதற்கேற்ப உரையை நிகழ்த்துகின்றனர்!

குறிபார்த்து அடிக்க வேண்டியது பறவையின் தலையும் - அம்பின் நுனியும் மட்டுமே தெரிகிறது என்று காண்டீபன்

சொன்னான் என்பதைப் பலமுறை படித்துள்ள நமது பேச்சாளர்கள் சிலர், குறியை மறந்து - மரம், கிளை, தழை என்று எங்கெங்கோ பார்வையைச் செலுத்தி; மக்களுக்குச் சொல்ல வேண்டியதை சொல்லாமற் போய்விடுகிறார்கள்.

ஓரிரு பேச்சாளர்கள், ஒப்புக் கொண்ட நிகழ்ச்சிகளுக்குப் போகாமலே ஏற்பாடு செய்தவர்களை பெரும் ஏக்கத்திற்கு ஆளாக்குகிறார்கள்!

ஓரிரு தொகுதிகளில் சிலர், தங்களைத் தாங்களே வேட்பாளர்களாக அறிவித்துக் கொள்கிறார்கள்! சிலர் எம்.எல்.ஏக்களாக ஆகி விட்டார்கள். ஒரு சிலர் அமைச்சர்கள் கூட!

எங்கெங்கே என்னென்ன நடக்கிறது; யார் யார் என்னென்ன செய்கிறார்கள் என்பதை அறிய முடியாத இருட்காட்டில் தலைமை இல்லை!

அப்படியிருப்பது போல் காட்டிக் கொள்வோம்.

அதற்காக எவரும் தலைமையை ஏமாற்றிட இயலாது!

எல்லோரும் தேர்தல் பணி தொடங்கலாம்; ஆனால் யாரையும் வேட்பாளராக மனத்தில் வைத்துக் கொண்டல்ல!

கழகம் நிற்கப் போகும் தொகுதிகளில் எல்லாம் உதயசூரியன் சின்னம்தான் வேட்பாளர்!

இன்றைய கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை; எனக்கும் சேர்த்துத்தான்!

நானும் சேர்ந்து இந்தக் கருத்துக்களை அலட்சியப் படுத்தினால் - நாம் ஏதோ ஒரு மிதப்பிலே இருக்கிறோம்; அதன் விளைவு எதிர்பாராததாக இருக்கும் என்று எச்சரிக்கவே இந்தக் கடிதம்!

எச்சரிக்கையை பொருட்படுத்தாதவர் எவராயினும் - கழகம், அவர்களைக் கண்காணிக்கத் தவறாது! கண்டிக்கவும் தண்டிக்கவும் தயங்காது!

அன்புடன்

மு.க.

23-03-1988

1562. சலுகை வழங்கியது சபாநாயகரா? கவர்னரா?

உடன்பிறப்பே,

அரசினர் தோட்டத்தில் இருந்த தி.மு.க. சட்டமன்றக் கட்சி அலுவலகத்தை உடனே காலி செய்ய வேண்டுமென்று மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் ஆணையிடப்பட்டு, அலுவலகத்தில் இருந்த எங்களையெல்லாம் கைது செய்து போலீஸ் வேனில் ஏற்றி போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு கொண்டு சென்று, தி.மு.க. சட்டமன்றக்கட்சி அலுவலகம் என்ற பலகையையும் போலீசார் தங்களது பூட்ஸ் கால்களால் மிதித்து நொறுக்கினரே, நினைவிருக்கிறதா?

அப்போது அந்த இடத்திலிருந்து தி.மு.க. சட்டமன்றக் கட்சி அலுவலகத்தைக் காலி செய்ய வேண்டுமென்பதற்கு 15.5.85ல் சட்டமன்ற செயலாளர் திரு. கி.மு. அழகிரிசாமி அவர்கள் கையெழுத்திட்ட சபாநாயகரின் ஆணைப்படி கூறப்பட்ட காரணங்களில் ஒன்று:-

சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட கூட்டங்களையன்னியில் கழக நிர்வாகக்குழு, செயற்குழு கூட்டங்களையும் கூட்டுகிறார்கள்.

இது, அந்தக் காரணங்களில் ஒன்று! அப்போது, நாம் மட்டுமல்ல; காங்கிரஸ் சட்டமன்ற கட்சி அலுவலகத்தில் கூட அவர்களது கட்சியின் முக்கிய நிர்வாகக்குழு, ஆலோசனைக்குழு கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நாம் ஆதாரத்துடன் எடுத்துக்காட்டினோம். ஆனால் ஆட்சியிலிருந்தோர் நமது வாதங்கள் எதையும் ஏற்றுக் கொள்ளாமல் நம்மை வெளியேற்றி நமது சட்டமன்றக் கட்சி அலுவலகத்தைப் பூட்டிக் கொண்டார்கள்.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் - இப்போது தமிழ்நாட்டில் சட்டமன்றம் கலைக்கப்பட்டு விட்டது!

ஆனால் பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகளில் இ.காங்கிரஸ் தீவிரமாக இறங்க வேண்டுமென்று திரு. மூப்பனார் தலைமையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூடி முடிவுகள் பலவற்றை செய்திருக்கிறது! அந்தக் கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.என். சிங், மற்றும் மத்திய அமைச்சர் அருணாசலம் ஏனைய காங்கிரஸ் கட்சியின் மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கூட்டம் எங்கே நடைபெற்றிருக்கிறது தெரியுமா?

அரசினர் தோட்டத்தில் உள்ள காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில்!

சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் மட்டுமே நடைபெற வேண்டும் - அந்தக் கட்சியின் நிர்வாக சம்பந்தமான கூட்டங்கள் நடைபெறக் கூடாது என்று 1985ல் திட்டவட்டமாகக் கூறியவர் (எம்.ஜி.ஆர். ஆட்சியில்) இன்றைக்கும் சபாநாயகராக இருக்கிற திரு. பாண்டியன் அவர்கள்தான்!

எனவே, அப்படியொரு ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு - அந்த ஆணையில் சொல்லப்பட்ட காரணத்தைக் காட்டி, தி.மு.க. சட்டமன்ற அலுவலகத்தைக் காலி செய்த சபாநாயகர், காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் - காங்கிரஸ் நிர்வாகக் குழு கூட்டம் நடத்த எப்படி அனுமதிக்கிறார்?

இதுபோல் ஒரு ஆணை பிறப்பிக்கப்படாமலிருந்தால் - அந்த ஆணையின் அடிப்படையில் தி.மு.க. சட்டமன்றக் கட்சி அலுவலகம் காலி செய்யப்படாமல் விடப்பட்டிருந்தால் - இப்போது காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் காங்கிரஸ் கட்சியின் மாநில நிர்வாகக் கூட்டம் நடைபெற்றதில் தவறில்லை!

ஆனால் 1985ல் ஆணைப் பிறப்பிக்கப்பட்டு - அந்த ஆணையும் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு - இப்போது காங்கிரசுக்கு மட்டும், சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் அவர்கள் கட்சிக் கூட்டம் நடத்த தனிச்சலுகை என்றால், இந்தச் சலுகை சபாநாயகர் வழங்கியதா? அல்லது கவர்னர் ஆட்சி வழங்கியதா?

அன்புடன்

மு.க.

27-03-1988

1563. உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு பள்ளம் இருக்கிறதோ?

உடன்பிறப்பே,

அமைதி வழி - அன்பு வழி - என்று இங்குள்ள வானொலிகளும் தொலைக்காட்சிகளும் அலறிக் கொண்டேயிருக்கின்றன.

தமிழ் ஈழ மக்கள் இந்திய இராணுவத்தினரைத் தெய்வம் போல் பாவித்து எங்கள் குறை தீர்க்க வந்தவர்களே எனப் போற்றித் தொழுது கொண்டிருக்கிறார்கள் என்று இங்குள்ள தேசிய நீரோட்டங்கள் உரைப்பெருக்கு நிகழ்த்துகின்றார்கள்.

தமிழ் ஈழ மக்களின் நலன்களையோ உரிமைகளையோ பற்றி அக்கறை கொள்ளாமல் விடுதலைப்புலிகளையும் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் வேட்டையாடி வீழ்த்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் ராஜீவ் காந்தியைக் கண்டித்து; இன்றைக்குத் தமிழகமே கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

இடையில் ரகீம் - ஜானி எனும் இரண்டு விடுதலைப்புலிகள் இளந்தளகர்த்தர்களை பிரபாகரனிடம் தூது அனுப்புவதாகக் கூறி; ஜானியை இலங்கையில் உள்ள இந்திய ராணுவத்தினரே சுட்டுக் கொன்ற அநியாயமும் நடந்திருக்கிறது.

தமிழ் ஈழச் சிக்கலில் இருந்து விடுபடாமல் தமிழ் நாட்டுத் தேர்தலைச் சந்திக்க ராஜீவ் காந்தி அஞ்சுகிறார் என்பது டெல்லி வட்டாரத்தில் தெளிவாகப் பேசப்படுகிற செய்தியாகி விட்டிருக்கிறது.

அதற்காக ராஜீவ் காந்தி சில முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

ஆம்; தமிழக மக்களின் இதயம்; குமுறும் எரிமலையாகியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள மத்தியில் உள்ள துரைத்தனத்தாருக்கு

- வர இருக்கிற தமிழகத் தேர்தல் - ஒரு தூண்டுகோலாக அமைந்திருக்கிறது!

இந்த நிலையில் இங்கு சுற்றுலா நடத்தும் திரு. மூப்பனார் அவர்களோ - இலங்கைப் பிரச்சினையை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட தி.மு.க. தயாரா என்று அறைகூவல் விடுக்கிறார்!

பாவம்; இப்போதெல்லாம் அவருக்கு மேலிடத்துத் தொடர்பு அதிகமில்லை - அகில இந்தியத் தலைவராக இருந்து தமிழகத் தலைவராக ஆகிவிட்டார் அல்லவா காங்கிரசில்; அதனால்!

இந்திய ராணுவ வீரர்களையும் ஆயிரக்கணக்கில் பலி கொடுத்துக் கொண்டு - தமிழ் ஈழ மக்களையும் அழித்துக் கொண்டு - பிரபாகரனையும் விடுதலைப்புலிகளையும் ஒழித்துவிடத் துடித்துக்கொண்டு - இந்திய தேச நலன்களையே பாதிக்கும் பணிகளைச் செய்து கொண்டேயிருந்தால் தமிழகத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்டுத் தொகையைக்கூட பல தொகுதிகளில் திரும்பப் பெற முடியாது என்பது உறுதியாகிவிட்ட உண்மையாகும்.

இராணுவத்தைக் கருணாநிதிதானே அனுப்பச் சொன்னார் - இப்போது அனுப்பியிருக்கிறோம்; அது தவறா? என்று கேட்கிறார் நண்பர் மூப்பனார்!

வயலுக்குப் போய் அறுத்துக் கொண்டு வா என்று நிலப்பிரபுக்கள் ஆணையிட்டால் - விளைந்த பயிரை அறுவடை செய்து வரச் சொன்னதாகத்தான் பொருள் கொள்வார்களே தவிர; பயிருக்குப் பதிலாக யார் கழுத்தையும் அறுத்து வர வேண்டுமெனப் பொருள் கொள்ள மாட்டார்கள்!

பயிரை அறுவடை செய்யச் சொன்னால்; உயிரையே அறுவடை செய்கிறவர்களை சட்டம் கடுமையாகத் தண்டிக்கும்!

நிலப்பிரபுக்களுக்குப் புரியும்படியான உவமை கூறினேன்! சாதாரண மிராசுதாரர்களுக்கு அல்ல!

ஈழத்தமிழர் உயிர், உடைமைகளைக் காத்திட இராணுவத்தை அனுப்பச் சொன்னோம்! இப்போதும் சொல்கிறோம் - அந்தப் பணிக்காக இந்திய இராணுவம் இலங்கையில் இருக்க வேண்டுமென்று!

ஆனால் தமிழ் ஈழத்தில் விடுதலைப்புலிகளைத் தேடுதல் என்ற பெயரால் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிக்க அல்ல!

அப்பாவித் தமிழ் மக்கள் இந்தியப் படையினரால் கொல்லப்படுகிறார்கள் - கற்பழிக்கப்படுகிறார்கள் - என்பதற்கு எத்தனையோ ஆதாரபூர்வமான எடுத்துக்காட்டுகளைக் கூறியிருக்கிறேன், எழுதியிருக்கிறேன்.

அப்படிக் காட்டப்பட்ட பல்வேறு ஆதாரபூர்வமான அராஜகங்களின் பட்டியலில்; இதோ இந்த ஆதாரமும் இணைகிறது!

இலங்கை ஆலவெட்டி என்ற ஊரிலிருந்து இ. சின்னையா எனக்கு எழுதிய கடிதம்.

Alahollai,

Alaveddy North,

Alaveddy,

01.3.1988

Dr. M. Karunanithy,

Hon. Leader of the Opposition,

Madras - South India.

Honoured Sir,

TORTURE & BRUTAL MURDER OF
S. GUNARATNARAJAH

My son Gunaratnarajah was handed over by me to the Ampanai I.P.K.F. camp on 29.01.1988 on an oral message received by me. He was tortured to death and his dead body was handed to me on 19.02.1988. Facts relating to this murder is annexed herewith and submitted to your Honour for information and necessary action, please.

I am, sir,

Yours faithfully,

(E. Sinniah)

அதாவது தனது மகன் குணரத்தின ராஜாவை 29.1.88 அன்று நேர்முக விசாரணைக்காக அம்பானை இந்திய ராணுவ முகாமில்

ஒப்படைத்ததாகவும் அவரை அடித்துக் கொன்று உடலை 19.2.88 அன்று தன்னிடம் ஒப்படைத்ததாகவும் அதுபற்றிய விபரங்களை இணைத்திருப்பதாகவும் எழுதியுள்ளார்.

இதோ இது - இலங்கையிலிருந்து வந்துள்ள அந்தக் கடிதத்தின் அஞ்சல் உறையாகும்!

அவர் இணைத்துள்ள விபரங்களில் குறிப்பிட்டிருப் பதாவது :-

29.1.88 அன்று காலை 9.30 மணியளவில் எனது மகன் சின்னையா தேவராஜா, என்னிடம் இளையமகன் குணரத்தினராஜாவை இந்திய ராணுவத்தினர் விசாரிக்க அழைப்பதாக த்ரீஸ்டார்ஸ் என்ற விடுதலைப்புலிகளுக்கு எதிரான இயக்கத்தினர் கூறுவதாகக் குறிப்பிட்டான்.

இந்திய வானொலியில் ஈழத் தமிழ் மக்களுக்கும் சரண் அடைகிறவர்களுக்கும் கனிவான உபசரிப்பு, பாதுகாப்பு, வாழ்க்கைக்கான உதவி அத்தனையும் செய்யப்படுமென தொடர்ந்து கூறி வருவதை நம்பி, நானும் என் மகனைக் கொண்டு போய் காலை 10 மணி அளவில் அம்பானை இந்திய அமைதிப்படை முகாமில் ஒப்படைத்தேன். அவன் அங்கிருந்து ஒரு த்ரீஸ்டார் உறுப்பினருடன் தெள்ளிப்பாளை முகாமுக்கு அனுப்பப்பட்டான்.

தெள்ளிப்பாளை முகாமுக்கு நானும் என் மூத்த மகனும் தொடர்ந்து சென்றோம். அங்கே த்ரீஸ்டார் உறுப்பினர் எனப்படும் காட்டிக் கொடுக்கும் நபர் - என் இளைய மகன் குணரத்தினராஜா, பிரபாகரனுக்கு மிகவும் நெருங்கிய 27 பேர்களில் ஒருவர் எனக் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

அங்குள்ள அதிகாரியிடம் அந்த அபாண்டமான குற்றச் சாட்டை நான் மறுத்தேன். என் மகன் டிராக்டர் ஓட்டிப் பிழைப்பவன் என்பதையும் - விடுதலைப் புலிகள் அந்த டிராக்டரை வாடகைக்குப் பயன்படுத்தியது உண்டு என்பதையும் - விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்தவனல்ல என்பதையும் விளக்கினேன்.

உடனே த்ரீஸ்டார் நபர், என்னை வைத்துக் கொண்டு விசாரணை நடத்தினால் உண்மைகள் வெளி வராது என்றார். அதைக்கேட்ட அதிகாரி என்னை மீண்டும் இரண்டு மணிக்கு வருமாறும், தங்கள் மகனைப் பற்றி எந்தக் கவலையும்

பட வேண்டாமென்றும் மகனின் உயிர் பாதுகாப்புக்கான உத்திரவாதமும் வழங்கினார். பிற்பகல் 2 மணிக்குச் சென்றேன். அதிகாரி என்னைப் பார்த்து உமது மகன் விடுதலைப் புலி என்பதை ஒப்புக் கொண்டான் என்றார். நான் உடனே மகனைக் கேட்டேன். அப்படிச் சொல்லவேயில்லை என்று என் மகன் சொல்லவே, நான் அதிகாரியிடம் இடையில் மொழிபெயர்த்தவர் தவறு செய்திருக்கலாம் - என் மகன் விடுதலைப் புலியே அல்ல என்று உறுதியாகத் தெரிவித்தேன். அப்போது த்ரீஸ்டார் நபர் இவனை உத்திரத்தில் தலைகீழாகத் தொங்கவிட்டு அடித்துக் கேட்டால் உண்மை வரும் என்றார். உடனே அதிகாரி என்னைப் பார்த்து நீங்கள் மறுநாள் (30.1.88) வாருங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார்.

30.1.88 நான் அங்கே சென்ற போது என் மகனை தெள்ளிப்பாளை முகாமிலிருந்து மல்லாகம் முகாமுக்கு அனுப்பிவிட்டதாக ஒரு சிப்பாய் மூலம் தெரிவிக்கப்பட்டது. நான் மல்லாகம் ராணுவ முகாமுக்கு சென்று பார்த்தேன். சிப்பாய் மூலம் சொன்னது பொய் என்பதைப் புரிந்து கொண்டேன்.

6.2.88 காலையில் தெள்ளிப்பாளை முகாமில் உடலில் பலத்த அடியினால் ஏற்பட்ட காயங்களுடன் இரண்டு சிப்பாய்கள் தாங்கிப் பிடித்துக்கொள்ள நொண்டிக் கொண்டே வந்த என் மகனைப் பார்த்தேன். அவன் உடல் முழுதும் ஒரே வீக்கம்! காயங்கள்! பண்டத்தெருப்பு முகாமில் கொண்டு போய் வைத்துத் தன்னை சித்ரவதை செய்ததாக என் மகன் குறிப்பிட்டான். மகனுக்கு சிகிச்சையளிக்குமாறு மன்றாடிக் கேட்டுக்கொண்டேன். ஆனால் என் கோரிக்கை ஏற்கப்படவில்லை.

15.2.88 வரையில் என் மகனை இந்திய ராணுவ முகாமில் பார்க்க அனுமதி கிடைத்தது. அதன் பிறகு அந்த அனுமதியும் கிடைக்கவில்லை.

19.2.88 மாலை என்னையும் என் புதல்வியையும் ஆலவெட்டி கிராம சேவக் ஒருவரையும் தெள்ளிப்பாளை முகாமுக்கு அழைத்துச் சென்று என் மகனின் பிணத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள்.

உடன்பிறப்பே, தமிழ்ஈழத்தில் மகனை இப்படி அநியாயமாக இழந்த ஒரு தந்தையின் கதை இது!

இதுபோல எத்தனை சின்னய்யாக்கள் ஈழத்தில் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா?

மகனை இழந்த தாய் - தாயை இழந்த மகன் - தாரமிழந்த கணவன் - தாலியிழந்த மனைவி - இந்தப் பட்டியல் மிக நீளம்!

இந்தப் பட்டியல் கண்டு மனம் பதறாதவர்கள் - மன்னிக்க வேண்டும், மனமென ஒன்றில்லாதவர்கள் - உள்ளம் இருக்க வேண்டிய இடத்திலே ஒரு பள்ளம் மட்டுமே பெற்றிருப்பவர்கள் - இந்திய ராணுவத்தை - இலங்கையில் அமைதிகாக்கும் படை என வர்ணிக்கின்றனர்!

ஆனால் நாமோ - தமிழினம் இப்படி நாள்தோறும் அழிவது கண்டு துடிக்கிறோம்.

ஈழத்தமிழ் மக்களின் நிலை, இவ்வாறே இனியும் தொடருமேயானால் - இங்கே இந்தத் தமிழ்நாட்டில் - தமிழன் என்றோர் இனமுண்டு என்று சொல்லிக் கொள்ளும் தகுதி நமக்கு உண்டா?

எண்ணிப்பார் உடன்பிறப்பே!

அன்புடன்

மு.க.

29-03-1988

1564. மனச்சாட்சியும் - மனக்குரங்கும்!

உடன்பிறப்பே,

மத்திய அமைச்சர்கள் குழாம் ஒன்று; இணையென்றும் துணையென்றும் ஒரு பெரிய பட்டியலே இருக்கிறதல்லவா - அந்தப் பட்டியலில் இணையோ அல்லது துணையோ தெரியவில்லை - அருணாசலம் என்று ஒருவர் இருக்கிறார்.

அவரைப் போன்றவர்கள் மாற்று முகாமிலே இருந்தாலும் இன்னும் பெரிய பொறுப்புகளுக்கு வரவேண்டுமென்று விரும்புகிறவன் நான்!

இப்போது கேபினட் அந்தஸ்துள்ள அமைச்சராக டெல்லியில் அவர் இல்லையே என்ற ஆதங்கம் கூட எனக்கு உண்டு.

ஒருமுறை திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்; குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்புக்கு யாரைத் தேர்வு செய்யலாமென என்னையும் கலந்து பேசிய போது தமிழகத்திலேயுள்ள ஆதிதிராவிட சமுதாயத்து அம்மையார் ஒருவர் பெயரை நான் பரிந்துரைத்தேன். ஆனால் என்ன காரணத்தாலோ அப்போது அது நடைபெறவில்லை.

எனவே தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலேயுள்ளவர்கள் - எந்தக் கட்சியில் இருந்தாலும்; அவர்கள் பொறுப்புக்களில் உயர்வதும் - புகழ்பெற்றுத் திகழ்வதும் - எனக்கு பேருவகையளிக்கும் செய்திகளாகும்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த நான்; பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கும் ஏழை எளிய நடுத்தர மக்களுக்கும் மாத்திரமன்றி - இவர்களையெல்லாம்விட மிகக் கொடுமையாக ஒடுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் நல்வாழ்விலும், முன்னேற்றத்திலும், அவர்தம் சமுதாயம், சமதர்ம சுயமரியாதை உணர்வு பெற்றுத் திகழ வேண்டுமென்பதிலும் ஆர்வமும்

அக்கறையும் கொண்டவன் என்பதை என்னையறிந்தோர் உணர்வர்!

என் வீட்டில் அந்தச் சமுதாயத்துப் பெண்; மருமகளாக உலவுவதும் - அந்தப் பெண்ணின் பிள்ளைகள்; என் பேரக் குழந்தைகள் என்னோடு கொஞ்சிக் குலாவுவதும் மட்டுமல்ல;

என் தோளில் ஆட்சிப் பொறுப்பு இருந்தபோதுதான் இந்தியாவிலேயே முதன்முதலாக ஆதிதிராவிடர்களுக்கு இலவச காங்ரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டமே தமிழகத்தில் செயல்படத் தொடங்கியது.

விவசாயத் தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் ஆதிதிராவிடர் - அவர்கள் கடுமையாக உழைத்துக் கழனிகளில் வளங்கொழிக்கச் செய்து; இரவில் களைப்பாற இருந்த வீட்டு மனைகள் எதுவும் அவர்களுக்குச் சொந்தமில்லாமல் இருந்தன! குடியிருப்பு மனைச்சட்டம் கொண்டு வந்து; அவர்கள் வசித்த வீட்டு மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கிட நான் எடுத்த முயற்சியையும் - அதில் பெற்ற வெற்றியையும் பழம்பெரும் கம்யூனிஸ்டு தலைவர் மணலி கந்தசாமி அவர்கள் மனந்திறந்து பாராட்டியதை என்னால் மறக்க முடியாது. மதுரை மாவட்டத்தில் ஆதிதிராவிட குடியிருப்புகள் திறக்கப்பட்டபோது ஆர்.வி. சாமிநாதன் அவர்கள் வழங்கிய பாராட்டுரையை பழைய ஏடுகளில் இன்றைக்கும் காண முடியும்! அவர் ஒரு உண்மையான காங்கிரஸ்காரர்!

இட ஒதுக்கீட்டில் ஆதிதிராவிடர்க்கு 16 சதவிகிதம் என்றிருந்ததை 18 சதவிகிதம் என உயர்த்தியதும் கழக ஆட்சியில்தான்!

1967 வரையில் ஆதிதிராவிட காலனிகள் மொத்தம் 25000த்தில் 2000 காலனிகளுக்கு மட்டுமே காங்கிரஸ் ஆட்சியில் மின்விளக்கு வசதி - கழக ஆட்சியிலோ எஞ்சியுள்ள 23000 ஆதிதிராவிட காலனிகளுக்கும் மின் விளக்கு ஒளி வழங்கப்பட்டது!

இப்படி விவரித்துக் கொண்டே போக முடியும் - சிலவற்றை மட்டுமே சொன்னேன்!

எனவே அந்த சமுதாயம் முன்னேற வேண்டுமென்பதிலும் - அந்த சமுதாயத்தில் நண்பர் அருணாசலத்தைப் போன்றவர்கள் பெரும் பதவிகளில் அமர்ந்து சிறப்படைய வேண்டுமென்பதிலும் எனக்குப் பெரும் அக்கறை உண்டு!

ஆனால் நண்பர் அருணாசலம் - அவரைப் பொறுத்தவரையில் மென்மையானவர்தான் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.

என் செய்வது; காங்கிரசில் அல்லவா இருக்கிறார்! அதனால் - அதுவும் இப்போதுள்ள சூழ்நிலையில் - என்னைப்பற்றி ஏதாவது காரசாரமாகப் பேசாவிட்டால் அவரது தலைமைக்குக் கோபம் வரும்; அல்லது அவர்மீது சந்தேகம் வரும் - ஆகவே இதுவரையில் யாரும் சொல்லாததைச் சொல்ல வேண்டுமென்று சிந்தித்து; இறுதியாக ஒன்றைச் சொல்லி விட்டார்!

அதாவது எனது அரசியல் அத்தியாயத்தையே முடித்து விட்டார்!

கருணாநிதி நீண்ட ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது அவரது வாழ்த்து! இந்த வாழ்த்து, பத்திரிகைகளில் வந்துள்ளது!

படிப்பதற்கு சாபம் போலத் தோன்றினாலும் - என்னைவிட வயதில் இளையவர் வழங்கிய வாழ்த்தாகவே நான் எடுத்துக் கொள்கிறேன்.

நீண்ட ஓய்வு என்பதற்கு உரிய பொருள் ஒன்று உண்டு!

ஆனால் அமைச்சர் அருணாசலம்; என்னை அரசியலில் இருந்து நீண்ட ஓய்வு எடுக்கச் சொல்லியிருக்கிறார்!

ஐம்பது ஆண்டுக் காலமாக தமிழக மக்களின் கால் செருப்பாகத் தேய்ந்து கொண்டிருக்கும் என்னைக் கழற்றி ஒரு மூலையிலே போடச் சொல்லுகிறார்!

உழைத்தது போதும் ஓய்வெடு; என்று கூறுகிற அந்தப் பரிவான இதயத்துக்கு நன்றி தெரிவிக்கத்தான் வேண்டும்!

அரசியலில் ஓய்வெடுத்துக்கொண்டு தமிழிலக்கிய ஆராய்ச்சி நூல்கள், நாவல், திரைக்கதை வசனம் - இவற்றை எழுதிடக் கருணாநிதி போகட்டும்

இது அமைச்சர் எனக்குக் காட்டும் வழி!

இதிலிருந்து ஒன்று புரிகிறது; என் தமிழிலக்கிய ஆராய்ச்சி நூல்களை, நாவல்களை அமைச்சர் படித்து மகிழ்ந்திருக்கிறார்! திரைக்கதை வசனங்களைக் கேட்டுச் சுவைத்திருக்கிறார்! மேலும் படித்து மகிழ - கேட்டுச் சுவைக்க - எழுதுக என எனக்கு ஆணையிடுகிறார்!

அமைச்சரல்லவா - அவரா பேசுகிறார் - அருணாசலம் அப்படிப் பேசமாட்டாரே; அமைச்சர் பதவியல்லவா பேசுகிறது! அந்தப் பதவியில் அவர் இருப்பது குறித்து மகிழ்கிற நான்; அவரது பேச்சில் ஆணவம் இருப்பதாக எண்ணி வருத்தப்படலாமா?

இருந்தாலும் அவர்; நான் மேலும் எழுத வேண்டுமென்று ஆசைப்படுவதற்காக பூம்புகார் படத்தில் நான் எழுதிய பழைய உரையாடல் ஒன்றை நினைவுபடுத்தி இன்றைய இந்தக் கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

மனச்சாட்சி உறங்கும் போதுதான்
மனக்குரங்கு ஊர் சுற்றக்
கிளம்பி விடுகிறது

இந்த உரையாடலைக் கேட்டு பூம்புகார் படத்தொடக்க விழாவன்று டாக்டர் மு.வ. அவர்களும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் பாராட்டியது இன்னமும் என் நினைவில் பசுமையாக நிற்கிறது!

அன்புடன்

மு.க.

03-04-1988

1565. சிறந்த சிகிச்சை;
நோய்நாடி - நோய் முதல் நாடி செய்தல்!

உடன்பிறப்பே,

பஞ்சாப் பிரச்சினையை குரங்குப் புண்ணாக ஆக்கிவிட்ட டெல்லிச் சக்கரவர்த்திகள்; இன்றைக்கு எரிச்சலும் வலியும் தாங்க முடியாமல்; புரையோடி விட்ட புண்ணுக்கு என்ன சிகிச்சை செய்வது என்று புரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அகாலிதளத்தின் ஜனநாயக ரீதியிலான மாநில சுயாட்சி முழக்கத்தை அடக்கி ஒடுக்கிடுவதற்காக பிந்தரன்வாலே என்ற தீவிரவாதத் தலைவரை உருவாக்கி - அவரை வழிபடும் மகானாக்கி - இந்திரா காங்கிரசின் தளபதியாகப் புகழாரம் சூட்டி - அதன் விளைவை மிக மோசமான முறையில் அறுவடை செய்தார்கள் டெல்லி பாதுஷாக்கள்.

இன்றைக்கு நிலைமை என்ன? இலங்கையில் தமிழ் ஈழத்தில் இந்திய சிப்பாய்கள் ஆயுதத் தேடல் நடத்துவதாகப் பிரச்சாரம்! நாள்தோறும் ஏராளமான (ஏராளம் என்பதற்கு அர்த்தமே இல்லாமற் போய்விட்டது) ஆயுதங்களை விடுதலைப் புலிகளின் முகாம்களில் இருந்து கைப்பற்றி விட்டதாக வானொலியென்ற அண்டப்புளுகர்களும் - தொலைக்காட்சி என்ற ஆகாசப்புளுகர்களும் - செய்திகளைத் திரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் இந்திய ராணுவம், ஆயுதங்களைத் தேடி எடுப்பதாகச் சொல்லப்படும் அதே நேரத்தில் - இங்கே இந்தியாவில்; பஞ்சாப் மாநிலத்தில் ஆயிரம் ராக்கெட்டுகளுடன் பயங்கரவாதிகள் உலவுவதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

சராசரி ஒவ்வொரு நாளும் பஞ்சாபில் பத்து கொலைகள் என்ற நிலை மாறி; இருபது முப்பது நாற்பது என்று கொலைகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டிருக்கிறது!

1975 ஆம் ஆண்டு இந்தியாவில் பாசிச ஆட்சி என்றால் எப்படியிருக்கும் என்பதை விளக்கும் வகையில்

பிரகடனப்படுத்தப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட நெருக்கடி நிலையை மட்டுமே இராமபாணமாக நம்பிக் கொண்டிருக்கிறார்; யுவராஜா ராஜீவ் காந்தி!

இப்போது பஞ்சாப்பில் உள்ள தீவிரவாதிகளுக்குக் கிடைத்துள்ள ராக்கெட் என்ற கருவி; சுமார் ஆயிரம் அடி தூரம் வரையில் பாய்ந்து சென்று தாக்கித் தகர்க்கும் சக்தி கொண்டதாகும்! இப்படி ஆயிரத்துக்கு மேற்பட்ட ராக்கெட்டுகளுடன் பஞ்சாபில் தீவிரவாதிகள் திரிந்து கொண்டிருக்கிறார்கள். கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் சுமார் இருநூறு பேர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அதற்கு முந்திய ஆறுமாத காலத்தில் எழுநூறு கொலைகள் நடந்திருப்பதாக அரசாங்கமே அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறது.

இந்த வன்முறைச் செயல்களை இதயமுள்ளோர் எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படுத்த டெல்லி தர்பார்; வழக்கமான தனது கேளிக்கைக் களியாட்டங்கள் - எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எதிர்க்கட்சிகள் மீது புழுதிவாரித் தூற்றும் பொல்லாங்குச் செயல்கள் - அனைத்தையும் விடுத்து உடனடியாக முன்வந்தாக வேண்டும்.

இந்த அளவுக்கு நிலைமையை முற்றவிட்டது ஏன்? என்ற கேள்விக்கு டெல்லி ஆதிக்கம் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறது!

பஞ்சாபில் குர்நாம்சிங் முதல்வராக இருந்தபோதே பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த தீர்வு என்ன ஆயிற்று? சண்டிகாரை பஞ்சாப்புக்குத் தருவதாகவும் அதற்கு மாற்றாக அரியானாவுக்கு புதுத்தலைநகர் அமைக்க மத்திய அரசு பத்து கோடி வழங்குமென்றும் 1970 ஆம் ஆண்டிலேயே கூறவில்லையா? அந்த உடன்பாடு குறித்து நானே பிரதமரிடம் பேசி, பின்னர் பஞ்சாப் முதல்வர் குர்நாம்சிங் அழைப்பின் பேரில் அங்கு சென்று அவரிடம் பேசியிருக்கிறேனே!

18 ஆண்டுகாலமாக சண்டிகார் தலைநகர்ப் பிரச்சினை - அதுவும் அப்போதே அறிவிக்கப்பட்டுவிட்ட பிரச்சினை - இன்னமும் தீர்க்கப்படாமைக்கு டெல்லி அரசு காரணமில்லையா?

லோங்கோவாலுடன் ராஜீவ் காந்தி ஒப்பந்தம் செய்து கொண்டார்! அதற்கு விழாக் கொண்டாடினார்! ஆனால் அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதற்காக ராஜீவ்

காட்டிய அக்கறை என்ன? அந்த ஒப்பந்த விளைவாக லோங்கோவால் உயிர் பறிக்கப்பட்டதைத் தவிர; உற்ற பயன் உருவானதா? அது குறித்து சிந்திக்கவோ செயல்படவோ முனையாமல் தண்டி யாத்திரை நாடகங்களை நடத்தி நாட்டு மக்களை திசை திருப்பலாமென ராஜீவ் கருதுவது அரசியல் மோசடியல்லவா?

பஞ்சாப் பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது - வேலை அமைக்கப்படுகிறது - இந்த பயங்கரவாத சக்திகளுக்கு பாகிஸ்தான் உதவியிருக்கிறது; எனவே எச்சரிக்கையுடன் காரியங்கள் நடத்தப்படுகின்றன என்று டெல்லி பீடம் அறிவித்தாலும் கூட -

இந்தப் பிரச்சினைக்கு நோய் நாடி நோய் முதல் நாடி சிகிச்சையளிக்கும் அணுகுமுறையை மத்திய அரசு அறவே புறக்கணித்துவிட்டதாகவே தோன்றுகிறது! வெந்த புண்ணில் வேல் என்பது போல் பஞ்சாப்பில் நெருக்கடி நிலைப் பிரகடனத்தைச் செய்வதால் - வன்முறைகளை அடக்கிட இப்போது அங்குள்ள சட்டங்களால் ஏற்படுவதை விடப் பெரும் பயன் கிடைத்துவிடுமென்று யாருமே நம்பிடத் தயாராக இல்லை!

ஏன் இந்த நிலை உருவாயிற்று? இந்தக் கேள்விக்குக் கிடைக்கும் தெளிவான பதில் உணர்த்துகிற உண்மைக்கு மதிப்பளித்து நடந்து கொண்டால் மட்டுமே பஞ்சாப் மாநிலத்தில் நிலையான அமைதி தழைக்க முடியும்!

அதை விடுத்து எதிர்க்கட்சிகளுக்கும் - எதிர்க்கட்சி ஆட்சிகளுக்கும் எப்படித் தொல்லை கொடுக்கலாமென்று பழைய பத்தாம்பசலித்தனமான பழிவாங்கும் குணத்துக்கே முதலிடம் அளித்தால் -

பஞ்சாப் கேன்சர் வியாதி
பஞ்சாப்புடன் நிற்காது;
மேலும் பல இடங்களில்
அதற்கான செகண்டரி
தோன்றுவதைத் தடுக்க இயலாமற்
போய்விடும்!

அன்புடன்

மு.க.

05-04-1988

1566. கவர்னர் நடத்தும் காங்கிரஸ் மாநாடு!

உடன்பிறப்பே,

1975ஆம் ஆண்டு டிசம்பரில் கோவையில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டுக்கு - மாவட்ட கூட்டுறவு சங்கத்தின் தலைவர்கள் ஓரிருவர்; கூட்டுறவு சங்கக் காரில் கோவைக்கு வந்தார்கள் என்று இந்திரா காங்கிரசின் கவர்னர் ஆட்சியில் குற்றம் சாட்டப்பட்டு - வழக்கு போடப்பட்டு - அந்தக் கார் வாடகைப் பணத்தைத் திருப்பி செலுத்த வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டு - அதையே பூதாகரமான பிரச்சினையாக்கி - ஆகா! அதிகார துஷ்பிரயோகம்! அநியாயம்! அக்கிரமம்! என்று பல வருட காலம் பத்திரிகைகளில் ரேடியோவில் ஆளுங்கட்சியினர் பிரச்சாரம் செய்தார்கள்!

நூறு இருநூறு மைல்கள் - கார்களைப் பயன்படுத்தியதற்காக - அதுவும் ஒன்றிரண்டு கூட்டுறவு சங்கத் தலைவர்கள் பயன்படுத்திக் கோவை தி.மு.க. மாநாட்டுக்கு வந்ததற்காக அன்றைய காங்கிரசார் குய்யோ முறையோ என்ற கூச்சல்! பிறகு கவர்னர் சுகாதியா ஆட்சியில் நடவடிக்கை!

அப்படி ஓரிருவர் கூட்டுறவு சங்கத்துக் காரை பயன்படுத்தியிருந்தால் - அது தவறுதான் என்பதை நான் அன்றைக்கும் சுட்டிக்காட்டத் தவறவில்லை - இன்றைக்கும் அதற்கு நியாயம் கற்பிக்கத் தயாராக இல்லை - என்றைக்குமே அதற்கு நியாயம் கற்பிக்க மாட்டேன்!

ஆனால் ஒன்று!

கோவை தி.மு.க. மாநாட்டுக்கு ஓரிரு கூட்டுறவு சங்கத் தலைவர்கள், சங்கத்தின் கார்களைப் பயன்படுத்தியிருந்தால் அதனால் சில நூறு ரூபாய்கள்தான் அந்தக் கார்களின் போக்குவரத்துக்காகச் செலவாகியிருக்கும்!

அதற்கே அத்துணை தடபுடல்! கண்டனம்! நடவடிக்கை! இத்யாதி! இத்யாதி!

இப்போது சென்னை மறைமலை நகரில் இந்திரா காங்கிரஸ் அகில இந்திய மாநாடு நடைபெறப் போகிறது. இது குறித்து எக்ஸ்பிரஸ் நிருபர்களின் குழு ஒன்று மாநாடு நடைபெறும் இடத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமையன்று நேராகச் சென்று - அந்தக் குழு கண்டறிந்த உண்மைகளை வெளியிட்டிருக்கிறது.

Madras, April 9: The Tamil Nadu government machinery is operating full swing to prepare Maraimalai Nagar for the AICC-I session later this month, providing justification for charges of Congress-I rule by proxy in the state.

The sleepy little township, 40 km from Madras, which was conceived as a satellite township is now the scene of almost round-the-clock activity by several State Government agencies as they strive to meet the deadline of April 20 to get the venue ready.

அதாவது, தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில், சென்னை மறைமலை நகர் காங்கிரஸ் மாநாட்டு வேலைகளைத் தமிழக அரசு நிர்வாகம் முழு அளவிலே மேற்கொண்டிருக்கிறது!

இப்படித் தொடங்குகிற எக்ஸ்பிரஸ் இதழின் கட்டுரையில் மேலும் காணப்படும் விபரங்கள்.

ஏப்ரல் 20ந் தேதிக்குள் அந்த இடத்தை மாநாட்டுக்குத் தயாரான நிலையில் ஒப்படைக்க வேண்டுமென்பதற்காக மாநில அரசின் பல்வேறு துறைகளும் 24 மணி நேரமும் இடைவிடாது அங்கே பணியாற்றிக்கொண்டுள்ளன.

மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்குவதற்காக 350 புதிய கட்டிடங்களைத் தயார் செய்யும் அலாவுதீன் அற்புத தீபப் பணியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்; தனியாக ஒரு கமிட்டி அமைத்துக் கொண்டு ஈடுபட்டுள்ளது.

மார்ச் 25ந் தேதிக்குள் பொது மக்களுக்கு விநியோகிக் கப்படுமென வீட்டு வசதி வாரியத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள வீடுகள்; இப்போது காங்கிரஸ் கட்சி வசதி வீடுகளாக மாற்றப்பட்டுள்ளன!

மார்ச் 25 பொது மக்களுக்கு விநியோகிக்க விளம்பரம் செய்த போது; அந்த வீடுகளுக்கான மின்இணைப்பு -குடிநீர் வசதி - கழிவுநீர் வசதி - போன்றவைகளை செய்வதற்கு நேரம் போதாது என சிரமப்பட்டுக் கொண்டிருந்த வீட்டு வசதி வாரியத்தினர்; இப்போது மின்னல் வேகத்தில் அதே வீடுகளுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து - காங்கிரஸ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு 350 வீடுகளை ஒதுக்கி விட்டனர்.

கவர்னரின் ஆலோசகர் ஒருவர் வாய் மொழி உத்திரவு மூலம் குடிநீர் வாரிய மூத்த அதிகாரியை ஒவ்வொரு நாளும் தவறாது அந்த இடத்திலிருந்து பணிகளைக் கவனிக்குமாறு கூறியுள்ளார். அந்த ஆணையின்படி குடிநீர் வாரிய அதிகாரிகள், மாநாடு நடக்குமிடத்தில் தொடர்ந்து இருந்து தொண்டாற்றுகின்றனர்.

நெடுஞ்சாலைத்துறையினர் - கட்டிடப் பொறியாளர்கள், மாநாடு நடக்கும் மறைமலை நகரில் பம்பரமாய்ச் சுழலுகிறார்கள்.

விவசாயத் துறையின் பொறியாளர்கள் புல்டோசர்களுடன் விரைந்து பணியாற்றுகின்றனர்.

உடன்பிறப்பே, இந்தக் கடிதத்துடன் இணைந்துள்ள படத்தைப் பார்!

இந்த வீடுகளில்தான் மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்கப் போகிறார்கள்!

ராஜீவ் காந்திக்காக மாநாடு நடக்குமிடத்திலே ஒரு புது வீடு!

இவையனைத்தும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் செலவில் கட்டப்படுமேயானால் - அந்தக் கட்சி, இத்தனைக்கும் தனது பணத்தை செலவழிக்குமானால், அதில் நமக்கு மறுப்பு ஏதுமில்லை!

இவ்வளவும் மக்கள் தருகிற வரிப்பணத்திலேயிருந்து - அரசாங்கமே முன்னின்று நடத்துகிற அதிகார துஷ்பிரயோகம் என்கிறபோது -

தூய்மை உபதேசிகள் சிலர், சமீபத்தில் கிளம்பினார்களே; அவர்கள் எல்லாம் இப்போது எங்கே? எங்கே? என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா?

தேர்தலில் நின்று பதவிக்கு வராமலே தமிழக அரசின் சார்பில் தங்கள் கட்சியின் மாநாட்டை நடத்துகிறவர்கள், பதவிக்கும் வந்து விட்டால் என்ன செய்வார்கள் என்பதற்கு இது ஒன்று போதாதா?

சுருக்கமாகச் சொன்னால் மறைமலை நகர் மாநாடு;
கவர்னர் நடத்தும்
காங்கிரஸ் மாநாடு
என்பதுதானே உண்மை!

அன்புடன்

மு.க.

11-04-1988

1567. இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?

உடன்பிறப்பே,

எடுத்த எடுப்பில் திருச்சி மாவட்டமும் பெரியார் மாவட்டமும் கழகத் தேர்தல் நிதி வழங்குவதில் போட்டி போட்டுக்கொண்டு ஏறத்தாழ முப்பத்திரெண்டு லட்ச ரூபாயைத் தந்துள்ளன. அந்த மாவட்டங்களில் பொறுப்பேற்றுள்ள புதிய நிர்வாகிகள் அனைவரும் பாராட்டுதலுக்குரியவர்கள். தலைமைக் கழகத்தின் முத்திரையிடப்பட்ட நன்கொடைச் சீட்டுகளை ஒவ்வொரு அமைப்பின் செயல்வீரர்களும் பட்டிதொட்டி முதல் பட்டினக் கரைகள் வரையிலே பம்பரமெனச் சுழன்று பணியாற்றி ஆங்காங்கு தந்து, நிதி திரட்டியுள்ள ஆர்வம் - அக்கறை - இவற்றைக் கேள்வியுறும்பொழுது உற்சாகம் கரை புரளுகிறது!

எதிர்முகாம்களில் இருந்து தேர்தல் களத்தில் கோடிகள்; வாள் தூக்கி வரப் போகின்றன! நாமோ; நாடு முழுவதும் உண்டியல் எடுத்து, துண்டு ஏந்தி - கிடைத்திடும் லட்சங்களைக் கேடயங்களாக்கி அந்த வாள் வீச்சுக்களைத் தடுத்திட முனைந்துள்ளோம்!

1967 பொதுத் தேர்தலுக்குப் பதினொரு லட்சம் நிதி திரட்டியபோது - ஏ, அப்பா; அவ்வளவு பணமா? என்று அண்ணா அவர்களே உவகைப் பெருக்குடன் என்னைப் பார்த்தார்.

இன்றோ; கோபுரம் போல குவித்துள்ளனர் மாற்றார்; தேர்தலுக்கான கோடிகளை!

நாமோ - இரண்டே இரண்டு மாவட்டங்களில் தேர்தல் நிதி வசூலைச் செய்து; அதற்கோர் விழா வைத்து - 32 லட்சத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

தேர்தலுக்கு தேர்தல் ஏறும் விலைவாசியினால் - தொகுதிப் பணியாற்றத் தேவைப்படும் போக்குவரத்து சாதனங்களுக்கான வாடகை; பல மடங்கு உயர்ந்துவிட்டது!

தேர்தல் பிரச்சாரம் செய்திட, சுவரொட்டிகளோ - துண்டுப்பிரசுரங்களோ - அச்சியற்ற ஆகும் செலவு நினைத்தாலே பகீர் என்கிறது!

மாற்று முகாம்கள் சிலவற்றில் கரன்சியின் மதிப்பு வெறும் காகித மதிப்புத்தான்! அதாவது கொடுப்பவர்களுக்கு! ஆனால்; வாங்குபவர்க்கோ அது வரப்பிரசாதம்!

ஜூன் ஜூலையில் தேர்தல் வருமென்று காங்கிரஸ்காரர்கள் பிரகடனம் செய்கிறார்கள்!

இதைச் சொல்லும்போது, அடடா - அதற்குள் - மே மாதம் முடிவதற்குள்ளாகவாவது நமது மாவட்டத்தில் தேர்தல் நிதியைப் பெருமளவுக்கு வசூலித்து வழங்க வேண்டுமே! என்ற பொறுப்புணர்வு மாவட்டத்தில் உள்ள எல்லோர்க்கும் வர வேண்டும்.

அதற்கு மாறாக - ஜூன் ஜூலையில் தேர்தலா? அப்படியானால் இப்போதே வேட்பாளர்கள் யார் என்பதைச் சொல்லி விடுங்களேன்! என்ற கோரிக்கை சிலரிடம் இருந்து எழுவது காண; நான் மிக வேதனையடைகிறேன்!

என்னைக் கேட்போர்க்கெல்லாம் நான் சொல்லும் பதில்; உங்கள் தொகுதியில் உதயசூரியனுக்கு வாக்கு கேட்டுத் தேர்தல் வேலை தொடங்குங்கள் என்பதுதான்!

தலைவர் என்னைத்தான் சொல்லியிருக்கிறார் - பொதுச்செயலாளரும் அப்படித்தான் சொன்னார் - என்றெல்லாம் சில இடங்களில் யாராவது கூறினால்; அது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையாக இருக்கலாம்! எங்களால் யார் ஜெயிக்க முடியும் என்று ஆரூடம் கணிக்க முடியாவிட்டாலும் - அதில் எங்களுக்கு ஈடுபாடு இல்லாவிட்டாலும் - அரசியல் ரீதியாக வெற்றிக்குரிய வாய்ப்பு யாருக்கு அதிகம் உண்டு என்று கருதுகிறவர்களையே தலைமைக்கழகம் அறிவிக்கும். அப்படியொரு

அறிவிப்புப் பட்டியல் வரும் வரையில் உதயசூரியன் தவிர வேறு வேட்பாளர் பெயர் பரப்பப்படுமானால் - அதற்குத் தலைமை பொறுப்பல்ல! அது தலைமையைக் கட்டுப்படுத்தவும் செய்யாது!

தேர்தலை நடத்துவதற்குரிய வசதி வாய்ப்புகளை மிகுந்த அளவுக்குப் பெற முடியாவிடினும்; ஏன் - போதுமான அளவுக்குப் பெற முடியாவிடினும், ஏதோ ஓரளவுக்காவது பெற்றிட அனைவரும் ஒருங்கிணைந்து உழைத்திட வேண்டுமல்லவா?

அந்தப் பணிகளை எவர் எவர் எங்ஙனம் நிறைவேற்றியுள்ளனர் என்பதை - மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகரக் கழகச் செயலாளர்களை அழைத்து நானும் பொதுச்செயலாளரும் கலந்து பேசிட இருக்கிறோம் - மிக விரைவில்!

உடன்பிறப்பே; ஒரு துணுக்குக் கதை உண்டு!

அனாதை ஆஸ்ரமத்துக்கு உதவி வேண்டி சில பேர் ஊர்ப் பெரிய மனிதர் ஒருவரிடம் சென்றார்களாம்!

என்ன வேண்டும் எனக் கேட்டாராம் ஊர்ப் பெரியவர்!

அனாதை விடுதிக்குத் தங்களால் ஆன உதவி தாராளமாகச் செய்யுங்கள் என்றார்களாம்; விடுதி நடத்துவோர்!

உடனே ஊர்ப் பெரியவர்; அதற்கென்ன செய்தால் போச்சு! உங்கள் விடுதிக்கு நான் இரண்டு அனாதைப் பிள்ளைகளை அனுப்பி வைக்கிறேன் என்றாராம்!

அதைப்போல தேர்தல் பணி - தேர்தல் நிதி - எனக் கழகம் கோரிடும் போது; இதோ தேர்தலுக்கு வேட்பாளர் தயாராக இருக்கிறேன்; அதுவும் தேர்தல் பணிதானே என்பவரைக் கண்டிலோ; அந்த ஊர்ப் பெரியவர் நினைவுதானே எனக்கு வரும்!

பத்தாண்டுக் காலத்தொய்வை நீக்கிட இந்தத் தேர்தலைப் பயன்படுத்தித் தமிழகத்தை புதுக்கோலம் பூணச் செய்ய வேண்டும்!

எப்படியும் இருபதாண்டுக்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சி; மீண்டும் காலூன்ற நடைபெறும் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்!

அதற்கோர் வாய்ப்பாக அமைந்துள்ள இந்தத் தேர்தலில் - தி.மு.கழகம்; தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படைகளைக் கொண்டு களத்தில் இறங்கவில்லை! காலாட்படையினராம் கழக உடன்பிறப்புகள் பூண்டுள்ள படைக்கலன்களாம் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு; இவற்றை நம்பியே களம் புக இருக்கிறது!

இப்படை தோற்கின்

எப்படை வெல்லும்?

என அண்ணன் அடிக்கடி நினைவூட்டும் அந்த நெஞ்சுறுதியுடன் செயல்படுவோம்!

எனவே, இக்கடிதத்தின் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ளவைகளை மறவாமல் பணி தொடர்க!

அன்புடன்

மு.க.

13-04-1988

1568. பகற்கனவு தேவையில்லை பண்ணையாருக்கு!

உடன்பிறப்பே,

கருணாநிதியின் பிரச்சாரத்தில் தமிழகம் இன்று பஞ்சாப்பாக மாறிவிடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. நேருவின் சிலையை வெடிவைத்துத் தகர்க்கும் அளவுக்கு வந்துவிட்டது. பஞ்சாப்பில் நடக்கும் படுகொலைகள் போதும். தமிழ் நாட்டுக்கும் வேண்டாம். கருணாநிதியின் சமய சந்தர்ப்பப் பிரச்சாரத்தால் தமிழகமும் அழிந்து தமிழினமும் அழிந்து போகும். நான் கருணாநிதிக்குச் சொல்லிக் கொள்கிறேன். உங்கள் பாதையை மாற்றிக் கொள்ளுங்கள்... கருணாநிதி இலங்கைப் பிரச்சினையில் தன்னைக் குழப்பிக் கொண்டு நம்மையும் குழப்புகிறார்... இலங்கைப் பிரச்சினை என்ற பெயரால் விடுதலைப் புலிகளுக்கு கருணாநிதி இடம் தந்தால் தேவையற்ற வாதங்களை ஏற்படுத்தி அவர்களுக்கு அனுதாபம் காட்டினால் தமிழகம் அழிந்துவிடும். தவறான பாதை செல்லும் விடுதலைப் புலிகளுக்குத் துணை நிற்கிறார். இதிலிருந்து கருணாநிதி திருந்த வேண்டும்.

இவ்வாறு காஞ்சீபுரத்தில் நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் திரு. கருப்பையா மூப்பனார் அவர்கள் பேசியுள்ளார்.

மூப்பனார் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக முடி சூட்டிக் கொண்டு தமிழகத்துக்கு வந்தவுடனேயே சவால் விட்டுக் கொண்டுதான் கோதாவில் இறங்கினார் என்பது அனைவருக்கும் தெரியும்.

என் சொத்துக்களையும் கருணாநிதி சொத்துக்களையும் மாற்றிக்கொள்ள நான் தயார்! கருணாநிதி தயாரா? என்று ஒரு மாபெரும் அறைகூவல் மூப்பனாரிடமிருந்து கிளம்பியது!

பினாமி நில ஒழிப்பு சட்டம் மத்திய அரசின் அங்கீகாரத்தைப் பெறுமா? என்றும் மூப்பனார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக

வந்துள்ளதால் ஏதாவது அந்த சட்ட அங்கீகாரத்திற்குத் தடங்கல் ஏற்படுமா? என்றும் - பத்திரிகை நிருபர்கள் என்னைக் கேட்ட போது, எம்.ஜி.ஆர். - ஆட்சியில் பினாமி நில ஒழிப்பு சட்டத்தைக் கொண்டு வந்த எஸ்.டி.எஸ். அவர்களும் மூப்பனார் அவர்களும் இப்போது ஒரே அணியில் இருப்பதால் - அந்த சட்டம் மத்திய அரசின் ஒப்புதலைப் பெறுமென நம்புகிறேன் என்று பதில் அளித்தேன். இதுதான் நான் செய்த குற்றம்!

உடனே மூப்பனார் கொதித்தெழுந்து சொத்துக்களை மாற்றிக்கொள்ள தயாரா? என்று சவால் விடுத்தார்!

அவரது சவாலை நான் ஏற்றுக் கொண்டேன்! நான் தயார் என அறிவித்ததும்; மூப்பனார் அவர்கள் தனது சவாலுக்கு பதவுரை பொழிப்புரைகள் பகர்ந்து இந்தியாவே தனது சொத்து தான் என புது விளக்கமொன்று தந்து - சவாலை வெறும் சவடாலாக ஆக்கி கம்பீரமாக (?) எழுந்து நின்றார்! (நல்லவேளை இந்தியா என்ற சொத்தினை இன்னமும் மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறார்கள்)

இப்போது எனது பாதையை மாற்றிக் கொள்ளுமாறு ஆணையிடுகிறார்! பெரிய பண்ணை; ஆணையிடும்போது இந்த எளியவன் அதற்குப் பதில் கூறத்தானே வேண்டும்!

என் பாதை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எனது 14வது வயதில் (1938) நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட பாதை!

மொழிப்போரின் தானைத்தலைவராக தந்தை பெரியாரும் - தளகர்த்தர்களாக அறிஞர் அண்ணா, அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி போன்றவர்களும் வீறு நடை போட்டு விழித்தெழுக தமிழகமே! ஒழித்திடுக இந்தி ஆதிக்கத்தை! என்று முழங்கிச் சென்ற பாதை!

அந்தப் பாதையில் 1938ல் அடியெடுத்து வைத்து அன்று முதல் இன்று வரையில் அதே பாதையில்; இனம் - மொழி - காத்திடவும், சமத்துவ, சமதர்ம, பகுத்தறிவுக் கோட்பாடுகள் நிலை பெற்றிடவும் - மாநில உரிமைகள் பறி போகாதிருக்கவும் உயர்த்திய கொடியைக் கீழே தாழ்த்தாமல் நடந்து கொண்டிருக்கும் என்னைப் பார்த்து; 1956ஆம் ஆண்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து தனது மூவாயிரம் ஏக்கரா நிலத்தைக் காப்பாற்றிக் கொள்ள காங்கிரசுக்கு வந்த மூப்பனார் - கருணாநிதி! உன் பாதையை மாற்றிக் கொள்! என்று கூறுவது அரசியலில் ஒரு அதிசயம்தான்! ஆணையிட்டுப் பழகிவிட்ட

ஐஸ்வர்ய சீமானல்லவா? கபிஸ்தலம் என்றாலே கட்டளையிடும் ஸ்தலம் என்றுதானே ஒரு காலத்தில் கருதப்பட்டது! பாட்டி, மஞ்சள் குளித்தாள்; பழைய நினைப்பில் என்பார்களே; அது போலப் பண்ணையார் கட்டளையிட்டுப் பார்க்கிறார் - அன்றொரு நாள் களத்துமேட்டில் கைகட்டி நின்ற கந்தனையும் கடம்பனையும் பார்த்துச் சவுக்கை நொடித்துக் காட்டியது போல!

எந்த சோஷலிசக் கொள்கைகளைப் பெரியாரும் அண்ணாவும் போதித்தார்களோ, அவற்றைக் கற்று, அந்தப் பாதையில் அடிபிறழாமல் நடந்து கொண்டிருக்கும் என்னைப் பார்த்து; 1969ல் இந்திரா காந்தி கொண்டு வந்த வங்கி தேசியமயம் - ராஜமான்ய ஒழிப்பு போன்ற சோஷலிசத் திட்டங்களை எதிர்த்திட்ட அணியில் நின்று முழங்கிவிட்டு - 1976ல் இந்திரா காங்கிரசுக்குப் பாதை மாறிய மூப்பனார் அவர்கள்; பாதையை மாற்றிக் கொள் என்று மிரட்டுகிறார்! மிடுக்கு! சாதாரண மிராசு மிடுக்கு அல்லவே! நிலப்பிரபுவின் மிடுக்கல்லவா? அதனால் ஏடுகளே கூட பயந்துபோய் அவரது காஞ்சிப் பொழிவை பக்கம் பக்கமாக வெளியிட்டுக் காட்டுகின்றன!

எமர்ஜன்சி கொண்டு வந்த இந்திராவை எதிர்த்தோம்! அதனால் பல கொடுமைகளைத் தாங்கிக் கொண்டோம் - பின்னர் அதே இந்திரா காந்தி அவர்கள் எமர்ஜன்சிக்காக பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்ட பின்னரே; இந்தியாவின் மொத்த நலன் கருதி நிலையான ஆட்சிக்காக 1980ல் இந்திரா காந்தியுடன் தேர்தல் உடன்பாடு கொண்டோம்! எமர்ஜன்சியை எதிர்த்த நமது பாதையில் மாற்றமில்லை! எமர்ஜன்சியை கொண்டு வந்த இந்திரா காந்தியின் பாதைதான் மாறிற்று! ஆனால் மூப்பனார் 1976ஆம் ஆண்டிலேயே எமர்ஜன்சியை நியாயப்படுத்திக் கொண்டிருந்த இந்திரா காங்கிரசுடன் இணைந்தார். எந்த மூப்பனார்? காமராஜர் தலைமையில் 1975 அக்டோபர் வரை எமர்ஜன்சியை எதிர்த்துக் கொண்டிருந்த மூப்பனார்! காமராஜர் மறைந்தவுடன் எமர்ஜன்சி எதிர்ப்பும் மறைந்தது! ஆம்; பாதை மாறியது! 76 பிப்ரவரியில் முப்பனார் இந்திரா காங்கிரசானார்!

ஆள் அல்ல முக்கியம்! கொள்கைகளே முக்கியம்; என்பதால்தான் எமர்ஜன்சிக்காக இந்திரா காந்தி மன்னிப்புக்

கேட்கும் வரையில் - தி.மு.க. அந்தக் கட்சியின் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை!

எப்போது மறைவார் காமராஜர் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்களைப் போல எமர்ஜன்சி எதிர்ப்பு வீரர்கள் மூப்பனார் தலைமையில் 1976லேயே எமர்ஜன்சி ஆதரிப்பு வீரர்களாக மாறிவிட்டார்கள் அல்லவா; அதனால் தான் மற்றவர்களைப் பார்த்து பாதையை மாற்றிக் கொள் என்று கூசாமல் கூற முடிகிறது அவர்களால்!

கருப்பையா மூப்பனார் அவர்களின் காஞ்சீபுரம் பேச்சு; அலட்சியப்படுத்தக் கூடியதல்ல!

தமிழ்நாட்டில் காங்கிரஸ் எப்படியும் வெற்றி பெற்றே தீரவேண்டும் - எப்படியாவது வெற்றி பெற்றே தீர வேண்டும் என்பதற்காக பல சூழ்ச்சித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன! அதற்கு முன் அறிவிப்புத்தான் மூப்பனாரின் காஞ்சீபுரம் பேச்சு!

வன்முறை
பஞ்சாப்
கருணாநிதியின் பிரச்சாரம்
இலங்கைப் பிரச்சினை
விடுதலைப் புலிகளுக்கு கருணாநிதி ஆதரவு!

இப்படிச் சில சொற்றொடர்கள்! அதாவது; எனது பிரச்சார முறை, வன்முறையைத் தூண்டுகிறதாம்! அதனால் தமிழகம் பஞ்சாப்பாக மாறிவிடுமாம்!

விடுதலைப் புலிகளுக்குக் கழகம் ஆதரவு தருவதால் தமிழகம் அழிந்து விடுமாம்!

எனது பிரச்சாரம் வன்முறையைத் தூண்டுகிறது எனப் பேசிவிட்டு - நேரு சிலையை உடைக்க முயற்சிக்கப்பட்ட வன்முறைச் செயலையும் இணைக்க ஒரு தந்திரம்!

நேரு சிலையின் பீடம் - கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் - வெடிகுண்டு வைத்து தகர்க்கப்பட்ட வன்முறைச் செயல்கள் மட்டுமல்ல - ஜனநாயக முறையில் மக்களைத் திரட்டி அமைதியாகத் தீர்த்துக் கொள்ளக்கூடிய எந்தப் பிரச்சினைக்கும் வன்முறை பரிகாரமாகாது என்பதே கழகம் கொண்டுள்ள

தீர்க்கமான முடிவு! இதனை எடுத்துரைக்கக் கழகம் என்றுமே தவறியதில்லை!

தமிழகம் பஞ்சாபாக மாறும் என யார் எச்சரிக்கிறார்களோ, அவர்கள்தான் இன்றைய பஞ்சாப் பற்றி எரிவதற்குக் காரணம் என்பதை நாடு நன்றாகவே அறியும்!

1980ல் பிந்தரன்வாலே என்ற தீவிரவாதியைக் காங்கிரஸ் கட்சியின் பிரதான தளகர்த்தனாக பஞ்சாப் மாநிலத்தில் வளர்த்து விட்டு, அகாலி தளத்தைப் பிளக்கச் சொன்னது யார்? இந்திரா காங்கிரசின் டெல்லித் தலைவர்கள் அல்லவா? டெல்லித் திருநகரில் அந்த பிந்தரன்வாலேக்கு பல்லக்குப் பவனி நடத்திப் பாதம் தொழுதது யார்? டெல்லியின் பிரதானக் காங்கிரஸ்காரர்கள் அல்லவா? வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது!

அதன் விளைவு - இந்திரா அம்மையாரின் கொலையில் முடியவில்லையா? அன்னை இந்திராவின் பயங்கரப் படுகொலையைத் தொடர்ந்து அதே நாளில் டெல்லியில் நடைபெற்ற அமளி - அதில் விழுந்த ஆயிரக்கணக்கான பிணங்கள் - அது காங்கிரசாரின் வன்முறை விளையாட்டு அல்ல என்று மூப்பனார்கள் மூடிமறைக்க முடியுமா? ரத்தம் சொட்டும் கைகளுடன் வன்முறைக்கு எதிராக அகிம்சா பிரச்சாரம் செய்வது காங்கிரசாருக்குப் பழக்கமான கலை என்பதற்கு, எத்தனை எடுத்துக்காட்டுகள் வேண்டும்!

விடுதலைப் புலிகளுக்குக் கழகம்

ஆமாம், கருணாநிதி
ஆதரவு தருகிறார்.
துணை நிற்கிறார்

என்கிறார் மூப்பனார்! இந்திய அமைதிப்படை என்ற பெயரால் அழிக்கப்படும் தமிழ் இனத்தைக் காத்திடத் துணை நிற்பது தவறா? களத்தில் நின்று கொண்டிருந்தாலும், பேச்சு வார்த்தைக்குத் தயார் - போர் நிறுத்தம் செய்திடுக என்று இந்திய அரசுக்குக் கோரிக்கை விடுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பக்கம் நின்று பேசுவது - வாதிடுவது தவறா? ஆயுதமேந்திப் போராடுவதைத் தவிர விடுதலைப் புலிகளுக்கு வேறு வழியில்லை! என்று

தி.மு.க. கூறுகிறது. அதாவது, அவர்கள் ஆயுதமேந்தும் நிலை ஏற்பட்டதற்குக் காரணம் கூறுகிறது தி.மு.க.!

நான் கேட்கிறேன், மூப்பனார் அவர்களை - அய்யா! அவர்களுக்குப் போரிட ஆயுதங்களை கொடுத்து உதவியது யார்?

நிதி உதவி கூட செய்ததாக நீங்களே ஒப்புக் கொள்கிறீர்களே! இதெல்லாம் ஏன்? நான் கூட நினைத்ததுண்டு, விடுதலை ஆர்வத்தைப் பாராட்டி நல்ல எண்ணத்துடன் தரப்படுவதாக!

இப்போதல்லவா புரிகிறது. ஈழத் தமிழர்கள் மீதும் போராளிகள் மீதும் நல்லெண்ணமில்லை - அவர்களுக்கு உதவி செய்வதின் மூலம், வேறு ஏதோ ஒரு அரசியல் ஆதாயத்தை எதிர்பார்த்து ராஜ தந்திரம் நடத்தப்பட்டுள்ளது என்ற உண்மை!

யாருடைய ராஜதந்திர சூதாட்டத்திற்கோ - விடுதலைப் புலிகளும், ஈழத் தமிழர்களும் பகடைக்காய்களா?

துணை நின்றது யார்?

தூண்டி விட்டது யார்?

நிதி வழங்கியது யார்? இன்று

நீலிக் கண்ணீர் வடிப்பது யார்?

தமிழினமும் தமிழகமும் அழியப் போகிறது எனக் கழகத்தின் மீது பழிபோட்டுக் கேவலம் தேர்தலில் ஓட்டு வேட்டை நடத்தத் திட்டமிட்டுள்ள மூப்பனாரை கேட்கிறேன். தமிழினமும் தமிழகமும் அழிவதென்றால் அதற்கு யார் காரணம் என்பதை - ஆதாரங்களுடன் விளக்கலாமா? விளக்கிடவா?

அந்த விளக்கங்களை மூப்பனார்கள் தாங்கிக் கொள்ளத் தயாரா?

1983ல் ஈழத்தமிழர் பிரச்சினைக்காகத் தமிழகமே கொதித்துக் கொந்தளித்தபோது - வெளிநாடு சென்றிருந்த ஒரு கட்சித் தலைவர் ஓடோடி வந்து அவசர அவசரமாகத் தனது கட்சிச் செயல் கமிட்டியைக் கூட்டி, இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முன்வராத பிரதமர் இந்திரா காந்தியின் கொடும்பாவியைக் கொளுத்துவது என்று தீர்மானம் நிறைவேற்றினார். அந்தச்

செய்தியை மகிழ்ச்சியுடன் கூறிட என் இல்லத்துக்கு விரைந்து வந்தார். நீங்கள் செய்துள்ள முடிவு தவறானது! பிரதமர் ஒரு பெண்மணி என்பதைக் கூட மறந்து விட்டு அவர் கொடும்பாவி கொளுத்துவதாகத் தீர்மானம் போட்டு விட்டீர்களே! என்று அதிருப்தி தெரிவித்தேன். பிரதமர் ஒரு பெண் என்பது நினைவில்லாமலே போய்விட்டது என்றார்! பிறகு பிரதமர் இந்திராவின் கொடும்பாவிக்கு பதில் படம் கொளுத்தப்படும் என அறிவித்தார். அவ்வாறே கொளுத்தினார். அது அவர் நடத்திய போராட்டம்! இப்போது அவர் எங்கே இருக்கிறார் தெரியுமா? இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழக துணைத் தலைவர்களில் ஒருவராக திரு. மூப்பனார் அவர்களின் அருகே இருந்து, ஈழத் தமிழ் இனம் காக்க குரல் கொடுக்கும் தமிழகத்து கட்சித் தலைவர்களையெல்லாம் சாடிக் கொண்டிருக்கிறார்!

இப்படிப் பாதை மாறிகள் பலரைப் பார்த்துப் பழகி விட்டதால்தான் - பாதை மாறிய மூப்பனார்; என்னையும் பாதை மாறச் சொல்கிறார்!

என் பாதை;
சுயமரியாதைப் பாதை!
தமிழின நலங்காக்கும் பாதை!
தமிழ்மொழி காக்கும் பாதை!
பெரியார் பாதை!
அண்ணாவின் பாதை!
அறவழிப் பாதை!
அமைதிப் பாதை!
ஜனநாயக நெறிமுறைப் பாதை!

பாடையே தயார் எனப் பயமுறுத்தினாலும் அந்தப் பாதையிலிருந்து மாற மாட்டேன்! பகற்கனவு தேவையில்லை; பண்ணையாருக்கு!

அன்புடன்

மு.க.

15-04-1988

1569. தொழில்துறையில் தொய்வு எப்போது?

உடன்பிறப்பே,

தொழில் துறையில் பின் தங்கிய தமிழகம் எனும் தலைப்பிட்டு திரு.வி. பாலசுப்பிரமணியம் என்பவர் தினமணி (15.4.87) முதல் பக்கத்தில் ஒரு நீண்ட கட்டுரை தீட்டியுள்ளார்.

தமிழகத் தொழில்துறை புதிய முதலீட்டை ஈர்க்கவும் மற்ற தேவையான வசதிகளைப் பெருக்கவும், ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தவறியதால் - தமிழகத்தில் புதிய - பெரிய - நடுத்தரத் தொழில்களைத் துவக்கத் தயங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் ஏற்கனவே இயங்கிவரும் தொழிற்சாலைகள், தங்கள் கிளைகளை வேறு வேறு மாநிலங்களில் துவங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளாகத் தமிழகத் தொழில் துறையில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டுள்ளது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை தமிழக அரசு வழங்கும் சலுகைத் திட்டங்கள் புதிய தொழில்களை துவங்கத் திட்டமிடும் வெளி நிறுவனங்களைக் கவர்ந்திழுக்கத் தவறியதோடல்லாமல் தமிழகத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் தொழில் துவங்க வெளி மாநிலங்களுக்குப் போவதைத் தடுக்கவும் இயலாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து சுமார் 150 கோடி ரூபாய் வெளி மாநிலங்களுக்குச் சென்றுவிட்டது அல்லது சென்று கொண்டிருக்கிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் பலனடைந்த வெளி மாநிலங்கள் வெகு தொலைவில் இல்லை. அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம், புதுவை ஆகிய மாநிலங்கள்தான் பலன் பெற்றுள்ளன.

தமிழக மூலதனம் வெளி மாநிலத்துக்கு செல்வதால் மூலதன இழப்பு ஏற்படுகிறது என்று மட்டும் கணக்கை முடித்துக் கொள்ள

முடியாது. வேலை வாய்ப்பு, துணைத் தொழில் வளர்ச்சி ஆகிய பாதிப்புகளும் கணிசமான அளவில் அடங்கியுள்ளன.

இவ்வாறு குறிப்பிடும் அந்தக் கட்டுரையில் எந்தெந்த நிறுவனங்கள் - எவ்வளவு முதலீட்டுடன் வேறு மாநிலங்களில் தொழில் தொடங்குமாறு தள்ளப்பட்டுள்ளன என்ற பட்டியலும் தரப்பட்டுள்ளது. கட்டுரை ஆசிரியர் மேலும் கூறுவதை கவனிப்போம்.

கடந்த பத்தாண்டுகளாக தமிழக அரசியலில் ஸ்திரத் தன்மை நிலவிய போதிலும் தொழிற் கொள்கையைப் பொறுத்தமட்டில் இலக்கு இல்லாத நிலையிலும் எதார்த்தமான நிலை பற்றிய கண்ணோட்டமற்ற நிலையிலும் அமைந்திருக்கிறது. மேலும் அரசின் முன்னுரிமைகளைப் பொறுத்தமட்டிலும் இதே நிலைதான்.

கட்டுரையாளர் தனது கருத்துக்கு ஆதாரமாக - தமிழக அரசின் சார்பில் அதிகாரபூர்வமாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையையே எடுத்துக் காட்டவும் தவறவில்லை. அவரது வார்த்தைகளைக் கொண்டே அதைக் குறிப்பிடுகிறேன்.

தமிழக அரசு சார்பில் அதிகாரபூர்வமாக தயாரிக்கப்பட்ட அறிக்கையில் தொழில் துறையில் ஏற்பட்ட இந்தச் சரிவு பற்றி பொருத்தமாக சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. 1981-82ஆம் ஆண்டு வரையில் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாக மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களுடன் தமிழகம் இருந்து வந்தது. பின்னர் படிப்படியாக ஆந்திர பிரதேசம், உத்திரபிரதேசம் மற்றும் அரியானா ஆகிய மாநிலங்களுக்கும் பின்தங்கி விட்டன.

கட்டுரையாளர் இத்துடன் நிறுத்தாமல் ஒப்பு நோக்கி உணர்வதற்காக ஒரு எடுத்துக்காட்டையும் வழங்குகிறார் - அது; இதோ :-

1970ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் தனி நபர் சராசரி முதலீட்டுத் தொகை ரூபாய் 70ஆக இருந்தது. அப்போது தமிழகத்தில் தனி நபர் சராசரி முதலீடு ரூபாய் 76 ஆகும்! 1984ஆம் ஆண்டில் அகில இந்திய தனிநபர் சராசரி முதலீட்டு தொகை ரூபாய் 567 - தமிழகத்தின் தனி நபர் சராசரி முதலீட்டு தொகை 425 ஆகக் குறைந்து விட்டது.

உடன்பிறப்பே, தினமணியில் திரு. பாலசுப்பிரமணியம் எழுதியுள்ள இந்தக் கட்டுரை தொழில் வளர்வதற்கான முயற்சிகளை எப்படியெல்லாம் ஒரு மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்பதற்காக விரிவான விளக்கங்களையும் பாராட்டத்தக்க வகையில் கோடிட்டுக் காட்டியுள்ளது. கட்டுரையாளர் அரசியல் நோக்கம் எதுவுமின்றி - தொழில் வளர்ச்சிக் கண்ணோட்டத்துடன் பல விபரங்களைத் தந்துள்ளார்.

கடந்த பத்தாண்டுக் காலத் தொழில் துறையின் சரிவும் - பத்தாண்டுகளுக்கு முன்பு வரையில் தமிழகத் தொழில் துறையின் வளர்ச்சியும் பற்றி ஒளிவு மறைவின்றிக் குறிப்பிடுகிறது அந்தக் கட்டுரை!

இந்தக் கட்டுரையைப் புள்ளி விபர ஆதாரங்களுடன் வெளியிட்டுள்ள தினமணி - ஏடு; அதே நாளில் (15.4.88) தமிழகத்தில் பெருந்தொழில்கள் என்று ஒரு தலையங்கம் எழுதியுள்ளது.

அதில் ஆரம்பமே என்ன தெரியுமா?

தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் கடந்த இருபது ஆண்டுகளில் மிகவும் பின் தங்கிவிட்டது என்ற உண்மையை யாரும் மறுப்பதற்கில்லை.

உடன்பிறப்பே - இரண்டு கருத்தும் தினமணியில்தான்! 1981 வரையில் மராட்டியம், குஜராத், தமிழகம் என்று மூன்றாவது இடத்தில் இருந்ததாக தினமணியின் முதல் பக்கத்துக் கட்டுரையில் அழுத்தம் திருத்தமாக ஆதாரத்துடன் காட்டப்படுகிறது! ஆனால் தலையங்கத்திலோ இருபது ஆண்டுகளாகத் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி மிகவும் பின் தங்கிப்போயிற்று என்று குற்றச்சாட்டு!

இருபது ஆண்டு - இருபது ஆண்டு என எவரைப் பார்த்தாலும் நீட்டிச் சொல்வதற்குக் காரணம் புரிகிறதா?

1967 முதல் 1976 வரையில் தி.மு.க. ஆட்சியல்லவா? அதையும் சேர்த்துத் தாக்க வேண்டுமல்லவா?

என்னே! பரந்த நோக்கம்! என் செய்வது; இவர்களையும் மீறித்தான் கழகம் வளர்ந்து கொண்டிருக்கிறது!

ஆமாம்; இவர்களையும் இவர்களது விசாலமான (?) இதயங்களையும் மீறித்தான் சாமானியர்களாகிய நாம் நமது இயக்கத்தை வளர்த்திடும் பணியில் ஈடுபடவேண்டியுள்ளது!

தமிழக முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர்கள் போல நடிப்பவர்களுக்கும் - உண்மையிலேயே அக்கறையுடன் நடந்து கொண்டவர்களுக்கும் உள்ள வேறுபாட்டை நடுநிலையுடன் சிந்திப்பவர்கள் உணரவே செய்வார்கள்!

அன்புடன்

மு.க.

16-04-1988

1570. ஓட்டுக்காகவா? நாட்டுக்காகவா?

உடன்பிறப்பே,

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் கடுமையாகக் குரல் கொடுத்தும் - கட்டுரைகள் தீட்டியும் - நூல்கள் எழுதியும் - களத்தில் நின்ற தமிழ்ப் பெருங்கடல் மறைமலை அடிகளார் பெயரால் கழக ஆட்சிக்காலத்தில் அமைந்த புறநகர் விரிவாக்கப் பகுதியில் காங்கிரசார் மாநாடு கூட்டி இந்தி ஏகாதிபத்தியத்தின் காவலர்கள் தாங்கள்தான் என்பதை அடையாளங் காட்டிக் கொண்டார்கள் அல்லவா; அந்த மாநாட்டில் வழக்கம்போல் காங்கிரசல்லாத மாநில அரசுகளையும் பொதுவாக எதிர்க்கட்சிகளையும் குற்றம் சாட்டிப் பேசத் தவறவில்லை பிரதமர் ராஜீவ் காந்தி!

மற்ற பிரதானியர்கள், விதூஷகர்கள் எனப்படும் காங்கிரஸ் தர்பார் வாலாக்கள் பலரும் தமிழகத்தில் திராவிட இயக்கத்தை அழித்தே தீருவது என்று சூளுரைச் சங்கநாதம் செய்திருப்பதையும் நீ ஏடுகளில் படித்திருப்பாய்!

திராவிடம் என்ற சொல்லே அவர்களுக்குப் பெரும் ஒவ்வாமை (அலர்ஜி)யாக இருப்பதை தங்கள் பேச்சுக்களின் வாயிலாக அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இதிலே முரண்பாடு என்னவென்றால் திராவிட உத்கல வங்க என்று தேசிய கீதத்தில் வரும் சொற்களை அழுத்தம் திருத்தமாக உச்சரித்துக் கொண்டே திராவிடம் என்பதையே தீர்த்துக் கட்டுவோம் என அவர்கள் திசை மாறிப் பறப்பது தான்!

நானும் திராவிட பாரம்பரியம்தான் என்று மூப்பனார் அவர்கள் பேசி - அது அச்சிலே வந்து - அந்த ஏடுகள் கூட இன்னும் பழுப்படையவில்லை; அதற்குள்ளாக மறைமலை நகர் மாநாட்டில் திராவிட பாரம்பரிய ஆட்சி வர விட மாட்டோம் என்று மார்

தட்டியிருப்பதைக் காணும்பொழுது என்ன வந்தது இவர்களுக்கு? என்று திகைப்படையத்தான் வேண்டியிருக்கின்றது!

தினமணியில் இரண்டு நாட்களுக்கு முன்பு கூட ஒரு கேலிச் சித்திரம் - திராவிடம் என்றால் புளி என்று ஒரு பொருள் உண்டு - அதனால்தான் திராவிடம் திராவிடம் எனப் பேசிப் புளித்துப் போய்விட்டது என்பதாக!

எந்த மொழியிலும் சில சொற்களுக்கு பல பொருள்கள் இருப்பதுண்டு! ஆனால் அந்தச் சொற்கள் இடம் பெறும் நிலையை வைத்துத்தான் பொருள் கொள்ளவேண்டும் என்பது அறிவுடையோர் கருத்து!

குறிப்பாக மாடு என்பது விலங்கினத்தில் ஒரு வகையைக் குறிக்கும்! மாடு என்றால் செல்வம் என ஒரு பொருளும் உண்டு! சந்தையில் வாங்கிய மாடு என்கிறபோது அது பசுவையோ காளையையோ அல்லது எருமையையோ கூடக் குறிக்கும்! சந்தையில் வாங்கிய செல்வம் எனப் பொருள் கொள்ள இயலாது!

சென்னை கடற்கரையில் உள்ள உ.வே. சாமிநாத அய்யர் சிலையின் பீடத்தில் திராவிட வித்யா பூஷணம் என்று அய்யர் அவர்களுக்கு அடைமொழி செதுக்கப்பட்டுள்ளது. அதனால் அவரை புளி பூஷணம் என்று பாராட்டியுள்ளதாக தினமணி கருதிடாது என்றே நம்புகிறேன்.

திராவிடம், திராவிட இயக்கம், திராவிட பாரம்பர்யம் என்ற சொற்களையே நஞ்சாகக் கருதி அவற்றை ஆட்சிக்கு வர அனுமதிக்கமாட்டோமென விண்முட்டக் குதிப்பவர்கள்; அ.தி.மு.க.வின் ஒரு பிரிவினரோடு தேர்தல் உடன்பாடு கொள்ள வேண்டுமென்பதற்காகப் படுபாதாளத்தில் விழுந்து பாத கமலங்களுக்கு மலர் தூவிக் கொண்டிருக்கும் மர்மம்தான் என்னவோ?

பதவி! பதவி! அதற்கு யார் உதவியையும் பெறுவார்கள் காங்கிரசார் என்பது அவர்களது கலாச்சார வரலாறு! ஏறிய பிறகு ஏணியை உதைப்பார்கள் என்பதும் முதுகிலே குத்துவார்கள் என்பதும் நாடறிந்த கதை!

இல்லாவிட்டால் உங்கள் காங்கிரஸ் கட்சி செத்துவிட்டது. கொடி கட்டக்கூடத் தொண்டர்கள் இல்லாத காங்கிரஸ் கட்சி;

காய்ந்து கருவாடாகிப் போன கட்சி காங்கிரஸ்! என்றெல்லாம் நேற்றைக்குக் கூடப் பேசியிருக்கிறார் நாவலர் - அந்த நாவலர் வழி நடத்துகிற கட்சியுடன் தேர்தல் உடன்பாடு கொள்வதற்கு ஒற்றைக்காலில் நிற்பார்களா?

இந்த அழகில் திராவிட என்ற சொல்லே அவர்களுக்கு வேம்பாகக் கசக்கிறதாம்! பாவம்; வெட்கக்கேடு என்ற சொல்லுக்கு அகராதியில் புதுஅர்த்தம் எழுதிக் கொண்டு விட்டார்கள் போலிருக்கிறது!

அந்த மாநாட்டில் ராஜீவ் காந்தி உதிர்த்துள்ள ஒரு கருத்து;

சில மாநில அரசுகள் கவர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, மக்களிடம் பாராட்டு பெறுவதற்காக, நிதி ஆதாரங்களை வீணடித்துவிட்டன என்பதாகும்!

சத்துணவு திட்டம், வேலையில்லா காலத்தில் இளைஞர்களுக்கு நிவாரணப் பணம் தருதல், மலிவு விலையில் அரிசி அளித்தல் போன்ற திட்டங்களைத்தான் ராஜீவ் சாடியிருக்கிறார்!

சத்துணவு போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது ஏற்படும் குறைபாடுகளைத்தான் நமது கழகம் சுட்டிக்காட்டியிருக்கிறதே தவிர, அந்தத் திட்டத்தைக் கைவிடுமாறு என்றைக்கும் கூறியதில்லை. எதிர்காலத்தில் மீண்டும் கழக ஆட்சி அமையுமானால் உண்மையிலேயே நல்ல சத்துணவு; எந்தக் குறைபாடுகளும் உருவாகாத அளவுக்கு வழங்கப்படுமென நாம் தெளிவாகத் தெரிவித்துள்ளோம்.

விவசாயிகளுக்கு விளைபொருள் உற்பத்திக்கான வசதி வாய்ப்புகளைப் பெருக்குவதும், கட்டுப்படியான விலை கிடைக்கச் செய்வதும், வாங்கிப்புசிப்போர்க்கு சுமை அதிகமாகாமல் விலைவாசியை அரிசி போன்ற முக்கிய பொருள்களுக்குக் குறைத்துக் கட்டுப்படுத்துவதும் கழக ஆட்சி அமைந்திடில் உடனடிப்பணிகளாக இருக்குமென்றும் அறிவித்திருக்கிறோம்.

இதுபோன்ற திட்டங்களேயன்னியில் நிலையான நீண்டகால வளர்ச்சித் திட்டங்களிலும் முன்போலவே கழக அரசு வரின் கவனம் செலுத்தும்!

மக்களைக் கவரும் திட்டங்களைத்தான் சில மாநில அரசுகள் நடைமுறைப்படுத்துவதற்காகக் குறை கூறும் ராஜீவ் காந்தி அவர்கள், வங்கிக் கடன் (லோன் மேளா) என்ற பெயரால் கோடிக்கணக்கில் வாரி வாரி இறைக்கிறாரே - அந்தத் திட்டம் யாரைக் கவரும் திட்டம் என்று விளக்கிடுவாரா?

மாமியார் உடைத்தால் மண்சட்டி; மருமகள் உடைத்தால் பொன்சட்டி என்ற பழமொழிக்கு ஏற்ப - காங்கிரசாரும் அவர்களின் தலைவர்களும் பேசுகிறார்கள் - செயல்படுகிறார்கள் என்பதற்கு மறைமலை நகர் காங்கிரஸ் மாநாடு ஒரு எடுத்துக்காட்டாகும்!

இவர்கள் செய்வதெல்லாம் நாட்டுக்காக - மற்றவர்கள் செய்வது மட்டும் ஓட்டுக்காகவா?

கூடிக்கலைந்தனர் என்பர்; சில மாநாடுகளைப் பற்றிக் குறிப்பிடுவோர்!

இங்கு அதையும் சொல்ல இயலாது, கூடினால் அல்லவோ, கலைவதற்கு!

கோடிக்கணக்கில் செலவுக் கணக்கு; அதில் ஒதுக்கிய வரையில் ஆதாயமென மகிழ்ச்சியடைவோர் - பெற்ற லாபத்திற்காக திராவிட பாரம்பரியத்தைத் திட்டித் தீர்த்தனர்!

பிரதமரோ, காங்கிரசல்லாத மாநில அரசுகளையும், எதிர்க்கட்சிகளையும் விமர்சித்து விட்டு விடை பெற்றுக் கொண்டார்!

முடிவு; லாரிக்காரர்களுக்கு நஷ்டம்! லாரியில் ஏறி வந்தோர்க்கு லாபம்!

இதுதான் காங்கிரஸ் மாநாட்டில் மொத்த வரவு செலவுக் கணக்கு!

அன்புடன்

மு.க.

27-04-1988

1571. வாராய் என் கண்மணி; வாழ்க என் கண்மணி!

உடன்பிறப்பே,

தேர்தல் நிதி ஒரு கோடியே இருபத்தி ஐந்து லட்சத்தைத் தாண்டியுள்ளது! கோவை மாவட்டம் முப்பது லட்ச ரூபாயை நிதியாகத் தந்து முன்னணியில் நிற்கிறது! இரண்டாவதாக செங்கை அண்ணா மாவட்டமும் - மூன்றாவதாக தஞ்சை மாவட்டமும்! இது இன்றைய நிலை! நாளை, எப்படி எந்த மாவட்டம் தோள் தட்டிக்கொண்டு வந்து கோதாவில் இறங்குமோ?

தொடங்கியது துவரங்குறிச்சியில் திருச்சி மாவட்டத்தின் தேர்தல் நிதி தான்! ஆம், பதினாறு லட்சம் வழங்கினார்கள்! அதனையடுத்து அளவிலும் மக்கள் தொகையிலும் சிறிய மாவட்டமான பெரியார் மாவட்டமோ, தனது பெயருக்கேற்ப பதினைந்து லட்சத்தைத் தந்தது! வட ஆற்காடு பத்தரை லட்சம் தந்துவிட்டு மேலும் பத்து லட்சத்துக்கு மேல் தருவதற்கு வசூலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது! மதுரை அண்ணா மாவட்டம் ஐந்து லட்சத்தை அளித்துள்ளது! தென்னாற்காடு தெற்குப் பகுதி மட்டும் பனிரெண்டரை லட்ச ரூபாய் கொடுத்துள்ளது. வடக்குப் பகுதி பாக்கி உள்ளது.

இருபது லட்சம் கொடுத்துள்ள செங்கை அண்ணா மாவட்டமும், பதினாறுலட்சம் கொடுத்துள்ள தஞ்சை மாவட்டமும் கோவை மாவட்டத்தை மீறுவதற்கோ அல்லது இப்போது பெற்றுள்ள இரண்டாவது மூன்றாவது இடத்தைப் பறி கொடுத்து விடாமல் இருப்பதற்கோ விடாமுயற்சியில் ஈடுபடக்கூடும்!

இதற்கிடையே சென்னை, மதுரை, நெல்லை கட்டபொம்மன், வ.உ.சி. மட்டுமல்ல - சேலம் வேறு சிலிர்த்துக் கொண்டு நிற்கிறது. தர்மபுரி, குமரி, நீலகிரி, பசும்பொன், காமராஜர், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகியவை சின்னஞ்சிறு மாவட்டங்கள் எனினும்

தங்கத்தின் அளவு குறைந்தாலும் தரம் குறைவதுண்டோ? எனத் தடந்தோள் தட்டுகின்றன.

ஒரு கோடியே இருபத்தி ஐந்து லட்சம் ரூபாய் - நமக்கு மிகப் பெருந்தொகைதான்! ஆனால் தேர்தலில் எதிரணி செலவிடத் திட்டமிட்டிருக்கும் ஆயிரம் கோடி ரூபாய்க்கு முன்னால் இது மிக மிகக் குறைவு!

கடந்த பொதுத் தேர்தலில் (1984) இருபத்தி எட்டு லட்சத்து அறுபதினாயிரம் ரூபாய்தான் எல்லா மாவட்டங்களிலும் தேர்தல் நிதியாகத் திரட்ட முடிந்தது! அம்மதன்னியில் எனது அறுபதாம் ஆண்டு மணவிழாவை ஒட்டி வழங்கப்பட்ட நிதி இருபத்திஐந்து லட்சத்தையும் தேர்தல் நிதியில் சேர்த்துக்கொண்ட வகையில் மொத்த நிதியே ஏறத்தாழ ஐம்பது லட்சமே தான்!

அதனுடன் ஒப்பிடும்போது இந்த நிதி அதிகம்தான்! இன்னும் கூட பல லட்சங்களை மாவட்டங்கள் அளிக்கக் கூடும்!

கொடுத்த தொகை எவ்வளவு என்பதைக்காட்டிலும் கொடுத்தோர் தொகை எவ்வளவு என்பதுதான் முக்கியம்!

கோவை மாவட்டத்தில் பத்தாயிர ரூபாய்க்கான நன்கொடைச் சீட்டுகளை அச்சியற்றிச் சென்றனர் - ஒரு சீட்டு கூட யாருக்கும் தரப்படவில்லை - தரவும் இல்லை! அப்படியே அவை கட்டாகக் கட்டிக்கிடப்பதை என்னிடம் காட்டினர்!

கோவை உள்ளிட்ட எல்லா மாவட்டங்களிலும் பத்து ரூபாய் ஐந்து ரூபாய் நன்கொடைச் சீட்டுகளே பல்லாயிரக்கணக்கில் செலவழிந்திருக்கின்றன என்று கழகச் செயல்வீரர்களும் மாவட்டச்செயலாளர்களும் கூறிடும் பொழுது ஒரு குதூகல உணர்வே எனக்கு ஏற்படுகிறது!

கொடுத்த தொகை எவ்வளவு என்பதைவிட கொடுத்தோர் தொகை எவ்வளவு என்பதைக் கேட்கவும் - அதற்கு மனநிறைவான பதில் கிடைக்கவும் - இந்த நிதியளிப்பு விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் பெருமிதமாகவே அமைந்தன!

கோவை மாநகரம் - ஏழேகால் லட்ச ரூபாயை வழங்கி, மதுரை மாநகரத்தை இடித்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

திருப்பூர் தொகுதி மட்டும் ஐந்தரை லட்ச ரூபாயை அளித்து உச்சாணிக் கொம்பில் ஏறிக் கொண்டிருக்கிறது!

இந்த நிதியெல்லாம் விழா மேடைகளில் எனது கரத்தில் வழங்கப்படும்பொழுது - இதனைத் திரட்ட என் அன்பு உடன்பிறப்புகள் அல்லும் பகலும் பம்பரமெனச் சுழன்றலைந்த காட்சியன்றோ என் அகக்கண்ணில் நிழலாடுகிறது!

அதனை நினைத்தவாறன்றோ நித்திரை கொள்ளச்செல்கிறேன்! அப்போது என் கனவில் வந்து கழகத்தின் கண்மணிகளன்றோ நிதி திரட்ட, தாங்கள் பட்ட கஷ்டத்தை விவரிக்கின்றனர்!

ஓடியாடி உழைக்கும் அவர் தம் பாதங்களுக்கு என்னுடல்; பட்டுவிரித்த தரையாகட்டும் என்றல்லவோ வரம் கேட்கிறேன்! புதிய உரம் பெறுகிறேன்!

நிதி பெறுவது மட்டும் நமது நோக்கமன்று - முழுமையான பணியுமன்று - நீதியும் பெற வேண்டும் மக்கள் மன்றத்திலிருந்து!

அதுவே முழு வெற்றி!

அந்த வெற்றிக்குத்
தோளுயர்த்தித்
தொண்டு புரிந்திடுவோம்!
உழைப்போம்;
உழைப்போம் -
ஒற்றுமையுடன்
உழைப்போம்!

இடர்கள் ஆயிரம் வரினும் - எவர் தரினும் அந்த இடர்களை - அவற்றை மிதித்துக் கொண்டே இலட்சிய முகடு நோக்கிச் சென்றிடுவோம்.

அப்பணிக்கு வாராய் என் கண்மணி; வாழ்க வாழ்கவே என் கண்மணி!

அன்புடன்

மு.க.

18-05-1988

1572. பாசப் பொழிவு! அன்புப் பெருக்கு!

உடன்பிறப்பே,

ஒரு மாத காலத்துக்கு மேலாக ஓய்வில்லா சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்! உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் வழங்குகின்ற தேர்தல் நிதியும் - அதனைத் திரட்ட ஓடியாடித் தந்திடும் உழைப்பும் காண்கிற போது அயர்வு சோர்வு அனைத்தும் எங்கேயோ பறந்து போய்விடுகின்றன!

இப்போதுகூட இந்தக் கடிதம் உனக்கு எழுதிடும்போது திருச்சி திருமண நிகழ்ச்சிகளுக்கும் - அவற்றைத் தொடர்ந்து 25ந் தேதி மாலையில் காரைக்குடிக்கும் செல்வதற்காகப் பயணப்பட்டுக் கொண்டுதானிருக்கிறேன்.

அந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு இரவே மதுரை போய்ச் சேர்ந்தால்தான் 26ந் தேதி அங்கிருந்து புறப்பட்டுக் காரில் தூத்துக்குடி தேர்தல் நிதியளிப்பு விழாப் பொதுக்கூட்டத்திற்குப் போய்ச் சேர முடியும்.

மறுநாள் காலையில் நாகர்கோயிலில் நமது கழகத்தின் அமைப்புச் செயலாளர் நீலநாராயணன் இல்லத்துத் திருமணம். அதனை நடத்தி வைத்து விட்டு உடனே காரில் புறப்பட்டு மதுரையைக் கடந்து திருச்சி வந்து இரவு மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் வண்டியைப் பிடித்தாக வேண்டும். 28ந் தேதி காலை 6 மணி அளவில் சென்னைக்கு வந்ததும் வராததுமாக காலை 8 மணிக்கு ரயிலேறினால்தான் அன்று மாலை விஜயவாடாவில் நடைபெறும் தெலுங்கு தேச மாநாட்டுக்குப் போய்ச் சேர இயலும்! எப்படியும் மாநாட்டுக்கு வந்தேயாக வேண்டுமென ஆந்திர முதல்வர் என்.டி. ராமாராவ் அன்புக் கட்டளை பிறப்பித்து விட்டார். மாநாடு முடிந்து அன்றிரவே ரயிலில் திரும்பி 29ந் தேதி சென்னை

வர வேண்டும். 30ந் தேதி மக்கள் நலக் கோரிக்கை மாநாடு சென்னையில்!

விஜயவாடா மாநாட்டுக்காகவே நாகர்கோயில் நிதியளிப்பு விழா நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எண்ணிப்பார்; நான்கு நாட்களில் எந்தக் கோடியிலிருந்து எந்தக் கோடி வரையில் பயணம் செய்து திரும்ப வேண்டியிருக்கிறது என்பதை! விமான நேரங்கள் வசதியாக இல்லாததால் காரிலும், ரயிலிலும் கடும்பயணம் தகிக்கும் கோடைவெயிலில்!

ஜூன் முதல் நாள் திராவிடத்தளபதி ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களின் நூற்றாண்டு விழா! தனது தோளுக்கிட்ட மாலையைப் பெரியாரின் தாளுக்கிட்ட தூய நற் பன்னீர்ச்செல்வன் என்று பாவேந்தரால் பாராட்டப்பட்ட அந்தத் தலைதாழாச் சிங்கத்தின் திருவுருவப்படத்தை, நமது பேராசிரியர் தலைமையில் சென்னைக் கலைவாணர் அரங்கில் ஜூன் முதல் நாள் மாலை திறந்து வைக்கிறேன். அந்த நாளைத் தமிழக முழுதும் கொண்டாட வேண்டும். குறிப்பாக தஞ்சைத் தரணியில் எல்லாப்பகுதிகளிலும் பன்னீர்செல்வத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டும்.

ஜூன் இரண்டாம் நாள் (ஜூன் 3) எனது பிறந்தநாள் விழா - பொதுவாழ்வுப் பொன் விழாவினை முன்னிட்டு பரனூர் மறுவாழ்வு இல்லத்தில் உள்ள தொழுநோய் இரவலர்க்கு, ஆம், அந்த அருமை உடன்பிறப்புகளுக்கு உணவு உடைகள் வழங்குகிறேன். பிற்பகல் காட்டாங்குளத்தூர் சிறார் இல்லத்தில் அந்த இளம்பிஞ்சுகளுடன் அளவளாவுகிறேன். சீருடைகள் வழங்கப்படுகிறது அவர்கட்கு! இவை செங்கை அண்ணா மாவட்டக் கழகச் செயலாளர் மதுராந்தகம் ஆறுமுகத்தின் ஏற்பாடுகள்!

அன்று மாலை சென்னை கலைவாணர் அரங்கில் தம்பி அமுதன் ஏற்பாட்டில் இலக்கிய அணி சார்பில் விழா! அந்த விழாவில் சங்கத்தமிழ் இசைப் பாடல்கள் கொண்ட பதிவு நாடாப்பேழையும் வெளியிடப்படுகிறது!

ஜூன் 3ந் தேதிதான் உனக்குத் தெரியும்; எனக்கு அறுபத்தி நாலு நிறைகிறது! என் பொது வாழ்வுக்கு ஐம்பது நிறைவு

பெறுகிறது! மொழிப் போராட்டத்துக்கும் ஐம்பதாண்டு நிறைவு பெறுகிறது - ஆம் 1938 ஜூன் 3ந் தேதிதான் சென்னையில் இந்தி எதிர்ப்புப் போர் துவங்கியது! அன்று தான் மறைமலை அடிகளார் தலைமையில் இந்தி எதிர்ப்பு மாநாடு! அன்றே போராட்டமும் கூட! இந்த மூன்று விழாக்களையும் மிக உற்சாகமாக கொண்டாட சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி டி.ஆர். பாலு அறிக்கைகளை வெளியிட்டு விட்டார், நான் ஊரில் இல்லாதபோது! திரும்பி வந்ததும் முல்லைத்தேர் - ஆடம்பர ஊர்வலம் - விமானம் மலர் தூவுதல் - அனைத்தையும் நிறுத்திடக் கூறிவிட்டேன். எளிமையாக நடத்துக - ஏழை எளியோர்க்கும் பயன்படும் வகையில் நடத்துக என்று அனைவரையும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஜூன் 3 காலை அண்ணா, அய்யா நினைவிடங்களில் மலர் வளையம் வைத்து வணங்கிய பின்னர் - கலைவாணர் அரங்கில் உன் வாழ்த்தினைப் பெறக் காத்திருப்பேன்! வாழ்த்தா அது? பாசப் பொழிவு! அன்புப் பெருக்கு!

கலைவாணர் அரங்கில் அன்று என்னதான் நிகழ்ச்சி எனப் பல உடன்பிறப்புகள் கேட்ட வண்ணமிருக்கிறார்கள். காலை முதல் மாலை வரையில் அங்கிருப்பேன் - அண்ணா அறிவாலயத்துக்காக நீ நிதியளிக்கும் நிகழ்ச்சிதான் அன்றைக்கு!

அதன்பிறகு பொதுக்கூட்டம்; சென்னை மாவட்டக் கழகச் சார்பில் தேர்தல் நிதி வழங்கும் நிகழ்ச்சியுடன்!

உயர்ந்து கம்பீரமாக நிற்கும் அறிவாலயம் காணுகிறாய் - கழக அறக்கட்டளையின் சார்பில் இன்னும் அங்கு ஆற்றிட வேண்டிய மக்கட் பணிகள் பல இருக்கின்றன! அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன - எதிர்பாராதவிதமாக தேர்தல் நிதி திரட்ட வேண்டிய வேலையும் வந்து விட்டது!

தேர்தல்; இடையில் வந்துவிட்டுப் போகக்கூடியது! அண்ணா அறிவாலயம் என்றைக்கும் நிலைத்து நிற்கக் கூடியது! நிற்க வேண்டியது!

எனவேதான் என் பிறந்த நாளும் எனது பொது வாழ்வுப் பொன்விழா நாளும் இணைந்து வரும் அந்நாளில் அறிவாலய நிதிக்காக உன்னிடம் கையேந்துகிறேன்!

ரயிலுக்கு நேரமாகிவிட்டது என்று அவசரப்படுத்துகிறார்கள் - ஏராளம் எழுத வேண்டியிருக்கிறது உனக்கு - சரி! சரி! நேரில்தான் பார்க்கப் போகிறோமே - எனவே இந்தக் கடிதத்தை இத்துடன் நிறுத்துகிறேன்.

அன்புடன்
மு.க.
26-05-1988



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

ஆகஸ்டு 2022